[illegible]

227555


தமிழரசு
ரல் 2004



தனுஷ்கோடி –
ஓர் ஓவியரின் கற்பனையில்...

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
பங்குனி – சித்திரை
மலர் : 35 இதழ் : 10
ஏப்ரல் 2004
விலை ரூ.10

## இந்த இதழில்...


- புத்தகம் இன்றும் இனியும் ... 2
- தமிழ்ப் புத்தாண்டு – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி ... 5
- இலக்கிய வானில் கவிமணியின் சாதனைகள் ... 6
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தோற்றமும் – செயல்பாடுகளும் ... 11
- இனிப்புத் துளசி சாகுபடி ... 14
- மக்கள் நலனில் மண்டல வானிலை மையம் ... 18
- மகாவீரர் ஜெயந்தி – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி ... 23
- பெருமக்கள் பார்வையில் பாவேந்தர் ... 24
- கோடைக்கால நோய்களும் தடுப்பு முறைகளும் ... 25
- பாரதிப் பெருங்கடல் ... 30
- அம்பேத்கரின் அமுதமொழிகள் ... 32
- புத்தகச் சிறகை விரிப்போம் ... 33
- இணையத்தில் தமிழ் படைப்புகள் ... 35
- தமிழகத்துக்கு வாங்க – கவியரசர் இளந்தேவன் ... 37
- தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி ... 39
- புவி – ஒரு பார்வை ... 45
- வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயர் ... 52
- கிராமப்புற வளர்ச்சியில் காளான் வளர்ப்பு ... 53
- காசநோயும் தடுப்பு முறைகளும் ... 57
- சங்க இலக்கியத்தில் அறிவியல் செய்திகள் ... 60
- திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சுற்றுலா இடங்கள் ... 64
- இந்தியச் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டது – வேலூர் கோட்டை ... 65
- தனுஷ்கோடியில் ஓவியக் கலைமுகாம் ... 68
- கும்பகோணம் மகாமகத் திருவிழா – மகத்தான கலை நிகழ்ச்சிகள் ... 70
- வனவளம் – கவிதை ... 72
- திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா ... 73
- தமிழர் வரலாறு காட்டும் எண்ணல் அளவை ... 75
- உலக நீர் நாள் ... 77
- இயற்கைப் பேரிடர் மேலாண்மை ... 79


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வ. கனகராஜ்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

இணைய தளத்தில் மின் – நூல்கள் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு முழுப் புத்தகத்தையும் மின் – நூலில் படித்து விடலாம். மின் – நூல்களுக் கெனவே இணைய தளங்கள் உள்ளன. http://www.openbook.org/, http://www.tele read.org.



மின்–நூல்களை வெளியிடுவது எப்படி, உருவாக்குவது எப்படி உள்ளிட்ட விவரங்களைக் கொண்டுள்ள தளம் http://www.bookpalace.com

மின் – நூல்கள் பற்றிய சூடான விவாதங்களை அறிந்து கொள்ள அணுக வேண்டிய தளம் http://groups. yahoo.com/group/ebook.community.

இலவசமாக மின் – நூல் கிடைக்கும் இடங்கள் குறித்த தகவல்களைக் கொண்டுள்ள தளம் http://www.free-book.co.uk.

மின் – நூல் உருவாக்குவதற்கான மென்பொருள் மற்றும் அவை கிடைக்கக் கூடிய இடம் குறித்த தகவல்கள் தரும் தளம் : http://mediapacker.com/ebook compiler.



தமிழ்நாடு அரசு குடியிருப்புக் கணக்கு முடிந்தவுடன் முக்கியமான புள்ளி விவரங்கள், வரைபடங்கள் கொண்ட மின் – நூலை www.census india.net இல் வெளியிட்டுள்ளது. இதை இலவசமாக நம் கணினியில் இறக்கிக் கொள்ளலாம். அச்சில் ரூ.115க்கும் குறுவட்டில் ரூ.100க்கும் இது கிடைக்கிறது.

நூலை அச்சிடாமலேயே தளத்தில் ஏற்றி 4 இலட்சம் வாசகர்களைக் கணினி வழி மின் – நூல் வழி ஸ்டீபென் கிங் என்ற புகழ்பெற்ற எழுத்தாளர் கவர்ந்திழுக்கிறார்.

மின் – நூலைப் படிப்பதற்கென்று மைக்ரோ ஸாப்ட், எம்.எஸ். ரீடர், அடோப்ஸ், அக்ரோபேட் – ஈபுக் ரீடர் போன்ற கையடக்கமான கணினி உள்ளன. இவற்றின் விலை ரூ.15,000. இதன் வழி அச்சிட்ட நூல்களின் விலையில் மூன்றில் ஒரு பங்கு விலையில் எல்லா நூல்களையும் படிக்கலாம். 2,000–3,000 இதழ்களை இதன் வழி படிக்கலாம்.



நம் நாட்டிலும் மின் – நூல் வாசிக்கும் கணினி உருவாக்கப்பட்டுள்ளது. பெங்களூரிலுள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட், "அமிடா சிம்ப்யூட்டர்" என்ற பெயரில் உருவாக்கியுள்ள மின் – நூல் கருவி ரூ.9,000 முதல் 19,950 வரை மூன்று வகைகளில் கிடைக்கும். இது கணினி போலவே பயன்படும். செய்தி அனுப்பலாம். இசை கேட்கலாம். சதுரங்கம் விளையாடலாம். மொத்தத்தில் புத்தகம் அன்று இருந்த்து வேறு – இன்றுள்ளது வேறு.

இன்று மின் – நூல் வெளியீட்டுத் துறை பெருமளவில் வளர்ந்துள்ளது. இப்பதிப் பகங்கள் வெளிநிறுவனங்கள் இணைய தளத்துக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்து, பக்கங்களை வடிவமைத்துக் கொடுக்கின்றன. இதற்காகப் பொருளடக்கம் தயார் செய்தல், வடிவமைத்தல் என பல பணிகள் நடை பெறுகின்றன. இவற்றைத் திருத்துவது, பிழை திருத்தம் செய்தல் போன்ற பணியும் பலர் செய்கின்றனர். தேவையான படங்கள் இணைக்கப் பெறுகின்றன.

வெளிநாடுகளில் உருவாகும் இத்தகைய நூல்கள் சி.டி., பிளாப்பி போன்றவற்றின் வழி இந்தியா போன்ற குறைந்த செலவில் நூல்களை உருவாக்கும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பெறுகின்றன. வெளிநாட்டில் உள்ள பதிப்பாளர்கள் அனுப்பும் தகவல்களைப் பெற்று அவற்றை சரிபார்த்து, பக்கங்களாக வடிவமைத்து அனுப்பும் பணி இந்தியாவில் நடைபெறுகிறது.

சென்னையில் கியுபுரோ இன்ஃபோடெக் லிட், சயின்டிஃபிக் பப்ளிஷிங் உட்பட பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. சர்வதேச அளவில் மேக்மில்லன், எல்சிவியர் சயின்ஸ், அகாடமிக், நேச்சர் போன்ற பல பதிப்பகங்கள் டைப் – செட்டிங் பணியை இந்தியா போன்ற நாடுகளிலுள்ள நிறுவனங்கள் செய்து கொடுக்கின்றன.

எனவே எதிர்காலத்தில் மின் – நூல்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும். இவற்றைக் கொண்டு அமையும் நூலகங்கள் இட அளவில் சுருக்கமாகவும், பயன்பாட்டு அளவில் பெருக்கமாகவும் இருக்கும். ஒரு இலட்சம் புத்தகங்கள் கொண்ட சி.டி.களை ஒரு கோத்ரெஜ் பேழையுள் அடக்கி விடலாம்.

**வீடுகளில் தேவையான சி.டி.களை ஒரு சின்ன பேழையுள் அடக்கிவிடலாம். பள்ளி மாணவன் ஒரே சி.டி.யில் ஓராண்டு படிக்க வேண்டிய நூல்களை அடக்கி விடலாம். முதுகில் சுமந்து கொண்டு பொதி சுமக்கும் பணி இல்லாது போகும். மின் – நூல்கள் பெருக்கமே 21–ஆம் நூற்றாண்டின் பெரும் புரட்சியாக இருக்கும்.**

* * *

# புத்தகம் இன்றும் இனியும்

– இரா.முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்.எஸ்ஸி,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

"புத்தகம் கைக்கு அணிகலன்", "மாந்தர் மனக் கோட்டம் தீர்க்கும் நூல்", "நல்ல புத்தகம் நல்ல நண்பன்" என்றிவ்வாறு புத்தகம் பற்றிய பல பொன்மொழிகள் உள்ளன. பழங்கால மனிதர்கள் தம் எண்ணங்களையும், சிந்தனைகளையும் களி மண்ணாலான கற்களிலும் பனை ஓலைகளிலும், தாளிலும் பதிந்து வைத்துச் சென்றனர்.

ஏட்டுச்சுவடியில் எழுதும் பழக்கம் ஏற்பட்ட பின்னரே நூல்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது. 1455இல் கூட்டன்பர்க், இன்றுள்ள புத்தகம் அச்சிடும் முறையைக் கண்டுபிடித்த பின்னரே ஒரே நூலின் பல பிரதிகள் அச்சிடப் பெற்று ஒரே சமயத்தில் பலருக்கு வழங்கப்பெற்றன. அடுத்த ஒரு நூற்றாண்டுக்குள் தமிழில் புத்தகங்களை அச்சிடும் முறை உருவானது. 1557இல் "தம்பிரான் வணக்கம்" முதல் நூலாக வந்தது. அச்சுமுறை வந்த பின்னரே அறிவு பொதுவுடைமை ஆயிற்று. வசதி படைத்தவர் மட்டுமல்லாது வறுமையில் வாடுபவர்களும் புத்தகம் படிக்க முடியும் என்ற நிலை உருவாயிற்று.

பொதுவாகப் புத்தகம் படிக்கும் பழக்கம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தமிழகத்தில் பெருகிற்று. தமிழில் இதழ்களும், புதினங்களும் தோன்றிய பின்னரே இப்பழக்கம் வளர்ந்தது. தற்கால இலக்கியம் வளரத் தொடங்கிய பின் பழந்தமிழ் இலக்கிய, இலக்கண, சமய நூல்களை அச்சிடும் முயற்சியில் ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர் போன்றோர் அச்சிடலாயினர். இது தனிப்பட்ட முயற்சியாகவே இருந்தது.



இருபதாம் நூற்றாண்டில் தான் அச்சகங்கள், பதிப்பகங்கள், எண்ணற்ற முறையில் தோன்றின. இலக்கியம், இலக்கணம், சமயம், வரலாறு, வைத்தியம், சோதிடம், தத்துவம் போன்ற பல்துறை நூல்கள் வெளிவரலாயின. இருபதாம் நூற்றாண்டின் பின்பாதியில் எழுத்தாளர்கள் பெருகினர். பதிப்பகங்கள் பெருகின. வாசகர்களும் பெருகினர். கல்விக் கூடங்கள் அதிக அளவில் திறக்கப் பெற்றன. படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே போயிற்று. எனவே வாசகர்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற வகையில் புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், நூல்வடிவம் பெற்றன.

புத்தகம் உருவாகும் முறை 16ஆம் நூற்றாண்டின் இடையிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிவரை ஒரு சில மாற்றங்களுடன் ஒரே வகையில் நீடித்து வந்தது. கையால் அச்சுக் கோர்க்கும் முறையுடன் மோனோடைப், லைனோடைப் போன்ற கருவிகளால் கோர்க்கும் முறையும் சேர்ந்தது. பின் குறிக்கப்பெற்ற இரண்டு முறைகளிலும் எழுத்துக்கள் உடையாமல், சிதையாமல் புது எழுத்துக்களாக இருந்தன. ஆனால் இம்முறை நாளிதழ்கள் அச்சிடும் அச்சகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. அந்தப் பொறிகள் விலை உயர்ந்ததாக இருந்ததால் புத்தகம் அச்சிடுவோர் இவற்றைப் பயன்படுத்தவில்லை.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கணினி யுகம் மலர்ந்தது. அச்சு முறையில் பெரும் புரட்சி ஏற்பட்டு விட்டது. பழைய அச்சகங்கள் மறையத் தொடங்கின. கணினி வழி அச்சுக் கோர்க்கும் முறை புகுந்தது. இருப்பினும் தொடக்க நிலையில் கணினிகளின் விலை கூடுதலாக இருந்ததால் பலர் இம்முயற்சியில் ஈடுபடத் தயங்கினர். ஆனால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டதால் பதிப்பகங்கள் அனைத்துமே கணினி வழி அச்சுக் கோர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டது.

**கணினியுகம் அறிவுப்புரட்சிக்கு வித்திட்டது. கணினியின் பயன்பாடு பல்வகையில் பெருகிற்று. ஒரு கணினி ஓரிடத்தில் இருந்தால் அது முதலில் தனித்தே இயங்கி வந்தது. பின்னர் ஓரிடத்திலிருந்த கணினிகள் இணைக்கப்பெற்றன. பின்னர் வெளியிடங்களிலும் வேற்று நாடுகளிலும் இருந்த கணினிகள் இணையங்கள் வழி இணைக்கப் பெற்றன. இது முதலில் வணிகத் தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்பட்டது. அறிஞர்கள் கூடி இம்முறையை அறிவைப் பரப்புவதற்கும் பயன்படுத்தலாயினர்.**

புத்தகம் தொடர்பான பணிகளும் இணையத்தின் வழி புத்துரு பெற்றன. இன்று எல்லா நூல்களும் கணினி வழி கோர்க்கப் பெறுவதால் அவற்றை நூல் வடிவில், தாளில் அச்சிட்டு வெளியிடுவதுடன் குறுவட்டு எனப்படும் சி.டி. வடிவிலும் வெளியிடத் தொடங்கினர்.



ஆக்ஸ்போர்டு அகராதி, பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் போன்ற பெரும் நூல்களும் குறுவட்டில் கிடைக்கின்றன. தமிழிலும் "பனித்துளியில் ஒரு பாற்கடல்", ஆங்கிலம் – தமிழ் அகராதி, திருவாசகம் போன்றவை இன்று குறுவட்டில் கிடைக்கின்றன. குறிப்பாகத் திருவாசகம் ஜி.யு. போப் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பாடல்கள் முழுவதும் சிறந்த ஓதுவாரைக் கொண்டு பதிவு செய்துள்ளனர். சென்னைத் தொலைபேசிக் கையேடு குறுவட்டிலும் கிடைக்கிறது.




இந்தச் சூழலில் மின்–நூல் (E-Book) என்ற புதிய முயற்சி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பெருவளர்ச்சியடையும் போக்கில் உள்ளது. புதிய நூல்களை இவ்வடிவில் கொண்டு வருவதுடன் நூலகங்களில் உள்ள பழமையான நூல்களையும் இவ்வகையில் வெளியிடும் முயற்சி தொடங்கியுள்ளது. முழுப்பக்கத்தையும் ஸ்கேனர் வழி கணினிக்குள் ஏற்றி டிஜிட்டல் முறையில் அதை மாற்றி தேவையான வடிவத்தில் மாற்றிக் கொள்ளலாம். முதலில் இதை வெப்–சைட் என்னும் இணையதளங்களில் பார்க்கலாம். பிறகு தேவையானவற்றை நம் கணினியில் இறக்கிக் கொள்ளலாம். தேவைப்படும்போது மீண்டும் திரையில் கொண்டு வந்து பார்க்கலாம். படிக்கலாம். பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் இக்காலம் வெளிவரும் புதினம், கவிதை போன்றவற்றையும் இணைய தளத்தில் ஏற்றும் முயற்சியில் சென்னையிலுள்ள தமிழ் இணைய பல்கலைக்கழகம் ஈடுபட்டு ஓரளவு செய்து முடித்துள்ளது. இதனை வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நன்கு பயன்படுத்தித் தம் தாய்மொழியான தமிழின் வளத்தை அறிந்து மகிழ்கிறார்கள்.

எவ்வளவுதான் முயற்சி செய்து இவ்வாறு கணினி வெளிவரும் வாயிலாக புத்தகங்களை, புத்தக வடிவில் வந்த புத்தகங்களைப் போல் படிக்க முடியுமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. அச்சான நூலை நாம் விரும்பும் இடத்திற்கு எடுத்துச் செல்லலாம். நம் வசதி போல் சாய்ந்து கொண்டு, படுத்துக் கொண்டு படிக்கலாம். அண்மையில் சிங்கப்பூர் பொது நூலகம் ஒன்றுக்குச் சென்று பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு முதியவர் சாய்வு இருக்கையில் சாய்ந்து படித்துக் கொண்டிருந்தார். சில மாணவர்கள் தரையில் அமர்ந்து அவர் மீது சாய்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன் குப்புறப் படுத்துப் படித்துக் கொண்டிருந்தான். தரை முழுவதும் பஞ்சு மெத்தையால் ஆனது போலிருந்தது. "இருப்பினும் பொது இடத்தில், நூலகத்தில் இப்படிப் படிக்கலாமா" என்று நூலகரிடம் கேட்டேன். "இதிலென்ன தவறு இருக்கிறது. புத்தகம் படிக்கத்தானே வருகிறார்கள். அவரவர் வசதி போல் இருந்து படிக்கிறார்கள்" என்றார் அவர். நம் நூலகங்களில் இந்த வசதி கிடைக்காது. கிடைத்தாலும் எல்லோரும் படுத்து உறங்கி விடுவர்.

கணினியின் முன் அமர்ந்து மட்டுமே படிக்கக்கூடிய புத்தகம் இன்று கைக்கடக்கமான கணினி வழி கிடைக்கிறது. இது சாதாரண புத்தக அளவில் உள்ள கணினியில் கிடைக்கிறது. பெரிய கணினியிலிருந்து கையடக்கக் கணினிக்கு இறக்கிக் கொண்டு (டவுன் லோட்) நாம் தேவைப்படும் நேரத்தில் இடத்தில் படித்துக் கொள்ளலாம். இன்னும் ஒரு படி மேலே சென்று அதைச் சாதாரணத் தாளில் இறக்கி, அதை நூல் வடிவில் கட்டுமானம் செய்து நிரந்தரமாகவும் வைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய மின்–நூல் குறித்த தகவல்கள், செய்திகள், திறனாய்வுகள், விவாதங்கள் போன்றவற்றை http://www.book snbytes.com என்ற இணைய தளத்தின் வழி அறிந்து கொள்ளலாம். இவற்றை இலவசமாகப் பெற வேண்டுமானால் http://www.free. book.com.uk. தளத்தின் வழி பெறலாம். ஆங்கில இலக்கியம் முழுவதையுமே இணையதளத்தின் வழி படிக்க அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம் www.gutenberg.net என்ற இணைய தளத்தை உருவாக்கி யுள்ளது.

இந்நிலையில் நீங்கள் படிக்க விரும்பும் நூல்களை நூலகத்திற்குச் சென்று படிக்க வேண்டாம். உங்களுக்கென ஒரு தனி நூலகத்தை உங்கள் வீட்டில் உருவாக்க வேண்டாம். உங்கள் நூலகத்தை உங்கள் கைக்குள் அடங்கும் கணினியில் வைத்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்.

ஜப்பானிலுள்ள மட்சுஷிட்டா எலக்டிரிக் தொழிலகம் "சிக்மா–புக்" என்ற மின் – நூலைக் கொண்டு வந்துள்ளது. இணைய தளத்திலிருந்து இறக்கப்பட்ட புத்தகம் கைக்கு அடக்கமாகவும் நாம் விரும்புவதுபோல் மடக்கவும், புரட்டவும் செய்யலாம். இதில் 20 நூல்கள் உள்ளன. புகழ்பெற்ற சோனி நிறுவனம் இதற்கு உதவி செய்கிறது. 4,500 நூல்கள் இதுபோல் கிடைக்கும். சோனி தயாரிக்கும் மின் – நூலில் 150 புத்தகங்களை அடக்கலாம்.

வெளிநாடுகள் வெளியிடும் புத்தகங்கள் கப்பலில் நம்மை வந்து அடையும் வரை காத்திருக்க வேண்டாம்.





## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ‘தமிழ்ப் புத்தாண்டு’வாழ்த்துச் செய்தி

தமிழ்ப் புத்தாண்டு மலர்கின்ற இந்தத் திருநாளில் என் அன்பிற்குரிய தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் என் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பிறக்கும் தாரண ஆண்டில்

இனிமையும் மகிழ்ச்சியும் எங்கும் பொங்கட்டும்!

வான் முகில் பொழியட்டும்!

வாழ்வு செழிக்கட்டும்!

நலங்கள் தழைக்கட்டும்!

வளங்கள் கொழிக்கட்டும்!

தமிழக மக்களுக்கும், மேலும் உலகளாவிய அனைத்துத் தமிழர்களுக்கும், தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# இலக்கிய வானில்
# கவிமணியின் சாதனைகள்

☐ பேராசிரியர் டாக்டர் சு. பாலச்சந்திரன், எம்.ஏ., எம்.லிட்.,பி.எச்.டி.
முன்னாள் – யுனெஸ்கோ ஆராய்ச்சியாளர்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 1876ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 26ஆம் நாள் வரை தமிழகத்தின் நாஞ்சில் நாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர். பாரதியின் வாழ்வுக் காலம் கவிமணியின் வாழ்வுக் காலத்திற்குள் அடங்குகின்றது. விடுதலை பற்றியும் இந்தியத் திருநாடு பற்றியும் பாரதியார் மிகச் சிறப்பாகப் பாடிய பாடல்கள் அவரின் ஏனைய பாடல்களுக்கும் ஒரு பெருமையைத் தேடித் தந்தன எனலாம். கவிமணியோ, இயற்கை, சமயம், நீதிநெறி, ஆன்மிகம், சமரச நோக்கு, மக்களாட்சி போன்றவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளை மையமாக வைத்து, அழகிய ஆழமான, அமரத்தன்மை வாய்ந்த தீஞ்சுவைத் தமிழ்ப்பாடல்களைப் பாடிப் பெருமையுற்றார். ஆயின் அவரின் பாடல்களை இனியன என்றும் எளியன என்றும் கருணை நிறைந்து உள்ளங்கனிந்துருகச் செய்வன என்றும் இலக்கிய அறிஞர் பலர் மதிப்பீடு செய்துள்ளனர். கவிதையுலகில் அவர் புதிய பல மகத்தான சாதனைகளைச் செய்து காட்டியவர் என்பதையும் படைப்புக் கலையின் பரிமாணங்கள் நிறைந்த ஒரு பல்துறைக் கவிஞராக, கலைஞராக, மாபெரும்





ஆராய்ச்சியாளராக விளங்கியவர் என்பதையும் அவருடைய படைப்புகளை முழுமையாகப் பயின்றால்தான் நாம் அறிந்து கொள்ள முடியும்.

ஆக்கம் நிறைந்த, தூய, பண்பட்ட தலையாய தமிழ்ப்பற்றின், தமிழ்த் தொண்டின் வடிவமாகத் திகழ்ந்த கவிமணி, தமக்கே உரித்தான படைப்பாற்றலோடு, வளமார்ந்த ஆங்கில இலக்கியப் பயிற்சியும் பாரசீக இலக்கியத் தோய்வும் வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் படைப்புகளில் ஈடுபாடும் கீழை நாட்டுத் தத்துவ நோக்கும் கூடுதலாகக் கொண்டவராதலின், ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்கூறு நல்லுலகம் காணாத சில புதிய ஒளிக்கதிர்கள் அவரின் இலக்கிய வானில் பளிச்சிட்டன.

**படைப்பாற்றல் என்ற முறையில் மட்டுமின்றி, படைப்பாற்றலினும் கடினமானதாய் அரியதாய் விளங்கும் மொழிபெயர்ப்பு ஆற்றலிலும் கவிமணி வருங்காலத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்களுக்கு ஓர் ஒளி விளக்காகத் திகழ்கின்றார். கௌதம புத்தரைப் பற்றி சர் எட்வின் அர்னால்டு எழுதிய "The Light of Asia" என்னும் ஆங்கில நூலை "ஆசிய ஜோதி" எனக் கவிமணி மொழிபெயர்த்த தமிழ்ப் பாடல்கள் மொழிபெயர்ப்பின் அரிய, அற்புதக் கலைத்திறன்களின் வியத்தகு வெளிப்பாடுகளாக உள்ளன.**

குறிப்பிடத்தக்க மற்றொரு மொழிபெயர்ப்புப் பணிவாயிலாக, "உமார் கய்யாம்" என்ற பாரசீகக் கவிஞரைத் தமிழுலகுக்குக் கவிமணி அறிமுகப் படுத்தியுள்ளார். உலகப்புகழ் படைத்த உமார் கய்யாம் இயற்கை காட்டும் வாழ்வியல் உண்மைகளையும் இயற்கைத் தத்துவத்தின் புதிர்களையும் இறைவன் படைப்பில் காணப்படும் முரண்பாடுகளையும் மனித வாழ்க்கையில் இழையோடும் சோக கீதத்தையும் ஒரு கிண்ணத்தில் ஏந்திய ஆன்மிக மதுவாம் ஆனந்த அனுபவ போதையில் பாடியுள்ளார். பாரசீக மொழியில் அமைந்த அம்மூல நூற்பாடல்களை "எட்வர்டு பிட்ஸ் ஜெரால்டு" (Edward Fitzgerald) என்பவர் "The Rubaiyat of Omar Khayam" என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் தம் நெஞ்சைப் பறிகொடுத்த கவிமணி தமிழில் இவற்றை "உமார் கய்யாம் பாடல்கள்" என மொழி பெயர்த்துள்ளார். இம்மொழி பெயர்ப்பில் மூலநூற் பொருளும் சுவையும் உணர்ச்சிப் பெருக்கும் கற்பனை வளமும் மிக அழகுற அமைந்துள்ளமைக்கு ஒரு சான்று வருமாறு.

Look to the Rose that blows about us - "Lo,
Laughing", she says, "into the World I blow :
At once the silken Tassel of my purse
Tear, and its treasure on the Garden throw"

R.O.K. I Ed - XIII

என்னும் பாட்டு,

சிரித்த ரோஜா மலரைப் பார்
    செப்பும் இனிய மொழியைக் கேள் :
'அருத்தி யோடிவ் வுலகில் வந்து
    அழகார் நந்த வனமதிலே
பரித்த பட்டுப் பைகீறிப்
    பைம்பொன் நிதியைப் படிமீது
விரித்து வீசி எங்கெங்கும்
    விதைத்துச் செல்வேன்' என்றிடுமே

– எனத் தமிழ் யாப்பு வடிவத்தில் நிறைநிலை மொழிபெயர்ப்பாய் அமைந்து பயில்வோரை வியப்புறச் செய்கின்றது.



**"மொழி பெயர்ப்பும் ஒரு புதுப்படைப்பே. புதுப்படைப்பினும் அரியது மொழிபெயர்ப்பு. ஒரு கவிஞனது உள்ளம் ஒரு மொழியின் உயிரோட்டமாக உருக்கொண்டதனை, மற்றொரு மொழியின் உயிரோட்டமாக வேறொரு கவிஞன் உருக்கொடுப்பதுவே, கவிதையின் உண்மையான மொழிபெயர்ப்பு. இது ஒரு கவிதைப் பெருஞ்சித்து" என அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கூறியது கவிமணியின் மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு முற்றும் பொருந்துவதாகும்.**



அங்கதம் (Satire) என்னும் இலக்கிய வகை தமிழ்நாட்டு இலக்கியத்தில் மிகுதியாக இடம் பெறவில்லை. இக்குறையை நீக்கியவர் கவிமணி. புகழ்படைத்த ஆங்கில அங்கத இலக்கியங்களுக்கு இணையான ஒரு தமிழ் அங்கத இலக்கிய வகையை "மருமக்கள் வழி மான்மியம்" என்ற பெயரால் அவர் உருவாக்கி வழங்கினார். இகழ்ச்சிக் குறிப்பு, வினையம் (Irony) மகிழ்வூட்டும் மதிநலம் (Wit) குறும்புப் பேச்சு, சீர்திருத்த நோக்கம் ஆகியவை நிறைந்த இக்கவிதைப் படைப்பானது, "நாஞ்சில் நாட்டு வேளாளரிடையே ஒரு காலத்தே நிலவிய மருமக்கள் தாயமுறை" யால் எழுந்த கொடுமைகள் முற்றும் நீங்குவதற்குப் பெரிதும் காரணமாயிற்று.

இம்மருமக்கள் வழி மான்மியம் சிந்தனையைத் தூண்டிவிட்டுச் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வித்திட்டு உரமிட்ட ஆற்றல்சால் அங்கதக் கலைப் படைப்பாகும்.

கவிமணிக்குக் கல்வெட்டு ஆராய்ச்சியில் அளவு கடந்த ஆர்வம் உண்டு. மலையாள நாட்டிலும் நாஞ்சில் நாட்டிலும் கிடைத்த கல்வெட்டுகளைக் கொண்டு தாம் அரிதின் முயன்று கண்ட சில செய்திகளைக் குறித்து அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் எழுதினார். கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் சிலர் கொண்ட தவறான கருத்துக்களைச் சுட்டிக் காட்டித் தக்க சான்றுகளுடன் உண்மைகளை நிலைநாட்ட முற்பட்டார். இலக்கியங்கள் தொடர்ச்சியான வரலாற்றை வழங்குவதில் நமக்கு உதவவில்லையென்றும் சாசன கால முதற்கொண்டே ஆட்சிப் பரம்பரையை நம்மால் அறிய முடிகின்றது என்றும் இருண்டு கிடந்த பழங்கால வரலாற்றை விளக்கிக் காட்டும் ஒளி விளக்குகள் சாசனங்களே என்றும் கவிமணி குறிப்பிட்டுக் கல்வெட்டு ஆராய்ச்சியின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டினார்.

கவிமணியின், "மலரும் மாலையும்" என்னும் கவிதைத் தொகுதியில் இடம்பெறும் வெண்ணிலா, சூரியகாந்தி, மலர்கள், ஆறு, வசந்தம், பசுவும் கன்றும், புலிக்கூடு, ரோஜாவே ஏன் வாடுகிறாய், புல், மலையும் அணிலும், அழியா உயிர்ப்பு, மந்தாரை மலர், நாஞ்சில் நாடு, கடல் முதலிய பாடல்கள் இயற்கையெழிற் கோலங்களின் அற்புதச் சொல்லோவியங்களாகச் சுவைமிகுந்து காணப்படுகின்றன. சான்றாக, வாடிய "ரோஜா" "புல்" பற்றிய கவிதைகளைக் காண்போம்.

ஒரு ரோஜாப்பூ நன்கு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருந்தது. மாலைப் பொழுது வந்தது. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி ஒன்று பூவில் அமர்ந்து தாதினைக் கோதி, தேனை உறிஞ்சியது. பின், இரவு முழுவதும் தேனுண்ட மயக்கத்தில் வண்டு கிடந்தது. பொழுது புலர்ந்ததும் வண்டு விழித்தெழுந்து பறந்தது. இஃது இயற்கையாக நிகழ்வது. இந்நிகழ்ச்சியை, இரவுக்காவலை மீறி ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து, பொருளை எல்லாம் கொள்ளையடித்துச் சென்ற கள்வனின் செயலாகக் கவிமணி கற்பனை செய்து பாடியுள்ளார்.

கள்ளன் வந்தான் கள்வன் வந்தான்
கதவை உடைத்தான் – வீட்டுக்
கதவை உடைத்தான்
கொள்ளையிட்டென் பொருளையெல்லாம்
கொண்டுபோய்விட்டான் – ஐயோ
கொண்டுபோய்விட்டான்
கத்தி கட்டிக் காத்து நின்ற
காவலாளரைப் – பல
காவலாளரை
எத்திவிட்டுப் பறந்து சென்றான்
என்ன மாயமோ ? ஐயோ ?
என்ன மாயமோ

கள்ளனின் தீச்செயலால் தன்வசம் இருந்த பொருளையெல்லாம் இழந்து வாடும் ஒருவரின் ஓலம் பாட்டிலே எதிரொலிக்கின்றது. "கள்ளன்" என்பது வண்டைக் குறிக்கும். கள்ளன் கதவை உடைத்தது வண்டு இதழ்களைக் கோதிய செயலைக் குறிக்கும். "கொள்ளை" என்பது தேன் நிரம்ப இருந்ததைக் குறிக்கும். பொருளை எல்லாம் கொண்டு போனது, வண்டானது தேன் முழுவதையும் குடித்துச் சென்றதைப் புலப்படுத்துகின்றது. காவலாளர் கத்திகாட்டிக் காத்து நின்ற செயல், ரோஜாப் பூவானது முள்ளாகிய காவலோடு பூத்திருந்ததைக் காட்டுகின்றது. காவலாளரை எத்திவிட்டுப் பறந்து சென்றமை தேனைக் குடித்த வண்டு, முள்ளாகிய காவலைக் கடந்து ஓடிவிட்டதைக் குறிக்கின்றது.

காலையெழும் கதிரவனும்
கண்ட தில்லையோ ? – இதைக்
கண்ட தில்லையோ

என்று "பூ" முறையிடுதல், வண்டு இரவு முழுதும் மலரில் அமர்ந்து தேன் உண்டு களித்தது என்பதைக் குறிப்பதாக நாம் கொள்ளலாம்.





ஒருவர் சேர்த்து வைத்த பொருளை மற்றொருவர் கொள்ளையடிப்பது மானிட உலகில் குற்றமாகும். அவ்வாறாயின், பூக்கள் தம்மிடம் தேக்கி வைக்கும் தேனை வண்டுகள் உண்டுவிட்டு ஓடுவதும் குற்றமேயல்லவா ? இதைத் தட்டிக் கேட்க ஆள் இல்லையா என்று பூ நினைந்து வருந்துவது போலக் கற்பனை அமைந்துள்ளது.

மணம் பெருக்கித் தேன் தேக்கி வாழ்ந்த தன் வளமான வாழ்வு கெட்டுவிட்டது. ஆகவே, இனியிருந்து பயனில்லை; பூவுலகைவிட்டுப் போவதே நலம்; இறைவன் திருவடி சேருவதே நல்லது எனப் பூவானது துணிந்து விடுவதாக ஆசிரியர் கற்பனை செய்துள்ளார்.

பூவுலகில் வாழ்ந்ததினிப்
போதும் போதுமே – தேவர் திரு
அடி பணியச் செல்லுகின்றேனே – இதோ
செல்லுகின்றேனே

எனப் பாடல் முற்றுப் பெறுகின்றது. இயற்கையில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை உருவக முறையில், உள்ளுறைப் பொருள் தோன்றும்படியாக, அந்த இயற்கைச் செயலின் நிகழ்வு முழுவதையும் வெளிப்படுத்தக்கூடிய கவிமணியின் சொல்லாட்சிச் சிறப்பையும் இங்குக் காணுகின்றோம்.

உலகப் படைப்பில் புல் மிகமிகச் சிறிய தாவரம். ஆயினும் கவிமணி அதன் வடிவிலும் வண்ணத்திலும், வளர்ச்சியிலும், இயக்கத்திலும் ஆழமாக ஈடுபடுகின்றார். "புல்" தானே தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது போலக் கற்பனை செய்கின்றார். தன் உயிர் வாழ்வைக் காத்துக் கொள்ள அந்தப் புல் பட்ட பாட்டைப் பாடி, நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றார். அதன் வளர்ச்சியின் போது, பொல்லா மனிதர் சிலர் சூழுங் கொடுமைகளைப் புல் தானே சொல்லிப் புலம்புவது போலக் காட்டி, உள்ளம் உருக வைக்கின்றார். "புல்லே யாயினும் புல்லிய குணமிலை" என்னும் பேருண்மையை நிலை நாட்டுகின்றார்.

தம் கருத்தைக் கவர்ந்த புல்லின் புறத்தோற்றத்தையும், அழகையும் புலப்படுத்தும் அளவில் கவிஞர் நிற்கவில்லை; நம் புலன் அறிவுக்கு எட்டாதிருக்கும் புல் பற்றிய உண்மைகளை முழுமையாகவும், தெளிவாகவும் பாட்டில் அமைத்துக் காட்டுகின்றார். சிறிதாகிய அப்புல்லுக்குள் அமைந்து கிடக்கும் பெரிதாகிய ஆற்றலையும் வியக்கத்தகு இயக்கத்தையும் வெளிக் கொணருகின்றார்; அன்பு, அருள், பொறுமை, தியாகம், முதலிய பண்புகளை, மானிட சமுதாயத்திற்குப் புல் தன்னியக்க மூலம் கற்பிப்பதாகக் காட்டுகின்றார். இனி, பாடலின் முக்கிய பகுதிகளைக் காண்போம்.

"பசும்புல் என்பெயர்; பட்ட பாடெல்லாம்
ஒருபெருங் கதையாம், உரைப்பதும் எளிதோ ?

என்னும் வரிகளில் புல்லின் சோக கீதத்தின் நாதம் ஒலிப்பதைக் கேட்கின்றோம். அன்பற்ற கொடியரின் வாயிற்படியில் வளர்ந்ததால் நீரின்றி வாடிய புல், தண்ணீர், தண்ணீர் எனத் தவித்தும் பெறாது, நாவறண்டு கிடக்கின்றது. மண்ணக மாந்தர் இது குறித்துக் கவலையின்றிப் போயினர். ஆயினும், வானமோ புல்லின் நிலை கண்டிரங்கி மழைநீரை வழங்குகின்றது. புல்லும் பிழைத்துக் கொண்டது; பன்னாள் அயர்ந்த அயர்ச்சி நீங்கித் தலைதூக்கி நின்றது. அந்தோ ! நெஞ்சிற்

கருணையில்லா வஞ்சக மாக்கள் அதன் தலையைக் கொய்து கழுத்தையும் அறுத்தனர்.

.... சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது; பார்த்தனர் பாவிகள்,
தரிக்கிலர் உள்ளம்; தழைக்கும் தலையைக்
காலால் மிதித்தனர்; கழுத்தையும் அறுத்தனர்
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்
படர்ந்த இடமெல்லாம் பாழேயாக்கினர்
இருந்த இடமும் இல்லாதியற்றினர்.

எனப் புல் மீண்டும் தன் அவல வரலாற்றையே பாடுகின்றது. வேறுவழியின்றிச் சில காலம் மண்ணிற்குள் மறைத்து வாழுகின்றது. வான்மழைத் தோழன் வருகின்றான்.

"மனிதன் செயலால் வலியிழந் தனையோ ?
என்துணை யிருக்க இடர்உனக் குண்டோ ?
அறிவிலி போலும் நீ! அஞ்சேல், அஞ்சேல்
யாவையும் காப்பவன் ஈசன்"

எனச் சொல்லித் தேற்றிப் புல்லுக்கு ஊற்றமும் உறுதியும் அளிக்கின்றான். ஆயின், அன்பிலார் மீண்டும் புல்லைப் பிடித்து வெட்டிப் பிடுங்கி யெறிகின்றனர். சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டுகின்றனர். துடைப்பம் கொண்டு துரத்தியடிக்கின்றனர்; புல்லோ மனந்தளராது நல்ல காலம் வருமென நம்பிச் சற்று மறைந்து தங்குகின்றது.

ஒரு நாள் வீட்டில் உள்ளோர் அனைவரும் வேற்றூர் சென்றனர். வெகுநாளாகியும் மீளவில்லை. புல்லும், "இதுவே தருணம்" என நினைந்து, விரைவில் வளர்ந்து, விரும்பியபடியெலாம் தழைத்துச் செழித்துச் சார்பிடம் எங்கும் படர்ந்து பற்றிப் பல்கிளையாகி மக்களைப் பெற்று வாழ்ந்து வருகின்றது. தனக்குக் கேடு இழைத்த மனிதரின் இல்லத்தையும் இடித்துவிடவல்ல வலிமை அதற்கு உண்டாகின்றது. ஆயினும், "பொறுத்தார் பூமியாள்வார்" என்னும் பொன்மொழிக்கிணங்க

"அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்
முயற்சி கைவிடேன், முயற்சி கைவிடாத
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே.

என உணர்ந்து சான்றோர் போல அமைதியாக வாழ்ந்தது.

இங்ஙனம் புல் உருவில் சிறியதாயினும் தன் வாழ்க்கைப் போரில் தளராது நின்று இடையறாப் பெரு முயற்சியால் வெற்றி பெறுகின்றது என்பதனை நோக்கும்போது, நாம் வியப்பும் உள்ளக் களிப்பும் கொண்டு புல்லைப் பணிவுடன் மதித்து நடக்கின்றோம்.

இவ்வாறாக, கவிமணியின் பல்வகைக் கவிதை உணர்வுகளையும், சிந்தனைகளையும் உள்ளடக்கிய "மலரும் மாலையும்" என்னும் கவிதைத் தொகுப்பு, கவிமணியின் "உரைமணிகள்" என்னும் உரைநடை நூல், "தேவியின் கீர்த்தனங்கள்" என்ற தமிழிசைப் பாடல் தொகுதி, "மருமக்கள் வழி மான்மியம்" என்ற அங்கதப் படைப்பு, உமார்கய்யாம் பாடல்கள், ஆசியஜோதி, ஆகிய கவிமணியின் படைப்புகளை முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் நமக்கு அவரைப் பற்றிய பேருண்மைகள் சில புலனாகும்.



மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் கொண்டு வாழ்ந்த கவிமணி அப்பற்றுகளிலேயே தம்மைப் பிணித்துக் கொள்ளவில்லை. அனைத்து நாட்டு மக்களும் அன்புநெறி போற்றி அருளாணையின் உண்மையுணர்ந்து உள்ளம் திருந்தி உயர்வான நெறியில் நின்று வாழ்வின் நற்பயனை எய்துதல் வேண்டும் எனவும் நினைத்தார். அவ்வண்ணமே வாழ்ந்தும் வந்தார். வாழ்வு, உணர்வு, கவிதை என்னும் இம்மூன்றாலும் அன்பும் அருளும் இன்னதென உலகுக்குக் காட்டி வாழ்ந்த உத்தமராக, உலகக் கவிஞர் வரிசையில் ஒருவராக, இலக்கிய வானில் பல அரிய சாதனைகளைப் படைத்தவராக ஓங்கி நிற்கின்றார் என்பதில் ஐயமில்லை. ✶

'உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்
உருவெ டுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை
தெரிந்து ரைப்பது கவிதை'
- கவிமணி



# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

## தோற்றமும் – செயல்பாடுகளும்

வசதியின்மை, வீட்டுச்சூழல், திருமணம் மற்றும் குடும்பச் சூழல், பணிச்சூழல் ஆகியவை காரணமாக உயர்கல்வி வாய்ப்பினைப் பெறமுடியாதவர்களுக்காகவும், பெண்கள், நலிந்த பிரிவினர், பணியில் இருந்தபடியே பயில விரும்புவோர், உடல் குறைபாடு உடையோர், வெளியில் செல்ல இயலாதோர் மற்றும் உயர்கல்வியில் திறமேம்பாடு விழைபவர்களுக்காகவும், தமிழக அரசால் இந்த ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைதூரக் கல்வியை தாய்மொழியான தமிழில் கல்வி கற்பிப்பதற்காகவும், தாமே கற்கும் தொலைநிலைக் கல்வி நூல்கள் (SIM) மூலம் மட்டுமல்லாமல் வானொலி/தொலைக்காட்சி/தொலைபேசி மற்றும் ஒலி ஒளிப் பேழைகள் மூலமாகவும் மாணவர்களுக்குத் தரமான கல்வியை சுயமாகக் கற்பதற்கும் அறிவு மற்றும் செயல்திறன் பெறுவதற்கும் இப்பல்கலைக்கழகம் இந்திராகாந்தி தேசீய திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தோடு ஏற்கெனவே ஒப்பந்தம் செய்துகொண்டபடி இந்தக் கல்வியாண்டிலேயே பாடங்களைத் தொடங்கியுள்ளது.

தமிழக அரசு இப்பல்கலைக்கழகத்தைத் திறப்பதற்காகவும், திறம்பட செயல்படுவதற்காகவும், பாடங்கள் தொடங்குவதற்காகவும், மற்றும் உள்ளமைப்பிற்காகவும் ரூ.50 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த ரூ.50 இலட்சத்தைத் தவிர கல்வி மையங்கள் அமைப்பதற்காகவும், 20 ஆசிரியர்கள் மற்றும் 27 நிருவாக ஊழியர்களை நியமிக்கவும், உள்ளமைப்பு விரிவாக்கத்திற்காகவும் மற்றும் இதர மேம்பாட்டிற்காகவும் இக் கல்வியாண்டுக்காக ரூ.78 இலட்சம் வழங்கியுள்ளது.

மாணவர்கள் அதிகம் விரும்பும் வண்ணம் எளிதில் தானாகவே கல்வி கற்க ஏதுவாகவும் மற்றும் தரமுள்ள வகையிலும் இப்பல்கலைக்கழகப் பாடநூல்கள் இருக்கும். இப்பாடங்கள் அனுபவமிக்க பேராசிரியர்களைக் கொண்டு எழுதப்பட்டவை. இந்த ஆண்டு இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நூல்களையே இப்பல்கலைக்கழகம் பயன்படுத்தியிருக்கிறது. அடுத்த ஆண்டு சுயபாடத் திட்டங்களை வகுக்கவும், தமிழ் வழி நூல்களை ஆக்கவும் அனுபவமிக்க பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோரையும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், உதவிப்பதிவாளர், கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர்களையும் நியமிக்க தமிழக அரசு ஒப்புதலோடு எடுக்கப்பட்ட முயற்சிகள் முடிவடைந்து எல்லா பணியாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். மேலும் நிருவாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு ஆட்சிக்குழு மற்றும் கல்விமன்ற உறுப்பினர்கள் நியமனம் ஆகியவை மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, விழுப்புரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் தமிழக அரசு ஒப்புதலோடு கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கல்வி மையங்களில் எல்லா வார இறுதி நாட்களிலும் அனுபவம் மிகுந்த



பேராசிரியர்களால் ஆசிரியர் – மாணவர் கலந்துரையாடல் மற்றும் பயிற்சித்தாள் மதிப்பீடு ஆகியவற்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர, தமிழ்நாட்டின் வட்ட, மாவட்ட அளவில் 333 தகவல் மற்றும் பயிற்சி மையங்களை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மாணவ மாணவியர்களின் வசதிக்காக அமைத்துள்ளது.

தமிழக அரசு அனுமதியோடு எம்.பி.ஏ., எம்.ஏ., (வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், பொது நிருவாகம், அரசியல் அறிவியல், மன உளவியல்), எம்.காம்., பி.ஏ., (ஆங்கிலம், தமிழ், வரலாறு, பொருளாதாரம், சுற்றுலா), டி.ஐ.எம். (நிர்வாக இயல் டிப்ளமோ), மற்றும் ஆங்கிலம் பயிற்றுவித்தல் (CTE), ஆரம்பப்பள்ளி கணிதம் பயிற்றுவித்தல் (CTPM), கணினியியல் (CIC), ஊரக வளர்ச்சிக் கல்வி (CRD), சுற்றுச்சூழல் அறிவியல் (CES), உணவு மற்றும் சத்துணவு (CFN) மற்றும் சுயஉதவிக் குழு மகளிர் மேம்பாட்டுக் கல்வி (CWDL) ஆகிய சான்றிதழ் பாடங்களும் தொடங்கப்பட்டுள்ளன. எல்லாப் பாடத் திட்டங்களும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் வாயிலாக கற்பிக்கப்படவுள்ளது.

கிரடிட் முறை மூலம் இளக்கமான கல்வி முறை நடத்தப்படவுள்ளது. சான்றிதழ் (Certificate) படிப்புகள் 16 கிரடிட் தகுதியுடன் ஆறு மாதத்திலும், பட்டயப் படிப்பு (Diploma) 32 கிரடிட் தகுதியுடன் ஒரு வருடத்திலும், இளங்கலைப் பட்டப்படிப்பு 96 கிரடிட் மூலம் மூன்று வருடங்களிலும், முதுகலை பட்டமேற்படிப்பு 48 கிரடிட் மூலம் இரண்டு வருடங்களிலும் முடிப்பதற்குத் தரமான பாட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மற்ற பல்கலைக் கழகங்களில் பயின்று கல்வியினைத் தொடர முடியாத மாணவ மாணவியர்க்கும் கிரடிட் மாற்றம் மூலம் (Transfer of Credits) அவர்களின் கல்விச் சுமை குறைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எந்தவித கல்வித் தகுதியும் இல்லாத 18 வயது நிரம்பியவர்கள், சான்றிதழ், பட்டயம் மற்றும் இளங்கலை பட்டப்படிப்புகளில் சேர்ந்து படிக்கலாம். இவர்கள் (BPP) என்ற நுழைவுத் தேர்வு பயிற்சி மூலம் முறையே இளங்கலை வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். எனவே, இந்தத் திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மூலம் பெறும் கல்வி தரமுள்ளதாக மட்டுமல்லாமல் ஏனைய இந்திய பல்கலைக்கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்டவையும் ஆகும்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் குறைந்த செலவில் மாணவ மாணவியர்க்குத் தரமான கல்வியை கொடுக்க முடியுமென்பது அதன் கட்டணப் பட்டியலின் மூலம் அறிய முடிகிறது. இப்பல்கலைக்கழகத்தின் கட்டணம் மற்ற பல்கலைக்கழகங்களின் கட்டணத்தில் 50–60 சதவிகிதம்தான் வசூலிக்கிறது. குறிப்பாக எம்.பி.ஏ. பட்டம் பெற மற்ற பல்கலைக்கழகங்களின் ரூ.25,000 முதல் ரூ.30,000 வரை வசூலிக்கின்றன. ஆனால் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ரூ.12,600–ஐ மட்டுமே கட்டணமாக வசூலிக்கின்றது.

புதுதில்லியிலுள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் குறித்து தெரிவித்துள்ள பாராட்டில்,

"தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது ஒரு புதிய சகாப்தமாகும். தமிழக அரசு திறந்தநிலைக் கல்விக்கென்று ஒரு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தினை ஆரம்பித்தது ஒரு முன்னேற்றமான நடவடிக்கை ஆகும். தமிழக அரசின் இந்த துணிச்சலான மற்றும் அனுபவபூர்வமான நடவடிக்கையினை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மூலம் தமிழகத்தில் கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான நிதி உதவி செய்ய நாங்கள் எப்போதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏழைகளுக்கும் நலிவுற்றவர்களுக்கும் குறைந்த செலவில் உயர் கல்வியைக் கொடுக்க தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வழி வகுக்கிறது. மேலும், இப்பல்கலைக் கழகத்தினை தோற்றுவித்ததன் மூலம் மகளிர், உடல் ஊனமுற்றோர் மற்றும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டோர் ஆகியவர்களுக்கு உயர் கல்வியினை தங்கு தடையின்றி குறைந்த செலவில் வழங்க தமிழக அரசு வழி வகை செய்துள்ளது.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் எங்களின் எதிர்பார்ப்புக்கும் மேலாகவே நல்ல முறையில் இருந்து வருகிறது. இப்பல்கலைக்கழகம் தொடங்கிய ஆறு மாதங்களுக்குள் அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளது. பாடங்களைத் தொடங்குவது பற்றியும் விரிவுரையாளர்கள் மற்றும் நிருவாகப் பணியாளர்கள் நியமனம் தொடர்பாகவும் செய்து முடிக்கப்பட்ட அடிப்படைப் பணிகளை எண்ணிப் பார்க்கும்போது இது எவ்வாறு சாத்தியமானது என்று ஆச்சரியப்படவைக்கிறது.

தமிழக அரசின் மேற்கண்ட நடவடிக்கையினால் தமிழகத்தில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மூலம் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை மிகவும் அதிகரிக்கும் என்றும் அதன்மூலம் இந்தியாவில் உயர் கல்வியில் 10 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் குறியீட்டினை மிக விரைவில் எட்ட ஏதுவாகும் என நம்புகிறோம்" என குறிப்பிட்டுள்ளது.

ஆசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகங்களின் சங்கத்திலும், தெற்காசிய கூட்டமைப்பிலும் தற்போது தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் உறுப்பினராக



அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆசியா முழுவதிலுமுள்ள தொலைதூரக் கல்வியின் வாய்ப்பு வளங்களை பங்கீட்டுக் கொள்ள தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



## சேவை விருது

இது தவிர பன்னாட்டு நிறுவனமான கவோத்தி பிரான்ஸ் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சேவைகளைப் பாராட்டி "பிரான்ஸ் இந்தியா ஹெரிடேஜ்'' என்ற விருது வழங்கி சிறப்பித்து உள்ளது.

இந்தியாவில் திறந்தநிலை மற்றும் தொலைதூரக் கல்வியின் தரத்தை மேம்படுத்த புதுடில்லி இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி மாமன்றம் தாராளமாக நிதியுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் திறந்தநிலை மற்றும் தொலைதூரக்கல்வியின் தரத்தை மேம்படுத்த நிதியுதவி கேட்டு மேற்கண்ட மாமன்றத்திற்கு விண்ணப்பித்தது. இவ்விண்ணப்பத்திற்குத் தொலைதூரக் கல்வி மாமன்றம் மிக முக்கியத்துவம் அளித்து இம்மாமன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஹ.பி. தீக்ஷித், ஒரு நிபுணர் குழுவை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி இப்பல்கலைக்கழகம் இக்கல்வியாண்டில் என்னென்ன பாடத்திட்டங்களை தொடங்குகிறதென்பதையும், உள்ளமைப்பு மதிப்பீடும், இக்கல்வியாண்டு மற்றும் இனிவரும் காலங்களுக்கான நிதித் தேவைகளையும் ஆராய்ந்தது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு புதுதில்லி தொலைதூரக் கல்வி மாமன்றம் ரூ.50 இலட்சத்தினை ஒதுக்கி, குறிப்பிட்ட காலத்துக்குள் மேம்பாட்டுச் செலவினங்களை முடிக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகம் திறம்பட முடித்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் பி.எட். இளங்கலைப் பட்டப்படிப்பு தொடங்குவதற்கு தேசிய ஆசிரியர் பயிற்சிக் குழுமத்தின் (NCTE) அனுமதி பெறுவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு இக்குழுமத்தின் ஒரு குழுவை சென்ற மாதம் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி உள்ளமைப்பு மதிப்பீடு மற்றும் இதர தளவாடங்களை நேரில் அறிந்துள்ளது. அனுமதி கிடைத்தவுடன் 2004 ஜூன் மாதம் முதல் பி.எட். இளங்கலைப் பட்டப்படிப்பு ஆரம்பிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சென்ற கல்வியாண்டில் சுமார் 10,000 மாணவர் மற்றும் மாணவியர்கள் சேர்ந்துள்ளனர். முதலாண்டிலேயே இவ்வெண்ணிக்கை உற்சாகம் தரக்கூடியதாக அமைந்துள்ளது.

வருங்காலத்தில் தமிழ் மொழியில் குறுகிய கால வேலை வாய்ப்புக்குரிய பாடத் திட்டங்களை பொறியியல் மற்றும் கணினித் துறைகளில் அறிமுகப்படுத்துதல், பாடநூல்களை அச்சிடுதல், ஒலி ஒளிப் பேழைகளைத் தயாரித்தல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கிராமப்புறங்களிலும் கல்வி மையங்களை அமைத்து அங்கு வசிப்பவர்களுக்கு அதிகமாக இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயில வாய்ப்புக் கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தமிழக அரசு மற்றும் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி மாமன்றத்தின் ஆதரவுகளால் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மிகக் குறைந்த காலத்திலேயே பன்மடங்கு ஓங்கி வளரும் சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும், தமிழக முதலமைச்சர் அவர்களின் குறிக்கோளான, ''எல்லோருக்கும் எப்போதும் குறைந்த செலவில் உயர் கல்வி வழங்கி வருங்காலத்தில் தமிழ்நாட்டை கல்வி வரைபடத்தில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க வேண்டும்'' என்ற கனவு நனவாகுமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழக முதலமைச்சரின் மேற்கண்ட ஆழ்ந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் பங்கு கணிசமாக இருக்குமென்பது உறுதி.

– டாக்டர் எம்.எஸ். பழனிச்சாமி,
*துணைவேந்தர்,*
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்*

* * *

### மனித உடல்

* மனிதனால் சராசரியாக 25 மைல் வேகத்தில் ஓட முடியும்.
* 100 மைல் வேகத்தில் ஒரு பந்தை வீச முடியும்.
* ஏழு அடி உயரத்துக்குத் தாண்டிக் குதிக்க முடியும்.

# இனிப்புத் துளசி சாகுபடி

* முனைவர் கே. ஹேமலதா
இயக்குநர் – மகளிர் ஆற்றல் மேம்பாட்டு மையம்
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 25.

* முனைவர் கீதா முத்துக்குமரன்
பேராசிரியர் – உயிர்த் தொழில்நுட்ப மையம்
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை – 25.

ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. குறிப்பாக கிராமப்புற வளர்ச்சியில் பெண்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். எனினும் ஆண்களுடன் ஒப்பிடும்போது சமூகப் பொருளாதார அடிப்படையில் பெண்கள் பின்தங்கியே இருக்கின்றனர். வாய்ப்புகள் பெரும்பாலும் சரிவர பெண்களைச் சென்றடைவதில்லை. பெண்களுக்கும், ஆண்களுக்கும் சரிசமமான வாய்ப்புக் கிடைத்தால் ஆண்களைவிட பெண்கள் சிறப்பாகப் பணியாற்ற முடியும். பெண்களின் முழுசக்தியை வெளிக்கொண்டு வர அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலும், சமுதாய பொருளாதார ரீதியிலும் சுதந்திரமும் சம உரிமையும் வழங்கப்பட வேண்டும். இவற்றை அடைவதற்கு பெண்கள் தங்களது அறிவையும், திறமைகளையும் மேம்படுத்திக் கொள்ளவேண்டும். இதன் அடிப் படையில் அமைக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம் மிகப்பெரிய இயக்கமாகத் தமிழ்நாட்டில் இயங்கி வருகிறது.

சிறுதொழில்கள் உதாரணமாக பாய் பின்னுதல், ஊறுகாய் போடுதல், அப்பளம் இடுதல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றை இக்குழுக்கள் செய்வதால் அதிகமான இலாபத்தை ஈட்ட முடியவில்லை. உரிய தொழில்நுட்பத்தையும், வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுத்தால் அவர்கள் அதிக இலாபத்தை அடைந்து, பொருளாதார ரீதியாக மிகுந்த முன்னேற்றத்தை அடையமுடியும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உரிய தொழில்நுட்பத்தை அளிப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம் முயன்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஸ்டீவியா ரெபொடீனா எனப்படும் இனிப்புத் துளசி (சீனித் துளசி என்றும் கூறலாம்) சாகுபடி செய்து அதன்மூலம் மகளிர் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையை அண்ணா பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தில் சுமார் ஒரு ஆண்டிற்கு முன்பு "மகளிர் ஆற்றல் மேம்பாட்டு மையம்" (Centre for Empowerment of Women) எனும் அமைப்பை துணைவேந்தர் பாலகுருசாமி அவர்கள் உருவாக்கினார். இந்த மையமானது மகளிர் சமுதாயத்தில் பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கும், அவர்களைத் தன்னம்பிக்கை உள்ளவர் களாகவும், நாட்டின் முன்னேற்றத்தில் பங்கேற்பவர் களாகவும் செயல்படுவதற்குத் தொழில்நுட்பப் பயிற்சி, மேலாண்மை நிருவாகத் திறன்களை அடையும் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்குப் பல்வேறு திட்டங்களை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மூலம் தீட்டி வருகின்றது. இதன் அடிப்படையில்தான் இனிப்புத் துளசி பயிரிடுவதற்கான திட்டத்தை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு உதவுவதற்காக மகளிர் ஆற்றல் மேம்பாட்டுக் கழகமும் உயிர் தொழில்நுட்ப மையமும் (Centre for Bio-technology) இணைந்து நடத்தவிருக்கின்றன.

## இனிப்புத் துளசி

ஸ்டீவியா எனப்படுவது பிராகுவே நாட்டைச் சேர்ந்த பயிர். பின்பு இப்பயிர் ஜப்பான், பிரேசில், சீனா, தாய்லாந்து போன்ற பிற நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக இந்தியா விலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை, தமிழில் இனிப்புத் துளசி என்றாலும், இப்பயிர் துளசி வகையைச் சார்ந்தது அல்ல. சாமந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இனிப்புச் செடியாகும். இதன் இலைகள் மிகுந்த இனிப்புத் தன்மை கொண்டவை. சர்க்கரையோடு





ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த இலை முப்பது தடவை அதிக இனிப்புத் தன்மை கொண்டது. ஆனால் சர்க்கரை போன்று உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்காது. கலோரிகளை உருவாக்காது. இது இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைப்பதால், சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இந்த இலை ஒரு வரப்பிரசாதமாகும்.

வெளிநாடுகளில் இந்த இலையை உலர வைத்து, பொடி செய்து இனிப்பு வகைகள், ஐஸ்கிரீம், குளிர்பானங்கள், ஊறுகாய்கள், பழச்சாறுகள், ஜாம் ஆகியவற்றில் சர்க்கரைக்கு மாற்றாக உபயோகித்து, சர்க்கரை நோய் உள்ளவர்களும் இந்த இனிப்பு வகைகளை பக்க விளைவின்றி உண்ண முடியும் என்று நிரூபித்துள்ளனர். இதனால் ஸ்டீவியா இலைகளுக்கு வெளிநாட்டுச் சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. இப்போது உள்நாட்டிலும் இந்த இலையினை சர்க்கரைக்கு மாற்றாக உபயோகிக்க ஆரம்பித்து உள்ளனர். ஒரு கிலோ காய்ந்த இனிப்புத் துளசியின் தற்போதைய விலை ரூபாய் 200 ஆகும் என்பதால் இதனைப் பயிரிட்டால் பொருளாதார ரீதியாக அதிக இலாபம் பெறமுடியும். ஸ்டீவியா இலைகளில் உள்ள ஸ்டீவியோசைட் எனப்படும் வேதிப்பொருள்தான் இந்த இலைகளுக்கு இனிப்புத்தன்மையைக் கொடுக்கிறது. அண்ணா பல்கலைக்கழகத்தின் உயிர்த் தொழில்நுட்ப மையத்தை சேர்ந்த பேராசிரியை கீதா முத்துக்குமரன் இப்பொருளை பிரித்தெடுத்து நேரிடையாக தேநீர், காபி போன்றவற்றில் கலந்து அருந்துவதற்காகும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதனால் உள்நாட்டிலேயே இதன் மதிப்பு அதிகரிக்கும். ஸ்டீவியா இலைகளுக்கு மற்ற மருத்துவ குணங்களும் உள்ளன. அதிக இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல், செரிமான சக்தியை அதிகரித்தல், பருக்கள் போன்ற தோல்நோய்களைக் குணப்படுத்தல், பல் சொத்தை ஆவதைத் தடுத்தல் ஆகியவையும் இதில் அடங்கும். இந்தியாவிலும் இந்த இலையினை உபயோகித்துத் தயாரிக்கப்பட்ட பற்பசைகளும், ரொட்டிகளும் சந்தையில் தற்போது வெளிவருகின்றன.

**"இனிப்புத் துளசியை சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்குத் தொடக்க முதலீடாக ரூபாய் 4 இலட்சமும், ஆண்டுக்கு ரூபாய் 80 ஆயிரமும் தேவைப்படும். முதலாண்டிலேயே ரூபாய் ஒன்றரை இலட்சமும் அடுத்தடுத்த ஆண்டுகளில் ரூபாய் நாலரை இலட்சமும் வருவாய் கிடைக்கும். இப்பயிரை ஒரு முறை பயிரிட்டால் 3 முதல் 5 ஆண்டுகள் வரை பயன்தரும்''.**

## செயல்முறை விளக்கப் பண்ணைகள்

இந்த இனிப்புத் துளசி பயிரிடும் திட்டத்தை முதன்முறையாக தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டித் தொகுதியில் உள்ள கடமலைக்குண்டு ஊராட்சியில் செயல்பட்டு வரும் அங்காள ஈஸ்வரி சுயசார்பு சுரபி சுயஉதவிக் குழுவுக்குத் தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒரு ஏக்கர் நிலத்தில் செயல் படுத்துவதற்கு அண்ணா பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தை பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனியில் அறிமுகப்படுத்தும். இம்முன்னோடித் திட்டத்தின் வெற்றியினைப்

பொருத்து, இது மற்ற மாவட்டங்களுக்கும் அறிமுகப் படுத்தப்படும். இதேபோன்று சென்னைக்கு அருகில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கரலப்பாக்கம் என்னும் கிராமத்தில் மத்திய அரசைச் சார்ந்த உயிர்த் தொழில்நுட்பத்துறை மூலம் இனிப்புத் துளசி பயிரிடும் திட்டத்தை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிர் தொழில்நுட்ப மையமும், மகளிர் ஆற்றல் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து செயல்படுத்த உள்ளன. காய்ந்த இலைகளை சந்தை விற்பனை செய்யும் பொறுப்பை இம்மகளிர் குழுக்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போதைக்கு ஒசூரில் உள்ள குரோமோர் பயோடெக் நிறுவனம் திசு வளர்ப்பு முறையின் மூலம் வளர்க்கும் ஸ்டீவியா நாற்றுகளை அண்ணா பல்கலைக்கழகம் வாங்கி இத்திட்டங்களுக்குப் பயன் படுத்துகிறது.



### இனிப்புத் துளசி வளர்க்கும் முறை

#### மண்

சீனித் துளசி, செம்மண் மணற்பாங்கில் நன்கு வளரும் தொட்டியில் செம் மண், மணல் மற்றும் தொழு உரம் கலந்த கலவையைப் பயன்படுத்தலாம். களிமண் இல்லாத மணற்பாங்கே செடி வளரச் சிறந்தது.

#### வெப்பநிலை

இச்செடி சுமார் 20°C - 35°C வரை வெப்பத்தில் வளரக்கூடியது. செடி வளரும் இடத்தின் வெப்ப நிலை 40°C –க்குள் 10°C க்கு குறையாமலும் இருப்பது அவசியம். நிழல்படாத இடத்தில் தொட்டியை வைப்பது அவசியம். அதிகப்படியாக 12 மணி நேரடி சூரிய ஒளியும், வெப்ப நிலையும் இலையின் இனிப்புத் தன்மையை தீர்மானிக்கின்றன.

#### நில பதப்படுத்துதல்

மண்கட்டிகளை உடைப்பதற்கு முதலில் வட்டக் கலப்பை அல்லது கிளறியால் நிலத்தை உழவேண்டும். ஸ்டீவியா பயிர் செய்ய மண் நயமாக இருத்தல் தேவை. மண்ணைக் கிளறிய பின்பு ஒன்று (அ) இரண்டு முறை உழவேண்டும். ஏறக்குறைய FYM (சாணி உரம்) 25 மெட்ரிக் டன், ஒரு ஏக்கருக்கு அடியிட்டு, கடைசியாக உழும்போது மண்ணுடன் இயற்கை உரம் சேர்க்க வேண்டும்.

#### உயர்படுகை அமைத்தல்

ஸ்டீவியா வளர்ச்சிக்குப் படுகையை உயர்த்துதல், சிறந்த பொருளாதார வழியாகும். 15 செ.மீ. உயரமும், 60 செ.மீ. அகலமும் உயர்த்துதல் வேண்டும். இரண்டு பாத்திகளுக்குமிடையேயுள்ள தூரம் 40 செ.மீ. இருத்தல் வேண்டும். ஒரு வரிசையில் இரண்டு செடிகளுக்குமிடையே உள்ள தூரம் 23 செ.மீ. இருத்தல் வேண்டும். இந்த இடைவெளியில் ஒரு ஏக்கருக்கு ஏறத்தாழ 30,000 செடிகள் இருக்கும்.

#### நீர்ப்பாசனம்

ஸ்டீவியா செடி நீர்ப்பாசனத்திற்கு நுண்தூவல் முறை மிகவும் சிறந்தது. சரியான நேரத்தில், தேவையான நீரினை பரவல் பாசனம் அல்லது வாய்க் கால் பாசனத்தால் வழங்க இயலாது. குளிர்காலத்தில் நாளுக்கு ஒரு முறையும், கோடைகாலத்தில் நாளுக்கு 2லிருந்து 4 முறையும் வெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதத்தையும் அடிப்படையாகக் கொண்டு நுண்தூவிகளினால் நீர் தெளிக்க வேண்டும். நீர் தேங்கி நிற்கலாகாது.

#### உரம்

ஒரு ஏக்கருக்கு 11-0:45:45 NPK(தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து) அளவு உரம் போடுதல் வேண்டும். யூரியா 4½ பைகள் DAP 2 பைகள், பொட்டாஷ் இரண்டு பைகள் தேவை. DAP முழுஅளவும் அடி உரமாக போட வேண்டும். நைட்ரஜன் (தழைச்சத்து) மற்றும் பொட்டாஷ் (சாம்பல் சத்து) உரம் தெளிக்க வேண்டும். மொத்த உரத்தைப் பத்தாக பிரித்து ஒவ்வொரு மாதமும் 10 முறை போட வேண்டும். உலர் பொருள் தயாரிப்புக்கு நைட்ரஜன் போடுவது மிகவும் அவசியம்.



#### பராமரிப்பு

சீனித்துளசி 4 மாதத்தில் 1½ அடி உயரம் வரை வளரக் கூடியது. பூக்கள் வருவதைத் தவிர்க்க வேண்டும். பூ பூத்து விட்டால் தொட்டியின் உயரத்திலிருந்து 1/2 அடிக்கு மேல் மெலிதாக நீண்டு வளர்ந்து வந்தால், வளரும் நுனியை சிறிதே கிள்ளிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் செடியின் அடிப் பகுதியிலிருந்து கிளைகள் முளைத்து அடர்த்தியாக வளரும்.



நான்கு மாதத்திற்கு ஒருமுறை கிளைகளுடன் இலைகளை கிள்ளிப் பறிக்க வேண்டும். இல்லையேல், 4 மாதங்கள் கழித்து செடி அடர்த்தியாக வளர்ந்தபின், தேவைப்படும் போதெல்லாம் இலைகளைப் பறிக்கலாம். நன்கு வளர்ந்த, பெரிய இலைகளையே பறிக்க வேண்டும். சிறிய இலைகளைப் பறிக்கக் கூடாது. இவ்வாறு சீனித் துளசியை பராமரித்து வந்தால் 3 வருடங்களுக்கு மேல் இதன் ஆயுட்காலம் நீடிக்கும். இலைகளை நேரடியாக உணவுப் பொருட்களில் பயன்படுத்துவதால், செடியைச் சுத்தமாகவும், எந்த வேதியியல் பூச்சிக் கொல்லியும் பயன்படுத்தாமல் வளர்க்க வேண்டும். தேவைப்பட்டால் வேப்பெண்ணையை நீரில் கலந்து தெளிக்கலாம். வேப்பம் புண்ணாக்கை, தொட்டியி லுள்ள கலவையுடன் கலந்தாலும் நல்ல பயன் கிடைக்கும்.

#### பயன்படுத்தும் முறை

பறித்த இலைகளை ஈரப்பதமின்றி உடனே நன்கு காயவைக்க வேண்டும். காய்ந்த இலைகளை மிக்ஸியில் நன்கு பொடி செய்து, பின் சலித்து, நார்களை அகற்றிவிடவேண்டும். மீதம் உள்ள நுண்ணியப் பொடியை சிறுபாட்டில்களில் அடைத்து தேவைப்படும்போது பயன்படுத்தலாம்.

#### பயன்படுத்தும் அளவு

எடையளவின்படி 20 கிராம் சர்க்கரை பயன்படுத்தும் இடத்தில் 1 கிராம் சீனித்துளசியின் பொடியை உபயோகித்தால் போதுமானது. அதாவது "10 தேக்கரண்டி சர்க்கரை 1 தேக்கரண்டி சீனித்துளசியின் பொடி" (ஒரு காய்ந்த இலையின் எடை 40 மிகி ஆகும்.)

**இழப்பு**

*1973 ஆம் ஆண்டிலும், 1981ஆம் ஆண்டிலும் செயற்கை கோள்களிலிருந்து பூமியைப் படமெடுத்து ஒப்பிட்டுப் பார்த்ததில் உலக அளவில் 16 விழுக்காடு காடுகள் அழிக்கப்பட்டிருந்தது தெரிய வந்ததாம்.*

சீனித்துளசியின் பொடியை இந்திய இனிப்பு வகைகள் அனைத்திலும் சர்க்கரைக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

பாயசம், சர்க்கரைப் பொங்கல், ரவாலட்டு, ஜாம் போன்ற இனிப்புகளில் சீனித்துளசியைப் பயன் படுத்துவதன் மூலம் இனிப்பு மறுக்கப்பட்ட சர்க்கரை நோயாளிகள் இந்த இனிப்பு வகைகளைச் சுவைத்து மகிழலாம்.

மேலும், அன்றாடம் அருந்தும் தேநீர், காபி போன்றவற்றிலும் சீனித்துளசியின் உபயோகம் முதன்மை பெறுகிறது. ஒரு கப் தேநீர் அல்லது காபிக்கு சர்க்கரைக்குப் பதிலாக பத்தில் ஒரு பங்கு சீனித்துளசியின் பொடியே போதுமானது. இதன் இலை இனிப்பாக இருப்பதால் சுடுதண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி சீனித்துளசி கஷாயமாகவும் அருந்தலாம்.

வீட்டிலே தயாரிக்கும் பழச்சாறு, சர்பத் போன்றவற்றிலும் சர்க்கரைக்குப் பதிலாக சீனித் துளசியைப் பயன்படுத்தலாம். சீனித்துளசியின் காய்ந்த இலை பொடி, நிறைந்த நறுமணம் தருவதாக இருப்பதால் இந்தப் பொடியை இனிப்பு இல்லாத மற்ற உணவுப் பொருளிலும் சிறிதளவு தூவினால் உணவுப்பொருள் இயற்கையின் இனிப்பு கலந்த நறுமணத்துடன் இருக்கும்.

"வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்" என்பதை போல "வீட்டுக்கு ஒரு சீனித்துளசி செடி வளர்ப்போம்" என்ற நிலை ஏற்படும் அளவிற்கு சீனித்துளசியின் பயன்கள் உள்ளன. தமிழ்நாட்டு மக்கள் இந்த மருத்துவச் செடியின் பயன்களை சரிவர உபயோகித்துக் கொள்ள வேண்டும். ★

தென் மாநில மக்களுக்கு சேவைபுரிந்திட மண்டல வானிலை மையம் சென்னையில் 1945 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சென்னை நுங்கம்பாக்கத்தில், இந்த மையம் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி மற்றும் இலட்சத்தீவு யூனியன் பிரதேச மக்களுக்காக அரும்பணிகளை ஆற்றி வருகிறது.

## நிறுவன கட்டமைப்பு

இந்திய மக்களுக்கு சிறப்பாக சேவைபுரியும் நோக்கத்தில் இந்திய வானிலைத் துறையின் கீழ் ஆறு மண்டல வானிலை மையங்கள் முறையே கொல்கத்தா, சென்னை, மும்பை, புதுடில்லி, நாக்பூர் மற்றும் கௌகாத்தியில் அமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு துணை டைரக்டர் ஜெனரல் தலைமையில் இயங்கி வருகின்றது. சென்னை மண்டல வானிலை மையத்தின் கட்டுப்பாட்டில் ஹைதராபாத், பெங்களூர் மற்றும் திருவனந்தபுரத்தில் சேவை புரிந்திட வானிலை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.




## புயல் எச்சரிக்கைப் பணிகள்

இந்தியாவின் கடலோரப் பகுதியில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் இயற்கை இடர்பாடுகளில் முக்கியமானது புயலாகும். புயல் அபாயம் குறித்து உரிய நேரத்தில் தல நிருவாகத்தினருக்கு எச்சரிக்கை செய்திட ஒரு களப்புயல் எச்சரிக்கை மையம் சென்னையிலும் ஒரு புயல் எச்சரிக்கை மையம் விசாகப்பட்டினத்திலும் இயங்கி வருகின்றன. புயல் கண்டறியும் ஐந்து ரேடார்கள் முறையே விசாகப்பட்டினம், மசூலிப்பட்டினம், சென்னை, காரைக்கால் மற்றும் கொச்சியில் அமைக்கப்பட்டு, அவை புயல் குறித்த ரேடார் தரும் தகவல்களை களப்புயல் எச்சரிக்கை மையத்திற்கு அனுப்புகின்றன.

## வானிலை கணிப்பக வசதிகள்

பல்வேறு பகுதிகளில் அன்றாடம் நிலவிவரும் வானிலை நிலவரங்களைக் கண்டறிந்து அதனை பகுப்பாய்வு செய்த பின்னரே வானிலை முன்னறிவிப்பு செய்திட இயலும். எனவே வானிலை முன்னறிவிப்பிற்கு வானிலை கணிப்பக வசதிகள் மிகவும் இன்றியமையாதது. சென்னை மண்டல வானிலை மையத்தின் கீழ் 53 துறை சார்ந்த வானிலை நில கணிப்பகங்கள், 68 துறை சாரா வானிலை நில கணிப்பகங்கள், 24 வானிலை உயர் காற்று கணிப்பகங்கள், 22 நீரியல் வானிலை கணிப்பகங்கள், 670 மழைமானிகள், 8 நில அதிர்வு பதிவு செய்யும் நிலையங்கள் மற்றும் இரண்டு ஓசோன் அளவிடும் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## பழமையான வானிலை கணிப்பகங்கள்

தற்போது சென்னை நுங்கம்பாக்கத்தில் இயங்கிவரும் சென்னை கணிப்பகம் 1792 ஆம் ஆண்டு அப்போதைய கிழக்கிந்திய கம்பெனியின் சென்னை கவர்னராக இருந்த சர். சார்லஸ் ஒகேலே (Sir Charles Oakeley) என்பவரால் தொடங்கப்பட்ட இந்திய நாட்டின் முதன்மையான மற்றும் தொன்மையான கணிப்பகம் ஆகும். இதற்கான நினைவு தூண் இன்றும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மண்டல வானிலை மையத்தில் கண்டு வியந்திடச் செய்கிறது. மேலும் திருச்சி, சேலம்,





கோவை, பெங்களூர், பெல்லாரி மற்றும் செகந்திராபாத்தில் 1867ஆம் ஆண்டிலிருந்தும் நாகை, மதுரை, கொச்சி மற்றும் மசூலிப்பட்டினத்தில் 1868ஆம் ஆண்டிலிருந்தும் வெலிங்டனில் (ஊட்டி) 1870ஆம் ஆண்டிலிருந்தும் வானிலை கணிப்பகங்கள் இயங்கி வருகின்றன.

## களப்புயல் எச்சரிக்கை மையத்தின் பணிகள்

இந்திய வானிலைத் துறையின் களப்புயல் எச்சரிக்கை மையத்தின் பணிகள் மிகவும் முக்கியமானது. இதன் பகுப்பாய்வு மையத்தில் வானிலை முன்னறிவிப்பு இறுதி செய்யப்படுகிறது. இது தவிர கடலில் பயணிக்கும் கப்பல்களுக்கு கடற்பரப்பில் மற்றும் கடலோரத்தில் நிலவும் வானிலை அறிக்கை வழங்குதல், துறைமுகங்களில் பொருத்தமான புயல் எச்சரிக்கை சமிக்ஞைகளை ஏற்றிட ஆலோசனை வழங்குதல், மீனவர்களுக்கான வானிலை அறிக்கை வழங்குதல், புயல் எச்சரிக்கை மாநில நிருவாகத்தினருக்கு நான்கு விதமான நிலைகளில் வழங்குதல், பெரும் மழை குறித்து பல்வேறு துறையினருக்கும் முன்னறிவிப்பு வழங்குதல், தகவல் ஒலி மற்றும் ஒளிபரப்பும் ஊடகங்களுக்கு வானிலை அறிக்கை வழங்குதல், வான்வெளி பயணிக்கும் வானூர்திகளுக்கும் புயல் எச்சரிக்கை வழங்குதல் முதலான சீரிய பணிகளைச் சிறப்பாக செய்து வருகிறது களப்புயல் எச்சரிக்கை மையம்.

## புயல் எச்சரிக்கை பரப்பிடும் அமைப்பு

கடலோர நகர நிருவாகத்தினருக்குப் புயல் எச்சரிக்கைகளை அதிவேகமாக வழங்கிட வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற 148 தொலை மையங்கள் வழியே செயற்கைகோள் உதவியுடன் புயல் எச்சரிக்கை பரப்பும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு மோசமான வானிலையினால் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையிலும் தங்கு தடையின்றி புயல் எச்சரிக்கைகள் தல நிருவாகத்தினருக்கு உரிய நேரத்தில் அதிவேகமாகக் கிடைக்கப்பெற்று நிலைமையை திறம்பட சமாளிக்க உதவுகிறது.

## வானூர்திகளுக்கான வானிலை அலுவலகங்கள்

வான்வழி பயணிக்கும் வானூர்திகளின் பாதுகாப்பான பயணத்திற்கும் பத்திரமாகத் தரையிறங்கவும், வானுயரவும் விமான நிலையங்களில் வானிலை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் இயங்கிவரும் வானிலை அலுவலகம், சென்னை, பறக்கும் தகவல் மண்டலத்தில்

நிகழும் வானிலை மாற்றங்களை கண்காணித்து விமானங்களின் பாதுகாப்பான பயணத்திற்கு அச்சுறுத்தலாய் இருக்கும் வானிலை மாற்றங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்களுக்குத் தகவல் கொடுத்து விழிப்போடும் திட்டமிட்டும் விமானங்களை இயக்கிட உதவுகின்றது. பெங்களூர், ஹைதராபாத் மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையங்களில் முதல் நிலை வானிலை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவை தவிர இந்த மண்டலத்தின் பிற விமான நிலையங்களில் 14 முதல்நிலை வானிலை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இடிமேகங்கள் கண்டறிய சென்னை மற்றும் மூன்று முதல்நிலை வானிலை அலுவலகங்களில் ரேடார்கள் உதவுகின்றன. கொச்சி மற்றும் கோழிக்கோட்டிலிருந்து இயக்கப்படும் பன்னாட்டு விமானங்களுக்கு வரைபட வடிவிலான ஆவண வசதிகள் கொடுக்கப்படுகிறது.

## வேளாண் வானிலைப் பிரிவு

**வேளாண் மக்களுக்கு வானிலை நிலவரம் அறிவித்து ஆலோசனை வழங்கிட தனிப்பிரிவு மண்டல வானிலை மையத்திலும் மற்றும் அதன்கீழ் இயங்கி வரும் மாநில வானிலை அலுவலகங்களிலும் 1978 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. வேளாண்துறை நிபுணர்களின் ஒத்துழைப்புடன் வாரம் இருமுறை வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு வேளாண் பெருமக்கள் பயன் அடையும் விதமாக வெளியிடப்படுகிறது.**

## துறைமுக வானிலை அலுவலகங்கள்

கடலில் பயணிக்கும் கப்பல்களின் பாதுகாப்பான பயணத்திற்கும் அலைகள் பயணம் செய்யும் பெரும் கடல்பரப்பிலிருந்து வானிலை நிலவரங்கள் குறித்து பகுப்பாய்வு மையங்களுக்குத் தகவல்கள் தந்து உதவிட வானிலை உபகரணங்களை கப்பல்களில் பொருத்திடவும் உபகரணங்களின் தரமான செயல்பாட்டை உறுதி செய்து உதவிடவும் துறைமுக வானிலை அலுவலகங்கள் சென்னை, கொச்சி மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

## நில அதிர்வு பதிவு செய்யும் நிலையங்கள்

நில அதிர்வினைப் பதிவு செய்யும் நிலையங்கள் சென்னை, திருவனந்தபுரம், கொடைக்கானல், விசாகப்பட்டினம், விஜயவாடா, மினிகாய் தீவு, மங்களூர் மற்றும் சேலத்தில் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் சென்னை, திருவனந்தபுரம், விசாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் இயங்கிவரும் நிலையங்கள் உலகளாவிய நில அதிர்வு கணிப்பகங்கள் கட்டமைப்பில் உள்ளன. உலகத் தரம் வாய்ந்த நில அதிர்வு பதிவு செய்யும் நிலைய வரிசையில் கொடைக்கானல் நிலையம் பணியாற்றுகிறது.

## காலநிலைப் பிரிவு

அன்றாடம் நிலவிடும் வானிலை நிலவரங்களை ஒரு குறிப்பிட்ட காலவரம்பினை கணக்கில் எடுத்துக் கொண்டு வரையறுத்து தொகை வடிவாகக் கிடைப்பது காலநிலை ஆகும். மண்டல மற்றும் மாநில வானிலை அலுவலகங்களில் காலநிலைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு வானிலை குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட பின்னர் சேமிக்கப்படுகின்றன. இந்தத் தகவல்கள் பல ஆண்டுகட்கும் பின்னர் எழுந்திடும் வானிலை குறித்த விசாரணைகளுக்குப் பதில் அளித்திட பெரிதும் உதவுவதுடன் மற்றும் இந்தத் தகவல்களிலிருந்து காலநிலை வரையறுக்கப்படுவதற்கும் பயனுள்ள வகையில் உள்ளன.

## ஆராய்ச்சி மற்றும் புயல் எச்சரிக்கை ஆராய்ச்சி மையம்

மண்டல வானிலை மையத்தில் ஆராய்ச்சி செய்திட தனிப் பிரிவு உள்ளது. விஞ்ஞானிகள் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நூலக வசதியும் உள்ளது. இதில்



இந்தியாவில் வடகிழக்குப் பருவக் காற்றின் வேறுபாடு, ஆரம்பம், முடிவு மற்றும் பெய்திடும் மழைப்பொழிவு, புயல்கள் கடந்து செல்லும் பாதை மற்றும் அதன் கடுமை, தல வானிலை முன்னறிவிப்பு மற்றும் கடற்காற்று, நகர மயமாக்கத்தினால் வெப்பநிலையில் ஏற்படும் தாக்கம், வானிலை குறித்து ரேடார் தரும் தகவல்கள், வானூர்திகளின் இயக்கத்திற்கு அளிக்கப்படும் வானிலை உடன் அறிவிப்பில் மூடுபனி மற்றும் அதன் விளைவால் ஏற்படும் பார்வைத் தன்மை வானிலையில் நிகழும் மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் முதலான ஆய்வுகளை வானிலையாளர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகம், முனைவர் பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சி நிறுவன அங்கீகாரத்தை மண்டல வானிலை மையத்திற்கு வழங்கியுள்ளது. மேலும் புயல்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ள தனி மையம் 1972 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த மையம் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் புயல் இடர்பாடுகளை மட்டுப்படுத்த அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றிட உதவுகின்றது.

## நீரியல் வானிலைப் பிரிவு மற்றும் பயிற்சி மையம்

உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் நீரியியல் திட்டத்தில் நீரியல் வானிலைப் பிரிவு முக்கிய அங்கம் வகிக்கின்றது. நீரியல் வானிலைக் கணிபகங்கள் மேன்மைப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்டு கட்டமைப்பு விரிவாக்கப்படுத்தப்பட்டு நீர் மேலாண்மைக்கு உதவிடக் கூடிய நம்பகத் தன்மை மிகுந்த தகவல்கள் தரும் தகவல் களஞ்சியமாக விளங்கி வருகின்றன. மண்டல வானிலை மையத்தில் இயங்கும் நீரியல் வானிலைப் பிரிவு நீரியல் வானிலைக் கணிப்பகங்களைக் கையாளும் மாநில அரசு அலுவலர்களுக்குச் சிறப்பான பயிற்சி அளிப்பதுடன் கணிப்பகங்களை ஆய்வும் செய்து வருகிறது.

மண்டல வானிலை மையத்தில் இயங்கும் பயிற்சி மையம் வானிலை ஆய்வுத் துறையின் கீழ் இயங்கும் வானிலை கணிப்பகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வானிலை அறிவியலில் அடிப்படைப் பயிற்சியினை அளித்து அவர்களின் திறனை மேம்படுத்துகிறது.

## வானிலைக் கணிப்பக கருவிகள் மற்றும் பராமரிப்பு

தரை வானிலைக் கணிப்பகங்களிலிருந்து வானிலைத் தகவல்கள் துல்லியமாக இருந்திட தரை வானிலைக் கணிப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ள கருவிகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். எனவே தகுந்த இடைவெளியில் துறை சார்ந்த மற்றும் துறை சாரா தரை வானிலைக் கணிப்பகங்களை ஆய்வு செய்திடவும் கருவிகளை நன்கு பராமரிக்கவும் வானிலை ஆய்வகப் பிரிவு இயங்கி வருகின்றது. பரவலாக அமைக்கப்பட்டுள்ள மழை மானிகளை ஆய்வு செய்திடும் சீரிய பணியினை நீரியல் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## தொலைத் தொடர்பு வசதிகள்

வானிலைக் கணிப்பகங்களையும் பகுப்பாய்வு மையங்களையும் இணைத்திட அதிநவீன தொலைத் தொடர்பு வசதிகளை வானிலைத் தொலைத் தொடர்பு கட்டமைப்பு ஏற்படுத்தி வருகிறது. தகவல்களை தானாக கையாளும் அமைப்பின்கீழ் அதிவேக கணினி சென்னை விமான நிலையத்தில் அமைக்கப்பட்டு அதன் வழியே மண்டல தொலைத் தொடர்பு மையம் புதுடில்லியில் உள்ள தலைமை தொலைத் தொடர்பு மையத்துடன் இணைக்கப் பெற்று வானிலைத் தகவல்கள் தேசிய அளவிலும் உலகளவிலும் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகிறது. இந்திய வானிலைத் துறையில் உள்ள 65 கம்பியில்லா தொலைத் தொடர்பு நிலையங்களில் 29 நிலையங்கள் கடலோர நகரங்களில் நிறுவப்பட்டு மோசமான வானிலைக் காலங்களிலும், வானிலைத் தகவல்களைப் பெற்றிட மிகவும் உதவியாக உள்ளது. 'விசாட் (VSAT)' எனப்படும் செயற்கைக் கோள் வழியான தொலைத் தொடர்பு வசதி 20 இடங்களில் அமைக்கப்பெற்று அதில் 7 இடங்கள் இந்த மண்டலத்தில் உள்ளன.



**செயற்கைக் கோள் வானிலைப் பிரிவு**

இன்சாட் செயற்கைக் கோளிலிருந்து பகுபடா தகவல்களைப் பெற்று கணினி உதவியுடன் பகுத்து மேகவடிவம் தயார் செய்யும் முதல் நிலையில் புதுடில்லியில் இயங்கிவரும் வானிலை செயற்கைக் கோள் பிரிவு உள்ளது. இவ்வாறு தயார் செய்யப்பட்ட மேகவடிவங்களைப் பெற்று பயனுறும் இரண்டாம் நிலையில் மண்டல வானிலை மையத்தில் இயங்கி வரும் பகுப்பாய்வு மையம் உள்ளது. வானிலை குறித்து மேகவடிவம் அல்லாத பிற தகவல்களைப் பகுப்பாய்வு மையங்களுக்குப் பரப்பிடும் பணியையும் செயற்கைக் கோள் வானிலைப் பிரிவு செய்து வருகிறது.

மண்டல வானிலை மையத்தில் உயர் துல்லிய மேகவடிவங்களை அமெரிக்காவின் நோவா (NOVA) துருவ செயற்கைக் கோள்களிலிருந்து நேரடியாகப் பெற்றிடும் தரை நிலையம் தனியாக இயங்கி வருகிறது.

**மண்டல வானிலை மையத்தில் நவீன வசதிகள்**

சென்னை புயல் கண்டறியும் ரேடார் அலுவலகத்தில் அதிநவீன டாப்லர் ரேடார் கடந்த 2002ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. புயல் கண்டறியும் ரேடார் அமைப்பில் முதலாவதாகத் தொடங்கப்பட்ட அதி நவீன ரேடார் இதுவாகும். இதன்மூலம் புயல் களம் குறித்த தகவல்கள், காற்றின் களவிபரம், புயல் வடிவம், வலு மற்றும் மழைப் பொழிவு திறன் உடனுக்குடன் பெறப்பட்டு முன்னறிவிப்புத் திறன் மேம்படுத்தப்படுகிறது. இந்திய விண்வெளிக் கழகத்தினரால் முற்றிலும் உள்நாட்டிலே வடிவமைக்கப் பட்ட டாப்லர் ரேடார் ஸ்ரீஹரிகோட்டா ஏவுகணைத் தளத்தில் நிறுவப்பட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநிறுத்த ராக்கெட் செலுத்தும்போது வானிலை முன்னறிவிப்புத் தகவல்களைக் கொடுத்து உதவிட முடிகிறது.

அதிவேக காற்றினைப் பதிவு செய்யும் கருவிகள் சென்னை, புதுவை, காரைக்கால், அதிராம்பட்டினம், நெல்லூர், காவலி, ஓங்கோல், மசூலிப்பட்டினம், விசாகப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் ஆகிய பத்து கடலோர நகரங்களில நிறுவப்பட்டுள்ளன.

தொலைபேசி வழியே வானிலைத் தகவல்கள் அறிந்திடும் வசதி, சென்னைப் பெருநகரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு 1717 எண்கள் சுழற்றினால் தொலைபேசியில் வானிலை நிலவரம் அறியும் முறையில் மாதந்தோறும் சுமார் 15,000 அழைப்புகளுக்கு, சென்னையில் மட்டும் 10,000அழைப்புகளுக்கு, பதிலளிப்பது பதிவாகிறது.

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மண்டல வானிலை மையத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து அறிந்திட தனி வெப்சைட் – http://education.vsnl.com/ind chennal என்ற முகவரியில் செயல்படுகிறது. முக்கிய நகரங்களில் நிலவும் வானிலை நிலவரம் மற்றும் தல முன்னறிவிப்பு, மீனவர்களுக்கான வானிலை எச்சரிக்கை, வாராந்திர மற்றும் பருவ காலத்திய மாவட்டங்கள் வாரியாக பெய்துள்ள மழை விவரங்கள் மேலும் கால நிலைத் தகவல்களை மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் பார்க்கலாம். இந்தத் தகவல்களைப் பெற்றிட பல்வேறு பிரிவினர்களும் ஆவலாய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மண்டல வானிலை மையம் பொதுமக்களின் நலனுக்காக 24 மணி நேரமும் சேவை புரிந்து வருகிறது. பொதுமக்கள் மையத்தின் சேவையை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனடையும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*கட்டுரை வடிவம் :*
*ந. மாரிகிருஷ்ணன்*



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் 'மகாவீரர் ஜெயந்தி' வாழ்த்து



"பகவான் மகாவீரரின் பிறந்த திருநாளை மகிழ்வுடன் கொண்டாடும் சமண சமயப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய உளங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பை வலியுறுத்தி, அஹிம்சையை வலியுறுத்தி, அறத்தை வலியுறுத்தும் சமண மதத்தின் 24ஆம் தீர்த்தங்கரராகிய பகவான் மகாவீரர், மனித குலத்தின் மேம்பாட்டிற்குத் தேவையான முக்கிய போதனைகளை வழங்கியவர். எக்காலத்திற்கும் பொருந்தும் அவருடைய இணையற்ற போதனைகளைப் பின்பற்றினால் உலகில் சாந்தியும், சமாதானமும் தவழும்.

மகாவீரரின் ஜெயந்தி நாடெங்கும் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், அவரது தத்துவங்களைப் பின்பற்றும் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்''

**பொன் மொழிகள்**

[illegible]

ஏப்ரல் 29 பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள்...

# பெருமக்கள் பார்வையில் பாவேந்தர்



**இ**வ்வளவு நாளுமில்லாதோர் விழிப்பு; ஓர் உணர்ச்சி; தாய்மொழிப் பற்று, தமிழர்களிடையே ஏற்பட்டதற்குத் தமிழன் தன்நிலை உணர வந்ததற்குக் கரணியம் புரட்சிக்கவி பாரதிதாசன்.

**-அறிஞர் அண்ணா**

**பா**ரதியார் ஒரு செடியளவாக விட்டுச் சென்ற கவிதைப்பயிர், இவர் பாடல்களில் கொடிப் பந்தல்களாகவும், நன்செய் வயல்களாகவும் வளர்ந்து செழித்தது அவற்றுள் எந்த ஓர் இடத்திலும் அவருடைய கைவண்ணம் பளிச்சிட்டு மின்னுகிறது.

**- கா.அப்பாத்துரையார்**

கவிஞர் பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். கதைக்காக ஒரு முறை, கலைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒரு முறை, கருத்திற்காக ஒருமுறை, இன்பத்திற்காக ஒரு முறை, கொள்கைக்காக ஒருமுறை, குறிப்பிற்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையிலும் “படித்தேன்” எனவே இனித்தது.

**- கி.ஆ.பெ. விசுவநாதம்**

பாரிசவாயுவும், பக்கவாதமும் போட்டலைக்கும் இன்றைய கவிதை உலகிலே இவருடைய பாராட்டுகள்தான் நிமிர்ந்து நடக்கின்றன.

**- புதுமைப்பித்தன்**

பாரதிதாசன் உலகத்தில் தோன்றி பல ஆண்டுகளாயினும் அவர் உடம்பிலும், உள்ளத்திலும் இளமை உடையவராகவே விளங்குகிறார். அவர் ஓர் உண்மைக் கவிஞராய் இருப்பதே அவரது இளமைக்குக் கரணியம்.

**- பரலி. சு. நெல்லையப்பர்**

ஆவேசத்தையும், உணர்ச்சியையும் வெள்ளமாகக் கொட்டும் உயிர்க்கவி பாரதிதாசன்.

**- வ.ராமசாமி**

பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஒரு உண்மையானக் கவி இருக்கிறார்.

**- கு.ப. ராஜகோபாலன்**

பாரதிதாசன் ஒரு சிறந்தக் கவிஞர். உண்மைக் கவிஞன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்கள் அனைத்தும் உள்ளவர் என்று தாராளமாகச் சொல்லலாம்.

**- நாரண துரைக்கண்ணன்** ★



# கோடைகால நோய்களும் தடுப்பு முறைகளும்

பேராசிரியர் டாக்டர் **கீதா சுப்ரமணியன்**
இதய நோய் சிகிச்சை நிபுணர்

**கோ**டைக்காலம் என்றாலே கொளுத்தும் வெயிலின் உக்கிரமும் அதனால் ஏற்படும் விளைவுகளும் நம் மனக் கண்ணில் தெரியும். குறிப்பாக, இப்போதைய கோடைக்காலம் கொடிய வெப்பமான காலமாக மாறி அளவுக்கு மீறிய வாட்டத்தையும் துன்பத்தையும், வறட்சியையும் விளைவித்துக் கொண்டிருக்கிறது.

மழைக் காலத்திலும், குளிர் காலத்திலும் ஏற்படும் குறிப்பிட்ட சில நோய்களைப் போல, கோடைக்கென்று சில நோய்களும் இருக்கின்றன. அதுவும், இந்த ஆண்டு, இந்தியா முழுவதிலும் மழை குறைந்ததால், மார்ச் மாதத்திலேயே பூமி வறண்டு வெப்பம் தகித்து, வெய்யில் உக்கிரதாண்டவம் ஆட ஆரம்பித்துவிட்டது.

வெயிலினால் ஏற்படும் நோய்கள், வெயிலின் நேரடித் தாக்குதலால் ஏற்படுபவை. கோடை வெப்பத்தில் எளிதில் பெருகி, பரவி மனிதருக்குத் தொற்று நோய் ஏற்படுத்தும் கிருமிகள் சம்பந்தப்பட்டவை, நாம் கோடைக்காலத்தில் மேற்கொள்ளும் தவறான வாழ்க்கை முறையால் நாமே ஏற்படுத்திக் கொள்ளும் நோய்கள் என்று பிரிக்கலாம்.

சாதாரண வேர்க்குருவிலிருந்து கொடிய அம்மை நோய் வரை தோலைப் பதம் பார்க்கும் வெயில், சமயத்தில் ‘சன்ஸ்ட்ரோக்’ என்ற மூளைத் தாக்குதலையும் நிகழ்த்தி, கோமா வரை மனிதனை இழுத்துச் செல்லும்.

## குடல் நோய்

கோடையுடன் கூட வருவது குடிநீர்ப் பஞ்சம். குறிப்பாக, சுத்தமில்லாத தண்ணீர் குடிப்பதால் அதிலுள்ள கிருமிகளால் வயிற்றுப் போக்கு, சீதபேதி ஏற்படும். வெயில் காலத்தில் ஏற்கெனவே உடலிலிருந்து வேர்வையாக அதிக அளவு நீர் வெளியேறும் நிலையில், வயிற்றுப் போக்கினால் உடலுக்குத் தேவையான உப்புகளும் நீரும் அதிக அளவில் இழக்க நேர்ந்து, உயிருக்கே ஆபத்து விளைவிக்கும்.

தண்ணீரை வடிகட்டிக் காய்ச்சிப் பருகுதல், வயிற்றுப் போக்கு ஏற்படும்போது தண்ணீரில் உப்பு, சர்க்கரை குறிப்பிட்ட அளவில் கலந்து பருகுதல், மருத்துவரின் ஆலோசனையின்படி, நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை (Antibiotics) சாப்பிடுதல் ஆகிய முறைகள் சரியான தீர்வுகள் ஆகும்.

## நீர்க் கடுப்பு

உடலிலிருந்து அதிக அளவில் வேர்வை வெளியேறுவதால் சிறுநீர் அளவு குறைவாகவும், அடர்த்தியாகவும் போகும். நீரின் அளவு குறைவதால், அதன் நிறமும் மஞ்சளாக இருக்கும். இதன் காரணமாக நீர் போகும்போது, எரிச்சல், அடிக்கடி சிறுநீர் கழிப்பு, அடிவயிறு மற்றும் கீழ் முதுகு வலி, குளிர் காய்ச்சல் மற்றும் சமயத்தில் நீரில் சிறிது இரத்தம் அல்லது சீழ் வெளிப்படுதல் காணப் படும்.

இதுபோன்ற பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க நிறைய தண்ணீர், மோர், முள்ளங்கிச் சாறு, இளநீர், வெள்ளரிக்காய், தர்பூசணி, நுங்கு, பதநீர், பழச்சாறு சாப்பிட வேண்டும். கிருமி தொற்றுக்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சரியாகத் தண்ணீர் சாப்பிடாதவர்களுக்கு சில நேரங்களில் சிறுநீரகம் மற்றும் நீர்ப்பையில் கற்கள் தோன்றி நீர்ப் பாதையை அடைக்கலாம் என்பதால், வயிற்றுப் பகுதியை ஸ்கேன் செய்து பார்ப்பதும் நல்லது.

## தோல் நோய்கள்

சென்னை போன்ற கடற்கரை நகரங்களில் காற்றின் ஈரப்பதம் (Humidity) அதிகமாக இருப்பதால், வெயில் காலத்தில் வேர்க்கும். மதுரை, திருச்சி போல, பாறைகள் நிறைந்த – கடற்கரையிலிருந்து தள்ளியிருக்கும் நகரங்களில் வேர்வை அதிகம் தோன்றாது.



சாதாரணமாக ஒரு மனிதனுக்கு ஒரு நாளில் கிட்டதட்ட 600 – 1000 மி.லிட்டர் வரை வேர்வை உண்டாகும். கோடைக்காலத்திலோ, உடலின் வெப்பம் அதிகரிப்பதால், அதனைத் தணிப்பதற்காக, 4 முதல் 5 லிட்டர் வரை கூட வேர்க்கும். இதனால்தான் கோடையில் அதிக தாகம் ஏற்படுகிறது. தாராளமாக ஏற்படும் வேர்வை நமக்கு வெறுப்பை ஏற்படுத்தினாலும்கூட, நமது உடலினைக் குளுமைப் படுத்தி, சன்ஸ்ட்ரோக் வராமல் காப்பாற்றுகிறது.

அதிக வேர்வையில் கிருமிகள் வளர்வதால், வேர்வை நாற்றம் மற்றும் தோல் அரிப்பு, வேர்க்குரு, வேனல்



கட்டிகள் ஏற்படும். வயதானவர்கள், உடல் பருமன் அதிகம் உடையவர்கள், சர்க்கரை நோயாளிகள் ஆகியோருக்கு, தோலில் காளான் எளிதில் வளர்ந்து படை நோய் (Fungus) ஏற்படும். இவை, மார்புமடிப்பு, அக்குள், இடுப்பு, தொடை இடுக்குகளில் அதிகம் காணப்படும். உணவில் காரம், மசாலா, புளி ஆகியவற்றைக் குறைத்து, புளிக்குப் பதிலாக தக்காளி, எலுமிச்சையையும், மிளகாய் வற்றலுக்குப் பதிலாக மிளகையும் உணவில் சேர்த்தால், அதிகம் வேர்க்காமல் இருக்கும். நோய் எதிர்ப்பு சக்தியும் ஏற்படும். குடல்புண் நோயையும் தவிர்க்கலாம். எந்த உணவையும் அதிக சூடாக சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். இதனால் வேர்வை தலை முதல் கால் வரை வழியாமல் உடனடியாக ஆவியாகிவிடும். வேர்வையால் வரும் தோல் நோய்கள் குறையும். வேர்க்குரு மீது சந்தனம், இளநீர், நுங்கின் நீர் பூசினால் எரிச்சல், அரிப்பு குறையும். எலுமிச்சை பழச்சாறு, சோற்றுக் கற்றாழை எண்ணெய் ஆகியவற்றையும் பூசலாம். காளான்கள் வளரவிடாமல் தடுக்கக்கூடிய பவுடர்களை – காலையில் குளித்தவுடன் உடம்பைச் சுத்தமாகத் துடைத்து உடலில் தூவினால் வேர்வையும் குறையும். படை நோயும் ஏற்படாது.

இளம் பெண்கள், ஆண்கள் அதிகமாக வெயிலில் அலைந்தால், முகத்தில் தூசி படிந்து தோலில் உள்ள எண்ணெய்ச் சுரப்பிகளில் அடைப்பு ஏற்பட்டுப் பருக்கள் ஏற்படும். சமயத்தில் இவற்றைக் கிள்ளினால் சீழும், வடுவும் ஏற்படும். இவர்கள் தினமும் 2 – 3 முறை முகத்தை சுத்தமாகக் கழுவி டர்க்கி டவலால் மென்மையாகத் துடைத்து அதன்மீது குங்குமப் பூவில் செய்த களிம்பைப் போடுவது நல்லது.

கோடை வெயிலில் Ultra violet rays எனப்படும் புற ஊதாக் கதிர்கள் அதிகம் இருப்பதால், வெயிலில் அனைவருக்கும் தோல் கறுத்துப் போய்விடும். இதைத் தவிர்க்க தினமும் குளிக்கும்போது கஸ்தூரி மஞ்சள், பசு மஞ்சள் மற்றும் கடலை மாவு கலந்து தேய்த்துக் குளிக்கலாம். வெயிலில் செல்லும் போது தரமான கதிர் மறைப்பான்கள் (Sun Screen Lotions) அடங்கிய லோசன் தடவ வேண்டும். குடை பிடித்துச் சென்றால் வெயிலின் கடுமையால் கூந்தல் மற்றும் சருமம் உலர்ந்து போவதையும் தோல் கறுத்துப் போவதையும் தவிர்க்கலாம்.

வறண்டுபோன மற்றும் அரிக்கும் தோலில் ஏற்படும் நுண்மையான துளைகள் (Abrasious) வழியாக நோய்க் கிருமிகள் தோலில் தொற்றி சொறி, சிரங்கு ஏற்படும். ஆகையால், நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அதிக நேரம் வெயிலில் அலைவதால், கண்களில் உள்ள "லென்ஸ்" பாதித்து புற ஊதாக்கதிர்களின் தாக்கத்தில் சிறுவயதிலேயே "காட்ராக்ட்" கோளாறு ஏற்படும் வாய்ப்பு உள்ளதால் வெயிலில் செல்லும்போது கறுப்புக் கண்ணாடி அணிய வேண்டும். கிரே, பச்சை, ப்ரவுன் நிற கண்ணாடிகளையும் அணியலாம். இதனால், வெயிலில் ஏற்படும் தலைவலியைத் தவிர்க்கலாம்.

### அம்மை நோய்கள்

வெயில் காலத்தில் விளையாட்டு அம்மை (Measles) முதல் நீர்க் கொளுவான் என்னும் Chicken pox வரை மிக எளிதாகப் பரவும். இக்கால கட்டத்தில், பூமி வறண்டு போய் காற்றில் தூசி அதிகரிப்பதாலும் அவற்றில் கிருமிகள் அதிகரிப்பதாலும் மூச்சுக் குழாய் வழியாக அம்மை நோய்க் கிருமிகள் எளிதில் நுழைந்துவிடும். இதை "droplet infected' என்று கூறுவர். குறிப்பாக சிறுவர், சிறுமியர்கள் அதிகமாக வெயிலில் அலைந்தால், விளையாடினால் அவர்களுக்கு எளிதாக அம்மைநோய் ஏற்படும். ஆகையால், முடிந்தவரை, அவர்களை காலை 9 முதல் மாலை 6 மணி வரை வீட்டுக்குள்ளேயே விளையாடவும் பகலில் தூங்கி ஓய்வு எடுக்கவும் செய்ய வேண்டும். அப்படி முடியாதென்றால், அவர்களின் ஆர்வத்தையும் சக்தியையும் சரியான முறையில் பயன்படுத்தும் வகையில் Summer Camp எனப்படும் கோடைப் பயிற்சி வகுப்பில் சேர்த்து அவர்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கலாம். குறிப்பாக கத்திரி வெயில் காலத்தில் வைரஸ் நோய்கள் அதிகம் ஏற்படும் என்பதால், மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இதுபோன்ற தோல் நோய்கள் தவிர கடுமையான வெயிலில் நேரிடையாக நின்று உழைப்போர் ஒரு கட்டத்தில் வெப்பக் களைப்பு, தசைப் பிடிப்பு மற்றும் உயிருக்கே ஆபத்தான மூளைத் தாக்குதல் நோய்க்கு ஆளாக வேண்டிவரும்.

### வெப்பக் களைப்பு மற்றும் வெப்பத் தாக்குதல்

பொதுவாக வெப்பம் அதிகமான சூழ்நிலையில், நமது மூளையில் உள்ள உடலின் வெப்பத்தை சீராக



வைத்திருக்கும் வெப்பமையம் (Thermostat) அதனை உணர்ந்து உடனடியாக தோலுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து வேர்வையைப் பெருகவைத்து, உடல் வெப்பத்தைக் குறைத்து இயல்பான நிலையில் வைத்திருக்கும். இந்த தெர்மோஸ்டாட் மையம் சரியாக இயங்காவிடில், நமது உடலின் வெப்ப நிலை வெகுவேகமாக 41 – 43 டிகிரி வரை அதிகரிக்கும். இந் நிலையில் மூச்சு அதிகமாக இளைக்க ஆரம்பித்து, பெரு மூளை சிறுமூளை பாதிக்கப்படும். இதனால் மிகுந்த கோபம், எரிச்சல், படபடப்பு ஏற்பட்டு இரத்த அழுத்தம், இரத்தக் குழாய்கள், இதயம், ஈரல், சிறுநீரகம் பாதிக்கப் படும்.

குறிப்பாக, வயது முதிர்ந்தவர்கள், ஈரப்பதம் காற்றில் அதிகமாக உள்ள சமயத்தில் உடற்பயிற்சி செய்பவர்கள், ஜுரம் குறிப்பாக மலேரியா ஜுரம், சர்க்கரை நோய், உடல் பருமன் உடையவர்கள், மனநோய் மருந்து சாப்பிடுபவர்கள், இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய நோய் உடையவர்கள், மூளைக் குறைபாட்டால் மூளையில் உள்ள வெப்ப நிலையை சரிபடுத்தும் மையம் பாதிக்கப் பட்டவர்கள், மருந்துகளால் வேர்வை சரியாக ஏற்படாமல் இருப்பவர்கள், வாந்தி பேதியினால் அதிக நீரினை இழந்தவர்கள் மற்றும் பிறவியிலேயே வேர்வை நீர் சுரப்பிக் குறைபாடு உடையவர்கள் வெப்பத்தால் அதிகம் பாதிக்கப்படுவார்கள். இந்த வெப்ப விளைவுகளை வெப்பக் களைப்பு, வெப்பத்தாக்குதல் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

ஒரு காலத்தில் வெப்பக் களைப்பு, வெப்பத் தாக்குதல் அதிகமாக ஆண்களைப் பாதிக்கும் நிலை மாறி, ஆண், பெண் என இருபாலரும் சரிநிகர் சமானமாக வெளியில் வெயிலில் வேலை செய்வதால், தற்காலத்தில் பெண்களையும் இவ்வகை நோய் பாதிக்கும் நிலை அதிகரித்துள்ளது.

கள வேலையில் (Field work) ஈடுபடும் பெண்களில், கிராமப் புறங்களில் வேலை பார்க்கும் பெண்களை விட, நகர்ப்புற பெண்களுக்கே Sun stroke அதிகம் ஏற்படுகிறது.

கிராமப்புறங்களில் விவசாய கூலி வேலை செய்வோர் வெயிலில் உழைத்தாலும் நல்ல காற்றோட்டமான சூழல், வயலில் உள்ள ஈரம், மர நிழல், பம்பிங் செட்டிலிருந்து நீர் இறைக்கும் குழாய்களில் எளிதாகக் கிடைக்கும் தாகம் தீர்க்கும் குடிநீர் ஆகியவை காரணமாக வெயில் கொடுமையால் அதிகம் பாதிப்படைவதில்லை. மேலும் அவர்கள் பருத்தி ஆடை அணிந்து இயற்கை பானங்களான மோர், கம்பங்கஞ்சி, இளநீர், நுங்கு, பழைய சோறு, வெங்காயம் மற்றும் எலுமிச்சைசாறு உண்ணுவதால் அவர்களை இயற்கையே பாதுகாத்து விடுகிறது.

நகர்ப்புறத்தில் கூலி வேலை செய்யும் பெண்கள் குறிப்பாக ரோடு போடும் பெண்கள், கட்டட வேலை செய்யும் பெண்கள் சுட்டெரிக்கும் வெயிலில் சமயத்தில் காலில் செருப்புகூட இல்லாமல், செயற்கை இழை ஆடைகள் (Polyster) அணிந்து, மர நிழல்கூட இல்லாத இடத்தில் காற்றோட்டமில்லாத கல்நார் கூரை கீழ் வேலை செய்வார்கள். தலைச் சுமையுடன் சுடுகின்ற மண்ணில் செங்கல்லும், சிமெண்டும் சுமந்து அலையும் கொடுமையால் இவர்களுக்கு Sun stroke வரும் வாய்ப்பு அதிகம். மேலும், தாகத்திற்கு டீ, காபி, கலர் பானங்கள் குடிப்பதால் இவர்களுக்கு அதிக அளவில் சிறுநீர் பிரிவதுடன் இதுபோன்ற பானங்களில் உடலுக்கு வேண்டிய எந்த உயிர்ச் சத்தும், உடலுக்குத் தேவையான உப்புகளும் இல்லாததால், எளிதில் களைப்படைகின்றனர் என்பதே உண்மை.

மேலும், பணி செய்யும் இடத்தில் சுகாதாரமான கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதி இல்லாததால் இவர்களுக்குத் தொற்று நோய்க் கிருமிகள் வெகு எளிதாகப் பரவுகிறது. காற்றின் கிருமிகள் மூக்கு வாய்த்துவாரம் வழியே உடலில் புகுவதால் சளி, ஆஸ்துமா, டி.பி. போன்ற கொடிய நோய்கள் ஏற்படுவது எளிதாகிறது. சிறுநீர்ப்பை சுரப்பியை தாக்கும் கிருமிகள் அந்த உறுப்புகளின் வெளித்துவாரங்களின் வழியே உடலில் பரவி கருப்பப்பை கோளாறுகள், வெள்ளைப் படுதல், அதிக உதிரப்போக்கு மற்றும் கருப்பப் பையைச் சுற்றி வீக்கம் போன்றவை வெயில் காலத்தில் ஏற்படும். இதுபோன்ற நோய்களுக்குத் தக்க மருத்துவ சிகிச்சையை உடனடியாக பெற வேண்டும்.

வெப்பக் கவளப்பு நோய் (Heat exhaution heat fatigue) அதிக வேர்வை இழப்பால் (கிட்டத்தட்ட 6 முதல் 8 லிட்டர் வரை) ஏற்படுகிறது. இதனால், நாவறட்சி, மயக்கம், தலைவலி, பசியின்மை, தலைச்சுற்றல், சிறுநீர் சிறிது சிறிதாகச் செல்லுதல், நீர் எரிச்சல், வாந்தி, கோபம் ஏற்படும். இரத்த அழுத்தம் குறையும். உடல் குளிர்ச்சியாகிவிடும். தோலில் ஈரப்பசை அதிகமாக இருக்கும். தசைகளில் இழுப்பு (coups) ஏற்படும்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவரை, குளிர்ந்த சூழ்நிலைக்கு அழைத்துச் சென்று மின் விசிறியைப் போட்டு ஆசுவாசப்படுத்த வேண்டும். உப்பு, எலுமிச்சை கலந்த தண்ணீர், பானங்கள் தரவேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் பத்து கிராம் உப்பு கலந்து குடிக்கலாம். அதிகமான பாதிப்பு உடையவர்களை மருத்துவமனையில் அனுமதித்து, Saline ஏற்ற வேண்டியிருக்கும். 5 முதல் 10 லிட்டர் தண்ணீரை 24 மணி நேரத்தில் பருகச் செய்வது அவசியம். அலட்சியம் செய்தால் Sun stroke ஏற்படும் அபாயம் அதிகம்.



## வெப்பத்தாக்குதல் (Sun stroke)



உடலின் உள்ளே வெப்பம் மிகவும் அதிகரிப்பதால் ஏற்படுவதே வெப்பத் தாக்குதலாகும். வெயிலில் அதிகம் அலைவது, வெப்பக் களைப்பை அலட்சியம் செய்வது சரியான மெலிதான பருத்தி ஆடைகள் அணியாதது, காற்றோட்டமில்லாத நிலைமை, உடலில் சரியாக வேர்வை ஏற்படாத நிலை ஆகியவை sun stroke–க்கு இழுத்துச் சென்று விடும்.

உடலின் வெப்பம் 43 டிகிரிக்கு அதிகமாவதால் உள் அவயங்கள் குறிப்பாக மூளை, ஈரல், சிறுநீரகம், குடல், இருதயம், பாதிக்கப்படுகின்றன. இரத்த அழுத்தம் குறைந்து, நினைவிழப்பு,(Coma) ஏற்படுகிறது. வாந்தி பேதியும் ஏற்படும். தோல் வறண்டு சிவந்து காணப்படும். இதயத் துடிப்பு அதிகரிக்கும்.

பாதிக்கப்பட்டவரை உடனடியாக நிழலான இடத்திற்கு மாற்றி, போர்க்கால நடவடிக்கைபோல் சிகிச்சை செய்தால் மட்டுமே உயிரைக் காக்கமுடியும். மேலாடைகளைக் களைந்து ஈரத்துணியை மேல் இட்டு மின் விசிறியைப் போடவேண்டும். திடீரென்று உடல் வெப்பத்தைக் குறைக்காமல் படிப்படியாகக் குறைப்பது நல்லது. உபயோகிக்கும் தண்ணீரின் வெப்ப நிலை 15 டிகிரியாகவும் காற்றோட்டத்தின் வெப்ப நிலை 30 டிகிரியாகவும் இருக்க வேண்டும். பனிக்கட்டி கலந்த தண்ணீரை உபயோகிப்பதாலும் குளிர்ந்த தண்ணீரில் அமிழ்த்துவதாலும் வெப்பநிலை குறைவது பாதிக்கப் படும். ஆகையால் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் மூச்சு விடும் பாதை சீராக இருக்க வேண்டும். இதற்கு Airway என்ற உபகரணத்தைப் பயன்படுத்த வேண்டும். வெப்ப நிலையை இறங்கச்செய்யும் மருந்துகளை ஊசி மூலம் கொடுக்க வேண்டும். ஆக்ஸிஜனும் தேவைப்படும். கிட்டத்தட்ட 1.5 லிட்டர் Saline உப்பு நீர் செலுத்துவதுடன் இரத்தத்தில் உள்ள சர்க்கரை மற்றும் உப்புகளைப் பரிசோதித்து அவை குறைந்திருந்தால் அதற்கேற்ப fluids தர வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் அளவை இரத்தத்தில் சரி செய்ய வேண்டும். இல்லையெனில் இதய பாதிப்பு ஏற்படும். வலிப்பு வரவும் வாய்ப்பு உண்டு. ஆகையால் இதயம், மூளை, நரம்பு மண்டலம், சிறுநீரகம் மற்றும் ஈரல் கெடாமல் இருக்க மருத்துவ முறையைக் கையாள வேண்டும். DIVC(Disseminated intravescular coagulation) என்ற உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் பரவும் இரத்தம் உறையும் தன்மை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மலேரியா இருந்தால் அதற்கு வேண்டிய மருந்தைக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வெப்பத் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவிகிதம் நோயாளிகள் குணம் அடைந்துவிடுவர்.

கோடைக் காலத்தில் ஆரோக்கியம் காக்கக் கீழ்க்கண்ட 10 வழிகளைக் கையாளுவது நல்லது.

1. நேரிடையான வெயிலால் ஏற்படும் Sun Stroke-ஐ தவிர்க்க, முடிந்தவரை எல்லா வெளி வேலைகளையும் காலை 11 மணிக்குள்ளும் மாலை 4 மணிக்கு மேலும் செய்வது நல்லது. கண்டிப்பாக தலையில் தொப்பி அணிய வேண்டும் அல்லது குடையாவது பிடித்துச் செல்ல வேண்டும். நடைப்பயிற்சிக்குச் செல்பவர்கள் காலை 7 மணிக்குள்ளும், மாலை 6 மணிக்கு மேலும் செல்வதால், உடல் சோர்வடையாது. இரவில் நல்ல தூக்கம் வரும்.
2. கண்களைப் பாதுகாக்கக் கறுப்புக் கண்ணாடி அணிய வேண்டும். கோடைக்காலத்தில் வெள்ளை அல்லது பருத்தி ஆடை அணிந்தால் அதிகம் வேர்க்காது.
3. தாகம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவ்வப்போது தண்ணீர், இளநீர், மோர், பானகம், பழச்சாறு சாப்பிடுவதால் தோல் மற்றும் நாவறட்சி நீங்கி உடலுக்கு உயிர்ச் சத்து கிடைக்கும். 'யூரினரி இன்பெஃக்சன்' மற்றும் நீர் எரிச்சல் ஏற்படாது. இரவில் கால் பெருவிரலின் அடியில் விளக்கெண்ணெய் தடவிக் கொண்டால் உடல் வெப்பம் குறையும்.
4. காலையில் நடைப்பயிற்சிக்காகச் செல்வதற்கு முன்பு ஊற வைத்த பழைய சோற்றுத் தண்ணீரில் நிறைய மோர், உப்பு மற்றும் சாம்பார் வெங்காயத்தை சேர்த்து இரண்டு டம்ளர் அருந்தி விட்டுச் சென்றால் உடல் களைப்பு நீங்குவதுடன் உடலுக்கு வேண்டிய பி–காம்ப்ளெக்ஸ் உயிர்ச்சத்தும் கிடைக்கும். மோரில் உள்ள lactobacilles உடலில் வேர்வையால் வரும் கெட்ட வாசனை ஏற்படாமல் தடுக்கும். எப்போதும் நம் உடல் குளுகுளுவென்று இருக்கும். வேர்க்குரு எட்டிப் பார்க்காது. பழைய சோறு என்பது ஏழைகள், பணக்காரர்கள் இருவருக்குமே சிறந்த செலவில்லாத டானிக் ஆகும்.
5. தினமும் முடிந்தால், இரண்டு வேளையும் குளித்தால் உடல் குளிர்ச்சி ஆவதுடன், தோல் நோயும் ஏற்படாது. குளிக்கும் தண்ணீரில் ஒரு மூடி எலுமிச்சை சாறு கலந்து குளிப்பது நல்லது.
6. வேதிப் பொருள்கள் நிறைந்த உபயோகமற்ற பானங்களைப் பருகுவதைவிட, இளநீர், நுங்கு பதநீர், எலுமிச்சைச் சாறு பருகுவது நமக்கு பொட்டாசியம் உப்பை எளிதில் பெற்றுத்தரும்.
7. பாசிப்பயறு, கீரை வகைகள், முள்ளங்கி மற்றும் வாழைத்தண்டு சிறுநீர்ப் பிரச்சினை இல்லாது பாதுகாக்கும்.



8. குழந்தைகளை எக்காரணம் கொண்டும் வெயிலில் அலைய விடாமல் பாதுகாத்தால், அம்மை நோய், மஞ்சள் காமாலை, டைபாயிட் காய்ச்சல் வராமல் காக்கலாம். தினம் காலை வெறும் வயிற்றில் வேப்பங்கொழுந்தினை அரைத்து தயிரில் கலந்து கொடுப்பதுடன், குளிக்கும்போது வேப்பிலையை மஞ்சளுடன் அரைத்துத் தடவிக் குளித்தால், குழந்தைகளுக்கு உடலில் சொறி, சிரங்கு வராது.
9. மெல்லிய பருத்தி ஆடைகள் உடலைத் தண்ணீர்ப் பானை போல் வைத்து உடல் வெப்பம் ஏறாமல் பாதுகாக்கும். காரம், மசாலா, கோழிக்கறி தவிர்ப்பது அவசியம். பால் சாப்பிடுவது நல்லது. டீ, காபி அதிக சிறுநீர் பிரியச் செய்து உடல் வறட்சியை அதிகரிக்கும். ஆகையால், அவற்றை முடிந்தவரை தவிர்க்கலாம்.
10. முடிந்தவரை, குளுகுளு வசதி செய்யப்பட்ட அறையைத் தவிர்த்து சாதாரண மின்விசிறியின் காற்றிலிருந்தால், நம் உடம்பிலிருந்து வெப்பம் வேர்வையாக வெளியேறுவது எளிதாகும். குளுகுளு வசதி செய்த இடத்தில் அதிக நேரம் இருப்பது உடம்பிற்கு ஒரு போலியான குளுமையைத் தரும் என்பதை மறக்க வேண்டாம். மிகவும் கடுமையான அக்னி நட்சத்திர நாட்களில் சில மணி நேரம் குளுகுளு அறையில் இருப்பதால் உடல் அழற்சியைத் தவிர்க்கலாம். காற்றுக்காக இரவில் கதவையோ, ஜன்னலையோ திறந்து வைக்கும்போது, திருடன் மற்றும் விஷ ஜந்துக்கள் உள்ளே நுழையும் அபாயத்தை மறக்கக் கூடாது. குறிப்பாக, பாம்பு, தேள், எறும்புகள் மற்றும் பூரான் குளுமைக்காக வீட்டிலுள்ள மிதியடி, கம்பளம் ஆகியவற்றின் கீழே புகலிடம் தேடும், ஆகையால், இவற்றைச் சுத்தம் செய்யும்போது, கவனமாக இருந்தால், விஷப் பூச்சிக் கடியைத் தவிர்க்கலாம்.

கோடைக் காலத்தில் மேற்கண்ட முறையால் நம்மை நாமே நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்வதுடன், முடிந்த வரை நம் வீட்டுக்கு அருகே, வெயில் கால மோர்பந்தல் வைக்கலாம். வெளியில் செல்வோரின் தாகம் தவிர்க்கலாம். சிறு பாத்திரத்தில் நாய், பூனை, குருவி, அணில், காக்கை ஆகியவற்றிற்கும் தண்ணீர் வைத்து, மகாகவி பாரதியார் கூறியதுபோல், "காக்கை குருவி எங்கள் சாதி" என்று அவற்றையும் பாதுகாக்கலாம்.



குளிர்சாதன வசதி (A.C.) இல்லாதபோது, படுக்கை அறை ஜன்னலில், நனைத்துப் பிழிந்த துணிகளைப் போட்டு அறையைக் குளிர்விக்கலாம். ஈரத் துணியை சிறிது நேரம் பாதத்தில் சுற்றி வைத்துக் கொள்ளலாம். தூங்கும் அறையில் பெரிய பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதில் சில ஐஸ் கட்டிகளைப் போட்டால், சிறிது நேரத்தில் அறையே குளிர்ந்து விடும். மொட்டை மாடியில் மணல் போட்டு செடி வளர்த்தாலும் வீட்டின் உள்ளே வெப்பம் குறையும். தொட்டிகளில் வைத்து வளர்க்கும் செடிகளை வீட்டுக்குள் வைத்தால் வெயிலில் அது பார்ப்பதற்கு கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். புத்துணர்வு ஏற்படும். காய்கறி கழுவிய தண்ணீர் மற்றும் துணி துவைத்த கடைசித் தண்ணீரில் சிறிது 'சென்ட்' கலந்து வீட்டைச் சுற்றி தெளித்தால் மணமாக இருக்கும்.

மொத்தத்தில் கோடை கொடுமையாக இருந்தாலும், நாம் இருக்கும் விதத்தில் பக்குவமாக இருந்தால், நம்மை எந்த நோயும் அண்டாது.

*"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த*
*குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே*
*ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே*
*உகந்த தண்ணீர் இடை மலர்ந்த சுகந்த மணமலரே*
*மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே*
*மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே!"*

என்று வள்ளலார் பாடிய வண்ணம் நாமும் இக்கோடையில் வெயிலின் கொடுமை நீங்கி இன்புற்று வாழலாம்.

• • •

### தேன்



*தேனில் நீர், பழச்சர்க்கரை, கரும்புச் சர்க்கரை, மற்ற பலவித தாது உப்புக்கள், வேறு சில பொருள்களும் கலந்துள்ளன. இதில் சர்க்கரை மட்டும் 80 சதவிகிதம் உள்ளது. 100 கிராம் எடை தேன் உடலுக்குத் தரும் வெப்பத்தின் அளவு 320 கலோரிகள். பொதுவாக 34 சதவிகிதம் குளுகோசும் 40 சதவிகிதம் பழச்சர்க்கரையும், 2 சதவிகிதம் கரும்புச் சர்க்கரையும் அடங்கியுள்ளன. எல்லாத் தேன்களும் ஏறக்குறைய இதே அளவே கலந்துள்ளன. அவற்றின் மணம், நிறம், அமிலத்தன்மை ஆகியவற்றிற்கு அவற்றில் கலந்துள்ள (சுமார் 5 சதவிகிதம்) வேறு பொருள்களே காரணம். எந்தப் பூக்களிலிருந்து இவை கிடைத்தனவோ அவற்றின் தன்மையும் தேனுக்கு உண்டு.*

# பாரதிப் பெருங்கடல்

□ பாரதி பாஸ்கரன்

மேற்கு பகலவன் மறையும் நேரம். ஒரு சிறிய மேடை அதன்மீது நான். எதிரே... நீண்டு நீண்டு விரிந்து விரிந்து செல்லும் நீலக் கடல்; அதன் முடிவில், கடலை முத்தமிடக் கீழிறங்கி வரும் பரந்துபட்ட நீலவானம்; காணுதற்கரிய கவின்மிகு காட்சி. கண்களில் உறைந்துவிட்ட, கருத்தில் நிலைத்துவிட்ட காட்சியில் லயித்துவிட்ட போழ்தில் நேரம் நகர்வதே தெரிவதில்லைதான். தன்னை மறந்த நிலையில் ஒருவனுக்கு காலமும் இடமும் என்பொருட்டு?

யார் இது? என் கண்களை பின் நின்று மறைப்பது யார்? கண்களை மூடிய கரங்களைத் தீண்டிய மாத்திரமே தெரிந்து போனது– அவன்தான். இதோ, இந்த மணம் ... என்னைப் பற்றிக்கொண்டு, இல்லையில்லை. இழுத்துக் கொண்டு போகிற மகிழ்ச்சிப் பெருவெள்ளம், என் உள்ளத்தை தன்னதில் பதித்துக் கொண்டுவிட்ட உண்மையில், திண்மையில் புரிந்து கொண்டுவிட்டேன். அவள்தான், அவளேதான்! "நீ தான் --- `` பெயர் சொல்லி விளித்தேன். அவள் கை விலக்க கண் விழித்தேன். புன்முறுவல் பூத்து நின்ற பூவையெனை வினவினாள்.

"நெடுங்கடலில் நீ என்ன கண்டாய்? வானவீதியில் என்ன கண்டாய்?

'அலை தரித்த நுரைகளில் என்ன கண்டாய்? நீர்க்குமிழி பிரிந்து

முகங்களிலே என்ன கண்டாய்? பிரிந்து சேர்ந்து

செல்லும் மேகங்களில் என்ன கண்டாய்?''



சொன்னேன் "நீள் கடலில், நீல வானில், நுரைகளில், குமிழிகளில், மேகக் கூட்டங்களில் ... ஏன், என் விழிகளைப் பொத்திய கரங்களை விலக்கி விழித்ததில் ... நான் கண்டதெல்லாம், நின் முகமன்றி பிறிதில்லை!

அவள் நேர்நின்றால் தெரிவது அவன் முகம். அவள் இல்லாத போழ்தும் அவள் முகமே... கடலாய், வானமாய், காற்றாய், நீராய். காணுகின்ற காட்சியெல்லாம் அவளன்றி வேறல்லவாய்... மெய்ப் பொருள் தேடி அலைவோர் பகரும் இறைமையின் தத்துவம் காதலில் எளிதில் கைவரப் பெறுமோ? எங்கும் எதனிலும் அவனே' இது இறையடியார் வாக்கு.

எங்கும் எதிலும் அவளே/அவனே – இதுவே இளங்காதலர் நோக்கு. மகாகவியின் பாடல் மனதை மயக்குவதில் வியப்பென்ன?





அவனுடைய சாயங்காலத்தில் சந்தோஷம் தடவிய அப்பாடல்...

படிக்குந்தோறும் நம்மை பரவசத்திலாழ்த்தும் அப்பாடல்...

அனுதினமும் காதலர் அனுபவித்தறியும் அப்பாடல்...

**கண்ணம்மா - என் காதலி**

*மாலைப் பொழுதி லொரு மேடைமிசையே*
*வானையுங் கடலையு நோக்கி யிருந்தேன்;*
*மூலைக் கடலினை யவ் வான வளையம்*
*முத்த மிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்;*
*நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி,*
*நேரங் கழிவதிலு நினைப் பின்றியே*
*சாலப் பலபல நற் பகற் கனவில்*
*தன்னை மறந்த லயந் தன்னிலிருந்தேன்.*

*ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே,*
*ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே,*
*பாங்கினிற் கை யிரண்டுந் தீண்டியறிந்தேன்,*
*பட்டுடை வீசுகமழ் தன்னி லறிந்தேன்,*
*ஓங்கிவரு முவகை யூற்றி லறிந்தேன்;*
*ஒட்டு மிரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்;*
*'வாங்கி விடடி கையை யேடி கண்ணம்மா,*
*மாய மெவரிடத்தில்?' என்று மொழிந்தேன்.*

*சிரித்த ஒளியி லவள் கை விலக்கியே,*
*திருமித் தழுவி, "என்ன செய்தி சொல்'' லென்றேன்;*
*"நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?*
*நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?*
*திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?*
*சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?*
*பிரித்துப் பிரித்து நித மேக மளந்தே,*
*பெற்ற நலங்க ளென்ன? பேசுதி'' என்றாள்.*

*"நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;*
*நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;*
*திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;*
*சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;*
*பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே,*
*பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை;*
*சிரித்த ஒலியினிலுன் கை விலக்கியே,*
*திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்."*

★

**மொழி**

*ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே ஆகும்.*

- தந்தை பெரியார்

*இந்த நாட்டில் இல்லாத கருத்துக்காக நாம் எந்த நாட்டிலும் எந்த மொழியிடத்திலும் கடன் வாங்காத அளவுக்கு இங்கே கருத்துக்குவியல் உண்டு*

- பேரறிஞர் அண்ணா

# அம்பேத்கரின் அமுத மொழிகள்

*உத்தமமான ஒரு சமூகம் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம், மற்ற பகுதிகளிலும் பரவக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு உத்தமமான சமூக அமைப்பில், எல்லோர்க்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும்.*

*எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயலுகின்றன.*

*துளி இரத்தமும் சிந்தாமல், மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில், புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தும் அரசு முறையே, நவீன ஜனநாயகம் ஆகும்.*

*ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாக தன்மானத்தை இழந்து இருப்பதைக்காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு அமரனாதல் சாலச் சிறந்ததாகும்.*

*நம்மை நாமே உயர்த்திக் கொள்ளவேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ளவேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.*



அம்பேத்கர் பிறந்தநாள் ஏப்ரல் 14

*பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன் ? ஆனால், சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும்.*

*அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிருவகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.*

*சுயமரியாதை இல்லாமல் நாட்டுப்பற்று இல்லாமல், பற்றின்றி வாழ்வதைவிட, சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.*

*சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.*





# புத்தகச் சிறகை விரிப்போம்...

– பாரதிபாலன்

தொழில்நுட்ப வளர்ச்சியும், உலகமயமாக்கல் சிந்தனையும், தாராளமயமாக்கல் சிந்தனையும் வாழ்வியல் சூழலில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. நமது செயல், சிந்தனையும், கருத்தாக்கம் இவைகளில் அதிரடி மாற்றம் தவிர்க்க முடியாததாகி விட்டது. குறிப்பாக கல்வி, படிப்பு என்ற கருத்தாக்கங்களில் நாம் கொண்டிருந்த ஆதாரம் நழுவி வருகிறது. மனிதனை முழுமையானதாக்குவதே கல்வியின் குறிக்கோளாக இருந்தது. ஆனால், இன்றைய நிலை முற்றிலும் மாறிவிட்டது. கல்வி, படிப்பு என்பது ஒரு தொழிலுக்கான அல்லது ஒரு வேலைக்கான துருப்புச் சீட்டு என்ற நிலையில் தான் இருக்கிறோம்.

குழந்தைகள் மட்டத்திலும், வளர் இளம் பருவத்தினர் நிலையிலும் இவ்விதமான கருத்தாக்கங்களைத் தான் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தருகின்றனர். வாழ்வின் இலக்கு என்பது எந்தப் பணிக்குச் சென்றால் அதிகப் பொருளீட்ட முடியும், எந்த தொழிலுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டால் தன் வாழ்வை தக்க வைத்துக்கொள்ள முடியும் என்ற சிந்தனைப் போக்கே அதிகமாக விதைக்கப்படுகிறது.

கல்வி படிப்பு என்பதன் நோக்கங்கள் திசைமாறிப் போய்விட்டன. இயந்திரங்களை உருவாக்குவதைப் போலவே மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். கல்வியும், கல்விக் கூடங்களும் வேலையை அல்லது ஒரு தொழிலை முடித்துக் கொடுக்கும் ஓர் ஒப்பந்தக்காரராக மாறிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கை நெறி, அன்பு, மனித நேயம், உதவி, நட்பு, உயர்ந்த இலட்சியம், முதலிய கருத்தாக்கங்கள் எல்லாம் காலாவதியாகி வருகின்றன. இலக்கியம் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருவது நமக்குப் பேராபத்தைத்தான் தரும். நிலத்தடி நீர் ஆதாரத்திற்கு மழை போல வாழ்வின் ஆதாரத்திற்கு இலக்கியம் முக்கியம்.

பாடப் புத்தகங்கள் தவிர்த்து பிற புத்தகங்களையும், குறிப்பாகப் பல்வேறு இலக்கியப் புத்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்த வேண்டும். படிப்பு என்பது வேலைக்கான ஆயத்தம் மட்டுமல்ல என்ற சிந்தனையை ஆழப்பதிக்க வேண்டும். படிப்பு என்பது வாழ்க்கைக்காக, நம்மை வளப்படுத்திக் கொள்ளவும் மேன்மைப்படுத்திக் கொள்ளவும்தான் என்ற சிந்தனைப் போக்கினை வலுப்படுத்த வேண்டும். உலகம் முழுவதிலும் இந்தச் சிந்தனை தற்போது மறுமலர்ச்சியடைந்து வருகிறது.

படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினை ஏற்படுத்தவும் தொடர்ந்து படிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கும் உலக நாடுகள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. தொழில்வளம், பொருள்வளம், இயற்கை வளம் இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது மனிதவளமே. இந்த மனித வளத்தினை மேன்மைப்படுத்தும் பணியில் உலக நாடுகள் இயங்கி வருகின்றன. இதன் ஓர் அங்கமாகத்தான் ஆண்டுதோறும் ஏப்ரல் 23–ஆம் தேதியை உலகப் புத்தக நாளாகவும், பதிப்புரிமை நாளாகவும் யுனஸ்கோ (UNESCO) அறிவித்தது.

நல்ல புத்தகங்களை வரவேற்று மக்களிடம் கொண்டு செல்வது, புத்தக வாசிப்பினை ஏற்படுத்துவது, வாசிப்பு, அச்சுநேர்த்தி, விற்பனை மேம்பாடு என்ற நிலைகளில் புதிய இலக்குகளை அடைவதும் இதன் நோக்கமாகும். நூலகங்களும் நல்ல நூல்களும் பெருகினால் தான் வாசிக்கும் பழக்கம் வலுப்படும். வாசிக்கும் பழக்கம் ஏற்பட்டால்தான் வாழ்வில் புதிய சுவாசம் கிட்டும்.

சுகதேவ் என்ற பத்திரிகையாளர் தொகுத்த புள்ளி விபரங்களின்படி அமெரிக்காவில் மட்டும் 2,600 கோடி டாலருக்குப் புத்தகங்கள் விற்றிருக்கின்றன. இந்தியப் புத்தகச் சந்தையும் சமீப காலங்களில் வேகமாக வளர்ந்து வருகிறது. இதன் தற்போதைய மதிப்பு 7,000 கோடி ரூபாயைத் தாண்டும் என்கிறார்கள். 2002–2003 ஆம் ஆண்டில் மட்டும் 360 கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களை இந்தியப் பதிப்பாளர்கள் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள்.

நாம் எந்தச் சூழலில் வாழ்கிறோம் ? காலம் மாறி வருகிறது!

விரிவான படிப்பு இல்லாதவர்கள் இனி காலம் தள்ள முடியாது. படிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் எவராக இருப்பினும் பின் தங்கிவிடுவார்கள். இது அறிவுப் போட்டி மிகுந்த காலமாக இருக்கிறது. வாசித்தல்

என்பது ஒரு திறனாகவே கருதப்படுகிறது. பார்த்தல், கேட்டல், கேள்வி ஞானம் இவற்றின் விரிவே படித்தலாகும்.

கற்றல் என்பது தேடுதல் என்பதின் முக்கிய அம்சம். தொடர்ந்து வாசித்துத் தன்னைச் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைத் தான் அனைத்து மதங்களும் போதிக்கின்றன. பட்டறிவுடன் படிப்பறிவும் சேருகின்றபோது தான் வாழ்வு பூரணத்துவம் பெறுகிறது. சமண மதத்தினையே நூலகத்தின் முன்னோடியாகக் கருதலாம். நூல்களைத் தேர்வுசெய்து வைத்திருந்த இடங்களை'ஞானப் பண்பரங்கள்' என்று அழைத்தனர். இவர்களுக்கு அடுத்து பௌத்த மதத்தினைச் சொல்லலாம். இந்துக்களுக்கு பகவத் கீதையும், முஸ்லீம்களுக்கு குரானும், கிறிஸ்தவர் களுக்குப் பைபிளும் தான் மையமாகத் திகழ்கின்றன. இந்த மையத்திலிருந்து அவர்களின் சிந்தனை விரிகின்றது. அந்த மையப்புள்ளி வாசித்த அனுபவங்களை விரிவுபடுத்தத் தூண்டுகிறது.

புத்தகம் என்பது ஒரு மனத்தின் படைப்பு. பெரும்பாலும் அதனை எழுதியவர்களின் வாழ்வியல் அனுபவங்களை ஒட்டியே அது திகழும். ஒரு புத்தகத்தின் பக்கங்கள் என்பது வாழ்வின் பக்கங்களாகவே மலர்கின்றன என்பதனை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நூல்களிடம் இருந்து நாம் அந்நியப்படுவது என்பது வாழ்வில் இருந்து அந்நியப்படுவது போலத்தான். நிலையான மாறுதல்கள் எல்லாவற்றிற்கும் நூல்களே ஆதாரமாகத் திகழ்ந்திருப்பதனை வரலாறு உணர்த்துகிறது. வரலாற்று நிகழ்வுகளை ஓர் பறவைப் பார்வை பார்க்கலாம். ரஷ்யப் புரட்சிக்கும் இந்திய விடுதலைப் போருக்கும் மூலாதாரங்களாக நூல்களே திகழ்கின்றன. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி 'மகாத்மா'வாக மாறுவதற்கும் நூல்களே மூலமாக இருந்திருக்கின்றன. பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சென்றதும் நூல்களே. சமூக, அறிவியல் மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமை நூல்களுக்கு உண்டு.

பொழுதுபோக்கிற்காகவோ, வேறு வேலைக் காகவோ ஒருவன் படிக்கிறான் என்ற நிலையைக் கடந்து விட்டோம். இனி வாழ்வதற்கே படிக்க வேண்டும். பல்வேறு தகவல்களையும் துறை சார்ந்த அறிவினையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து படிப்பதன் மூலமே சிந்தனைத்திறனைப் பெற முடியும். விரைந்து முடிவெடுப்பதற்கும், திட்டமிட்டுச் செயலாற்றுவதற்கும், சூழ்நிலைக்கேற்பத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கும் புத்தக அறிவு அவசியமாகிறது.

தகவல் தொழில்நுட்பவசதி அபரிமிதமாக வளர்ந்து வருகின்றது என்பது உண்மைதான். இந்த இயந்திர வளர்ச்சியின் தனி மனிதத் தொடர்புகள் பலம் இழந்துதான் காணப்படுகின்றன. மனிதத் தொடர்பு என்பது உணர்வு பூர்வமாக உயிர் துடிப்போடு நிகழ



வேண்டும்.பெரு நகரங்களிலும், சிறு நகரங்களிலும் ஒவ்வொரு மனிதனும் தனித்தனி தீவுகளாகவே திகழ்கின்றனர். தன் மன உணர்வுகளை வெளிப் படுத்தவோ, தன் எண்ணங்களை, சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளவோ, முடியாமல் ஆயிரக்கணக்கான பதில் தேட முடியாத கேள்விகளை சுமந்து கொண்டுதான் அலைகிறான். அவர்களுக்கு உற்ற துணையாக புத்தகங்கள் திகழ முடியும். அவர்களுக்கு நட்பாக இருக்க முடியும். அவர்களின் சந்தேகங்களைப் போக்க முடியும்.

படிப்பது என்பது ஒரு சுகமான அனுபவம். விளையாடுவதைப் போல, நல்ல நண்பர்களுடன் அரட்டை அடிப்பதைப் போல, நல்ல கலையை ரசிப்பதைப் போல படிப்பதும் ஓர் உன்னத அனுபவம் தான். அந்த அனுபவத்தினைப் பெறுவதே ஒரு அலாதியான இன்பம். அதன் ருசியை அறிந்தவர்களுக்கு இதுபுரியும்.

படிப்பதற்கு முன்னர் அதற்கான மனநிலையை உருவாக்க வேண்டும். மன நிலைக்குத் தக்கவாறு தாங்கள் வாசிக்கப் புத்தகத்தினைத் தேர்வு செய்தல் இன்னும் சிறப்பானது. படிப்பதற்கென்று ஒரு இடத்தினைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும். இது தியான இடம்போல் வாய்க்க வேண்டும். முடியாவிட்டால் இடையூறுகள் இல்லாத ஓர் இடம் போதும். படிக்க உட்கார்ந்த உடனே மற்ற சிந்தனைகளுக்குத் தாழ் போட்டுவிட்டு அப்புத்தகத்தோடு பயணம் செய்ய வேண்டும். புத்தக அச்செழுத்து வரிகளுக்கிடையே உள்ள இடைவெளி உங்கள் கற்பனைக் கதவுகளைத் திறக்கும். இதுதான் புத்தக வாசிப்பின் சிறப்பு. மற்ற ஊடகங்களில் இல்லாத சிறப்பு உங்களை நீங்களே தரிசிக்க இதைவிட வேறு என்ன வாய்ப்பு கிடைக்கும்? டி.வி. பார்த்துக் கொண்டோ பாடல் கேட்டுக் கொண்டோ வாசிக்கும்போது இந்த அனுபவத்தினை நீங்கள் இழந்து விடுவீர்கள்.

*மாணவர்கள்* பாடம் மற்றும் பாடத் திட்டங்களோடு தொடர்பு இல்லாத நூல்களையும் வாசிக்க வேண்டும். அது அறிவு வளர்ச்சிக்கும் அனுபவ முதிர்வுக்கும் ஆதாரமாகத் திகழும். உத்தியோகஸ்தர்களும், தொழில் சார்ந்தோர்களும் துறை சார்ந்த நூல்களுடன் சில பொதுவான நூல்களையும் வாசிக்க வேண்டும். அது அவர்களின் ஆளுமையை வளர்க்கும். நெகிழ்வான மனநிலையை உருவாக்கும்.

✱



# இணையத்தில் தமிழ் படைப்புகள்



ஆன்லைன் மேகசின்ஸ் மற்றும் ஈடெக்ஸ்ட் (E-Text) என்று இன்டர்நெட்டில் தொகுக்கப்பட்ட தகவல்களுக்கு ஒரு புதுவடிவம் கிடைத்துள்ளது. செய்தித்தாள், இதழ்கள் மற்றும் வீடியோ, மீடியா ஆகியன செய்தி பரப்பும் தளங்களாக உள்ளூரிலே இருந்தன. தற்போது இவையனைத்தும் ஒன்று திரட்டப்பட்டு உலக மக்களுக்கு பயன்படும்படி இன்டர்நெட்டில் புதிய பரிணாமம் எடுத்துள்ளதெனக் கூறலாம்.



இவையே தற்போது "எலக்ட்ரானிக் மேகசின்ஸ்'' என்றும் செல்லமாக ஈசைன்ஸ் (E-zins) என்று அழைக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக இவை இன்னமும் சுருக்கமாக ''சைன்'' (E-Zine) என்றும் அழைக்கப்படுகிறது. தமிழில் இவை மிஞ்சிகை, மின்னிதழ் என கூறப்பட்டாலும் பலரும் இணைய இதழ்கள் என்றே அழைக்கின்றனர்.

இணைய இதழ்கள் என்றால் இன்டர்நெட் பிரியர்கள் அடையாளம் கொள்ளுமளவிற்கு இதன் வளர்ச்சி உச்சத்தை தொட்டுள்ளது. உலகின் எந்த மூலையில் நடைபெறும் எந்தப் பிரச்சினையையும் அறிந்து கொள்ள வேண்டுமா? கணினி வாயிலாக சென்னையிலிருந்தோ, அல்லது அமெரிக்கா, ஜப்பான் என உலகின் எந்த நாட்டிலிருந்தும் படித்துக் கொள்ளலாம். காலையிலோ, மாலையிலோ வரும் நாளிதழ் செய்திகளுக்காக காத்திருக்க வேண்டியதில்லை.

உலகெங்கும் தகவல்களை தொகுக்கும் இணைய இதழ்கள் சுமார் 1,75,000 வரை பல மொழிகளிலும் உள்ளதாக ஒரு கணிப்பு உள்ளது. தமிழில் இணைய இதழ்கள் சுமார் 25 முதல் 30 வரை உள்ளது. தமிழ் இன்டர்நெட் தளங்களை முதன் முதலில் அமைத்த பெருமை சிங்கப்பூரை சேர்ந்த காலஞ்சென்ற பேராசிரியர் நா. கோவிந்தசாமியையே சாரும். சீன இளைஞர்களின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் கணியன்.காம் என்ற முதல் இணைய தளத்தை அமைத்தார். இந்த இணையதளம் வெகு நாட்கள் இயங்கியது. ஆனால் இவரின் மறைவிற்குப் பிறகு இந்த இணையதளம் தொய்வடைந்துள்ளது.

இவ்வாறு பல வரலாறுகள் இருந்தாலும் முதன் முதலில் தமிழ் மொழிக்காக தமிழ் சினிமா.காம் என்ற இணைய இதழே முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு இன்று வரை இயங்கி வருகிறது. சினிமா செய்திகள், சர்வதேச தமிழ் தள குறிப்புகள், நாட்டு நடப்பு, கட்டுரைகள் என பல சுவாரஸ்யமான பக்கங்கள் இவ்விணையத்தில் தொகுக்கப்பட்டு வருகிறது.

இணைய இதழுக்கான முக்கிய சிறப்பம்சங்கள் என்னென்ன என்ற கேள்விகள் பலருக்கு எழும். இணைய இதழ்கள் முழுக்க முழுக்க கணினி மற்றும் இன்டர்நெட் வசதியுடன் மட்டுமே படிக்க முடியும். நமக்கு வேண்டிய தகவல்களை, செய்திகளை கணினியில் டைப் செய்து பிழை திருத்தி உலகெங்கும் படிக்கும் வண்ணம் வடிவமைக்கலாம்.

நம்முடைய படைப்புகளை உடனடியாக உலக வாசகர்களுக்கு படைக்க முடியும். காகித செலவு, அச்சு இயந்திர செலவு என்று எதுவும் இதற்கு கிடையாது. நமக்கு வேண்டிய தகவல்களை நம் தளத்தின் அடிப்படையான தமிழ் எழுத்துரு வாயிலாக பொறுத்திக் கொள்ளலாம். செலவுகள் பல வகையிலும் இல்லாத காரணத்தினால் தகவல்களை எவ்வளவு பெரியதாகவும் எழுதிக் கொள்ளலாம். செய்திதாள்களின் செய்தியின் அளவை பொறுத்து ஒன்றிரண்டு புகைப்படங்களை மட்டுமே பிரசுரிக்க முடியும்.

இணைய இதழ்களில் எத்தனை புகைப்படங்கள் வேண்டுமானாலும் நம் விருப்பப்படி வைத்துக் கொள்ளலாம். ஒரு நிகழ்ச்சிக்கான ஆடியோ மற்றும் வீடியோ தொகுப்புகளையும் இணைய கோப்புகளில் அடிப்படைகளைச் செயல்படுத்தி இணைத்துக் கொள்ளலாம்.

இணைய இதழ்களின் முக்கியமான வசதி 'லிங்க்ஸ்' என்று கூறலாம். 'லிங்க்ஸ்' என்பதன் பொருள், நாம் கணினியில் ஒரு பக்கத்தை படைத்துக் கொண்டிருக்கும்போது ஒரு குறிப்பிட்ட சொல்லை கிளிக் செய்து அதன் முழுமையான விளக்கத்தை மற்றொரு பக்கத்தில் படித்துக் கொள்வதாகும். இந்த 'லிங்க்ஸ்' வசதியின் வாயிலாக தான் ஆடியோ, வீடியோ கோப்புகள் இணைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சி செய்தியின் முக்கிய குறிப்புகளை அறிய அவைகளுக்கு 'லிங்க்ஸ்' அளித்துக் கொள்ளலாம். நாம் படிக்கும் செய்திகளுக்கு உடனடியாக பதில் அளிக்க வேண்டுமானாலும் உடனடியாக ஈமெயில் வாயிலாக கிளிக் செய்து அனுப்பிவிடலாம். மொத்தத்தில் இணைய இதழுக்கான தயாரிப்பு செலவோ, பயன்பாட்டு செலவோ பெரிய அளவில் இல்லை. இணைய இதழ்களை நடத்துவதற்கு பெரிய அளவிலான ஆசிரியர் குழுக்கள் இருக்க வேண்டும் என்கிற தேவையில்லை.

சிறிய செய்தி இதழாகவோ, பிரம்மாண்ட இணைய இதழாகவோ நடத்துவதற்கேற்றபடி நிருபர்களை நியமித்துக் கொள்ளலாம். உலகத் தமிழ்.காம்., திசைகள். காம், சூரியன்.காம், சிபி.காம், ஆறாம்திணை.காம், அம்பலம்.காம், நிலாசாரல்.காம் ஆகிய இணைய இதழ்கள் உலகத் தமிழர்களிடம் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இவை இதழ்களாகவும், தினசரி தமிழக செய்திகளை படைத்து மிளிர்கின்றன. தமிழ் பிபிசி வானொலி மற்றும் வேர்ல்ட் தமிழ் நியூஸ்.காம் ஆகிய இணைய தளங்கள் தமிழ் செய்திகளை ஆடியோ பைல்களாக உடனுக்குடன் தொகுத்து வருகின்றன. தமிழ் இணைய இதழ்கள் பெரும்பாலும் தமிழக செய்திகள், இலக்கியம், அரசியல், சினிமா, தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து இயங்கி வருகின்றன. இன்னமும் தமிழில் சாதிக்கப்பட வேண்டியவை இணையத்தில் பலவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலிருந்து வெளியாகும் நாளிதழ், வார இதழ்களில் பெரும்பாலானவை இணைய தளங்கள் வாயிலாக பலருடைய நெஞ்சங்களிலும் இடம் பிடித்துள்ளது. விரிவான செய்திகளுக்கான முக்கியத்துவம் இத்தளங்களில் உள்ளன. தமிழக நாளிதழ் தளங்களும் சுடச்சுட செய்திகளை அளிக்கும் வண்ணம் தற்போது இரு புதிய பரிமாணங்களை பெற்றுள்ளது. ஒன்று முக்கிய செய்திகளை தவிர மாவட்ட செய்திகளை மாவட்டம் வாரியாக மொத்தமாக அளித்து வருகிறது. மதுரையில் பிறந்த ஒரு தமிழன் பணிக்காக இலண்டனில் வாழ்கிறான் என வைத்துக் கொள்வோம். இவர் மதுரையை பற்றிய நிகழ்வுகளை மட்டும் அறிய வேண்டுமென்றால் இலண்டனில் இருந்தபடியே இன்டர்நெட் வழியாக படித்துக் கொள்ளலாம்.

பெரிய நாளிதழ்கள், காலை வெளியாகும் அச்சு பிரதியை மட்டும் செய்திகளாக இணைய இதழில் வெளியிடும். பெரிய இணைய நாளிதழ்கள் கூட செய்திகளின் பலத்தால் முதலிடம் பிடிக்க தொடங்கியுள்ளது. பெரிய நாளிதழ்களும் சுடச்சுட உடனுக்குடன் செய்திகளை அளிக்க துடிப்பதால், இவையும் இணைய இதழ்களின் இலக்கணத்தைப் பெற்றுள்ளது.

மொத்தத்தில் அனைத்து செய்தி பரப்பும் இணைய இதழ்களுக்கும் ஒரு வடிவம் உள்ளது. வாசகர் வட்டத்தை தக்க வைத்துக்கொள்ள பிரபலங்களின் சாட்டிங், ஆன்மிகம் மற்றும் ஜோதிட செய்திகளும் குவிக்கப்படுகின்றன. வாரம் ஒரு முறை, மாதம் ஒரு முறை மட்டும் செய்திகளை வெளியிடும் இணைய இதழ்களும் உள்ளன.

அமெரிக்க நாளிதழ்களின் பழைய நாளிதழ்களை இணையத்தில் பார்வையிட கட்டணம் வசூலிக்கும் முறை போய் தமிழ் இணையங்களுக்கு கட்டண முறை வாய்ப்பு கூடி வருகிறது. சிங்கப்பூரின் தமிழ் முரசு, இலங்கையின் வீரகேசரி, மலேசியாவின் மலேசிய நண்பன் செய்தி ஊடகங்களும் இணையத்தில் முழு பலத்தை பெற்று வருகின்றன. இணைய இதழ்களை அமைப்பதும், நடத்துவதும் எளிது. உலக அளவில் புகழ் பரப்ப வைப்பதே கடினமாகும். பெரும்பாலான இணைய இதழ்கள் உலக அளவில் மின்னுவதற்கு அடித்தளமிட்ட பின்பே இறங்குகின்றன.

– மா.ஆண்டோபீட்டர்









நீலக்கம்பளம் போர்த்தாள் – உடல்
நிறைய வாசம் சேர்த்தாள்!
வாலைக்குமரி உதகை – அவள்
வனப்பைப் பார்க்க வாங்க!

வெள்ளை நிலவை உருக்கி – நீர்
வீழ்ச்சி யழகைப் பெருக்கி
கொள்ளையிளமை கொழிக்கும் – திருக்
குற்றாலத்துக்கு வாங்க!

முதுமலைப்பெரு வனமே – அதில்
முழங்கும் யானை தினமே!
புதுமைக் கோடைக் கானல் – அந்தப்
பொழிலைப் பார்க்க வாங்க!

சீரகச் சம்பாச்சோறு – உடன்
சிறந்த மிளகின் சாறு
ஊருக்கு ஊரு 'மோட்டல்' – நல்ல
உபசரிப்புக்கு வாங்க!

முறுக முறுகத் தோசை – அதில்
முழு உலகுக்கும் ஆசை!
வருக வருக பயணி – உங்க
வாய்க்கு உண்டு இளநீர்.

■ கவியரசர் **இளந்தேவன்**



# தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி

திரு. **சக்திகாந்த தாஸ்,** இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் நிருவாக இயக்குநர்
சுற்றுலாத்துறை, தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு, அனைத்து வளமும் செறிந்த தமிழ்ப் பண்பாட்டுடன் மேலை நாட்டு வாழ்க்கை முறையையும் பிரதிபலிக்கும் ஒரு மாநிலமாகும். அனைத்துத் தரப்பு மக்களின் வரவு செலவிற்கேற்ப சிறந்த தங்குமிட வசதிகள் அதிக செலவின்றி இங்கு கிடைக்கும். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயில்கள், புகழ்பெற்ற கடற்கரைகள், மிதமான தட்பவெப்பச் சூழ்நிலை கொண்ட ஒரு இடமாகும்.

நவீன தென்னிந்தியாவின் சாரமாக தமிழ்நாடு விளங்குகிறது. இங்கு பழமை பொருந்திய மரபுகள் பரவலாக உள்ளன. நவீனத் தன்மைகளைப் பெற்றிருப்பினும் அதன் பழமையைத் தன்னகத்தே தக்க வைத்திருப்பது மிகவும் வியப்புக்குரியதாகும்.

அனைவராலும் மதராஸ் என்று அறியப்பட்ட தமிழ்நாட்டின் முகத்துவாரமாக விளங்கும் சென்னை, பழங்கால பண்பாடுகள் செறிந்த மற்றும் இந்தியாவின் சிறந்த தொழில் நகரங்களில் 3ஆவது இடத்தை வகிக்கிறது. உலகின் மிக நீளமான இரண்டாவது கடற்கரை சென்னையில் அமைந்துள்ளது மிகவும் பெருமைக்குரியதாகும். சென்னை மாநகரில் உள்ள பன்னாட்டு விமானத்தளத்திலிருந்து இலண்டன், ஜெர்மனி, சிங்கப்பூர், மஸ்கட், அரபு நாடுகள், இலங்கை, ஹாங்காங் மற்றும் உலகின் பல நாடுகளுக்கு நேரடியாக விமானப் போக்குவரத்து வசதிகள், உள்ளன. மேலும், இணைப்பு விமானப் போக்குவரத்து வசதிகள் மொரீசியஸ் மற்றும் முக்கிய கடற்கரை துறைமுகங்களுக்கும் உள்ளன.

மாநிலத்தில் உள்ள எப்பகுதிக்கும், சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்குரிய அனைத்துப் போக்குவரத்து வசதிகளையும் ஒருங்கே பெற்றுள்ளது





சென்னை மாநகரம். அந்நகரைச் சுற்றி தற்போது அமைந்துள்ள இடங்கள் ஒரு காலத்தில் மன்னராட்சிகளின் தலைநகரங்களாக விளங்கியவை ஆகும். சரித்திர சிறப்பு வாய்ந்த மீனாட்சி கோயில் அமையப்பெற்ற மதுரை இந்தியாவின் அதிசயங்களில் ஒன்றாகும். சோழர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பிரகதீஸ்வரர் கோயில் தஞ்சையில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ளது.

பல்லவ மன்னர் காலத்தில் முக்கிய நகரங்களாக விளங்கியது காஞ்சிபுரம் மற்றும் மாமல்லபுரம். காஞ்சிபுரம் ஏழு இந்து புனிதத் தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. மாமல்லபுரம் புராதன சிற்பங்களை உள்ளடக்கிய இந்தியாவின் கடற்கரை நகரமாகத் திகழ்கிறது. திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி மிகவும் தொன்மை வாய்ந்த கலை சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற மலை வாழிடங்களில் உள்ள தேயிலை, காபி மற்றும் யூகலிப்ட்ஸ் தைலம் மேலை நாடுகளின் மனதை ஈர்க்கின்றது.

சிதம்பரத்தில் அமைந்துள்ள நடராஜர் கோவிலில் நடராஜர் நடனம் ஆடும் விதத்தில் அமைந்துள்ளது மிகவும் சிறப்பாகும். திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டைக்குப் புகழ்பெற்றது. இக்கோட்டை 85மீ. சுற்றளவு கொண்டது. இராமேஸ்வரம் இந்தியாவின் புகழ்பெற்ற புண்ணியத் தலம் ஆகும். அங்குள்ள சிற்பங்களும் ஆயிரம் தூண் மண்டபமும், உட்பிரகாரமும் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள கன்னியாகுமரி புனித சுற்றுலாத் தலமாகும். இங்கு இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடல் ஆகிய மூன்று கடல்களும் ஒரே இடத்தில் சங்கமம் ஆகிறது. இங்கு சூரியன் உதயத்தையும் மற்றும் சூரியன் மறைவதையும் கண்கூடாகக் காணலாம்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிப்பணிகளை தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து கடந்த 30 ஆண்டுகளாக செய்து வருகின்றன. சுற்றுலாத் துறையின் கீழ் 20 சுற்றுலா அலுவலகங்களும் (6 வெளி மாநிலங்களில்) 26 சுற்றுலாத் தகவல் மையங்களும் (8 வெளி மாநிலங்களில்) செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 32 ஒட்டல்களையும், 29 விதமான சுற்றுலாப் பயணத் திட்டங்களையும் நடத்தி வருகிறது.

## ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம்

இந்தியாவில் உலகத் தரத்திற்கேற்ப அபிவிருத்தி செய்யப்படத்தக்க 25 மாதிரி சுற்றுலா மையங்கள் (Tourism Circuit) பட்டியலை மைய அரசு சுற்றுலாத்துறை கண்டறிந்துள்ளது. இதில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இரண்டு சுற்றுச் சாலைகள் இடம் பெற்றுள்ளன.



அ) சென்னை – மாமல்லபுரம் – பாண்டிச்சேரி – செஞ்சி – திருவண்ணாமலை – காஞ்சிபுரம் – சென்னை

ஆ) தேக்கடி – மதுரை – இராமேஸ்வரம்

இத்திட்டத்தின் கீழ் கணிசமாக மைய அரசின் நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சுற்றுலாப்பயணிகள் வருகை

2002 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2,54,66,395 ஆகும். இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் (2001இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2,45,85,116) சுமார் பத்து இலட்சம் அதிகம் ஆகும்.

## இரயில் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியது முதல் சென்னையிலிருந்து பல சுற்றுலாத் தலங்களுக்கு பேருந்து மூலம் அரை நாள் முதல் 14 நாள்கள் வரை சுற்றுலா நடத்தி வருகிறது.

கடந்த ஆண்டு 2.10.2002 முதல் முதன் முறையாக கொல்கத்தாவிலிருந்து சென்னைக்கு சுற்றுலாப் பயணிகளை இரயில் மூலமும் பிறகு சென்னையிலிருந்து 10 நாள்கள் சொகுசுப் பேருந்து மூலமும் சென்னை இரயில் நிலையத்திலிருந்து தமிழ்நாடு முழுவதும் பல முக்கியக் கோவில்களுக்கும், மலை வாழிடங்களுக்கும் அழைத்துச் சென்று விட்டு, பின்னர், கொல்கத்தாவிற்கு கடைசி நாளன்று சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து இரயில் மூலம் வழியனுப்பியதன் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இரயில் சுற்றுலாவை சிறப்புடன் செயல் படுத்தியுள்ளது.

இதன்படி தமிழகத்தில் சுற்றுலாவை ஒரே ஒரு இடத்தில் பதிவு செய்தால் போதும். அதாவது இரயில் பயணம், பேருந்துப் பயணம், நுழைவுக் கட்டணம், தங்குமிடம், வழிகாட்டல் போன்ற அனைத்துக்கும் ஒரே இடத்தில் பதிவு செய்வதால் சுற்றுலாப் பயணிகளுக்கு இது மிகவும் வசதியான ஒன்றாகும்.

இதன் வெற்றி மூலம் மேலும் 21.11.02 அன்று மும்பையிலிருந்தும் 25.12.02 முதல் டில்லியிலிருந்தும் 9.4.03 முதல் அகமதாபாத்திலிருந்தும், 10.4.03 முதல் லக்னோவிலிருந்தும் 1,300க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளை மகிழ்வித்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் 127 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

## பிச்சாவரத்தில் விடியல் விழா

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே கிள்ளை பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த சின்னவாய்க்கால் கடற்கரை கிராமத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை இங்கு மேம்படுத்தும் வகையில் 18.02.04 அன்று விடியல் விழா நடைபெற்றது.

விழாவில் சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கலந்து கொண்டார்கள். சூரிய உதயத்தின்போது இசைக் கச்சேரியும், யோகாசன செயல் விளக்கமும் நடைபெற்றது. இதில் தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். வெளிநாட்டுப் பயணிகளுக்கு வெளிநாட்டுப் பறவைகள் பற்றியும், சதுப்பு நிலக்காடுகளில் பல்லுயிர் பெருக்கம் பற்றியும் வடலூர் சுற்றுச் சூழல் கல்வி மற்றும் பாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்த திரு. கே. சம்பத், அண்ணாமலை பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சண்முகம் ஆகியோர் விளக்கி கூறினார்கள். பின்னர் படகு மூலம் சதுப்பு நிலக் காடுகளைப் பார்வையிட்டனர். விழா



சிறப்பாக முடிவடைந்தது. இது சுற்றுலாத் துறையின் புதிய முயற்சியாகும். இதை அனைவரும் பாராட்டி வரவேற்றனர்.

## பழவேற்காடு படகு அலங்கார அணிவகுப்பு

இயற்கையோடு ஒன்றிய சுற்றுலா மையமாகப் பழவேற்காடு ஏரி அமைந்துள்ளது. அவை சில்கா ஏரிக்கு அடுத்தப்படியாக உள்ள மிகப் பெரிய ஏரியாகும். கடல் மற்றும் ஆற்று நீர் இரண்டும் சேரும் இடத்தில் (Black water) கடற்கழி அமைந்துள்ளது. அவற்றில் 160 வகையான மீன்கள் 100 வகையான பறவைகள் வாழ்கின்றன. இந்த இடம் சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு 27.1.04 அன்று சுற்றுலாத் துறையின் சார்பாக நடைபெற்ற சுற்றுலா விழிப்புணர்வு முகாமில் ஒரு அங்கமான படகு அலங்கார அணி வகுப்பு விழா இந்த ஏரியில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஆணையர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பல துறையைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு படகு அலங்கார அணிவகுப்பு விழாவைச் சிறப்பித்தார்கள்.



கங்கைகொண்ட சோழபுரம்

## 30ஆவது அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சி

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியைத் தீவுத் திடலில் நடத்தி வருகிறது. இவ்வாண்டும் 30ஆவது அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியை மிகவும் சிறப்பான முறையில் 26.12.03 முதல் 24.3.04 வரை நடத்தியது. இந்தப் பொருட்காட்சியில் பல அரசுத் துறைகள் கலந்து கொண்டன. அண்ணா கலை அரங்கத்தில் பல வகையான கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதனை மக்கள் கண்டு களித்தனர். பல வகையான கைவினைப் பொருட்கள் அங்காடிகளும் நிறுவப்பட்டிருந்தன. சிறுவர்களும், பெரியவர்களும் மகிழும் வண்ணம் பல வகையான பொழுது போக்கு அம்சங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நுழைவுக்கட்டணம் மிகக் குறைவாக இருந்தாலும் இந்த ஆண்டு ரூ.80 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 24.03.04 அன்று நிறைவு விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் கலந்து கொண்டு சிறந்த முறையில் அரங்குகள் அமைத்தவர்களுக்குப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்கள். மேலும், சுற்றுலாத்துறை செயலர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர், சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் நிருவாக இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.





## 64ஆவது ஸ்கால் மாநாடு

ஸ்கால் என்ற அமைப்பு சுற்றுலாவை மேம்படுத்துகின்ற ஒரு நிறுவனம். இந்த நிறுவனம் 1937ஆம் ஆண்டு பாரீசில் முழுமையாக ஆரம்பிக்கப் பட்டது. இதற்கு உலகெங்கிலும் சுமார் 500 கிளைகள் உள்ளன. ஆண்டுதோறும் ஒரு நாட்டில் ஐந்து நாட்கள் ஸ்கால் மாநாடு நடைபெறும். கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 19 முதல் 24 வரை நடைபெற்ற ஸ்கால் மாநாடு இந்தியாவிற்கு அதிலும் குறிப்பாக சென்னைக்கு இந்தப் பெருமையைத் தேடித்தந்தது. சென்னையில் நடந்த ஸ்கால் மாநாட்டில் எழுநூறு முக்கியப் பிரமுகர்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் பல வகையான கருத்துகள் பரிமாறப்பட்டன. நமது நாட்டின் கலை, பண்பாடு, கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்கள் போன்றவைகள் வெளிநாட்டவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இந்த மாநாடு ஐந்து நாட்கள் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிறப்புரையாற்றி பெருமைசேர்த்தார்கள். மேலும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர், மத்திய சுற்றுலாத்துறை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலாத் துறை செயலர், சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்நிகழ்வில், ஸ்கால் தலைவர் திருமதி மேரி பென்னட் அவர்கள் உரையாற்றி சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்பெற்ற சிறப்பான மாநாடு என்று மத்திய அரசு இந்த நிகழ்வை தேர்வு செய்து விருது வழங்கிப் பாராட்டியுள்ளது என்பது இதன் மற்றுமொரு சிறப்பாகும்.

## சூரச் குண்து மேளா

அரியானா மாநிலத்தில் 31.01.04 முதல் 15.2.04 முடிய சூரச்குண்து கிராப்ட் மேளா (கைவினைப் பொருட்கள் கண்காட்சி) நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து பலதரப்பட்ட கைவினைப் பொருட் காட்சிகள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட நாதஸ்வரம், கடம், ஆடை அலங்கார அணி வகுப்பு, உணவு போன்றவைகள் அனைவரையும் கவர்ந்தன. "கலா ரத்னா" என்ற

விருதும் "பரம்பராகாட்" என்ற விருதும் தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டது மிகவும் பெருமைக்குரியதாகும். மேற்கூறிய மேளாவில் கலந்து கொண்டது சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் அமைந்தது. நிறைவு விழாவில் மாண்புமிகு அரியானா முதல்வர் கலந்து கொண்டு தமிழ்நாடு சுற்றுலாவைப் பாராட்டி வாழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச சுற்றுலாச் சந்தை

ஒவ்வொரு ஆண்டும் உலகிலேயே மிகப்பெரிய சுற்றுலாச் சந்தை ஜெர்மனி நாட்டில் உள்ள பெரிய நகரமான பெர்லினில் நடக்கிறது. அதில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சிறப்பான முறையில் பங்கு கொண்டது. அவ்வாறு அயல் நாட்டில் நடத்துகின்ற சர்வதேச சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை பங்கு கொண்டது சிறப்பு அம்சமாகும். பல நாட்டிலிருந்து பலதரப்பட்ட சுற்றுலாத் துறை நிறுவனங்களும், சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் அமைந்திருந்தது. சுற்றுலாத்துறை செயலர், ஆணையர் மற்றும் துணை இயக்குநர் ஆகியோர் பங்கேற்று வெளிநாட்டுப் பயணிகளுக்கும் பல சுற்றுலாத்துறையினருக்கும் விரிவான விளக்கம் அளித்தனர்.

## செட்டிநாடு – கிராமிய சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

செட்டிநாடு புராதன நகரம் காரைக்குடியிலிருந்து வடக்கே 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் வீடுகளைக்காண தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் செட்டிநாட்டிற்கு வந்து செல்கின்றனர்.

செட்டிநாடு நகரத்தின் சிறப்பை உணர்ந்து இங்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க மைய அரசு 2003–04 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சத்தை ஒப்பளித்து முதல் தவணையாக ரூ.40 இலட்சத்தை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்கள், விழாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகங்கள் மற்றும் பயணங்கள் தொடர்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இணையதளம் ஒன்றை உருவாக்கியது. தமிழ்நாட்டின் சுற்றுலாத் தகவல் தொகுப்பினைக் கொண்ட இரண்டாவது இணையதளம் ஒன்றையும் உருவாக்க உள்ளது.

தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா மையங்களில் எளிமையான, வசதியான மற்றும் சிறப்பான முறையில் பயணத் திட்டங்கள், தமிழ்நாடு உணவகங்கள் ஆகியவற்றினை இயக்கி வருகின்றது. இவ்வகையில் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் பணியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித்துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளன என்பதில் ஐயமில்லை.








துவக்கத்தில் புவியைச் சூரியன் சுற்றி வருவதாக நம்பினர். இக்கோட்பாட்டின் மூலரிஷி இயோடாக்சியஸ் (கி.மு.360). சாமோஸ் நாட்டின் அரிஸ்டார்கஸ் (கி.மு.310–230) எனும் தத்துவஞானி, "விண்மீன்களும் சூரியனும் நகராமல் நின்ற இடத்திலேயே நிலைத்து நிற்கின்றன; சூரியனை மையமாக்கி புவிதான் வட்டமடிக்கிறது" என்றார்.

சூரிய மையக்கோட்பாடு கோப்பர்னிக்ஸ் (1473–1543) எனும் வானவியல் நிபுணரால்தான் முதன் முதலில் அறிமுகமானது. இவரது (1543) விண்சுற்றுப் பாதைகளின் இயங்கமைப்பு (De Revolutioni Bus Orbium Coclestium) எனும் ஆய்வுநூல், சூரியனே பிரபஞ்சநாயகன் என்றும் புவி அதனைச் சுற்றி வருகிறது என்றும் விவரித்தது.

சர். ஐசக் நியூட்டனின் (1642–1726) புவி மையக் கோட்பாடு குறிப்பிடத் தகுந்தது. நிறைஈர்ப்பு விதிகளை வரையறுத்து இயக்க விதிகளுடன் அவற்றைத் தொடர்புறுத்தி விளக்கிய அவரது "பிரின்சிபியா" Principia எனும் அறிவியல் நூல் வானாய்வுச் சிந்தனை யோட்டத்தில் மகத்தான திருப்பு முனையாயிற்று. இன்றைய நவீனக் கோட்பாடுகள் கோப்பர்னிக்ஸ் கொள்கையை ஒட்டியே புவியும் ஏனைய கோள்களும் உருவானதைச் சித்தரிக்கின்றன.

விண்வெளியில் எங்கிருந்தோ கிளம்பி வந்த வால் விண்மீன்கள் சூரியனில் மோதியதாலேயே கோள்கள் உருவாயின என வாதித்தார் காம்டி–டி–பஃபோன் எனும் பிரெஞ்சு இயற்கை இயலாளர். இன்று நிலவுகிற நெபுலா கருதுகோளை கி.பி.1775 இல் இம்மானுவேல்காந்த் என்னும் ஜெர்மானிய வானவியல் மேதை வெளியிட்டார். சூரியனைச் சுற்றி வந்த நெபுலா வளிமங்கள் உறைந்து திரண்டு பூமியும் பிற கிரகங்களும் உருப்பெற்றன என்பது அவர் கருத்து. கி.பி.1900இல் டி.சி. சாம்பர்லின், எஃப். ஆர். மௌல்டன் என்னும் இரு அமெரிக்க வானவியலரும் பஃபோன் கோட்பாட்டை ஆதரித்தனர். கி.பி.1943இல் மீண்டும் நெபுலா கருதுகோளின் இன்னொரு பரிமாணத்தை வான்வீசாக்சேர் என்னும் ஜெர்மானிய விஞ்ஞானி வெளியிட்டார். சுமார் 600 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வளிமமும் தூசியுமாகச் சுழன்றடித்த மேகத்திரளிலிருந்து தோன்றியதே சூரிய மண்டலம் என்பது இவர் கோட்பாடு.

ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்னர் புவியியல் வல்லுனர்கள் நடத்திய அறிவியல் தேடல்களின் பலனாக புவியின் வயது சுமார் 460 கோடி ஆண்டுகள் என்பது முடிவாயிற்று. பழம் பாறைகளின் தொன்மை அடிப்படையில் இது கணிக்கப்பட்டது.

நிலநடுக்கங்கள் பற்றி எழுந்த ஆய்வினால் புவியின் உள்ளமைப்புகள் குறித்து அறிய முடிந்தது. நிலநடுக்கத்தின் போது அதிர்ச்சி அலைகள் அவை கடந்து செல்லும் உள் பிரதேசங்களின் தன்மைகளைச் சுட்டிக்காட்டும். அதன் புவியின் மையப்பகுதியில் திட உள்ளகமும் (Solic Inner Core) அதனைச் சுற்றி புறக்கூடும் (Outer Core) அதற்கும் வெளியே உறைபோன்ற மான்டில் (Mantle) அமைப்பும், அதனை மூடிய புறணி (Crust) எனும் வெளித்தோடுமே, புவியின் கட்டமைப்பு அடுக்குகளாகும். உள்ளகத்தின் அடர்த்தி ஒரு கன சென்டிமீட்டரில் 13 கிராம். இந்த மையப் பகுதி 1,300 கிலோ மீட்டர் கனம் உடையது. உருகிய நிலையில் தோன்றும் புறக்கூட்டின் கனம் 2,080 கி.மீ.

மாண்டில் நடு உறைப்பகுதி 2,900 கி.மீ. கனமானது. புறணியோ ஆங்காங்கே 12 முதல் 60 கிலோமீட்டர் வரை வேறுபடுகின்றது. உள்ளகத்தில் அதாவது சுமார் 6,370 கிலோ மீட்டர் ஆழத்தில் வெப்பநிலை 4,000 டிகிரி செல்சியஸ். அழுத்தமோ 40 இலட்சம். வளிமண்டல அழுத்தங்களுக்கு ஒப்பானது. நடு உறை பலவகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. புவி ஆரத்தில் பாதியைக் கொண்ட இது (2,900 கிலோ மீட்டர்) புவியின் கன அளவில்



**கோப்பர்னிக்ஸ்**

83 சதவிகித இடத்தை அடைத்துக் கொள்வதுடன், முழுநிறையில் 67 சதவிகிதம் பொருண்மையையும் அடக்கிக் கொண்டுள்ளது. தவிர புறணித் தகடுகளின் சலனத்திற்கு ஆற்றல் ஊட்டுவதே இந்த நடு உறைப் பகுதிதான்.

நிலமட்டத்திலிருந்து சராசரி 45 முதல் 56 கிலோ மீட்டர்கள் ஆழத்தில் தொடங்கும் நடு உறை, 2,900 கிலோ மீட்டர் ஆழம் வரை இறங்கி மையபுறக் கூட்டினோடு (Outer Core) ஒட்டி நிற்கிறது. புவியின் வெளிப்பகுதியான குளிர்ந்த புறணியையும், உருகின நிலையிலுள்ள மையப்புறக் கூட்டையும் பிரிப்பது இந்த தடித்த நடு உறை. இது மெக்னீசியம், இரும்பு உலோகங்கள் செறிந்த சிலிக்கேட் கனிமங்களால் ஆனது. ஆழத்திற்கேற்ப இதன் அடர்த்தி 3.5 கிராம் கன செ.மீ. முதல் சுமார் 5.5 கி.க. செ.மீ. வரை அதிகரிக்கிறது.

இந்த நடு உறையின் மேல் தட்டில் சுமார் 250 கிலோமீட்டர் ஆழம் வரை இளகின பாகுக்கோளம் (Asthenosphere) படர்ந்திருக்கிறது. நடு உறைக்கு ஒரு நெகிழ்மத்தன்மை (Plastic) ஊட்டுவது இக்கோளமே. இதனாலேயே மேல் பொருக்கில் ஒட்டிக் கொண்டிருக்கும் கடல்களும், கண்டங்களும் இளகின பாகுக்கோளத்தில் மிதவைகள் மாதிரி இலேசாக நகர்ந்து சென்ற வண்ணம் இருக்கின்றன.

புவியின் மேற்பரப்பை நான்கு கோளங்களாக வகுக்கலாம்.

1) பாறைக்கோளம் (Lithosphere) பூமியின் மேற்பரப்பில் காணப்படும் நிலப்பகுதிகள் மட்டுமல்லாது கடலின் அடிப்படுகைகளும் உட்பட்டது.

2) நீர்க்கோளம் (Hydrosphere) கடல்கள், நதிகள், ஏரிகள் முதலான நீர்ப்பரப்புகள் அடங்கிய பகுதி, நீர்க் கோளத்தினுள் ஏறத்தாழ 1,46,00,00,000 கன கிலோமீட்டர்கள் தண்ணீர் நிறைந்து உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

3) வளி மண்டலம் (Atmosphere) நில நீர்ப்பரப்புகளைப் போர்த்தி புவி சூழ்ந்து நிற்கும் காற்று மண்டலம்.

4) உயிர்க்கோளம் (Biosphere) மேற்சொன்ன முதல் மூன்று கோளப் பகுதிகளில் உயிரினங்கள் வாழும் பகுதிகளை உள்ளடக்கியது.

பாறைக்கோளம்

பாறைக்கோளம் புவி மேல்பகுதியில் உள்ள கண்டங்களையும் கடல் படுகைகளையும் கொண்டது. கண்டங்களின் நிலம் சராசரி 40 கி.மீ. தடிமனுள்ளது. கடற்படுகைகளோ 10 அல்லது 12 கிலோ மீட்டர்களுக்கு மேல் அதிகத் தடிமனாக இருப்பதில்லை. புவி கொள்ளளவில் ஒரு விழுக்காடும், நிறையில் 0.4 விழுக்காடும் பாறைக்கோளமே.

புவிநூட்பரீதியில் பாறைக்கோளமானது நிலப் பரப்பும் கடல் அடித்தளமும் சேர்ந்ததுதான் என்றாலும், பொதுவாக நிலப்பகுதியை மட்டும் அது சுட்டுவதாகக் கொண்டு கணக்குப் பார்த்தால் புவியின் மொத்தப் புறப்பரப்பளவில் 3/10 பாகம் பாறைக்கோளம். எஞ்சிய 7/10 பாகம் கடல்கள்.

பாறைகள் தூளாகப் பொடிந்திட வானிலை (Weather) காலநிலை (Climate), ஈரப்பதம் (Humidity) இடுக்குகளில் வேர் நுழைத்துப் பரவும் தாவரங்களின் வளர்ச்சி போன்ற பல அம்சங்கள் உண்டென்றாலும் வானிலைப் பருவ மாற்றங்களின் பங்கு மகத்தானது. கோடை வெயிலில் சூடான பாறைகள் திடீர் மழையில், திடீரெனக் குளிர்விக்கப் படும் போது வெடிப்பு விழுந்து கீறிவிடுகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இந்நிலை நீடித்தால் அவை நொறுங்கிச் சிறு துகள்களாகும். அவ்வாறே பாறைகளுக்கு நடுவில் இடுக்குகளில் தேங்கி நிற்கும் தண்ணீர் குளிர் காலத்தில் உறைந்து பனிக் கட்டிகளாகி விரிவடையும் போதும் பாறைகளில் கீறல் வெடிப்பு விழும். இப்படி ஒன்றுக்கொன்று



மெச்சமான சிதைவுகளால் மண்நிறைந்த நிலப்பரப்பு உருவானது.

பாறைக்கோளத்தின் உள்ளமைப்பினை மூவகைப்படுத்தலாம்.

1) கனற் பாறைகள் (Igneous Rocks)

2) படிவப்பாறைகள் (Sedimentary Rocks)

3) உருமாற்றப்பாறைகள் (Metamorphic Rocks)

புவியின் உள்பகுதியிலிருந்து உருகின "மாக்மா" பாறைக் குழம்புகள் வெளியாகி உறைவதால் கனற்பாறைகள் தோன்றின. புவியின் புறணியில் சுமார் 95 விழுக்காடும் இவ்வகைப் பாறைகள்தாம். இவற்றிலும் மூன்று பிரிவுகளைக் காணலாம். கிரானைட் (*Granite*) எனும் கருங்கல் "பசால்ட்" எனும் மிருதுப்பாறை (Besalt), எரிமலைப் பாறை என்பன அவை. எல்லாக் கண்டங்களிலும் பிரதானமாகத் தென்படுவது கருங்கல் பாறைகளே கடல் அடித்தளத்தில் உள்ளவை பெரும்பாலும் "பசால்ட்" வகை. எரிமலைப் பாறைகள், குமுறும் எரிமலை பீச்சி வெளித்தள்ளிய பாறைக் குழம்புகளால் உருவாயின.

கடல் அடித்தளங்களில் காணப்படும் அடுக் கடுக்கான படிவங்களால் ஆனவை படிவப்பாறைகள். இவை பூமி மேல்பொருக்கில் சுமார் 5 விழுக்காடே அடங்கியிருப்பினும், நிலப்பரப்பின் முக்கால் பாகமும் பரந்து கிடப்பது இவ்வகைப் படிவங்களே. பொருளாதார அடிப்படையில் அதிக முக்கியம் வாய்ந்தவை இந்தப் படிவப்பாறைகள். நிலக்கரி, எண்ணெய் மற்றும் விலையேறிய கனிமங்களின் விளை நிலம் இது.



**ஐசக்நியூட்டன்**

பாறைகள் தோன்றும் கணத்திலேயே வெம்மை, உயர் அழுத்தம் அல்லது வேதியியல் வினைத்திறன் இவற்றால் உருத்திரிந்து உண்டான பாறைகளை உருமாற்றப் பாறைகள் என்கிறோம். சான்றாக; சுண்ணாம்புக்கல் (Lime Stone) அதிவெப்பத்தால் உருமாறி பளிங்குக்கல் தோன்றுகிறது.

இன்று நாம் காணும் புவிப்பரப்பு கடந்த காலங்களை விட அடியோடு மாற்றிவிட்டது. ஆல்ஃபிரெட் வேக்னர் (*1880–1930*) எனும் ஜெர்மானிய அறிஞர் கண்டங்களின் நகர்ச்சிக் கோட்பாடு என்கிற புதிய சித்தாந்தத்தினை 1951இல் வெளியிட்டார்.

மலைகளை அவற்றின் தோற்றுவாய்க்கு ஏற்ப நான்கு வகைகளாகப் பிரிப்பது உண்டு. அவை மடிப்பு மலைகள்(Fold Mountains) தடுப்பு மலைகள் (Block Mountains) எரிமலை மலைகள் (Volcanic Mountains) சிதைந்த மலைகள் (Residual Mountains) என்பனவாகும். அழுத்தத்தினால் வளைந்து மடிந்து உருவானவை மடிப்பு மலைகள். ஒருமேசை விரிப்பில் விழும் வளைவுச் சுருக்கங்கள் மாதிரி புவியின் புறணிக்குக் கிடையாக அழுத்தித் தள்ளும்போது அதன் மேல் ஒட்டில் சின்னச் சின்ன வளைவுகள் விழும். அழுத்தம் அதிகரிக்கும்போது அவை விசிறி மடிப்புகள் போன்று படிந்து, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்காய் உயர்ந்துவிடும். உலகின் உயரமான மலைகள் அனைத்துமே இத்தகைய விளைவால் நிமிர்ந்தவையே.

புவிப்பரப்பில் விழுந்த விரிசல் அல்லது கீறல்களை ஒட்டியப் பகுதிகள் செங்குத்தாக உயர்ந்தெழுவதன் விளைவாக தோன்றியவையே தடுப்பு மலைகள், மிதவைத் துண்டங்கள் ஊட்டும் அழுத்த விசையே இவ்வகை உயர்ந்தெழும் புவிச் சலனங்களுக்குக் காரணம். இரு பக்கமும் தாழ்ந்த பிரதேசங்கள் கொண்டு, மத்தியில் நெடிது உயரும். நிலப்பகுதியே தடுப்பு மலையாகிறது. பார்ப்பதற்குச் சரிவின்றிச் செங்குத்தாகச் செதுக்கிய சுவர் மாதிரி இருக்கும். பிரான்சிலுள்ள வாஸ்ஜஸ் (Vosgies) இவ்வகையைச் சார்ந்தது.

குமுறி வெடிக்கும் உட்பாறைக் குழம்புகள் வழிந்து சுற்றுப்புறங்களில் படிந்துயர்ந்து கெட்டியாவதால் எரிமலைக் குன்றுகள் (Volcanic Mountains) எழுகின்றன. அவற்றின் கூம்பிய உச்சியில் வாய்போல் வட்டக்குழிவு ஒன்றும் காணப் படும். ஜப்பானிலுள்ள பியூஜியாமா, இத்தாலியிலுள்ள




வெசுவியஸ் ஆகியன இவ்வகைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

சில மலைகள் பருவ மாற்றங்களினால் சிதைந்து, ஆறுகளினால் அரிக்கப்பட்டு தேய்ந்து வெறும் மேட்டு நிலமாக மட்டும் காணப்படும். இவற்றையே சிதைவு மலைகள் என்கிறோம். நியூயார்க்கில் உள்ள காட்ஸ்ஹில் மலைகள் இவ்விதம் சிதைந்தனவே.

**தீவுகள்**

தீவுகளும் விரிந்த நிலப்பரப்புகளே. மிகப்பெரிய 16 தீவுகளின் மொத்தப் பரப்புளவு 560 இலட்சம் சதுர கிலோமீட்டர்கள். இது ஐரோப்பாக் கண்டத்தின் அளவை விடப் பெரியது. இவை தவிர ஆயிரக்கணக்கில் சிறுதீவுகளும் உள்ளன. இந்தத் தீவுகள் அனைத்தையும் கண்டத் தீவுகள், கடற்தீவுகள், பவளத்தீவுகள் என முப்பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.

கண்டத்தீவுகள் (Continental Islands) என்பன பிரிட்டிஷ் தீவுக்கூட்டங்கள் அல்லது நியுபௌண்ட்லாந்து போல கண்டங்களின் அருகுச் சுற்றுவட்டாரத்திற்குள் அமைந்தவையே. இத்தீவுகள் அண்டையிலுள்ள கண்டங்களின் நிலவியல் கட்டமைப்பினைப் பெற்றிருக்கும். கடற்தீவுகளோ (Oceanic Islands) கடல்களின் மார்பில் முளைத்தவை. இவற்றுக்குப் பக்கத்துக் கடற்கரையின் நிலப்பண்புகள் அறவே கிடையாது. பெரும்பாலும் கடலின் அடிமலைகள் அல்லது கடலின் அடி எரிமலைகளின் உச்ச நிலப்பரப்புகளே உயர்ந்து நீர் மட்டத்திற்கு மேல் இவ்வகைத் தீவுகளாகத் தெரிகின்றன. சான்றாக, அஸ்சென்சன் மற்றும் டிரிஸ்டான்டாகுங்கா ஆகியன மத்திய அட்லாண்டிக் கடலின் அடியில் முகடுகளாக (Ridge) பொங்கிய மலைத் தொடரிலிருந்து எழுந்த கடற்தீவுகளாகும்.

பவளத் தீவுகள் (Coral Islands) எனப்படுபவன பவளப்பூச்சிகள் (Coral Polyps) எனும் ஒரு வகை கடல் நுண்ணுயிரிகளால் உருவான தீவுகள் ஆகும். இவ்வுயிரிகள் கூட்டங்கூட்டமாகவே குடியிருக்கும். இந்த நுண்ணுயிரிகள் இறந்ததும் இவற்றின் சடலங்கள் புற்றுகள் போல் பெருங் கொத்துகளாகப் படரும். இவை கடல் மட்டத்திற்கு மேலெழுந்து உயரும்போது தீவுகளாக உருமாறுகின்றன. இந்தப் பவளத்தீவுகள் சுண்ணாம்புக்கல் ஒத்த பொருளினால் ஆனவை.

ஒருவகைப் பவளங்கள் வரப்பு கட்டுவதில் வெகு சமர்த்தியமானவை. வெப்பப் பிராந்தியக் கடல்களில் செழித்து வளரும் இப்பவளத்தீவுகளின் கரையோரங்களில் இவ்வகை வரப்புத் திட்டைகளைக் (Reefs) காணலாம். பட்டுத் துணிக்கு விளிம்பில் குஞ்சம் தைத்தாற்போலத் தீவுக்கரைகளில் தழைத்து நிற்கும் இவற்றை விளிம்புத் திட்டைகள் (Fringing) எனவும் அழைக்கலாம். வெப்பப் பிரதேசத் தீவுகளின் இப்பவள விளிம்புத் தொடரே கடல்நீரின் ஆக்ரோஷமான படையெடுப்புக்கு எதிரான அரண் அமைக்கிறது. ஒரு தீவு நீருக்குள் மூழ்கப் போவதாக வைத்துக் கொண்டால் முதலில் கடற்கரைகள் தாம் அமிழும். அவ்வேளையிலும் பவளத் திட்டையோ உயர்ந்து வளரும். அந்நிலையில் இந்த வரப்புத் திட்டைக்கும், தீவிற்கும் இடையே ஆழி சூழ்ந்து கங்கணமிடும் இவ்வகை வரப்பினை "தடுப்புத் திட்டை" என (Barrier Reef) என வழங்குகிறோம்.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து கடற்கரைக்கு இணைக்கோட்டு விளிம்பாகத் தென்படும் பெருந்தடுப்புத் திட்டை (Great Barrier Reef) இவ்வகைக்குப் பொருத்தமான எடுத்துக் காட்டாகும். இது சுமார் 2,000 கிலோமீட்டர்கள் நீளமுடையது. ஆழமில்லாத கழிமுகங்களைச் (Lagoons) சுற்றி வளையமிடும் தாழ்வான பவளத் தீவுகளை "அட்டோள்கள்" என்று (Atolls) மேனாட்டார் குறிப்பர். தமிழில் இதனை வளையத் தீவுகள் எனலாம். பிரிமனை வடிவான இந்த அட்டோள்கள் பவளத்தீவின் வளர்ச்சியின் இறுதிக் கட்டமாகும். பவளத் தடுப்புத் திட்டைகள் தோன்றியபிறகு, அவற்றின் மத்தியில் உள்ள தீவு மெல்ல மெல்லக் கடலினுள் மூழ்கி, முடிவில் சுற்றிலுமுள்ள பவளத்தீவு மட்டுமே மிஞ்சும். பார்ப்பதற்குக் கடலின் நடுவில் பிரம்மாண்டமான காற்சிலம்பு போல இருக்கும்.



மத்தியில் ஆழமற்ற கடற் கழிமுகம். இந்தப் பவள வரப்பின் சுண்ணாம்புக்கல் காலத்தால் சிதைவுற்று மணலாகும். அங்கு காற்றும் பறவைகளும் சுமந்து வந்து தூவும் விதைகள் முளைவிடத் தாவரங்கள் துளிர்க்கும். உயிர் வாழச் சாதகமான சூழ்நிலைகள் பிறக்கும். பின்னர் கல் வரப்பாக உயர்ந்த பவளப் பாறைத் தொடர் பவளத் தீவாக மாறிவிடும்.

**நீர்க்கோளம்**

நீர்க்கோளத்தினுள் ஏறத்தாழ 1,46,00,00,000 கன கிலோமீட்டர்கள் தண்ணீர் நிறைந்துள்ளது என்பது இன்றைய கணிப்பு. இதில் கடல்கள் மற்றும் நில உட்கடல்கள் 97.3 சதவிகிதமாகும். ஏனைய 2.7 சதவிகிதமும் பனியாறுகள் (Glaciers) பனிச் சிகரங்கள், நன்னீர் ஏரிகள், ஆறுகள், நிலத்தடி நீர் போன்றவை.

புவியியல் வரலாற்றின் துவக்கத்திலிருந்தே உலகின் மொத்த நீர் அளவு கிட்டத்தட்ட மாறாமல் இருக்கிறது. ஆயினும் கடல்நீருக்கும் நன்னீருக்கும் இடையேயுள்ள கொள்ளளவு விகிதம் மட்டும் தட்ப வெப்ப நிலைக்களுக்கேற்ப அவ்வப்போது மாறுபடுகிறது. ஆவியான கடல்நீர் குளிர்காலத்தில் பனியாறுகளாகவும் பனிச்சிகரங்களாகவும் உறைவதனால் நன்னீர் அளவு அவற்றில் அதிகரிக்கும். வெப்பம் உயரும்போது பனியாறுகளும், பனிச் சிகரங்களும் மீண்டும் உருகி நன்னீராகக் கடலில் கலக்கின்றன. கடந்த எழுபது எண்பது ஆண்டுகளில் கடல் மட்டம் மெல்லப் பொங்கி உயர்ந்து வருவதாக ஆய்வுகள் அறிவிக்கின்றன.



**கடல்கள்**

புவியின் முழுப்பரப்பின் 70.8 விழுக்காடு கடல்கள். இவற்றில் 144.5 கோடி கன கி.மீ. நீர் நிறைந்துள்ளது. கடல்நீரில் கிட்டதட்ட 3.5 விழுக்காடு வரை உப்புகள் கரைந்திருக்கின்றன. குளோரின், சோடியம், மெக்னீசியம், கந்தகம், கால்சியம், பொட்டாசியம், புரோமின், ஸ்டிரான்ஷியம், போரான் போன்றவற்றுடன் மிக நுண்ணிய அளவில் கரி, சிலிக்கான், அலுமினியம், ஃபுளூரின், அயோடின் ஆகிய மூல உப்புகளும் காணப்படுகின்றன.

இயற்கை விசைகளுக்கு உட்பட்ட கடல் நீர் எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கின்றது. சூரிய வெப்பமே இதன் இயக்கத்திற்குக் காரணம். நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் சூரியனால் சூடேற்றப்பட்ட தண்ணீர் விரிவடைந்து ஒரு சில அங்குலங்கள் உயருகிறது. இங்ஙனம் அதிகப்படி உயர்ந்த நீர் வட தென் துருவங்கள் நோக்கி வழிகிறது.

இந்த அடி ஒழுக்குகளின் பாய்விற்குப் புவியின் சுழற்சி விசையாலும் ஒரு சிக்கல் எழுகிறது. புவி கிழக்கு நோக்கிச் சுழல்வதனால் கடல்நீர் மேற்கு முகமாக அடித்துச் சுருட்டப்படுகிறது. வட அரைக் கோளத்தில் (Northern Hemisphere) அது வலஞ் சுழியாகவும், தென் அரைக்கோளத்தில் (Southern Hemisphere) இடஞ்சுழியாகவும் அமையும். இதுவே "கோரியாலிஸ் விளைவு" (Coriolis Effect).

பெருங்கடல்கள் (Oceans) அல்லது சமுத்திரங்கள் எனப்படுவன – கண்டங்களைப் போல் திட்டவட்டமான எல்லைகள் கொண்டவை அல்ல. இவை ஒன்றோடொன்று மருவிக் கலப்பதனால் இவற்றின் எல்லைகளை வேலியிட்டு வரையறுக்க இயலாது என்ற போதிலும், புவியியல் வல்லுநர்கள் இவற்றை பசிபிக், அட்லாண்டிக், இந்திய, ஆர்டிக் பெருங்கடல்களாகப் பிரித்து உள்ளனர்.

இந்தப் பெருங்கடல்களில் கடல்கள் (Bays) விரிகுடாக்கள் (Bays) வளைகுடாக்கள் (Gulfs) மற்றும் இதர பெருங்கடல் உட்புகுமுகங்கள் (Inlets) ஆகியன அடங்கும். பசிபிக் பெருங்கடலே உலகில் மிகப் பெரியதும் தொன்மை வாய்ந்ததுமாகும். புவிப் பரப்பளவில் 35.25 விழுக்காடு விரிந்தது. 16,880

க.மீ. அகலமுடையது. உலகிலேயே ஆழம் கூடிய (11,516 மீட்டர்கள்) மிண்டானோ ஆழப்பகுதி (Mindanao Deep) இங்குள்ளது. உலகிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட தீவுக்கூட்டங்கள் செறிந்து காணப்படுவதும் இங்குதான். மைக்ரோனேசியா (Micronesia) மெலானேசியா(Melanesia) பாலினேசியா (Polynesia) ஆகிய முப்பெரும் பிரிவுத் தீவுகள் இதில் உள்ளன.

இரண்டாவதாக அளவிற் பெரியது 20.9 விழுக்காடு புவிப்பரப்பளவைக் கொண்ட அட்லாண்டிக் பெருங்கடல். இதன் அதிக பட்ச ஆழம் (மில்வாக்கீ ஆழப்பகுதி) 8,381மீட்டர்கள். மூன்றாவதாக இந்தியப் பெருங்கடல். இது கன்னியாகுமரி முதல் தென் துருவத்தில் அண்டார்டிக் வரை விரிந்துள்ளது. இது புவிப்பரப்பளவின் 14.65 சதவிகிதம். இதன் அதிகபட்ச ஆழம் 7,725 மீ. (பிளானட் ஆழப்பகுதி).

ஆர்டிக் என்பது அலைவீசும் சமுத்திரமே இல்லை எனலாம். இதில் கப்பற்பயணம் சாத்தியமில்லை. வட துருவத்தினைச் சுற்றிப் படர்ந்த இப்பகுதியில் குளிர்காலத்தில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகிவிடும். ஆண்டின் இதரப் பருவங்களில் இந்தப் பனிகட்டித் துண்டங்கள் பாளம்பாளமாக இடம் பெயர்வதுமுண்டு. எனினும் இவ்வாறாக 130 இலட்சம் ச.கி.மீக்கும் அதிகமான இடத்தை நிரப்பிக் கொண்டிருப்பதாலேயே பெருங்கடல் என்ற சிறப்புடன் இது அழைக்கப் படுகிறது.

**ஆறுகள்**

உலகின் மிக நீளமான இரண்டு ஆறுகள் தென் அட்லாண்டிக் பெருங்கடலில் சேரும் அமேசான் மற்றும் மத்திய தரைக்கடலில் கலக்கும் நைல் ஆகும். 1969ஆம் ஆண்டு அளவீட்டின்படி அமேசான் ஆறு 6,448 கி.மீ. நீளமுடையது. பிந்திய கணிப்புகள் 6,750 கி.மீ. என்கின்றன. நைல் ஆற்றின் நீளமோ 6,670 கி.மீ.

ஆறுகளைப் பொறுத்த மட்டில் அவை சுமந்து செல்லும் தண்ணீர்ப் பெருக்களவும், அவற்றின் விவசாய அல்லது போக்குவரவுப் பயன்பாடுகளுமே மிக முதன்மையானவையாகும். இந்த வகையில் மதிப்பிட்டால் அமேசான் ஆறே முதலிடம் வகிக்கிறது. இந்த ஆற்றில் 3,700 கிலோ மீட்டர்கள் வரை ஒரே பாதையில் பயணம் செய்யலாம். தவிர உலகிலேயே மிக அதிக அளவு நீர் ஒழுகிப் பாய்வது இந்த ஆற்றில் தான். நொடிக்கு சராசரி 1,19,000 கன மீட்டர்கள். இது வெள்ளப் பெருக்கத்தின்போது 2,00,000 கன மீட்டர்களாக உயரும். மேலும் இதன் ஆற்றுப்படுகை உலகிலேயே மிகப் பெரியது. 70 இலட்சம் சதுர கி.மீ. இதற்கு சுமார் 15,000 துணை ஆறுகள் (Tributaries) உண்டு.

**வளிமண்டலம்**

புவியைப் பாதுகாக்கும் கவசப் போர்வை வளிமண்டலமாகும். சூரிய வெம்மையையும் ஒளியையும் மிதப்படுத்தி புவிக்கு அனுப்பி வைப்பதில் வளிமண்டலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள ஓசோன் (Ozone) படலம் சூரியனிலிருந்து வரும் அபாயகரமான புற ஊதாக் கதிர்ப் பகுதிகளை உறிஞ்சி உலகின் உயிரினங்கள் அழியாமல் பாதுகாக்கிறது.

காற்றழுத்தம் என்பது புவியின் ஒரு குறித்த புள்ளியின் மேல் காற்றின் முழு எடையும் ஊட்டும் அழுத்தம் ஆகும். உண்மையில் காற்றின் அடர்த்தியோ மிக மிகக் குறைவு. சாதாரண அறை வெப்ப நிலையிலும் அழுத்தத்திலும் ஒரு லிட்டர் காற்றின் எடை சுமார் 1.3 கிராம். கடல் மட்டத்தில் காற்றழுத்தமானது ஒரு சதுர சென்டி மீட்டரில் 1033.6 கிராம் எடையளவாகும். (14.7 பவுண்டுகள் / சதுர அங்குலம்), இதனையே ஒரு "வளி மண்டல அழுத்தம்" Atmosphere என்று குறிக்கின்றோம்.

வளிமண்டலம் வெவ்வேறு வளிமங்களாலும் (Gases) நீராவியினாலும் நிறைந்துள்ளது. புவிக்கு மேல் 50 கி.மீ. உயரம் வரையிலான வளி மண்டலத்தில் சுமார் 78 விழுக்காடு நைட்ரஜனும், 21 விழுக்காடு ஆக்சிஜனும், மிகக் குறைந்த அளவுகளில் ஆர்கான், கரியமில வாயு (கார்பன் – டை–ஆக்சைடு) நியான், ஹீலியம், மீதேன் போன்ற வளிமங்களும் இறங்கு வரிசையில் அடங்கியிருக்கின்றன. 50 கி.மீ. அப்பால் வளி மண்டலத்தில் ஆக்சிஜன் ($O_1$) ஓசோன் ($O_3$) ஹீலியம், ஹைட்ரஜன் அணுக்களும் இடம் பெறுகின்றன.

அணு நிலையில் ஹைட்ரஜன் உயர்வளி மண்டலத்தில் நிலைபெறுவதை அப்போலோ 16 திட்டத்தின்போது சந்திரத் தரையில் விட்டுவந்த தொலைப்படக்கருவி உறுதிப்படுத்தியது. பூமியிலிருந்து 64,000 கி.மீ. வரை ஹைட்ரஜன் அணுக்களே நிறைந்துள்ளது.

ஏறத்தாழ 0.01 முதல் 1 சதவிகிதம் வரையிலான நீராவி, வளிமண்டலத்தில் சுமார் 12 கி.மீ. உயரத்திற்குள்ளாகப் பரவியிருக்கிறது. வளிமண்டலத்தில் நீராவியின் அளவு மிகச் சொற்பமேயானாலும், அதன்






முக்கியத்துவம் பெரிது. நீரின்றி வானிலை இல்லை; புவியின் நீர்க்கோளத்திலிருந்து, வெப்பத்தாலும் தாவரங்களின் உதவியாலும் வளிமண்டலத்துள் நுழைகிற நீராவி மீண்டும் குளிர்வடைந்து பனியாகவும் மழையாகவும் பெய்கிறது.

மேகங்களை அவற்றின் தோற்ற வடிவிற் கேற்பப் பலவாறாகப் பிரிக்கலாம். "சிரஸ்" (Cirrus) மேகங்கள் வளையல் பூச்சிகள் போன்று சுருண்டவை. சுமார் 12 கி.மீட்டர் உயரம் வரை பரவி நிற்கும். "குமுலஸ் இனம்" (Cumulus) வட்டவடிவக் குவியல்களாய் உருண்டு திரண்டவை. "ஸ்ட்ராடஸ்" (Stratus) மேகங்கள் ஆகாயத்தில் சிதறிக்கிடக்கும் பஞ்சு முகிலினங்கள். நிம்பஸ் கார் (Nimbus) மேகங்கள்தான் பயங்கர இடிமழையின் மூலக் கருக்கள்.

மேகங்கள் பூமியை நோக்கி உதறும் மின் தாக்குதலுக்கு (Leader Stroke) எதிராக புவியும் வலுமிக்க தாக்கினை மேகங்களை நோக்கி வீசுகிறது. இந்த முன்னோடித் தாக்கும், புவியின் எதிர்தாக்கும் (Counter Stroke) எல்லாம் இமைப் பொழுதினுள் நடந்து முடிகின்றன. இதுவே மின்னல். மின்னலின் உயர் வெப்பத்தால் திடீரென்று காற்று விரிவடையும். வெம்மை தணிந்தபின் குளிர்வதனால் மீண்டும் சுருங்கிடும். காற்றின் இந்த திடீர் விரிவாக்கமும் சுருக்கமும்தான் இடிமுழக்கம். மின்னலும் இடியும் ஒரே சமயத்தில் நிகழ்வதாயினும் மின்னல்தான் முதன் முதலில் நம்மை வந்தடைகிறது. ஏனெனில் ஒளி வேகம் ஒலி வேகத்திலும் மிக அதிகம்.

வளிமண்டலப் பண்பும், கட்டமைப்பும் உயரே செல்லுந்தோறும் மாறுபடுகிறது. குத்துயரத்திற்கேற்ப இதனை நான்கு முக்கிய மண்டலங்களாகவும் அவற்றுக்கு இடையே மூன்று இடைப் பகுதிகளாகவும் பிரிக்கலாம். அவையாவன 1) ட்ரோபோஸ்ஃபியர் எனும் வெப்பம் தணிவுறும் திருப்ப மண்டலமும், அதன் மேல் ட்ரோபோபாஸ் எனும் திருப்ப இடைப்பகுதியும். 2) ஸ்ட்ரேடோ ஸ்ஃபியர் எனும் வெப்பச் சீரடுக்கு மண்டலமும் அதன் மேல் ஸ்ட்ராடோபாஸ் எனும் அடுக்கு இடைப் பகுதியும். 3) மெசோஸ்பியர் எனும் இடை மண்டலமும் அதன் மேல் மெசோபாஸ் எனும் இடைப்பகுதியும். 4) அயன மண்டலம் அல்லது வெப்ப மண்டலம்.

புறமண்டலத்திற்கு அப்பால் விளங்குவது காந்தமண்டலம். இதன் எல்லையாகத் திகழ்வது காந்த இடைப்பகுதி, வளிமண்டலத்திற்கு வெளியே உள்ள காந்த மண்டலமே புவியின் வேலியாகும். தாழ்வான படலமான திருப்ப மண்டலத்திற்கும் அதற்கடுத்த சீரடுக்கு மண்டலத்திற்கும் இடைப்பட்ட பகுதியே "திருப்ப இடைப்பகுதி". நிலநடுக் கோட்டிலிருந்து துருவப் பிரதேசங்களுக்குச் செல்லுந்தோறும் இதன் உயரம் தணிந்து வருகிறது. அதாவது வெவ்வேறு அட்ச ரேகைகளில் வெவ்வேறு உயரத்தில் இது அமைகிறது. இதற்கும் மேலாக 30 கி.மீ. தடிமனில் அமைந்ததே "சீரடுக்கு மண்டலம்" இப்படலத்தில் வெப்பநிலை ஒரே சீராக இருக்கிறது. எனவேதான் ஜெட் விமானப் போக்குவரத்திற்கு இது பயன்படுகிறது. –மனோரமா இயர்புக் 2003 லிருந்து

✸

## மூன்று மூன்று மூன்று

| | | |
|---|---|---|
| முக்கடவுள் | – | பிரம்மா, சிவன், திருமால் |
| முச்செயல் | – | படைத்தல், காத்தல், அழித்தல் |
| முந்நாடு | – | சேர, சோழ, பாண்டிய நாடுகள் |
| முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| முக்கனி | – | மா, பலா, வாழை |
| முச்சங்கம் | – | முதல், இடை, கடை |
| முப்பால் | – | அறம், பொருள், இன்பம் |
| முச்சுடர் | – | உதிரத்தீ, உயிர்த்தீ, சினத்தீ |
| முப்பிரி | – | ஆண், பெண், அலி |
| மும்மலம் | – | ஆணவம், மாயை, காமியம் |
| முக்காலம் | – | எதிர், நிகழ், இறந்த |
| முப்பிறப்பு | – | உம்மை, இம்மை, மறுமை |
| முச்சுரக்கு | – | சுக்கு, மிளகு, திப்பிலி |
| முக்குளம் | – | கங்கை, யமுனை, காவிரி |
| முக்காணம் | – | மனம், வாக்கு, காயம் |
| முக்குணம் | – | சாத்துவீகம், இராசதம், தாமதம் |
| முக்குற்றம் | – | காமம், வெகுளி, மயக்கம் |
| மூவெண்ணெய் | – | நெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் |
| மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை |

சென்னை-600 008

# வெள்ளுடை வேந்தர்
# சர். பிட்டி. தியாகராயர்

சர். பிட்டி தியாகராயர் தோன்றி மக்களுக்குத் தலைமை பூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத்தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை, பொருளாதாரத் துறை, அரசியல் துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்று அல்லும் பகலும் பாடுபட்டார் நம் தியாகராயர்!

"நாமிருக்கும் நாடு நமதென்று அறிய வேண்டும். இங்கு நாம் அடிமைகளாக வாழ்வது அடாது" என்பதை அவர் உணர்ந்தார்.

நமது பண்டைப் பெருமைகளையும் அவரால் உணர முடிந்தது.

அன்று தியாகராயர் மக்கள் முன்னேற வேண்டு மென்று பாடுபட்டதன் பலனை இன்று காண்கிறோம்.

தியாகராயர் பெரிய செல்வந்தர். பணம் படைத்தவர்.

தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சங்கள் ஈட்டியிருக்கலாம்.

ஆனால், அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால், சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும்.

பணத்தின் மதிப்பு இன்றிருப்பதைவிட, அன்று பன்மடங்கு உயர்ந்திருந்தது.

இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது.

அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர் நினைத்திருந்தால், சென்னை நகரையே தன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம்.

அவர் கூப்பிட்ட நேரத்தில் பணியாற்றப் பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக் கூடும்.

எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டு களித்து, உல்லாச வாழ்வு வாழ்ந்து, களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பது போல, தியாகராயரும் இருந்திருக்க முடியும்.



சர். பிட்டி. தியாகராயர் பிறந்தநாள்
ஏப்ரல் - 27

தியாகராயர் தம்முடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார்.

தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது.

அவர் அன்று பறக்கவிட்ட சமுதாய புரட்சிக் கொடியின்கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

– (பேரறிஞர் அண்ணா அவர்கள் 1950ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் தேதி திருவல்லிக்கேணி தியாகராயர் நினைவு நாள் கூட்டத்தில் ஆற்றிய உரை).

* * *



# கிராமப்புற வளர்ச்சியில் காளான் வளர்ப்பு

இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக கிராமிய வளர்ச்சி அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேற்றமடைந்தால் இந்தியா வளமான நாடாகும் என்பதில் ஐயமில்லை. கல்வி அறிவு, கிராமியத் தொழில்களின் முன்னேற்றம், சுகாதாரம் போன்றவை கிராம வளர்ச்சிக்கு ஆதாரத் தூண்களாக அமைந்துள்ளன. கிராமியத் தொழில்களில் ஒன்றாக விளங்கும் காளான் வளர்ப்பு, கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதோடு, மக்கள் ஆரோக்கியத்திற்கும் பயனுள்ளதாக விளங்குகிறது.

## கிராமத் தொழில்கள்

நம் நாட்டின் வளர்ச்சிக்குக் கிராமியத் தொழில்கள், ஒரு முக்கியமான பயனுள்ள அங்கமாக விளங்கு கின்றன. இத்தகைய கிராமத் தொழில்கள் இலாப கரமான முறையில் நடைபெற கிராமப்புறத்திற்கு ஏற்ற தொழில்நுட்பங்களைக் கையாளுதல் வேண்டும்.

* அது, செய்யும் பணிகளில் உள்ள சிரமங்களைக் குறைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

* கிராம மக்களுக்குப் புரியும் விதத்தில் எளிமையாக இருக்க வேண்டும்.

* உள்ளூரில் கிடைக்கும் பொருள்களை பயன்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும்.

* கிராம மக்களுக்கு நியாயமான வருவாய் கிடைக்கும் விதத்தில் இருக்க வேண்டும்.

* தொழில்நுட்பம் கிராம மக்களின் தொழில்திறன், பொருள்களின் உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் இருக்க வேண்டும்.

* உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குச் சந்தை இருக்க வேண்டும்.

கிராமத் தொழில்கள் சிறப்புறச் செயல்பட்டால் வேலையின்மையும், வறுமையும் நீங்க வாய்ப்புண்டு. இதனால் கிராம மக்களின் வாழ்க்கைத் தரமும், ஆரோக்கியமும் மேம்படும். அத்தகைய கிராமத் தொழில்களுள் ஒன்றாக விளங்குவது காளான் வளர்ப்பாகும்.

## காளான் வளர்ப்பு

கிராமப்புறத்திற்கு ஏற்ற தொழிலாகக் காளான் வளர்ப்பு அமைந்துள்ளது. பணிச்சிரமங்களைக் குறைக்கும் தொழிலாகவும் இது விளங்குகிறது. பண்ணை வைத்துள்ள விவசாயிகளுக்கு மக்காச் சோளக் கதிர் சக்கைகள், கரும்புச் சக்கை, வீணாகி விட்ட பஞ்சு, தேவையற்ற காகிதங்கள் போன்ற கழிவுப் பொருட்களால் அநேகத் தொல்லைகள் விளைகின்றன. காளான்கள் இத்தகைய கழிவுப் பொருட்களில் உற்பத்தியாவதால், கழிவுப் பொருட்களை சிறந்த முறையில் அப்புறப்படுத்தி சூழ்நிலை சுகாதாரத்தை மேம்படுத்தி, வருவாயைத் தரும் தொழிலாக விளங்குகிறது.

கிராமத் தொழில் சிறப்பாக நடைபெற வேண்டு மாயின் அத்தொழில்நுட்பம் கிராம மக்களுக்குப் புரியும் விதத்தில் எளிமையாக இருக்க வேண்டும். காளான்

வளர்த்தல் எளிமையானது. மற்றவர்களின் உதவியின்றி இக்காளான்களைப் பெண்களே கூட வீட்டில் வளர்த்துவிட முடியும். ஆகவே கிராம மக்கள், வேலையில்லா இளைஞர்கள், பெண்கள் போன்றோர் இத்தொழிலில் முனைப்புடன் ஈடுபட முடியும்.

உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைப் பயன் படுத்தும் விதத்தில் அமையும் கிராமத் தொழில்கள் நன்றாக நடைபெற முடியும். தமிழ்நாட்டுத் தட்பவெப்ப நிலையில் செயற்கை முறையில் வளர்ப்பதற்கேற்றவை சிப்பிக்காளானும், வைக்கோல் காளானும். காளான் பயிரிடுவதற்குப் பயன்படுத்தப்படும் படுக்கை, வைக்கோலால் ஆனது. விவசாய நாடாக விளங்கும் நம் நாட்டில், கிராமங்களில் வைக்கோல் எளிதாகக் கிடைக்கும் பொருளாகும். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகக் காளான் வித்துக்கள் ஆண்டு முழுவதும் பரவலாகக் கிடைக்கின்றன. வேளாண்மை மற்றும் பண்ணைத் தொழிலின் உபதொழிலாகக் கூட காளான் வளர்ப்பில் ஈடுபட முடியும். பெரிய அளவில் காளான் வளர்ப்பதற்கு மற்ற பயிர்களுக்குத் தேவைப்படுவது போல அல்லாமல் குறைந்த இடமே போதுமானதாகும்.



கிராமத் தொழில் என்பது குறைந்த முதலீட்டில் அமையும்படியானதாகவும், தொழிலில் ஈடுபடுவோருக்கு நியாயமான வருவாய் கிடைக்கும் விதத்திலும் இருக்க வேண்டும். காளான் வளர்ப்பு குறைந்த மூலதனத்தில் தொழில் செய்ய விரும்புவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பை நல்குவதாக அமைந்துள்ளது. காளான் வித்து, நெல் வைக்கோல், துவரம் பருப்பு, பாலிதீன் தாள், குறைந்த அளவு நீர், குறைந்த அளவிலான இடம் முதலான பொருட்களே காளான் வளர்ப்பிற்கு தேவைப்படுகின்றன. ஒரு காளான் படுக்கையிலிருந்து ஒரு வார கால இடைவெளிகளில் மூன்று அல்லது நான்குமுறை காளான்களை அறுவடை செய்யலாம். ஆதலால் வேறு விவசாயப் பயிர்களை விடக் காளான் வளர்ப்பின் மூலம் குறுகிய காலத்தில் அதிக இலாபம் பெற முடியும்.

காளான் வளர்ப்பிற்கு இன்று வரவேற்பு இருக்கின்ற காரணத்தால் சுயவேலை புரிய விரும்புபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. இலாபம் தரும் தொழிலாக விளங்குகின்ற காரணத்தால் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதோடு தனிநபரின் வருமானம் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. காளான் உணவு சுவை மிகுந்ததாக விளங்குகின்ற காரணத்தால் நகர்ப்புறங்களில் வணிகம் செய்து அதிக இலாபம் பெறலாம்.

காய்கறிகளைப் போல அல்லாமல் அதிக அளவில் உற்பத்தியாகும் நாள்களில் அவற்றை வெயிலில் உலர்த்திச் சேகரித்து வைத்துக் கொண்டு, சுவை மாறாமல் மீண்டும் பயன்படுத்த முடியும். மழைக் காலங்களில் மின்சார அடுப்பில் உலர்த்திப் பதப்படுத்தி வைக்கலாம். இதனால் இலாபம் கிடைக்கிறது.

காளான்கள் வளர்ந்து அறுவடை செய்யப்பட்ட பின்னர் காளான் படுக்கையில் எஞ்சியிருக்கும் கழிவுப் பொருள் தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் எருவாகப் பயன்படுகின்றன. மேலும் இக்கழிவைக் கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தலாம். மேலும் கோழிகளுக்குத் தீவனமாக விளங்குவதோடு, மீன் வளர்க்கவும் பயன்படுகிறது. இதனாலும் அதிகப் படியான வருமானம் அல்லது பயன் கிடைக்கிறது.

கிராமத் தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் சந்தை இருக்க வேண்டும். காய்கறி, இறைச்சி போன்றவற்றின் விலை உயர்ந்து விட்ட காரணத்தினாலும் காளான் உணவுகள் மாமிச உணவுகளின் தரத்தைக் கொண்டிருப்பதன் காரணத்தாலும் அனைவராலும் இவை விரும்பி



உண்ணப்படுகின்றன என்றாலும் இன்றைய நிலையில் காளானுக்கு விரிவான சந்தை இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் காளான் வளர்ப்பை மேற்கொண்டு முன்னேறலாம். அலோபதி மருந்துகள் பக்கவிளைவை ஏற்படுத்துகின்ற காரணத்தால் இன்று மக்கள் கவனம் "உணவே மருந்து, மருந்தே உணவு" எனும் கருத்திற்கிணங்க உணவுப் பழக்கங்களை மேற்கொண்டு வருகின்றனர். காளானில் உடலுக்குத் தேவையான சத்துப் பொருள்கள் இருக்கின்றன.

கல்வி, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றோடு மக்களுக்கு மிகவும் வேண்டுவது உடல் ஆரோக்கியமாகும். வறுமை கோட்டிற்குக் கீழ்வாழும் கிராம மக்களுக்கு விலை குறைந்த சத்து மிகுந்த உணவு அவசியமானதாகும். அது எளிமையாகக் கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இயற்கையில் கிடைக்கும் காளான்களில் நச்சுக் காளான்கள் இருக்க வாய்ப்பு உண்டு. எனவே, சுவை மிகுந்ததாக இருக்கும் காளான்கள் கிராமத் தொழில்களின் வாயிலாகக் கிராமங்களுக்குக் கிடைக்குமாயின் மக்கள் அதனை உண்டு பயன்பெறுவர்.



காளான் உணவாகப் பயன்படுவதோடு மருத்துவக் குணங்கள் மிகுந்ததாகவும் விளங்குகிறது.

**காளான்களில் மருத்துவப் பண்புகள்**

**பொதுவாகக் காளான் உணவில் நீர் 90.80 சதவிகிதம், கார்போஹைட்ரேட் 5.8 சதவிகிதம் சக்கைப் பொருள் 1 சதவிகிதம் தாதுப் பொருட்கள் 1–1½ சதவிகிதம் வரை உள்ளன. இவற்றில் இருக்கும் தாதுப் பொருட்களில் குறிப்பிடத்தக்கவை பொட்டாசியமும் பாஸ்பேட்டும் ஆகும்.**

சிப்பிக் காளான்களில் கொழுப்புச் சத்து, மாவுச் சத்து, சக்கை, சாம்பல், ஈரம் முறையே 0.36%, 5.3%, 1.10%, 1.00%, 89.30% என்ற அளவிலும் சக்தி திறன் 33.9 கிலோ கலோரிகளும் உள்ளது என்பதைக் கிராமியப் பல்கலைக்கழக உயிரியல் துறையில் கண்டறிந்து உள்ளனர்.

புரதச்சத்து நிரம்பிய காளான் உணவு இன்று உணவில் முக்கிய இடம் பெறுகிறது. உணவாக மட்டுமன்றி மருத்துவ ரீதியிலும் மிகுந்த பயனளிப்பனவாகக் காளான்கள் உள்ளன.

ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 70 கிராம் புரதச்சத்து உணவு அவசியமாகத் தேவைப் படுகிறது. இப்புரதச்சத்துக் குறையும்பொழுது ஆரோக்கிய வாழ்வினைப் பாதிக்கிறது என்றும் கூறப்படுகிறது. இந்தியர்கள் நாளொன்றுக்கு 6 கிராம் முதல் 8 கிராம் வரையிலான புரத உணவையே உட்கொள்வதாகத் தற்போதைய ஆய்வுகள் கூறுகின்றன. இன்று குழந்தைகள் பலரும் பெரியவர்களும் புரதச்சத்து குறைவினாலும் ஊட்டச்சத்துக் குறைவான உணவு முறையினாலும் பல நோய்களுக்கு ஆளாகின்றனர்.

உயிர்ச்சத்துக்களும், தாதுச் சத்துக்களும் நிறைந்து கொழுப்புச் சத்து குறைவாக இருப்பதால் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உணவாகவும், மருந்தாகவும் காளான்கள் பயன் படுகின்றன.

இதில் அதிக அளவு தாமிரச்சத்து இருப்பதன் காரணமாக மூட்டுவாதம் உடையவர்களுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. இது இதயக்கோளாறு நோய்களுக்கு மருந்தாகச் செயல்படுவது ஒரு சிறப்பு அம்சமாகும். மேலும் எலும்பு வளர்ச்சிக்கும், பற்களின் உறுதித் தன்மைக்கும் காளான்கள் உறுதுணை செய்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

காளான் உணவு இரத்தத்தில் மிகுந்து காணப்படும் கொழுப்பு உயர்வை குறைக்கிறது என்றும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த நாளங்களின் உட்பரப்பில் ஏற்படும் விரிவைத் தடுத்துப் பாதுகாப்பு அளிக்கின்றது என்றும் ஆய்வு ரீதியாகக் கண்டறிந்து உள்ளனர். காளானில் இருந்து "பி" வைட்டமின் தயாரிக்கப் படுகிறது. பெனிசிலியம் நொட்டேட்டம் காளானில் இருந்து கிடைக்கும். பென்சிலின் தடை செய்யும் எதிர் உயிரியாக (Antibiotics) உள்ளது. கிளவிசெப்ஸ் என்ற காளான் மிகவும் சிறிய அளவில் மருந்தாகப் பயன்படுகிறது.

இக்கால ஆய்வுகள் மட்டுமன்றி பழங்கால சித்தர் பாடல்கள் சில காளான்களின் மருத்துவக் குணத்தை எடுத்தோதுகின்றன.

புற்றுக்கா ளான் வலையைப் போலும் பொறிவரியை
உற்றெழுகா ளானென் றுரைக்குமவை – முற்றும்
பழுதின்று நற்குணமும் பண்ணுவன மாந்தர்
தொழுதின்று உண்பரெனச் சொல்"

– அகத்தியர் பதார்த்த குணசிந்தாமணி

இவை உடலுக்கு நன்மையைத் தரும் என்று கூறுவதோடு, சித்த மருத்துவ மருந்துகளாக அயம், காந்தம், மண்டூரம், தங்கம் முதலான உலோகச் செந்தூரங்களுடன் கலந்து கொடுக்க விரைவான பலன் கிடைக்கிறது. சோகை, காமாலை, இவற்றிற்கு மருந்தாகக் கொடுக்கலாம். விஷசுரம், அம்மை, காலரா முதலிய தொற்று வியாதிகள் பரவும் பொழுது அடிக்கடிக் காளான்களைக் கஷாயமிட்டுக் குடிக்கச் செய்தல் அந்நோய்களுக்குத் தடுப்பாக இருக்கும். மேலும் அடிபட்ட காயம், புண்களுக்கு இதை உலர்த்தித் தூள் செய்து தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து மேலே தடவி வர காயம் வேகமாக ஆறிவிடும். வெட்டுக் காயத்தினால், இரத்தம் பீறிட்டு நிற்காமல் வெளிவரும் சமயம் காளான் தூளை வைத்தால் உடனே இரத்தம் வெளிவருவது நின்றுவிடும் என்கிறார் மூலிகை மணி ஆசிரியர் ஏ.ஆர். கண்ணப்பன்.

கண் இமைகள் தானாகத் துடிப்பதற்கு மருந்தாக ஹோமியோபதி மருத்துவத்தில் இதனைப் பயன் படுத்துகின்றனர். முதுகுத்தண்டு வலி உடையவர்களுக்கும், டீ, காபி, சிகரெட் முதலான கெடுதல் பழக்கம் அதிகமாகி அதனால் ஏற்படும் இதய கோளாறுகளுக்கும் இது நல்ல பலனை அளிக்கிறது. தீராத பேதிகளுக்கும் டாக்டர் ஈ.பி.நேஷ் என்ற ஆங்கில ஹோமியோபதி மருத்துவர் இதனைக் கொடுத்துக் குணப்படுத்தியதாகக் கூறுகின்றார்.

இசுலாமியரின் யுநாநி மருத்துவ முறையைக் கூறும் "யுநாநி பதார்த்த குண விளக்க சார சங்கிரகம்" என்ற நூலில் காளான்களைப் பற்றிய மருத்துவச் செய்திகள் காணப்படுகின்றன. காளான் சாற்றைக் கண்களில் பிழிந்தால் கண்களில் உள்ள அழுக்கு நீங்கி ஒளியுடையதாகும். காளானின் பொடி பேதியைக் கட்டுப்படுத்துவதோடு, வயிற்றுக் கடுப்பையும் உதிரத்தையும் மாற்றும். காளானுடன் காடியையும் மீன் வச்சிரத்தையும் கூட்டி அரைத்து அண்டத்தில் பூச அண்டவலி நீங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கும் உணவுத் தேவையை ஓரளவு நிறைவு செய்யக் கூடியதாகவும் காளான் வளர்ப்பு விளங்குகிறது. இத்தொழிலில் இருக்கக்கூடிய சிறுசிறு குறைகளைப் போக்கி, தைரியத்துடனும் முனைப்புடனும் ஈடுபட்டால் குறைந்த முதலீட்டில் சுயதொழில் செய்து முன்னேற முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

– "கிராம உலகம்"
என்ற நூலிலிருந்து.

* * *

## சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை உயர்நீதிமன்றம் கட்டிமுடிக்க அக்காலத்தில் செலவான தொகை 16 இலட்ச ரூபாய். இங்குப் பதவியேற்ற முதல் இந்திய நீதிபதி சர்.தி.முத்துசாமி. இதில் அமைக்கப்பட்டிருந்த கலங்கரை விளக்கின் உயரம் 160 அடி. இதன் அருகில் உயரமான கல்தூண் ஒன்று உள்ளது. அதில் எண்ணெய்யைக் கொண்டு அக்காலத்தில் விளக் கேற்றினர். 1952ஆம் ஆண்டு வரை எண்ணெய்தான் விளக்கு எரிக்கப் பயன்பட்டது. 1892இல் கட்டிமுடிக்கப்பட்ட இந்நீதிமன்றத்தில் 1952க்குப் பின்னரே மின்சாரம் பயன்படுத்தப்பட்டது.





# காசநோயும் – தடுப்புமுறைகளும்

மனித இனம் இயற்கையால் வரக்கூடிய ஆபத்துகளிலிருந்தும், செயற்கையாக நிகழக்கூடிய விபத்துகளிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி அடைந்துள்ளது. அம்மை (Small pox) போன்ற மிகக் கொடிய நோயிலிருந்து முழுமையாகத் தன்னைப் பாதுகாப்பதில் வெற்றி கொண்டுள்ளது. விஞ்ஞான முன்னேற்றம் உச்சத்திலிருக்கும் இந்த யுகத்திலும், மனித இனத்தை பாதித்து, அழித்து வருவதில் காசநோய் முன்னணி வகிக்கிறது. இதுவரை நடந்த இரண்டு உலகப் போர்களினால் மரணம் அடைந்தவர்களைவிட உலக அளவில் காசநோயின் பாதிப்பினால் இறந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். நிமிடத்திற்கு ஒருவர் உலகத்தின் எந்த மூலையிலாவது காசநோயின் பாதிப்பினால் இறந்து கொண்டிருக்கிறார் என்ற உண்மை நம்மையெல்லாம் உறைய வைக்கும் செய்தியாகும்.

காசநோய் மைகோபேக்டீரியம் ட்யூபர்குளோசிஸ் (Mycobacterium Tuberculosis) என்னும் கிருமியால் உண்டாகும். காசநோய் பாதிப்பினை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. நுரையீரல் காசநோய் (Pulmonary) 2. நுரையீரல் நீங்கிய மற்ற பகுதிகளில் உண்டாகும் காசநோய் (Extra Pulmonary).

நுரையீரலைப் பாதிக்கும் காசநோய் இவற்றுள் மிகவும் முக்கியமானதாகும். காசநோயினால் நுரையீரல் பாதிக்கப்படும் நோயாளிக்கு இருமல், சளி அதிகமாக ஏற்படுகிறது. அவ்வாறு உண்டாகக்கூடிய சளியை சாதாரண முறைகளைப் பின்பற்றாமல் காசநோயாளிகள் கண்ட இடங்களில் துப்புவதாலும் மற்றவர்கள் முன்னிலையில் எவ்வித தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்காமல் இருமுவதாலும், காசநோய் கிருமிகள் காச நோயாளிகளிடமிருந்து மற்றவர்களுக்குக் காற்றின் மூலம் சிறு துகள் வடிவில் (broplet-nuclear) பரவி, நோய்த் தொற்றினை (Infection) ஏற்படுத்துகிறது. இவ்வாறு பெறப்பட்ட நோய்த் தொற்று முதலில் பாதிக்கப்படுபவரின் நுரையீரலை, பின்னர் இரத்தம் மற்றும் நிண நீர்ப் பாதைகளின் வழியாக உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவ ஏதுவாகிறது.

### காசநோய் அறிகுறிகள்

காசநோய் பாதிப்பு (disease) ஒருவருக்கு உண்டாகும் பட்சத்தில் அவருக்குக் கீழ்க்கண்ட அறிகுறிகள் தென்படலாம்.

பசியின்மை, எடை குறைதல், காய்ச்சல், சளி, இருமல் (குறிப்பாக தொடர்ந்து 3 வாரங்களுக்கு இருந்து வரும் இருமல்), சளியில் இரத்தம் கலந்து வெளிப்படல் (Hoemoptysis), மூச்சுத் திணறல், நெஞ்சு வலி ஆகியன.

நுரையீரல் மட்டுமன்றி தலை முதல் கால் வரை, வெளிப்புற தோல் முதல் உட்புற எலும்பு வரை எத்தகைய உடல் உறுப்பையும் காசநோய் பாதிக்கக்கூடிய வீரியமிக்க கிருமியாக விளங்குகிறது. இவ்வாறு நுரையீரல் நீங்கிய பிற உறுப்புகளில் காசநோய் பாதிப்பு (Extra Pulmonary Disease) ஏற்படும்போது, பாதிக்கப்படும் உறுப்புகளின் செயல்பாட்டிற்கேற்ப நோயின் அறிகுறிகள் தென்படும். உதாரணத்திற்கு, கழுத்திலுள்ள நிணநீர்க் கட்டிகள் பெரிதாகுதல், உடைந்து சீழ் உண்டாகுதல், நுரையீரல், இருதயம் மற்றும் மூளை ஆகிய உறுப்புகளைப் பாதுகாக்கும் உறைகளில் நீர்கோர்த்துக் கொள்ளுதல் (T.B.Effusion, Meningitis, Pleuritis and Pericarditis) உடலின் பல்வேறு பகுதிகளிலுள்ள நிணநீர்க் கட்டிகளை பாதித்தல் (T.B. Adonopathy), வயிற்றின் உட்புறம் உறுப்புகளைப் பாதித்தோ, உட்புறம் கல்லினைப் பாதித்தோ (Organomegaly, Adenopathy, T.B. peritonisis and Ascities) காசநோய் பாதிப்பு ஏற்படுத்துதல் மற்றும் மூட்டுக்களையோ சதைச் சுற்றியுள்ள சவ்வுப் பகுதியையோ (T.B. Snnoritis & Arthoritis) எலும்புகளைப் பாதித்தல் (T.B. Osteomyeltis) மற்றும் உடலின் வெளிப்புற தோல், கண், காது ஆகிய உறுப்புகளையும் பாதிக்கும் வல்லமை மிகுந்ததாக காசநோய் விளங்குகிறது.

## காசநோயின் அறிகுறிகள்



3 வாரங்களுக்கு மேல் இருமல்



தொடர்ந்து சளி



காய்ச்சல்



பசியின்மை மற்றும் எடை குறைதல்



நெஞ்சுவலி

### காசநோயைக் கண்டறியும் முறை

காசநோய் பாதிப்பு ஒருவருக்கு ஏற்பட்டு உள்ளதா இல்லையா என்பதை நிர்ணயம் செய்ய கீழ்வரும் பரிசோதனைகள் முக்கியமானவை.

1. சளிப் பரிசோதனை (3 தொடர்ச்சியான சளி மாதிரிகள்)

2. மார்பு எக்ஸ்ரே பட பரிசோதனை (x-ray chest)
3. காசநோய் தோல் பரிசோதனை ஊசி (Mantoux).

இவை தவிர நுரையீரல் நீங்கிய மற்ற உறுப்புகளை காசநோய் பாதிக்கும்போது Culture, FNAC, Biopsy ஆகிய பரிசோதனைகளை மேற்கொண்டு காசநோய் பாதிப்பினை உறுதி செய்யலாம்.

### இந்திய நாட்டில் காசநோயின் தாக்கம்

இந்தியாவில் ஏறக்குறைய 140 இலட்சம் பேர் காசநோயின் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இவர்களில் 25 சதவிகிதம் பேர் சளியில் காசநோய் கிருமிகளை வெளியேற்றக்கூடிய அளவுக்குத் தீவிர நோயாளிகளாக உள்ளனர். இத்தகைய நோயாளிகளை முறையாகக் கண்டுபிடித்து வைத்தியம் தரப்படாத பட்சத்தில் இவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு நோயாளியும் 10 லிருந்து 15 நபர்களுக்குக் காசநோய் பரப்பும் வல்லமை படைத்தவர்களாக இருக்கிறார்கள். காசநோயின் பாதிப்பினால் ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் பேர்கள் இந்தியாவில் மரணமடைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### திருத்தியமைக்கப்பட்ட தீவிர காசநோய் தடுப்புத் திட்டமும், நேரடி குறுகிய கால சிகிச்சை முறையும் (RNTCP & DOTS)

இந்தியா மட்டுமல்லாமல் சர்வதேச அளவில் காசநோயின் பாதிப்பு குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளில் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் 1993 ஆம் ஆண்டு காசநோய்க்கு எதிராக உலக அளவிலான அவசர நிலையைப் பிரகடனம் செய்தது.

காசநோயைக் கண்டுபிடிக்கும் முறைகளிலும், சிகிச்சை செய்வதிலும், சிகிச்சையில் இருப்பவர்களைக் கண்காணிப்பதிலும், தொடர்ச்சியாக அவர்களுக்கு மருந்துகள் கிடைக்கச் செய்வதிலும் புதிய உத்திகளை அது அறிமுகப்படுத்தியது. இதில் முக்கியமானது நேரடி குறுகிய கால சிகிச்சை முறையாகும். இதில் காசநோயாளியைக் குணப்படுத்தும் பொறுப்பு சுகாதாரப் பணியாளர்கள்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காசநோய் பாதிப்புக்கு ஆளானவர்களை விரைவில் கண்டறியும் வகையில், குறிப்பாக மற்றவர்களுக்குக் காசநோயைப் பரப்பும் சளியில் கிருமியுள்ள நுரையீரல் காசநோயாளிகளை (Pulmonary T.B. patients) விரைவில் கண்டறியும் வகையில் முச்சளிப் பரிசோதனைக்கு (3 sputum smear for AFB) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நுண்ணோக்கியின் மூலம் (Microscope) சளிப் பரிசோதனை செய்து காசநோயாளிகளைக் கண்டறிவது, திருத்தியமைக்கப்பட்ட காசநோய் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நேரடி குறுகியகால சிகிச்சை முறையின் முக்கிய அங்கமாகும். மேலும் காசநோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டவர்களுக்குத் தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சை கிடைப்பது, அந்த மருத்துவ சிகிச்சையை (T.B. Treatment) சுகாதாரப் பணியாளர்களின் நேரடிப் பார்வையில் கிடைக்கச் செய்வது (Supervised Chemotherapy) சிகிச்சையின்போது நோயாளிகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அனைத்து நோயாளிகளும் நோயிலிருந்து விடுபடச் செய்வது (cure) இவை யாவற்றுக்கும் அரசாங்கத்தின் ஆதரவை இடைவிடாமல் கிடைக்கச் செய்வது ஆகியன திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் பல்வேறு செயல்கோட்பாடுகளாகும்.

### காசநோய் தடுப்பில் பொதுமக்களின் கடமைகள்

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் பிறந்தவுடன் பி.சி.ஜி (காசநோய்) தடுப்பு ஊசி கிடைக்கச் செய்வது. (Neonatal Zero Immunisation)

2. காசநோய் அறிகுறிகள் எவருக்கேனும் தெரியவரும்பட்சத்தில் அருகிலுள்ள பரிசோதனை மையத்திற்குச் சென்று பரிசோதனைக்கு உட்படுவது.

3. காசநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட காலம் முடியும் வரை முழுமையான சிகிச்சையை நேரடி மேற்பார்வையில் எடுத்துக் கொள்ளுதல்.

4. காசநோயாளிகள் இருமல் வரும்போது கைக்குட்டை அல்லது துண்டு மூலம் வாயை மூடிக் கொள்வதால் (Cough Hygiene) காற்று வழியே காசநோய்க் கிருமிகள் மற்றவர்களுக்குப் பரவுவதைத் தடுக்கலாம்.

5. வெளிவரும் சளியினை மருந்து கலந்த குவளையிலோ, மெழுகு தடவிய காகித கோப்பைகளிலோ, சேகரித்து, சுகாதார முறைப்படி கிருமி நீக்கம் செய்து அல்லது எரித்து, நோய் மற்றவர்களுக்குப் பரவுவதை தடுத்திட வேண்டும்.

6. காசநோய் முற்றிலுமாக தவிர்க்கப் படக்கூடிய மற்றும் முழுமையாக குணப்படுத்தக்கூடிய நோய் என்பதை உணர்ந்திட வேண்டும்.



### திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தில் தமிழகத்தின் பங்கு

காசநோய் தடுப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழக அரசு முழு மூச்சுடன் உலக வங்கி ஆதரவுடன் செயல்பட்டுவரும் திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தை தமிழகம் முழுவதும் பயன்பெறும் வகையில் சிறப்பாக நடத்தி வருகிறது. சிறு கிராமம் முதல் பெரிய நகரங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின் பலன்கள் காசநோயாளிகள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதன் துணை நிறுவனங்கள், தாலுகா, மாவட்ட அரசு மருத்துவமனைகள், மாவட்ட காசநோய் மருத்துவ மையங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ளிட்ட அனைத்து மருத்துவ மனைகளிலும் காசநோயைக் கண்டறியவும் சிகிச்சை யளிக்கவும் வல்ல நேரடி குறுகிய கால சிகிச்சை முறை (Dots) அமல்படுத்தப்பட்டுள்ளது. இதை அனைத்துத் தரப்பு மக்களும் உணர்ந்து பயன்பெறும் வகையில் தகவல், காசநோய் விழிப்புணர்வு மற்றும் அது பற்றிய செய்திகள் மக்களைச் சென்றடையும் வகையில் அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. இந்த கூட்டு முயற்சியைத் திறம்பட செய்துவரும் தமிழக அரசின் பணிகள் விரைவில் நல்ல பலனளிக்கும் என்று தற்போது தெரியவந்துள்ள (Case detection rate) நோயாளிகள் கண்டறியும் திறன் மற்றும் அவர்களைக் குணப்படுத்தும் விகிதாசாரம் (cure rate) ஆகியன தெரிவிக்கின்றன. தமிழக அரசின் இந்த சீரியப் பணிக்கு மக்களின் முழு ஒத்துழைப்பும் காசநோய் பற்றிய விழிப்புணர்வும் துணைபுரியும் என்று பெரிதும் நம்புகிறோம்.

*– இயக்குநர்,*
*அரசினர் நெஞ்சக நோய் மருத்துவ நிலையம்,*
*சென்னை.*

கட்டுரை வடிவம் : டாக்டர் ஆர். ஸ்ரீதர்

* * *

# சங்க இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்

□ மு. ஜோதி

ஆதி மனிதன் எப்பொழுது சிக்கிமுக்கிக் கற்களின் பயன்பாட்டை அறிந்தானோ அன்றே அறிவியல் தொடங்கிவிட்டது எனலாம். அவ்வாறு தொடங்கிய அறிவியல் இன்று எந்த அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. இன்றைய அறிவியல் வளர்ச்சியின் அடித்தளத்தை அன்றைய இலக்கியங்களில் காண்பது வியப்புக்குரியது. பலநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றி இலக்கியம் கண்டது தமிழ் மொழி ஆகும். தமிழ் மொழியின் இலக்கியங்களிலே தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது சங்க இலக்கியம் ஆகும். இச்சங்க இலக்கியத்தில் அறிவியல் செய்திகள் நிரம்பக் கூறப்பட்டுள்ளன. இதில் கூறப்பட்டுள்ள அறிவியல் செய்திகள் அனைத்தும் இன்று அறிவியல் அறிஞர்கள் வியந்து ஒத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல அறிவியல் மணிகள் பொதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சங்ககால இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள அறிவியல் செய்திகளில் சிலவற்றை இக்கட்டுரை எடுத்தியம்ப உள்ளது. இயற்பியல், வானியல் பற்றி கருத்துகள் இடம் பெற்றுள்ளமையும், தாவரங்கள், விலங்குகள் பற்றிய அரிய செய்திகளும், மனிதனைப் பற்றிய உளவியல் மற்றும் மகப்பேறு பற்றிய செய்திகளும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

எந்தவொரு கூற்றினையும் புதிதாகக் கண்டு பிடிப்பதற்கு முன்னர் அதைப்பற்றிய கருத்துருவாக்கம் நம் மனதில் தோன்றும். அக்கருத்துருவாக்கம் வளர்ந்து புதுமைகள் பல பெற்று நிற்கும்பொழுது புதிய கண்டுபிடிப்புகள் உருவாகின்றன. மகாகவி பாரதியாரின் "காசி நகர்ப்புலவர் தம் உரைதனைக் காஞ்சியில் கேட்பதற்குக் கருவிகள் செய்வோம்'' என்ற பாடல் வரிகள் தொலைபேசிக்கு வடிவமைத்தன என்று கூறமுடியாவிட்டாலும் அதைப் பற்றிய கருதுகோள் அக்கருவி கண்டுபிடிப்பதற்கு முன்னரே சிந்தனையில் எழுந்தது என்று கூறலாம்.

## நியூட்டனின் இயக்க விதிகள்

நியூட்டன் மூன்று விதிகளைக் கண்டறிந்தார். அவை விசையின் வேகம் பற்றியதாகும்.

1. ஒரு பொருளின் புடைபெயர்ச்சி பிற விசை தாக்கப்படாத நிலையில் மாற்றமின்றி அமையும்.
2. திசைவேகம் பொருளின்மீது தாக்கும் விசையைப் பொறுத்ததாகும்.
3. ஒவ்வொரு தாக்குதலுக்கும் சமமான மறு தாக்குதல் உண்டு.

இவ்விதிகளில் இரண்டாவது விதியானது விசையை அளப்பதற்கு உதவியாக அமையக்கூடியதாகும். ஒரு நேர்க்கோட்டில் செல்லும் விசையானது குறிப்பிட்ட ஒரு பொருளின் மீது தாக்கும்போது அந்த விசை வேகம் மாறுபடும் அல்லது குறையும்.

இவ்வடிப்படையில் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வல்வில் ஓரியின் வில்லாற்றலைப் புகழ்ந்து கூறும்பொழுது, எய்த வில்லானது யானை, புலி, புள்ளிமான், பன்றி, உடும்பு போன்றவற்றை வீழ்த்தியதாகக் கூறுகிறார் வன்பரணர்.

*"வேழம் வீழ்ந்த விழுத் தொடைப்பகழி*
*பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்*
*புழல்தலைப் புகர்கலை உருட்டி உரல்தலைக்*
*கேழல், பன்றி வீழ அயலது*
*ஆழற் புற்றகத்து உடும்பில் செற்றும்*
*வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்''*

(புறம் 152)

இவ்வில்லின் வேகம் குறைந்து ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தாக்கிச் சிறிய உயிரினைத் தாக்கி விசை நிலைபெற்றது என்று கூறும்பொழுது இரண்டாவது விதி பொருந்தியுள்ளது. மேலும்,

*"பேரியாற்று*
*நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்''*

(புறம் 192)

என்ற இப்பாடலில், ஆற்றின் வழியே செல்லும் தெப்பமானது நீரின் விசையை மட்டும் பெற்றுச் செல்கின்றது. இதில் வேறு விசை ஏதும் தாக்கப்பெறவில்லை. அதுபோல் வாழ்க்கை ஒரு சீராகச் செல்ல வேண்டும் என்று கூறப்பெற்றுள்ளது. இதிலும் இரண்டாவது விதியான ஒரு பொருளின் மீது செயல்படும் தாக்கு விசையானது அத்தாக்கு விசையின் திசையிலேயே அப்பொருள் செயல்படும் என்கின்ற இவ்விதியைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது.

## வானியல் கருத்துகள்

சங்கச் சான்றோர் வானியல் அறிவினையும் பெற்றுத் திகழ்ந்திருந்தனர் என்பதை வானில் ஓர் எல்லைக்கப்பால் காற்று செயல்படா நிலையையும், வால்மீன் பற்றியும் கூறியிருப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

*"வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்''* (புறம்.365)

என்ற புறநானூற்றுப் பாடலடி வானில் ஓர் எல்லைக்கப்பால் காற்று செயல்படாத நிலையைக் கூறுகிறது.

பண்டைத் தமிழர்களோ ஏழு விண்மீன்களை ஏழு பத்தினிக் கடவுளாக வணங்கி வழிபட்டனர் என்பதை,

*"வடவயின் விளங்கா லுறையெழு மகளிருள்*
*கடவுள் ஒருமீன் சாலினி''*

(பரிபா – 5)

என்ற பரிபாடலடி உணர்த்துகிறது.

## தாவரவியல்

சங்க இலக்கியத்தில் பலவகையான செடி கொடிகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தாவரங்களைப் பற்றிக் குறிக்கும் பொழுது பல்வேறு அறிவியல் செய்திகளையும், அவற்றின் சிறப்புத் தன்மையைத் தனிப்படவும் பாடியுள்ளனர். சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள தாவரங்களைச் செடி நூற்படி எவை என அறுதியிட்டுக் கூற அவற்றைப் பற்றிச் சங்க நூல்களில் காணப்படும் செய்திகளே உதவுகின்றன. செடிகள் இயற்கை நிலையில் வாழுமிடம், வளரும் சூழ்நிலை ஆகியவற்றைத் திணையடிப்படையாகச் சங்க நூல்களில் பல பாடல்கள் விளக்குகின்றன. செடிகளின் வேர், இலை, பூ, காய் முதலியவற்றைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. இச்செய்திகளைச் செடி நூலில் கூறப்பட்டுள்ள செய்திகளோடு ஒத்திட்டு ஆராய்ந்து



பார்க்குங்கால் சங்க நூல்களில் சொல்லப்பட்ட செடிகள் எவை எனக் கண்டுபிடிக்க முடிகின்றது.

## மகரந்தச் சேர்க்கை

மகரந்தச் சேர்க்கை பற்றிய செய்தி நற்றிணைப் பாடல் ஒன்றில் அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. நறவம் என்பது ஒரு கொடி. அதன் மலர் வெண்மை நிறமுடையதாகவும், பூ சிவப்பு நிறவரிகளுடனும், மிகுந்த வாசனை உடையதாகவும் இருக்கும். வண்டுகள் நறவம் பூவின் அழகாலும் மணத்தாலும் ஈர்க்கப்பட்டு வரிகளின் வழியே தேனை உறிஞ்சித் திரும்புகின்றன. அப்போது அதன் உடல் பொன்னிறமாகக் காணப்படுகிறது. கருநிறமாக இருந்த வண்டு பூவில் நுழைந்து வெளியே வந்தபின் பொன்னிற மகரந்தம் பூசப்பட்டுப் பொன்னிறமாகிறது. இஃது உரைகல்லில் பொன்னைத் தேய்த்ததைப் போலிருக்கின்றது என்று உவமிக்கப்பட்டிருக்கிறது. இவ்வண்டு பிறிதொரு மலரை நாடும் போது மகரந்தச் சேர்க்கை நடைபெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

*"அவ்வளை வெரிநின் அரக்கீர்த் தன்ன*
*செவ்வரி யிதழ சேணாறு நறவின்*
*நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்*
*பொன்னுரை கல்லி னன்னிறம் பெறூஉம்''*

(நற்.25)

இந்நற்றிணைப் பாடலில் நறவம் பூவும், வண்டு மகரந்தம் பூசப்படுதலும் அழகாக வருணிக்கப் பட்டுள்ளது. இந்த வருணனையில் அறிவியலை எவ்வாறு புகுத்தியிருக்கிறார் என்பதை நோக்க வேண்டும். நறவம் பூவின் சிவப்பு வரி வண்டிற்குத் தேனிருக்கும் இடத்தைக் காட்டுவதற்கு அமைந்திருப்பனவாக இன்றைய செடி நூலாசிரியர்கள் கூறுகின்றனர். மேலும் இரவு மகரந்தச் சேர்க்கை விலங்குகள், பறவைகள் மூலம் ஏற்படும் மகரந்தச் சேர்க்கை பற்றிய செய்திகளும் காணக்கிடக்கின்றன.

*"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய*
*நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்''*

(புறம். 280)

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் இரவு நேர மகரந்தச் சேர்க்கை பற்றி கூறுகிறது.

### புல்லுருவித் தன்மை

புல்லுருவித் தன்மை என்பது சில செடிகளின் வேர்கள் பிற செடிகளின் தண்டுகளில் ஊடுருவிப் பாய்ந்தோ அல்லது வேர்களில் புகுந்தோ அச்செடிகள் ஆக்கும் உணவைக் கவரும் தன்மையைக் குறிப்பதாகும். இப்புல்லுருவித் தன்மை கொண்டது சந்தன மரமாகும்.

சந்தனமரம் பிற மரங்களின் கொடிகளின் வேர்களிலிருந்து உணவைப் பெற்று வைரம் பாயும் தன்மையுடையது. வைரம் பாயாமல் சந்தனம் நறுமணமெய்தாது என்பது நற்றிணைப் பாடல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"குறவர் கொற் குறைக்கொடி நறைப்பவர்*
*நறுங்காழாரஞ் சுற்றுவன வதைப்ப''*

(நற் –5)

ஏனைய மரங்கொடிகளிவற்றின் வேர் சந்தன வேரோடு முயங்காத வழித் தனித்துள்ள மரம் நறுமணமெய்தாது என்ற செய்தியை இதன் மூலம் காண முடிகிறது.

### விலங்கியல்

சங்கப் புலவர்கள் இந்தச் சூழலில் இந்த விலங்கு, பறவை வாழும் எனக்கருத்தில் கொண்டு அந்நிலப்



பாடலுக்கு அவற்றை மட்டும் பயன்படுத்திப் பாடும் கருப்பொருள் அமைப்புக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். விலங்குகளில் அவற்றின் தன்மைகளுக்கேற்பப் பல்வேறு வகைகளாக வகைப்படுத்திக் காட்டப்பெறுகின்றன. விலங்கினங்களில் வகைகளைக் கூறுவதோடு சில அரிய விலங்குகளின் பெயர்களையும் சுட்டிக் காட்டியுள்ளனர். நீலகிரிக் கருங்குரங்கு, வருடை யாடு, மலைக்கீரி, காட்டெருமை போன்றன சிலவாகும். இவற்றையெல்லாம் நுணுகிக் கண்டு அவற்றின் வகைப்பாட்டை துல்லியமாகத் தெரிவித்துள்ளனர்.

### மான்கொம்பு

மானுக்குக் கொம்பு முளைப்பதும், கிளை விடுவதும், வளர்வதும், உதிர்வதும், திரும்ப முளைப்பதும் ஆகிய செயல்களை இன்றைய அறிவியல் வல்லார் கண்டறிந்து உரைத்துள்ளனர். இதனை அன்றே சங்கப் புலவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

*"கலைமான் தலையில்முதன்முதல் கவர்ந்த*
*கோடல்அம் கவட்ட குறுங்கால் உழிஞ்சில்''*

(அகம். 151, 78)

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகள் கலைமானின் தலையில் முதன்முதலாகத் தோன்றிய கவர்த்த கொம்பு





போல உழிஞ்சில் மரத்தில் கவையான கொம்பு இருந்ததாகக் கூறியிருப்பதைக் காணமுடிகிறது. கலை மானின் கொம்பு முதலில் தோன்றும்போது ஒரே ஒரு கவையாகக் காணப்படும் என்பதைத் தெளிவாகக் கூறியிருப்பது அரிய செய்தியாகும்.

கலைமானிற்குப் புல் நிறைந்த செழிப்பான காலத்தில் கொம்புகள் நன்றாக வளர்கின்றன. பின்னர் வறட்சிக் காலத்தில் கொம்புகள் உதிர்ந்து விடுகின்றன என்ற செய்தியை

*"இறுகுபுல் மேய்ந்த அறு கோட்டு முற்றல்*
*அள்ளல் ஆடிய புள்ளி வரிக் கனல்*

(நற்.265)

என்ற நற்றிணைப் பாடலடி கூறுகிறது. அறுகோட்டு முற்றல் என்று கூறுவது கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்றாகும். முற்றிய கொம்பு அறுந்து வீழ்கின்றது என்பதைத் தெரிந்தே முற்றல் என்று கூறியிருக்கின்றனர்.

*"புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி*
*அறு மருப்பு ஒழித்த தலைய தோல்பொதி*
*மறுபருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்''*

(அகம்.291)

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகள் கொம்புதிர்த்துத் தலையில் புதியதாக வளரும் கொம்பு மறுகொம்பு என்பதைத் தெளிவாகக் காட்டவே மறுமருப்பு என்றும் அந்தக் கொம்பு இளங்கொம்பு என்றும் கூறியுள்ளது.

### தும்மலிடும் விலங்கு

நவ்வி மான்கள் ஏதாவது தங்களுக்கு ஊறுவரும் என்று எதிர்பார்க்குங்கால் ஒரு முறையான தும்மல் போன்ற ஓசையை எழுப்பும். "இந்தி மொழியில் தும்மலிடும் விலங்கு என்ற பொருளில் இதை Chinkara என்றழைக் கின்றனர்".

"இன்சிலை ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி''
(அகம்.7)

என்ற அகநானூற்றுப் பாடலடியில் வரும் "நாறுயிர் நவ்வி'' என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். வெளிப்படுத்தும் மூச்சு என்ற பொருளில் நாறுயிர் என்ற சொல் நவ்வி மான்கள் வெளியிடும் தும்மல் ஓசையைக் குறிக்கின்றது எனத் தெரிகிறது.

### உளவியல்

தலைவன் இல்லாத போது தலைவி படும் துன்பங்களைப் பற்றியும் அவள் உறும் அவலங்களைப் பற்றியும் கூறும் சங்க இலக்கியச் செய்யுள்கள் தலைவியின் மனநிலையினைப் படம் பிடித்துக் காட்டக் கூடியன. அவை உளவியல் அறிஞர்கள் கூறும் கருத்துகளோடு தொடர்புடையவையாக உள்ளன.

*"கவலை யாத்த அவல நீளிடைச்*
*சென்றோர் கொடுமை யெற்றித் துஞ்சா*
*நோயினு நோயாகின்றே*

(குறுந்.224)

தோழியின் வருத்தத்தைக் கண்ட தலைவி நான் தலைவனின் பிரிவு நோயை ஒருவாறு ஆற்றுவேன். ஆயினும் என்னிலைக்குப் பெரிதும் வருந்தி நிற்கின்ற இத்தோழியின் நிலையே எனக்கு ஆற்ற ஒண்ணாத் துன்பத்தைத் தருகிறது என்று தலைவியின் மன உளைச்சலை இக்குறுந்தொகைப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

– *"பல்துறைத் தமிழ்" நூலிலிருந்து*

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

# சுற்றுலா இடங்கள்

தமிழ்நாட்டின் மையப்பகுதியாக அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் சிறந்த சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. சிற்பக்கலை சிறப்புமிக்க புண்ணியத் தலங்களாகிய மலைக்கோட்டை உச்சிபிள்ளையார் கோயில், திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருப்பட்டுர், திருவள்ளரை திருக்கோயில்கள், சமயபுரம் மாரியம்மன் கோயில்களும், நூறாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க கிருத்துவ வழிபாட்டுத்தலமாகிய புனித லூர்து அன்னை ஆலயம், இஸ்லாமிய வழிபாட்டுத்தலமாகிய பழம்பெருமையுடைய "நதர் வலி தர்கா" ஆகியவை இங்கு ஒருங்கே அமையப்பெற்றுள்ளன. இக்கோயில்கள் நம் நாட்டினரை மட்டுமல்லாது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் அதிகம் கவரும் வண்ணம் அமைந்துள்ள அழகுமிகு கலைக்கூடங்களாகும்.

இவைகளன்றி சிறந்த பொழுதுபோக்கு இடங்களாக முக்கொம்பு, பச்சமலை, புளியஞ்சோலை ஆகியவை சுற்றுலாவிற்கு சிறந்த இடங்களாக உள்ளன. இதுவரை எழில்மிக்க பொழுது போக்கு பூங்காவாக முக்கொம்பை பார்த்து மகிழ்ந்த சுற்றுலாப் பயணிகள் இனி அறிவியல் பூங்காவாகவும் பார்த்து மகிழலாம். முக்கொம்பை பார்க்க வரும் பார்வையாளர்கள் சில அறிய தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் தமிழக அரசு ரூ.4 இலட்சம் செலவில், "அறிவியல் பூங்கா" ஒன்றையும் இங்கே அமைத்துள்ளது. இதன் மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்பெற தமிழக அரசால் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

அடுத்த சிறந்த சுற்றுலாத் தலமாக கருதப்படுவது கொல்லிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள "புளியஞ்சோலை" ஆகும். திருச்சிராப்பள்ளியிலிருந்து துறையூர் வழியாக 72 கி.மீ. தொலைவிலுள்ள இயற்கை எழில் சூழ்ந்த இடம் புளியஞ்சோலை. இது நீரோடை பெருமை மிக்கது. கொல்லிமலையிலிருந்து வரும் "ஆகாசகங்கை" நீர்வீழ்ச்சி, நீரோடையாக வழியில் மலை கிராமங்களைக் கடந்து, புளியஞ்சோலை வழியாகத் தவழ்ந்து செல்கிறது. இந்த நீரோடை மருத்துவ குணம் உடையது. குளிர்ச்சி மிக்கது. ஆண்டு முழுவதும் இந்த நீரோடை புளியஞ்சோலையைக் குளிர்வித்துக் கொண்டிருக்கும்.

பூஞ்சோலையாகத் திகழும் புளியஞ்சோலையில் கனிவகைகளுக்கும், தானிய வகைகளுக்கும் குறைவில்லை. கொய்யா, பலா போன்ற கனி வகைகளும், நெல், சோளம், தினை, கடுகு போன்ற தானிய வகைகளும் இங்கு பயிராகின்றன. கண்களுக்குக் குளிர்ச்சியும் மனதிற்கு மகிழ்ச்சியும் தரும் இயற்கை எழில்சூழ்ந்த பசுமையான நிறமுள்ள பலவகை மரங்களும், புளிய மரங்களும் நிறைந்துள்ள அழகான வனப்பகுதி ஆகும்.

ஆண்டு முழுவதும் நீர் செல்லும் மருத்துவ குணம் உடைய இந்த நீரோடையில் சுற்றுலாப் பயணிகள் நீராடி உடலும், உள்ளமும், புத்துணர்ச்சி பெற்றுச் செல்ல சிறந்த இடம் புளியஞ்சோலை. இங்கு சுற்றுலா வரும் பயணிகள் தங்கி ஓய்வெடுக்கத் தேவையான அறைகள், கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரவும், இதர மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தவும் ரூ.35 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. புளியஞ்சோலையில் அழகிய பூங்கா அமைக்கவும், கூடுதல் பேருந்துகள் இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எரக்குடியிலிருந்து



புளியஞ்சோலைக்கு ரூ.1.6 கோடி செலவில் சாலை சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புளியஞ்சோலையின் சிறப்பு பற்றியும், மேம்பாட்டுப் பணிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்பும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இதர சுற்றுலா இடங்கள் பற்றிய விபரங்களும், உலக அளவில் உள்ள சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்வதற்காக இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த இணையதளம், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்ட சுற்றுலா இடங்களின் சிறப்புகள் உலகளவில் தெரிய ஏதுவாகிறது.

**- கோ. பன்னீர்செல்வம்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.



# இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டது - வேலூர் கோட்டை

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் சிறப்புப் பெற்றிருந்தாலும் இந்தியா அதிலும் பல வகையிலும் மாறுபட்டது. உலகிலுள்ள சுற்றுலாச் சிறப்பு அம்சங்கள் அனைத்தும் நமது நாட்டில் ஒருங்கே அமைந்துள்ளன. அதைப்போல் இந்தியாவின் சிறப்பு அம்சங்கள் பல தமிழகத்தில் நிறைந்துள்ளன. இத்தகைய சிறப்புகள் தமிழகத்தில் கவின்மிக்க கலைகள், பாரம்பரியம் மிக்க கலாச்சாரம், தொன்மையான வரலாற்றுச் சின்னங்கள், வானளாவிய உயர்ந்த கோவில்கள், களம் பலவற்றைச் சந்தித்த கோட்டைகள் போன்றவை ஆகும். அதில் இந்திய விடுதலைக்கு வித்திட்ட வேலூர் கோட்டையின் வரலாறு மிகவும் தொன்மையானது.

வேலூர் கோட்டை 1526 – 1595ஆம் ஆண்டுகளில் ஆட்சிபுரிந்த சின்னபொம்மு நாயக்கர் சகோதரர்களால் 133 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இது தென்னிந்தியத் தரைக் கோட்டைகளில் தலைசிறந்தது.

வேலூர் சிப்பாய் கலகம் எனப்படும் வேலூர் புரட்சி இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட நிகழ்ச்சியாகும்.

மாவீரன் திப்புவின் வீழ்ச்சிக்குப் பின், அவரது குடும்பத்தினர் கைதிகளாய் வேலூர் கோட்டையில் அடைக்கப்பட்டனர். அவர்களை 1,500 இந்திய சிப்பாய்கள் 379 வெள்ளைச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

ஆங்கிலப் படையின் முதல் ரெஜிமெண்டின் முதல் பட்டாலியனின் சிறு கம்பெனிகளும்; நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது பட்டாலியனும் பணியில் இருந்தன. ஏப்ரல், மே மாதம் வாக்கில் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை அமலாக்கப்பட்டது. புதிய தலைப்பாகை, தோலால் ஆன குல்லாய்ச் செண்டு, புதிய காலுறைகள் வழங்கப்பட்டு அணியுமாறு வற்புறுத்தப்பட்டது.



ஆனால் வேலூர் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை.

வாலாஜாபாத்திலும் அப்படியே தம் ஆணை செயல்படாமற் போனதற்காக அவமானமுற்ற வெள்ளை அதிகாரிகள், சுதேசி சிப்பாய்களைப் பட்டினி போட்டனர். முன் நின்றவர்களுக்குத் தலா 900 சவுக்கடி தண்டனை அளித்தனர். ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் 7 ரூபாய் மட்டுமே. அதை விட்டெறிந்து விட்டு வேலையிலிருந்து வெளியேற வேண்டும் என ஆபாச அடைமொழியோடு அவர்கள் வெள்ளையரை ஏசினர். சிப்பாய்கள் மனதில் எதிர்ப்புணர்வென்னும் நெருப்பு! திப்புவின் நினைவு எரிநெய் ஆயிற்று!

**திப்புவின் புதல்வர்கள், வேலூர் பட்டாளத்தின் சுதேசித் தலைவர்கள் ஆவர். அவர்கள் சிப்பாய்களின் எண்ணம் செயலாக்கம் பெற ஊக்கம் கொடுத்தனர். மதுரைக் கலவரம் (1804), சித்தூர்க்கலவரம் (1804–05), மலபார் புரட்சி (1802–05), திருவாங்கூர் புரட்சி (1804–05) முதலானவையும் அவர்களது உணர்ச்சிகளைக் கூடுதலாக்கின.**

புரட்சியாளர்கள், வேலூருக்கு அப்பால், நெல்லூர், காலஹஸ்தி பகுதிகளோடு ரகசியத் தொடர்பு கொண்டார்கள். இந்து, முஸ்லீம் மக்களை, சிப்பாய்களை வெள்ளையர்க்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார்கள். தமக்கெதிராக வதந்தி பரப்புவோர் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று மிரட்டியது ஆங்கிலேயர் ஆட்சி.

ஜூலை 4ஆம் நாள் புரட்சி தினமாய்க் குறிக்கப்பட்டது. ஆனால் அது 8ஆம் தேதி என மாறி மீண்டும் 9ஆம் தேதி ஆயிற்று. அன்று மாலையும் இரவும், பல்வேறு காரணங்கள் காட்டி சிப்பாய்களில் பல பேர் கோட்டைக்குள்ளேயே தங்கினர். வெள்ளை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். 10ஆம் தேதி பொழுது விடிந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மூன்று மணி. சிப்பாய்கள் சிறு பீரங்கிகளைக் சப்தமேதுமற்று நகர்த்திச் சென்று வெள்ளைக் குடியிருப்புகளுக்கு எதிரே நிலை நிறுத்தினர். சைகை கிடைத்ததும் துப்பாக்கி, பீரங்கிகள் முழங்கின.

கர்னல் டான்கோர்ட் முதல் பலி, அடுத்து கர்னல் மெக்சிராஸ். மெக்சிராஸின் சடலத்தின் மீது சிப்பாய்கள் காறி உமிழ்ந்து, எட்டி உதைத்து இகழ்ந்தனர். அவர்தான் புதுத்தொப்பி அணியக் கட்டாயப்படுத்தியவர். அரண்மனைப் பணியாளர் கேப்டன் வில்லிசனைச் சுட்டு வீழ்த்தினர். சார்ஜென்ட் ஜான் ஈலே துரத்திச் சென்று வளைந்த கொடுவாளால் வெட்டப்பட்டார். திப்புவின் இளவரசர்களது பணியாட்கள், புரட்சி நடத்திய சிப்பாய்களுக்கு முழு உற்சாகத்துடன் உதவி செய்தனர். எதற்கோ கோட்டையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த மேஜர் ஆம்ஸ்ட்ராங் என்ன கலவரம் இது என்றறிய பல்லக்கை விட்டிறங்கினர். கனன்ற குண்டுகளே அவரது கேள்விக்குப் பதிலுரைத்தன.

ஐநூறு இந்திய சிப்பாய்கள் ஒன்று திரண்டு வெள்ளைக் குடியிருப்புகளின் மீது குண்டுமழைப் பொழிந்தனர். 89 ஆம் ரெஜிமெண்டின் வெள்ளை வீரர் அநேகம் பேர் மாண்டு வீழ்ந்தனர். சார்ஜெண்ட் காஸ்கிரேவ் ஊனப்பட்டு வீழ்ந்தார்.

ஒன்றரை மணி நேரம், தாக்குதல் தீவிரமாக நீடித்தது. பின் இளவரசர் முஸ-உத்-தீன் ஆணைப்படி கோட்டையில் வெற்றி முழக்கத்தோடு பச்சை வர்ணப் பின்னணியில் கர்ஜித்து நிற்கும் வரிப் புலிக்கொடியொன்று ஏற்றப்பட்டது. அந்த நேரம் கோட்டை முழுவதும் புரட்சியாளர்கள் வசத்தில் இருந்தது.

காலை 9.30 மணி அளவில் வெளியிலிருந்து வெள்ளைப்படை உதவிக்கு வந்தது. மைசூர் இளவரசரும் தான்தான் தலைவர் என்று அறிவித்து முன் வரவில்லை. புரட்சியின் நோக்கத்தை மறந்து போன இந்திய சிப்பாய்கள் கொள்ளையடிப்பதில் தீவிரம் காட்டினர். அதனால் பெருங்குழப்பம் விளைந்தது. காலை 10 மணி அளவில் வெள்ளையர் கை ஓங்கிற்று. இந்தியச் சிப்பாய்கள் துருவித் துருவித் தேடப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயர்க் கெதிரான இந்தியாவின் முதலாவது இராணுவக் கிளர்ச்சி இப்படித் தோல்வியுற்றது. இதுவே வெள்ளையர்களுக்கெதிராக நடைபெற்ற இந்தியாவின் முதல் சுதந்திர போராட்டம் என்று சுதந்திர வல்லுநர்களால் புகழப்படுகிறது.

கோட்டையில் ஐதர் மஹால், திப்பு மஹால், பேஹம்மா மஹால், கண்டிமஹால், பாதுஷா மஹால் ஆகிய ஐந்து மஹால்கள் உள்ளன. கோட்டையின் தென்கிழக்கே மசூதியும், தென்மேற்கே 1846இல் கட்டப்பட்ட கிறிஸ்துவ ஆலயம், கோட்டையின் வடபகுதியில் அமைந்த ஜலகண்டேஸ்வரர் ஆலயம் கி.பி. 1566ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கோவில் வளாகம் 95.90 மீட்டர் நீளமும், 92 மீட்டர் அகலமும் கொண்டு உள்ளது. மும்மத கோவில்களும் அடுத்தடுத்து உள்ளன. இது இந்தியர்களின் ஒற்றுமை மற்றும் சகிப்புத்தன்மைக்கு உதாரணமாகும்.



கோட்டையில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் கி.மு. 400 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செம்பு போர்வாள்கள், கி.பி.1900ஆம் ஆண்டைச் சார்ந்த இரும்பு கைத்தடியுடன் கத்தி, துப்பாக்கி முனை





வாள்கள், தந்தத்தினால் ஆன வளைத்தடி, சதுரங்கக் காய்கள், மானிடவியல் கலைப் பொருட்கள், நாணயங்கள், தாவரவியல், விலங்கியல், புவியியல் பொருள்கள், கற்காலத்தில் இறந்தவர்களை வைத்துப் புதைக்கப்பட்ட ஆறுகால்கள் கொண்டு 2 சுடுமண் பெட்டிகள், மலைவாழ் மக்கள் பயன்படுத்திய கற்கால கல்கோடாரிகள், சோழவரம் சிவன் மற்றும் சந்திரன் சிலைகள், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கலைநுட்பம் வாய்ந்த பங்களநாட்டு கலைநயம் வாய்ந்தவையாகும்.

நாணயங்களில் சோழர்கால நாணயங்கள், சம்புவராயர் நாணயங்கள், விஜயநகரப் பேரரசின் நாணயங்கள், ஆற்காடு நவாப்பின் காசுகள், கலைப் பண்பாட்டுடன் விளங்கும் மண்பாண்டங்கள், முடையூர் மார்க்கல் சிலைகள் மற்றும் மலையாணிகள், இருளர்கள், காட்டு நாயக்கன்கள், இலம்பாடிகள் பயன்படுத்தும் ஆயுதங்கள் ஆடைகள் அருங்காட்சியகத்தில் உள்ளன. மேலும் கனிம வகைகளும், பாறை வகைகளும், மருத்துவச் செடிகளும் பதப்படுத்தப்பட்ட விலங்குகளும் காணத் தக்கவையாகும்.

கோட்டையைச் சுற்றி அகழியில் தண்ணீர் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆ.சி. மோகன்தாஸ் அவர்களின் தீவிர முயற்சியால் படகு விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகள் படகு மூலம் கோட்டையை அருகில் சென்று பார்த்து ரசிக்க முடியும்.

மேலும் வேலூரின் கிழக்கே உள்ள பாவாஜி மலை மீது சஜாராவ், கஜாராவ், மூர்தாஜ்கபுர் என்ற பெயர்களில் மூன்று மலைக் கோட்டைகள் பிரம்மாண்டமாக உள்ளன. இக்கோட்டைகளைத் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**— எம். கலைமணி,**
**செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்**
**வேலூர்.**

* * *

## பொன் மொழிகள்

*ஒரு நல்ல நூலைப் போலச் சிறந்த நண்பனைக்*
*காட்டிலும் நெருங்கிய உறவினர் எவருமில்லை*

- பேரறிஞர் அண்ணா

*நட்பு என்பது ஒரு செடி;*
*அதில் அடிக்கடி தண்ணீர் ஊற்ற வேண்டும்.*

- ஜெர்மானியப் பழமொழி

*கல்வி இளைஞரைக் கட்டுப்படுத்தும் பண்பு நலன்;*
*முதியோர்க்கு ஆறுதல்; ஏழைகட்குச் செல்வம்;*
*செல்வர்க்கு அணிகலன்*

- டயோஜினிஸ்

*நல்ல புத்தகங்களைப் படிப்பது*
*கடந்த நூற்றாண்டின்*
*தலைசிறந்த மனிதருடன்*
*உரையாடுவது போன்றது*

- ரெனே டெ கார்த்

*உழைப்பில் ஈடுபடும் நேரம் எதுவும்*
*வீணாவதில்லை*

- ரால்ப் வால்டோ எமர்ஸன்






மனித உணர்வுகளை ஓவியம் வழியாக வெளிப்படுத்துவது ஓர் உயர்ந்த கலை வடிவமாகும். பண்டைத் தமிழகம் படைத்த கலை ஓவியங்கள் இன்றும் வரலாற்றில் புகழ்பெற்று விளங்குகின்றன. இதன் தொடர்ச்சியாக ஏராளமான ஓவியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. இதனை உருவாக்கும் ஓவியர்கள் அரசினர் கவின்கலைக் கல்லூரியில் உருவாக்கப்படுகிறார்கள்.

இந்த ஓவிய மாணவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் முதன்முறையாக நாட்டின் தென்கோடியில் அமைந்துள்ள தனுஷ்கோடியில் ஓர் ஓவியக் கலைமுகாம் நடைபெற்றது.

தென்னகப் பண்பாட்டு மையமும் சென்னையில் உள்ள அரசினர் கவின்கலைக் கல்லூரியும் இணைந்து இந்த ஓவியக் கலைமுகாமை நடத்தியது. இதில் இக்கல்லூரியைச் சேர்ந்த முதுகலைப் பட்டப்படிப்பு மாணவர்கள் (MFA) 15 பேர் கலந்து கொண்டனர். இந்த முகாம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏர்வாடி போன்ற இடங்களில் உள்ள மனநிலை குன்றியவர்களைப் பின்புலமாகக் கொண்டு அமைக்கப் பட்டிருந்தது. மனநிலை குன்றியோர் பற்றிய விழிப்புணர்வு கலை முகாமாக நடைபெற்ற இம்முகாமில் பங்கேற்ற மாணவர்கள், மனித மன உணர்வுகளைத் தாங்கிய ஓவியப் படைப்புகளை வெளிக்கொண்டுவரும் உணர்வும் எண்ணமும், கொண்டவர்களாக ஆனார்கள். கல்லூரி வளாகத்திலேயே அடைந்து கிடந்து ஓவியங்களை உருவாக்குவதற்கும், முற்றிலும் புதிய சூழலில் இயற்கை வெளியில் ஓவியங்களைப் படைப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. இந்த உண்மையை மாணவர்களின் ஓவியங்கள் வெளிப்படுத்தின.

இரண்டு நாள்கள் தனுஷ்கோடியிலேயே தங்கியிருந்து அங்கு 1964 இல் கடல் கொண்ட பகுதிகளைப் பார்த்து மாணவர்கள் ஓவியங்களைத் தீட்டினார்கள். அதில் இடிந்து போயிருந்த கட்டடம், அஞ்சல் நிலையம், நீர்த் தொட்டி, உருத்தெரியாமல் போன நகரம், வெறுமையான கடற்கரை, மீனவ மக்களின் வாழ்க்கை முறை போன்றவற்றை மாணவர்களின் ஓவியங்கள் வெளிப்படுத்தின.

பின்னர் இராமேஸ்வரத்தில் திறந்த வெளியில் ஓவியங்களைத் தீட்டினார்கள். இதை ஏராளமான பொதுமக்கள் கண்டு மகிழ்ந்து உற்சாகமூட்டினார்கள். ஒவ்வோர் ஆண்டும் இதுபோன்ற கலை முகாம்களை இங்கு வந்து நடத்துங்கள் என்றும் கேட்டுக் கொண்டனர்.தேர்வு காலமாதலால் தங்கள் குழந்தைகளை அழைத்து வந்து இந்த ஓவிய முகாம்களைக் காணச் செய்ய இயலவில்லை எனவும் தங்கள் ஏக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

தொடர்ந்து இராமநாதபுரம் இசைப் பள்ளி வளாகத்தில் ஓவியக்கலை முகாம் நடத்தப்பட்டது. அங்கு அப்பள்ளி மாணவர்களும், ராஜா உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் ஓவியங்களை ரசித்ததுடன் தங்களுக்கும் ஓவியப் பயிற்சி அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இவ்வேண்டுகோளை ஏற்று அவர்களுக்கு ''கிரையான்ஸ்'' எனப்படும் ஓவியக் குச்சிகளை இலவசமாக வழங்கி பயிற்சி அளிக்கப்பட்டது. கோட்டு ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் வரைந்த வண்ண ஓவியங்களைப் பார்த்ததும், தாங்களும் வண்ண ஓவியங்களை வரைய ஆர்வம் கொண்டனர். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தங்கியிருந்த மனநோயாளிகள் தொழில் பயிலகத்தில் பயிற்சி பெற்றவர்களைப் பார்த்தபோது அவர்கள் முழுக் கவனத்துடன் தங்கள் பணியில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது. இவர்களின் மன உணர்வுகளை மாணவர்கள் உள்வாங்கிக் கொண்டனர்.

இந்த முகாமில் வரையப்பட்ட ஓவியங்கள் நவீன, அதி நவீன, தற்கால ஓவியங்களாகும். மேலும் நமது முந்தைய பழம்பெரும் ஓவியர்களின் பாணியைப் பின்பற்றும் வகையில் அதன் தொடர்ச்சியாக அமைந்த ஓவியங்களும் இதில் அடங்கும். இவ்வோவியங்கள் நமது தமிழ்ப் பண்பாட்டுப் பின்புலத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



இந்த ஓவியக் கலை முகாம் தனுஷ்கோடி, இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்றது இதுவே முதன் முறையாகும். அதன் பயனாக கல்லூரியின் வண்ணக் கலைத்துறை, முதுகவின் கலை மாணவர்கள் திரைச்சீலை வடிப்பதற்கும், இயற்கைக் காட்சிகளை வடிப்பதற்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

எந்தவித கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாகத் தங்களின் புதிய கற்பனைகளுக்கு வடிவம் தர இது மிகவும் பயன்பட்டது. இதனால் அவர்கள் புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்றனர்.

கலை முகாமில் பங்கேற்ற மாணவர்கள் ஒருவருக்கொருவர் ஓவியங்களைப் பற்றிய கருத்தாய்வுகளையும் மேற்கொண்டனர். தங்களுக்கு முன்னே வாழ்ந்த படைப்பாளிகளின் படைப்புகளை,





தங்களின் படைப்புகளோடு ஒப்பிட்டுக் கலந்தாய்வு செய்தனர்.

உத்தரகோசமங்கை என்னும் ஊரில் உள்ள மங்களேஷ்வர் கோவில் சிற்பங்களைக் கண்டு வியந்து அது ஓவியமாகவும் உருவெடுத்தது.

தனுஷ்கோடி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் பகுதியில் உள்ள பொதுமக்கள் மாணவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளித்தது மறக்க முடியாததாகும்.

நிறைவாக கலை முகாம், ஓவியக் கண்காட்சி நிறைவு விழா 18.3.04 அன்று மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் ஜி. சுப்பிரமணியன் தலைமையில் நடந்தது. மண்டல உதவி இயக்குநர் நா. சுலைமான், மாவட்ட மைய நூலகர் நா. பாலசுப்பிரமணியம், இந்த முகாமை வழிநடத்திய அரசு கவின்கலைக் கல்லூரி முதுநிலை விரிவுரையாளர் என். ராதாகிருஷ்ணன், இசைப்பள்ளி தலைமையாசிரியர் ஈ. உத்திரகுமாரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். குரல் இசை ஆசிரியர் இராஜேஸ்வரி நன்றி கூறினார். ❖

*(இரண்டாம் பக்க அட்டை ஓவியம் இம்முகாமில் வரையப்பட்டது.)*



**ப**ன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகத் திருவிழா தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மார்ச் திங்கள் 6–ஆம் நாள் தமிழகத்திலிருந்து மட்டுமன்றி இந்திய அளவில் பக்தகோடிகள் மகாமகத் திருவிழாவை முன்னிட்டு மகாமகத் திருக்குளத்தில் புனித நீராடினார்கள்.

# கும்பகோணம் மகாமகத் திருவிழா மகத்தான கலை நிகழ்ச்சிகள்



சைவ, வைணவத் திருக்கோவில்கள் 18 கோவில்களும் குடமுழுக்கு செய்யப்பட்டு ஆகமவிதிகளின்படி வழிபாடு நடத்தப்பட்டது. 2004ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26ஆம் நாள் காஞ்சிப் பெரியவர்களால் மகாமகத் திருக்குளத்தில் நீராடும் புனித நிகழ்ச்சியை தொடங்கி வைத்ததின் பெரும் பயனாக உலகின் பல பகுதிகளிலிருந்து வருகை தந்த பக்தகோடிகள் சுலபமாகவும், எளிமையாகவும், பக்திப் பரவசத்தோடு புனித நீராடிச் சென்றது மகாமகத் திருவிழாவின் பெருமைக்கு அணி சேர்ப்பதாக அமைந்தது. பக்தர்களின் வசதிக்காக, தமிழக அரசின் சார்பில் சுமார் ரூபாய் 50 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளை செய்து கொடுத்ததின் பயனாக இவ்விழாவிற்கு மேலும் பல சிறப்புகளைப் பெற வாய்ப்பாக அமைந்தது. சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகள், மேம்பாலம் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல், வாய்க்கால் மற்றும் குளங்கள் தூர்வாருதல், பயணிகளின் வசதிக்காக தற்காலிகக் கூடுதல் பேருந்து நிலையங்கள் மற்றும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கம், சுற்றுச்சாலை மற்றும் இணைப்புச் சாலை அமைத்தல், கும்பகோணம் நகராட்சி







மூலம் பல கோடி ரூபாய் மதிப்பில் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரல், கும்பகோணத்தில் கொசுத் தொல்லையை அறவே ஒழித்தல், பக்தர்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வசதிகள் போன்ற பல வகையான அரிய அடிப்படை வசதிகளைத் தமிழக அரசு செய்து கொடுத்ததன் பயனாக மகாமகத் திருவிழா மாபெரும் வெற்றி பெற்றது என்றால் அது மிகையாகாது.



மகாமகத் திருவிழாவைக் காணும் பக்தர்களின் வசதிக்காக அறிவைப் புகட்டுவதோடு கேளிக்கைகளை அனுபவிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் அரசின் சார்பில் மிகப் பெரிய அளவில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 13–க்கும் மேற்பட்ட அரசுத் துறை அரங்கங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் இடம் பெற்றன.

பிப்ரவரித் திங்கள் 27–ஆம் நாள் முதல் மார்ச் 8–ஆம் நாள் முடிய கும்பகோணத்தில் ரூ.1 கோடியே 65 இலட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கில் 150 கலைஞர்கள் கலந்துகொண்ட 27 கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்திருந்ததால், அரங்கம் நிரம்பிய காட்சியாகவே காட்சியளித்தது.

ஒரிசா மாநில நாட்டிய நிகழ்ச்சி கேரள மாநில கூடியாட்டம், கதகளியாட்டம், கர்நாடக மாநில யக்ஷகாண நாட்டிய நிகழ்ச்சி, புதுவை மாநில காளியாட்டம், தமிழிசைப் பாடல்கள் மற்றும் பத்மபூஷன் டாக்டர் பத்மா சுப்ரமணியம் அவர்களின் பரத நாட்டிய நிகழ்ச்சி, பத்மபூஷன் சரோஜா வைத்தியநாதனின் நாட்டிய நிகழ்ச்சி, தீபக் வெங்கடேஷ் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி, திருமதி ரேவதி முத்துசாமி குழுவினரின் கந்த காவிய நாட்டிய நிகழ்ச்சி, கலைமாமணி ஒய்.ஜி. மகேந்திரன் வழங்கிய நாடக நிகழ்ச்சி உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாள்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப., அவர்கள், அனைத்துத் துறை உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியைக் கண்டுகளித்து மகிழ்ச்சியடைந்தனர்.

- **கே.பி. நல்லதம்பி**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.

## ச ரி க ம ப த நி



மயிலின் அகவலில் சட்ஜமும்
காளையின் ஹூங்காரத்தில் ரிஷபமும்
ஆட்டினது குரலில் காந்தாரமும்
கொக்கினது சப்தத்தில் மத்தியமும்
குயிலின் குரலில் பஞ்சமமும்
குதிரையின் கனைப்பில் தைவதமும்
யானையின் பிளிறனில் நிஷாதமும்
தோன்றியதுதான் ச ரி க ம ப த நி

– நாரதீயசிட்சா

# வனவளம்



இயற்கை வழங்கும் எழிலினைப்பார்
இதயம் களிப்புறும் அதிசயம்பார்
உயர்ந்தே பொழியும் அருவியைப்பார்
உள்ளம் நனைந்திடும் பசுமையைப்பார்
- இயற்கை

முல்லை மல்லிகைப் படர்ந்துள்ள
மூங்கில் வளத்தின் பாங்கினைப்பார்
சொல்லி மாளா சிறப்புகள்பார்
சுவையை அளிக்கும் கனிவகைபார்
- இயற்கை

மயிலின் தோகை விரிப்பினைப்பார்
மான்கள் ஓடும் துள்ளலைப்பார்
குயிலின் ஓசைக் கிணையேது
குரங்கின் சேட்டைக் கீடேது
- இயற்கை

புயலாய் விரையும் முயல்களைப்பார்
பூவின் கொத்தெனக் குருவியைப்பார்
நகரும் குன்றென ஆனையைப்பார்
நாட்டின் வளமாம் வனத்தினைப்பார்
- இயற்கை

● வலசை கணேசன்



# திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா

சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழா கோவை மாவட்டம் திருப்பூரில் கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு 30-1-2004 அன்று கொண்டாடப்பட்டது.



காலை 7 மணிக்கு ஆண்களுக்கான மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை திருப்பூர் குமரன் கல்லூரியில் கோவை சரகம் காவல்துறை துணைத் தலைவர் திரு. அசுடோஷ் சுக்லா இ.கா.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். புஷ்பா திரையரங்கில் மாணவிகளுக்கான மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. சிவசாமி அவர்கள் தொடங்கி வைத்தார். இரு மாரத்தான் ஓட்டமும் நகராட்சி அலுவலகத்தில் முடிந்தது. அங்கிருந்து பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.சிவசாமி, நகராட்சி தலைவர் திரு. பழனிச்சாமி, தேசிய நாட்டுநலத் திட்டப்பணி (NSS) மாணவர்கள், தேசிய மாணவர் படை (NCC) மாணவர்கள், பொதுமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஊர்வலம் குமரன் நினைவு இல்லத்தை சென்று அடைந்தது. ஊர்வலம் முடிவில் திருப்பூர் குமரனுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. சிவசாமி அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

திருப்பூர் நகரப் பகுதிகள், அரசு மருத்துவமனை வளாகங்கள் மற்றும் திருப்பூரை சுற்றியுள்ள 5 பேரூராட்சிப் பகுதிகள் ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் இப்பகுதிகளில் முழு சுகாதார துப்புரவுப் பணிகள் செய்யப்பட்டன.

காலை 10 மணியளவில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவியர்களின் ஓவியப் போட்டி திருப்பூர் டவுன்ஹாலில் நடைபெற்றது. சுதந்திரப் போராட்டத்தை நினைவு கூறும் வகையில் ஓவியங்கள் வரையப்பட்டன. இப்போட்டியில் 150க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டார்கள். இந்த ஓவியங்கள் அனைத்தும் பொதுமக்களின் பார்வைக்கு கண்காட்சியாக வைக்கப் பட்டிருந்தன.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மற்றும் கல்லூரி பள்ளி மாணவ மாணவியர்களின் சுதந்திரப் போராட்டம் தொடர்பான நாடகமும், சுதந்திரத்தை வலியுறுத்தும் வகையில் பரதநாட்டியம், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

மாலை 5 மணி அளவில் இன்றைய இளைஞர் களிடையே தேசப்பற்று வளர்ந்திருக்கிறதா, தளர்ந்திருக்கிறதா என்ற தலைப்பில் திருமதி. புனிதா ஏகாம்பரம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தில் தேசப்பற்று வளர்ந்திருக்கிறது என்ற தலைப்பில் திருமதி. உமா மகேஸ்வரி, திருமதி. சாந்தாமணியும், தேசப்பற்று தளர்ந்திருக்கிறது என்ற தலைப்பில் திரு. அரசு பரமேஸ்வரன், திரு. நா. தங்கவேல் ஆகியோரும் வாதாடினார்கள். இறுதியில் நடுவர் தேசப்பற்று வளர்கிறது என்று தீர்ப்பு கூறினார்.



சிறப்புக் கூட்டத்திற்கு முன்னர் புதுப்பிக்கப்பட்ட திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பார்வையிட்டு அவ்வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

பின்னர் மாலை 6 மணிக்கு திருப்பூர் டவுன் ஹாலில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றி, குமரன் நூற்றாண்டு விழாவில் முன்னேற்பாடு பணிகள், மரக்கன்று நடுதல், பூங்காக்கள் அமைத்தல், முழு துப்புரவுப் பணிகள் தொடர்பாக விளக்கி கூறினார். திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.சிவசாமி முன்னிலை யுரையாற்றினார். அவிநாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. மகாலிங்கம், திருப்பூர் நகராட்சி தலைவர் திரு. பழனிசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள் கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி, விழா தலைமையுரையாற்றி பேசியபோது "நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை போற்றும் நோக்கத்துடன் குமரன் நூற்றாண்டு விழாவை கொண்டாட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்து உள்ளார். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பட்ட துன்பங்கள், துயரங்கள் பற்றி எண்ணும் போது உணர்ச்சியும், எழுச்சியும் பிறக்கிறது. திருப்பூர் குமரன் நினைவிடத்தில் ரூ.57 ஆயிரம் செலவில் மார்பளவு வெண்கலச்சிலை அமைக்கப்பட உள்ளது. ரூ. 2 இலட்சம் செலவில் குமரன் இல்லம் புதுப்பிக்கப்பட்டு உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

திருப்பூர் குமரன் உருவப்படத்தை திறந்துவைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசிய மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செ.ம.வேலுசாமி அவர்கள் பேசிய போது "தியாகி குமரன் போன்றவர்களின் புரட்சி வேள்வியால் விடுதலை கிடைத்தது. தியாகிகளை போற்றுவதன் மூலம் தான் நமது வாழ்வு வளம் பெறும். பெற்ற சுதந்திரத்தினை பேணிக்காக்கும் கடமை நமக்கு உள்ளது. நாட்டில் மதவாதம், தீவிரவாதம் ஒழிக்கப்பட்டு ஜனநாயகம் போற்றப்பட நாம் சபதம் ஏற்க வேண்டும். மாணவர்களுக்கு தேசபக்தி உணர்வை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். தியாகிகளை மதிப்பது பெற்றோரை மதிப்பது போன்றது. தியாகிகளை போற்றினால்தான் நாம் சுபிட்சம் பெறமுடியும்'' என்றார்.

விழாவில் குத்துவிளக்கேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.ப.வெ.தாமோதிரன் அவர்கள் பேசியபோது "தியாகிகளின் புகலிடமாக திருப்பூர் விளங்குகிறது. திருப்பூரில் மட்டுமல்ல உலக மக்கள் மனதில் நிற்கும் வகையில் குமரன் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் விழா நடத்திட உத்தரவிட்டுள்ளார். மேலும் திருப்பூரில் சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரனுக்கு நினைவு வளையம் அமைப்பதற்கான முழு முயற்சி எடுக்கப்படும்'' என குறிப்பிட்டார்.

விழாவில் திருப்பூர், அவிநாசி, பல்லடம் பகுதியைச் சேர்ந்த 64 சுதந்திரப் போராட்ட தியாகிகள் கவுரவிக்கப்பட்டனர். 144 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில் சுதந்திரப் போராட்ட தியாகி ராமசாமி பேசும்போது குமரனுக்கு நினைவு வளையம் அமைக்க வேண்டும் என்றும் தபால்தலை வெளியிட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து நூற்றாண்டு விழா எடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

- **வே.இராமநாதன்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்



# தமிழர் வரலாறு காட்டும் எண்ணல் அளவை

இந்தத் தலைமுறையின் காதில் விழும் எண்ணல் அளவை தொடர்பான பல தமிழ்ச் சொற்களை நம் இல்லங் களில் நமது பாட்டி, தாத்தாமார்கள் பேசுவதிலிருந்து அறிய முடியும்.

கால், அரை, முக்கால் போன்ற சொற்களையும், அதற்கான அளவைகளையும் அறிந்திருக்க முடியும். ஆனால் வீசம், மூணுவீசம், காணி, மாகாணி போன்ற அளவைகளை அறிய வாய்ப்பில்லை.

தமிழர் வரலாற்றில் காணப்படும் இந்த எண்ணல் அளவைகளை அதன் குறியீடுகளோடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நூல்வடிவில் வெளிக்கொண்டு வந்துள்ளது.

"தமிழர் அளவைகள்" என்ற அந்த நூலிலிருந்து ஒரு பகுதி:-

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

இத்தொடர், எண்ணின்றும் எழுத்து மாறுபட்டது என்பதைக் காட்டுவதுடன், எழுத்தினை விடவும் எண்ணே முன்னே தோன்றியது என்ற எண்ணத்திற்கும் வகை செய்கிறது. தமிழரின் எண்ணல் அளவைத் தொடர்பான எண்ணங்களை தொல்காப்பியத்தினின்றும் அறிய வருகின்ற போதும், முதலில் இவ்வெண்கள் எவ்வாறு தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்பதனைத் தமிழர் வரலாற்றினின்றும், புரிந்துகொள்ள இயலவில்லை. 'தி நியூ புக் ஆப் நாலட்ஜ்' இதன் தோற்ற நிலை பற்றிய சில எண்ணங்களைத் தருகின்றது. 'கோடுகள்' போட்டு எண்ணிய தன்மை போன்ற பல கருத்துக்கள் இவண் தெளிவுறுகின்றன. இந்நிலை தமிழர் வரலாறு காட்டும் சில நிலைகளுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கனவாக அமைகின்றன.

சங்க காலப் பாடல்கள் சில 'சுவரில் கோடு கிழித்து தலைவன் வரவை எதிர்பார்க்கும் தலைவியின் நிலையைச் சொல்லும் தன்மையன. கோடுகளை எண்ணி நாட்களை எண்ணும் நிலை இவண் தெரிய வருகின்றது. இன்றும் சில மகளிர் பால் கணக்கு, மோர் கணக்கு எழுதுதல் போன்ற சில நிலைகளில் சுவரில் கோடு கிழித்து இறுதியில் எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காண்கின்றோம். பழமையின் சின்னங்களாகக் கருதத்தக்க இவை மாந்தர் பண்டு தொட்டே எண்ணிக் கணக்கிடும் நிலையைக் காட்ட வல்லன.

எனவே கோடு கிழித்து எண்ணும் நிலைக்கு முன்னதாக எண்களைப் பற்றிய அறிவினை இவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது திண்ணம். பல அளவைகளின் பயன்பாட்டுக்கு உதவிய மனித உறுப்புகள் ஈண்டும் அவர்களுக்கு எண்ணி அளவிடப் பயனாகின்றன. கை விரல்களை முதலில் ஒவ்வொன்றாக எண்ணி அளவிடத் துவங்கிப் பின்னர், ஒன்றுக்குக் குறைவாகவும், பத்துக்கு மேலாகவும் காணத் துவங்குகின்றனர். பொதுவாக உலக மாந்தர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாக இது அமைகின்றது.

இவ்வெண்களின் செல்வாக்கும், எண்ணும் முறையும் (விரல் கொண்டு எண்ணும் தன்மை இன்றுவரைத் தொடர்ந்து வரும் ஒன்று) மாற்றமின்றி இன்று வரைத் தொடர்ந்து வரும் நிலை இவ்வெண்ணல் அளவையின் எளிமை, சிறப்பு போன்றவற்றைச் சுட்டவல்லது.

'ஒன்று இரண்டு மூன்று என எண்களாகவோ, வீசம், அரைக்கால், கால் என இலக்கமாகவோ அல்லது பதாதி,

சேனாமுகம், குமுதம் எனத் தொகையாகவோ எண்ணிக் கணக்கிடுவது எண்ணல் அளவையாகும்' என்பார் சா.கணேசன். மேலும் ஒன்று என்ற எண்ணின் மிகுதி, குறைவு இரண்டு வகைப்பட்ட எண்களையும் தனிப்பெயரிட்டுச் சுட்டிய தமிழர், தமிழ் எழுத்துக்களை எல்லா எண்களுக்கும் கொண்டிருந்த திறமும் தெரிய வருகிறது. ஆறுமுக நாவலரின் 'பால பாடம்' நூல் இவ்வெண்கள் பலவற்றையும் சுட்டுகிறது.

| | | |
|---|---|---|
| ஓ | முக்கால் | $\frac{3}{4}$ |
| ஒ | அரை | $\frac{1}{2}$ |
| வ | கால் | $\frac{1}{4}$ |
| சு | நாலுமா | $\frac{1}{5}$ |
| ஈ | மும்மா முக்காணி அல்லது மூன்று வீசம் | $\frac{3}{16}$ |
| ங | மும்மா | $\frac{3}{20}$ |
| ஹு | அரைக்கால் | $\frac{1}{8}$ |
| உ | இருமா | $\frac{1}{10}$ |
| ப௧ | மாகாணி அல்லது வீசம் | $\frac{1}{16}$ |
| ப | ஒருமா | $\frac{1}{20}$ |
| கூ | முக்காணி | $\frac{3}{80}$ |
| சு | அரைமா | $\frac{1}{40}$ |
| ௧ | காணி | $\frac{1}{80}$ |
| ப | அரைக்காணி | $\frac{1}{160}$ |
| வத | முந்திரி | $\frac{1}{320}$ |
| கீ ஓ | கீழ்முக்கால் | $\frac{3}{1280}$ |
| கீ ஒ | கீழரை | $\frac{1}{640}$ |
| கீ வ | கீழ்க்கால் | $\frac{1}{1280}$ |
| கீ சு | கீழ்நாலுமா | $\frac{1}{1600}$ |
| கீ ஈ | கீழ்மூன்று வீசம் | $\frac{3}{5.120}$ |
| கீ ங | கீழ்மும்மா | $\frac{3}{6,400}$ |
| கீ ஹு | கீழரைக்கால் | $\frac{1}{2,560}$ |
| கீ உ | கீழிருமா | $\frac{1}{3,200}$ |
| கீ ப௧ | கீழ்வீசம் | $\frac{1}{5,120}$ |
| கீ ப | கீழொருமா | $\frac{1}{6,400}$ |
| கீ கூ | கீழ்முக்காணி | $\frac{3}{25,600}$ |
| கீ சு | கீழரைமா | $\frac{1}{12,800}$ |
| கீ ௧ | கீழ்காணி | $\frac{1}{25,600}$ |
| கீ ப | கீழரைக்காணி | $\frac{1}{51,200}$ |
| கீ வத | கீழ்முந்திரி | $\frac{1}{1,02,400}$ |
| | இம்மி | $\frac{1}{10,75,200}$ |
| | அதிசாரம் | $\frac{1}{18,38,400}$ |

**இந்தப் பதின்மூன்று**

உலகில் மிகப்பெரிய கப்பல் கம்பெனியான பீ.ஓ. அண்டு ஓரியண்ட் லைனில் மொத்தம் 23 கப்பல்கள் இருந்தன. அப்போது 22 கப்பல்களை மட்டுமே பயன் படுத்தி விட்டு, 13ஆவது கப்பலைச் சும்மாவே வைத்திருந்தனர்.



# உலக நீர் நாள்

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ஆம் தேதி அன்று உலக நீர்நாளை நாம் கொண்டாடி வருகின்றோம். கடந்த ஆண்டு 2003–இல் இதனை நன்னீராண்டாக உலகம் முழுவதும் கொண்டாடினோம். இந்த ஆண்டு தற்போது இருப்பில் உள்ள நீர் வளத்தை கருத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மற்ற நீர் பயனாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் தற்சமயம் உள்ள நீர் வளத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், எவ்வாறு மேலாண்மை செய்ய வேண்டும், எவ்வாறு நீர் வளத்தை மேம்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

"நீரின்றி அமையாது உலகு" என்ற வள்ளுவரின் கூற்றிற்கேற்ப, நீர் ஆதாரம்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. நீர் வளத்தை, மேற்பரப்பு நீரைப் பொருத்தவரை ஆற்றின் குறுக்கே நீர்த் தேக்கங்கள் அணைக்கட்டுகள் அமைத்தும், குளங்கள், ஏரிகளில் நீரைச் சேமித்தும் நீர்ப் பாசனத்துக்கு உபயோகித்து வருகிறோம். பெருகிவரும் மக்கள்தொகை, தொழிற்சாலைகள் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி ஆகியவைகளுக்கு நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மேலும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டதால், தற்போது நாம் நிலத்தடி நீரையே நம்பி வாழ வேண்டியுள்ளது.

இந்த நிலத்தடி நீரும் தற்போது அதிகமாக உறிஞ்சப்படுவதால் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. நிலத்தடி நீரின் தரமும் பாதிக்கப்படுகிறது. கடற்கரை ஓரப் பகுதியில் அதிகப்படியான நிலத்தடி நீர், விவசாயம் மற்றும் தொழிற்சாலை தேவைகளுக்கு எடுக்கப்படுவதால் உப்பு நீர் ஊடுருவலும் நிகழ்கிறது.

தமிழக பொதுப்பணித்துறை (நிலத்தடி நீர்) மற்றும் மத்திய நிலத்தடி நீர் வாரியமும் ஐந்தாண்டுக்கொருமுறை நிலத்தடி நீர் வளத்தை கணக்கெடுத்து வருகிறது. நிலத்தடி நீர் மதிப்பீடு கமிட்டி 1997–ன் பரிந்துரைப்படி, தமிழகத்தில் உள்ள 385 ஒன்றியங்களிலும் 1998–ஆம் ஆண்டிற்கு நிலத்தடி நீர் வளம் கணக்கெடுக்கப்பட்டு அதிலிருந்து 2003 ஆம் ஆண்டிற்கான நிலை அனைத்து ஒன்றியங்களில் எவ்வாறு உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவைகளின் நிலை கீழ் வருமாறு :

1. பாதுகாப்பானது ........................ 97 ஒன்றியங்கள்
(நிலத்தடி நீர் 70 சதவிகிதத்திற்கு உள்ளாக பயன்படுத்தப்படுகிறது)

2. மிக அபாயக் கட்டத்தை நெருங்கும் நிலை ........................ 105 ஒன்றியங்கள்
(70 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் வரை நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுகிறது)

3. அபாயக் கட்டத்தில் உள்ளது ........... 37 ஒன்றியங்கள்
(90 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை பயன்படுத்தப்படுகிறது.)

4. அபாயக் கட்டத்தை கடந்து அதிகப்படியான நிலத்தடி நீரை எடுத்தவை ........................ 138 ஒன்றியங்கள்
(100 சதவிகிதத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படுகிறது)

5. முற்றிலும் உப்புத் தன்மை வாய்ந்தவை 8 ஒன்றியங்கள்

1998 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது பாதுகாப்பான ஒன்றியங்கள் 137 லிருந்து, 2003 ஆம் ஆண்டு 97 ஒன்றியமாக குறைந்துவிட்டது. முந்தைய ஆண்டுகளில் ஒப்பிடும்போது அபாயக்கட்டத்தை நெருங்கும் நிலை உள்ள ஒன்றியங்கள் தற்போது மிக அதிகமாக உள்ளது. இதிலிருந்து நிலத்தடி நீரை மிக அதிகப்படியாக பயன்படுத்துவது தெளிவாகத் தெரிகிறது.



வான் மழை பொய்த்துவிட்ட இந்தத் தருணத்தில் கிடைக்கும் நீரை மாசுபடுத்தாமல் பாது காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். மாசுபட்ட நீரை பயன்படுத்தும்போது நாம் பலவகை வியாதிகளுக்கு உட்படுத்தப்படுகிறோம். உதாரணமாக நைட்ரேட் உப்பின் அளவு அதிகப்படியானால் நீலநிற குழந்தை வியாதி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்படும். (வரையறுக்கப் பட்ட அளவு 50 மி.கி./லிட்டர்) ப்ளுரைடு அளவு அதிகப் படியானால் எலும்பு மற்றும் பல் தொடர்புடைய வியாதிகள் ஏற்படும் (வரையறுக்கப்பட்ட அளவு 1–0 மி.கி./லிட்டர்) சோடியம் அதிகமானால் இருதய நோயும், கால்சியம், மக்னீசியம் அதிகமானால் சிறுநீரகக் கோளாறுகளும் கபஸ்டிஸைடு இருந்தால் புற்று நோயும் ஏற்பட வாய்ப்புள்ளது.




குப்பை கூளங்கள் நீர்நிலைகளின் அருகில் இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளை தேவைக்கு அதிகமாக விவசாயிகள் உபயோகிக்கக் கூடாது. இவை நிலத்தடி நீரில் ஊடுருவி மாசுபடுத்துகின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள், ஆற்றங் கரையிலுள்ள நகராட்சி, பேருராட்சிகளிலிருந்து வரும் சாக்கடை நீர் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே ஆற்றில் விடப்பட வேண்டும். பொதுப்பணித் துறையில் நில நீர் துறையின் கீழ் சென்னை, திருச்சி, மதுரை, பொள்ளாச்சி போன்ற இடங்களில் நீரைப் பரிசோதிக்க சோதனைக் கூடங்கள் உள்ளன. பொதுமக்களும், விவசாயிகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் நீரைப் பரிசோதித்துக் கொள்ளலாம்.

இருக்கின்ற நீரை நாம் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகப்படியான பலன் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக விவசாயிகள் பயிர்களுக்குத் தேவையான அளவு நீரை உபயோகப்படுத்த வேண்டும். நீரின் இருப்புக்குத் தகுந்தாற்போல் அதற்கேற்ப பயிர் செய்ய வேண்டும். சொட்டு நீர், தெளிப்பு நீர் போன்ற நுண்ணிய பாசன முறைகளைக் கையாளவேண்டும். தாமிரபரணி ஆற்றுப்படுகையில் காய்ச்சலும், பாய்ச்சலும் முறையைப் பின்பற்றி நீரையும் சேமித்து அதிக மகசூலும் பெறுகிறார்கள். சுழற்சி முறையில் நீர்ப் பாசனம் நடைபெறுகிறது. பொதுமக்களும் நீரை மிகமிகச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். கை அலம்பும் பேசினிலிருந்து குழாயைத் தொடர்ச்சியாகத் திறந்துவைத்து பல் துலக்குதல், சவரம் செய்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். தனியாக சிறிய பாத்திரத்தில் நீர் பிடித்து உபயோகிக்கலாம். தோட்டம், சமையல் அறை, கழிவறை போன்ற இடங்களில் நீரை வீணாக்கக்கூடாது. குழாய்களில் நீர்க்கசிவு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு நீரின் அளவை குறைத்துக் கொண்டால் ஒரு நாளைக்கு பல இலட்சம் லிட்டர் தண்ணீரை மீதப்படுத்தலாம்.

பொதுப்பணித்துறை நில நீர் பிரிவில் இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் 200 முகாம்கள் கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. துண்டு வெளியீடுகள் மற்றும் தொலைக் காட்சிப் படங்கள் வாயிலாகவும், பொருட்காட்சிகள் நடத்தியும் இந்த செய்திகள் தெரிவிக்கப்பட்டது.

## நிலத்தடி நீரை எவ்வாறு மேம்படுத்த முடியும்?

1. முதலில் மழை பெய்வதற்கான வழி வகைகளை உருவாக்க, காடுகளை அழிக்காமல் மேலும் மரங்கள் நட்டு வளர்க்க வேண்டும்.
2. தற்போது அரசுத் துறை கட்டடங்கள், தனியார் கட்டடங்கள், குடியிருப்புகள் ஆகிய அனைத்து இடங்களிலும் மழை நீர் சேகரிப்புத் திட்டத்திற்கான அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் நிலத்தடி நீர் சேமிக்கப்படும்.
3. ஆற்றுப் படுகைகளில் செயற்கை முறை நீர் செறிவூட்டல் மூலம் நீர் மட்டம் மேம்பட உரிய இடங்களில் தடுப்பணைகள், நிலத்தடி தடுப்புச் சுவர்கள், கசிவு நீர் குட்டைகள் அமைக்கலாம்.
4. ஏரி, குளங்கள், கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு வழிவகை செய்யலாம். ஏரி, குளங்கள் புதியதாக ஏற்படுத்தலாம்.

சென்னையில் 'தொலை உணர்வு மையம்' சிறப்பாக இயங்கி வருகிறது. ஆற்றுப் படுகைகளில் நிலத்தடி நீர் உள்ள பகுதி, நிலத்தடி நீர் வளத்தை பெருக்க எந்தெந்த இடங்களில் செயற்கை முறை நீர் செறிவூட்டல் அமைப்புகள் ஏற்படுத்தலாம் என்று தொலை உணர்வு மூலமாக ஆய்ந்து திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

நிலத்தடி நீர் வளத்தை பாதுகாத்தலும், மேம்படுத்துதலும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். உலக நீர் நாள் கொண்டாடும் இந்தத் தருணத்தில் நம் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு இரண்டு லிட்டர் தண்ணீர் சேமிப்போம் என்று உறுதி கொள்வோம். இதனால் பல இலட்சம் லிட்டர் தண்ணீரை ஒரு நாளில் சேமிக்கலாம். இந்த நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தி, பாதுகாத்து கொடுத்தலே நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் அரிய சொத்தாகும்.


**இரா. பாண்டியன்,**
முன்னாள் தலைமைப் பொறியாளர் (நிலநீர்),
பொதுப்பணித்துறை.




# இயற்கைப் பேரிடர் மேலாண்மை

நீலகிரி மாவட்டம் இயற்கை எழில்மிகுந்த மலை மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் அடிக்கடி இயற்கை பேரழிவுகள் ஏற்படுகின்றன. தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ளத்திற்கு நிலச்சரிவும் கோடை காலங்களில் முதுமலை வனவிலங்கு சரணாலயம் மற்றும் இதர புல்வெளி நிலங்களில் ஏற்படும் காட்டுத் தீயும் முக்கியக் காரணங்களாக உள்ளன.

நிலச்சரிவுகள் பெரும்பாலும் பருவ மழை காலங்களில் ஏற்படுகிறது. இம்மாவட்டம் சராசரியாக 18.77 செ.மீ. மழை பெறுகிறது.

1978–இல் மந்தாடா என்ற கிராமத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 98 பேரும் 811 கால்நடைகளும் உயிரிழந்துள்ளன. ரூ.1,270 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. அதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் கெத்தை என்ற கிராமத்தில் 36 நபர்கள் உயிருடன் புதையுண்டனர். மின்வாரிய கட்டடங்கள் கடும் சேதமுற்றன. இந்த ஆண்டு ரூ.1.257 கோடி நிவாரணப் பணிகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்து நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் குன்னூர் மேட்டுப்பாளையம் நெடுஞ் சாலையில் கொண்டை ஊசி வளைவு 11 மற்றும் 13 இடையே உள்ள சாலையில் வெள்ளத்தின் காரணமாக 2 அரசுப் பேருந்துகள், 13 வீடுகள் அடித்து செல்லப்பட்டன. மேலும் 12 நபர்களும் அடித்துச் செல்லப்பட்டனர். நிவாரணப் பணிக்கு அரசு இவ்வாண்டில் 15 இலட்சம் ரூபாயும் அதன் பின்னர் சாலை மேம்பாடு மற்றும் இதரப் பணிகளுக்கு 1996–97 ஆம் ஆண்டில் ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிவாரணம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டில் தொடர் மழை காரணமாக அல்லஞ்சி கிராமத்தில் மிகப்பெரிய நிலப்பிளவு ஏற்பட்டதால் அங்கிருந்த 47 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பான வேறு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அக்டோபர் 2001 முதல் டிசம்பர் 2001 வரை பெய்த அடை மழையில் குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் 399/6 கி.மீ. உள்ள 2 பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. புதிய பாலம் கட்டும் பணிகள் மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக உள்ளது.

அகில இந்திய அளவில் பூகம்பம் நிகழக்கூடிய பகுதிகளை வகைப்படுத்தி சில பகுதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன. அதில் தமிழ்நாட்டில் 6 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் நீலகிரி மாவட்டம் பிரிவு 3–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதாலும் மேற்கண்ட இயற்கைச் சீற்றத்தினைக் கருத்தில் கொண்டும் இந்திய அரசு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி நிதி (United Nations Development Fund)–யின் கீழ் உரிய திட்டங்களைத் தயார் செய்ய அனுமதி வழங்கி உள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் எவ்வாறு எப்போது எங்கு ஏற்படும் என துல்லியமாக அறிய இயலாவிட்டாலும், இந்த இயற்கைப் பேரழிவுகளிலிருந்து தற்காத்துக் கொள்ள எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்து, அதற்கான திட்டம்



தயார் செய்யவும் அதனைச் செயல்படுத்தவும் 2007 ஆம் ஆண்டு வரை இம்மாவட்டத்திற்கு ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு கிராம அளவிலும் அக்கிராமத்தின் புவியியல் ரீதியான அமைப்பு ஆறுகள், நீரோடை ஆதாரங்கள், சாகுபடி நிலப்பரப்பு, குடியிருப்பு, சாலை வசதி மற்றும் மின்வசதி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இயற்கைப் பேரிடர் ஏற்படும் பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய போர்கால நடவடிக்கைகள் குறித்து கிராம மக்கள் விவாதித்து ஒரு செயல் திட்டம் வகுத்துக்கொள்ள ஏதுவாகிறது. இத்திட்டத்தின்படி செயல்படும் போது இயற்கைச் சீற்றத்தின் தாக்கம் குறைக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகள் விரைந்து நிறைவேற்றப்படும். இதற்காக கிராம அளவிலும் வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு செயல்திட்டம் தயார் செய்ய போதிய பயிற்சி உரிய நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படும். இவை தவிர மீட்புப் பணிகளின் போது தேவையான உபகரணங்களும் வழங்கப்படும். கிராம அளவில் எச்சரிக்கை குழுக்கள், அவசரகால புகழிடங்களை பேணிக்காக்கும் குழுக்கள், முதலுதவிக் குழுக்கள், மருத்துவக்குழுக்கள், சுகாதாரக்குழுக்கள், மீட்புக்குழுக்கள், ரோந்துக் குழுக்கள் போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டு செயலாக்கம் பெறும்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட அனைத்து மாவட்ட அளவிலான துறை அலுவலர்களையும் உள்ளடக்கி குழுக்களும் வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் மற்றும் இரண்டாம் நிலை துறை அலுவலர்களை உள்ளடக்கிய வட்டாரக்குழுக்களும் கிராம அளவில் ஊராட்சித்தலைவர் மற்றும் வருவாய் அலுவலர் கிராம மக்களில் இருவரை உள்ளடக்கிய கிராம நிலைக்குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உரிய பயிற்சிக்கு பின்னர் திட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படும். இதன் தொடர்பாக சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சென்னை அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அமெரிக்க நாடுகளின் வளர்ச்சி நிதித் திட்டத்தின் இரண்டு உறுப்பினர்கள் ஆகியோரால் ஒரு பயிலரங்கம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது. இப்பயிலரங்கத்தில் இயற்கைப் பேரிடர்கள் குறித்தும் திட்டம் தயாரிக்கத் தேவையான வழிமுறைகள் குறித்தும் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

– அ. சந்திரசேகரன்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
நீலகிரி மாவட்டம் •

# சொல்வங்கி

*சொல்வங்கியின் 18 ஆவது கூட்டம் 27–2–2004 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்களின் பட்டியல் பின்வருமாறு :*

1) Caller Line Identification Phone : ஆளறி பேசி
2) Common Admission Test (CAT) : பொது சேர்க்கைத் தேர்வு (பொ.சே.தே.)
3) Deemed University : நிகர்நிலைப் பல்கலைக் கழகம்
4) E-Business : மின்–தொழில் வாணிகம்
5) E-Commerce : மின்–வணிகம்
6) Electoral accord : தேர்தல் உடன்பாடு
7) Electronic clearing services : (E.C.S.) மின்னணு பணிமாற்றப் பணி (மி.ப.ப.)
8) Electronic Media Sector : மின்னணு ஊடகப் பிரிவு
9) Electric Multiple Unit (EMU) : மின்தொடர் வண்டி (மி.தொ.வ)
10) Executive Function : செயலாட்சி
11) Feed back : பயனீட்டம்
12) Ground Situation : களச்சூழல்
13) Gullible Sections : ஏமாற்றப்படும் பிரிவினர்
14) Large Storage Memory : பெருந்தேக்க நினைவகம்
15) Legal Services Authority : சட்டப் பணியுதவி ஆணைக் குழு
16) Management Quota : நிருவாக ஒதுக்கீடு
17) E-Mail Identification : மின் – அஞ்சல் குறி




உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மொத்த சந்தா செலுத்துகிறீர்!
10 வது
மாத சந்தா
இலவசம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

அரசு தள்ளுபடி 20%

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெ
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவா
தவறவிடாதீர் இந்த அரியவாய்

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும்

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கண்ணி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

Visit us at: www.cooptex.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை





கங்கைகொண்ட சோழபுரம்


தமிழரசு
மே 2004
3
ஆண்டுகளில்
ஒரு சாதனைச் சகாப்தம்














# தமிழ்நாட்டில் சமூக–பொருளாதார மாற்றங்கள்

"தமிழகத்தை அறிவுவளம் செறிந்த, தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் நிறைந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதே என்னுடைய இலட்சியமாகும். தகவல் தொழில் நுட்பத்தால் இணைக்கப்பட்டவர்களுக்கும், அவ்வாறு இணைக்கப்படாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி மேலும் அகன்றுவிடாமல், தொடர்புகளை மேலும் பரவலாக்குவதற்கான ஒரு சாதனமே தகவல் தொழில்நுட்பம் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். வேலைவாய்ப்பு, சேவைப் பணிகளுக்கான செலவைக் குறைத்தல், பழைய பொருளாதாரத் தொழில்களின் போட்டித் திறனை வளர்த்தல், நிர்வாகத்தில் திறமை, ஒளிவு மறைவற்ற தன்மை, பொறுப்பு அறிந்து செயலாற்றுகின்ற நிர்வாகம், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையேயான மின்னணு சார் தகவல் தொடர்பு ஆகியவற்றின் வாயிலாக தமிழ்நாட்டில், சமூக–பொருளாதார மாற்றங்களைத் தோற்றுவிப்பதற்கான அரிய வாய்ப்பினைத் தகவல் தொழில்நுட்பம் நமக்கு அளித்துள்ளது.

கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வளர்ச்சியின் ஒரு முக்கியக் கேந்திரமாக தமிழ்நாடு உருவெடுத்து வருகிறது என்று கூறிக்கொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பின்வரும் இலக்குகளை நிர்ணயிக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும்.

முதலாவதாக, 2010ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் இரு மடங்காக உயர வேண்டும்.

இரண்டாவதாக, 2005ஆம் ஆண்டுக்குள்ளாக, ஐந்தாம் வகுப்புவரை அனைவருக்கும் கல்வி அளிக்கப்படும். இதில் பெண் குழந்தைகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மூன்றாவதாக, 2006ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியாவிலேயே முதலிடத்தை வகிப்பதோடு நில்லாமல், உலகமக்கள் தொகையில் சரி பாதியின் இருப்பிடமாகத் திகழும் ஆசியக் கண்டத்தினுடைய ஒரு நுழைவு வாயிலாகவும் தமிழ்நாடு விளங்கும்.

நான்காவதாக 2008ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாடு, இந்தியாவிலேயே, முதல் தரமான தயாரிப்புப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் மாநிலமாக விளங்கும். ஏற்றுமதி வாயிலாக கிடைக்கும் வருவாய் இருமடங்காகப் பெருகும்.

2010ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களிலும், தடையற்ற மின்சார வசதி, இணைப்புச்சாலை, தொலைபேசி வசதி, இணையதள வசதி, நல்ல பள்ளி, சுத்தமான குடிநீர், துப்புரவு வசதி, ஒரு கிராமச் சுகாதாரப் பணியாளர், உள்ளாட்சி மன்றம் ஆகியவற்றைப் பெற்றுவிடும்".

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**
இந்திய வர்த்தக தொழில் கழகக் கூட்டமைப்பின்
செயற்குழுக் கூட்டத்தில் 5-7-2002 அன்று
ஆற்றிய உரை.



## தமிழக மக்களின் நலன் காக்க

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

முக்கிய அறிவிப்புகள்

★ 'எச்' கார்டு முறை ரத்து

★ கூப்பன் இல்லாமல் அரிசி பெற ஏற்பாடு

★ ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள்

★ விவசாயிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் இலவச மின்சாரம்

★ அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மின்சார மீட்டர் இல்லை

★ சத்துணவுத் திட்டத்தில் கூடுதலாக முட்டை

★ அரசு, தனியார் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் இலவச பஸ் பாஸ்

★ அரசு, தனியார் கல்லூரி மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் 50 சதவிகித சலுகையில் பஸ் பாஸ்

★ வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அரசு ஊழியர், ஆசிரியர் மீதான அனைத்து தண்டனைகளும் ரத்து

★ அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான 'டெஸ்மா' வழக்குகள் வாபஸ்

★ பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மீதான அவதூறு வழக்குகள் வாபஸ்

★ இந்து உள்ளிட்ட பத்திரிகைகள் மீதான சட்டசபை நடவடிக்கை வாபஸ் பெறத் தீர்மானம்

★ கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ரத்து



## வேளாண்மைத்துறையில் வியத்தகு பணிகள்



கிராமங்களில் தான் இந்தியாவே உள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு, வேளாண் வளர்ச்சியின் மூலமாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக மாற்றவும் உறுதிபூண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, 2001–2002 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டு வரை வேளாண் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

வேளாண்மையில் மாற்றுப் பயிர்த் திட்டம்

❖ மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிவிப்பின்படி, வேளாண்மையில் மாற்றுப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதால் மூன்றாண்டுகளாக ஏற்பட்ட வறட்சி நிலையிலும் 2003–2004இல் உணவுப் பயிர் சாகுபடி பரப்பு 33.85 இலட்சம் எக்டர் அடையப்பட்டது.

❖ 2003–2004இல் உணவுப் பயிர் உற்பத்தி 65.38 இலட்சம் மெ.டன்

❖ சிறு தானியங்களில் மொத்த சாகுபடி பரப்பு 11.91 இலட்சம் எக்டர். கூடுதல் பரப்பு 2.45 இலட்சம் எக்டர்

❖ உற்பத்தி 14.60 இலட்சம் மெ.டன்

❖ பயிறு வகைகளில் சாகுபடி பரப்பு 7.93 இலட்சம் எக்டர். கூடுதல் பரப்பு 1.72 இலட்சம் எக்டர்.

❖ உற்பத்தி 3.4 இலட்சம் மெ.டன்

❖ எண்ணெய்வித்து சாகுபடி பரப்பு 8.01 இலட்சம் எக்டர். கூடுதல் சாகுபடி பரப்பு 1.73 இலட்சம் எக்டர்

❖ உற்பத்தி 12.53 இலட்சம் மெ.டன்

❖ பருத்தி உற்பத்தி 1.77 இலட்சம் பொதிகள்

❖ கரும்பு உற்பத்தி 20.92 இலட்சம் மெ.டன் (வெல்லம்)

நிவாரணம்

❖ 2002–2003ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இறவை பயிர்களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.2,500/–, மானாவாரி பயிருக்கு ஒரு எக்டருக்கு ரூ.1,000/–, பல்லாண்டு பயிர்களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.4,000/– வீதமும் நிவாரணம் வழங்கப்பட்டது.

❖ பருவமல்லாத காலத்தில் காவிரி ஆற்றுப் படுகை மாவட்டங்களில் பிப்ரவரி 2002இல் பெய்த பெருமழையால் பெருத்த சேதத்திற்கு உள்ளான நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ. 48.10 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ சிறு மற்றும் குறு விவசாயிகள் காலத்தில் பண்ணை வேலைகளை ஆற்றிட உதவும் நோக்குடன் மூன்று 30 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்கள், 567 பவர் டில்லர்கள், 4 கதிரடிக்கும் இயந்திரங்கள் மற்றும் 1 நெல் நாற்றுநடும் கருவி போன்ற இயந்திரங்கள் ரூ.191.867 இலட்சம் மானிய செலவில் வழங்கப்பட்டன.



* பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 2001–2002, 2002–2003, 2003–2004ஆம் ஆண்டுகளில் தானிய உற்பத்தித் திட்டம் ரூ.1,131.238 இலட்சத்திலும், கரும்பு அபிவிருத்தித் திட்டம் ரூ.71.861 இலட்சத்திலும், மானாவரி நீர்வடிப்பகுதி மேம்பாடு திட்டம் ரூ.4,632.826 இலட்சத்திலும், ஒருங்கிணைந்த உரபயன்பாடு நிருவாகம் ரூ.110.50 இலட்சத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

* எண்ணெய்வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம் ரூ.597.98 இலட்சம் செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003–ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.623.885 இலட்சம் செலவிலும், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.466.164 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டது.

* தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்தின்கீழ் ரூ.512.737 இலட்சம் செலவில் 8,475 பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

* பருத்தித் தொழில்நுட்பக் குழு திட்டம் 2001–2002–ஆம் ஆண்டு ரூ. 300.066 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ. 177.697 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2003–2004ஆம் ஆண்டு ரூ.295.214 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

* 2001–2002–ஆம் ஆண்டு ரூ.13.739 இலட்சம் செலவிலும், 2002–2003–ஆம் ஆண்டு ரூ.15.21 இலட்சம் செலவிலும், 2003–2004 ஆம் ஆண்டு ரூ.20.47 இலட்சம் செலவிலும் தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

* ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்புத் திட்டத்தினை வலுப்படுத்தும் நோக்குடன் 8 உயிரியல் கட்டுப் பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்களும், 49 ஒட்டுண்ணி கட்டுப்பாட்டு மையங்களும், 2 மாநில ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு மையங்களும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை கரும்பு, நெல், தென்னை, பருத்தி, மணிலா, பயறுவகைப் பயிர்களுக்கு உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

* பயறு உற்பத்தித் திறனை மேம்படுத்த விதைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களுடன் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் மூலம் உயர்த்த ரூ.106.25 இலட்சம் செலவில் 17 மாவட்டங்களில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

* தாவர எண்ணெய் மேம்பாட்டிற்காக சைமரூபா மரக்கன்றுகள் உற்பத்திக்கு தேசிய எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டுக் கழகம் உதவியுடன் ரூ.3 இலட்சம் ஒதுக்கீட்டில் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 4,600 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, மேலும் 1,000 மரக்கன்றுகள் பெறப்பட்டு அரசு பண்ணை களில் நடவு செய்யப்படுகிறது.

அரசால் செயல்படுத்தப்படும்
பிற வேளாண் திட்டங்கள்

* 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக முழுமையாக மற்றும் பகுதி பாதிப்புக்கு உள்ளான தென்னை மர சாகுபடியாளர்களுக்கு முறையே ரூ. 150 மற்றும் ரூ. 50 வீதம் நிவாரணம் ரூ.21.60 கோடி அளவில் வழங்கப்பட்டது.

* பசுந்தாள் உர விதைகள் 25 சதவிகித மானியத்தில் 2001–2002ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவிலும், 2002–2003ஆம் ஆண்டு ரூ.24.998 இலட்சம் செலவிலும் 2003–2004ஆம் ஆண்டு ரூ.24.997 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டது.

* **புதிய வேளாண் கொள்கையை உருவாக்கவும் அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.**

* விதைத்தரத்தை மேம்படுத்தவும் விவசாயிகளுக்கு தரமான விதை வழங்கவும் ரூ. 20.869 இலட்சம் செலவில் 9 விதை சுத்திகரிப்பு நிலையம் மேம்படுத்தப் பட்டது.

* 10 மாவட்டங்களில் மாவட்ட வேளாண் தகவல் மையங்கள் ரூ.20.20 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

* இடுபொருட்கள் துல்லிய அளவில் இடுவதற்கு ஏதுவாக, கதிரியக்க உட்புகு வெப்ப ஒளியியல் மானி (Atomic Absorption Spectro Photo Meter) மூலம் மலர் பரிசோதனை செய்யப்பட்டு, மண்வளம் குறிக்கும் அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.



## வேளாண்மைப் பொறியியல்

* ஜூலை 2003 முதல் மார்ச் 2004 வரை 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.2,564.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.

* தமிழ்நாட்டிலுள்ள வறண்ட மற்றும் உபயோகப்படுத்தாத கிணறுகளை, வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் சீரமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மார்ச் 2004 வரை 2,093 கிணறுகளில் ரூ.264.37 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

* சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனங்களுக்கு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1,393.53 இலட்சம் செலவில் 18,570 எக்டர் நிலத்திலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1,177.04 இலட்சம் செலவில், 13,016 எக்டர் நிலத்திலும், 2003–2004ஆம் ஆண்டில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.1,210.63 இலட்சம் செலவில் 21,237 எக்டர் நிலத்திலும் பணிகள் செயல்படுத்தப் பட்டன.

* 2002–2003ஆம் ஆண்டில் 561 பவர் டில்லர்கள், 43 டிராக்டர்கள், மற்றும் 10 தானியங்கி கதிரறுப்பான்கள் ரூ.183.15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் 507 பவர் டில்லர்கள், 93 டிராக்டர்கள், 2 தானியங்கி நாற்று நடும் கருவிகள் மற்றும் 1 தானியங்கி கதிரறுப்பான் ரூ.160.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

* 2001–2002இல் 5,697 குழாய்க்கிணறுகள், 2002–2003இல் 5,606 குழாய்க் கிணறுகள், 2003–2004இல் 4,976 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

* தீவிர நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ், இது வரை காவிரி ஆற்றுப்பாசனப் பகுதியில் 95 அனுசரணை ஆராய்ச்சி திடல்களும் தாமிரபரணி ஆற்றுப்பாசனப் பகுதியில் 86 அனுசரணை ஆராய்ச்சித் திடல்களும் நிறுவி உழவர்களுக்கு நேரடியாக இத்திட்டத்தினை விளக்கி வருகின்றது.

* ஒரு தனியான இணையதளம் ஏற்படுத்தி நவீன கணினி தொழில்நுட்பத்தின் மூலம் உழவர்களுக்கான வேளாண்மைச் செய்திகள் வானிலை மற்றும் வேளாண் சந்தை தொடர்பான தகவல்களைத் தெரிவித்து வருகின்றது.

* **மாநில திட்டத்தின்கீழ் தாமிரபரணி மற்றும் காவிரி பாசனப் பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி முறையில் உள்ள அடிப்படை தொழில்நுட்பங்களை தாலடி 2002 குறுவை 2003 ஆகிய பருவங்களில் நெல் சாகுபடிக்கு பல்வேறு முறைகளில் பரிசோதித்து பாரம்பரிய நெல் சாகுபடியுடன் ஒப்பிட்டு பார்த்ததில் நெல் விளைச்சல் 48.81 முதல் 52.51 சதவிகிதம் அதிகம் திருந்திய சாகுபடி முறையில் கிடைத்தது.**

தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலைப்
பண்ணை அமைத்தல்

உயர் தொழில்நுட்ப முறைகள் மற்றும் நுண்ணீர் பாசன முறைகளை கடைபிடித்து தோட்டக்கலைப் பயிர்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை பெருக்க தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் ரூ.720.60 இலட்சம் செலவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சுமார் 1,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோரிடையே 11.2.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் ஒரு புரிந்துணர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு பரிமாற்றம் செய்து கொள்ளப் பட்டது. முதலாண்டு தேவையில் 50 சதவிகிதத் தொகையான ரூ.66.80 இலட்சம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. பையூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் திட்ட அலுவலகம் ஆரம்பிக்கப் பட்டு பணிகள் தொடங்கப்பட்டு விட்டன.



நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர்
மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் சாகுபடியை மேம்படுத்த ரூ.50 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டத்தில் சுயஉதவிக் குழுக்களுக்கு 3 மாதிரி மலர் மையங்கள் அமைக்கப்பட்டது.

நீலகிரியில் தேயிலை தர மேம்பாடு திட்டத்திற்காக இதுவரையில் ரூ.63 இலட்சம் செலவிடப்பட்டு 56,608 சிறு மற்றும் குறு விவசாயிகள் இதன் மூலம் பயனடைந் துள்ளனர். 1,730 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 26,033 எக்டர் பரப்பளவில் தேயிலையின் தரம் உயர்த்தப்பட்டது.

ஹனுமா நதி திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் 2003–04 ஆம் ஆண்டில் ஹனுமா நதி துணை நீர் வடிப்பகுதியில் பல்வேறு தோட்டக்கலைத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ரூ.45 இலட்சம் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.5 இலட்சம் செலவில் திசு வாழை சாகுபடி மற்றும் வீரிய விளைச்சல் காய்கறி சாகுபடி ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 50 விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

கொய்மலர் ஏற்றுமதி மண்டலம்

**தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தை உள்ளடக்கி ஒசூரில் கொய்மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.600 இலட்சம் மதிப்புள்ள 170 மெட்ரிக் டன் (55 இலட்சம் குச்சிகள்) கொய்மலர்கள் ஐரோப்பா, மத்திய மற்றும் தூர கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.**

நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்

நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்திலிருந்து இதுவரை ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள 0.45 இலட்சம் காரனேஷன் குச்சிகள் (Carnation stems) மற்றும் 0.05 இலட்சம் லில்லியம்ஸ் குச்சிகள் (Lilium stems) ஜப்பான், சிங்கப்பூர், துபாய், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.



மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்

**தேனி மாவட்டத்தில், மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.**

முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.

வாழைக்கான ஏற்றுமதி மண்டலம்

வாழைக்கென திருச்சி மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படவுள்ளது.

**அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய உணவுப் பூங்கா ஒன்று திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது.**

ஆண்டிப்பட்டி, எழுமாத்தூர் மற்றும் தாத்தையங்கார் பேட்டை ஆகிய 3 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.25 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணியும், செம்பனார்கோவில், கம்பம், கொடுமுடி மற்றும் சேவூர் ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.0.77 கோடி செலவில் ஊரகக் கிடங்குகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.45.45 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினை குறைக்கும் பொருட்டு, ரூ.5 கோடி செலவில் 2002–03ஆம் நிதியாண்டில் 100 உலர்களங்களும், 2003–04ஆம் நிதியாண்டில் 150 உலர்களங்களும் அமைக்கப்பட்டுள்ளது. தேனி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 4 விற்பனைக் குழுக்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சாத்தான்குளத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 30.08.2003 அன்று திருநெல்வேலி விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மஞ்சள் பயிருக்காக ஈரோட்டிற்கு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது.

**விரிவான தரிசு நில திட்டம் 2003–2004இல் வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், தேனி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 33,229 எக்டேரில் 22,14,476 செடிகள் நடப்பட்டு 70.79 சதவிகிதம் சாதனை இலக்கு எய்தப்பட்டுள்ளது.**

❖ ❖ ❖



# பள்ளிக்கல்வி



கல்வி என்னும் வற்றாத செல்வம் தனி மனிதனின் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அறிவுத் திறனுள்ள சமுதாயத்தை உருவாக்கவும் அடித்தளமாக அமைகின்றது.

★ **தமிழ்நாட்டில் 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வி வழங்கிட "அனைவருக்கும் கல்வித் திட்டம்'' 2001–2002ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1,649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் திட்ட அறிக்கை முடிவு செய்த முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.**

★ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2001–2003ஆம் ஆண்டுகளில் ரூ.104.20 கோடி செலவிடப்பட்டு, புதிய பள்ளிகள் தொடங்குதல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், வட்டார கள ஆய்வு மையங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல், பள்ளிகளுக்கு குடிநீர், கழிப்பிட மற்றும் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2003–2004இல் இத்திட்டத்தின் கீழ் ரூ.401.84 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 2001–2004இல் 1,112 தொடக்கப் பள்ளிகள், 1,075 நடுநிலைப் பள்ளிகள், 260 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 300 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இதனால் குழந்தைகள் 5 ஆண்டு கல்வியை முடிக்க ஏதுவாக 100 சதவிகிதம் தொடக்கப் பள்ளி வசதி செய்து கொடுத்தல் என்ற இலக்கு நிறைவேற்றப் பட்டுள்ளது. 8 ஆண்டு கல்வியை அடைய ஏதுவாக நடுநிலைப் பள்ளிகள் வசதியானது 2004–2005இல் அடையப்படும். அதற்கென 364 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த கருதப்பட்டுள்ளது. மேலும், 2004–2005இல் 30 உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் 30 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்படும்.

★ முதல் முறையாக கல்வித் துறைக்காக 'நபார்டு' வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டமாக 346 உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99 கோடி செலவில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.96.06 கோடி செலவில், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

★ ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு தோறும் ஏறத்தாழ 4,661 தரம் வாய்ந்த மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெறவும் 1,560 நபர்கள் கூடுதலாகப் பயிற்சி பெற வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் 2001–2003இல் 10,178 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. 2003–2004இல் 12,000 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வயது வரம்பு நிர்ணயம் செய்யாமல் வெளிப்படையான போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது.

★ 867 கிராமப்புற நூலகங்கள் அமைக்கப்பட்டு மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி நடத்த ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோன்று சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

★ 1,197 மேல்நிலைப்பள்ளிகளில் +1, +2 மாணவர் களுக்கு கணினிக் கல்வி கற்றுத்தரப்பட்டு வருகிறது. அதன் மூலம் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களும் கணினிக் கல்வியின் பயனைப் பெற்று வருகின்றனர். அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பிலிருந்து கணினிக் கல்வி கற்றுத்தரப்படுகிறது.

★ 2003–2004ஆம் ஆண்டு அறிவியல் தமிழ் என்ற பாடத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை அறிமுகம் செய்து அதற்கென அப்புத்தகங்களை இலவசமாக வழங்க ரூ.5.42 கோடி செலவு செய்யப் பட்டுள்ளது.

★ கணினியைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பு அதிக அளவில் பெறுவதற்காக அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கில மொழியை கற்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் தோல்வியுறுவதை அறிந்து அதனைக் களைய 2003–2004ஆம் ஆண்டு முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப் பட்டுள்ளது.

★ +2 தேர்வில் அறிவியல் பாடச் செய்முறை தேர்வானது ஒரே நேரத்தில் நடத்துவதுதான் சரியானதொன்றாக இருக்கும் என கருதப்பட்டு செய்முறை தேர்வில் உள் தேர்வர் முறை நீக்கப்பட்டுள்ளது. புறத் தேர்வர்களே செய்முறைத் தேர்வினை நடத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, குழந்தைகளைப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கும்போது பெற்றோர்களது விருப்பப்படி தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் அதனையடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம் எனவும், அல்லது தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம். அல்லது தந்தையின் பெயரில் உள்ள முதலெழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாக பயன்படுத்தலாம் என அரசு ஆணையிட்டுள்ளது.**

## பள்ளி மாணவ–மாணவியர்களுக்கு இலவச பஸ் பாஸ்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

*தமிழ்நாட்டில் உள்ள மாணவ மாணவியர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திலும், அனைவருக்கும் கல்வி என்னும் கொள்கைக்கு உண்மையான அர்த்தம் தரும் வகையிலும் எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற புதிய கல்வி ஆண்டு முதல் 1 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயிலுகின்ற மாணவ மாணவியர்களுக்கு, அவர்களது வீட்டிலிருந்து பள்ளி சென்று வர இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும்.*



*இதே போல, எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்து கல்லூரிகளிலும் படிக்கின்ற அனைத்து மாணவ மாணவியர்களும் தங்கள் வீட்டிலிருந்து கல்லூரி சென்று வர ஏதுவாக 50% சலுகையுடன் பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும். சென்னை மாநகர கல்லூரி மாணவர்கள் சென்னை பெருநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய தற்போது 40 மாற்றிக் கொள்ளத்தக்க கூப்பன்கள் வழங்கப்படுவதற்கு மாற்றாக இனி 60 கூப்பன்கள் வழங்கப்படும்.*

## உயர்கல்வித்துறை

❖ தற்பொழுது உறுப்புக் கல்லூரிகளில் 41 புதிய இளங்கலை / அறிவியல் பாடப்பிரிவுகள் மற்றும் 68 முதுகலை / அறிவியல் பாடப்பிரிவுகள் சுயநிதி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது.

❖ 2003–2004ஆம் கல்வியாண்டில் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட புதிய உறுப்புக் கல்லூரிகள் முறையே சாத்தான்குளம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இளம் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு, இளங்கலை வணிக மேலாண்மை, இளங்கலை புவி அமைப்பியல் மற்றும் இளங்கலை வணிக மேலாண்மை ஆகிய புதிய பாடப் பிரிவுகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

❖ நாட்டிலேயே தரநிர்ணயம் செய்யப்பட்ட அதிக கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 68 கல்லூரிகள் தேசிய தகுதி மற்றும் தரநிர்ணயக் குழுவால் தரநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இதில் 26 உறுப்புக் கல்லூரிகளும், 42 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் அடங்கும். தற்சமயம் தமிழ்நாட்டில் 8 அரசுக் கல்லூரிகளுக்கும் 36 அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

❖ ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் பொது மாறுதல் 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டிலும் கலந்தாலோசித்தல் திட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்டது. 67 அரசு கல்லூரிகளுக்குமாக மொத்தம் ரூ.4,37,39,000/– பகிர்ந்தளிக்கப்பட்டு, கல்லூரிகளில் அடிப்படை வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ **அரசின் அகில இந்திய அளவில் நடைபெறும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் பெண்கள் சிறப்பாக பங்குபெறும் பொருட்டு சென்னை, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் (தன்னாட்சி) கல்லூரி ஆகிய** இரு பயிற்சி மையங்களில் பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு பயிற்சி மையத்தில் 60 மாணவிகள் வீதம் இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.





**மாணவர்களுக்கு**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவுரை**

*"நீங்கள் நன்றாக படிக்கவேண்டும். நன்றாக படியுங்கள். எதுவரை படிக்க இயலுமோ அதுவரை படியுங்கள். படிப்பு முடிந்து வாழ்க்கையில் முன்னேறியவுடன், உங்களைவிட கீழ்நிலையில் உள்ளவர்களை கைதூக்கிவிட உங்களால் முடிந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்ற உறுதியை நீங்கள் மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும்".*

❖ **கண் பார்வையற்ற மாணவர்களுக்கும் கணினி அறிவு வழங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்புகளில் ஒன்றாகும். கண் பார்வையற்ற மாணவர்கள் உணர்திரை மென்பொருள்** (Screen reading software) **உதவியுடன் சொல் தொகுப்பு மற்றும் மின்னனு விரிதாள்** (Word Processing and electronic spread sheets) **ஆகியவற்றில் பயிற்சி பெற இயலும். முதற்கட்டமாக மாநிலக் கல்லூரியில் பார்வையிழந்த மாணவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கும் பொருட்டு ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.**

❖ 14–12–2002 அன்று மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளுடன் அறிவுசார் இணைவுத் திறனை தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொலைமருத்துவ வசதியைத் தொடங்கி வைத்தார்கள்.

❖ நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளும் 2002–2003இல் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டன.

❖ மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தகுதிபெற்ற, குறைந்த வருவாய்ப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் உயர் கல்வி பெறும் வகையில் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 2002–2003ஆம் ஆண்டில் 48 மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.25,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ ஆங்கிலம் மற்றும் தமிழ் இளநிலை தட்டச்சுத் தேர்வுகளில் பங்கேற்க மாணவர்களுக்கு ஏற்கெனவே இருந்த தகுதியான "பத்தாம் வகுப்பு தேர்ச்சி" என்பதை "எட்டாம் வகுப்பு தேர்ச்சி" ஆக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

❖ பொறியியற் கல்லூரி சேர்க்கையில், ஊன முற்றோருக்காக 3% இட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

❖ மத்திய அரசின் தொழில்நுட்ப தரமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற தமிழ்நாடு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. ரூ.300 கோடி நிதியுதவி மேற்படி திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து கோரப்பட்டுள்ளவாறு இத்திட்டத்தின் மூலம் தொழில்நுட்பக் கல்வியின் தரம் மேலும் உயரும்.

❖ லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் உரையாடல் ஆங்கிலப் பாடத்தினை தமிழ்நாட்டில் உள்ள இணைப்புப் பெற்ற பொறியியற் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரிகளில், செயல்படுத்திட பிரிட்டிஷ் கவுன்சில் ஆப் இந்தியாவுடன் "ஒத்திசைவு ஒப்பந்தம்" ஏற்படுத்த தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதனால் ஒரு கல்லூரிக்கு 100 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் 50,000 மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

❖ தமிழக மக்கள் அனைவரும் பல்வேறு துறைகளில் உயர்கல்வியறிவு பெறவும், அறிவினை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும் வகையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



❖ "கல்வி பயிலும் போதே சம்பாதித்தல்" எனும் புதிய திட்டம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

❖ "உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளுக்கான பல்கலைக்கழகம்" 2004–2005ஆம் ஆண்டில் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

• • •




**ம**னித குலம் வாழவேண்டும் என்றால் மகளிர் நலம், குழந்தைகள் நலம் பேணப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் அரசு, பெண்கள் நலம், குழந்தைகள் நலம் என்பதைப் பேச்சோடு நிறுத்திவிடாமல் செயல்வடிவத்திலும் நிறைவேற்றுவதை தன் மூச்சாகவே கொண்டிருக்கிறது.

**பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில், 1,171 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.178 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் 6,717 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.1,069 இலட்சமும், 31.12.2003 வரை 24,885 பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் ரூ.2,417 இலட்சமும் செலவு செய்யப்பட்டது.

**சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்கள்**

- அரசு குழந்தைகள் காப்பகங்கள் – 25
- உணவீட்டுச் செலவினம் – ரூ.200/–லிருந்து ரூ. 225/– ஆக உயர்த்தப்பட்டது.
- சீருடைக்கான தொகை ரூ.300லிருந்து ரூ.400/ – ஆகவும், ரூ.400லிருந்து ரூ.500/– ஆகவும் உயர்த்தப்பட்டது.
- தருமபுரி மற்றும் மதுரையில் அரசுக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு.
- குழந்தைகளுக்கு இலவச மிதி வண்டிகள்.
- ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட, உடல் ஊனமுற்ற பெண்களின் நலன் காக்க 2003–2004இல் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் புதிய சேவை இல்லங்கள் அமைப்பு.

**தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்**

- திருமண உதவித் தொகை ரூ.10,000லிருந்து ரூ.20,000ஆக உயர்த்தப்பட்டது.
- ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு முற்றிலும் தளர்த்தப்பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றோர் எண்ணிக்கை 3,647 பேர், செலவு ரூ.725.10 இலட்சம்.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம்**

- இத்திட்டத்தின்கீழ், கடந்த மூன்றாண்டுகளில் பயன் பெற்றோர் எண்ணிக்கை 493 பேர், செலவு ரூ.49.30 இலட்சம்.

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கான திருமண நிதி உதவித் திட்டம்**

- நிதியுதவி ரூ.7,000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப் பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன் பெற்றோரின் எண்ணிக்கை 3,858 பேர், செலவு ரூ.303.53 இலட்சம்.

**அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்**

- நிதியுதவி ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தப்பட்டது.
- கடந்த மூன்றாண்டுகளில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 344 பேர், செலவு ரூ.27 இலட்சம்.

**சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தில், கடந்த மூன்றாண்டுகளில் ரூ.430.89 இலட்சம் செலவில் 20,865 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

**தொட்டில் குழந்தைத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் தோன்றிய சீரிய திட்டம்தான் தொட்டில் குழந்தைத் திட்டம். சமுதாயத்தில் ஒருசில இடங்களில் நிலவும் கொலை எனும் கொடூர பழக்கத்திலிருந்து பெண் சிசுக்களைக் காப்பாற்றி, அவர்களும் இந்த நாட்டின் குடிமகள்கள், வருங்கால



தலைமகள்கள் என்பதை உணர்த்திடும் வகையில், இத்திட்டத்தினை உலகம் போற்றிடும் வகையில் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. தருமபுரி, சேலம், திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் வரவேற்பு மையங்களை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டு, ரூ.24.36 இலட்சத்தினை இவ்வரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2001–2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.4.92 இலட்சம், 2002–2003ஆம் ஆண்டில், ரூ.1.75 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. 2003–04ஆம் நிதியாண்டிற்கு 5 வரவேற்பு மையங்களுக்கும் ரூ.24.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**முதியோர் நலன்**

முதியோர் இல்லத்தின் மூலம் பயன்பெறும் ஒரு முதியவருக்கு மாதம் ரூ.250 என வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு செலவினத்தை மாதம் ரூ.500/– என உயர்த்தி இவ்வரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 9 முதியோர் இல்லங்களுக்கு 2001–2002ஆம் நிதியாண்டிற்கு ரூ.8.27 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.12.71 இலட்சமும் இவ்வரசு செலவு செய்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் புதியதாக நான்கு முதியோர் இல்லங்களை தோற்றுவிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 465 முதியோர்களுக்கு 2003–2004ஆம் ஆண்டில் ரூ.17.71 இலட்சம் அரசு செலவினம் மேற்கொண்டுள்ளது.

**தத்துத் திட்டம்**

மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் என்ற இலக்கை எய்தும் வகையில், 23 நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதற்கு 2003–04 நிதியாண்டிற்கு, அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆதரவற்ற இல்லங்கள் மற்றும் இதர அறநிலையங்களுக்கான சட்ட வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை 431 நிறுவனங் களுக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**குடிமகள்**

"CITIZEN" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் "குடிமகன்" என்ற சொல் மட்டுமே இதுவரை பொருளாக இருந்து வந்தது. பெண்களுக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் அச்சொல்லுக்குச் சரியான பெண் பால் சொல்லாக "குடிமகள்" என வழங்கி, அரசாணையை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. அதற்கு, பெண்களிடையே பெருத்த வரவேற்புக் கிடைத்துள்ளது.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்**

- ரூ.3.79 இலட்சத்தில் 962 தாய்மார்கள் எடை எடுக்கும் கருவிகள், ரூ.43.47 இலட்சம் செலவில் 10,869 குழந்தைகள் எடை கருவிகள் மற்றும் ரூ. 4.11 கோடி செலவில் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.





- நகராட்சிப் பகுதிகளில் உள்ள 435 குழந்தை நல மையங்களுக்கு ரூ. 4.85 இலட்சம் செலவில் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள், நகராட்சிப் பகுதிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள 617 குழந்தை நல மையங்களுக்கு ரூ. 5.12 இலட்சம் செலவில் 2003–04ஆம் ஆண்டிற்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.58.08 இலட்சம் செலவில் 10,421 மருந்துகள் அடங்கிய பெட்டிகள், ரூ.55.87 இலட்சம் செலவில் குழந்தைகளுக்கு விட்டமின் 'ஏ' திரவம் 96,950 பாட்டில்கள் (ஒவ்வொன்றும் 100 மி.லி வீதம்) வாங்கி வழங்கப்பட்டது. ரூ.21.06 இலட்சம் செலவில் 390 இலட்சம் இரும்புச்சத்து மாத்திரைகள் வளரிளம் பெண்களுக்கு வாங்கப்பட்டுள்ளது. ரூ. 21.82 இலட்சம் செலவில் ஐந்து மாவட்டங்களில் (தேனி, கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் பெரம்பலூர்) உள்ள 5 வட்டாரங்களில் உள்ள குழந்தைகளுக்கு எம்.எம்.ஆர் தடுப்பூசியும், வளரிளம் பெண்களுக்கு ருபெல்லா தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது.
- ரூபாய் 7 கோடி செலவில் 10,000 அங்கன்வாடி மையங்கள் பழுது பார்க்கப்பட்டன. ரூ.70.51 இலட்சம் செலவில் 24 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் 1,575 குழந்தை நேய கழிப்பிடங்கள், ரூபாய் 7.95 கோடி செலவில் 24 மாவட்டங்களில் 159 குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் மற்றும் கிடங்கு, ரூ.102.50 இலட்சம் செலவில் 82 அங்கன்வாடி மையங்கள், ரூ. 50 இலட்சம் செலவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் கட்டப்பட்டு வருகின்றது.

பணியாளர்களுக்கு பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி மற்றும் புதுமையான பயிற்சிகளின் மூலம் 48,700

அங்கன்வாடி பணியாளர்கள், 28,000 அங்கன்வாடி உதவியாளர்கள், 1,250 மேற்பார்வையாளர்கள் மற்றும் 335 இதர அலுவலர்கள் பயனடைந்துள்ளனர். பயிற்சிகள் நடத்துவதற்கு ரூ.10.44 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**529 புதிய அங்கன்வாடி மையங்கள் திறக்கப் பட்டுள்ளன.** கடந்த இரண்டு ஆண்டுகளில் 0.5 சதவிகிதமாக இருந்த கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை குழந்தைகள் 0.15 சதவிகிதமாகவும், 10.5 சதவிகிதமாக இருந்த மிதமான ஊட்டச்சத்து பற்றாக்குறை குழந்தைகள் 4.27 சதவிகிதமாகவும் குறைந்துள்ளது.

- ➢ எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 23 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகித மாக குறைந்துள்ளது.
- ➢ சத்துணவு அளிப்பதன் மூலம் எடை கூடுகின்ற குழந்தைகளின் சதவிகிதம் 45இல் இருந்து 51 ஆக உயர்ந்துள்ளது.
- ➢ பாதுகாப்பற்ற பிறப்பு, இடைவெளியில் பிறக்கும் பிறப்புகளின் சதவிகிதம் 43இல் இருந்து 28 ஆக குறைந்துள்ளது.
- ➢ அங்கன்வாடி மையங்கள்/குழந்தை நல மையங்களில் உள்ள முன்பருவ கல்வி குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்து குறைபாட்டினை போக்கும் பொருட்டு மதிய உணவில் முருங்கை இலை/ கருவேப்பிலை பொடியினை சேர்த்து, ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 2 கிராம் வீதம் , 20 பைசா செலவில் வாரத்தில் ஐந்து நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம், முன்னோடி திட்டமாக 12.11.2003 முதல் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி, பெரியகுளம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் பரங்கிமலை, காஞ்சிபுரம் (கிராமம்), வேலூர் மாவட்டம் அணைக்கட்டு, பேரணாம்பட்டு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம், வெம்பாக்கம் வட்டம், கடலூர் மாவட்டம் கடலூர் (கிராமம்), குறிஞ்சிபாடி, பெரம்பலூர் மாவட்டம் திருமானூர், வேப்பந்தட்டை ஆகிய வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 35,000 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இதற்காக வருடத்திற்கு ரூபாய் 22 இலட்சம் செலவாகிறது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்**
**சத்துணவுத் திட்டம்**

1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு 2,082 பள்ளிச் சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 4,75,607 பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள்.

## சத்துணவில் கூடுதலாக முட்டை வழங்கப்படும்

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பு

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் மூலம் தற்போது 2 வயது முதல் 15 வயது வரையிலான அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திட்டம் உணவுப் பாதுகாப்பு வழங்குகின்ற மிக முக்கியமான திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு குழந்தையும் சரிவிகித சத்துணவு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கும் மேலும் இரண்டு நாட்கள் பருப்பு வகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தேன். இந்த உணவை மேலும் சத்துள்ளதாக ஆக்க வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்கிட தற்போது நான் ஆணையிட்டுள்ளேன். வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் பருப்பு வகைகள் என்பதுடன் கூடுதலாக முட்டை வழங்கப்படும்.

**ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்கள்**

- 2001–2002 ஆம் ஆண்டு 300 ஊனமுற்ற நபர்கள் கணினி பயிற்சியின் மூலம் பயன்பெற்றனர்.



2003–2004ஆம் ஆண்டு ரூ.9.93 இலட்சம் செலவில் 109 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ஆய்வுக் கூட தொழில் நுட்பப் பயிற்சி 2001–2002ஆம் ஆண்டு 118 ஊனமுற்ற நபர்களுக்கும், 2003–2004ஆம் ஆண்டு ரூ.10.06 இலட்சம் செலவில் 60 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத நபர்களுக்கும் அளிக்கப்பட்டது. ரூ.8.16 இலட்சம் செலவில் 32 கை, கால் ஊனமுற்ற மற்றும் காது கேளாத பெண்களுக்கு 2003–2004ஆம் ஆண்டில் அழகுக் கலை பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சிறப்புப் பள்ளிகளின் விடுதியில் தங்கிப் பயிலும் ஊனமுற்ற மாணவ/மாணவியர்களுக்கு உணவூட்டு



மானியம் தலா ரூ.200/– வீதம் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.99.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 4,967 பேர்களும், 2002–2003இல் ரூ.96.24 இலட்சம் ஒதுக்கீட்டில் 4,812 பேர்களும், 2003–2004இல் ரூ.126.42 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 6,321 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

- தனியார் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் 10,060 ஊனமுற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு பாட நூல் சிறப்பு நிறுவனம் மூலம் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்க ரூ.8.53 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை 13,700லிருந்து 15,000 ஆக உயர்த்தப்பட்டு ரூ.117.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்கு பாடங்களை வாசித்துக் காண்பிப்பவருக்கான உதவித்தொகை வருடத்திற்கு ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் குழு காதொலி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2003–2004ஆம் நிதி ஆண்டில் உலக ஊனமுற்றோர் தின விழாவில் ரூ.5 இலட்சம் செலவில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஊனமுற்றோருக்கென நடத்தப்பட்டது.

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசியத் திட்டம் 4 மாவட்டங்களில் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.1.30 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 2003–2004இல் இத்திட்டம் ரூ.1.68 கோடி செலவில் தொடரப்பட்டு வருகிறது.

ஊனமுற்றவர்களுக்கு தடையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் தலைமைச் செயலகத்தில் ரூ.20 இலட்சம் செலவில் சாய்வுதளமும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சாய்வுதளமும் அமைக்க மாவட்டத்திற்கு ரூ.1.5 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

அ) காது கேளாத வாய் பேசாதவரை திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/–ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஆ) கை, கால் ஊனமுற்றோரை திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ.7,000/–லிருந்து ரூ.10,000/–ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2001–2002ஆம் ஆண்டு முதல் 7,400–லிருந்து 8,400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 2003–2004ஆம் ஆண்டிலிருந்து மாதாந்திர உதவித் தொகை ரூ.150/–லிருந்து ரூ.200/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மன நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையங்களை முறைப்படுத்துதலுக்கான தமிழ்நாடு மன நோயால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு மையங்கள் பதிவு விதிகள் 2002 இந்தியாவிலேயே முதலாவதாக வெளியிடப்பட்டது. (Tamil Nadu Registration of Psychiatric Rehabilitation Centres for Mentally ill Persons Rules 2002)

ஊனமுற்றோருக்கு 'அ' மற்றும் 'ஆ' பிரிவு பணியிடங்களில் பணி நியமனம் செய்ய ஏற்ற பணியிடங்கள் கண்டறியப்பட்டு பணி நியமனம் செய்ய வழி வகை செய்யப்பட்டு வருகிறது. ஊனமுற்றோருக் கென சில பணியிடங்கள் கண்டறியப்பட்டு அப்பணியிடங்களில் ஊனமுற்றோரை மட்டுமே கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் பணிக்கு செல்வோர் பள்ளி, மருத்துவமனை, பணியிடம் செல்ல ஏதுவாக 13,000 நபர்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள சலுகை வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கு சுயதொழில் துவங்க வங்கிகள் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதுடன் கடன் தொகைக்கு ரூ.2000/–ம் பெட்டிக் கடை வைக்க ரூ.5000/–ம் அதிகபட்ச மானியமாக வழங்கப்படுகிறது.

ரூ.25 இலட்சம் செலவில் ஊனமுற்றோர் மறுவாழ்வுக் கான மாநில வள ஆதார மையம் அமைக்கவும், ரூ. 5 இலட்சம் செலவில் ஊனமுற்றோருக்கான பிரெய்லி நூலகம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்லூரிக் கட்டணச் சலுகை விலக்குப் பெற பார்வையற்றோருக்கு விதிக்கப்பட்டிருந்த ஆண்டு வருமான வரம்பினை ரூ.9000/–லிருந்து ரூ.24,000/– ஆக இவ்வரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

## சமூகப் பாதுகாப்புத் துறை

தவறிழைத்த குழந்தைகளின் வழக்குகளை விசாரிப்பதற்காக 8 இளைஞர் நீதிக் குழுமங்களும், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கவனிக்க 18 இளைஞர் நலக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது.

நவம்பர் 2002இல் குழந்தைகள் பிச்சை எடுத்தலை தடுக்க நகர அளவிலான குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு உதவ குழந்தைகளின் இலவச தொலைபேசித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலவச தொலைபேசி



எண். 1098 நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சமீப காலங்களில் இத்தொலைபேசி வசதி 102 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு குழந்தைகளின் சேவைக்காக மாநிலம் முழுவதும் அமலாக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிக ரீதியில் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதை தடுக்க ஒவ்வொரு கிராமங்களிலும் தமிழகத்தில்தான் முதன் முதலாக கிராம அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அரசினால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்கத்தின் ஒரு பாகமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் வணிகரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபட்டுவந்த மகளிர்க்கெனவும் மற்றும் கடத்தப்பட்ட மகளிர்க்கெனவும் 177 க்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 1,336 உறுப்பினர்கள் உள்ளனர்.**

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூக பாதுகாப்பு நல நிதி இத்திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட மகளிர் 153 பேரின் மறுவாழ்வுக்கென தலா ரூ.500/– வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற முதியோர் (சாதாரணம்), ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற விவசாயக்கூலிகள், ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர்களுக்கான உதவித்தொகையை 2001–2002இல் 1,17,430 பேர்களும், 2002–2003இல் 11,85,881 பேர்களும், 2003–2004இல் 12,08,504 பேர்களும் பெற்று பயனடைந்துள்ளனர்.

முதியோர் ஒய்வூதியம் பெறும் அனைத்து பயனாளி களுக்கும், அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் ஆதரவற்ற மிகவும் வயது முதிர்ந்த 71,974 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ உணவு தானியம் மைய அரசு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளுக்கு ஒய்வூதியம், இலவச அரிசி மற்றும் இலவச கைத்தறி வேட்டி சேலை ஆகியவை 2001–2002இல் ரூ.28,477.83 இலட்சம் செலவிலும் 2002–2003இல் ரூ.32,980.11 இலட்சம் செலவிலும், 2003–2004இல் ரூ.33,624.65 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டது.

நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின்கீழ் 2001–2002 முதல் 2003–2004வரை பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 43,718. செலவு ரூ.4,371.70 இலட்சம் ஆகும்.

## தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

2001 முதல் நடப்பு மாதம் வரை மொத்தம் 64.50 கோடி ரூபாய் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து செலவிடப் பட்டுள்ளது.

2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் சுமார் 1,57,958 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 26,85,717 பெண்கள் பயனடைந்துள்ளனர். இதில் 200 அரவாணிகள், 706 விலைமாதர்கள், 2,656 உடல் ஊனமுற்றோரும் அடங்குவர்.

குழுக்களின் சேமிப்பு 2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் ரூ.422.74 கோடியாகும். இக்குழுக்களுக்கு பிப்ரவரி 2004 வரை 722.02 கோடி ரூபாய் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

நலிவுற்ற பெண்கள் சுயமாகத் தொழில் தொடங்கி நடத்திட தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 5 இலட்சம் பெண்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டு, 2001 முதல் நடப்பு மாதம் வரை மட்டும் பிற அரசு நிறுவனங்களுடன் இணைந்து 3,66,107 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மட்டும் ரூ.472.85 இலட்சம் செலவில் 62,925 பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்துள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற பெண்கள், தாமாக சுயதொழில் தொடங்க ஏதுவாக ரூ.100 இலட்சம் செலவில் 31,307 பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளித்துள்ளது. இவற்றுடன் மற்ற அரசுத் துறை பயிற்சியினையும் சேர்த்து சுமார் 76,148 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

கிராமப்புற ஏழை எளிய பெண்கள் விறகு அடுப்பில் சமைத்து கஷ்டப்படுவதிலிருந்து விடுபடும் பொருட்டு 25,000 ஏழை எளிய சுயஉதவிக்குழு பெண்கள் வீட்டு புதுமணத் தம்பதிகளுக்கு இலவச எரிவாயு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ரூ.1.10 இலட்சம் செலவில் புதிதாக 25 பெண்கள் மனமகிழ் மன்றங்கள் 13 மாவட்டங்களில் உருவாக்கப்பட்டு வருகின்றது.

• • •



# வளர்ச்சி நோக்கில் தொழில் வணிகத்துறை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதன் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே அமையும். அதுவும் சிறு மற்றும் குறுந்தொழில்களின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாத தாகும். அவ்வகையில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்துவரும் தமிழக அரசு சிறு மற்றும் குறுந் தொழில்களை வளரச் செய்ய பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது.

சிறுதொழில்களுக்கு பல ஆண்டுகளாக அளிக்கப் பட்டு வந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமைகள் 1997ஆம் ஆண்டில் விலக்கிக் கொள்ளப் பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பினால், தொழில் வளர்ச்சி வெகு வாகக் குறைந்தது. அரசு இவ்வாணையை விலக்கிக்கொண்டு தமிழ்நாடு 1998ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டத்தில் திருத்தம் செய்து, சிறுதொழில் நிறுவனங்களுக்கு விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் 1.12.2001 முதல் வழங்கியது. இதன் மூலம் அரசு கொள்முதல்களில் 15 சதவிகிதம் விலை முன்னுரிமை வழங்கப்படுகிறது.

சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்படவேண்டிய 358 இனங்கள் திறந்த ஒப்பந்தபுள்ளிகள் மூலம் வாங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.



தற்காலிக சிறுதொழில் சான்றிதழை எளிதில் விரைந்து பெற ஏதுவாக, தற்போது ரூ.50/– சேவைக் கட்டணமாக செலுத்தி, அரசு ஒப்புதல் அளித்த இணையதள மையங்களில் நேரடியாகப் பெறும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 31.3.2004 வரை 38,349க்கு மேல் சான்றிதழ்கள் ஒப்புதல் அளிக்கப்பட்ட 262 இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதியைப் பெருக்கவும், தொழில் முனைவோரை ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கவும் ஒவ்வொரு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் ஏற்றுமதி சேவை மையத்தை ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமமும், தொழில் வணிக இயக்குநர் அவர்களின் தலைமையில் மாநில அளவில் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமமும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில் "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்றை அரசு அறிவித்தது. அந்தந்தப் பகுதிகளில் விளையும் வேளாண் பொருட்களை உபயோகித்து, குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்திற்கு மூலதன மானியம் மற்றும் பிற மானியங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ரூ.20 இலட்சம் முதலீட்டில் 5 தொழில்கள் அமைக்க முடியும்.

தோட்டப்பயிர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், மலர்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கயிறு மற்றும் தென்னை நார் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட வேளாண்சார் தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்களின் முதலீட்டில் 15% (அதிகபட்சமாக ரூ.15 இலட்சம்) சிறப்பு மூலதன மானியமாக வழங்கப்படும்.

31.3.2004 வரை தமிழகத்தின் 385 வட்டாரங்களில் 765 திட்டங்களுக்கு ரூ.532.26 கோடி திட்ட முதலீட்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்சார் / உணவு பதப்படுத்தும் தொழில்கள் தொடங்க மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒப்புதலளித்துள்ளது.

91 தொழில் அலகுகளின் மூலம் மொத்தம் ரூ.60.38 கோடி திட்ட மதிப்பீட்டில் உற்பத்தியை தொடங்கியுள்ளன. 2,878 மகளிர் உள்ளிட்ட சுமார் 4,135 ஊரகப் பகுதி மக்களுக்கு இந்த 91 அலகுகள் வேலைவாய்ப்பு அளித்துள்ளன.

சிறுதொழில் நிறுவனங்களை நவீனப்படுத்தவும், ஊக்குவிக்கவும், 2003–2004ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு, தொழில்நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்குதல், ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெறுதல், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகள், தேசிய கடன் மீது விளிம்பு நிதி திட்டம், கூட்டுக் கடன் திட்டம் ஆகியவற்றுக்காக நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு பின் முனை வட்டி மானியம் வழங்குதல் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.



* வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 10 குதிரை சக்தி மின்சார திறனுக்கு கீழ் உள்ள குறுந்தொழில்களுக்கு, 2003–2004ஆம் ஆண்டில் இருந்து குறைந்த அழுத்த மின் வசதி சலுகை வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறைந்தது 10,000 குறுந்தொழில்கள் பயன் பெற்றுள்ளன.

* சவ்வரிசி தயாரிக்க பயன்படுத்தும் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்கவும், சவ்வரிசி தொழிற் கூட்டுறவுச் சங்கம், சேலம் (சேகோசர்வ்) நிறுவனத்திற்கு விற்பனை வரிச் சலுகை அளித்துள்ளது.

* தேயிலை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க அமைக்கப்பட்ட டீ சர்வ் ஏல மைய நிறுவனத்திற்கு விற்பனை வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

* 2001–2002 நிதியாண்டில் 32,544 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், 2002–2003 நிதியாண்டில் 32,387 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், 2003–2004 நிதியாண்டில் 26,545 சிறு தொழில் நிறுவனங்களுக்கும் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, கடந்த மூன்றாண்டுகளில் ரூ.2,367 கோடி நிரந்தர முதலீட்டுடன் 6,65,916 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

* 2001–2002ஆம் ஆண்டு முதல் 2005–2006ஆம் ஆண்டு முடிய ஒரு ஆண்டிற்கு 25,000 மகளிர் என்ற விகிதத்தில் 5 ஆண்டுகளில் 1,25,000 பெண்களுக்கு "ஐந்து இலட்சம் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் 7 நாட்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

* 2001–2002ஆம் ஆண்டில் 25,259 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுள் 10,942 மகளிர் தொழில் நிறுவனங்கள் தொடங்கியுள்ளனர்.

* 2002–2003ஆம் ஆண்டில் 25,139 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 8,845 தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

* 2003–2004ஆம் ஆண்டில் 25,137 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 5,137 மகளிருக்கு பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், 8,828 தொழில்நுட்பக் கல்வி பயின்ற மகளிருக்கு, 11,172 மகளிருக்கு சுயநிதி உதவிக் குழுக்களிலிருந்து பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

* பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா என்ற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், 59,222 நபர்களுக்கு கடன் ஒப்புதல் வங்கிகளிடம் பெறப்பட்டு அதில், 43,223 நபர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

ஒற்றைச் சாளர முறை கூட்டம் மூலம் புதிதாகத் தொழில் தொடங்க இத்துறை உதவி புரிந்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், 3,154 மனுக்கள் பெறப்பட்டு 3,073 மனுக்கள் தீர்வு காணப்பட்டது.

2003–2004ஆம் ஆண்டில் 181 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலையின் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகக் கடைகளில் ஊட்டி டீ என்ற பெயரில் தேயிலைத் தூளை விற்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தரவு பிறப்பித்தார்கள். இத்திட்டத்தின்படி 31.3.2004 முடிய ரூ.55.40 கோடி மதிப்பிலான 7,386 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஊட்டி டீ விற்பனை மூலம் கிடைத்த வருமானத்திலிருந்து ஒரு பகுதியை தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் மூலம் அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கூடுதலாக பச்சைத் தேயிலைக்கு விலை வழங்கியும் உள்ளது.

சந்தை தேவைக்கேற்ப தரத்தை உயர்த்தும் வகையில் ரூ.2.32 கோடி திட்ட மதிப்பில் 11 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மேம்படுத்தப்படுகிறது. இத்திட்ட செலவில் 50 சதவிகிதத்தை தேயிலை வாரியம் ஏற்றுக் கொள்கிறது.

தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப்படையாக நடத்துவதற்காக ஒரு புதிய ஏல மையத்தை டீசெர்வ் என்ற பெயரில் கூட்டுறவு முறையில் நிறுவப்பட்டு, 31.3.2004 முடிய 80,67,294 கிலோ கிராம் தேயிலைத் தூளை ஏலம் மூலம் விற்பனை செய்துள்ளது.

மிக வெற்றிகரமாக நடைபெறும் தொழிற் கூட்டுறவுகளில் ஒரு எடுத்துக்காட்டாக சேகோசர்வ் நமது மாநிலத்தில் விளங்கி வருகிறது. சேகோசர்வ், 2001–02, 2002–03 மற்றும் 2003–04 நவம்பர் முடிய ஆண்டுகளில், முறையே ரூ.204.70 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளது.



சென்னை தாய்கோ வங்கி திரட்டிய வைப்பு நிதி 31–3–2004 அன்றுள்ளவாறு ரூ.179.47 கோடி, வழங்கிய கடன்களும் முன்பணமும் ரூ.133.89 கோடி ஆகும்.

173 ஆட்டோக்கள் வாங்குவதற்கு ரூ.86.86 இலட்சம் அளவுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் இலவம் பஞ்சுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இதன் மூலம் 437 உறுப்பினர்கள் பயனடைந்து ரூ.34.62 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை வருசநாடு முந்திரி பதப்படுத்துதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு முந்திரிப் பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கம் ரூ.5.89 இலட்சம் மதிப்புள்ள 18.50 மெ.டன் முந்திரிக் கொட்டைகளை கொள்முதல் செய்து ரூ.5.99 இலட்சம் அளவிற்கு 2003–2004ல் விற்பனை செய்துள்ளது. 275 உறுப்பினர்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாவர்.

கோயம்புத்தூர், பொன் நகைத் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச்சங்கம், 2003–2004இல் ரூ.2.82 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. இச்சங்கத்தின் மூலம் 200 பொற்கொல்லர்கள் பயன் பெறுவார்கள்.

பெரம்பலூர் மாவட்டம் செயங்கொண்டத்தில் ரூ.16.78 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தந்தை பெரியார் முந்திரி பதப்படுத்துதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 27.01.2003 அன்று பதிவு செய்யப்பெற்றது.

மைக்கால் என அழைக்கப்படும் சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகத்தின் செயல்பாடுகளை ரூ.10.13 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்காக கருவிகள் வாங்குவதற்கென ரூ.7.50 இலட்சம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டு, இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பு அலகுகளான 283 உறுப்பினர்கள் இச்சங்கத்தினால் பயன்பெறுவதுடன், 31 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

'கோஸ்மிகோ' (KOSMICO) தீப்பெட்டிச் சங்கத்திற்கு புத்துயிரூட்டப்பட்டு, 2002ஆம் ஆண்டு மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. அச்சங்கம் 124 உறுப்பினர்கட்கு வேலைவாய்ப்பு நல்கும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரு தீப்பெட்டி சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரே சங்கமாக இணைக்கப்பட்டு, மார்ச் 2003 முதல் 'சாஸ்மிக்' (SASMIC) என்ற பெயரில் செயல்படத் தொடங்கி உள்ளது. இச்சங்கத்தினால் 70 உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்த மூன்றாண்டுகளில் ரூ.92.84 இலட்சம் சந்தைமேம்பாட்டு உதவி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 5,000 கயிறுத் தொழிலாளர்கள் பயனடைவார்கள். ★

## குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட 'H' முத்திரை நீக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிவிப்பு

"பொது விநியோகத் திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து பொதுமக்கள் பெருமளவில் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள விநியோக முறையை மேலும் மேம்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

குடும்ப அட்டைகள் மீது 'H' முத்திரையிடும் முறை உடனடியாக திரும்பப் பெறப்படுகிறது. 'H' முத்திரையிடப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் இந்த முத்திரை பெறுவதற்கு முன்னர் நியாய விலைக் கடைகளில் என்னென்ன பொருள்களை பெற்று வந்தார்களோ அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

மாதத்திற்கு ரூபாய் 5,000 வரை வருமானம் உள்ளவர்கள்தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு தகுதி உள்ளவர்கள் என வரையறுக்கப்பட்ட வருமான வரம்பு உடனடியாக விலக்கப்படுகிறது.

தங்களுக்கு குடும்ப அட்டைகள் இல்லை என்றும், புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ள குடும்பதாரர்கள் புதிய குடும்ப அட்டை பெற எதிர்வரும் 2004–ஜூன் திங்கள் 1 ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை மாவட்டங்களில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களிலும், சென்னையில் உள்ளவர்கள் உணவு பொருள் வழங்கும் உதவி ஆணையர் அலுவலகங்களிலும் விண்ணப் பிக்கலாம். இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உரிய ஆய்வுக்கு பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

தற்போதுள்ள அனைத்து குடும்ப அட்டைகள் 31.12.2004 வரை செல்லுபடியாகும். இந்த குடும்ப அட்டைகளை புதுப்பிக்க விரிவான கால அட்டவணை வகுக்கப்பட்டு தனியாக அறிவிக்கப்படும். இவ்வாறு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படும்போது அரிசியுடன் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் பெறும் வகையிலும் அல்லது சர்க்கரை / மண்ணெண்ணெய் மட்டுமே பெறும் வகையிலும் குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். தற்போது உள்ள நடைமுறைப்படி விருப்பத்தின் பேரில் அரிசி அட்டைக்குப் பதிலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் அட்டை பெற இயலும்.

நியாய விலைக் கடைகளில் கூப்பன் கொடுத்து அரிசி பெறுகின்ற முறை எதிர்வரும் ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நிறுத்தப்படும். நடப்பில் உள்ள அரிசி பெறத் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் கூப்பன் முறை இல்லாமலேயே தங்கள் அட்டைகளுக்குரிய அரிசியை 2004 ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம். ●

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



அறிவித்துள்ளார்கள். "அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருவதே'' இவ்வரசின் இலக்கு ஆகும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அத்தியாவசியப் பொருட்களைப் பெற வழிவகுக்கும் பொதுவிநியோகத் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

★ விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்படி 6,11,193 விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவில் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், அவர்கள் கூட்டுறவு வங்கியிலிருந்து பயிர் சாகுபடிக்காக பெற்ற கடன்களுக்கு ரூ.61.05 கோடி அளவில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளின் குறுகிய கால பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன்களுக் கான வட்டி விகிதம் 15 சதவிகிதத்திலிருந்து 11 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. உழைக்கும் மகளிருக்கும், மகளிர் தொழில் முனை வோருக்கும் வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 15 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 1,15,029 நபர்களுக்கு ரூ.38.17 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. சுய உதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வங்கிகளில் 44,091 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இதுவரை சேர்க்கப்பட்டு 149.50 கோடி ரூபாய் அளவிற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகர கூட்டுறவு வங்கிகளும், ரூ.10 இலட்சம் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 12 சதவிகித வட்டி விகிதத்தில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்குவதற்கு கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ரூ.7.71 கோடி அளவிற்கு 1,130 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மாத வருமானம் பெறும் மகளிருக்கான கடன் திட்டத்தின் கீழ் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு கூட்டுறவு வங்கிகள் வாயிலாக ரூ.1,00,000/– வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 9,089 மகளிருக்கு ரூ.19.77 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. பேறுகாலத்தில் நிதி வசதியில்லாமல் இருக்கின்ற தாய்மார்களுக்கு உதவி செய்யும் முகமாக, தேவைப்படும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் ரூ.2,000/– வரை பேறுகாலக் கடன் 11 சதவிகித வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 13,397 பெண்களுக்கு ரூ.2.90 கோடி பேறுகாலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் மூலம் கிராமப்புற வீட்டு வசதிக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2004 முடிய 2,315 நபர்களுக்கு ரூ.28.98 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ.4,478.32 இலட்சமாகும். இதில்



மாநில அரசின் உதவித் தொகை ரூ.422.19 இலட்சமாகும்.

★ கூட்டுறவுத் துறைக்கான இணையதளம் (Web site) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் இதுவரையில் ரூ.278.87 இலட்சம் மதிப்புள்ள கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒட்டு மொத்த கடன் தீர்வுத் திட்டத்தில் (One Time Settlement Scheme) இதுவரையில் 24,138 நபர்கள் ரூ.124.70 கோடி அளவிற்குப் பயனடைந்துள்ளனர். தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 1,36,817 விவசாயிகளுக்கு மாநில அரசின் பங்கு ரூ.21.77 கோடியையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ரூ.48.70 கோடி அளவிற்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

★ நியாயவிலைக் கடைகளின் மூலம் 6,012 மெ.டன் ஊட்டி தேயிலைத்தூள் விற்பனை செய்யப் பட்டுள்ளது.

★ 1,570 இனங்களில் ரூ.45.21 கோடிக்கு தண்ட வசூல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு 1,147 இனங்களில் ரூ.13.02 கோடி வசூல் செய்யப் பட்டுள்ளது.

★ கடந்த மூன்றாண்டுகளில் கூட்டுறவு வங்கிகளால் குறுகியகால வேளாண்மை கடன், நடுத்தரகாலக் கடன், நீண்டகால வேளாண்மைக் கடன், நகைக் கடன், பண்ணை சாராக் கடன், வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடன், தொழில் முனைவோருக்கான கூட்டுறவுக் கடன்கள் மற்றும் வீடு கட்டக் கடன் ரூ.18,021.37 கோடி வழங்கப் பட்டுள்ளது.

★ கடந்த 25 ஆண்டுகளுக்குமேல் நடைமுறையில் இருந்து வந்த நெல் மற்றும் அரிசி லெவி முறையை (100% levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்றியது இந்த அரசின் மாபெரும் சாதனையாகும்.

★ இவ்வரசு, மக்களுக்குத் தரமான அரிசியை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மைய அரசிடமிருந்து அரிசியைப் பெற்றுக் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்வதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. இதற்கேற்ப மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை (Decentralised procurement system) செயல்படுத்தி மைய அரசுக்காக நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.



★ நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் தீர்க்கும் வகையில் நியாயவிலைக் கடைகள் மூலம் 100 கிராம் கொண்ட ஒரு பாக்கெட் தேயிலை ரூ.9 என்ற விலையில் மாதா மாதம் ஏறத்தாழ 300 டன் விற்பனை செய்யப்படுவது இந்த அரசின் ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.00 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால் இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9.00 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டு செயல்படுத்தப்படுகிறது.

★ பல மாநிலங்களில், ஏழை எளியோருக்கு ஒரு கிலோ ரூபாய் 6 என்ற அடிப்படையிலும் மற்றவர்களுக்கு ரூபாய் 8 முதல் ரூபாய் 9 என்ற விலையில் அரிசி வழங்கப்படுகிறது. இந்த அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வந்தபோதும் பாகுபாடின்றி அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய அளவு அரிசியை ஒரு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற ஒரே விலையில் 1.9.2003 முதல் வழங்கி வருகின்றது.

★ பொது விநியோகத் திட்டத்தில் கூப்பன் முறை கொள்முதலில் மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை கடைப்பிடித்தல், அரிசி விலையை சீரமைத்தல் போன்ற நடவடிக்கைகளால் அத்தியாவசியப் பொருள்களை கடத்துதல், பதுக்கல் போன்ற சமூக விரோத செயல்களுக்கு இடம் கொடுக்காமலும் உணவு மானியச் செலவை கட்டுப்படுத்தியும் அதே சமயத்தில் ஏழை எளிய மக்களின் நலனையும் இவ்வரசு பாதுகாத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும். ❖

# கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை

கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் பழங்காலந் தொட்டே இந்திய கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாத தொழில்கள் ஆகும். மக்கள் வாழ்கின்ற இருப்பிடத்திற்கு அருகிலேயே முழுநேர மற்றும் பகுதிநேரத் தொழிலாக இத்தொழில் அமைந்துள்ளது. மேலும் நிரந்தர வருவாயை அளிப்பதும், மனிதவள ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதும், கால்நடை வளர்ப்பின் சிறப்பாகும்.

## கால்நடை பாதுகாப்புத் திட்டங்கள்

★ டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 49 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 644 தொடர்பு பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இத்தொடர்பு பணியாளர்கள் 25,588 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

★ இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு, இத்திட்டத்தினைப் போன்றதொரு திட்டம் ஐந்தாண்டுகளில் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 12 மாவட்டங்களில் உள்ள 145 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு, 3,326 தொடர்புப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இத்தொடர்புப் பணியாளர்கள் 66,520 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

★ **கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 14,237 முகாம்கள் நடத்தப்பட்டு 165.91 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன.**

★ மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் 2001–2002இல் ரூ.30.41 இலட்சம் செலவிலும், 2002–2003இல் ரூ.45.79 இலட்சம் செலவிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.46 இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்பட்டது.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.10.80 இலட்சம் செலவிலும், 2002–2003இல் ரூ.14.50 இலட்சம் செலவிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.23.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

★ 2003–2004ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு வறட்சி நிவாரண பணிகளுக்கு உதவிட இயற்கை சீற்றம் நிவாரண நிதியிலிருந்து ரூ.2,000 இலட்சம் அரசு விடுவித்துள்ளது.

★ பசுந்தீவன உள்ளீடுகளை உற்பத்திச் செய்ய பெரிய பண்ணைகளுக்கு ரூ.388.326 இலட்சமும், சிறு பண்ணைகளுக்கு ரூ.56.57 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, வேலிகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவைகள் ரூ.168.366 இலட்சம் செலவில் 2,725 ஏக்கர் மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திட, ரூ.170 இலட்சம் செலவில் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டது.

★ வறட்சி பாதித்துள்ள 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் 697 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 242 அதனைச் சார்ந்த பணிகள் ரூ.469.50 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பால் உற்பத்தியைப் பெருக்க, 12 மாவட்டங்களில் உள்ள 800 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 800 எருமை கிடேரி கன்றுகள் மானியத்தில் ரூ.28 இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.



★ 11 மாவட்டங்களைச் சார்ந்த 150 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 750 பயனாளிகளுக்கு செம்மறியாடு அலகுகள், ரூ.45 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ 385 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 5,775 பயனாளிகளுக்கு, மானியத்துடன் சேவல் மற்றும் கோழிகள் வழங்கும் திட்டம் ரூ.34.65 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் 3 பன்முக மருத்துவ மனைகள் மற்றும் 156 கால்நடை மருந்தகங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ 15 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன. 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் 4 நடமாடும் ஆய்வுக்கூடங்கள் செயல்படுகின்றன.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.80 இலட்சத்துக்கு கோமாரி நோய் தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டு ஏழை விவசாயிகளின் கால்நடைகளுக்கு போடப்பட்டுள்ளது. மேலும் செம்மறி ஆடுகளை குடற்புழு பாதிப்பிலிருந்து காக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.40 இலட்சம் செலவில் குடற்புழு நீக்க மருந்துகள் மூலம் குடற்புழு நீக்கம் செய்யப்படுகின்றன.



★ தமிழ்நாட்டில் பால் உற்பத்தி கடந்த பத்தாண்டுகளில் 35.24 இலட்சம் டன்னிலிருந்து 46.22 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. முட்டை உற்பத்தி 2,919 மில்லியனிலிருந்து 3,622 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதே போல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவானது 173 கிராமிலிருந்து 204 கிராமாகவும், ஒரு ஆண்டுக்கு உட்கொள்ளும் முட்டை எண்ணிக்கை 52லிருந்து 58ஆகவும் அதிகரித்துள்ளது.

## தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரி நூற்றாண்டு விழா



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியானது தனது நூறாண்டு கால கல்விப் பணியினைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளது. இதன் நூற்றாண்டு விழா 6–7–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு.பைரான் சிங் ஷெகாவத் அவர்கள், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து நூற்றாண்டு அருங்காட்சியகத்தினைத் திறந்து வைத்தார்கள். மேதகு தமிழக ஆளுநர் திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன்ராவ் அவர்கள் நூற்றாண்டு விழா நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்கள்.

★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வேளாண் காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டேர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ நம் நாட்டு வெள்ளாடுகளின் தரம் உயர்த்த ஆப்பிரிக்க போயர் இன ஆடுகளுடன் கலப்பினப் பெருக்கம் செய்து அதிக எடை கொண்ட கலப்பின ஆடுகளை உருவாக்கும் திட்டம் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ இப்பல்கலைக்கழகத்தின் லெப்டோஸ்பைரோ நோயறி ஆய்வகப் பிரிவானது அதன் தரமான சேவையைக் கருதி ISO 9001 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டின் சாதனைகளில் இது ஒரு மைல் கல்லாகும்.

★ கால்நடைப் பண்ணையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இரண்டு புதிய பிரிவுகள் முறையே தலைவாசலில் பறவையின நோய் ஆய்வகம் ஒன்றும், மேல்மருவத்தூரில் கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் 2003இல் தொடங்கப்பட்டுள்ளது.

## விரிவாக்கக் கல்வித் திட்டங்கள்

★ தமிழகத்தில் கனடா நாட்டு சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு நிதியுதவியுடன் மூன்று தொலைத் தொடர்பு தொழில்நுட்ப மையங்கள் (Tele Centres) வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புதுதாமரைப்பட்டியிலும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 6,831 பண்ணையாளர்கள் செய்தித் தொடர்பு மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பம் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையின் நிதியுதவியுடன் விவசாய தொலைபேசி மையம் ஒன்று விரிவாக்கக் கல்வி மையத்தில் 21.01.2004 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 58 கால்நடைப் பண்ணையாளர்களுக்கு கால்நடை பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளின் மூலம் பண்ணையாளர்கள் 83,893 பேர் பயனடைந்துள்ளனர்.

## பால் கூட்டுறவுச் சங்கங்கள்

பால் பெருக்குத் துறையின் கட்டுப்பாட்டில் தமிழகத்தில் இயங்கும் அனைத்து 7,117 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களும் இலாபத்தில் செயல்படுகின்றன. 2003–2004ஆம் ஆண்டில், 209 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ பால் பெருக்குத் துறையின் சீரிய நடவடிக்கைகளினால் 2003–2004இல் 15 ஒன்றியங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் விற்பனை கடந்த 2001ஆம் ஆண்டு நாளொன்றுக்கு 5.36 இலட்சம் லிட்டராக இருந்தது, தற்பொழுது மார்ச் 2004இல் நாளொன்றுக்கு 7.31 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

★ 2001ஆம் ஆண்டு இறுதியில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்ட பால் உபபொருட்களின் மதிப்பு மாதம் ஒன்றுக்கு ரூ.100 இலட்சம் ஆகும். ஆனால் தற்பொழுது, பால் உபபொருட்கள் விற்பனை மூன்று மடங்கு வளர்ச்சியடைந்து மார்ச் 2004இல் ரூ.305.58 இலட்சம் அளவு பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ 2001ஆம் ஆண்டு இருந்த 226 பாலகங்களின் எண்ணிக்கை தற்பொழுது 2004இல் 420 என்ற இலக்கினை எட்டியுள்ளது. விற்பனை மையங்களின் எண்ணிக்கை 2001இல் 2,412 என்று இருந்தது தற்பொழுது 2004இல் 3,314ஆக உயர்ந்துள்ளது.

★ திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில் நாளொன்றிற்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுடன் பால் குளிரூட்டும் நிலையம் ரூ.42 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

★ "பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி" என்ற திட்டத்தின்கீழ் 2002–2003 மற்றும் 2003–2004 நிதி ஆண்டில் 110 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 7,688 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ "கூட்டுறவுகளுக்கு உதவி" என்ற மத்திய, மாநில அரசு திட்டத்தின்கீழ் ரூ.13 கோடி ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. அரசின் சீரிய நடவடிக்கைகளினால் முதல் ஆண்டின் முடிவில் ஈரோடு ரூ.42 இலட்சமும், விழுப்புரம் ரூ.106.42 இலட்சமும் இலாபம் பெற்றுள்ளன.

★ இணையம் 2001–2002இல் ரூ.0.34 கோடியும், 2002–2003இல் ரூ.16.46 கோடியும், 2003–2004இல் ரூ.17.21 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது.

★ 2002–2003ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு 6.54 இலட்சம் லிட்டராக இருந்த சென்னை மாநகர பால் விற்பனை தற்சமயம் 7.42 இலட்சம் லிட்டர்களாக மார்ச் 2004இல் உயர்ந்துள்ளது.

★ கடந்த காலங்களில், ஆண்டிற்கு சராசரியாக 2,647 டன் பால்பொடி விற்பனை செய்யப்பட்டு வந்தது. இது கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்ந்து ஆண்டிற்கு சராசரியாக 9,127 டன்கள் விற்பனை ஆகியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் மார்ச் 2004 வரை 9,632 டன் பால்பொடி விற்பனை யாகியுள்ளது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் நெய் விற்பனை ஆண்டிற்கு சராசரியாக 6,477 டன்களும், நடப்பு ஆண்டு மார்ச் 2004 வரை 6,229.8 டன்களும் விற்கப்பட்டுள்ளன.

★ ஆவின் வரலாற்றில் முதன்முறையாக திருமலை – திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.15 கோடி மதிப்புள்ள 1,350 டன் நெய் விற்பனை செய்ய அனுமதி கிடைத்துள்ளது.

★ நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்க "நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்புக் குழு" 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்பு கொள்ள இலவச போன் வசதி, மின் அஞ்சல், இணையதளம், வலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆவின் மின்னணு நிருவாகம் (www.Aavin.net) இணைய தளம் (www.Aavinmilk.com) மூலமாக உலக அளவில் தகவல்கள் திரட்டி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

★ கடந்த சில மாதங்களில் 2,800 டன் பால் உப பொருட்களை புதுதில்லி பால் பண்ணைக்கு வழங்கி அகில இந்திய அளவில் பால்வளத்துறை சாதனை புரிந்துள்ளது.




இந்தியக் கடற்கரை நீளம் 8,129 கி.மீ. அதில் 1,076 கி.மீ. தமிழக கடற்கரை நீளம் ஆகும். 591 மீனவர் கிராமங்கள் தமிழக கடலோரப் பகுதிகளில் உள்ளன. தமிழகத்தின் அண்மைக் கடலில் 4.62 இலட்சம் மெட்ரிக் கடல் மீன்வள ஆதாரங்கள் கிடைக்கும் அளவு உள்ளது. தமிழ்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், கடலோரப் பகுதிகளில் வாழும் ஏழை மீனவர்களின் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டு, தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது.

★ 2001–2002ஆம் ஆண்டு மத்திய அரசு திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள், 90 ஆழ்துளைக் கிணறுகள், 4 சமுதாயக் கூடங்கள் கட்ட மொத்தம் ரூ.834 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மாநில அரசின் திட்டத்தின்கீழ் 1,500 வீடுகள் கடல் மீனவர்களுக்கும், 500 வீடுகள் உள்நாட்டு மீனவர்களுக்கும் கட்டித்தர அரசு ரூ.740 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், நடப்பு நிதியாண்டில் 4,000 வீடுகள் கடல் மீனவர்களுக்கு கட்டித் தருவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும். நிதி ஒதுக்கீடு ரூ.15.4 கோடி.

★ சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 2001–2002இல் 1,19,849 பயனாளிகளுக்கு ரூ.15,27,26,200/–ம், 2002–2003இல் 1,92,922 பயனாளிகளுக்கு ரூ.22,51,54,950/–ம், 2003–2004இல் 1,18,649 (மீனவர்) பயனாளிகளுக்கு ரூ.13,59,95,550/–ம், (31.10.2003 முடிய), 29,866 (மீனவ மகளிர்) ரூ.1,70,76,500–ம் (31.10.2003) முடிய வழங்கப்பட்டது.

★ நடப்பு ஆண்டில் முதன்முறையாக இத்திட்டம் மீனவ மகளிருக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மீனவர் குழு காப்புறுதித் திட்டத்தில் 2001–2004 ஆண்டுகளில் 515 பயனாளிகளுக்கு ரூ.2,20,12,500 வழங்கப் பட்டுள்ளது. மீனவர் தனி நபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் 2001–2004ஆம் ஆண்டுகளில் 116 பயனாளிகளுக்கு ரூ.102.54 இலட்சம் வழங்கப்பட்டது. வெளி பொருத்தும் / உட் பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்குதல் திட்டத்தில் 2002–2003இல் உட்/வெளி பொருத்தும் இயந்திரம் 731ம், 2003–2004இல் உட்/வெளி பொருத்தும் இயந்திரம் 2,168ம், வலைகள் 173ம் ரூ.234.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

★ தமிழகத்தில் 10 இடங்களில் மீன் இறங்கும் தளங்கள் ரூ.113.23 கோடி செலவில் கட்டுவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

★ பழவேற்காடு முகத்துவாரம் 2002–2003இல் அரசால் ரூ.30 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு ரூ.18.42 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டது.

★ நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, பட்டுக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ கோவளம், கீச்சான்குப்பம், தருவைக்குளம், இடிந்தகரை ஆகிய 4 இடங்களில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ மீனவ மகளிருக்கு கூட்டுறவுத் துறை, மத்திய அரசின் பணியாளர் கல்வி நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்ட அலுவலகம் மற்றும் கால்நடை ஆராய்ச்சி பல்கலைக்கழகம் மூலமாக விரிவாக்கம் மற்றும் பயிற்சியாக மீனவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், பொருத்துநர் பயிற்சி மாதம் ரூ.200 உதவித் தொகையுடன் அளிக்கப்பட்டது.

★ உள்நாட்டு மீனவர்கள் பயனடையும் வகையில் ரூ.15.50 இலட்சம் செலவில் 3 மானியத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது.

★ உள்நாட்டு மீனவர்களுக்கு 500 இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தில் 57 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த 1,308 மீனவர்களுக்கு ரூ.571.55 இலட்சம் மதிப்பில் 536 மீனவர்களுக்கு மீன் இடு பொருள்களை 25 சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்பட்டது.

★ 2003–2004இல் ஒருங்கிணைந்த கடல்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 6 மீனவ கிராமங்களுக்கு ரூ.36.96 இலட்சத்தில் 113 மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன் இடுபொருள்கள் மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலமாக வழங்கப்பட்டது.

★ கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 679 இறால் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.



**தமிழ்நாட்டில் மீன்வளத்தினை பெருக்கிடவும், மீனவர்களது சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.7.2002 அன்று இராமநாதபுரத்தில் மீன்வள மேம்பாட்டு இயக்கத்தினை தொடங்கி வைத்தார்கள்.**

★ மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் அண்மைக்கடல் பகுதியில் மீனவளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் வேதாளை, புன்னக்காயல், பரங்கிப்பேட்டை, சின்னமனை மற்றும் தேத்தாக்குடி கடற்கரைப் பகுதிகளில் வளர்த்தெடுக்கப்பட்ட இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டது. கடலோர பாரம்பரிய மீனவர்கள் பயனடையும் வகையில் இதுவரை 2 மில்லியன் கருப்பு இறால் குஞ்சுகள் அடைப்பான்களில் வளர்க்கப்பட்டு கடலோரப் பகுதிகளில் இருப்பு செய்யப்பட்டது. இதன்மூலம் கடலோரப் பகுதிகளில் மீன்வளம் பெருக வாய்ப்புள்ளது.

★ தமிழகத்தில் 2002–ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசின் விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டத்தின்கீழ் மீன்வளத் துறையின் மூலம் 420 மீன்/ இறால் வளர்ப்போருக்கு மீன் வளர்த்தலில் தொழில் நுட்ப மேம்பாட்டினை அடைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# அடித்தள மக்களை அரவணைக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வு வளம்பெற, அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற சீரிய நோக்குடன் தமிழக அரசு கடந்த 3 ஆண்டு காலமாக பல்வேறு திட்டங்களைத் தீட்டி முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

கல்வி உதவி

கல்விக்கடன் உதவித்தொகைத் திட்டம் 2002–2003ஆம் ஆண்டு முதல் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகைத் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காகப் பட்டப்படிப்பிற்கு ரூ.6,500, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் கல்வி படிப்புக்கு ரூ.7,000 வழங்கப்பட்டு வருகிறது.



மருத்துவக் கல்விக்கு மட்டும் 25% கல்விக் கடனும் 75% மானியமும், மற்ற படிப்புகளுக்கு முழு மானியமும் வழங்கப்படுகிறது. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.451.35 இலட்சத்தில் 6,686 மாணவ/மாணவியர்களும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.644.87 இலட்சத்தில் 9,553 மாணவ/மாணவியர்களும் பயனடைந்தனர்.

2001–2002ஆம் ஆண்டு வரை நிலுவையில் இருந்த கல்விக் கடன் உதவித்தொகை விண்ணப்பங்களுக்காக ரூ.476 இலட்சம் நிதி ஒதுக்கீடு, 2002–2003ஆம் ஆண்டின் இறுதி திருத்திய மதிப்பீட்டில் வழங்கப்பட்டது. இதில் ரூ.385 இலட்சம் செலவிடப்பட்டு 5,737 மாணவ/மாணவியர் பயனடைந்துள்ளனர்.

2001–2002ஆம் ஆண்டில் முதுகலை பட்டப்படிப்பு வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்று மேல் கல்வி பயில நிதி பெற 2002–2003 முதல் புதிய விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு மற்றும் மருத்துவத் துறையில் குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

இலவச மிதிவண்டி வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2001–2002ஆம் ஆண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவ மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

2001--2002ஆம் ஆண்டில் ரூ.7.69 கோடி செலவில் 56,525 இலவச மிதிவண்டிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.6.91 கோடி செலவில் 47,501 மிதிவண்டி களும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.8 கோடி செலவில் 48,040 மிதிவண்டி களும், வழங்கப்பட்டுள்ளன.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.396.77 இலட்சம் செலவில் 17,240 பயனாளிகளுக்கும், 2002–2003 ஆம் நிதியாண்டில் 11,600 பயனாளிகளுக்கும் ரூ.291.55 இலட்சம் செலவில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.393.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 12,878 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு. ரூ.381.41 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர்களுக்கான மயானம் மற்றும் மயானப்பாதை அமைத்திட 2001–2002ஆம் நிதியாண்டில்ரூ.74.78 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு செய்யப்பட்டது. 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2003–2004இல் ரூ.56.50 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.46.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- ஆதிதிராவிடர் மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற பாடுபட்டு வரும் நபர் ஒருவருக்கு, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசால் 'டாக்டர் அம்பேத்கர்' விருது வழங்கப்படுகிறது. இவ்விருது பெறும் நபருக்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரை ஒன்றும் வழங்கப்படுகிறது.
- ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா அவாஸ் யோஜனா (இந்திரா நினைவு குடியிருப்பு) திட்டத்தின் கீழ் 2001–2002இல் ரூ.3,141 இலட்சம் செலவில் 36,134 வீடுகளும், 2002–2003இல் ரூ.2,268.48 இலட்சம் செலவில் 18,904 புதிய வீடுகளும் மற்றும் 11,604 கச்சா வீடுகளும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டன.
- கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் உடனடி நிவாரணம் ரூ.1,000மும், மறுவாழ்வு உதவித்தொகையாக ரூ.19,000மும் வழங்கப்படுகிறது.மேலும் இவர்களுக்குச் சுயவேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.





விடுதிகள்

2001–2002ஆம் ஆண்டில் 8 மாணவர் விடுதிகளும், 2 மாணவியர் விடுதிகளும் ரூ.315 இலட்சம் மதிப்பில் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, 2001–2002ஆம் ஆண்டில் ஹட்கோ நிறுவனம் மூலம் கடனுதவி பெற்று 143 விடுதிகள் கட்ட தாட்கோ நிறுவனத்திற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் 50:50 திட்டத்தின் கீழ் 9 மாணவர் மற்றும் 4 மாணவியர் விடுதிகள் கட்ட மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.204.75 இலட்சமும், மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.204.75 இலட்சத்தை தாட்கோ சேமிப்பிலிருந்து செலவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டிற்கு 150 விடுதிகள் கட்ட சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.590 இலட்சத்துடன் மாநில அரசின் நிதி ஒதுக்கீடான ரூ.4,135 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் 50:50 திட்டத்தின் கீழ் 13 மாணவர் மற்றும் 24 மாணவியர் விடுதிகளும் கட்ட மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.582.75 இலட்சமும், மாநில அரசு பங்குத் தொகையாக ரூ.582.75 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமையை ஒழிக்கும் வகையில், 2001–2002இல் ரூ:84,000–ம், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,51,000–ம், 2003–2004ல் ரூ.1,42,100-செலவில், வில்லுப்பாட்டு, கலைநிகழ்ச்சிகள் மூலம் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் சமபந்தி போஜன திட்டத்திற்காக ரூ.53 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியைத் தலைமை இடமாகக் கொண்டு இரண்டு விளம்பரப் பிரிவுகள் மூலம் தீண்டாமை ஒழிப்பு குறித்து திரைப்படங்கள் மூலம் விளக்கப்பட்டு வருகிறது.

பழங்குடியினர் நலத்துறை

- விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் பழங்குடியினர் மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி ரூ.2.95 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது.
- கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.49.54 இலட்சம் மதிப்பில் சூரிய சக்தி மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. கோவை மாவட்டம் தோலம்பாளையம் முதல் கோப்பனேரி வரை ரூ. 310 இலட்சம் மதிப்பில் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ரூ.150 இலட்சம் மதிப்பில் மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பில் பணியர் பண்ணை வீடுகள் கட்டித்தரப் பட்டுள்ளன.
- ரூ.63 இலட்சம் செலவில் பழங்குடியினர்களுக்கு வீடுகள் மற்றும் மின்வசதி செய்து தரப்பட்டுள்ளன. ரூ.239.77 இலட்சம் செலவில் பழங்குடியினருக்கு சாலை வசதி மற்றும் மின்சார வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.70 இலட்சம் மதிப்பில் நாமக்கல் மாவட்டம் முள்ளுக்குறிச்சி முதல் நரியங்காடு வரை சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது.
- உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் ரூ.120 இலட்சம் மதிப்பில் ஒரு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பில் ஐந்து இணைப்பு சாலை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.

தாட்கோ

தாட்கோ மூலம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் 2001–2002இல் 48,675 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மானியமாக ரூ.26.95 கோடியும், விளிம்புத் தொகையாக ரூ.10.30 கோடியும், வங்கிக் கடன் மற்றும் பருவக்கடன் தொகையாக ரூ.40.98 கோடியும் மொத்தம் ரூ.78.23 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2002–2003 நிதியாண்டில் 1,22,334 ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதில் 45,789 பயனாளிகளுக்கு ரூ.19.16 கோடி மானியத்துடன் வங்கிகள் மூலம் ரூ.40.75 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 13,920 படித்த இளைஞர்களுக்கு ரூ.17.76 கோடி செலவில் வேலை வாய்ப்புகள் பெறும் தொழில் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. 36,524 மகளிர்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலம் ரூ.1.52 கோடி செலவில் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சிறப்பு நிதியிலிருந்து ரூ.8 கோடி செலவில் ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் அடிப்படைக் கட்டமைப்பு ஏற்படுத்த 15,000 நபர்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாட்கோ பொறியியல் பிரிவு மூலம் விடுதி கட்டடப் பணிகள் ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 2002இல் 153 விடுதிகளும், 2003இல் 13 விடுதிகளும் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ❖



# போக்குவரத்துத்துறை

ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் போக்குவரத்து அமைப்பினை ஒட்டியே அமையும். மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்றம் பெறுவதற்கு, போக்குவரத்துத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முனைப்பான செயல்திறனால் தமிழக போக்குவரத்துத்துறை தன்னிகரில்லா திறனைப் பெற்று, தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

**போக்குவரத்துக் கழகங்கள் ஒருங்கிணைப்பு**

★ தமிழ்நாட்டில் ஏற்கெனவே இயங்கி வந்த 21 போக்குவரத்துக் கழகங்களை 7 கழகங்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் அவைகளின் இயக்கத் திறன் மேம்பட்டும்,கட்டமைப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி நிருவாகச் செலவினங்களைக் குறைப் பதற்கும் மற்றும் போக்குவரத்து கழகங்களிடையே ஏற்படும் போட்டி மனப்பான்மை தவிர்க்கும் பொருட்டும், முதல் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மற்றும் உதகை கழகங்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களை 5 கழகங்களாக ஜனவரி 2004 முதல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஏழு போக்குவரத்துக் கழகங்கள் மட்டும் இயங்கி வருகின்றன.

★ போக்குவரத்து கழகங்களினால் கடந்த மூன்று ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பேருந்துகள் – 2,138.

★ 2003–04ஆம் ஆண்டில் மாநகர போக்குவரத்துக் கழகத்தில் 10 தாழ்வுதள பேருந்துகள் முதியோர்கள் மற்றும் சிறுவர்கள் சிரமமின்றி ஏறுவதற்கு வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ பேருந்துகளின் கட்டமைப்பை மேம்படுத்துதல், பேருந்துகளின் தொழில்நுட்ப குறைகளை நிவர்த்தி செய்தல், பேருந்து தடத்தில் பழுதாகி நின்றுவிடாமல் இருப்பதற்காக பராமரிப்புப் பணியை மேம்படுத்துதல், பயணிகள் பாதுகாப்பு மற்றும் விபத்துகளை குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல், ஒட்டுநர் மற்றும் நடத்துநர்கள் பொதுமக்களிடையே நல்லுறவை வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்துதல், பேருந்து தடங்களில் பரிசோதனை முடுக்கி விடப்பட்டு பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சகோதர போக்குவரத்துக் கழகங்களிடையே பயணச்சீட்டு பரிசோதனை செய்யும் முறை அமல்படுத்தப் பட்டு, வருவாய் அதிகரிக்க வழிவகை செய்தல் ஆகிய நடவடிக்கைகளின் காரணமாக பேருந்து இயக்கத்திறன் மேம்பட்டு, பேருந்துகளின் தோற்றம் மேம்படுத்தப்பட்டு வருவாய் அதிகரிப்பதற்கும் ஏதுவாக உள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களும், சீரிய கவனம் செலுத்தி, சென்னை உயர்நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த விபத்து இழப்பீட்டு வழக்குகள், மக்கள் நீதிமன்றம் முன் கொண்டுவந்து உரிய நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான இழப்பீட்டை வழங்கி தீர்வு செய்ததன் காரணமாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் கிடைத்ததுடன், உரிய தருணத்தில் கிடைக்கப் பெற்றமையால் சமூக நீதி வழங்க ஏதுவாகவுள்ளது.

★ அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் மழை நீர் சேகரிப்பு திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான 470 கட்டடங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ அகில இந்திய அளவில் எரிபொருள் (டீசல்) சிக்கனத்திற்கான முதலிடத்தை 2001–02ஆம் ஆண்டிலும், இரண்டாம் இடத்தை 2002–03ஆம் ஆண்டிலும் முன்னாள் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகம் தொடர்ந்து பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

★ 2001–02ஆம் ஆண்டிற்கு முன்னாள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலத்திற்கு அகில இந்திய அளவில் மசகு எண்ணெய் பயன்பாட்டில் சேமிப்பிற்கான விருது பெற்றுள்ளது.

★ 2001–02ஆம் ஆண்டிற்கு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், அகில இந்திய அளவில் நாள் ஒன்றிற்கு அதிக கி.மீ இயக்கத்திற்கான விருது பெற்றுள்ளது.

★ தமிழக போக்குவரத்துக் கழகங்களின் உதவி யுடனும் போதிய அளவில் சிறப்புப் பேருந்துகள்





விடப்பட்டு கும்பகோணம் மகாமகம் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. பொதுமக்கள், பத்திரிக்கைகளின் பாராட்டுகளை பெருமளவில் பெற்றுத்தந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

★ இயக்கத்தின் வருவாயை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் முந்தைய ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருவாயை விட, 2003–2004 ஆம் ஆண்டில் தமிழகப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.120.17 கோடி வருவாயை கூடுதலாக ஈட்டியுள்ளன.

★ 2002–2003 ஆம் ஆண்டில் ஒரு லிட்டர் உயர்வேக டீசல் மற்றும் மசகு எண்ணெய் பயன்படுத்தப்பட்டு ஓடிய 4.37 கிலோ மீட்டர் தூரம் 2003–2004 ஆம் ஆண்டில் 4.45 கிலோ மீட்டராக அதிகரிக்கப் பட்டுள்ளது. எண்ணெய்க் கம்பெனிகள் உயர்வேக டீசலின் விலையை அடிக்கடி திருத்தி அமைத்ததாலும், கிலோ மீட்டர் இயக்கம் அதிகரித்ததாலும் பயன்பாட்டு மதிப்பு ரூ.125.93 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு லிட்டரின் உபயோகத்தில் கிலோ மீட்டரின் அளவு அதிகரித்ததினால் 2003–2004 ஆம் ஆண்டில் ஏறக்குறைய ரூ.23.15 கோடி வரை சேமிப்பு கிடைக்கப்பெற்றது. இன்ஜின் ஆயில் / 10,000 கிலோ மீட்டர் இயக்கத்திற்கு நடப்பு ஆண்டில் 11.09 லிட்டரிலிருந்து 9.58 லிட்டராக குறைந்துள்ளது.

★ 15,316 பேருந்துகளும், 1,348 மாற்றுப் பேருந்துகளும் தமிழக போக்குவரத்துக் கழகங்களில் உள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் தமிழக போக்குவரத்துக் கழகங்கள் 233.24 கோடி கிலோ மீட்டர் தூரத்திற்கு பேருந்துகளை இயக்கியுள்ளன. இது முந்தைய ஆண்டுகளை விட 3.87 கோடி கிலோ மீட்டர் அதிகமாகும். 2002–2003 ஆம் ஆண்டு கிலோ மீட்டரின் இயக்கத்திறன் 100.88 சதவிகிதமாக இருந்தது, 2003–2004ஆம் ஆண்டில் 101.74 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

★ 2003–2004ஆம் ஆண்டில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை 58,522 இலட்சமாக உயர்ந்துள்ளது.

★ பயணிகளின் வசதிக்காக போக்குவரத்து இணையதளம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. ●

## பொதுப்பணித்துறை

★ உலக வங்கி நிதி உதவியுடன் அடிப்படை மதிப்பு ரூ.807.49 கோடிக்கு நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் திருத்திய மதிப்பு ரூ.1126 கோடி.

★ வடசென்னையிலுள்ள எண்ணூர் துரித வழி தடத்தில் 2.38 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.57 கோடி மதிப்பில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடைந்து உள்ளன.

★ அரசு ரூ.124 கோடி மதிப்பிற்கு சென்னை குடிநீர் வழங்கல் அதிகப்படுத்தும் திட்டம் 2ன் கீழ் திருத்திய ஆட்சி ஒப்புதல் வழங்கியுள்ளது.

★ பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பானது பல்வேறு அரசுத் துறைகளுக்காக பொதுமக்கள் பயன்பாட்டுக்குரிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

★ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.2,245 இலட்சம் மதிப்பிலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,328 இலட்சம் மதிப்பிலும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.21,887 இலட்சம் மதிப்பிலும் "பெரும் பணிகள்" செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில், சென்னை பசுமை வழிச் சாலையில் 30 நீதிபதிகள் மாளிகைகள், சென்னை அரசினர் தோட்ட வளாகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு நிர்வாகப் பிரிவு வளாகம், சென்னையில், மத்திய கிடங்கு அலுவலகம், தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரி, சென்னையில் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் நூலகக் கட்டடம், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் கை சீரமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக்கான புதிய கட்டடம், 200 சுகாதார மையங்கள், மதுரையில் உயர்நீதிமன்ற கட்டடம், 34 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஆகிய கட்டடப்பணிகளும், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அரங்கம், சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகத்தில் அருங்காட்சியகம் அமைக்கும் பணி, 221 தொகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திற்கு, கூடுதல் விருந்தினர் மாளிகை மற்றும் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவை உள்பட பல பணிகள் முடிக்கப்பட்டன.

● ● ●

# வருவாய்த்துறை



அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் பல துறைகளில் மக்களின் நேரடி தொடர்புக்குட்பட்ட இன்றியமையாத துறையாக வருவாய்த்துறை உள்ளது.

- மனுநீதித் திட்டத்தின்கீழ் சென்ற 4.5.2001 முதல் 31.3.2004 வரை 5,97,256 மனுக்கள் பெறப்பட்டு 2,63,101 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 2,14,465 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆக மொத்தம் 4,77,566 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. *நிலுவையில் உள்ள 1,19,690 மனுக்கள் ஆய்வில்* உள்ளன.

- மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டத்தின்கீழ் 2001ஆம் ஆண்டு முதல் 31.3.2004 வரை 9,52,936 மனுக்கள் பெறப்பட்டு 4,09,919 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. 3,75,453 மனுக்களில் உள்ள கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. ஆக மொத்தம் 7,85,372 மனுக்கள் முடிவு செய்யப்பட்டன. நிலுவையில் உள்ள மனுக்கள் ஆய்வில் உள்ளன.

- இடர்பாடு இன்றி மாணவர்/ மாணவியருக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்க இயலும் வகையில் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய முறையின்படி நிரந்தர சாதிச் சான்றிதழ் அட்டைகள் அச்சிட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குவதற்காக உத்திரவிடப் பட்டுள்ளது. இதற்கிணங்க பிற்பட்டோர் சான்று – 14,73,492 மிகவும் பிற்பட்டோர் சான்று – 8,05,347 சீர் மரபினர் சான்று 2,12,343 ஆதிதிராவிடர் – 10,08,067 பழங்குடியினர் – 47,114 சான்றிதழ்கள் மார்ச் 2004 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது.

- **தருமபுரி மாவட்டத்தைப் பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 9.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

- அரசின் திருத்திய கொள்கை முடிவின்படி 2001 முதல் 2004 ஆண்டுக்கு வருவாய்த்துறையில் பணிபுரியும் 12,506 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் 4,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் ஊராட்சி அலுவலகத்துடன் இணைத்து சுமார் 180 சதுர அடி பரப்பளவில் கட்ட முடிவு *செய்யப்பட்டுள்ளது. 2001–02ஆம் ஆண்டில்* ஒவ்வொரு கட்டடமும் ரூ. 60,000 மதிப்பீட்டில் 3,851 கட்டடங்கள் ரூ. 23 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002–03ஆம் ஆண்டு ஒவ்வொரு கட்டடமும் ரூ. 70,000 மதிப்பீட்டில் 3,740 கட்டடங்கள் ரூ.26 கோடி செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2004ஆம் ஆண்டு மார்ச் முடிய 85,002 பட்டாக்கள் ஆதிதிராவிடர் களுக்கும் , 6,420 பட்டாக்கள் பழங்குடியினருக்கும், ஏனைய இனத்தவர்களுக்கு 1,90,748 பட்டாக்களும், ஆக மொத்தம் 2,82,170 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்பட்டு வருகிறது. 2001ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2004ஆம் ஆண்டு மார்ச் முடிய ஆதிதிராவிடர்களுக்கு 7,149 பட்டாக்களும், பழங்குடியினருக்கு 150 பட்டாக்களும் ஏனைய இனத்தவர்களுக்கு 21, 999 பட்டாக்களும், ஆக மொத்தம் 29,298 விவசாய நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்தப் பரப்பு 17, 548 ஏக்கர் நிலமாகும்.



- 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த சட்டத்தின்படி, 1.5.2001 முதல் 31.3.2004 வரை 3,545 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டு 5,245 ஏக்கர் நிலம் 4,318 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

- குடிநீர் பிரச்சினையை சமாளிக்கும் பொருட்டு 2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 16,810.60 இலட்சமும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ. 18,136.97 இலட்சமும் இயற்கை இடர்பாடு நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- 2003–04ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.6,118.60 இலட்சமும், பேரூராட்சிகளுக்கு ரூ.2,381.86 இலட்சமும், நகராட்சிகளுக்கு ரூ.1,451.51 இலட்சமும், மாநகராட்சிகளுக்கு ரூ.8,185 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. இதில் சென்னை நகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 80 கோடியும் அடங்கும்.

- 2002ஆம் ஆண்டு டெல்டா மாவட்டங்களில் நிலவிய வறட்சியைக் கருதி, தீபாவளிப் பண்டிகையை வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையிலும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, தேங்காய் ஒன்று, 250 கிராம் இனிப்பு, 7 ரூபாய் மதிப்புள்ள காய்கறிகள், 100 கிராம் நெய், 200 கிராம் பாசிப்பருப்பு, 50 கிராம் மஞ்சள், 50 கிராம் கடுகு, 50 கிராம் உலர்ந்த மிளகாய் மற்றும் *ரொக்கமாக ரூ.50/– ஆக மொத்தம் ரூ.210/–* மதிப்புள்ள ஒரு பரிசுப் பை வழங்கப்பட்டது. இதற்கான மொத்த செலவு ரூ. 21.28 கோடி ஆகும்.

- வறட்சியால் முழுதும் பாதிக்கப்பட்ட 11 இலட்சம் தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 150/–ம், பகுதியாக பாதிக்கப்பட்ட 28 இலட்சம் தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 50/–ம், ஆக மொத்தம் ரூ. 30.50 கோடி ரூபாய் நிவாரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் ரூ. 21.65 கோடி ரூபாய் 20 மாவட்டங்களில் உள்ள பாதிப்படைந்த 1,05,553 தென்னை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் 2002ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்ட காரணத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டு வறிய நிலையில் உண்ண உணவின்றி வருந்தும் விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு குறு விவசாயக் குடும்பத்தினர் அனைவருக்கும் கிராமப்புற சத்துணவு மையங்கள் மூலம் மதிய உணவு 15.1.2003 பொங்கல் தினம் முதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்ட பொங்கல் தினத்தன்று அனைத்து பயனாளிகளுக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. 4.02.2003 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தில் 14.03 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு / குறு விவசாயிகள் பயனடைந்தனர்.

- வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு / குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோரின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் 05.02.2003 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு 31.08.2003 வரை தொடரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சென்னை தவிர்த்த அனைத்து மாவட்டங்களில் மொத்தமாக 9.65 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்தன.

- சென்னை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 2002–03ஆம் ஆண்டின் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நிலவிய வறட்சி காரணமாக பயிர் செய்யப்பட்ட பரப்பில் 50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலும் பயிர் உற்பத்தி இழப்பை அடைந்த விவசாயிகளுக்கும் தங்கள் நிலங்களை பயிரிடாமல் விட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்காக அரசு ரூ.323.56 கோடி அனுமதி அளித்தது. இத் தொகையில் ரூ. 240.07 கோடி ரூபாய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு 28,93,268 விவசாயிகள் பயனடைந்தனர்.

- தமிழகத்தில் நிலவி வந்த தீவிர வறட்சியின் கராணமாக 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் மத்திய குழு ஒன்று வறட்சியால் *பாதிக்கப்பட்ட தருமபுரி, சேலம், தஞ்சாவூர்,* திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை பார்வையிட்டது. அக்குழுவிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணத்திற்காக ரூ.2,094 கோடியும், வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் 9 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதல் உணவு தானியங்களும் கோரப்பட்ட மனுவை அளித்தார்கள்.

- 2003–04ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட அறிக்கையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட 28 மாவட்டங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு ரூ. 341.92 கோடி ரூபாய்க்கான வேலைக்கு உணவு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

- **காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக குறுவை நெல் சாகுபடி செய்யாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 217.09 கோடியிலான சிறப்பு நிவாரணத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள். இத்திட்டங்களை செம்மையாக செயல்படுத்தும்**

பொருட்டு தலைமைச் செயலர் தலைமையிலான பேரிடர் நிவாரண நிதிக்கான மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டது.

- ❖ எஸ்.ஜி. ஆர். ஒய். சிறப்புக் கூறு (வேலைக்கு உணவு) திட்டத்தின்கீழ் 2002–03 ஆம் ஆண்டு 1.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 1.75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும், 2004ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 3.04 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் இதுவரை தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு மனித வேலை நாளுக்கு கூலியாக ரூ. 54/– அளவில், ரூ.39.55 மதிப்புள்ள 7 கிலோ அரிசியும், ரொக்கமாக ரூ. 14.45–ம் வழங்கப்பட்டது.

- ❖ வறட்சியின் காரணமாக கால்நடைகளை வாய் மற்றும் பாத நோய்களிலிருந்து பாதுகாக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தவும், பெரிய மற்றும் சிறிய கால்நடை தீவன உற்பத்தி பண்ணைகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காகவும் மற்றும் கிராமங்களில் கால்நடை தீவன மேம்பாட்டிற்காகவும், ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ❖ இது தவிர விடுபட்ட 6 மாவட்டங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் ஆழ்துளை கிணறு அமைக்க ரூ. 162 இலட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மீதமுள்ள கால்நடை பராமரிப்பு மையங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூ. 16.60 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 20 கோடியில் தருமபுரி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் வனப்பகுதியில் உள்ள யானைகள் மற்றும் வன விலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக 79 ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்காக ரூ. 76.10 இலட்சம் மாற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட மல்பரி தோட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ. 75.92 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ❖ தமிழகத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு மத்திய அரசின் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து ரூ. 1,584 கோடி நிவாரண நிதியும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்காக கூடுதலாக 10.8 இலட்சம் டன் உணவு தானியங்களும் வழங்கக் கோரும் விரிவான கோரிக்கை மனு ஒன்றினை 2004–ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சமர்ப்பித்துள்ளது. இதனடிப்படையில் மத்தியக் குழு ஒன்று 2004 பிப்ரவரி மாதத்தில் தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளை பார்வையிட்டு வறட்சி நிலை குறித்த விவரங்களை பெற்றுச் சென்றுள்ளது.

- ❖ இவை தவிர தமிழகத்தில் நிலவி வரும் வறட்சியினைச் சமாளிக்க தமிழக அரசு கீழ்கண்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

  - ➢ கூட்டுறவுக் கடன்களை ஒத்திவைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டன.

  - ➢ எஸ்.ஜி. ஆர்.ஒய்., சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 11ஆவது நிதிக்குழு மானியம், உள்ளாட்சி பொது நிதி, சிறு சேமிப்பு நிதி போன்ற திட்டங்களின் வாயிலாக பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

  - ➢ பசலி ஆண்டு 1412 (01.07.02 முதல் 30.06.03) மற்றும் 1413 ( 01.07.03 மற்றும் 30.06.04) ஆகியவற்றுக்கான நிலவரியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

- ❖ மாநிலத்தில் நிலவி வரும் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு, பேரிடர் நிவாரண நிதி / தேசிய பேரிடர் எதிர்பாரா நிதியிலிருந்து வறட்சி நிவாரணத் திட்டங்களுக்கு 2003–04ஆம் நிதியாண்டில் பல்வேறு அரசாணைகள் மூலம் அரசு ரூ. 489.27 கோடி ஒதுக்கீடு செய்தது.

- ❖ 5,394 வருவாய்த்துறை கட்டடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

- ❖ தமிழ் நிலம் எனப்படும் நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம் தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிரந்தர கிராம ஆவணங்களான 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

31.12.2003 வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராமங்களில் நகர்புறம் சாராத (Rural Villages) கிராமங்களின் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. Urban Villages–க்கான பதிவுகளை கணினிமயமாக்க தேசிய தகவலியல் மையத்தால் தயாரிக்கப்பட்டு கணினி மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மாநிலத்திலுள்ள 206 வட்டங்களில் 201 வட்டங்கள் Online–க்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த 201 வட்டங்களிலும் நில உடைமைதாரர்கள் அவர்களுக்குத் தேவையான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா நகல்களை கணினி மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

29 வட்டங்களில் தொடுதிரைத் தகவல் கணினி மேடை (TSCK) நிறுவிட அரசால் உத்தரவிடப்பட்டு 15–4–2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டத்தில் தொடங்கப்பட்டு, ஏனைய வட்டங்களிலும் அதே நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது. 31–3–2004 வரையிலான காலத்திற்கு தொடுதிரை தகவல் மேடை மற்றும் நில ஆவண கணினிப் பிரதிகள் வழங்கியதன் மூலம் ரூ.2.35 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தின் இதர வட்டங்களிலும் தொடுதிரை தகவல் மேடை அமைக்க பகுதி–2 திட்டத்தின் கீழ் ரூ.175.60 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 97 வட்டங்களில் தொடுதிரை தகவல் கணினி மேடை நிறுவப்படவுள்ளது.

நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு கணினியில் பயிற்சி வழங்க முடிவெடுக்கப்பட்டு, 8,500 பணியாளர்களுக்கு இதுவரை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

நிலவியல் தகவல் முறைக்கு அதிக முக்கியத்துவம் மற்றும் நம்பகத் தன்மை ஏற்பட்டு வரும் நிலையில், முன் எப்பொழுதும் இல்லா வகையில் தற்சமயம் மிகத் துல்லியமான டிஜிடல் கடாட்ஸட்ரல் நிலஅளவை தேவை உணரப்படுகிறது. இதனால் விண்கோள் சமிக்ஞை கொண்டு அளவிடும் (GPS) ஒரு முன்னோடித் திட்டத்தை ரூ.120 இலட்சம் ரூபாயில் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. மத்திய மாநில நிதி உதவியுடன் ரூ.40 இலட்சம் பெறப்பட்டு இதுவரை 8 மாவட்டங்களின் கிராம வரைபடங்களை ஸ்கேன் செய்யும் பணி முடிவு பெற்றுள்ளன.

இத்துறையின் கட்டுப்பாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு நிலஅளவைப் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இதில் அலுவலர்களுக்கு துறை தொடர்பான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு நிலஅளவை செய்வதற்கு நிலஅளவைப் பணியாளர் களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ரூ.127.03 இலட்சம் அனுமதி வழங்கியது. இந்த உயர் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் C-STAR என்ற பெயரில் செயற்குழுவின் கீழ் செயல்பட உள்ளது.

★ ★ ★

# சட்டத்துறை

- ★ டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கணினிக் கூடம் ஒன்று ரூ.7.50 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பாடத்திட்டத் திற்கிணங்க சட்டப்புத்தகங்கள் அனைத்தும் தமிழில் தயாரித்து வெளியிடப்பட வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை 31 பாடங்களுக்கான புத்தகங்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. சட்டத்துறையால் மொழி பெயர்க்கப்பட்ட 60 மையச் சட்டங்கள் 16.4.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

- ★ சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியில் பயின்றுவரும் 6 மாணவ, மாணவியர்களுக்கு, 2003–2004ஆம் கல்வியாண்டில், வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற வில்லெம் சி.விஸ் சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்துகொள்ள ஏதுவாக ரூ.4.50 இலட்சம் அளவில் அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

- ★ திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கான விடுதி தொடங்கப்பட்டுள்ளது.

- ★ பல்கலைக்கழக உறுப்பு சட்டக் கல்லூரி 2003–2004 கல்வியாண்டில் தொடங்கப் பட்டுள்ளது.

- ★ புதிய முதுகலைப் பட்டயப் படிப்புகளுக்கான பொதுக் காப்பீடு பற்றிய முதுகலைப் பட்டயப் படிப்பு 2003–2004 கல்வியாண்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. வணிகவியல் சட்டத்தில் முதுகலைப் பட்டப் படிப்பும், அரசமைப்பு மற்றும் சட்ட ஒழுங்கு முதுகலைப் பட்டப் படிப்பும் 2002–2003 கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கு ரூ.55 இலட்சம் அரசால் ஒதுக்கப்பட்டு, அப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

• • •

# நெடிய சாதனை படைக்கும் நெடுஞ்சாலைத் துறை



ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளின் கட்டமைப்பு இன்றியமையாதது. தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் ஆகியவற்றை நெடுஞ்சாலைத்துறை தன்னகத்தே கொண்டு சிறந்த பாதுகாப்பான சாலைப் போக்குவரத்தினை வழங்கி வருகிறது. **சாலைகளை மேம்படுத்துவதுடன், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பு வசதிகளை பாதுகாத்து, பராமரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 'சிறப்பு பராமரிப்பு திட்டம்' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.**

தமிழகத்திலுள்ள 3,850 கி.மீ நீள தேசிய நெடுஞ்சாலைகள், 7,223 கி.மீ. நீள மாநிலச் சாலைகள், 7,376 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகள், 41,156 கி.மீ. நீள மாவட்ட இதரச் சாலைகள், 1,603 கி.மீ. நீள கரும்பு சாலைகள் என மாநிலத்தில் உள்ள மொத்தம் 61,208 கி.மீ. நீள சாலைகளை நெடுஞ்சாலைத்துறை பராமரித்து வருகிறது.

2001–2002ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ.510.85 கோடியும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.483.46 கோடியும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.650.23 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் 10 பாலப் பணிகள் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் மீதமுள்ள 8 பாலப் பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 30.80 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 6 பாலப் பணிகளும் மொத்தம் ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 12.50 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 1 பாலப் பணியும் 2002–2003இல் முடிக்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் மீதமுள்ள பணிகள் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.9 கோடி மதிப்பில் 26 பாலப் பணிகள் எடுக்கப்பட்டு 10 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலம், மாவட்ட இதரச் சாலைகளை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தின் கீழ் 213.90 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 76 பாலங்களை கட்டும் பணிகளும் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் 248.23 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 120 பாலங்களை கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் 111 பாலப் பணிகளும், 31 சாலைப் பணிகளும் ரூ.50.01 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டு, இவ்வாண்டில் இதுவரை 800 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 50 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

500 முதல் 1,000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்கத்துடன், நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் ஊரகச் சாலைகள் திட்டம், சிறப்பு உறுப்புத் திட்டம் மற்றும் பேருந்து சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஆகியவை அடங்கிய குறைந்தபட்ச சேவைகள் திட்டத்தின்கீழ் 669 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 9 பாலங்களை கட்டும் பணிகளும் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 907 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 10 பாலங்களை கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.64.30 கோடி மதிப்பில் 377.65 கி.மீ. நீள சாலைப்பணிகளும், 11 பாலப் பணிகளும், ரூ.57.97 கோடி மதிப்பில் 337.06 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 9 பாலப் பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் இதுவரை 323 கி.மீ. நீள சாலைகளும், 20 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஹட்கோ கடன் உதவியைக் கொண்டு, சென்னை நகரைச் சுற்றி ஆரச்சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 49 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 5 சிறிய பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 2.14 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 2 சிறிய பாலங்கள் 2002–2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் தற்போது முடிக்கப்பட்டுள்ளன.



தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக, பொதுமக்களிடமிருந்து, பங்கு பத்திரங்கள் வாயிலாக திரட்டப்பட்ட நிதியைக் கொண்டு பழுதடைந்த மாவட்ட இதரச் சாலைகளை, படிப்படியாக சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 4,890 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றுள் எஞ்சியுள்ள 2,557 கி.மீ. நீள சாலைப் பணிகளை ரூ.171.19 கோடி மதிப்பீட்டில் 2001–2002ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் மிகைவரி மூலமாகக் கிடைக்கும் நிதியிலிருந்து சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக, மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.67 கோடி நிதியைப் பயன்படுத்தி மாநிலத்தில் உள்ள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் தேவைப்படும் பகுதிகளை அகலப்படுத்தி வலுப்படுத்துதல், விபத்துப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற 250 பணிகளை ரூ.154.97 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ள, மாநில அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இயந்திரக் கலவைகள் மூலம் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், எஞ்சியுள்ள 160 கி.மீ. நீளமுள்ள அனைத்து சாலைப் பணிகளும் முடிவு பெற்றன.

2001–2002ஆம் ஆண்டில் பராமரிப்புப் பணிகளின் கீழ் ரூ.58.73 கோடி மதிப்பீட்டில் 1,460 கி.மீ. நீள சாலைகளின் மேற்தளம் புதுப்பிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.33.41 கோடி மதிப்பீட்டில் 835 கி.மீ. நீள சாலைகளின் மேற்தளம் புதுப்பிக்கப்பட்டன. **முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுதுபார்ப்புத் திட்டம் 2002–2003ன் கீழ் ரூ.90.65 கோடி மதிப்பீட்டில் 1,685 கி.மீ. நீளசாலைப் பணிகள் எடுக்கப்பட்டு புதுப்பிக்கப் பட்டுள்ளன. முதலமைச்சரின் சிறப்பு சாலை பழுதுபார்ப்புத் திட்டம் 2003–2004ன் கீழ் ரூ.184 கோடி மதிப்பீட்டில் 3,864 கி.மீ. நீள சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பழுதுபட்ட 3,000 கி.மீ. நீள பேருந்து தடச்சாலைகளை ஹட்கோ கடனுதவியுடன் புதுப்பிக்க எடுக்கப்பட்டு 2,100 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

2001–2002ஆம் ஆண்டில் 2,817 கி.மீ. நீளமுள்ள மாவட்ட முக்கிய சாலைகளும், 151 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன.

**காவிரி வடிநில மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் கட்டப்பட்ட 204 பாலங்களை ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்ப கட்டும் ஒரு மாபெரும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். முதற்கட்டமாக 94 பாலங்களை நபார்டு வங்கியின் கடனுதவியுடன் திரும்ப கட்ட மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 82 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

இருப்புப்பாதை பணிகள் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 6 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் எடுக்கப்பட்டன. அவற்றுள் 2001–2002ஆம் ஆண்டில் 1 சாலை கீழ்ப்பாலம் கட்டப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டில் 2 சாலை மேம்பாலங்கள் கட்டப்பட்டன. மீதமுள்ள 3 சாலை மேம்பாலங்கள் 2003–2004ஆம் ஆண்டில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், ஹட்கோ கடனுதவியுடன் ரூ.513.92 கோடி மதிப்பீட்டில் 37 சாலை மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டும் பணி எடுக்கப்பட்டன. அவற்றுள் 24 பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 சாலைப் பணிகள், 1 பாலப் பணி மற்றும் 1 சாலை மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் அடங்கிய மதுரை ஆரச்சாலைகள் திட்டம் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.112 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ கடனுதவியுடன் எடுக்கப்பட்டது. இவற்றில் 55.20 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்களைத் திரும்பக் கட்டும் பணி 2001–2002ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. அவற்றுள் 14 பாலங்கள் 2002–2003ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. நடப்பாண்டில் 8 பாலப் பணிகள் முடிவு பெற்றுள்ளன.



தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணிகளின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் 386 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும், 5 சிறு பாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டன. 2002–2003ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 327 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளும், 1 சிறு பாலம் கட்டும் பணியும் முடிக்கப்பட்டன. நடப்பாண்டில் ரூ.80.25 கோடி மதிப்பீட்டில் 243.59 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 7 சிறிய பாலங்களும் முடிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

ஒரு நாட்டின் மேன்மை அந்நாட்டு மக்களின் அறிவுத் திறனாலும் உடல் ஆரோக்கியத்தாலும் அறியப் படுகிறது. தமிழகத்தின் சார்பில் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், அந்தப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றிட ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு உரிய ஊக்கத்தொகை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைபிறப்பித்தார்கள். அதன்படி, வீரர்கள் வீராங்கனைகளுக்கு அரசு ஊக்கத்தொகைகளை வழங்கி வருகிறது.

★ நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மலைப்பிரதேச விளையாட்டுப் பயிற்சி மையம் அமைத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ திருச்சி, சேலம், ஈரோடு, நாகர்கோவில், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

★ 2002–2003ஆம் ஆண்டு முதல் சர்வதேச விளையாட்டு வீரர் கண்டறியும் திட்டத்தின்கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.



★ 53 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க அவர்களது தேவைக்கேற்ப உதவிகள் வழங்கப்படுகின்றன.

★ 300 இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், ரோட்டரி இன்டர்நேஷனல் கழகமும் இணைந்து, "சென்னை மராத்தான்" ஓட்டப் பந்தயப் போட்டியை சர்வதேச மராத்தான் போட்டிகளுக்கு இணையாக கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐஎம்சி (International Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து "சென்னை ஓபன்"(CHENNAI OPEN) என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ சர்வதேச ஹாக்கி இணையமும், தமிழ்நாடு ஹாக்கி சங்கமும் இணைந்து "டாக்டர் ஜெ ஜெயலலிதா தங்கக் கோப்பை" எனும் பெயரில் சர்வதேச அளவிலான போட்டியினை 2004–ஆம் ஆண்டிலும், சாம்பியன்ஸ் டிராபி 2005 எனும் போட்டியினையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் நடத்திட திட்டமிட்டுள்ளது.

★ ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகள், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 123 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.2.10 கோடி வழங்கப்பட்டது.

★ தற்போது காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10% இட ஒதுக்கீடு முறை ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கும் நீட்டிக்கப்படும்.

★ நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் தத்தெடுக்கப் பட்ட கிராமங்களிலும், நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளிலும் 10 நாள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2001–02ஆம் ஆண்டில் 1,990 கிராமங்களிலும் 2002–2003ஆம் ஆண்டில் 2,436 கிராமங்களிலும், 2003–2004 ஆம் ஆண்டில் 2,645 கிராமங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

★ 1.10.2001 அன்று மட்டும் ஒரே நாளில் சென்னைப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவத் தொண்டர்கள் 5,270 அலகுகள் இரத்தம் தானம் செய்து கின்னஸ் சாதனையில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது..

★ நாட்டுநலப் பணித்திட்டத்தின் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் சுமார் 12,000 குழந்தைத் தொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் கல்வி பெறுவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



# தமிழ் வளர்ச்சிக்கு தன்னிகரற்ற முயற்சி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"

– பாரதியார்

தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது என்பார் மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர். இத்தகு பெருமையுடைய தமிழின் வளர்ச்சியில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது.

★ மும்பைப் பகுதியில் உள்ள ஏழை – எளிய தமிழ் மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.43,025/– மதிப்புள்ள பாடநூல்கள் 3.10.2002 அன்று வழங்கப்பட்டன.

★ படைப்பாளர்கள் திரு.ந. பிச்சமூர்த்தி, திரு.க.நா. சுப்பிரமணியம், நாவலர். ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ **புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவ ரூ.50/– இலட்சம் நல்கைத் தொகை 9.9.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி ஒரே தவணையில் வழங்கப்பட்டுள்ளது.**

★ அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் திருநாள் விழா கொண்டாடப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் தொகையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் கொண்ட திருவள்ளுவர் விருது தகுதியுடைய தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

★ ஒவ்வொரு ஆண்டும் பாரதியார் விருது, பாரதிதாசன் விருது, திரு.வி.க. விருது, கி.ஆ.பெ. விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் கொண்டதாகும்.

★ புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் 'சொல்வங்கித் திட்டம்' தோற்றுவிக்கப்பட்டு, இதுவரை 19 கூட்டங்கள் நடத்தப்பட்டு 361 சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் தொடர்பான பணிகள் தொய்வின்றிப் புதிய பொலிவுடன் தொடர்வதற்குத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டுப்பாட்டின் கீழ் அமைய அரசு ஆணையிட்டுள்ளது.

★ **சென்னை ஏழுகிணறு பகுதியில் வள்ளலார் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

★ அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 14 தமிழறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் பெறத்தக்கவகையில் ஓய்வூதியம் வழங்கி ஆணையிட்டுள்ளது.

★ தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001 மே முதல் இந்நாள் வரை 69 தமிழறிஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– 11 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/– வழங்கப்பட்டுள்ளது.

★ சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001– 2002ஆம் நிதியாண்டில் ரூ.9,10,956ம், 2002 – 2003ஆம் நிதியாண்டில் ரூ.4,72,460ம், 2003 – 2004 ஆம் நிதியாண்டில் ரூ.4,98,616ம் நூலாசிரியர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

★ **திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் வாழ்ந்த இல்லம் அரசு நினைவிடமாக அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.**

★ சென்னை அரசு அருங்காட்சியகம் நாட்டிலுள்ள மாநில அருங்காட்சியகங்களுள் மிகவும் பழமை

வாய்ந்த பெரிய அருங்காட்சியகம் ஆகும். இதன் 151ஆவது ஆண்டு நிறைவு விழா 19-6-2003 அன்று நடைபெற்றது. இவ்விழாவில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு.பெ.ஸ்ரீ ராமமோகன் ராவ் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

★ நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய வலைத்தளம் மற்றும் மின்னஞ்சல் ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. சென்னை அருங்காட்சியக வலைத் தளம் உலகத்திலேயே மூன்றாவது சிறந்த வலைத்தளமாகத் திகழ்கிறது.

★ ஆய்வறிஞர்களுக்குத் தேவையான சந்தைகளில் கிடைக்காத மிக அரிய 53 அருங்காட்சியக நூல்களை மறு அச்சீடு செய்தது.

★ தமிழ் மொழியில் சொற்பிறப்பியல் பேரகரமுதலியைப் பன்மடலங்களில் 31 தொகுதிகளாகத் தொகுத்து வெளியிடுவதே இத்துறையின் ஆக்கமும் நோக்கமும் ஆகும். பேரகரமுதலி வெளியீடுகள் வரிசையில் 6ஆவது பகுதியின் அச்சீட்டுப்பணி விரைவு படுத்தப்பட்டு 2002 ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்டது. பேரகரமுதலி எஞ்சிய 25 பகுதிகளை நான்காண்டு கால வரம்பெல்லைக்குள் முடிக்கப்பெற வேண்டும் என்ற அரசின் அறிவிப்புக்கிணங்க, ஆண்டுக்கு 6 பகுதிகள் என்ற செயல் இலக்கு வரையறுக்கப்பட்டு, முதற்கட்டமாக 2002-2003ஆம் நிதியாண்டில் 6 பகுதிகள் தொகுத்து முடிக்கப்பட்டன. இவ்வாறு 6 பகுதிகள் ஒரு சேர முடிக்கப்பட்டு, அச்சுக்கு அணியமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த 6 பகுதிகள் கணியச்சு செய்வதற்கு ரூ.125 இலட்சம் நிதி ஒப்பளிப்புச் செய்து வழங்கப்பட்டது. அதனையடுத்து, 2003-2004ஆம் நிதியாண்டில் இரண்டாவது கட்டமாக 6 பகுதிகள் தொகுப்புப் பணி முடிக்கப்பட்டு, இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

★ நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தில் 498 கலைஞர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ 11,176 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



★ தமிழ்நாட்டில் இயங்கி வரும் 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் இசைக் கருவிகள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்பெற்றுள்ளன.

★ ரூ.5 இலட்சத்தில் சவகர் சிறுவர் மன்ற மாணவர்களுக்கு கோடைக் காலப் பயிற்சி சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ 2003-2004 ஆம் ஆண்டில் நலிந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் திட்டத்தில் நலிந்த கலைஞர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 500 கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

★ இளங்கலைஞர்கள் ஊக்குவிக்கும் திட்டத்தில் 2003-2004ஆம் ஆண்டில் ரூ.1 இலட்சமும், 2002-2003ஆம் ஆண்டில் பண்பாட்டுப் பலகணி மூலம் குறுந்தொகை நாட்டிய நிகழ்ச்சிக்கு ரூ.0.65 இலட்சமும், இராக ஆராய்ச்சி மையத்திற்கு இராக ஆராய்ச்சிப் பணிக்கு 2002-2003ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சமும், 2003-2004ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ 2003-2004 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் புகழ் பெற்ற பரதநாட்டியத்தின் ஒரு பிரிவான அசைவுகள் குறித்து புத்தகத் தொகுப்பு வெளியிட ரூ.7 இலட்சம் நிருத்யோதயா கலை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 3 தொகுதி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.



★ நுண்கலை பயில ஆர்வமுள்ளவர்களுக்காக, 15 வயதுக்கு மேற்பட்ட எவரும் கலந்து கொண்டு ஓவியப் பயிற்சி பெறுவதற்கான 6 மாத பயிற்சித் திட்டம் 2004 ஜனவரி திங்கள் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

★ 2003-2004 ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் அனைத்துச் சிறுவர் மன்றங்களிலும் இலவசக் கலைப் பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னைச் சிறுவர் மன்றத்தில் 1,465 சிறுவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாநில அளவில் கொடைக்கானல் நகரில் 2001 மே மாதம் 10 நாட்கள் 100 சிறுவர்களுக்குக் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாநில அளவில் உதகமண்டலம் நகரில் 100 சிறார்களுக்கு 2002 மே திங்களில் எட்டு நாட்களில் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடனம், நாடகம், குரலிசை, ஓவியம், கைவினை ஆகிய கலைகளில் மாநிலத்திலுள்ள அனைத்துச் சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்தும் 100 குழந்தைகளுக்கு 2003 மே மாதம் 10 நாட்கள் கொல்லிமலையில் கோடைக்காலச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ 2001, 2002, 2003 ஆண்டுகளில் கலைமாமணி விருது 91 பேர்களுக்கும், பொற்கிழி 9 பேர்களுக்கும், சுழற்கேடயம் ஒரு சிறந்த கலை நிறுவனத்துக்கும், ஒரு கேடயம் சிறந்த கலை நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டது. 18 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

★ 2002-2003 ஆம் நிதியாண்டில் 498 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.500/- நிதியுதவி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்கு ரூ.5,000/- நிதியுதவித் தொகையாக கடந்த மூன்றாண்டுகளில் 34 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடும்பப் பராமரிப்பு நிதியுதவித் தொகை ரூ.5,000/- லிருந்து ரூ.6,000/- ஆக உயர்த்தி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கடந்த மூன்றாண்டுகளில் 89 கலைஞர்களுக்கு தமிழகத்தில் உள்ள 14 கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகள் நடத்திட இளங்கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் வாய்ப்பு வழங்கப்பட்டது.

★ கிராமியக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்கும் திட்டத்தில் 2001-2002 நிதியாண்டில் 145 தனிப்பட்ட கலைஞர்களுக்கும், 48 கலைக் குழுக்களுக்கும், 2002-2003 நிதியாண்டில் 181 தனிப்பட்ட கலைஞர்களுக்கும், 50 கலைக் குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நட்டுவாங்க கலைஞர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் 6 பரதநாட்டியக் கலைஞர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு சிறந்த பரதநாட்டிய வல்லுநர் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ 300 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள இடங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த செல்லும் கலைஞர்களுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பில் 75 சதவிகிதம் சலுகைக் கட்டணமும், முதல் வகுப்பில் 50 சதவிகிதம் சலுகைக் கட்டணமும் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில் 9,572 பயணச் சலுகைச் சான்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையில் ஆண்டுதோறும் சராசரியாக இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

★ தமிழக அரசுப் பேருந்துகளில் நாடகக் கலைக்குழுக்களுக்கு 50 சதவிகித பேருந்துக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் 2001-2002 ஆம் ஆண்டில் 35 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 423 கலைஞர்களும், 2002-2003 ஆம் ஆண்டில் 36 நாடகக் குழுக்களைச் சார்ந்த 438 கலைஞர்களும், 2003-2004 ஆம் ஆண்டில் 29 நாடகக் குழுக்களைச் சேர்ந்த 398 கலைஞர்களும் பயன்பெற்றுள்ளனர்.

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டம், விரிவுபடுத்தப்பட்டு தற்சமயம் 162 திருக்கோயில்களில் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31.3.2004 முடிய இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 1,20,18,047 ஆகும். சுமார் 2,123.6 இலட்சம் ரூபாய் நன்கொடையாகவும், ரூபாய் 590.03 இலட்சம் உண்டியல் மூலமும், செலவினங்கள் போக இத்திட்டத்தில் உபரி நிதியாக ரூ.600.9 இலட்சமும் கிடைக்கப்பெற்று மக்களின் பேராதரவை பெருமளவில் பெற்றுள்ளது.

அன்னதானத் திட்டம் நடைபெற்றுவரும் அனைத்து திருக்கோயில்களிலும், சிறுவர், சிறுமியர்களுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்கான "ஆன்மீக வகுப்புகள்" ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 31.3.2004 முடிய



திருக்கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு 676 திருக்கோயில்களில் 1,086 பணிகளுக்கு ரூ.5,646.79 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

3,74,095 சிறுவர், சிறுமியர் பயனடைந்துள்ளனர். "மாணவர்களுக்கு நீதிபோதனை" என்ற நூல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் திட்டத்தில் இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு தற்கால விலைவாசி உயர்வின் அடிப்படையில் இணை ஒன்றுக்கு செலவு ரூ.4,500/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் பொன் திருமாங்கல்யத்தின் எடையை 4 கிராமாக உயர்வு செய்து இணை ஒன்றுக்கு செலவுத் திட்டம் ரூ.5,500/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. 14.7.2002 அன்று 1,008 இணைகளுக்கும், 18.6.2003 அன்று 1,053 இணைகளுக்கும், சென்னை திருவேற்காட்டில், சிறப்பாக இலவசத் திருமணங்கள் நடத்தப்பட்டன. திருக்கோயில்கள் சார்பில் 5/2001 முதல் 3/2004 முடிய உள்ள காலத்தில் 2,550 இணைகளுக்கு இலவசத் திருமணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய கோவில் பிரகாரத்தைக் கொண்ட இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் திருத்தலத்தில் 125 வருடங்களாக பயனற்றுகிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி செப்பனிடப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 8.4.2002 அன்று திறந்துவிடப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயிலில் 49 திருப்பணி வேலைகள் ரூ.136.40 இலட்சம் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று, 9.4.2004இல் குடமுழுக்கு நடத்தப்பட்டது.

திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலில் ரூ.150 இலட்சம் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று 7.4.2004இல் திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

இத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் 2001–02ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், ஆகமொத்தம் 150 திருக்கோயில்களுக்கு ரூ.37.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 6,500 திருக்கோயில்களுக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமப்புற பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணித் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில் களுக்கும் தலா ரூ.25,000/– வீதம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2003–2004ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

திருக்கோயில்களில் திருப்பணிகள் முடித்து கடந்த மூன்றாண்டுகளில் 3,195 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 18 ஆண்டு காலம் கடந்த நிலையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் சுமார் ரூ.300 இலட்சம் செலவில் அனைத்து திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு 27.6.2002 அன்று குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது. சுமார் 450 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.20 இலட்சம் செலவில் புராதன சிறப்புமிக்க ஆயிரங்கால் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. இது தவிர சுமார் ரூ.85 இலட்சம் செலவில் சுவாமி மற்றும் அம்பாள் சன்னதி கொடி மரங்கள் தங்க ரேக்குகள் ஒட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இத்திருக்கோயிலின் அலங்கார மண்டபம் ரூ.107 இலட்சம் செலவில், புதிதாக கட்டப்பட்டு, 7.10.2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



காஞ்சிபுரம் மாவட்டம், திருத்தணி வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு, கடந்த 6.7.2003 அன்று கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஒரு கால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை முறைப்படி நடத்திட கடந்த மூன்றாண்டுகளில் 1,550 திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சிவன்மலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் புதிய தங்க ரதம் ரூ.57 இலட்சம் மதிப்பிலும், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.111 இலட்சம் மதிப்பிலும் புதிய தங்க ரதம் செய்யப்பட்டது.

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு ரூ.22.30 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டு, 8.4.2002–லும், மயிலாடுதுறை நகர், அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.22.50 இலட்சம் மதிப்பில் தேர் திருப்பணி செய்யப்பட்டு, 15.11.2003–லும், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு பாஷ்யகாரசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டு, 4.4.2004–லும் தேரோட்டம் நடத்தப்பட்டது.

சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில், சுமார் ரூ.25 இலட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 118 திருத்தேர்கள் பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளன. **"கிராமக்கோயில் பூசாரிகள் ஒய்வூதிய தேர்வுக் குழுவினரால்" இத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு 1.5.2001 முதல் நபர் ஒருவருக்கு ரூ.500/– வீதம் 1.5.2001 முதல் 31.3.2004 முடிய மொத்தம் 1,186 ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.**

திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், ஓதுவார் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின்படி, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 6 ஓதுவார்கள், 2 வேத பாராயணர்கள், 11 இசைக் கலைஞர்கள், 110 அர்ச்சகர்கள், ஆகியோர்களுக்கு ஓய்வூதியம் ரூ.500 வீதம் தொடர்ந்து வழங்க அனுமதிக்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் 557 பழைய நந்தவனங்கள் சீரமைக்கப்பட்டும், புதியதாக 336 நந்தவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் 4,89,359 மரங்கள் நடப்பட்டுள்ளன. 600 திருக்கோயில் திருக்குளங்கள் தூர்வாரப்பட்டு சீரமைக்கப்பட்டன. 1,232 திருக்கோயில் திருக்குளங்களிலும், 106 குட்டைகளிலும் மழைநீர் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் 1,928 திருக்கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, யானைகள் புத்துணர்ச்சி முகாம் முதுமலை வனச்சரணாலயத்தில் 2003 நவம்பர் 16ஆம் நாள் தொடங்கப்பட்டு, மொத்தம் 100 யானைகள் இம்முகாமில் கலந்து கொண்டன. இம்முகாமில் நல்ல மருத்துவ சிகிச்சைகளும், இயற்கையான சூழ்நிலையில் நல்ல சத்துணவும், சிறப்பான பயிற்சிகள், ஆற்றுக் குளியல் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, இப்புத்துணர்ச்சி முகாம் ஆண்டுதோறும் 45 நாட்களுக்கு நடத்தப்படும்.**

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகப் பெருவிழா கும்பகோணம் மாநகரில் 2004 மார்ச் மாதம் 6ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டது.

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில், பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும்பொருட்டு, தொங்கு உந்து (ரோப் கார்) நிறுவும் திட்டம் ரூ.388 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

உபரி நிதி வசதிமிக்க 7 திருக்கோயில்களின் நிதியிலிருந்து, நிதி வசதியற்றதும், பாடல் பெற்றதும் / மங்களாசாசனம் பெற்றதுமான 17 திருக்கோயில்களின் கால பூஜைகள் நடத்துவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தற்பொழுது உபரி நிதி வசதி மிக்க 2 திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, 10 நிதி வசதியற்ற திருக்கோயில்களின் கால பூஜைகள் நடத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. நிதி வசதியற்ற 13 திருக்கோயில்களின் திருப்பணிகளை, 5 நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மேற்கொள் வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



# வரிச்சலுகை வழங்கிய வணிகவரித்துறை

வணிகவரித்துறையில் 2001–2002ஆம் நிதியாண்டில், 2.78 விழுக்காடாக இருந்த வளர்ச்சி விகிதம், 2002–2003ஆம் நிதியாண்டில் 14.55 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 2003–2004ஆம் நிதியாண்டில் வளர்ச்சி விகிதம் 15.27 சதவிகிதமாக உள்ளது.

2003–2004ஆம் ஆண்டிற்கான வருவாய் 98 சதவிகிதமாக எட்டப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அனைத்து இனங்களுக்கும், சமச்சீர் வரிவிகிதம் முழுமையாக அமலாக்கப்பட்டது. மேலும்,

அ) பதிவுத் தொகை மாற்றம்.

ஆ) பொருட்களின் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டு வரி விகிதம் திருத்தியமைப்பு

இ) 1.7.2002 முதல் உள் கட்டமைப்பு மேல் வரி 5 சதவிகிதமாக விதிக்கப்பட்டது.

ஈ) மதிப்புக் கூட்டு வரி அமலாக்கத்திற்கு முன்னோடியாக மறு விற்பனை வரி 1 சதவிகிதம் 1.7.2002 முதல் விதிக்கப்பட்டது.

உ) வரி ஏய்ப்பினைத் தவிர்க்கவும், உள் மாநிலத் தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்கவும், சுமார் 23 அத்தியாவசிய வரி ஏய்ப்பு பொருட்களின் மீது நுழைவு வரி விதிக்கப்பட்டது.

ஊ) ஆடம்பர வரிச் சட்டத்தின் கீழ் 1.7.2002 முதல் தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் மதிப்புமிக்க கற்கள் மீதான இருப்பின் மீது 1 சதவிகிதம் ஆடம்பர வரி விதிக்கப்பட்டுள்ளது.

எ) வரி வழக்குகளையும், பூசல்களையும் குறைக்க புதிய சமாதானத் திட்டம் 1.7.2002 முதல் 31.10.2002 வரை அமல்படுத்தப்பட்டு இதன்மூலம் ரூ.10.43 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. ரூ.45.40 கோடி ஈடு செய்யப்பட்டுள்ளது.

## வழங்கப்பட்ட சலுகைகள்

- கரும்புச்சாறு கழிவினை உபயோகப்படுத்தி மருந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு கரும்புச் சாற்றின் கழிவு மீதான வரி விகிதம் 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.
- சாகோசேர்வ் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 சதவிகித கூடுதல் விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டு, நடப்பு ஆண்டில், வரி சதவிகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.
- பெட்ரோலியப் பொருட்களின் மீதான அரசின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் லூப் பேஸ் எண்ணெய் மீதான கொள்முதல் வரிக்கு 7 சதவிகிதம் வரி ஈடுசெய்து கொள்ள (set off) அரசுடைமையாக்கப்பட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் என்ற நிறுவனத்திலிருந்து சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு விற்கும் மெழுகுக்கு வரி 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இயற்கை ரப்பர் வெளி மாநில விற்பனையின் மீது செலுத்தப்படும் 4 சதவிகித வரியினை தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் வரியிலிருந்து சரி செய்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசுத்துறையாக இருந்து தற்போது அரசு நிறுவனமாக குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைச் செய்தி சாதனங்கள் மீதான வரி, 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- மின்சாதனங்கள் மின்கருவிகள், மின் பொருட்கள், கையால் தயாரிக்கப்பட்ட சோப்புகள், இயந்திரத்தினால் தயாரிக்கப்பட்ட தீக்குச்சிகள் மற்றும் காகிதம் ஆகியவற்றிற்கான விற்பனை வரியிலிருந்து இப்பொருட்கள் தயாரிப்பதற்காக படிவம் 17 கொடுத்து வாங்கப்பட்ட மூலப்பொருட்களின் மீது செலுத்தப்பட்ட 3 சதவிகிதம் வரியினை ஈடுசெய்து கொள்ளும் (set off) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- அச்சுப்பொருட்கள் தொடர்பான வழக்குகளைக் குறைக்கும் வகையில் விற்பனையாக இருப்பினும் அல்லது ஒப்பந்தப் பணியாக இருப்பினும் 3 சதவிகிதம் இணக்க வரி செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.
- சிமெண்ட் மற்றும் வெள்ளை சிமெண்ட் மீது விதிக்கப்பட்டு வந்த நுழைவு வரி விலக்கப்பட்டுள்ளது.
- ரூபாய் ஒரு கோடியாக இருந்த சுய வரிவிதிப்பு முறை ரூபாய் பத்து கோடியாக உயர்த்தப்பட்டது. வரிவிதிப்பு நிலுவையினைக் குறைக்க சம்மரி வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- "டீ செர்வ்" மூலம் விற்கப்படும் தேயிலைக்கு உள் மாநில வரி 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், இடைமாநில விற்பனை மீதான வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சுழல் பாதுகாப்பினைக் கருதி பெட்ரோலிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் 'எத்தனால்' மீதான உள் மாநில வரி 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக 1.10.2003 முதல் குறைக்கப்பட்டுள்ளது.
- வணிகர்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு பிளாஸ்டிக் மூலப் பொருட்கள், பி.வி.சி. ரெசின், பொட்டாசியம் குளோரேட், லேப், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் போன்றவற்றின் மீதான நுழைவு வரி 1.7.2002 முதல் 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் உள்ள வறட்சி நிலையினைக் கருத்திற்கொண்டு அரிசியின் மீது விதிக்கப்பட்ட 2 சதவிகித வரி விலக்கிக் கொள்ளப்பட்டது.
- தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கென தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த ஆடம்பர வரிவிகிதம் மற்றும் கேளிக்கைப் பூங்காக்கள் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம் 20 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- தின்பண்டமான பேரீச்சம் பழத்தின் மீதான வரிவிகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- சி.ஏ.பி.டி. என்ற திரவ மருந்திற்கும், எய்ட்ஸ்க்கு வழங்கப்படும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் உயிர் காக்கும் மருந்துகளெனக் கருதி முழு வரிவிலக்கு வழங்கப்பட்டது.
- சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளுக்கு வரிவிகிதம் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.
- கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- கோழித்தீவனம் தயார் செய்யப் பயன்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரி ரத்து செய்யப்பட்டது.
- மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்கும் இயற்கை எரிவாயுவின் மீதான விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்தும், மற்றொரு மத்திய அரசு நிறுவனமான கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிட்., (GAIL) விற்கும் இயற்கை வாயுவின் இரண்டாம் விற்பனைக்கு ஒரு சதவிகித மறு விற்பனை வரி விலக்கும் வழங்கப்பட்டது.
- கணினி உபரிப் பொருட்களின் இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.
- வரி ஏய்ப்பினைத் தவிர்க்கவும், உள் மாநிலத் தொழில்களைப் பாதுகாக்கவும், வரி வருவாயைப்

பெருக்கவும், 1.12.2001 முதல் 6 இனங்களுக்கும், 21.3.2003 முதல் 2 இனங்களுக்கும், 27.3.2002 முதல் மேலும் 18 இனங்களுக்கும், 1.10.2003ல் ஒரு இனத்திற்கும், நுழைவு வரி விதிக்கப் பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டும், வெள்ளை மண்ணெண்ணெய் மீது டீசலுக்கு இணையாக 25 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மது வகைகள், வெள்ளை மண்ணெண்ணெய் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கென நுழைவுச்சீட்டு முறை (Transit pass) அமலாக்கப்பட்டுள்ளது.
- செயலாக்கக் குழுவினர் கடந்த ஆண்டுகளில் இணக்கக் கட்டண வசூல், முன்வரி வசூல், வரி, தண்டத்தொகை வசூல் போன்றவற்றின் மூலம் 31.3.2002ல் ரூ.29,505.81 இலட்சமும், 31.3.2003ல் ரூ.93,727.71 இலட்சமும், 31.3.2004–ல் ரூ.75,562.59 இலட்சமும் வசூல் செய்யப் பட்டுள்ளது.
- **வரி ஏய்ப்பு தொடர்பான தகவல்களை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பெறும் பொருட்டு தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பொருத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.2.2004 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**
- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.2.2004 அன்று வணிகவரித் துறையைச் சார்ந்த நான்கு அலுவலர்களுக்கு தலா ரூ.25,000/– வீதம் ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கப் பரிசுடன் சிறப்புப் பணிச் சான்றிதழும் வழங்கப்பட்டது.**
- **வணிகவரித் துறைக்கு புதிதாக 36 வாகனங்கள் 20.2.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.**
- வணிகவரித் துறைக்கென ஒரு நிலையான இணைய தளம் (www.tnsalestax.com) ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- வணிகர் நல வாரியம், மாற்றியமைக்கப்பட்டு, அலுவல் சார் உறுப்பினர்களைத் தவிர 16 அலுவலர் சாரா உறுப்பினர்களை நியமிக்க அரசாணையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 2 கோடி இவ்வாரியத்திற்கு நிதியாக வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இந்த 2 கோடியில், 1.95 கோடி ரிசர்வ் வங்கியில் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 5 இலட்சம் வாரியத்தின் நடவடிக்கைக்கென ஒதுக்கப் பட்டுள்ளது.

## பதிவுத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவுத்துறை வருவாய் பின்வருமாறு ஈட்டப்பட்டது. அதாவது, 2001–02ல் ரூ.1,264.20 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 15.54, 2002–03ல் ரூ.1,648.86 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 30.43, 2003–04ல் ரூ.1,732.91 கோடி, வளர்ச்சி சதவிகிதம் 5.10.

பதிவுத்துறையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு வெளிப்படையான விரைவான சேவை அளித்திடவும் தமிழ்நாட்டில் இதுவரை 350 அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு பொது மக்களுக்கு சொத்துப் பதிவு நடவடிக்கைகள் ஒரு மணிக்குள்ளாக முடித்திடும் வகையில் சேவை புரிகின்றன. சான்றுகள், சான்றிட்ட ஆவண நகல்கள் மற்றும் வடிப்புகள் கோரும் கோரிக்கைகள் தனிப்பட்ட இணையதளம் (http://tnreginet.net) வழி அனுப்பப்பட்டு அவைகள் மனுதாரரின் இல்லத்திலேயே பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### சமாதானத் திட்டம் 2002

மதிப்பு நிர்ணயத்திற்காக தனித்துணை ஆட்சியரிடம் (முத்திரை) நிறைய ஆவணங்கள் நிலுவையில் இருந்தமையால் 'சமாதான் திட்டம்' அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டம் வழி சார்பதிவாளரால் ஆவணத்திற்கு கோரப்பட்டவாறு ஆட்சேபிக்கப்படும் முத்திரைத் தீர்வை/பதிவு கட்டணத்தில் 60 சதவிகிதம்மட்டுமே செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற வசதி செய்யப்பட்டது. மொத்தமிருந்த 91,101 ஆவணங்களில் 50,694 ஆவணங்கள் ரூ.95.95 கோடி முத்திரைத்தீர்வை மற்றும் பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்டு திருப்பி அளிக்கப்பட்டுள்ளன. 34,000 ஆவணங்கள் முடிவு செய்யப்பட்டு ரூ.34.56 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

முத்திரைத் தீர்வையை 6 சதவிகிதம் எனவும், மிகுவரியை 2 சதவிகிதம் எனவும் அரசு குறைத்துள்ளது. இந்த நடவடிக்கை தொழில் வளர்ச்சி மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை அதிகமாக்கும்.

சாதாரண அடைமானம் – தீர்வை 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதம் ஆக குறைக்கப்பட்டு உச்ச தீர்வை ரூ.20,000/– மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச கட்டணமாக ரூ.5000 ஆக குறைக்கப்பட்டது. சுவாதீன அடைமானம் – தீர்வை மற்றும் மிகுவரி 3 சதவிகிதம் மற்றும் 1 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச வரம்பு ரூ.2 இலட்சமாக்கப் பட்டுள்ளது. உரிமை ஆவணங்கள் வைப்பீடு – முத்திரைத் தீர்வை 0.5 சதவிகிதத்தில் உச்ச தீர்வை ரூ.5,000 பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்தில் உச்ச கட்டணம் ரூ.1,000. கைமாற்றுத் தொகையின் பேரிலான அதிகார ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவிகிதம் ஆக குறைக்கப்பட்டுள்ளது. ❖



# சாதனை ஏட்டில் சரித்திரப் பதிவுகள்





குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டம்






சென்னை அரசு அருங்காட்சியகத்தின்
151ஆவது ஆண்டு விழா
மேதகு இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்கள்
பங்கேற்பு (19-6-2003)



சிறுவர்களிடையே
நற்பண்புகளை வளர்க்க
காவலர் சிறார் மன்றங்கள்
தொடக்கம் (17-9-2003)



புதிய தொழில்வாய்ப்புகள்
பற்றிய கருத்தரங்கம்
(15-10-2003)





ரூ.5 இலட்சம் மற்றும் தங்கப்பதக்கத்துடன்
கல்பனா சால்வா விருது வழங்கல்
(15-8-2003)



மகளிர் காவலர்களுக்கான
குழந்தைகள் நல காப்பகங்கள் திறப்பு
(27-1-2003)



இந்தியாவிலேயே முதன்முறையாக
தட்டம்மை, புட்டாலம்மை தடுப்பூசித் திட்டம்
தொடக்கம் (10-10-2003)



அரசு மருத்துவமனைகளுக்கு
அல்ட்ரா ஸ்கேன் கருவி வழங்கல்
(17-4-2003)

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் பன்னாட்டினர் சந்திப்பு



இந்தியாவிற்கான அமெரிக்க தூதர்
திரு.ராபர்ட் டி. பிளாக்வில் அவர்கள்
(6–11–2002)



சென்னையில் நடைபெற்ற
இந்திய மற்றும் ஆசியா தகவல் தொழில்நுட்பம் –
மென்பொருள் தொழில் வளர்ச்சி கருத்தரங்கம்
(11–11–2002)



ஜெர்மன் நாட்டு ஒக்ஸ்வேகன்ட் கார் நிறுவன தயாரிப்பு
நிறுவனத்தலைவர் டாக்டர் எல்மத் ஸ்விஸ்டர் அவர்கள்
(12–3–2003)



உகாண்டா நாட்டின் துணை ஜனாதிபதி
திரு. இஸ்பிகோஸா வாண்டிரா அவர்கள்
(5–3–2003)





நேபாள மன்னர் [illegible],
ராணி கோமல் [illegible]
ஆகியோருக்கு வரவேற்பு (22–3–2003)



[illegible]





[illegible]





சென்னையில் அமெரிக்க பன்னாட்டுப் பள்ளித் திறப்பு (25-9-2003)



புதுடெல்லியில் உள்ள
பிரிட்டிஷ் ஹைகமிஷனர்
திரு. சர் ராப் யங்,
துணை ஹை கமிஷனர்
திரு. ஸ்டூவர்ட் இன்னஸ் ஆகியோர்
(29-9-2003)



பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த
திரு. டேவிட் ரிச்சர்ட்சன் அவர்கள்
(21-4-2003)



வாஷிங்டனில் உள்ள
உலக வங்கித் துணைத்தலைவர்
திரு. ஃபெய்சூல் எச். சவுத்ரி அவர்கள்
(17-11-2003)





பன்னாட்டு மருத்துவ வல்லுநர்கள்
(12-11-2003)



ஐ.நா. வளர்ச்சி [illegible]







[illegible] ஆயிரம் கோடியில் அனல் மின் நிலையம் [illegible] ஒப்பந்தம் (1[illegible]-6-2003)



சென்னையில், சுற்றுலா வளர்ச்சிக்கான 64 ஆவது [illegible] பன்னாட்டு மாநாடு (20-10-2003)





[illegible] (7-[illegible]-2003)



# வியத்தகு தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டின் பன்முக தொழில் வளர்ச்சி தமிழக பொருளாதாரத்திற்கு பெரும் வலிமையாக இருந்து வருகிறது. இம்மாநிலம் தொழிற்சாலைகளுக்கு போதுமான ஆற்றலை வழங்கியும், தேர்ச்சி பெற்ற மனித ஆற்றல் வளம் நிரம்பியும், தொழில் உறவுகளில் இணக்கமான சூழ்நிலை நிலவியும் விளங்குவதோடு தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்மை இங்கு வாழ்வோரிடையே நல்ல தரமான பணிச்சூழலையும் அமைதியான வாழ்க்கை முறையினையும் வழங்கி வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல உறுதி பூண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

- ❖ சுப்ரீம் சுகுணா புட்ஸ் லிமிடெட், உடுமலைப்பேட்டை திட்ட முதலீடு - ரூ.11 கோடி செலவில் கூட்டுத்துறைக்கான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு முழு வீச்சில் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.
- ❖ கோல்டன் ப்ரைஸ் லிமிடெட் மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் திட்ட முதலீடு ரூ.38.68 கோடியில் திட்டம் முடிவு பெற்று ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகிறது.
- ❖ மஹேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க், மறைமலை நகர் திட்ட முதலீடு ரூ.233 கோடியில் பூங்கா தொடங்கப் பட்டது.
- ❖ தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், சென்னை திட்ட முதலீடு ரூ.26.84 கோடியில் உலகத் தரம் வாய்ந்த கருத்தரங்கு மைய கட்டடப் பணிகள் நடந்து வருகிறது.
- ❖ டைசல் பயோ பார்க் லிமிடெட், தரமணி, சென்னை திட்ட முதலீடு ரூ.62.5 கோடியில் திட்டம் உருவாக்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ❖ நர்மதா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், ஈரோடு திட்ட முதலீடு ரூ.76.87 கோடியில் கூட்டுத் துறை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு மாதிரி உற்பத்தி ஆரம்பம்.
- ❖ டான்ப்ளோரா மலர் கட்டமைப்பு பூங்கா, ஒசூர், தர்மபுரி திட்ட முதலீடு ரூ.24.85 கோடியில் மாதிரி பண்ணை அமைப்புகள் கட்டி முடிவு பெற்று, கடன் வசதிகள் ஏற்பாடு, மத்திய பதப்படுத்தும் அரங்கத்தின் கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னை தரமணியில், புதிய தகவல் தொழில் நுட்ப பூங்கா உருவாக்க கூட்டுத் துறைக்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- ❖ சிறப்பு பொருளாதார மண்டல கொள்கை(SEZ Policy) அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ டிட்கோவின் கூட்டுத்தொழில் நிறுவனங்களான தமிழ்நாடு பெட்ரோப்ராடக்ஸ் லிமிடெட் (Tamilnadu Petroproducts Limited)டிசம்பர் 2001இல் DNV என்ற நிறுவனத்தின் பெருமைக்குரிய ஐஎஸ்ஓ (ISO) 14001 சான்றிதழை டிபிஎல் நிறுவனத்தின் க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது. மேலும் இதற்கு காப்புக் கழகத்தின் 2002-03 தேசிய காப்பு விருதுகள் LAB மற்றும் க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது. அத்துடன் மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான பசுமை மதிப்பீடு செய்யும் திட்டம் வழங்கும் பெருமைக்குரிய மூன்று இலைகள் விருது க்ளோர் அல்கலி பிரிவிற்கு வழங்கப்பட்டது.
- ❖ டைட்டான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (Titan Industries Limited)க்கு 2001 ஆம் ஆண்டிற்கான FICCI யின் சமூக ஏற்புத்தன்மைக்கான விருது வழங்கப் பட்டது.
- ❖ 2002ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கு மிகவும் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் வழங்கியதை பாராட்டும்



வகையில், தமிழக அரசின் "மிகவும் சிறந்த அமர்த்துனருக்கான" விருது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

- ❖ டான்ஃபாக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்(TANFAC Industries Limited)க்கு ஜப்பான் நாட்டின் JIPM நிறுவனத்தால் நிலையான முழுமையான ஆலை பராமரிப்புப் பணிகளில் முதல் பிரிவிற்கான 2002



ஆம் ஆண்டிற்கான சிறப்பாக செயல்பட்டமைக்கான சிறப்பு விருதும், நிலையான பாதுகாப்பு வழங்கியதை கௌரவிக்கும் வகையில் தமிழக அரசிடமிருந்து மூன்று விருதுகளும் கிடைத்துள்ளன.

❖ தகவல் தொழில் நுட்ப பூங்கா (TIDEL Park)க்கு உட்கட்டமைப்பு மற்றும் இதர சேவைகளை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மேலாண்மை சேவைகளுக்கு ISO-9001-2000 சான்றிதழ் 29.3.2002இல் வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சுழற்சி முறை திட்டத்தின் கீழ் வட்டி விகிதம் சிறு தொழில் முதலீட்டாளர்களுக்கு 18 சதவிகிதத்திலிருந்து 15.25 சதவிகிதமாகவும், மற்ற தொழில் முதலீட்டாளர் களுக்கு 23 சதவிகிதத்திலிருந்து 16 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 31.12.2003 வரை 1,733 கடனாளிகள் பயனடைந் துள்ளனர்.

❖ வேறுபாடற்ற மற்றும் விருப்புரிமையற்ற ஒருமுறைத் தீர்வை 31.3.2004 வரை செயல்பட்டது. இதன்மூலம் 1822 கடனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும் ரூ.10 இலட்சத்திற்கு கடன் பெற்றோருக்கு ஒருமுறைத் தீர்வை திட்டமும் உள்ளது. இத்திட்டம் 27.2.2004 வரை நடைமுறையில் இருந்தது. இதன் மூலம் 127 கடனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

❖ தேசிய பங்கு மூலதனம், ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கு 2003–2004 வரவு செலவு திட்டத்தில் அரசு 3 சதவிகிதம் வட்டி மானியம் அறிவித்துள்ளது.

❖ 2003–2004 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளை தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கு தலுக்காக சலுகை வட்டிவிகிதத்தில் ரூ.17.97 கோடி 103 தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. 2003–04ஆம் ஆண்டில் மரபுசாரா எரிசக்தித் துறையின் கீழ் 7 காற்றாலைகளுக்கு ரூ.18.10 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சிட்பி (SIDBI) வங்கியிலிருந்து சலுகை வட்டி விகிதத்தில் தனியாக நிதியுதவி பெறப்பட்டது.

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் கல்வி செலவு ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் அனைத்து ஊழியர்களுக்கும், தொழிலாளர் களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு குழந்தைகளுக்கு குழந்தை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் வழங்கி வந்ததை தற்பொழுது ரூ.2000/– ஆக உயர்த்தி உள்ளது. இதனால் மொத்தம் 1500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ 2001–2002ஆம் ஆண்டில் டாமின் குவாரிகளில் மொத்தம் 23,335 க.மீ கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப் பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டில் கிரானைட் கற்களின் உற்பத்தியானது 29,066 க.மீ ஆக அதிகரித்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் கிரானைட் கற்களின் உற்பத்தி 35,057 க.மீட்டராக உயர்ந்துள்ளது.

❖ 2001–2002 ஆம் ஆண்டில் 21,776 க.மீ கிரானைட் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2003 –2004 ஆம் ஆண்டில் புதிய சாதன்ன அளவான 43,938 க.மீ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

❖ நடப்பு ஆண்டில் குவாரிகளின் இயக்கம் 54 ஆக உயர்ந்துள்ளது.

❖ சிவகங்கை கிராபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை 2001–2002இல் 4,554 மெட்ரிக் டன் செழுமைபடுத்திய கிரானைட் உற்பத்தி செய்து ரூ.5.18 கோடி மதிப்புள்ள 4,011 மெட்ரிக் டன் விற்பனை செய்து முதன் முறையாக ரூ.43.33 இலட்சம் ரொக்க இலாபம் ஈட்டியுள்ளது.

❖ 4,830 மெட்ரிக் டன் செழுமைப்படுத்திய கிரானைட் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. ரூ 6.18 கோடி மதிப்புள்ள 4,625 மெட்ரிக் டன் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. மேலும் உற்பத்தி மீட்பானது 70 விழுக்காட்டிலிருந்து 79 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

❖ இத்தொழிற்சாலை முதன் முறையாக ரூ.116 இலட்சம் ரொக்க இலாபமும்,ரூ.5 இலட்சம் நிகர இலாபமும் ஈட்டியுள்ளது. 2003–04ஆம் ஆண்டில் இத்தொழிற் சாலை ரூ.7.3 கோடி (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.

❖ 2002–2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.2 கோடி செலவில் ஒரு புதிய பல ரம்ப இயந்திரத்தையும், ஒரு



காலிப்ரேஷன் இயந்திரத்தையும் மாதேப்பள்ளி கிரானைட் ஒடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் நிறுவி நவீன மயமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இத்தொழிற்சாலையின் உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 21,300 ச.மீட்டரிலிருந்து 33,600 ச.மீ. ஆக அதிகரித்துள்ளது. 2003–04ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலை ரூ.160 இலட்சம் (தணிக்கை செய்யப்படாதது) அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

❖ 2001–02ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், 24.62 மெகாவாட் திறன் கொண்ட நான்காவது மின் உற்பத்தி இயந்திரத்தை நிறுவியது. உற்பத்தியில் 100 சதவிகிதம் தன்னிறைவு பெற்றுள்ளது.

❖ **தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் இந்தியாவிலேயே ஒரிடத்தில் இயங்கும் முதல் பெரிய ஆலையாகவும், ஒட்டுமொத்த உற்பத்தித் திறனில் இரண்டாம் பெரிய ஆலையாகவும் விளங்குகிறது.**

❖ 2001–2002ஆம் ஆண்டில், வரிக்குப்பின் நிகர இலாபம் ரூ.35.31 கோடியும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ. 52.04 கோடியும், 2003–2004ஆம் ஆண்டில் (டிசம்பர் 2003 வரை) ரூ.44.67 கோடியும் ஆகும்.

★ **RWTUV என்ற ஜெர்மனி நிறுவனம். 2003ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு ISO 9001:2000 சான்றிதழை வழங்கியது.**

❖ இந்நிறுவனத்தின் ஏற்றுமதி சாதனையைப் பாராட்டும் வகையில், மத்திய அரசின் CAPEXIL அமைப்பு 2002–2003ஆம் ஆண்டில் சிறப்பு ஏற்றுமதி விருதினை வழங்கியது. இவ்விருது தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

❖ பிப்ரவரி 2002இல் இந்நிறுவனம் ISO 14001 தரச் சான்றிதழைப் பெற்றது.

❖ இந்நிறுவனம் பிப்ரவரி 2003இல், சி.ஐ.ஐ.–ன் உயர்ந்த மற்றும் தலைமை அங்கீகரிப்பு சான்றிதழைப் பெற்றது.

## அறிவுத்திறன் தொழில் நகரியம்

❖ **சிங்கப்பூர் கீம்டா ஹோல்டிங்ஸ் குழுமம், நிறுவனத்தினர் சுமார் 102 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய ஒருங்கிணைந்த அறிவுத் திறன் சார்ந்த தொழில் நகரியத்தை சிறுசேரியில் சிப்காட் தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 16.9.2003 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது.**

❖ பெரிய தொழிற் சாலைகள் 2001–2004ஆகிய மூன்று ஆண்டுகளில் பிராக்ஸ் ஏர் லிமிடெட் (அமெரிக்கா நிறுவனம்), சான்சா லிமிடெட் (எம்என்சி), சிறுசேரி, டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ், ஏசியன் பெயின்ட்ஸ், பிரிமியர் டெக்ஸ்டைல்ஸ், லீ கீம் டா ஹோல்டிங், அசாஹி கிளாஸ் ஒரியன் டெக்ஸ், போலாரிஸ் ஆகிய தொழிற் சாலைகளுக்கு நிலஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

❖ 2002–2003இல் இந்நிறுவனம் 8,073 மெட்ரிக் டன்கள் நைட்ரோ கிளிசரின் வெடிமருந்துகளை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

❖ நைட்ரோ கிளிசரின் வெடிமருந்துகள் விற்பனை ஆண்டு விற்பனை அளவில் 70 விழுக்காட்டுக்கும் மேலாக மிகவும் பாதித்துள்ள நிலையிலும், நிறுவனம் 2003–04இல் ரூ. 42.57 கோடி விற்பனை அளவை எய்தியுள்ளது.

❖ 2001–ஆம் ஆண்டு "மே" மாதத்திலிருந்து 2003 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான வருடாந்திர மேக்னசைட் மூலப் பொருள் உற்பத்தி 16.1 சதவிகித மாக உயர்ந்துள்ளது.

❖ 2000–2001–ஆம் ஆண்டில் ரூபாய் 170 இலட்சமாக இருந்த அயோடின் கலந்த அரசு உப்பு விற்பனை, 2002–2003–ஆம் ஆண்டில் ரூபாய் 525 இலட்சமாக உயர்ந்துள்ளது. மேலும் 2003–2004ஆம் ஆண்டில் ரூபாய் 630 இலட்சமாக உயர்ந்துள்ளது.

❖ தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதன்முறையாக கர்நாடகாவின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுமார் ரூ.79 இலட்சம் மதிப்புள்ள அயோடின் கலந்த உப்பை, 2003–2004ஆம் ஆண்டில் விநியோகித்து உள்ளது. மேலும், ஆந்திராவில் உள்ள 8 மாவட்டங்களுக்கு அயோடின் கலந்த உப்பினை வழங்குவதற்கு ஆந்திர அரசின் ஆணையைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் தொடர்ந்து பொது விநியோக திட்டத்தின் கீழ் அயோடின் கலந்த உப்பினை வழங்கி வருகிறது.

❖ கனிம வள நிறுவனத்தின் வருவாய், 2001–2002இல், 163.12 ரூபாய் கோடியிலிருந்து 254.26 கோடியாகவும், 2002–2003ஆம் ஆண்டில் ரூபாய் 317.20 கோடியாக உயர்ந்துள்ளது. 2003–2004–ஆம் நிதியாண்டில் இத்துறையின் வருவாய் ரூ.355 கோடியாகும்.

❖ அரசும், டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனமும் 27.6.2002இல் டைட்டானியம்– டை–ஆக்ஸைடு திட்டத்திற்காக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. ★



# தூய்மைபேணும் சுற்றுச்சூழல்துறை

தமிழக அரசின் சுற்றுச்சூழல்துறை சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளைத் தூய்மைப்படுத்துதல், நகர்ப்புற ஏரிகளைத் தூய்மைப்படுத்துதல் சென்னை நகரின் நீர் வழிகளின் மாசுகளைக் களைதல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதோடு, தேசிய பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்றங்கள் மூலம் விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், கடலோரக் கட்டுப்பாட்டு அறிவிக்கையின் வரைமுறைகளை நடைமுறைப் படுத்துதல், தமிழ்நாட்டின் சுற்றுச்சூழல் நிலை குறித்த தகவல்களை சேகரித்து, இணைய தளம் மூலம் பொதுமக்களுக்கு வழங்குதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் தேசீய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தில் ரூ.678.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள திருச்சி, ஈரோட்டில் 100 சதவிகித பணிகளும், குமாரபாளையத்தில் 70.72 சதவிகித பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை நகரின் நீர்வழிகளில் மாசுத்தடுப்புப் பணிகளைச் செயல்படுத்த கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் சென்னைப் பெருநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.19,658.16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. குழாய் பதிக்கும் பணியும், கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகளும் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

★ காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதிநீரைத் தூய்மைப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் ரூ.11,323.59 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செலவிடப்பட்டு மதுரையில் 42.84%, கும்பகோணத்தில் 34.71%, திருநெல்வேலியில் 30.08%, தஞ்சாவூரில் 26%, மயிலாடுதுறையில் 40%, கரூர்–இனாம் கரூரில்–31%, திருச்சியில் 13% அளவு நதி நீரைத் தூய்மைப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ உதகை ஏரியின் பணிகளுக்காக மார்ச் 2004 வரை ரூ.141.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் உதகை ஏரி தற்போது தூய்மையாகியுள்ளது. ரூ.31.80 இலட்சம் செலவில் கொடைக்கானல் ஏரியில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக சூழலுக்கு உகந்த முன்னோடி நகரங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI) மூலமாக ரூ.2.50 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

★ உலக சுற்றுச்சூழல் தினம் (ஜுன்–5), ஓசோன் தினம் (செப்–16) மற்றும் பூமி நாள் (ஏப்ரல்–22) போன்ற நாள்களில் பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போகிப் பண்டிகையின் போது ஏற்படும் புகையின் அளவும், தீபாவளியின்போது ஏற்படும் புகை மற்றும் ஒலி மாசு 20 முதல் 25 சதவிகிதம் அளவில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து வருகிறது.



★ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 1,260 கல்வி நிறுவனங்களில் சுற்றுச்சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அவ்வப்போது கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ கடந்த மூன்று ஆண்டு காலத்தில் அனைத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளுக்காக தமிழக அரசினால் ரூ.45. இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 100 பள்ளிகள் வீதம் 29 மாவட்டங்களில் 2,900 பள்ளிகளில் தேசிய பசுமைப்படைத் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

★ தேசிய பசுமைப்படைத் திட்டத்திற்கென கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.76.56 இலட்சம் பள்ளிகள் மூலமாக செலவிடப்பட்டுள்ளது.

★ சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரை ஆகிய பிரிவுகளில் முதற்பரிசாக ரூ.10,000 மற்றும் சான்றிதழும், இரண்டாம் பரிசாக ரூ.7,500 மற்றும் சான்றிதழும், மூன்றாம் பரிசாக ரூ.5,000 மற்றும் சான்றிதழும், சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரூ.5,000/–மும் பரிசாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் துறையால் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தினவிழாவின்போது வழங்கப்பட்டு வருகின்றன.

★ **சுற்றுச்சூழல் துறைக்கென தனியாக இணையதளம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உலகச் சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5ஆம் தேதி 2003ஆம் ஆண்டு அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

## புதிய திட்டங்கள்

★ கோவில் குன்றுகளில் சூழல்–மறு சீரமைப்பு முன்னோடித் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவிலின் குன்றுப் பகுதிகளை ரூ.9 இலட்சம் திட்டச் செலவில் பசுமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தரிசாகவும், தரங்குன்றியும் உள்ள மலைப்பகுதியில் மரக்கன்றுகள் நடும் பணி வனத்துறை மூலம் ரூ.6 இலட்சம் செலவில் நிறைவு பெற்றுள்ளது.



★ சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாநிலத்தில் 60 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் முன்மாதிரியாக மழைநீர் சேகரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல், மரம் வளர்த்தல், பள்ளித் தோட்டம் ஆகியவைகள் ரூ.3 இலட்சம் அரசு நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மாநிலத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களின் வல்லுநர்களிடமிருந்து சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டு, வல்லுநர் குழு மூலம் மூன்று சிறந்த கருத்துக்கள் தேர்வு செய்யப்பட்டன. அரசு ஒதுக்கிய ரூ.10 இலட்சத்தில் சென்னை, அண்ணா பல்கலைக் கழகம், கோவை பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் சென்னை, சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மையம் ஆகியவற்றிற்கு ரூ.9.78 இலட்சம், ஆராய்ச்சித் திட்டப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

★ சுயஉதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு செய்யும் பொருட்டு கழிவுக் காகிதங்களிலிருந்து பயனுள்ள காகிதம் தயாரித்து, காகிதப் பை போன்ற பொருட்கள் தயாரிக்கும் பணிகளை ஊக்குவிக்க ரூ.12 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஐந்து மாநகராட்சிகளில் தலா ஒரு தன்னார்வ நிறுவனம் மூலம் சுயஉதவிக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ.12 இலட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது.

## அரசு ரப்பர் கழகம்

2001–02, 2002–03, 2003–04ஆம் ஆண்டுகளில் 8047 டன் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.4054.22 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

2001–02 மற்றும் 2003–04ஆம் ஆண்டுகளில் வறட்சி மிகவும் அதிகமாக இருந்தும் குறிப்பிட்ட இலக்கிற்கு மிக அருகாமையில் சாதனை படைத்துள்ளது. அரசு ரப்பர் கழக குத்தகை தொகை எக்டருக்கு ரூ.6000/–த்திலிருந்து ரூ.3000/– ஆக அரசு குறைத்ததாலும் புனரமைப்பு குறித்த அரசு ஆணை, நிருவாக மேன்மை, விற்பனை தரம், ரப்பர் விற்பனை விலையில் முன்னேற்றம், தொழிலாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் முழு ஒத்துழைப்போடு கடந்த 2002–03ஆம் நிதியாண்டில் ரூ.59.27 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியதுடன் 2003–04ஆம் ஆண்டில் தணிக்கை செய்யப்படாத கணக்குப்படி, ரூ.284 இலட்சம் இலாபத்தை ஈட்டும் நிலையில் இயங்கி வருகிறது. மேலும் பல ஆண்டுகளுக்குப் பிறகு 2002–03 மற்றும் 2003–04 ஆண்டுகளில் 135 எக்டர் பரப்பில் புதிய வீரிய ரப்பர் மரக்கன்றுகள் மறு நடவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக விற்பனை செய்யப்படாமல் இருந்த முதிர்ந்த ரப்பர் மரங்கள் 2001–02, 2002–03

மற்றும் 2003–04ல் விற்பனை செய்யப்பட்டு ரூ.601 இலட்சம் வருவாயும் பெறப்பட்டுள்ளது. இந்த வருவாயிலிருந்து ரூ.113.03 இலட்சம் தொகை அரசிற்கு செலுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

★ பசுமைப் போர்வை திட்டத்தின்படி, தொழிற்சாலைகள் தமது வளாகத்தில் 25 சதவிகிதத்தை பசுமைப் பகுதியாக உருவாக்க வாரியத்தால் அறிவுறுத்தப் பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சுமார் 30 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு அதனைப் பாதுகாத்து வருகின்றன.

★ சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பினை தொழிற்சாலைகள் தாமாகவே தணிக்கை செய்யும் பொருட்டு, அனைத்து முக்கிய தொழிற்சாலைகளும் வெளி நிறுவனங்களால் தணிக்கை செய்யப்பட்டு வழங்கப்படும் ஐஎஸ்ஓ (ISO) 14001 சான்றிதழைப் பெறவேண்டும் என வாரியம் வலியுறுத்துகிறது. இதுவரை 102 தொழிற்சாலைகள் ஐஎஸ்ஓ (ISO) 14001 க்கான சான்றிதழைப் பெற்றுள்ளன.

★ பன்னாட்டு நிறுவனத்தால் வெளியேற்றிய அபாயகரமான பாதரசக் கழிவுகள் அமெரிக்காவிலிருந்து அதற்கான பாதரச மூலப் பொருள் பெறப்பட்டதால் அந்நாட்டிற்கே திருப்பி அனுப்பப்பட்டது. அபாயகரமான கழிவுகள் வளர்ந்த நாட்டிற்கே இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படுவது இதுவே முதன்முறையாகும். அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றிற்காக ஒரு பொது அமைப்பினை நிறுவுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலகோட்டையூரில் ஓர் இடம் அரசினால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பொது அமைப்பினை நிறுவ பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்புகள் திருப்பூர் மற்றும் கரூர் பகுதியில் தலா ஒரு இடத்தை தெரிவு செய்துள்ளன.

★ காஞ்சிபுரம் மாவட்டம், தென்மேல்பாக்கம் மற்றும் சென்னகுப்பம் ஆகிய இடங்களில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு அமைப்புகள் தொடங்கப்பட்டு சோதனை ஓட்டத்தில் உள்ளன. வேலூர் மாவட்டம், கண்டிப்பேடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி ஆகிய 2 இரண்டு இடங்களில் பொது அமைப்புகள் நிறுவும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

★ நகரத் திடக்கழிவுகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உரமாக்க வாரியம் 25 நகராட்சிகளுக்குத் தடையில்லா சான்றிதழ் வழங்கியுள்ளது.

★ பிளாஸ்டிக்கிற்கு மாற்றான சுற்றுச் சூழலுக்குகந்த பொருட்களின் நடமாடும் கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.8.2001 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இது போன்ற கண்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன.

★ 29 மாவட்டங்கள் காற்று ஒலிப்பான் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதுமாக சுமார் 44,500 காற்று ஒலிப்பான்கள் பேருந்துகள் மற்றும் லாரிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

★ தீபாவளி மற்றும் போகி பண்டிகைகளில் ஏற்படும் ஒலி மாசு மற்றும் காற்று மாசு குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டுள்ளது.

★ **பசுமை விருது–2002 – சேலம், நீலகிரி மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், பசுமை விருது 2003 – கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.**

★ "புதுமை படைப்போருக்கான பசுமை விருது" அரசால் 2003ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

★ தைல மரக்கூழ் மரம், பேப்பர் மற்றும் செய்தித்தாள் உற்பத்திக்கு முக்கியமானதாக இருந்ததினால் முந்தைய காலங்களின் வன நிலங்களில் விதை மூலம் எழுப்பப்பட்ட தைலத்தோட்டத்தின் விளைச்சல் ஒரு எக்டேருக்கு சராசரியாக 20 டன்களை 60 டன்களாக அதிகரிக்கச் செய்யும் பொருட்டு கடந்த மூன்று வருடங்களில் இக்கழகத்தின் விதையில்லா தைலமரத்தோட்டங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது.

★ மேலும் 80 டன்கள் முதல் 100 டன்கள் வரை மகசூல் தரக்கூடிய உயர்ரக தைலக் குளோன்களை அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களில் 4,200 எக்டேரில் தைலக்குளோன் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு ஒரு சொத்தாக உருவாக்கப் பட்டுள்ளது.

★ கடந்த மூன்று வருடங்களில் பணப்பயிரான முந்திரி சுமார் 3,200 எக்டேரில் வளர்க்கப்பட்டுள்ளது. முந்திரி மூலம் வருவாய் ரூ.1,122 இலட்சங்கள் பெறப் பட்டுள்ளது.

★ வேலூர் மாவட்டம் திருப்பத்தூருக்கு அருகில் தெக்குப்பட்டு என்னுமிடத்தில் அரசுக்குச் சொந்தமான ஒரு சந்தனப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையானது 2002–2003ம் வருடத்தில் சந்தன எண்ணெய் மற்றும் அதன் பிற உற்பத்திப் பொருட்களை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் விற்றதால் கழகத்திற்கு முன்பு இல்லாத அளவிற்கு ரூ.1.60 கோடி அளவில் இலாபம் பெறப்பட்டுள்ளது.

★ இக்கழகமானது திருச்சியிலுள்ள அதன் தலைமை அலுவலகத்திற்கு ரூ.90 இலட்சம் செலவில், புதிய கட்டடம் கட்டப்பட்டு இயங்கிவருகிறது. ●



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை



மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிட தேவையினை பூர்த்தி செய்வதை தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதி தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு'' எனும் உன்னத குறிக்கோளை எய்த புதிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

சென்னை மாநகரின் தற்போதைய போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் கோயம்பேட்டில் அதிநவீன புறநகர் பேருந்து முனையம் 37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.103 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.11.2002 அன்று இந்த முனையத்தை திறந்து வைத்தார்.

## மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல்

**அண்ணா நினைவிடம் முதல் கலங்கரை விளக்கம் முடிய 3.2 கி.மீ. பகுதியை ஆண்டிற்கு ரூ.32 இலட்சம் செலவில் சென்னை மெரினா கடற்கரையை இயந்திரம் மூலம் சுத்தம் செய்யும் பணியினை 22.9.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.**

## தனியார் ஒப்பந்த ஊர்திக்கான பேருந்து முனையம்

சென்னை கோயம்பேட்டில் 4.5 ஏக்கர் பரப்பளவில் ரூ.3 கோடி செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் தனியார் ஒப்பந்த ஊர்தி பேருந்து முனையம் கட்டப்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.8.2003 அன்று திறந்து வைத்தார்கள்.

⇨ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் ரூ.5 கோடி செலவில் சோதனை அளவில் காய்கறி கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.8.2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

⇨ சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கு இதுவரை தமிழக அரசு ரூ.414 கோடி விடுவித்துள்ளது. இத்திட்டம் 26.1.2004 அன்று திருவான்மியூர் வரை நீட்டிப்பு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இத்திட்டத்தை ரூ.378 கோடி செலவில் வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை 4.5 கி.மீ. தூரத்திற்கு நீட்டித்து சென்னை கடற்கரை–தாம்பரம் புறநகர் பாதையுடன் இணைக்கும் வகையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

⇨ 31.3.2002–க்கு முன் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களை ஒழுங்குபடுத்தும் திட்டத்தை 2000, 2001 மற்றும் 2002–ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் பொது மக்களிடமிருந்து 59,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வரன்முறை செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ரூ.210 கோடியினை வரன்முறைப் படுத்தும் கட்டணமாக வசூல் செய்துள்ளது. இதில் ரூ.184 கோடியினை தமிழக அரசின் தொகு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளன.

⇨ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்றாண்டு காலங்களில் 7,911 அடுக்கு மாடி குடியிருப்புகளும், 7,250 தனி வீடுகளும் மற்றும் 9,060 கல்நார் ஓட்டு கூரை வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன, இத்திட்டப் பணிகளுக்காகவும், இதர பணிகளுக்காகவும் ரூ.155.52 கோடி செலவிடப்பட்டுள்ளது.

⇨ சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் கடந்த மூன்று ஆண்டு காலங்களில் 1,624 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு ரூ.12.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி–2ல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கடந்த மூன்றாண்டு காலங்களில் 3,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.26.11 கோடி செலவிடப்பட்டுள்ளது.

⇨ குடிசைப்பகுதி மாற்று திட்டத்தின் கீழ் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்றாண்டு காலங்களில் சென்னை நகரில் 816 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.8.59 கோடி செலவிடப் பட்டுள்ளது.

- ⇨ சென்னை வாசுகி நகர் பகுதியில் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்று ஆண்டு காலங்களில் 64 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டு ரூ.0.77 கோடி செலவிடப் பட்டுள்ளது.
- ⇨ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கடந்த மூன்றாண்டு காலங்களில் சென்னை நகரில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரைகள் 9,060 குடும்பங்களுக்கு ரூ.15.37 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.
- ⇨ நகர குடிசைப் பகுதிகளில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டதின் கீழ் மே 2001 முதல் ஏப்ரல் 2004 வரையிலான மூன்று ஆண்டு காலங்களில் அடிப்படை வசதிகள் 30,124 குடும்பங்களுக்கு ரூ.5.25 கோடி செலவில் அமைத்துத்தரப்பட்டுள்ளது.
- ⇨ தமிழகத்தில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 7,250 தனி வீடுகள் ரூ.29 கோடி செலவில் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன.
- ⇨ பதினொன்றாவது நிதிக் குழு – சிறப்பு மானியம் – பெருநகரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் திட்டத்தில் சென்னை நகரில் 3,054 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மதுரை மற்றும் கோவை நகரங்களில் 337 தனி வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக இதுவரை ரூ.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ⇨ மத்திய தர வருவாய் பிரிவினருக்கான வீடுகள் அமைத்தல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை திருவான்மியூர் சிங்காரவேலர் நகர் பகுதியில் 112 மத்திய தர வருவாய் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- ⇨ **சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாடிப்படிகள் சீர் செய்தல், தளங்களை செப்பனிடுதல் மற்றும் மழைநீர் கசிவினைத் தடுக்க ஓடுகள் பதித்தல் போன்ற கட்டமைப்புப் பழுதுபார்ப்பு பணிகள் சுமார் 30,514 குடியிருப்புகளுக்கு ரூ.11.63 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.** சென்னை மாநகரில் தண்ணீர் பற்றாக்குறையால் அவதியுறும் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் உடனடியாக தேவையான ஆழ்துளை குழாய் கிணறுகளை அமைக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டது.



இத்திட்டத்திற்கான பணிகள் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் ஒத்துழைப்புடன் 30.4.2002 வரையிலான ஓராண்டு காலத்தில் 100 ஆழ்துளை குழாய் கிணறுகளை தண்ணீர் பற்றாக்குறை உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டு ரூ.0.76 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- ⇨ வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட அனைத்து 144 திட்டப் பகுதிகளிலும் ரூ.23.61 இலட்சங்கள் செலவில் மழைநீர் சேகரிப்பு முறைகள் நிறுவப்பட்டுள்ளன.
- ⇨ **வாரியத்தால் சென்ற இரண்டு ஆண்டு காலங்களில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டப் பணிகளின் மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் 45,889 ஆதி திராவிட வகுப்பை சேர்ந்த குடும்பங்கள் ரூ.76.56 கோடி செலவில் பயனடைந்துள்ளனர்.**
- ⇨ 2001ம் ஆண்டு முதல் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 35,706 நகர்புற பயனீட்டாளர்களுக்கு புதிய வீடுகள் கட்ட ரூ.634.12 கோடி கடன் நகர்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
- ⇨ கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்கள் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் பெற்ற கடன் தொகையை பல்வேறு காரணங்களால் திருப்பி செலுத்திட இயலாத சூழ்நிலையை கருத்தில் கொண்டு தள்ளுபடி சலுகை ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி 31.3.2001 வரை நிலுவையில் உள்ள அசல் தொகையை பயனாளிகள் 30.9.2002க்குள் செலுத்தும் பட்சத்தில் ரூ.100 கோடி அளவிற்கான வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தை அரசு தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பித்துள்ளது.
- ⇨ வாம்பே திட்டத்தின் கீழ் இதுவரை நகர்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் 7,299 வீடுகளை கட்டிக்கொள்ள ரூ.20.33 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது. ●



# தகவல் தொழில்நுட்பத்துறை



தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கு, ஏதுவான ஒரு மாநிலமாக உருவாக்குதல், அரசு அலுவலகங்களில் மின் ஆளுமை (e-governance) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளின் மூலம், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், ஊரக மக்களுக்குக் கணிப்பொறியின் பயன் பாட்டினை அளித்து ஊரகப் பகுதிகளுக்கும் நகரப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியை Digital Divide-ஐ குறைத்தல், தகவல் தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துதல், தகவல் தொழில்நுட்பத் துறைகளில் தமிழ் மொழியின் பயன்பாட்டை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்ட "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002"–ஐ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கேற்ப, தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக அளவில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஒரு தொய்வு ஏற்பட்ட போதிலும், இத்துறை தமிழ்நாட்டில், சிந்தனை வேகத்தில் வளர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் அதன் வளர்ச்சியை இரட்டை இலக்க சதவிகிதத்தில் (Double Digit Growth) நிலைநாட்டி வருகின்றது.

- ★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ் கல்வித் திட்டம் ஜூன் 2002ல் தொடங்கி வைக்கப்பட்டது. ஏறத்தாழ 40 நாடுகளிலிருந்து 2,111 மாணவர்கள் பல்வேறு நிலைகளில் பதிவு செய்துள்ளனர். இக்கல்வியைப் பயின்று தேர்ச்சிப் பெற்ற கலிபோர்னியா தமிழ் அகாதெமியைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு ஜூலை 2003ல் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. Sishya School of India, நியூயார்க்கிலிருந்து 2 மாணவர்களும், கலிபோர்னியா தமிழ் அகாதெமி, நியூயார்க்கைச் சேர்ந்த 21 மாணவர்களும் மார்ச் 2004ல் சான்றிதழ் கல்வித் திட்டம் – நிலை 1ல் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
- ★ சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான நூல்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. மேலும், இதன் இணையதளத்தில் பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் சைவ, வைணவக் கோயில்களின் ஒலி–ஒளிக் காட்சிகளாகத் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன.
- ★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஜூன் 2002ல் 'தமிழ் எழுத்துரு அறிவி' என்ற மென்பொருளும், ஆகஸ்டு 2003ல் 'இயந்திர வழி ஆங்கிலம் – தமிழ் மொழிபெயர்ப்பு' என்ற மென்பொருளும் வெளியிடப்பட்டன.**



- ☐ தமிழ் இணையதள உலாவி மற்றும் தேடுபொறி
- ☐ இதம் 2000 – தமிழ் சொற்செயலி

## உருவமைக்கப்பட்டு வரும் மென்பொருள்கள்

- ❖ திருக்குறள் – கணினி மூலம் தமிழ்ச் சொல்லை உச்சரித்தல்
- ❖ தமிழில் விண்டோஸ் 95/98
- ❖ தமிழ்ச் சொல்வலை
- ❖ தமிழ் லினெக்ஸ்
- ❖ கையெழுத்துப் பிரதி – தமிழ் எழுத்துரு அறிவி
- ❖ தமிழ்த் துணைத்தள மேலாண்மை
- ❖ ஜாவா மொழி மூலம் தமிழ்ச் சொல்லை உச்சரித்தல்

- ❖ தமிழ் இணையம் 2003 மாநாடு ஆகஸ்டு திங்கள் 22ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலிருந்து 245 சார்பாளர்கள் பங்கேற்றனர்.
- ❖ மார்ச் 2004இல் இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துடன் பட்டக் கல்விக்கானப் பாடத்திட்டங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியது.
- ❖ இலங்கை, மலேசியா, மொரீஷியஸ், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வி தொடர்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ வருகிற கல்வியாண்டில், முதுநிலைப் (தமிழியல்) பட்டத்திற்கான பாடத்திட்டம் மற்றும் ஆய்வுக் கல்வியை மேற்கொள்பவர்களுக்குத் தேவையான வற்றை வழங்கவும் மின்நூலகத்தை மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்தவும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உத்தேசித்துள்ளது.

## தகவல் தொழில்நுட்பக் கொள்கை

- ★ தமிழக அரசால் 2002 செப்டம்பர் 19ஆம் நாள் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பக் கொள்கை 2002 தமிழகத்தைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று நாட்டின் கணிசமான அளவு ஏற்றுமதியில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் ஏற்றுமதி விகிதம் 2001–2002ல் 14.7% ஆகவும் 2002–2003ல் 17% ஆகவும் உயர்ந்துள்ளது.
- ★ இன்போசிஸ், டாடா கன்சல்டன்சி மற்றும் விப்ரோ போன்ற மூன்று பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களின் விரிவாக்கத் திட்டங்களுக் காக சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன.
- ★ இணைப்பு (CONNECT) 2001, 2002 மற்றும் 2003 வாயிலாக தகவல் தொழில்நுட்பப் பணிகள் மற்றும் வங்கி, நிதி, ஆயுள் காப்பீடு, சுகாதாரம், போக்குவரத்து ஆகிய துறைகளில் சென்னையை உலகின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தலைநகரமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அறிவுசார் தொழில் நகரியம் உருவாக்க சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு கே.பி.எம்.ஜி. என்ற உலகத்தரம் வாய்ந்த ஆலோசனை அளிக்கும் நிறுவனம் இதற்கென்று விரிவான ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளது. இதற்காக 300 ஏக்கர் நிலம் முதற்கட்டமாக சோளிங்கநல்லூரில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- ★ தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு இணைந்து தயாரித்து அளித்த அறிக்கையின் அடிப்படையில், கோயம்புத்தூரில் அரசு சில இடங்களைத் தெரிவு செய்துள்ளது. இதற்கான பணிகளை எல்காட் இன்ப்ராஸ்ட்ரக்சர் நிறுவனம் தொடங்க உள்ளது. பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பூங்கா 109 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் பாரதியார் பல்கலைக்கழகமும் ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளன. கோயம்புத்தூரை தகவல் தொழில்நுட்ப இடமாக வடிவமைக்க கோவை ஐடி.காம் என்ற மாநாட்டை இந்திய தொழில் கூட்டமைப்புடன் இணைந்து 2001, 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகளில் அரசு நடத்தியது.
- ★ தமிழக அரசு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் தேசிய அளவில் கனெக்ட் 2001, 2002 மற்றும் 2003 பெங்களூரில் ஐடி.காம், இந்தியாசாப்ட் 2003, அவுட்சோர்சிங் சம்மிட், டைக்கான் இந்தியா 2003 மற்றும் சர்வதேச அளவில் பொருட்காட்சி சிபிட் 2003 ஜெர்மனியிலும், இன்கிரிடிபிள் இந்தியா 2003 மலேசியா, கோலாலம்பூரிலும், சர்வதேச பொருட்காட்சி 2004 ஹாங்காங்கிலும் கலந்து கொண்டுள்ளது.
- ★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற 7ஆவது தேசிய மின் ஆளுமை மாநாடு, மாநிலத்தில் மின் ஆளுமை செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பெருமளவில் வழி வகை செய்துள்ளது.**
- ★ தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மாநகர குடிநீர் வழங்கும் துறை ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த முன்னோடித் திட்டமாக மின்னிணைய சேவை மையங்கள் 2003–2004இல் தொடங்கப்பட்டது.

## மின் ஆளுமைத் திட்டங்கள்

- ★ **மாண்புமிகு அமைச்சர்கள், அனைத்து அரசுச் செயலர்கள், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பிற உயர்நிலை அரசு அலுவலர்கள் ஆகியோர் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள வசதியாக ஒளிப்படக் கலந்துரையாடல் வலையமைப்பு நிறுவப்பட்டுள்ளது.** சென்னை தலைமையகத்தில் 1,000 இணைப்பு களுடன் கூடிய உள்பேசி இணைப்பகம் ரூ.76 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு 2 எம்பிபிஎஸ் கொள்ளளவு உயர்தர கணினி தலைமைச் செயலகத்தில் ரூ.63 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.



- ★ "ராசி" முன்னோடித் திட்டம், மதுரை மாவட்டம் மேலூரில் தேவையான ஊரக உள்கட்டமைப்பு களுடன் தொடரப்பட்டுள்ளது. வெற்றிகரமாக செயல்படும் இத்திட்டத்தை அரசு மின் ஆளுமை வழங்கும் மையங்களாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ★ "தமிழ்நிலம்" திட்டமானது மாநிலத்தின் முக்கியத் துறைகளான வருவாய், நில சீர்திருத்தம் மற்றும் நில அளவை மற்றும் நில ஆவணங்கள் ஆகியவற்றின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமையும். இந்த திட்டமானது இரு கட்டமாக முறையே ரூ.132.60 இலட்சத்திலும் , ரூ.405 இலட்சத்திலும் நிறைவேற்றப்பட்டது.
- ★ மின் ஆளுமையை அறிமுகப்படுத்தும் முகமாக, மின் ஆளுமை, காகிதமற்ற கோப்பு மேலாண்மை செயல்பாடு ஓர் உத்வேக கருவியாக எல்காட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மக்கள் சேவைக்காக மின் ஆளுமையை இணையதளம் மூலமாக அறிமுகப்படுத்தியது. இந்த சேவை எல்லாவிதமான வரி வசூலிப்பதற்கு ஏதுவாக உள்ளது.
- ★ தமிழ்நாடு மருத்துவப் பணித் தொகுதி கழகம் கணினி மயமாக்கப்பட்ட மருந்து பகிர்ந்தளித்தல் நிருவாக முறையை நடைமுறைப்படுத்தியது.
- ★ தமிழக அரசு தற்பொழுது நடைமுறையில் உள்ள தேயிலை ஏலமுறையை முற்றிலுமாக மாற்றி மின்னணு மூலம் தேயிலை ஏல முறையை உலகிலேயே முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- ★ போக்குவரத்துத்துறை கணினிமயமாக்கப் பட்டுள்ளது.
- ★ பத்திரப் பதிவுத் துறையில் ஸ்டார் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 325 பதிவுத் துறை அலுவலகங்களும் மைய சேவையகத்துடன் இணைக்கப்பட்டது.
- ★ ஒன்பது வேளாண்மை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கணினிமயமாக்கப்பட்டு, வேளாண்மை பொருட்களின் விலை விவரங்களை விவசாயி களுக்கு உடன் நிகழ் சேவை மூலமாக தொடர்ந்து வழங்குகிறது.
- ★ கருவூலங்கள் எல்லா நிலையிலும் பயன்படுத்தப்படும் வகையில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நகரம் சார்ந்த உள்ளாட்சி மன்றங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளது.
- ★ வணிகவரித்துறையில் 323 மதிப்பீட்டு வட்டத்தில் 140 மதிப்பீட்டு வட்டங்களை ரூ.357 இலட்சங்களில் கணினிமயமாக்கப்பட்டது.
- ★ **புதிய தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட அலுவலகங்களில் உடன் நிகழ் மூலமாக "தற்காலிகமான சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்" வழங்க வழி செய்துள்ளது.**
- ★ **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12.9.2002 அன்று முதல் இந்த ஒருங்கிணைந்த நடவடிக்கை தொடங்கி வைக்கப்பட்டது. இந்தச் சேவை அங்கீகரிக்கப்பட்ட 260க்கும் மேற்பட்ட மையங்களில் வழங்கப்படும். இத்திட்டம் நாட்டிலேயே முதன்மையானது.**
- ★ 30 மாதிரி தாலுகா அலுவலகங்களில் தொடுதிரை தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- ★ **பொதுமக்களின் குறை தீர்ப்பதற்காக மாநில அளவில் ஒரு கணினி மென்பொருள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட கணினி அலகுகள் மாநில அளவிலான முதன்மைக் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. பல வழிகளில் பெறப்படும் புகார்கள் இந்த கணினியில் உட்செலுத்தப்பட்டு புகார்கள் பரிசீலிக்கப்பட்டு பொதுமக்களின் குறைகள் தீர்க்கப்படுகிறது.**
- ★ தமிழக அரசு ஒரு முன்னோடித் திட்டமாக அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது. மொத்தமாக 1,197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுகிறது. முதல் கட்டமாக 666 மேல்நிலைப் பள்ளிகளிலும் இரண்டாம் கட்டமாக 531 மேல்நிலைப் பள்ளி களிலுமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வருடத்திற்கு சுமார் 92,500 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் முழு தேர்ச்சிப் பெறுவார்கள். அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டம் மற்றும் மருத்துவக் கல்லூரி மொத்தம் 76 கல்லூரிகளிலுள்ள 14,000 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது.
- ★ தமிழ்நாட்டிலுள்ள 325 பதிவு அலுவலகங்களும் இணைக்கப்பட்டு, குடிமக்களுக்கு பதிவுத் துறை சம்பந்தமான விளக்கங்கள் விரைவாகவும், தரமாகவும் அளிப்பதற்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. மாநிலத்தின் எந்த பதிவுத் துறை அலுவலகத்திலிருந்தும், எந்தவொரு உடைமை களுக்கும் வில்லங்கச் சான்றிதழ் அளிப்பதே ரெஜினெட்டின் நோக்கமாகும்.
- ★ அண்ணா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட உள்ள KDC மாணவச் சமுதாயத்திற்கு ஒரு தொழில்நுட்பக் களஞ்சியமாக விளங்கும். ●

# மக்கள் நல்வாழ்வுத்துறை



**மாநிலத்தின் மனித வளர்ச்சி அளவினை நிர்ணயிப்பதில் மக்கள் நல்வாழ்வே முக்கியப் பங்கு வகிக்கிறது. சமுதாயத்தின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மக்களே ஆக்க பூர்வமான பங்கினை அளிக்க இயலும். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திட தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.**

## இந்திய மருத்துவத்துறை

❖ சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.40 இலட்சம் செலவில் வெளிநோயாளி துறைக்கான கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றன. ரூ.30 இலட்சம் செலவில் யோகா மற்றும் இயற்கை வைத்திய பிரிவுக்கு மேல் முதல் தளம் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ளது. உயிர் வேதியியல் மற்றும் உடற்கூறியல் ஆய்வுக்கூட மேம்பாட்டிற்காக ரூ.7.37 இலட்சம் செலவில் சாதனங்களும் இரசாயனப் பொருட்களும் வாங்கப்பட்டுள்ளன. இங்கு மருந்து செய் நிலையத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் மருந்து செய் நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

❖ சோதனைக் கூடத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ சென்னை, அரசினர் யுனானி மருத்துவக் கல்லூரிக்கு ரூ.15 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

❖ 2002–2003ஆம் ஆண்டில், 2 வட்ட மருத்துவ மனைகள், 37 வட்டமல்லாத மருத்துவமனைகள் மற்றும் 50 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

❖ மைய அரசும், தமிழக அரசும் சேர்ந்து ரூ.47 கோடி செலவில் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தை நிறுவ முடிவு செய்துள்ளது. இதற்கென மாநில அரசு ரூ.6.64 கோடி மதிப்புள்ள நிலத்தையும், ரூ.4 கோடி மானியமும் மாநில அரசின் பங்காக அளித்துள்ளது.

❖ வீட்டு மருந்து பெட்டகத் திட்டம் தேனி மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக 24–8–2003 அன்று தொடங்கப்பட்டது. இதன் மூலம் கிராமப்புற செவிலியர்கள் மருந்துகளை மக்களின் வீடுகளில் வழங்குகின்றனர்.

❖ மூலிகைத் தாவரங்களை உற்பத்தி செய்யவும், மூலிகைத் தாவரங்களை உபயோகப்படுத்தவும், பாதுகாக்கவும் அவற்றை ஏற்றுமதி செய்யவும் அரசு தமிழ்நாடு மூலிகை வாரியத்தை நிறுவியுள்ளது.

❖ சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகம் இணைந்து பணியாற்ற கூட்டுப் பரிவர்த்தனை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.



❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தேனியில் மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டதோடு, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் 19.17.0 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டு இந்திய மருத்துவ குழுமத்தின் நடைமுறை ஆணைப்படி 300 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் ஒரே இடத்தில் அமையுமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ரூ.12 கோடி ஹட்கோ நிதிக் கடன் பெறப்பட்டு பொதுப்பணித்துறையால் மருத்துவமனை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.



## புதிய மருத்துவக் கல்லூரிகள்

❖ இந்திய மருந்தியல் குழுமத்தின் விதிப்படி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஒரே வளாகத்தில் அமைய வேண்டுமென்பதால், வேலூர் அடுக்கம் பாறையிலும், கன்னியாகுமரி ஆசாரிபள்ளத்திலும் 300 படுக்கை வசதியுடைய மருத்துவமனை கட்டடப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிக்கும் ரூ.5 கோடி வீதம் தனித்தனியே ஹட்கோ நிதிக்கடன் பெற்று கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

❖ கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப் பட்டுள்ளது.

❖ மதுரை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பட்டப் படிப்புக் கல்லூரி தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ ரூ.1 கோடி செலவில் அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் கண் பார்வை சிகிச்சைப் பிரிவு மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 150ஆக உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேற்குறித்த மருத்துவக் கல்லூரி களுக்கு கூடுதல் பணியாளர்களும் கருவிகள் வாங்க ரூ.9.98 கோடியும், கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.18.82 கோடியும் ஒப்பளிக்கப்பட்டது. 2002–2003இல் ரூ.1 கோடியும், 2003–2004ல் ரூ.1 கோடியும் ஒப்பளிக்கப்பட்டு கருவிகள் வாங்கப்பட்டன.

❖ சென்னை அரசு மன நலக் காப்பகத்தினை நிலை உயர்த்தும் முகமாக ரூ.1.05 கோடி செலவில் நிருவாக பிரிவிற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

❖ அரசின் அறிவிப்பின்பேரில் முதியோர் நலனில் அக்கறை செலுத்தும் முகமாக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 10 படுக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழக அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக தாய் சேய் நலனில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 2000–2001ஆம் ஆண்டுகளில் சிசு மரணம் 52 என இருந்தது மூன்று ஆண்டுகளில் 44 என்கின்ற நிலையை எட்டியுள்ளது.

❖ தமிழகத்தின் குக்கிராமங்களிலும், மூலை முடுக்குகளிலும் உள்ள மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அவர்கள் வாழும் பகுதிக்கே சென்று அளிக்கின்ற வகையில் அமைக்கப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் கடந்த மூன்றாண்டுகளில் 896 சிறப்பு முகாம்கள் நடைபெற்றுள்ளன. இந்த முகாம்களின் மூலம் 18 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

❖ தாய் சேய் உயிரைக் காப்பாற்ற தமிழகம் முழுவதும் உள்ள வளர் இளம் பெண்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு இரும்பு சத்து மாத்திரை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு செலவு ரூ.190 இலட்சங்களாகும். மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு 100 இரும்பு சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகிறது.

❖ தமிழகத்தில் சென்னை உட்பட 5 மாவட்டங்களில் மஞ்சள் காமாலை 'பி' தடுப்பூசி போடப்படுகிறது. வரும் ஆண்டுகளில் மற்ற மாவட்டங்களில் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

❖ பிறப்பு பதிவு ஒரு முக்கியமான பணியாகும். அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 10 வயதிற்குட்பட்ட 29 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழகத்தில் தொழுநோயாளிகள் 10,000 மக்கள் தொகைக்கு 113 என்ற நிலை கட்டுப்படுத்தப்பட்டு, தற்போது 10,000 மக்கள் தொகைக்கு 1.4 என்ற அளவில் வெகுவாக குறைந்துள்ளது.

❖ தமிழகத்தில் யானைக்கால் நோய் அதிகமாக தென்படும் 10 மாவட்டங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஒரே நாளில் டி.இ.சி. மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2.3 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

❖ பல் சம்பந்தப்பட்ட நோய் அதிகமாக காணப்படும், தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சம்பந்தமான நோய்களுக்கான சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

❖ மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் வாழும் கிராமப்புற மக்கள் உயர் மருத்துவ சிகிச்சை பெற வசதியாக தொலை மருத்துவத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ தமிழகமெங்கும் உள்ள மலைவாழ் மற்றும் குக்கிராமங்களில் நடமாடும் மருத்துவக் குழு மூலம் அவர்கள் வாழும் பகுதிக்கே சென்று சிகிச்சை அளித்து வருகிறது. இதன் மூலம் 4.16 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

2001–02 மற்றும் 2002–03 ஆண்டுகளில் ரூ.218 கோடி மதிப்பிலும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.120 கோடி மதிப்பிலும் மருந்து மற்றும் மருந்து பொருட்களை அரசு மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

❖ **2001–02இல் சென்னை பொது மருத்துவமனையில் ஒன்றும், மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ஒன்றுமாக மொத்தம் ரூ.958 இலட்சம் மதிப்புள்ள இரண்டு எம்.ஆர்.ஐ. கருவிகளையும் 18 மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.1,316 இலட்சம் மதிப்புள்ள 18 சி.டி. ஸ்கேனர் கருவிகளையும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவியுள்ளது.**

- 2001–02இல் ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.525 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயத்துடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

- ரூ.50 இலட்சம் மதிப்பு மிக்க அறுவை நுண்நோக்கி, ஆர்கன் பிளாஸ்மா கருவி, மானிடர், வென்டிலேட்டர் போன்ற கருவிகளை சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கும், எழும்பூரில் உள்ள மகளிர் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனைக்கும் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது. டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.420 இலட்சம் மதிப்புள்ள ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளும், சென்னை பூவிருந்தவல்லியில் உள்ள பொது சுகாதார நிலையத்தில் புதிய பயிற்சி நிலையமும் மற்றும் திருவாரூரில் மருந்து கிடங்கும் கட்டியதோடு ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

- 2002–03ஆம் ஆண்டில் ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.369 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயதுடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவ கருவிகளையும், டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.718 இலட்சம் மதிப்புள்ள ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளும், ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவக் கருவிகள், குறிப்பேடுகளையும், தேசிய புற்றுநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் ரூ.449 இலட்சம் மதிப்பிற்கு 3 புற்றுநோய் கண்டறியும் கோபால்ட் கருவி வீதம் மதுரை இராஜாஜி மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை, மகளிர் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனை ஆகியவற்றிற்கு வழங்கியுள்ளது.

- இந்த ஆண்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.600 இலட்சம் செலவில் 6 மருந்து கிடங்குகள் கே.கே. நகர் (சென்னை), விருதுநகர், திண்டுக்கல், பெருந்துறை, உதகமண்டலம் மற்றும் புதுக்கோட்டையில் கட்டப்பட்டுள்ளது. மேலும், குழந்தை நலத்திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.315 இலட்சம் மதிப்புள்ள நகர்ப்புற நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களில் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் செய்துள்ளது.



மேலும், உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.411 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

- 2003–04ஆம் ஆண்டில் டானிடா திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.950 இலட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள், குறிப்பேடுகளை கொள்முதல் செய்து ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்கு வழங்கியும், ஆரம்ப நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்களுக்காக பிரதம மந்திரி கிராம நலத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.160 இலட்சம் மதிப்புள்ள இரத்த அழுத்தமானி, மகப்பேறு பலகை, எடை கருவி, இதயதுடிப்பு அறியும் கருவி, அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர், இரத்த சர்க்கரை அறியும் கருவி போன்ற மருத்துவக் கருவிகளையும், ரூ.90 இலட்சம் மதிப்பில் 3 மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி தலா ஒன்று வீதம் அரசு மருத்துவமனை தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலிக்கும் வழங்கியுள்ளது.

இதே ஆண்டில், மகளிரியல் மற்றும் மகப்பேறு அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு வசதி கட்டண மகப்பேறு மையம் நிறுவப்பட்டுள்ளது.

மேலும், குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.327 இலட்சம் மதிப்புள்ள நகர்புற நலவாழ்வு மையம் மற்றும் துணை நலவாழ்வு மையங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் செய்துள்ளது. உலக வங்கி உதவியுடன் மொத்தம் ரூ.252 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கியுள்ளது.

- இந்திய அரசின் 11ஆவது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.21 கோடி மதிப்பிலான 7 வட்டார நோய்க்குறி அறிதல் மையங்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கட்டும்பணி மற்றும் மருத்துவ கருவிகளை கொள்முதல் செய்யும் பணியை செய்து வருகிறது.

- உள்துறை உதவியின் கீழ் ரூ.293 இலட்சம் செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு அரசு மருத்துவமனை திண்டிவனம், ஆம்பூர், கிருஷ்ணகிரி, திருபெரும்புதூர், கோவில்பட்டியில் கட்டும்பணி மற்றும் மருத்துவக் கருவிகளை கொள்முதல் செய்யும் பணியை செய்து வருகிறது.

- தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் ISO 9001:2000 சான்றிதழைப் பெற்றுள்ளது.

**"நல்வாழ்வு என்பது நோயற்ற தன்மையோ அல்லது இயலாமை இல்லாமையோ மட்டுமல்ல. அது முழுமையான உடல் நலத்துடனும் மற்றும் சமுதாயத்துடன் ஒன்றி வாழும் நிலையாகும்"**

❖ ❖ ❖

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு

*தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன்*
*மெய் வருத்தக் கூலி தரும்*

உற்பத்தியைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும், நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு அவசியமாகிறது. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் ஆகிய இரு மத்திய அமைப்புகள் மூலம் பெருமளவில் சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

★ பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளை விசாரித்து தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விடுவதற்காகவும் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் தின ஊதிய குறைப்பு மற்றும் உற்பத்தி உயர்வு உள்ளிட்ட பணி நிலைமை மாற்றங்கள் குறித்து தோட்ட நிறுவன அதிபர்களால் எழுப்பப்பட்ட தொழிற் பிரச்சினைகளை விசாரிக்கவும், சிறப்பு தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்களின் முயற்சியால் 15 நிறுவனங்கள் தொடர்புடைய தொழில் பிரச்சினைகள் தீர்வு செய்யப்பட்டன.

★ மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்கிடவுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக மாவட்ட வாரியான முத்தரப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ **நீண்ட காலமாக இயங்காமல் மூடப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த 2,215 தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.250 வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ.58,01,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

★ 'லோக் அதாலத்' என்ற மக்கள் நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரையில் அமைக்கப்பட்டு, 43 வழக்குகள் முடிக்கப்பட்டு கேட்புரிமைதாரர்களுக்கு ரூ.73,03,521 நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ மத்திய அரசின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 375 பீடித் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.18.75 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் மாநில அரசின் மானியம் வழங்கும் பொருட்டு 2003–2004ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டில் ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 124 பீடித் தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.6.20 இலட்சம் அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, 2,715 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஏதுவாக ரூ.5.43 கோடி மானியத் தொகையாக வழங்கக் கோரி மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

★ குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயல் திட்டத்தை அமல்படுத்துவதற்காக மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம் ஏற்படுத்துவதற்காக அரசு உத்தரவு பிறப்பித்து ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், மாவட்ட குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தும் நலத் திட்டங்களின்கீழ் 24,128 பயனாளிகளுக்கு ரூ.79,27,419 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ **தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் 24,768 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ரூ.9,04,37,675 உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கென சென்னையில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**



★ தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் 9 இதர தொழிலாளர் நல வாரியங்களில் 6,124 தொழிலாளர்களுக்கு ரூ.1,99,43,000 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்புத்துறை

★ 25 வேலைவாய்ப்பு அலுவலகங்களும், 4 சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கரூர், பெரம்பலூர், உதகமண்டலம் மற்றும் சிவகங்கை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 2003–04ஆம் நிதியாண்டில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் புள்ளி விவரங்களை

உடனுக்குடன் தெரிந்து கொள்ள ஏதுவாக வேலைவாய்ப்பு அலுவலகங்களை ஆணையரகத்துடன் வைடு ஏரியா நெட்ஒர்க் மூலம் இணைக்க முன் மொழியப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் முன்னேற்றம் இத்துறையில் மின் ஆளுமை (e-governance) வர வழிவகுக்கும்.

★ **வேலைவாய்ப்புத் துறையின் இணைய தளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 6–6–2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இணையதளத்தில் 2.85 இலட்சம் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் தொழில் படிப்பு படித்த மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளின் பதிவு விவரங்கள் உள்ளன. இதுவரை 1,09,038க்கும் மேலானவர்கள் பார்வையிட்டுள்ளனர். 935 வேலையளிப்பவர்கள் பணி வாய்ப்பளிக்கும் நோக்கத்திற்காக வலைதளத்தில் கண்டுள்ளனர். இந்த இணையதளத்தில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் செல்லாமலேயே "ஆன் லைன்'' முறையில் தங்கள் பதிவுகளை புதுப்பிக்க வசதி உள்ளது.**

★ 12,011 மனுதாரர்கள் தனியார் துறையில் தமிழ் நாட்டிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பணியமர்த்தம் செய்யப் பட்டுள்ளனர்.

★ ஊரகத்தில் படித்தவர்களுக்கு 6 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் தமிழ்நாட்டிலுள்ள 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23–9–2003 அன்று சிவகங்கையில் 379 ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னார்வ பயிலும் வட்டங்களைத் தொடங்கி வைத்தார்கள். புத்தகங்கள், நாளிதழ்கள் மற்றும் இதர சாதனங்கள் வாங்குவதற்கு தமிழக அரசால் ரூ.53.06 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 7,316 மனுதாரர்கள் உறுப்பினராகி உள்ளனர்.

★ சென்ற நிதியாண்டில் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கணினிகளை மேம்படுத்த ரூ.7 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டது. கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டன.

★ **2001 மற்றும் 2002ஆம் வருடங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்களுக்கு பதிவு புதுப்பித்தலுக்கான சிறப்புச் சலுகை கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது. இச்சிறப்புச் சலுகையின் மூலம் 82,337 பேர் பயனடைந்துள்ளனர்.**

★ கடந்த மூன்றாண்டு காலத்தில் ரூ.21.53 இலட்சம் செலவில் 3,200 இந்து ஆதிதிராவிட மனுதாரர்களுக்கு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்கான பயிற்சியளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொண்ட 398 மாணவர்கள் பல்வேறு தொழிற்கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

★ **கடந்த மூன்றாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக 4,653 மனுதாரர்களுக்கு சுயவேலைவாய்ப்பிற்காக ரூ.1,897.43 இலட்சம் பல்வேறு வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்றுத் தரப்பட்டது.**

## தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை

★ கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

1–4–2004 முடிய இதன் எண்ணிக்கை 34,101 ஆகும்.

பயன்பெற்ற தொழிலாளர்கள் 12,56,402 பேர்.

★ கடந்த மூன்று ஆண்டுகளில், இதில் விசாரித்து முடிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 1,447.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 59,424. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 15,078.

★ கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர் மீது 7,580 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ.1,60,13,965 நீதிமன்ற அபராதத் தொகையாக வசூலிக்கப் பட்டுள்ளது.

★ கடந்த மூன்று ஆண்டுகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சம்பந்தமாக 397 வழக்குகள் தொடரப்பட்டு ரூ.12,52,500/– அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

★ இத்துறையின் கடும் நடவடிக்கையினாலும், செயலாக்கத்தினாலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 2,793 சிறப்பு குழு ஆய்வுகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு 534 குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிவது கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. மேலும், அபாயகரமான தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துதலை 2005ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் நீக்குவதற்காக 2003ஆம் ஆண்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டது.

★ 31–3–2003 அன்று சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில், 1998, 1999 மற்றும் 2000ஆம் ஆண்டுகளுக்கான மாநில பாதுகாப்பு விருதுகள் 198 நிர்வாகத்தினருக்கு முதல் பரிசும், 134 நிர்வாகத்தினருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்பட்டன. ❖



# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கங்களாகும். தமிழ்நாட்டில் துணித்தொழில் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இது தொழில் வளர்ச்சியில் முன்னோடியாக திகழ்வதுடன் மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்பும் வழங்குகிறது. துணித்தொழிலின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கின்றது.

★ கோ–ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கும் கைத்தறி துணிகளின் விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 சதவிகிதம் தள்ளுபடியுடன் 10 சதவிகிதம் கூடுதல் தள்ளுபடி, சிறப்புக் கழிவு கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 31–5–2001இல் ரூ.368.48 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் இருப்பு 31–3–2004இல் ரூ.239.67 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கூடுதலாக 10 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கியதால் ரூ.116.28 கோடி மதிப்புள்ள பருத்தி இரக துணிகளும், ரூ.173.81 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ இலவச வேட்டி சேலை திட்டத்தில் ஈடுபட்டு வந்த 22,072 கைத்தறி நெசவாளர்களுக்கு 20 கிலோ அரிசி வீதம் மொத்தம் 1,324.48 மெட்ரிக் டன் அரிசி ரூ.119 கோடி செலவில் இலவசமாக வழங்கப்பட்டது.

★ 2002–2003ஆம் ஆண்டில் "மலிவு விலை வேட்டி சேலை திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டு சேலை ஒன்றினை ரூ.40–க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30–க்கும் விற்பனை செய்து தேங்கியிருந்த 57 இலட்சம் வேட்டிகள் மற்றும் 59.34 இலட்சம் சேலைகள் ரூ.40.84 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டன.

★ கோ–ஆப்டெக்ஸ் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையில் இருந்த வட்டி மானியத்தொகை ரூ.27.50 கோடியினை 2002–03ஆம் ஆண்டிலும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.2 கோடியும் அரசால் வழங்கப்பட்டது.

★ இலவச சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, 2004ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் முதல் 111 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 111 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் ரூ.173 கோடி செலவில் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2005ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

★ 20,000 நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை அளிக்கும் வகையில் இலவச சீருடை உற்பத்தித் திட்டம் ரூ.25 கோடி செலவில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

★ இலாபத்தில் இயங்கி வந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2003–04ஆம் ஆண்டில் 513 ஆக உயர்ந்துள்ளது.

★ நெசவாளர்களின் நலன் கருதி தள்ளுபடி மானியம் 2003–04ஆம் ஆண்டில் ரூ.88 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.



★ 586 நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.250–லிருந்து ரூ.350 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ **பட்டுச் சேலைகளிலுள்ள ஜரிகையின் அளவீட்டினை அறிய ரூ.22.84 இலட்சம் செலவில் "எக்ஸ்–ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்'' காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது.**

★ இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் மொத்த காப்பீட்டுத் தொகை ரூ.60,000லிருந்து ரூ.65,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ 2001–02ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நலவாழ்வு செறிவுத் திட்டத்தில் மாநில அரசும் இணைந்து 2001–02ஆம் ஆண்டில் ரூ.12.99 இலட்சமும், 2002–03ஆம் ஆண்டில் ரூ.52.11 இலட்சமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ 25,000 நெசவாளர்களுக்கு புதிய இரகங்கள் உற்பத்தி செய்ய பயிற்சி அளித்தல், வடிவமைப்பு மற்றும் திறன் மேம்பாடு போன்ற பல்வேறு இனங்களுக்கு சுவர்ண ஜெயந்தி கிராம

சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ், உதவித் தொகையாக ரூ.25.30 கோடி வழங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

★ சென்னிமலை பகுதி நெசவாளர்களுக்கு ஒரே இடத்தில் ரூ.686.80 இலட்சம் செலவில் 1,010 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் அடங்கிய ஆசியாவிலேயே மிகப்பெரிய நெசவாளர் காலனி கட்டப்பட்டுள்ளது.

★ 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்கு சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் பயிற்சி அளிக்க அரசு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. இதுவரை, 4,930 மகளிர் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டிலுள்ள 2,000 சாதாரண விசைத்தறிகளை தறி ஒன்றுக்கு ரூ.5,000 மானியத்துடன் நவீனமாக்க மொத்தம் ரூ.1 கோடி விசைத்தறி பதிவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டு செயலாக்கப்படுகிறது.

★ 374 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 24,000க்கும் மேற்பட்ட கைத்தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் 2001–02ஆம் ஆண்டில் ரூ.146.25 கோடி அளவிற்கும், 2002–03ஆம் ஆண்டில் ரூ.179 கோடி அளவிற்கும், 2003–04ஆம் ஆண்டில் ரூ.195.08 கோடி அளவிற்கும் ஏற்றுமதி விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மையம் மூலம் 1,061 நெசவாளர்களுக்கு ரூ.13.83 இலட்சம் செலவில் வடிவமைப்பு மற்றும் ஆடை அலங்கார தொழில்நுட்ப சிறப்புப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக, 55 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ கடாக் மற்றும் வெங்கடகிரியில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் தமிழக மாணவர்களுக்கு 2002–03ஆம் கல்வி ஆண்டில் உதவித்தொகையாக ரூ.81,000/– வழங்கப் பட்டுள்ளது.

★ **பல்மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ். பட்டப்படிப்பு பயிலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு ரூ.3,000/– வீதம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகையாக 2002–03ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.**

★ கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகளைச் சீரமைக்க அரசு தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தினைச் செயல்படுத்தி 7,096 தொழிலாளர்கள்/ பணியாளர்களுக்கு ரூ.68.38 கோடி வழங்கியுள்ளது.

★ விசைத்தறி நெசவாளர்களின் குறைகளைக் களையவும், ஆலோசனைகள் வழங்கவும் சென்னையில் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்திலும், மாவட்ட அளவில் 18 சரக அலுவலகங்களிலும் விசைத்தறி வளர்ச்சிப் பிரிவுகள் (Powerloom Development Cell) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் "புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்" (Data and Market Intelligence Cell) ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ காஞ்சிபுரம், சேலம், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய ஜவுளி நகரங்களின் சாலை, மின்வசதி, குடிநீர்வசதி, நெசவுப் பயிற்சி, மாசுக்கட்டுப்பாடு போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்த தலா ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துணிநூல் தொழிலை மேம்படுத்திடவும், சீரிய முறையில் வழிகாட்டிடவும், அரசு ஒரு துணித்தொழில் இயக்கம் (Textile Mission) அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**பட்டு உற்பத்தி**

2001–02 முதல் 2003–04 வரை பட்டு உற்பத்தியில் அடையப்பட்ட சாதனையில் 2001–02ஆம் ஆண்டின் சாதனை குறிப்பிடத்தக்க அளவு அதாவது 655 மெட்ரிக் டன்னாகும். முந்தைய ஆண்டைக் காட்டிலும் 15 சதவிகிதம் அதிகமாகும்.

2002–03ஆம் ஆண்டு முதல் இருசுழற்சியின புழுவளர்ப்புத் திட்டத்தினை 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தி, ஒசூர், பாப்பிரெட்டிப்பட்டி, கிருஷ்ணகிரி ஆகிய தொழில்நுட்பச் சேவை மையங்களில் செயல்படுத்தப் படுகிறது.

பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் விசைத் தெளிப்பான் வழங்கப்பட்டது.

2001–02, 2002–03, 2003–04 ஆகிய ஆண்டுகளில் விவசாயிகள் பயிற்சிக்கு ரூ.13.587 இலட்சமும், சொட்டுநீர்ப் பாசனத்திற்கு ரூ.122.48 இலட்சமும், தனியாகப் புழுவளர்ப்பு மனை அமைக்க ரூ.166.50 இலட்சமும், புழுவளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.73.30 இலட்சமும், இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க ரூ.2.42 இலட்சமும், பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு விசைத் தெளிப்பான் வழங்க ரூ.13.84 இலட்சமும், பட்டுத்தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு மூலதன உதவிக்கு ரூ.18.29 இலட்சமும், சிறு பட்டு நூற்பாளர்களுக்கு சிறு கடன் உதவி அளிக்க ரூ.37.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 37,635 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.



## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்



கதர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி தேங்கிக் கிடந்த கதர் இரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகள், முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விநியோகம் செய்யத்தக்க வகையில் ரூ.3.09 கோடி மதிப்புள்ள கதர் இரகங்கள் விற்பனை செய்யப்பட்டு விற்பனை அதிகரிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதின் பேரில் அதிக தள்ளுபடி வழங்கி இதுவரை ரூ.6.43 கோடி மதிப்பிற்கான கதர் இரகங்கள் விற்பனை செய்து கணிசமாக கதர் இரகங்களின் இருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் அனைத்து கதர் பருத்தி, பாலிவஸ்திரா இரகங்களுக்கு 30% தள்ளுபடியும், கதர் பட்டு இரகங்களுக்கு 20% தள்ளுபடியும், பட்டு இரகங்களின் ரொக்க விற்பனைக்கு 30% தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் ஒரே சீராக அளித்து ஆணை வெளியிட்டுள்ளார்.**

கிராம நூற்பு நிலையங்களில் நூல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள நூற்பாளர்கள், கதர் மற்றும் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் சுமார் 41,500 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

சோப்பு உற்பத்தி, 2001–2002ஆம் ஆண்டில், ரூ.207.10 இலட்சமாக உயர்ந்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் இரு மடங்குக்கு மேல் அதிகமாக ரூ.542.42 இலட்சம் மதிப்பிற்கு உயர்ந்தது. 2003–04ல் ரூ.546.22 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு வாரியத்தின் உற்பத்திப் பொருள்களான சோப்பு வகைகள், தேன் முதலான கிராமத்தொழில் பொருட்களை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனையை அறிமுகப்படுத்தி தொடங்கி வைத்தார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அனைத்து சோப்பு வகைகளையும் வாரியத்தின் மூலம் விநியோகம் செய்யத் தக்க வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், குறைந்த விலையில், நிறைந்த தரத்துடன் புதிய தயாரிப்புகளாக மூலிகை சோப்பு (மூலிகா), வலி நிவாரண எண்ணெய் (சுகப்பிரியா), கை கழுவும் திரவம் (சூப்பர் கிளீன்), ஷாம்பூ (எழில்), ஜவ்வாது பவுடர், கம்ப்யூட்டர் சாம்பிராணி ஆகியவை விற்கப்படுவதோடு, பாத்திரம் துலக்கும் ரப்–அப் என்ற சோப்பும் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 2002இல் சென்னையில் குறளகம் காதி கிராப்டில் 10 நாட்கள் தேன் கண்காட்சி நடத்தப்பட்டு தேன் விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளது. 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.84.48 இலட்சம் மதிப்பிற்கும், 2003–2004ஆம் நிதியாண்டில் ரூ.107.83 இலட்சம் மதிப்பிற்கும் தேன் விற்பனை உயர்ந்துள்ளது.

தோல் காலணிகள், ஷூக்கள், கைப்பைகள் மற்றும் பெல்ட்கள் ஆகியவை விற்கப்பட்டு, சலுகை விலையில் விற்பனை 2003–2004இல் ரூ.6.87 கோடியாக அதிகரித்துள்ளது.

காதி கிராப்ட் வளாகத்தில் ஒரு "இரத்த சோதனை மையம்" (Blood Pressure Testing Centre) திறக்கப்பட்டுள்ளது. இதற்கு கட்டணமாக ரூ.10/– மட்டும் வசூலிக்கப்படுகிறது.

விளிம்புத் தொகை திட்டத்தில் 983 கிராமப்புற மக்கள் பயனடைந்துள்ளனர்.

2001 முதல் 2003–2004 வரை கதர் இரகங்கள் உற்பத்தி ரூ.4,768.70 இலட்சம் என்ற அளவிலும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி ரூ.3,631.97 இலட்சம் என்ற அளவிலும், கதர் இரகங்கள் விற்பனை ரூ.4,701.92 இலட்சம் என்ற அளவிலும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை ரூ.3,183.80 இலட்சம் என்ற அளவிலும் எய்தப்பட்டு வாரிய செயல்பாடுகள் வளர்ச்சி அடைந்துள்ளது.

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

பனைத் தொழிலில் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

2003–2004ஆம் ஆண்டில் இணையம்/ சம்மேளனங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகள் ரூ.489.71 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி

செய்துள்ளன. ரூ.561.11 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்களை விற்பனை செய்துள்ளன.

- ★ பதப்படுத்தப்பட்ட பனம்பழ ஜாம் மற்றும் பனநுங்கு ஜாம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- ★ 2001–2002ஆம் ஆண்டு நவீன முறையில் பனநுங்கு பதப்படுத்தும் பிரிவு மாதவரம் குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் தொடங்குவதற்கு ரூ.1.25 இலட்சமும், எழும்பூர், பாம்கோலா பிரிவினை நவீனப்படுத்த கன்வேயர் ஒன்று வாங்கவும் ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- ★ கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பனைநடவு திட்டம் ரூ.6. இலட்சம் செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ★ 2002–2003ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பனைப் பண்ணையில் உள்ள பனைவெல்லம் மற்றும் பனங்கற்கண்டு உற்பத்திப் பிரிவிற்கு உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தரும் திட்டத்திற்கும் மற்றும் ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பனைத்தொழில் கைவினைஞர்களுக்கு பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் திட்டத்திற்கும் அரசினால் ரூ.7 இலட்சம் அனுமதிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டங்களின்படி பயன்பெற்ற மொத்த பயனாளிகள் 720 நபர்களில் 495 நபர்கள் மகளிர் ஆவர்.
- ★ 2003–2004ஆம் ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி மானியமாக அனுமதிக்கப்பட்டு சென்னை மாதவரம் பனைப் பண்ணை பதநீர் பிரிவில் பாலிதீன் பேக்கிங் இயந்திரம், காற்று அழுத்தான் மற்றும் [illegible] இயந்திரம் பொறுத்துதல், தருமபுரி மாவட்[illegible] 200 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல், சென்னை மாதவரம் பனைப் பண்ணை பனஞ்சீனி மிட்டாய் பிரிவினை நவீனப்படுத்துதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டன.
- ★ 2003–2004ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தாலுகா, வள்ளியூரில் பனம்பழ மற்றும் பனநுங்கு ஜாம் உற்பத்தி பிரிவு தொடங்கும் திட்டம் ரூ.2 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ★ பூம்புகார் என்ற சிறப்பு பெயரில் இயங்கி வரும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ. 3,763.73 இலட்சம் விற்பனை செய்துள்ளது.
- ★ தமிழக கைவினைப் பொருட்களின் மேம்பாட்டினை அயல்நாடுகளில் வெளிப்படுத்தும் நோக்குடனும், ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்குடனும் இந்திய அரசால் மலேஷியா தலைநகர் கோலாலம்பூரில் டிசம்பர் 2003, 2 முதல் 6ஆம் தேதி வரை நடத்தப்பட்ட "*வியத்தகு இந்தியா 2003*" எனும் கண்காட்சியின் தமிழ்நாட்டு அரங்கில் இந்நிறுவனம் பங்கேற்றது.
- ★ மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சுதந்திர தின நாளில் அறிமுகம் செய்து அறிவித்த திட்டத்தின்படி, தமிழக கைவினைஞர்களுக்கு அடையாள அட்டைகளும், அதனடிப்படையில் இந்தியன் வங்கி மூலமாக கடன் அட்டைகளும் வழங்கியதன் மூலம் கைவினைஞர்கள் பயனடையும் திட்டமும் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 3 ஆண்டுகளுக்கு ரூ.25,000/– அளவில் தனி நபரும் சுயசேவை குழுவிற்கு ரூ.2 இலட்சம் வரை கடன் பெற முடியும்.
- ★ ஆண்டுதோறும் மைய அரசு கைவினைஞர்களுக்கு வழங்கி வரும் தேசிய விருதுக்கு 2003ஆம் ஆண்டிற்கு தமிழகத்தின் கைதேர்ந்த 10 கைவினைஞர்களை மாநில அளவில் பரிந்துரை செய்ததில், தமிழகத்தைச் சேர்ந்த 3 கைவினைஞர்கள் தேசிய விருதுக்குத் தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- ★ ஆண்டுதோறும் 5 கைவினைஞர்களுக்கு 'பூம்புகார் மாநில விருது' வழங்கி வருகிறது. இவ்விருது பெறுபவர்களுக்கு ரூ.5,000/– ரொக்கமும், சான்றிதழுடன் வெள்ளிபதக்கமும் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

சுவாமிமலை, அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் பரிசுப் பொருள்கள் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. இவ்விணையகம் ஈரோட்டில் பூம்புகார் விற்பனை நிலையத்தில் அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்புதிய கட்டடத்தை 12.02.03 அன்று திறந்துவைத்தார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.35.48 இலட்சம். இதில் தமிழக அரசின் நிதி உதவி ரூ.12 இலட்சம்.

- ★ நடப்பு ஆண்டில் இந்நிறுவனம் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் தமிழ்நாட்டில் உள்ள சிறப்புப் பெற்ற திருக்கோயில்களிலும் ரூ.479.98 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பணிகளை மேற்கொண்டுள்ளது.
- ★ விருத்தாசலம் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு வெள்ளி இரதமும், அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயிலுக்கு தங்க இரதமும், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தாரமங்கலம், சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்கு மர இரதமும், அருள்மிகு முண்டகக் கண்ணியம்மன் திருக்கோயில் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில்களுக்கு வெள்ளித் தகடு போர்த்தும் பணியினையும், பிற மாநிலங்களிலுள்ள பெங்களூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில் மற்றும் ஸ்ரீகாளஹஸ்தி திருக்கோயில் வெள்ளி வேலையும் மேற்கொண்டுள்ளது. இவ்வேலைகளின் மொத்த மதிப்பு ரூ.99.17 இலட்சத்தில் மேற்கொண்டுள்ளது. •



# எரிசக்தித்துறை



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முக்கிய குறிக்கோள் மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்கு தரமான மின்சாரத்தை வழங்குவதாகும். இந்தியாவில் சிறப்பாகப் பணியாற்றிடும் மின்வாரியங்களில் ஒன்றாக தமிழ்நாடு மின்சார வாரியம் திகழ்கிறது. 2001ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் சிறப்பாகப் பணியாற்றி தன்னுடைய தனித்தன்மையை நிலைநிறுத்தி வருகிறது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இதன் பங்கு குறிப்பிடத்தக்கது.

- ★ கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் மின்தடை இல்லை.
- ★ தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து மிக சிறப்பாக செயல்பட்டு, ஒரே சமயத்தில் இந்திய அரசின் தங்கப்பதக்கம்/ரொக்கப்பரிசுகள் பெற தகுதி பெற்றுள்ளன.
- ★ வடசென்னை, தூத்துக்குடி, மேட்டூர் அனல் மின் நிலையங்கள் மேலும் தகுதி மேம்பட்ட ஐ எஸ் ஓ (ISO) - 9001 : 2000 தரச் சான்றிதழை இந்த ஆண்டு பெற்றுள்ளன.
- ★ தனியார் துறையில், சமயநல்லூரில் 106 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட மின்திட்டம் 22–9–2001லும், தனியார் துறையில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 16–12–2002லும், வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13–3–2003லும், குத்தாலத்தில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 101 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 24–3–2004லும் செயல்பட்டு வருகின்றது.
- ★ மத்திய துறையில், நெய்வேலி அனல் மின் நிலையம் – 1 விரிவாக்கத்தின் கீழ் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுடைய இரண்டு பிரிவுகள் வணிக இயக்கத்திற்கு முறையே 6–5–2003 மற்றும் 5–9–2003 தேதிகளில் இயக்கி வைக்கப்பட்டு தமிழ்நாட்டின் பங்காக 240 மெகாவாட் மின்சாரம் கிடைக்கப்பெறுகிறது.
- ★ கடந்த 3 ஆண்டு காலங்களில் மட்டும் 548 மெகாவாட் திறன் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 31–3–2004 வரை 1,361 மெகாவாட் திறன் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டதன் மூலம் நாட்டிலேயே தொடர்ந்து காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முன்னிலையில் இருந்து வருகின்றது.
- ★ சென்னையில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை கூட்டு முயற்சியில் நிறுவுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தேசிய அனல் மின் கழகத்திற்கும் இடையே 12–7–2002 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ★ தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை கூட்டு முயற்சியில் நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குமிடையே 19–6–2003 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் பெரும்பாலான மாநிலத்திலுள்ள நகர்புறப் பகுதிகளை உள்ளடக்கி, மொத்தம் ரூ.977 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங் களை செயல்படுத்துவதன் மூலம் மின்சாரத்தின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.
- ★ ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியின் உதவியுடன் ரூ.146.39 கோடி செலவில் 14 மாவட்டங்களில் துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- ★ **மின்நுகர்வோர்களின் மின்தடை பற்றிய குறைகளை உடனடியாக தீர்க்கும் பொருட்டு கணினி மயமாக்கப்பட்ட மின்தடை நீக்கும் மையம் ஒன்று சென்னை மாநகரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 12–11–2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**
- ★ **மின் உற்பத்தி 2001–02ஆம் ஆண்டு 43.920 மில்லியன் யூனிட்டுகள், 2002–03ஆம் ஆண்டு– 46.389 மில்லியன் யூனிட்டுகள், 2003–04ஆம் ஆண்டு 49.201 மில்லியன் யூனிட்டுகள்.**

கரும்பு சக்கை மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மூலம் மொத்த மின் உற்பத்தித் திறன், கடந்த மூன்றாண்டுகளில் (2001–2004) 680 மெகாவாட் அதிகரித்துள்ளது, புதுப்பிக்கதக்க எரிசக்தி மூலம் (நீர் மின் நிலையம் நீங்கலாக) மொத்த மின் உற்பத்தித் திறன் 31.3.2004 வரை 1,648 மெகாவாட்டான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கட்டமைப்பின் மொத்தத் திறனான 10,947 மெகாவாட்டில் 15 சதவிகிதம் ஆகும்.

தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையினைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்வதில் கடந்த மூன்றாண்டுகளில் 132 மெகாவாட் அதிகரித்துள்ளது. இதன் மூலம் 31.3.2004 வரை தமிழ்நாட்டில் மொத்த மின் உற்பத்தி திறன் 274 மெகாவாட் ஆகும். இது இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் 30 சதவிகிதம் ஆகும்.

ஊராட்சிகளில் மின்கட்டணச் செலவைக் குறைக்கும் வகையில் 3,387 சூரியசக்தி தெருவிளக்குகள் மத்திய அரசு மானியத்துடன் 2003–04ஆம் ஆண்டில் நிறுவப்படுகிறது. சூரியஒளி சக்தி மூலம் விவசாயத்திற்கும், குடிநீர் இறைப்பதற்கும் பம்புகளை அரசு மானியத்துடன் 243 இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன.

2002–03ஆம் ஆண்டுக்கான கொள்கை குறிப்பிலுள்ள அறிவிப்பின்படி, சூரியசக்தி சுடுநீர் அமைப்புகள் 500 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேல் கட்டப்படும் வணிகரீதியான புதிய கட்டடங்களிலும் 150 சதுரமீட்டருக்கு மேற்படி கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களில் நிறுவுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் வெப்பசக்தி மற்றும் மின்சக்தி தேவைகளுக்கு தாவர எரிசக்தி வாயுக்கலன்களை (gasifier) அமைப்பதற்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. மூன்றாண்டுகளில் 10 தாவர எரிசக்தி வாயுக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

மனிதக் கழிவுகளிலிருந்து பெறப்படும் வாயு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் திட்டத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. தமிழகத்தில் 3 இடங்களில் இவ்வகை எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளது. 2003–04–ஆம் ஆண்டில் 14 சுகாதார வளாகங்களில் மனிதக் கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்து கிடைக்கும் வாயு மூலம் பம்புகளை இயக்கி அந்த வளாகங்களை சுயசார்புடையவைகளாக மாற்றும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து வருகிறது. இதைத் தவிர 25 நிறுவனங்களில் மனிதக் கழிவு எரிவாயு கலன்கள் அமைக்கப்படுகின்றன. இதற்காக தமிழக அரசு மொத்தம் ரூ.43.5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

எத்தனால் மற்றும் உயிரியல் எரிபொருளாக ஜெட்ரோபா(காட்டாமணக்கு) பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருகிறது.

## அனைத்து விவசாயிகளுக்கும் குடிசைவாசிகளுக்கும் முற்றிலும் இலவச மின்சாரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

*"தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளும், குடிசைவாசிகளும் முற்றிலும் இலவசமாக மின்சாரம் பெற்றிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இதன்படி, விவசாய பம்புசெட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணம் முழுமையாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசே நேரடியாக செலுத்திடும். **2003–2004 இரண்டாவது அரை ஆண்டிற்கான பண அஞ்சல்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. எனவே, இந்த முற்றிலும் இலவச மின்சாரத் திட்டம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல்** திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற **2004–2005**ன் முதல் அரையாண்டிலிருந்து செயல் படுத்தப்படும்.*

*முந்தைய திமுக அரசு அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்ற ஷரத்து உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டதின் அடிப்படையில் நிதி உதவியை பெற்றுக்கொண்ட போதிலும், விவசாய பம்பு செட்டு இணைப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டிய தில்லை என்று நான் இப்பொழுது ஆணை யிட்டுள்ளேன்".*

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் கருவிகளைப் பார்த்து அதன் செயல்பாடுகளை பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் அறிந்து கொள்ளும் வகையில் 8 மாவட்டங்களில் எரிசக்தி பூங்காக்களை நிறுவியுள்ளது.

இந்தியாவில் தமிழ்நாடு 2002–லேயே புதுப்பிக்கத் தக்க எரிசக்தியின் அளவு 10 சதவிகிதமாக உயர்த்தும் நிலையை அடைந்து சாதனை படைத்துள்ளது. 2004ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.8.2003 அன்று சென்னை கோட்டையில் சுதந்திரதின விழாவில், கொடியேற்றி உரையாற்றும் போது **"பசுமையானதுமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை விரிவுபடுத்தவும், ஊக்குவிக்கவும் அதனை மற்றுமொரு மக்கள் இயக்கமாக மாற்றவும் நான் விரும்புகிறேன்"** என்று அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் முழுத் திறனோடும், வேகத்துடனும் பணியாற்றி வருகிறது. ❖



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி, இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டினைக் கொணர பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை வகுப்பினரை சமூகப் பின்னடைவிலிருந்து விடுவிக்கவும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கும், பல்வேறு நலத்திட்டங்களை வகுக்கவும் செயல்படுத்தவும் தமிழக அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

- ❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கும் மிகுவிரைவுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் இணைப்புகள் பழுதுபார்த்தல் / புதுப்பித்தல், குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதி ஆகிய பணிகள் ரூ.124.06 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 770 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் ஒரு பெரும் திட்டத்தினை 2001–2002ஆம் ஆண்டு முதல் அரசு முனைப்புடன் செயல்படுத்தத் தொடங்கி இதுவரை 214 விடுதிகளுக்கு கட்டடம் கட்டும் பணி ரூ.68.49 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 114 விடுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளது. மீதம் உள்ள 100 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ பள்ளி விடுதிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தினை உயர்த்திட, ஒரு மாணவனுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை 1.10.2001 முதல் ரூ.225லிருந்து ரூ.300ஆக உயர்த்தப் பட்டது.
- ❖ கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் மிகு விரைவுத் திட்டத்தின்கீழ், குடிநீர் வசதி, மின் இணைப்பு மற்றும் கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி ரூ.379.09 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ள இடங்களில் முதல் கட்டமாக சாலை வசதி, தெருவிளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதி ஆகிய அடிப்படை வசதிகள் அமைக்கும் பணி ரூ.8.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப் பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் உள்ளிட்ட 5,000 மகளிருக்கு 2001–2002இல் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் தொடங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 7 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மகளிர் தொழில் தொடங்க ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– வீதம் குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5. கோடி கடன் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு கம்பளி ஆடைகள் ரூ.1.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. அரசுப் பணியில் சேருவதற்குக் குறைந்தபட்சக் கல்வித் தகுதியுடைய பிற்படுத்தப்பட்டோருக்கான அதிகபட்ச வயதுவரம்பு 30லிருந்து 32ஆக உயர்த்தி 3.5.2002 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. விடுதி ஒன்றிற்கு ரூ.1,000/– வீதம் மொத்தம் ரூ.9.72 இலட்சம் செலவில் 972 விடுதிகளிலும் தங்கிப் பயில்பவர்களுக்கு விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது. 972 விடுதிகளிலும், விடுதி நூலகம் ஒன்றிற்கு ரூ.3,000/– வீதம் மொத்தம் ரூ.29.16 இலட்சம் செலவில் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.



❖ மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் 922 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.17 இலட்சத்தில் இரண்டு அடுக்கு மரப் படுக்கைகள் வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சிறு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு இலட்சம் மகளிருக்கு ஒருவருக்கு ரூ.2,000/– வீதம் மிகக்குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் இதுவரை 37,665 மகளிருக்கு ரூ.753.30 இலட்சம் சிறு தொழில் செய்வதற்கான கடன் வழங்கப்பட்டுள்ளது. 200 விடுதிகளுக்கு ரூ.85 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார நிலையினை உயர்த்த 2002–2003ஆம் ஆண்டு முதல் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

❖ விடுதிகளில் தங்கி 10 ஆவது வரை பயிலும் மாணவ/மாணவியர் மற்றும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 2 தொகுதி கதர் சீருடைகளுக்குப் பதில் "பாலிகாட்டன்" சீருடைத் துணிகள் 2003–04 முதல் வழங்கப்படுகிறது.

❖ 2002–2003ஆம் ஆண்டில் தேசிய சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் தொடங்கப்பட்டுள்ள மகிளா சம்ரிதி யோஜனா திட்டம், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 40 ஏழை சிறுபான்மை மகளிருக்கு தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. அரசு சாரா நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

❖ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால், முதன் முறையாக, தோல்பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முதல் தொகுதியில் மகளிர் உள்பட 21நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

❖ 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க, அரசு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.3.85 இலட்சம் பயிற்சிக் கட்டணமாக வழங்கியுள்ளது. பயிற்சி முடித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.25,000 வீதம் வியாபாரம், தொழில் தொடங்குவதற்கு கடனாக வழங்கப்படுகிறது.

❖ தேசிய சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து காலக்கடன் தொகையாக ரூ.25 இலட்சம் பெற்று, சிறுபான்மையினருக்கு நபருக்கு ரூ.10,000/–க்கு மிகாமல் சிறுவியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ **பள்ளிப்படிப்பு உதவித் தொகைத் திட்டத்தில் 9 மற்றும் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல், தேர்வுக் கட்டணம் மற்றும் தனிக்கட்டணம் வழங்குதல், பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவசக் கல்வி, விடுதிகள் மற்றும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை மாணவ மாணவியர்களுக்கு சீருடை வழங்குதல், தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்குதல், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்குதல், கிராமப்புற பள்ளிகளில் 3 முதல் 6ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல், பல்வேறு விதமான வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சித் திட்டம், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட குடியிருப்புகளுக்கு சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருவது ஆகியவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதற்காக 2001–2002 முதல் 2003–2004ஆம் ஆண்டு வரை ரூ.20,333.43 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.**

• • •



# காவல்துறை

இந்தியாவிலேயே தமிழகம் முதல்மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காவல்துறையில் சீர்மிகு திட்டங்கள் புதிய எழுச்சியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித்துறையில் பெற்றோர்–ஆசிரியர் கழகம் மூலமாக இருப்பதைப்போல காவல்துறை, மக்களும், காவலர்களும் இணக்கமாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றது. சிறுவயதிலேயே குற்றங்களில் ஈடுபடாதவாறு காவலர் சிறார் மன்றங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றது.




இந்தியாவிலேயே முதன் முதலாக பெண் கமாண்டோக்கள் பயிற்சி மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

★ ரூ.108 இலட்சம் மதிப்பில் அனைத்து விளம்பர சாதனங்களுடன் கூடிய 17 நடமாடும் ஆலோசனைக் குழு வாகனங்கள் 2003ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் குற்றங்களை தடுக்கும் பொருட்டு ரூ.196 இலட்சம் செலவில் 40 ரோந்து வாகனங்களும், 60 மோட்டார் சைக்கிள்களும் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

★ 90 காவல் நிலையங்களுக்கு ஜீப்கள் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

★ வட்டாரத் தலைமை இடங்களில் பெண் காவலர்களுக்கு ரூ.92 இலட்சம் மதிப்பில் 287 மோட்டார் சைக்கிள்கள் 2003ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

★ 80 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் அதற்கான உபகரணங்களுடன் வாங்கப்பட்டு 2003இல் வழங்கப்பட்டுள்ளது.

★ ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட மாதிரி காவல் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 215 மோட்டார் சைக்கிள்கள் 2003இல் வழங்கப்பட்டுள்ளது.

★ 2003–2004 வரவு செலவு திட்டத்தில், கைதிகளை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும் பணிக்காக 27 பேருந்துகள் வழங்கப் பட்டது.

★ அதி விரைவு அலைவரிசை – நிலை சாதனம் 292, மொபைல் சாதனங்கள் 901, கையடக்க சாதனங்கள் 1,407, ரூ.10 கோடிக்கான நுண் அலை திட்டத்தை இலக்கமயமாக்கல் திட்டத்தை (Digitalization of Microwave Project) செயல்படுத்த கொள்முதல் ஆணை மார்ச் 2004இல் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் 94 சந்திப்புக்களுக்கு தானியங்கி போக்குவரத்து அறிவிப்பு விளக்குகள் ரூ.3.30 கோடி செலவில் 2003ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

★ மாவட்டம், உட்கோட்டம் மற்றும் காவல் நிலையங்களுக்கு 1,702 கணினிகள் 2003இல் வழங்கப்பட்டு விட்டது.

★ ரூ.144 இலட்சம் செலவில் இரு பயிற்சி மையங்கள் மற்றும் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.12 இலட்சம் செலவில் காண் ஒலி ஒளிக்காட்சி உரையாடல் சாதனங்கள் வழங்கப்பட்டன. ரூ.45 இலட்சம் செலவில் 6 உட்பணி பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ ஆலோசனை மையங்களுடன் கூடிய 130 மகளிர் காவல் நிலையங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் திறக்கப்பட்டன.

★ அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் இலவச தொலைபேசி வசதிகள் கொண்ட உதவி மையங்கள் (Help Line) ஏற்படுத்தப்பட்டு நிராதரவற்ற பெண்களின் அபய குரல்களுக்கு அவர்களிடத்திலேயே சென்று அவர்களைக் காப்பாற்ற இந்த உதவி மையங்கள் உதவி புரிகின்றன.

★ நடமாடும் ஆலோசனை மையங்கள் 2003–2004இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி 17 வேன்கள் இதற்காக வாங்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு உதவுவதற்கான வசதிகள் மகளிர் காவல்நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு குழந்தைகளுக்கு உதவிகள் வழங்கப்படுகிறது. 287 வட்ட தலைமையக காவல் நிலையத்தில் 1 பெண் உதவி ஆய்வாளர், 2 பெண் காவலர்கள் நியமித்து பெண்களுக்கு உதவ வகை செய்யப்பட்டுள்ளது.

★ பணி நிமித்தமாகச் செல்லும் பெண் காவல் ஆளிநர்களின் குழந்தைகளைப் பாதுகாக்க 27.01.2003 அன்று 6 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்பட்டு மேலும் 30 குழந்தைகள் காப்பகங்கள் ரூ.47.12 இலட்சத்தில் 2003–2004இல் ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் திறக்கப்பட உள்ளது.

- 2004ஆம் ஆண்டில், 77 பெண் தலைமைக் காவலர்கள் பெண் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, 19.1.2004 அன்று காவலர் பயிற்சி கல்லூரிக்கு 9 வார பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். 21.01.2003 அன்று 415 பெண் முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.




- மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி, இந்தியாவிலேயே முதன் முதலாக 21 பெண் காவல் பணியாளர்களுக்கு, 04.10.2002 முதல் அதிரடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு, 04.02.2003 அன்று அப்பயிற்சியை சிறப்பாக முடித்து அதிரடிப்படை வீராங்கனைகளாக காவல்துறையில் சேர்க்கப் பட்டனர். இந்தியாவிலேயே முதன் முறையாகப் பெண் கமாண்டோ படை நிறுமம் ஏற்படுத்துவதற்காக, 130 பெண் காவல் பணியாளர்களுக்கு 13 வார கால கமாண்டோ படை பயிற்சி 27.01.2003 முதல் அளிக்கப்பட்டு, பெண் கமாண்டோ படை நிறுமம் ஏற்படுத்தப்பட்டது.

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை காவல்துறையில் உள்ள அனைவருக்கும் பாலின நிகர்நிலை பயிற்சி அளிப்பதற்காக ரூ.99,98,450/– செலவில் அனைத்து நகரங்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களில் 6 நாட்கள் கொண்ட மேற்படி பயிற்சி அணி, அணியாக (in batches) நடத்தப்பட்டது.

- 1999ஆம் ஆண்டிற்குப் பிறகு நடத்தப்படாமல் இருந்த பதக்க அணி வகுப்பு விழா 3 ஆண்டுகளுக்குப் பிறகு 2002–இல் நடத்தப்பட்டது. தமிழக முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான பதக்கங்கள் 18 காவல் பணியாளர்களுக்கும், மெச்சத்தகுந்த பணிக்கான பதக்கங்கள் 358 காவல் பணியாளர்களுக்கும் 09.07.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 26.01.2003 குடியரசு தினத்தன்று உத்தமர் காந்தி பதக்கங்கள் 5 காவல் பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

- 192 இந்திய அரசு பதக்கங்கள், 172 தமிழக முதலமைச்சரின் 2002–ஆம் ஆண்டிற்கான பதக்கங்கள், சிறப்புமிக்க புலன் விசாரணைக்கான 10 பதக்கங்கள், லஞ்ச ஒழிப்புத்துறையினருக்கான பதக்கங்கள் 16 நபர்கட்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.02.2003 இல் வழங்கப்பட்டன. மேலும், 18.11.2003 இல் 143 காவல் பணியாளர்கள் உட்பட 206 பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

- மாண்புமிகு முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள் 1,500 பேருக்கு 15.01.2004 அன்று வழங்கப்பட்டன.

- 183 நபர்கள் (137 ஆண் மற்றும் 46 பெண்) கருணை அடிப்படையில் இரண்டாம் நிலைக் காவலராக 21.07.2003 அன்று பணி நியமனம் செய்யப்பட்டு, தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் பணியமர்த்தப் பட்டார்கள். 2001–2003ஆம் ஆண்டுக்குரிய இரண்டாம் நிலைக் காவலர் பதவிகளுக்கு தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட 8,431 நபர்களில், முழு தகுதி பெற்ற 7,940 நபர்களுக்கு ஆண் இரண்டாம் நிலைக் காவலர் பணி நியமனம் ஆணை வழங்கப்பட்டு 01.12.2003 முதல் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். காவல்துறையில் 961 பெண் காவல் உதவி ஆய்வாளர் பதவிகளுக்கு, தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்வதற்காக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் தேர்வு நடைமுறைகளை முடித்து உள்ளது.

- கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பொருட்டும், ரூ.1.44 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.60 இலட்சம் தொடரா செலவினத்தில் 8 மதுவிலக்கு பிரிவுகள் கூடுதலாக அமைக்கப்பட்டன.

- சாலை பாதுகாப்புக் குழு ஒன்று 13 சாலையோர முதல் உதவி மையங்களுடன், ரூ.25.32 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.16.86 இலட்சம் தொடரா செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- 50 கிலோ மீட்டர் இடைவெளிக்கு ஒரு போக்குவரத்து உதவி மையம் வீதம் ரூ.14.74 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.1,214.64 இலட்சம் தொடரா செலவினத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- மாநில நுண்ணறிவுப் பிரிவிற்கு ரூ.120 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.15.98 இலட்சம் தொடரா செலவினத்தில் கூடுதலாக 6 ஆய்வாளர், 17 உதவி ஆய்வாளர், 46 தலைமைக் காவலர் மற்றும் 57 காவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.



- அழிவுச் செயல்களை முற்றிலுமாகத் தடுக்க சிறந்தப் பயிற்சியாளர்களை கொண்ட வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு குழுக்கள், சென்னை தனிப்பிரிவு புலனாய்வுத் துறையிலும் தமிழ்நாட்டிலுள்ள ஆறு காவல் ஆணையரகங்களிலும், தலைமைச் செயலக பாதுகாப்பு மாவட்டத்திலும் ரூ.134.49 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.371.75 இலட்சம் தொடரா செலவினத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- மாநிலத்திலுள்ள ஆறு காவல் ஆணையரகங்களிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் "திட்டமிட்டு நடத்தப்படும் குற்ற தடுப்பு பிரிவுகளும்" (Organised Crime Units) சென்னை குற்றப் புலானய்வு குற்றப்பிரிவு தலைமையிடத்தில் "கணினி வலைசார் குற்ற தடுப்புப் பிரிவும்" (Cyber Crime Cell Units) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் தோணி இயந்திரப் பயணம் புதுப்பிக்கப்பட்டதை முன்னிட்டு ரூ.11.25 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.4.33 இலட்சம் தொடரா செலவினத்தில், தனிப்பிரிவு (Immigration Staff) பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

- குடிசைப் பகுதி சிறார்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல் கண்காணிக்கவும் அவர்களிடையே காவலர் நட்புறவுச் சூழ்நிலையை ஏற்படுத்தவும், மாநிலம் முழுவதும், ரூ.32 இலட்சம் தொடரும் செலவினத்தில், 64 சிறார் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது தவிர, சென்னை மாநகரத்தில் 53 மையங்கள் சில நிறுவனங்களால் தொடங்கப்பட்டுள்ளன.

- தலைமைச் செயலகப் பாதுகாப்பிற்காக ரூ.5.72 கோடி செலவில், சென்னை மாநகரத்தில் பாதுகாப்பு மாவட்டம் உருவாக்கப்பட்டது.

- ரூ.18.05 இலட்சம் செலவில், 10 உள்ளூர் காவல் நிலையங்களில் பணியிடங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

- சென்னை மாநகர அண்ணாநகர் காவல் மாவட்டத்தில்,ரூ.17.42 இலட்சம் செலவில் நடமாடும் காவல் நிலையம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

- மாநிலக் குற்றப்புலனாய்வுத் துறையில் தனியாக "விபச்சாரத் தடுப்பு பிரிவு" ஒன்று சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- நான்கு மண்டல காவல்துறை தலைவர் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

- முக்கிய சுற்றுலா மையங்களில் முதல் கட்டமாக ரூ.1.19 கோடி செலவில் நான்கு போக்குவரத்து காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- சென்னை மாநகரத்தில், குற்றப்பிரிவு ஆய்வாளர் பதவிகள் இல்லாத காவல் நிலையங்களில், வழக்குகளை கவனிக்க ரூ.1.35 கோடி செலவில், 27 உதவி ஆய்வாளர் பதவிகள், ஆய்வாளர் பதவிகளாக நிலையு யர்த்தப்பட்டன. சென்னை மாநகர காவல் பிரிவுக்கு, ரூ.2.30 கோடி செலவில் கூடுதலாக 231 உதவி ஆய்வாளர் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

- சென்னை மாநகர, போக்கு வரத்தைக் கவனிப்பதற்காக ரூ.81.78 இலட்சம் செலவில், 100 மோட்டார் சைக்கிள்களுடன், கூடுதலாக 100 ஆயுதப்படை உதவி ஆய்வாளர் பதவிகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

- மத்திய சிறை உள்ள ஒன்பது இடங்களில் ஒன்பது ஆயுதப்படை பிரிவுகள் ரூ.7.10 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- மகளிர் சிறப்புக் காவல் படை அணியை 31.01.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

- கடின இடர்படி மாதத்திற்கு ரூ.900/– மற்றும் 1½ மடங்கு தினப்படியும் சிறப்பு அதிரடிப் படையில் பணி புரிபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இது தவிர மாதம் ரூ.1,500/– இடர்படியாகவும் வழங்கப்படுகிறது.

- **"தமிழ்நாடு காவல் மருத்துவ நிதி" திட்டத்திலிருந்து காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையின் அளவு, 01.07.2002 முதல் ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் ஒன்றரை இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

- தீரச் செயல்களில் ஈடுபடும் காவல் பணியாளர்கள் மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாகவும், நிரந்தரமாக உறுப்புகள் செயல் இழந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.50,000/–திலிருந்து ரூ.1 இலட்சமாகவும், கொடுங்காயம் அடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.10,000/–திலிருந்து ரூ.20,000/–மாகவும், சிறுகாயம் அடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.5,000/– திலிருந்து ரூ.10,000/–மாகவும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு கமாண்டோபடை, கமாண்டோபள்ளி மற்றும் கோர்செல் பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களின் துணை காவல் கண்காணிப்பாளர் மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாகவும், காவலர் முதல் ஆய்வாளர் வரை மரணமடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.6 இலட்சமாகவும், நிரந்தரமாக உறுப்புகள் செயல் இழத்தல் மற்றும் பார்வையிழப்பு ஏற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாகவும், உறுப்பு சிதைவடைந்தால் வழங்கப்பட்ட தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாகவும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



★ ரயில்வே காவலில் இரவில் பணிபுரியும் காவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.20/- வீதம் 10 நாட்களுக்கு சிறப்புப்படி வழங்கப்படுகிறது.

★ சென்னை மாநகரில் பணிபுரியும் காவல் ஆளிநர்களுக்கு உணவுப்படி ரூ.45/-இல் இருந்து ரூ.80/- வழங்கப்படுகிறது.

★ மிகை நேர ஈட்டுப்படி நாள் ஒன்றுக்கு ரூ.50/-இல் இருந்து ரூ.100/-ஆக மாதத்தில் 4 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

★ **2001-2002 ஆம் ஆண்டில் 3,865 மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு காவலர் நூற்றாண்டுக் கல்விக் கொடை திட்டத்தின் கீழ் ரூ.1,37,08,500/- வழங்கப்பட்டது. 2002-2003ஆம் ஆண்டில் 4,116 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,56,86,000/- கல்விக் கொடை வழங்கப்பட்டது.**

★ அரசு ஆணையின்படி மண்டல காவல்துறை தலைவர்கள், சரக காவல்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தங்கள் மண்டல/சரக/மாவட்டங்களில் குறை தீர்க்கும் நாட்கள் நடத்தி வருகிறார்கள்.

★ 2001-2002ஆம் ஆண்டு 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 2002-2003 ஆம் ஆண்டில் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டுக்கு மேலும் 3,000 குடியிருப்புகள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. 2001-2002 மற்றும் 2002-2003 ஆகிய ஆண்டுகளில் யு.என்.டி.பி. மாதிரியில் 74 காவல் நிலையங்கள் மேல்நிலை படுத்தப்பட்டு ரூ.296 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2002-2003ஆம் ஆண்டில் ரூ.2,400 இலட்சம் செலவில் 120 காவல் நிலையங்களுக்கு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. 80 காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

★ சென்னை மாநகரத்தில் ராஜா அண்ணா மலைபுரத்தில் காவல் வானொலி தொழில் நுட்ப பிரிவில் ரூ.51 இலட்சம் செலவில் தொழில்நுட்ப பயிற்சி மையம் கட்டப்பட்டு வருகிறது.

★ வேலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.1.15 கோடி செலவில் காவல் வானொலி செய்தி பரிமாற்ற வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சிறப்பு அணிகள், ஆயுதப்படைகள் மற்றும் தாலுகா காவல் ஆகியவற்றில் 570 இடங்களில் பெண் காவல் பணியாளர்களுக்காக கழிவறை வசதியுடன் கூடிய ஓய்வறைகள் ரூ.513 இலட்சம் செலவில் தமிழகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் 424 இடங்களில் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 146 இடங்களுக்கு கட்டுமானப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஆவடி, உளுந்தூர்பேட்டை மற்றும் திருச்சியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளுக்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் ரூ.75 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு ரூ.3 கோடியில் புதிய கட்டடங்கள் கட்டுதல். சென்னைக்கு வரும் பெண் காவல் பணியாளர்களுக்கான ரூ.62.29 இலட்சம் செலவில் சென்னை நகரில் விருந்தினர் / ஓய்வு அறைகள் கட்டுதல். இதேபோல், காவல் பணியாளர்களுக்கு ரூ.67.36 இலட்சம் செலவில் விருந்தினர் / ஓய்வு அறைகள் கட்டுதல். காவல்துறை குடியிருப்பு மற்றும் கட்டடங்களின் சிறப்பு பழுது பார்க்கும் பணிக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தல். சென்னை நகரில் உள்ள இராஜரத்தினம் மைதானத்தை ரூ.3 கோடியில் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல். சென்னை மாநகரத்தில் ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கு ரூ.7.20 கோடியில் பத்து பயிற்சி மையம் மற்றும் படைகுடியிருப்புகள் கட்டுதல். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகங்களுக்கு ரூ.2.20 கோடியில் நவீன காவல் கட்டுப்பாட்டறை அமைத்தல்.

★ 09.04.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக சட்டப் பேரவையில் அறிவித்ததையொட்டி தற்போதுள்ள நெடுஞ்சாலை ரோந்துக் காவல் மற்றும் போக்குவரத்து உதவி மையங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, ஒரு சுற்றுக் காவல் பிரிவுக்கு ஒரு உதவி ஆய்வாளர், 4 காவலர்கள், ஒரு ஓட்டுநர் காவலர் என்ற விகிதத்தில் 160 நெடுஞ்சாலை சுற்றுக் காவல் பிரிவுகளை ஏற்படுத்தி, அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்க ஒரு தனியாக ஒரு பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.



★ சிறைகளில் காவலர்களுக்கு மிகை நேரப் பணிக்கான ஊதியம் வழங்கிட அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ கூடுதலாக சிறைவாசிகளை அடைக்க வேண்டி நேரிடும் போது கிளைச் சிறை காவலர்களும் மத்திய சிறைகளில் சிறப்புப் பணியில் ஈடுபடுத்தப் படுகின்றனர். எனவே, இது போன்ற சமயங்களில் காவலர்களுக்கு நாளொன்றிற்கு ரூ.35 முதல் ரூ.80 வரை உணவுக் கட்டணமாக வழங்கிட அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ மத்திய சிறைகளில் எட்டு மணி நேர பணித்திட்டத்தினை முழு அளவில் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு கூடுதலாக 352 காவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ கிளைச்சிறைகளிலுள்ள 112 முதல் நிலைக் காவலர் பதவிகளை முதல் தலைமைக் காவலராக மேம்படுத்தி அரசினால் ஆணையிடப்பட்டுள்ளது.



★ **9 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகளை பெண்கள் தனிச்சிறைகளாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது. அச்சிறைகளில் பெண் பணியாளர்களால் மட்டுமே பெண் சிறைவாசிகள் பராமரிக்கப்படுகிறார்கள். இது இந்தியாவிலேயே முதன்மையானதாகும்.**

★ சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக ஒவ்வொரு மத்திய சிறையிலும் மற்றும் பெண்கள் தனிச்சிறையிலும் மொத்தம் ரூ.155 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

★ கிளைச் சிறைகளில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கு மத்திய சிறை சிறைவாசிகளின் உணவுக்கு நிகரான உணவு வழங்கிட 5.3.2003 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ **தமிழக அரசின் முயற்சியால், இந்திய அரசின் உள்துறை அமைச்சகம், முதல் அகில இந்திய சிறைத்துறை திறனாய்வு போட்டிகளை நடத்துவதற்கான ஆட்சி முறை ஒப்பளிப்பினை அளித்ததோடு ரூ.3.86 இலட்சம் நிதியினையும் ஒதுக்கியது. தமிழ்நாடு அரசு இந்த வரலாற்று சிறப்பு மிக்க திறனாய்வு போட்டியினை நடத்த முன்வந்து தமது பங்காக ரூ.6.08 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்து இப்போட்டியினை சென்னையில் சிறப்பாக நடத்தியது சிறை வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.**

★ இந்திய சிறை வரலாற்றிலேயே முதன் முறையாக சிறைவாசிகள் நீதிமன்றம் மற்றும் இலவச சட்ட உதவி மையம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ இத்துறையின் இணையதளம் தேசிய தகவல் மையத்தினரால் தயார் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

★ மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகள் பயில்வதற்காகவே, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தினரால், பட்ட மற்றும் பட்டய மேற்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் இந்தியாவிலேயே முதன்மையானது மட்டுமல்லாமல் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடங்களின் பாடத்திட்டம் திறந்த வெளிக் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பாடத் திட்டமாகும்.

★ திருவள்ளூர் மாவட்டம் புழலில் 211.92 ஏக்கர் பரப்பளவில் 1,250 விசாரணை சிறைவாசிகள், 1,250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அடைக்கத் தக்க வகையில் மூன்று சிறைகள் கொண்ட நவீன சிறை வளாகத்தை ரூ.77.09 கோடி செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

★ திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் கிளைச் சிறைகளை ரூ.472 இலட்சம் செலவில் மாவட்ட சிறைச்சாலையாக தரம் உயர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறைகளையும் நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். மத்திய சிறைகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்களையும் வீடியோ மூலம் இணைக்கும் வகையில் 78 இடங்களில், வீடியோ மூலம் இணைக்கும் முறையினை அறிமுகப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. •




இவ்வரசு 2001ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், செய்தி–மக்கள் தொடர்புத்துறையை நவீனப்படுத்தி, மக்கள் தொடர்பை மேம்படுத்தும் குறிக்கோளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் கீழ் இத்துறையில் பல்வேறு நவீனமயமாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின் கீழ், முந்தைய அரசால் வழங்கப்பட்டுவந்த ரூ. 50,000 உதவித்தொகையை நான்கு மடங்கு உயர்த்தி ரூ.2 இலட்சமாக வழங்க ஆணை பிறப்பித்து, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு முந்தைய அரசால் மாதந்தோறும் வழங்கப்பட்டுவந்த ஓய்வூதியத் தொகையான 2,000 ரூபாயை, மாதந்தோறும் 3,000 ரூபாயாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு இத்திட்டத்தின் கீழ் தற்போது 67 பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ரூ. 3,000/– ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

அதே போன்று ஓய்வு ஊதியம் பெற்று வந்த பத்திரிகையாளர் இறந்தால், அவரது துணைவியாருக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியமான 500 ரூபாயை மாதந்தோறும் 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து, இத்திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது இயற்கையெய்திய 12 பத்திரிகையாளர்களின் துணைவியர் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றவுடன் நாளிதழ்களைச் சேர்ந்த பத்திரிகை யாளர்களுக்கு வழங்கப்படுவதுபோல, அனைத்து தனியார் தொலைக் காட்சி நிறுவனங்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கும், ஒளிப்பதிவாளர்களுக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டு 420 அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகளை சுலபத் தவணைகளில் பத்திரிகையாளர்கள் வாங்குவதற்கு ஏதுவாக ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத மாநில வங்கியும் இணைந்து செயல்படுத்தி வருகிறது.

செய்தி–மக்கள் தொடர்புத்துறையை நவீனப்படுத்தி புதிய தகவல் தொடர்பு சாதனங்களை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 8 வீடியோ விளம்பர ஊர்திகளையும், 2 மீடியா ஊர்திகளையும், மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10–6–2002 அன்று வழங்கினார்கள்.

ரூ. 16 இலட்சம் செலவில் 4 வீடியோ புரொஜெக்டர்கள், வி.சி.ஆர். மற்றும் உபகரணங்களும் 4 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும், 26 செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.1.82 இலட்சம் செலவில் வீடியோ காசெட் பிளேயர்கள் 9 செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு ரூ. 9 இலட்சம் செலவில் 9 ஒளிநகல் இயந்திரங்களும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ரூ.15 இலட்சம் செலவில் ஒரு பீட்டாகாம் ஒளிப்பதிவு கேமராவும், செய்தி வெளியீடு மற்றும் புகைப்படப் பிரிவிற்கு கணினி மற்றும் துணைக்கருவிகள், ஒரு ஒளிநகல் இயந்திரம்,ஒரு டிஜிட்டல் கேமரா ஆகியவை ரூ.3 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 2002–2003ஆம் ஆண்டில் ரூ. 66 இலட்சம் செலவில் 14 மீடியா ஊர்திகளும், 2 வீடியோ ஊர்திகளும் 15 மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17–4–2003 அன்று வழங்கினார்கள்.

13 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங் களுக்கு ஒளி நகல் இயந்திரங்களும், பேக்ஸ் இயந்திரங்களும் ரூ.14 இலட்சம் செலவிலும், தலைமைப் புகைப்படப் பிரிவுக்கு ரூ.2.40 இலட்சம் செலவில் இரண்டு டிஜிட்டல் கேமராக்களும், 9 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ. 2.70 இலட்சம் செலவில் புகைப்பட கேமராக்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது, தற்போது அனைத்து 29 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வீடியோ விளம்பர ஊர்திகள், மீடியா ஊர்திகள், புகைப்பட கேமராக்கள், ஒளிநகல் இயந்திரங்கள், நிகரி இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்பட்டு, தன்னிறைவு பெற்றுள்ளன. புகைப்படக்காரர்கள் நியமிக்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது,



2003–2004ஆம் ஆண்டில் தலைமையிடத்தில் ரூ.25 இலட்சம் செலவில் ஒரு இணைய வலைதள ஒளிபரப்பு மேடை (Web Screening) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு பிப்ரவரி மார்ச் திங்களில் கும்ப கோணத்தில் மகாமகத்தையொட்டி அரசு பொருட்காட்சி நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் செய்தி வெளியீட்டுப் பிரிவில் ரூ.4.70 இலட்சம் செலவில் கணினி மற்றும் துணைக் கருவிகளையும், ஒரு ஜெராக்ஸ் இயந்திரமும் வாங்கி வழங்கப்படவுள்ளது. அதேபோன்று மேற்கோள் பிரிவிற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் கணினியும், பேக்ஸ் இயந்திரமும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் செய்தி நிலையங்களுக்கும், மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் 10 விசிடி பிளேயர்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. இத்துறையில்



அலுவலர்களுக்கு ரூ.2 இலட்சம் செலவில் அண்ணா மேலாண்மை கழக பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இவ்வாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் பெயரில் ஒரு தனி 'வெப்சைட்' ஒன்றினை ரூ.1.82 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ்மொழி மேன்மையைக் காக்கவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடும் வகையில் அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன. அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் ஓராண்டு காலம் மாநிலம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டையொட்டி அமையவுள்ள ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத்தூணுக்கும் மற்றும் ரூ. 9 இலட்சம் மதிப்பீட்டில் அமையவுள்ள மணிமண்டபத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.7.2003 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

நினைவகங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவாக மணிமண்டபம் அமைக்க ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இம்மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது பணிகள் முடிந்துள்ளதுடன், தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில், வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் ரூ.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் ரூ.38.5 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் வீடியோ மூலம் எடுத்து, அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் வழங்க ரூ. 2.70 கோடி செலவில் வீடியோ சாதனங்கள் வாங்கப்பட்டு சட்டமன்ற பேரவையில் நிறுவப்பட்டுள்ளது.

திரைப்படக் கல்லூரி மாணவர்களும், திரைப்படத் துறையினரும் பயனடையும் வகையில் திரு பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய திரைப்பட சேகரிப்புகளை அரசுடைமையாக்கியும், அவரின் திரைப்பட வரலாறு குறித்த நூலினை வெளியிடவும் ரூ.15.50 இலட்சம் அவருக்கு வழங்கப் பட்டுள்ளது,

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு ரூ.11 இலட்சம் செலவில் கணினி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மாணவர்கள் தயாரிக்கும் குறும் படங்களை திரைப்பட விழாக்களில் பங்கேற்க அனுப்புவதற்காக ரூ.75 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ரூ. 1 இலட்சம் செலவில் கணினியும், துணைக்கருவிகளும் வாங்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இத்துறையின் சார்பில் அரசு வெளியீடாக 'தமிழரசு' தமிழ் இதழ் மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்படுகின்றது. இவ்விதழில் அரசின் நலத்திட்டங்கள், அறிவிப்புகள், சாதனைகள் ஆகியவையும் சிறப்பு வெளியீடாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் உரைகள் வெளியிடப்படுகின்றன.

முந்தைய ஆட்சிக் காலத்தில், 1996 முதல் 2001 வரை 5 ஆண்டுகளில், இத்துறையின் திட்டங்களுக்காக பகுதி–II திட்டங்களின் கீழ் ரூ.249.32 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2001–2002–ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.375.25 இலட்சமும், 2003–2004ஆம் ஆண்டில் ரூ.49.72 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 521.97 இலட்சம் இத்துறையின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்தது மிகவும் மகத்தான ஒன்றாகும். •

# நிதித்துறை

தமிழக அரசின் நிதியை நிருவகிப்பது நிதித்துறையின் பொறுப்பாகும். 2001, மே திங்களில் இந்த அரசு பதவி ஏற்றபோது, தமிழக அரசின் நிதி நிலைமை முற்றிலும் ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. முந்தைய அரசு, சுமார் ரூ. 4,000 கோடி அளவிற்கு தீர்க்கப்படாத கடன் பொறுப்புகளை விட்டுவிட்டு ஆட்சிப் பொறுப்பைத் துறந்தது. பழுப்பு நிலக் கரியிலிருந்து சிறுகச் சிறுகச் சேர்ந்து வருகின்ற உரிமத்தொகையான அரசின் எதிர்கால வருவாயைக் கூட, முன்னதாகவே பெற்று, அப்போதைய ஆண்டின் பணப்பொறுப்புகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டது. மாநிலம் ஒட்டு மொத்த நிதி நெருக்கடியின் பிடியில் சிக்கியது. நிதி இடர்பாடுகளின் காரணமாக, 2001–2002ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட முதலீடு ரூ. 6,040 கோடியிலிருந்து ரூ.5,200 கோடியாக குறைக்கப் பட்டதிலிருந்து இதனை அறியலாம்.

தமிழக அரசின் நிதி நிலைமையை மீண்டும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவர இவ்வரசு விரிவான நிதிச்சீர்திருத்தத் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயல்படுத்தியது.

மாநிலத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக, அரசு, நிதிப்பொறுப்புணர்வு, சட்டத்தைக் கொண்டு வந்து அதைச் செயல்படுத்த சட்டம் இயற்றப்பட்டது.

தமிழ்நாடு அரசின் திட்ட முதலீடு 2001–2002இல் ரூ.5,200 கோடியிலிருந்து தொடர்ந்து அதிகரித்து வந்து 2004–2005 இல் ரூ. 8,001 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது.

தமிழக அரசு, உலக வங்கியிடம் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி ரூ. 2,116 கோடி மூலதனச் செலவில், தமிழ்நாடு சாலைத்துறைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அதன் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

2002 மே திங்களிலிருந்து சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் அனைத்து மாவட்டக் கருவூலங்கள் காசோலைகள் மூலமாகவே தொகைகள் அனைத்தையும் வழங்குகின்றன.

நவீனமயமாக்கலின் ஒரு நடவடிக்கையாக, வங்கிப் பணிசாரா அனைத்து துணைக் கருவூலங்களும் வங்கிப் பணி துணைக் கருவூலங்களாக ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும், எஞ்சியுள்ள வங்கிப் பணிசாரா 45 துணைக் கருவூலங்களை வங்கிப் பணி துணைக் கருவூலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது, வங்கிகள் மூலம் மக்கள் நேரடியாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள உதவுகிறது.

கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை 1993ஆம் ஆண்டில் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. ரூ.3.50 கோடி நிதியொதுக்கீட்டில் புதிய கணினிகளை நிறுவியதன் மூலம் இந்தக் கருவூலங்களிலும் மற்றும் துணைக் கருவூலங்களிலும் கணினியின் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலகங்களின் பணியை நவீனமயமாக்குவதற்காக, பழைய கணினிகளுக்குப் பதிலாக, நவீன தலைமைக் கணினி (Modern Servers) வசதி அமைக்கப் பட்டுள்ளது.

சென்னை மற்றும் மதுரையிலுள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் 2003ஆம் ஆண்டிலிருந்து சம்பளம் மின்னணுவியல் வங்கிப் பணமாற்ற முறையில் (ECS) வழங்கப்பட்டு வருகிறது.

கரூவூலங்கள்–கணக்குகள் துறையில் கணினிவழி நிருவாகத்திற்காக மாதிரி மின் ஆளுமைத் திட்டமொன்றைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கை

நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தற்போது செயலில் உள்ள ரொக்க அடிப்படையில் கணக்கிடும் முறையில் சீர்திருத்தம் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு சேர்ந்து வரும் தொகை அடிப்படையில் கணக்கிடும் முறையைச் செயற்படுத்தியுள்ளது. சேர்ந்துவரும் தொகை அடிப்படையில் கணக்கிடும் முறையை நாடு முழுவதிலும்வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை, இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவர் ஆய்வு செய்தார். இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களை ஆய்வு செய்ய ''சிறப்புப் பணிக்குழு'' ஒன்று நியமிக்கப்பட்டது. விரிவான ஆய்விற்குப் பின்னர், இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலுமுள்ள, எல்லா நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களிலும், இக்கணக்கிடும் முறையைச் செயல்படுத்த பணிக்குழு பரிந்துரைத்துள்ளது. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர், இதனை ஏற்றுக்கொண்டு, ஏனைய எல்லா மாநிலங்களிலும், இந்த நிதியாண்டிலிருந்து இக்கணக்கிடும் முறையைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார். இம்முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது என்ற தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது.

**கடந்த மூன்று ஆண்டுகளில், சிறு சேமிப்பின் ஒட்டு மொத்த மற்றும் நிகர வசூல் பெருமளவு அதிகரித்து சாதனை அளவை எய்தியுள்ளது. 2001–2002ஆம் ஆண்டில், சிறுசேமிப்பு வசூல் மூலம் திரட்டிய தொகை ரூ. 1,854.40 கோடி ஆகும். 2002–2003 ஆம் ஆண்டிற்கான சிறுசேமிப்பு இலக்கு ரூ.2,400 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, வசூல் இலக்கை விட ரூ. 502 கோடி அளவில், விஞ்சியது. இதுபோலவே, 2003–2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,500 கோடி நிகர இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 3,900/– (ஏறக்குறைய) கோடியாகும்.** •





# தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி

உலக மக்களிடையே மனிதநேயத்தை உருவாக்கவும், பழங்கால வரலாற்று சிறப்புகளை அறிந்திடவும் சுற்றுலாத்துறை விளங்கி வருகிறது.

உலகின் பல பகுதிகளிலும், தமிழகத்திலுள்ள சுற்றுலா வளங்களை பற்றி அறிந்திடும் வண்ணம் விளம்பரங்கள் செய்யவும், உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்து அடிப்படை வசதிகளை பெருக்கவும், 2001–2002இல் ரூ.17 கோடியும், 2002–2003இல் ரூ.33 கோடியும் 2003–2004இல் ரூ.26 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒட்டல்களில் விதிக்கப்படும் சொகுசுவரியை 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய்க்கு குறைவாக உள்ள கட்டணத்திற்கு 5 சதவிகிதமாகவும், 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை 10 சதவிகிதமாகவும், 1,000க்கு மேல் உள்ள கட்டணத்திற்கு 12.5 சதவிகிதமாகவும் குறைத்து உத்திரவிடப்பட்டது.

மைய அரசு நாடு முழுவதும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 25 சுற்றுலா வழித்தடங்களை தேர்ந்தெடுத்துள்ளது. அதில் இரண்டு வழித்தடங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

1. சென்னை – மாமல்லபுரம் – பாண்டிச்சேரி – திருவண்ணாமலை – காஞ்சிபுரம் – சென்னை
2. இராமேஸ்வரம்–மதுரை–தேக்கடி ஆகியவையாகும்.

இந்த வழித்தடங்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உரிய பெருந்திட்டம் தயாரிக்க மாநில அரசு ரூ.20 இலட்சத்தை வழங்கியுள்ளது.

மதுரையில் – நாட்டிய விழா, திருவண்ணாமலையில் – அருணாஞ்சலி விழா, சென்னையில் – இந்திய பல்வகை நடனங்கள், காஞ்சிபுரத்தில் – பட்டு விழா மற்றும் மாமல்லபுரம் நாட்டிய விழா ஆகிய விழாக்கள் மாபெரும் அளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாக்கள் நடைபெறும் காலங்களைக் குறிப்பிடும் கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

கேரளா டிராவல் மார்ட், சென்னை விழா (Chennai Fest), ஆக்ராவில் நடைபெற்ற தாஜ் மஹோஸ்சவ், டிராவல் மற்றும் டூரிஸம் எக்ஸ்போ–நாக்பூர், இந்தியா டிராவல் மார்ட்–அகமதாபாத், ஒரிசா சுற்றுலா பொருட்காட்சி போன்ற விழாக்கள்/பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்று தனி முத்திரை பதித்துள்ளது. இத்தகைய விழாக்களில் பங்கேற்பதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா பற்றிய விழிப்புணர்வு பிற மாநில/பிற நாட்டு மக்களிடம் ஏற்படுத்தி உள்நாட்டு/வெளிநாட்டுப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதே தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் நோக்கமாகும். அந்நோக்கம் வெற்றியடைந்து வருகிறது.

கடந்த நிதியாண்டில் கீழ்கண்ட விழாக்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது.

### பிச்சாவரத்தில் விடியல் விழா

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே சின்னவாய்க்கால் கடற்கரை கிராமத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை இங்கு மேம்படுத்தும் வகையில் விடியல விழா நடைபெற்றது. இவ்விழா வெளிநாட்டுப் பயணிகளை மிகவும் கவர்ந்தது.

### பழவேற்காடு படகு அலங்கார அணி வகுப்பு

இயற்கையோடு ஒன்றிய சுற்றுலா மையமாகப் பழவேற்காடு ஏரி அமைந்துள்ளது. கடல் மற்றும் ஆற்று நீர் இரண்டும் சேருமிடத்தில் கடற்கழி அமைந்துள்ளது. இங்கு படகு அலங்கார அணிவகுப்பு விழா நடத்தப்பட்டது. இத்தகைய விழிப்புணர்வினால் சுற்றுலா பயணிகள் அதிகரிக்க தொடங்கியுள்ளனர்.

### 64ஆவது ஸ்கால் மாநாடு

2003 அக்டோபர் மாதத்தில் 19 முதல் 24 வரை நடைபெற்ற ஸ்கால் மாநாடு இந்தியாவிற்கு அதிலும் குறிப்பாக சென்னையில் நடந்த ஸ்கால் மாநாட்டில், பல்வேறு நாடுகளிலிருந்து எழுநூறு முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் பல வகையான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நமது நாட்டின் கலை, பண்பாடு, கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத் தலங்கள் போன்றவைகள் வெளி நாட்டவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இம்மாநாடு ஐந்து நாட்கள் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பங்கேற்று சுற்றுலா வளர்ச்சியினைப் பற்றி சிறப்புரையாற்றி பெருமை சேர்த்தார்கள். கடந்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்பெற்ற சிறப்பான மாநாடு என்று மத்திய அரசு இந்த நிகழ்வை தேர்வு செய்து விருது

வழங்கிப் பாராட்டியுள்ளது என்பது மற்றுமொரு சிறப்பாகும்.

### சூர்ஜ் குன்து மேளா

அரியானா மாநிலத்தில் இக்கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து பலதரப்பட்ட கைவினைப் பொருட்காட்சிகள் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட நாதங்களும், கடம், ஆடை அலங்கார அணி வகுப்பு, உணவு போன்றவைகள் அனைவரையும் கவர்ந்தன. கலாரத்னா என்ற விருதும் பரம்பராதாட் என்ற விருதும் வழங்கப்பட்டது.

30ஆவது அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் (2003) வருமானமும், இலாபமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் முறையே ரூ.195.80 இலட்சமும் மற்றும் ரூ.82.09 இலட்சமும் ஈன்றது ஒரு சிறப்பு அம்சமாகும்.

### செட்டி நாடு - கிராமிய சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

செட்டிநாடு புராதன நகரம் காரைக்குடியிலிருந்து வடக்கே 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. செட்டி நாடு நகரத்தின் சிறப்பை உணர்ந்து இங்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க மைய அரசு 2003–2004ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சத்தை வழங்கியுள்ளது.

ஆகஸ்டு 2002 முதல் புதியதாக இரண்டு சுற்றுலா அலுவலகங்கள் ஆக்ரா மற்றும் ஜெய்பூரில் துவங்கப்பட்டு தற்பொழுது மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் ஒரு சுற்றுலா தகவல் மையமும் சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் சுற்றுலா தகவல் மையமும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### புதியதாக சுற்றுலா தகவல் மையம்

கடந்த ஆண்டு ஐந்து சுற்றுலா தகவல் மையங்கள் அகமதாபாத், புவனேஸ்வர், சண்டிகர், கவ்ஹாத்தி, வாரணாசி போன்ற இடங்களில் திறக்கப்பட்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது.



### சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி

சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சிக்காக அளிக்கப்பட்ட ரூ.5 இலட்சம் நிதியில் வேலையில்லாப் பட்டதாரிகளை முறையாக தேர்வு செய்து மொத்தம் 90 பேருக்கு சென்னை, மதுரை, ஊட்டி போன்ற மையங்களில் சுற்றுலா வழிகாட்டி பயிற்சி கடந்த ஆண்டில் அளிக்கப்பட்டது. அவ்வாறு பயிற்சிப் பெற்ற சிலர் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் தற்காலிக பணி செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை

2001இல் – 2,45,85,116 ஆகவும்,

2002இல் – 2,54,66,395 ஆகவும்,

2003இல் – 2,79,60,506 ஆகவும் இருந்தன.

### இரயில் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2.10.2002 முதல் முதன்முறையாக கொல்கத்தாவிலிருந்து சென்னைக்கு சுற்றுலாப் பயணிகளை இரயில் மூலமும் பிறகு சென்னையிலிருந்து 10 நாட்கள் சொகுசுப் பேருந்து மூலமும் சென்னை இரயில் நிலையத்திலிருந்து தமிழ் நாடு முழுவதும் பல முக்கியக் கோவில்களுக்கும் மலை வாழிடங்களுக்கும் அழைத்துச் சென்று விட்டு பின்னர், கடைசி நாளன்று, கொல்கத்தாவிற்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து இரயில் மூலம் வழியனுப்பியதன் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இரயில் சுற்றுலாவை சிறப்புடன் செயல்படுத்தியுள்ளது.

இதன் வெற்றி மூலம் மேலும் மும்பை, டில்லி, அகமதாபாத், லக்னோவிலிருந்து இரயில் சுற்றுலாவை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் 127 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இலாபம் மூன்று மடங்காக பெருகியுள்ளது. உதகமண்டலம் ஏரி, பூங்கா நுழைவுக் கட்டணம் மற்றும் உணவக பராமரிப்பு இனங்களை தனியார்மயமாக்கியதால் ரூ.16.60 இலட்சங்களை இலாபமாக ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் மயமாக்குதலை தொடர்ந்து செயலாற்றும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2003–2004 ஆண்டில் ரூ.245 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு 2002–2003இல் ஈட்டிய இலாபம் ரூ.50.73 இலட்சத்தைக் காட்டிலும் மிக அதிகமாக 384 சதவிகிதம் இலாபம் ஈட்டி இருப்பது முன் எப்போது மில்லாத சாதனையாகும்.

★ ★ ★






கிராமப்புற ஏழை, எளிய மக்களின் சமூக நீதி மற்றும் பொருளாதார மேம்பாட்டு வளர்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை பெரும்பங்கு ஆற்றிவருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச வளர்ச்சித்திட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் இதற்கு முன்னர் நிகழ்ந்திராத சாதனையாக, ஊரக வளர்ச்சித் துறையால் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் 14,67,474 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ஊரக வளர்ச்சித் துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக சம்பூரண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசிடமிருந்து ரூ. 108.24 கோடி கூடுதல் நிதி பெறப்பட்டுள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட *20.28* சதவிகிதம் கூடுதலாகும்.

★ ஊரக வளர்ச்சித் துறையின் பயனுள்ள நடவடிக்கைகள் மத்திய அரசை ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் (இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்) ரூ. 12.61 கோடியை கூடுதல் நிதியாக அளித்திட வழிவகுத்தது.

பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பாராட்டத்தக்க செயல்பாடுகள் காரணமாக, திட்டம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து முதன் முறையாக, தமிழ்நாடு அரசுக்கு, மத்திய அரசு ரூ.5.92 கோடி கூடுதல் நிதி அளித்துள்ளது. இது வழக்கமான ஒதுக்கீட்டினைவிட 16 சதவீதம் கூடுதலாகும்.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.84.78 கோடியை, கூடுதல் ஒதுக்கீடாக மாநில அரசால்பெறப்பட்டுள்ளது.இது வழக்கமான ஒதுக்கீட்டினை விட 106 சதவிகிதம் கூடுதலாகும்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பிலிருக்கும், 5,850 கி.மீ. சாலைகளுக்கு ரூ. 300 கோடி ஒதுக்கீட்டில் மேம்படுத்த ஆணையிடப் பட்டு முதல் பகுதியாக ரூ.150 கோடியில், 3,437.10 கி. மீ. சாலைபராமரிப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

முழுச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் தற்போது 21 மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்திற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி நாட்டிலேயே அதிக மாவட்டங்களில் திட்ட செயலாக்கத்திற்கான அனுமதி பெற்று திட்ட செயலாக்கத்தினை விரிவு படுத்திய முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

மழைநீர் சேகரிப்பில் நாட்டிற்கே வழிகாட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஊரகப் பகுதிகளில் 66,61,965 கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர 1,36,026 திறந்தவெளி மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்ய, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வளர்ச்சி ஆய்வு மையம், தன் ஆய்வறிக்கையில் பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை நடைமுறைப் படுத்தப்பட்டு தமிழ்நாட்டை முதல் மாநிலமாக மதிப்பீடு செய்துள்ளது.

13 மாவட்டங்களில் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு தவித்த சுமார் 25,000 நெசவாளர் குடும்பங்களின் துயர் துடைக்க ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் சிறப்பு திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உடல் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் நலனை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு சுய தொழில் வழங்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இராம நாதபுரம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் ரூ.8.11 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகின்றன.

93,656 மகளிருக்கு ரூ.65.56 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

8,923 படித்த இளைஞர்களுக்கு ரூ6.25 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தகவல் மையங்களை கிராமப்புறங்களில் ஏற்படுத்தும் நோக்கம் நிறைவேற, இதுவரை 23 மாவட்டங்களில் 533 மையங்கள் அமைக்கப்பட்டு, 533 சுய உதவிக் குழு உறுப்பினர் களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் விரிவுபடுத்துவதற்கென தனிப்பட்ட இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை ரூ.21, 26,408/–க்கு விற்பனை நடைபெற்றுள்ளது. இது தவிர பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் பெரிய



அளவில் கொள்முதல் செய்வோரின் கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் பணியை மேம்படுத்துதல், இணைய தளம் பராமரித்தல் மற்றும் ஊரக பொருள்களின் விற்பனையை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக டான்ஸ்டியா (tanstia) நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### பிளாஸ்டிக் தார்ச்சாலைகள்

சுற்றுச்சூழல் பாதுகாத்தல், சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் மரபு சாரா எரிசக்தியை செவ்வனே பயன்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.7.03 அன்று அறிவிக்கப்பட்ட 1,000 கி.மீ. பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்ச் சாலை அமைத்தல், 1,000 சூரிய ஒளியால் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்தல், 1,000 தனி நபர் கழிப்பிடங்களை சாண எரிவாயுக் கலங்களுடன் இணைத்தல் மற்றும் தூய கிராம இயக்கம் ஆகியவை சிறப்பாக செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் உள்ளாட்சி மன்றங்கள் உட்பட அனைத்து தரப்பினரிடமும் சிறப்பான வரவேற்பு பெற்றதுடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட அதிக அளவில் 1,200 கி.மீ.க்கும் அதிகமாக பிளாஸ்டிக் கழிவுடன் கூடிய தார்சாலை அமைக்கப்பட்டதுடன் 3,072 சூரிய ஒளியால் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும் 1,219 தனிநபர் கழிப்பிடங்கள் சாண எரிவாயுக் கலங்களுடன் இணைக்கப்பட்டது. 35 கிராம ஊராட்சிகள் தூய கிராம இயக்கம் சிறப்பாக செயல்படுத்தியதற்கான விருதினை பெற தகுதி பெற்றுள்ளன.

சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு வகையிலான 2,87,960 பணிகள் ரூ.1,153.10 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, 12.76 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு சிறப்புக்கூறுத் திட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு கூலியாக வழங்கிட 5 இலட்சம் மெ. டன் அரிசியும், ரூ. 85.48 கோடி ரொக்கமும் வழங்கப்பட்டன. மொத்தம் 38,987 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன் மூலம் தமிழ்நாடு எதிர் கொண்ட அசாதாரண வறட்சியை சமாளித்ததுடன் ஏழை மக்கள் கிராமப்புறங்களை விட்டு வேலை வாய்ப்பிற்காக பிற இடங்களுக்கு செல்வது பெருமளவில் தவிர்க்கப்பட்டது.

ஊராட்சிக்கு ஒன்று வீதம் கதிர் அடிக்கும் களங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, மூன்றாண்டுகளில் 13,928 கதிரடிக்கும் களங்கள் அமைக்க ரூ.83.57 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஊராட்சிக்கு ஒன்று வீதம் சுய உதவிக் குழுக்களுக்ககான கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, மூன்றாண்டுகளில் ரூ.128.72 கோடியில், 12,872 சுய உதவிக்குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளது.

### ஊரகக் குடியிருப்புத் திட்டம்

கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.329.89 கோடி செலவில் 1,12,162 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இதே போல கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 54.86 கோடி செலவில் 55,936 கச்சா வீடுகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.72.12 கோடி செலவில் 20,810 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 5,11,860 குடும்பங்கள் பயன்பெறும் அளவில் 34,124 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய். 3,475.270 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. 1,59,165 குடும்பங்கள் பயன்பெறும் அளவில் 10,611 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.19,840.809 இலட்சம் மானியத்துடன் கூடிய பொருளாதார உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 75,264 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பயனாளிகளும், 1,65,693 மகளிரும் பயனடைந்துள்ளனர்.

பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், 2,728 ஊரகக் குடியிருப்புக்கள் பயன் பெறும் வகையில், 3,395.64 கி.மீ. நீளத்திற்கான 1,818 சாலைப்பணிகள்



ரூ. 434.11 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தில் 2001–02இல் ரூ.9,500 இலட்சம் மதிப்பீட்டிலும், 2002–03இல் ரூ.11,200 இலட்சம் மதிப்பீட்டிலும், 2003–04இல் ரூ.10,580 இலட்சம் மதிப்பீட்டிலும், 40,206 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 38,712 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள்

ஊராட்சிக்கு ஒன்று வீதம் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்ட திட்டமிடப்பட்டன. 12,618 வளாகங்கள் தலா ரூ. 2.25 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 8,709 வளாகங்கள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஊராட்சிகளிலும் சுகாதார வளாகங்கள் ஊராட்சிக்கு ஒன்று கட்டப்பட்டு திட்டம் நிறைவு செய்யப்படும். இவ்வளாகங்களை பயன்படுத்துவோர் குழு நன்றாகப் பராமரிக்கும் பொருட்டு ஒரு வளாகத்திற்கு மாதம் ரூ.1,000 அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2000–01 வரை ஒவ்வொரு சட்ட மன்ற தொகுதிக்கும் ஆண்டிற்கு ரூ. 77 இலட்சம் என்ற அளவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. 2001–2002 லிருந்து ரூ.82 இலட்சமாக மேற்படி மானியம் உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ்கடந்த மூன்று ஆண்டுகளில் 23,533 வேலைகள் ரூ.385.40 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டம் 2001–2002இல் தொடங்கப்பட்டது, இதற்கான அனைத்து மானியமும் மாநில அரசால் வழங்கப்பட்து. இதற்கான கட்டுமான பரப்பளவு 180 ச.அடி ஆகும். கட்டுமானத் தொகை ரூ.60,000/– வீதம் அனுமதி வழங்கப்பட்டு பின்னர் 2002–2003இல் ரூ. 70,000/– ஆக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 12,422 ஊராட்சி நிர்வாக அலுவலர்களின் அலுவலகக் கட்டடம் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு 31.3.2004இல் இந்தத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் நோக்கம் ஊரகப் பகுதிகளில் மக்கள் பங்கேற்புடன் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும். இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு அரசு மானியம் 75 சதவிகிதம், மக்களின் பங்குத் தொகை ரொக்கம் (அ) உழைப்பு 25 சதவிகிதம் ஆகும்.

2001–2002 முதல் 2003–2004 வரை இத்திட்டத்தின் கீழ் 4,523 வேலைகள் 50.69கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ★ ★

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை

### மதுவிலக்கு கொள்கை

★ இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை உரிமதாரர்கள் கூட்டு சேர்ந்து விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படுவதைத் தவிர்க்கவும், கள்ளத்தனமான, போலியான மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதனைத் தடுக்கவும், மேலும், இதன் விற்பனை மூலம் பெறப்படும் வருவாய், அரசுக்கு முறையாக வருவதை உறுதி செய்வதற்காகவும், மதுபான சில்லறை விற்பனையின் முழு உரிமையினை மாநில அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக்கழகத்திடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்து, இம்மாநிலம் முழுவதும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அமைத்தது. இதனால் 35,000–க்கும் மேற்பட்ட வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் 7,500க்கும் மேலான சில்லறை விற்பனை கடைகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. 29.11.2003 முதல் 31.3.2004 வரையிலான நான்கு மாத கால அளவில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை அளவு 54.67 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்துள்ளது. (13.35 சதவிகிதம்). இதன்மூலம் அரசின் வருவாய் 32.64 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

★ ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2004 வரையிலான காலத்தில் 8,54,421 மதுவிலக்கு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 7,82,210 நபர்கள் கைது செய்யப்பட்டு, 14,637 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், 3,323 கள்ளச்சாராயக் காரர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வகை நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.2.50 கோடி அனுமதி அளித்து மதுவிலக்கு குற்றம் புரிந்து திருந்தியுள்ளோர்க்கான மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டில் ரூ.1.78 கோடி புனர்வாழ்வு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் மறுவாழ்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து, திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கு, கறவை மாடுகள், ஆடுகள், சிறுதொழில் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்கவும், சிறு பலசரக்குக் கடைகள் நடத்தவும் கடனுதவி செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளது.

• • •

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை



நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படையான குடிமைப் பணிகளை நிறைவேற்றுதல், குடிநீர் வழங்குதல் ஆகியவை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பணியாகும். இந்த நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### ஊரகக் குடிநீர் திட்டம்

20,003 ஊரகக் குடியிருப்புகளுக்கு தனி மின் விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது.

குடிப்பதற்கு உகந்த குடிநீர் ஆதாரமில்லாத 2,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு கைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கையிறைப்பான்கள் மூலம் நீர் இறைப்பதில் கிராமப்புற மகளிருக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு சிறு மின் இறைப்பான் திட்டம் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2001–2002ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது**. இதனடிப்படையில், 24,796 கையிறைப்பான்களை மாற்றி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் நிறைவேற்றப் பட்ட 8,026 சிறு மின்னிறைப்பான் திட்டங்களும் அடங்கும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள 1,226 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

53 இடங்களில் குறைந்த செலவில் தளத்திலேயே சுத்திகரிப்பு செய்யும் கலன்கள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### நகரகக் குடிநீர்த் திட்டம்

1 மாநகராட்சி, 26 நகராட்சிகள் மற்றும் 168 பேரூராட்சிகளுக்குமாக மொத்தம் 195 நகரங்களுக்கு 50.74 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.517.71 கோடி மொத்த மதிப்பீட்டில் பாதுக்காப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ. 1,479.52 கோடி மற்றும் நகரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ. 471.99 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1 மாநகராட்சி, 14 நகராட்சிகள், 60 நகரப் பேரூராட்சிகள், 50 ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 7,333 குடியிருப்புகளில் உள்ள 65.79 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ.857.98 கோடி மதிப்பீட்டில் 152 குடிநீர்த் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர மக்களுக்கு ஈரோட்டிலிருந்து 95.93 மி.லி., மேட்டூரிலிருந்து 239.92 மி.லி., நெய்வேலியிலிருந்து 607.78 மி.லி., பூந்தமல்லியிலிருந்து 240.45 மி.லி., மாமண்டூரிலிருந்து 243.92 மி.லி., கரகம்பாக்கத்திலிருந்து 207.34 மி.லி., கொளவாயிலிருந்து 233.28 மி.லி. குடிநீர் கொண்டு வரப்பட்டு வழங்கப்பட்டது. வறட்சி காலத்திலும்கூட சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வசதி தாராளமாக செய்து தரப்பட்டது.

கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் அருகில் உள்ள 12 நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டது. பம்மல், மீனம்பாக்கம், அனகாபுத்தூர், கௌல் பஜார் மற்றும் பொழிச்சலூர், புழுதிவாக்கம் மற்றும் உள்ளகரம், ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயில், போரூர் மற்றும் ஆலந்தூர் ஆகிய பகுதிகளில் ரூ.26.54 கோடி செலவில் டி.என்.யு.டி.எப். நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு பணிகள் முடிவுற்றன.

## சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத்திட்டம்

வீராணம் ஏரியிலிருந்து குழாய் மூலம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து சுத்திகரித்து சென்னை நகருக்குக் கொண்டு சென்று விநியோகம் செய்வதற்காக 9.8.2001 அன்று ரூபாய் 720 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பெறப்படும் கிருஷ்ணா குடிநீரை இரண்டு வெவ்வேறு இடங்களில் சுத்திகரிப்பதற்காக தினசரி 300 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ஒன்று செங்குன்றத்தில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணா நீரின் இரண்டாவது கட்ட சுத்திகரிப்பிற்கு



செம்பரம்பாக்கத்தில் தினசரி 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களுக்கு கழிவுநீர் இணைப்பு வழக்கமான கட்டணமாகிய ரூ.3,395/– பதிலாக ரூ.100/–க்கு வழங்கப்படுகிறது.

தற்போதுள்ள இருமுறை சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு கொடுங்கையூரில் தினசரி 50 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மும்முறை சுத்திகரிப்பு, மறுசவ்வூடு பரவல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நீர், மணலி பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூபாய் 160.50 கோடியாகும்.

## மழைநீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு ஏற்பாடுகளை அனைத்து புதுக் கட்டடங்கள் கட்டும் போதும் மற்றும் இருக்கின்ற கட்டடங்களும் ஓர் ஆண்டு காலத்திற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவ ஆணையிடப்பட்டு, சென்னை மாநகரில் 70,000 மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் 31,000 கட்டடங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வெள்ளத்தைத் தடுக்கும் திட்டமாக சென்னை நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கழிவுநீர் மேம்படுத்தும் பணிகள், இடைமறித்தல், மடைமாற்றி அமைத்தல், கழிவுநீரேற்று நிலையங்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இந்த வருடத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன் முடிக்கப்படவுள்ளது.

நகரின் நீர் வழிகளில் விடப்படும் கழிவு நீரை தடுத்தல் திட்டத்தின் முக்கிய நோக்கம், மழைநீர் கால்வாய், ஆற்று வழிகள் மற்றும் நீர் நிலைகளில் கழிவுநீர் புகாமல் தடுப்பதாகும். கழிவு நீர் நகர நீர் வழிகளில் புகுவதைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் மாற்றுப்பாதையில் அமைத்தல், மடைமாற்றி அமைத்தல், கழிவு நீர் குழாயை வேறு இடத்தில் அமைத்தல், கழிவு நீர் குழாய், உந்துக் குழாய் அமைத்தல், சாலை ஒர கழிவு நீரேற்று நிலையம் கட்டுதல் மற்றும் வீட்டுக் கழிவு நீர் இணைப்புகள் அமைத்தல் ஆகியவை ஆகும். இதுவரை 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 415.38 இலட்சம் ஆகும்.

பேரூராட்சிகளில் , பிறப்பு இறப்பு பதிவு, சொத்து வரி, கட்டிட வரைவு ஒப்புதல், உணவு கலப்பட தடுப்புச்சட்டம் ஆகியவற்றிற்கு உரிமம் வழங்குதல் ஆகியவை கணினியில் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்கென புதியாதாக இணைய தளம் (Web Site) தொடங்கப்பட்டு, அனைத்து விவரங்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டிலுள்ள 611 பேரூராட்சிகளுக்குட்பட்ட அனைத்து கட்டடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு 100 சதவிகிதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

## ஒருங்கிணைந்த பொது சுகாதார வளாகம்

நகர்ப்புறத்தில் ஏழைகள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் அமைக்க ரூ.18.72 கோடி செலவில் 720 எண்ணிக்கை மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பொது சுகாதார வளாகம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளின் ஒரு முக்கியமான தேவையாகும். மொத்தமுள்ள 611 பேரூராட்சிகளில் 355 பேரூராட்சிகளில் விரிவான குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மக்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்திட, பேரூராட்சிகளில் இதுவரை 29,421 கைப்பம்புகள் மற்றும் 6,813 விசைப்பம்புகள் பேரூராட்சி உதவி செயற்பொறியாளர்களின் தொழில்நுட்ப உதவியுடன் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. 2003–2004ஆம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் ரூ.2,514.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் திட்டப் பராமரிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 4 பேரூராட்சிகளுக்கு ரூ.11.27 இலட்சம் மதிப்பீட்டில் கடன் அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு



*சிறுமின் இறைப்பான் திட்டம்*

வருகிறது. மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகளுக்கு ரூ.3 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

பேரூராட்சிகளுக்கு 2003–04ஆம் ஆண்டிற்கு 11ஆவது நிதிக்குழு மானியமாக ரூ.1,349.40 இலட்சம் பராமரிப்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2003–2004ஆம் ஆண்டிற்கு ரூ.20 கோடி மார்ச் 2004இல் ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பேரூராட்சிகளில் புதிய 10,000 தெரு மின் குழல் விளக்குகள் அமைக்கும்பொருட்டு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

தூய்மை இயக்க விழிப்புணர்வு முகாம் பேரூராட்சிகளில் நடத்தும் பொருட்டு 611 பேரூராட்சிகளுக்கு தலா ரூ.4,000/– வீதம் மொத்தம் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகளில் 190 பணிகள் ரூ.920.62 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் 87 பணிகள் முடிக்கப்பட்டு ரூ.245.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட 21 பேரூராட்சிகளில் 60 பணிகள் எடுக்கப்பட்டு 45 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ரூ.1,003.77 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதற்காக ரூ.5 கோடி அரசு மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. ரூ.549.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சுவர்ண ஜெயந்தி திட்டத்தில் கடந்த மூன்றாண்டு காலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.•



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
**'மே' தின வாழ்த்து**

*"உலகத் தொழிலாளர்கள் அனைவரும் உவகையோடு கொண்டாடும் 'மே' தின நன்னாளில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த 'மே' தின நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன், உழைக்கும் மக்களின் உரிமைத் திருநாள் 'மே' தினம்.*

*பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், அடங்கி ஒடுங்கிக் கிடந்த தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்து போராடி, உரிமையைப் பெற்ற நாள் 'மே' தினம்.*

*'மே' தினம் உழைப்பின் மேன்மையை, உழைப்பவரின் உரிமையை உணர்த்துகின்ற திருநாள் என்பதால் இது நாடுகளின் எல்லைகளைக் கடந்து உலகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் உரிய நாளாய் விளங்குகிறது.*

*இத்தகைய மேன்மை மிக்க 'மே' தினத் திருநாளில் தமிழகத்தைத் தங்கள் உழைப்பால் உயர்த்தி வரும் எனதருமை தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த 'மே' தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.*

## திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை

**2002–2003ஆம் ஆண்டிற்கான ரூ.5,750 கோடி என நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு முழுமையாக எய்தப்பட்டது. 2001–2002ஆம் ஆண்டில் ரூ.5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003–2004–ஆம் ஆண்டில் ரூ.7,000 கோடியாக உயர்த்திப் பெற்றது. இது அரசின் வியத்தகு சாதனையாகும்.**

2003–2004ஆம் ஆண்டிற்கான ரூ.7,000 கோடி என்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்பட்டது. 2004–2005ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.8,001 கோடி என்ற உயரளவு வளர்ச்சித் திட்டத்தை மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுடன் செயல்படுத்த இவ்வரசு உத்தேசித்துள்ளது.

மாநில அரசு மத்திய திட்டக் குழுவினுடைய புதிய முயற்சியான "ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா" திட்டத்தின் கீழ் 2002–2003ஆம் ஆண்டிற்காக திருவண்ணாமலை மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு 2003–2004ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.15 கோடி அளித்துள்ளது. 2003–2004ஆம் ஆண்டிற்காக திண்டுக்கல் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்து, முதல் தவணையாக ரூ.7.5 கோடி அளித்துள்ளது. 2004–2005ஆம் ஆண்டிற்காக மத்திய திட்டக் குழுவால் கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு (2002–2007) ரூ.40,000 கோடி ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுவதற்கு மத்திய திட்டக் குழுவின் அனுமதியை தமிழ்நாடு பெற்றுள்ளது. •





சென்னைக்கு குடிநீர் வழங்க
ரூ.720 கோடியில் புதிய வீராணம் திட்டம்



தமிழ்நாட்டின் முதல் மகளிர்
சிறப்புக் காவல் அணி தொடக்கம் (30–1–2004)



தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்
தொடக்கம் (11–2–2004)



கும்பகோணத்தில் மகாமகத்தையொட்டி
அமைக்கப்பட்டுள்ள புதிய கலையரங்கம்



புதிய கிருஷ்ணகிரி மாவட்டம்
உருவாக்கம் (9-2-2004)



ஊட்டியில் தேயிலைக்கான
மின்னணு ஏல மையம் தொடக்கம் (13-9-2003)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
புரட்சிகரமான 'விரிவான தரிசுநிலத் திட்டம்'
செயலாக்கம்


திருவள்ளுவர் ஆண்டு 2035
சித்திரை - வைகாசி
மலர் : 35 இதழ் : 11
மே 2004
விலை ரூ.10

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com





உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மாத சந்தா செலுத்துவீர்!
10வது
மாத சந்தா
இலவசம்
மேலும்
அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. 1 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. 2 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 3 | கூடுதல் தொகை (2+3) ரூ. 4 | அரசு தள்ளுபடி ரூ. 5 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 6 |
|---|---|---|---|---|---|
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கண்ணி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com Visit us at: www.tn.gov.com



பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
வைகாசி – ஆனி
ஜூன் 2004
மலர் : 35 இதழ் : 12
விலை ரூ.10

**இந்த இதழில்...**


- மேலும் 9 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் ........ 2
- வீட்டு உபயோக மின்கட்டணக் குறைப்பு ........ 4
- பால் கொள்முதல் விலை உயர்வு ........ 7
- கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம் ........ 9
- கல்வித் தரத்தை உயர்த்த புதிய பாடத்திட்டம் ........ 10
- அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் சீட்டுக் கட்டணம், பார்வையாளர்கள் கட்டணம் ரத்து ........ 12
- இடைநிலை, உடற்கல்வி, சிறப்பு ஆசிரியர் நியமன உச்ச வயது வரம்பு ரத்து ........ 13
- பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள் ........ 14
- 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியர் ஃபெயிலாகாமல் தேர்ச்சி ........ 15
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினச் செய்தி ........ 16
- குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்க ஆக்கப்பணிகள் ........ 17
- வெள்ளிக் கோளின் சூரியக் கடப்பு ........ 21
- கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் பிறந்தநாள் விழா ........ 24
- வேளாண்மை உயிர்த் தொழில்நுட்பம் ........ 25
- திருஞானசம்பந்தர் இசை விழா ........ 29
- ஊனமுற்றவர்களுக்கு ஊன்றுகோலாக அரசு விளங்குகிறது ........ 31
- தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ........ 33
- விருதுநகரில் நெசவாளர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி முகாம் ........ 35
- மக்கள் நலம் பாதுகாக்கும் தமிழக அரசின் அறிவிப்புகள் ........ 37
- சென்னை அரசு பொது மருத்துவமனை ........ 45
- கவிஞர் என்றால் அது கண்ணதாசன் ........ 47
- ஏற்காடு கோடை விழா ........ 48
- சுவடி நூலகங்களின் பதிப்பு முயற்சி ........ 49
- ஈரோடு மாவட்டத்தில் சிக்கன பாசன முறை ........ 55
- கோழிச் சண்டை (சிறுகதை) ........ 57
- திருநெல்வேலி மாவட்டத்தில் முழு சுகாதார கிராமங்கள் ........ 63
- சிசுக்களைக் காப்பாற்றுவதில் முன்னோடியாகத் திகழ்கின்றது தேனி மாவட்டம் ........ 64
- கிருஷ்ணகிரியில் 12ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி ........ 65
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் மௌனப்புரட்சியை ஏற்படுத்திவரும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் ........ 70
- நல்ல நண்பர்கள் மாறுவதில்லை – மாணவர் பக்கம் ........ 72
- சிவகங்கை மாவட்டத்தில் மாற்றுப் பயிர் விவசாயம் ........ 73
- திருக்கோயில்களில் பக்தர்களின் காலணிகளை இலவசமாக பாதுகாக்க ஏற்பாடு ........ 74
- விறகிலிருந்து மின்சாரம் ........ 75
- நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ........ 76
- மிதிவண்டி, இருசக்கர வாகன நிறுத்தக் கட்டணம் ரத்து ........ 79
- அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை ........ 80


*ஆசிரியரும் வெளியிடுபவரும்* :**வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

தமிழரசு
R.N.I.No.21446/70
RGN No TN/PMG (CCR)/836/03-05















தமிழரசு




















# மேலும் 9 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு
(11-6-2004)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில், அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு இலவச மதிய உணவு அளிக்கும் வகையில் அன்னதானத் திட்டத்தை 23.3.2002 அன்று சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள். முதற்கட்டமாக, 63 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்ட இந்த அன்னதானத் திட்டம் பின்னர் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது 162 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சிறப்புமிகு திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி சென்னை, திருவள்ளூர், வேலூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில்,





மேலும் 9 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 14-6-2004 முதல் இந்தத் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

இந்த ஆணையின்படி, 14-6-2004 முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ள 9 திருக்கோயில்களின் விவரம் வருமாறு :

| வ. எண். | மாவட்டம் | திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| (1) | சென்னை | அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், வில்லிவாக்கம், சென்னை |
| (2) | திருவள்ளூர் | அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில், திருவாலங்காடு (திருத்தணி, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுடன் இணைந்தது) |
| (3) | வேலூர் | அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில், திருவலம், காட்பாடி |
| (4) | ஈரோடு | அருள்மிகு காடு ஹனுமந்தராயசுவாமி திருக்கோயில், தாராபுரம் |
| (5) | திருச்சி | அருள்மிகு ஞீலிவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பைஞ்ஞீலி, மணச்சநல்லூர் |
| (6) | புதுக்கோட்டை | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம் |
| (7) | திருவாரூர் | அருள்மிகு சௌரிராஜப் பெருமாள் திருக்கோயில், திருக்கண்ணபுரம், நன்னிலம் |
| (8) | விருதுநகர் | அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில், அருப்புக்கோட்டை |
| (9) | திருநெல்வேலி | அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி திருக்கோயில், உவரி, இராதாபுரம் |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
14.6.2004 முதல் அன்னதானத் திட்டத்தை
செயல்படுத்த ஆணையிட்டுள்ள இந்த
**9 திருக்கோயில்களையும் சேர்த்து தமிழகத்தில்
அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும்
திருக்கோயில்களின் எண்ணிக்கை
171 ஆக உயர்ந்துள்ளது.**

❖ ❖ ❖

# வீட்டு உபயோக மின் கட்டணக் குறைப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு
(31–5–2004)

2001ஆம் ஆண்டு மே மாதம் எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழ்நாடு மின்சார வாரியம் எத்தகைய நிதி நெருக்கடியில் சிக்கியிருந்தது என்பதை எல்லோரும் அறிவார்கள். 2001–2002ஆம் ஆண்டில் முந்தைய தி.மு.க. அரசு விட்டுச் சென்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்தப் பற்றாக்குறை ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் ஆகும். இதில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தேசிய அனல் மின் நிறுவனம், இந்திய நிலக்கரி நிறுவனம் போன்ற மத்திய மின் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான 1,962 கோடி ரூபாயும் அடங்கும். தமிழ்நாடு மின்சார வாரியம் திவால் ஆவதைத் தடுக்கவும், மின்வெட்டு, தரமற்ற சேவை, மின் தடங்கல் போன்ற நிலைமைகளைத் தவிர்க்கவும் தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்தாமல் நிலுவையில் வைத்திருந்த இந்த 1,962 கோடி ரூபாய் தொகையைத் திரும்பச் செலுத்துகின்ற வகையில், அரசின் கடனாக எனது அரசு ஏற்றுக் கொண்டது. மேலும், முந்தைய தி.மு.க. அரசு, 2001ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விட்டுச் சென்ற முழுமையான நிதி நிலைக் குளறுபடியைச் சரி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, 5,000 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பற்றாக்குறை 2004–2005ஆம் ஆண்டில் 1,603 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

வீட்டு உபயோகத்துக்கு, குறிப்பாக தொடர் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருவாய் இழப்பைச் சந்தித்துவரும் குடும்பங்களுக்குப் பெரிதும் தேவையான நிவாரணத்தை வழங்கும் வகையில் மின் கட்டணச் சுமையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுப் பொதுமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன.

வீட்டு உபயோகிப்பாளர் உள்ளிட்ட அனைத்து வகையான மின் நுகர்வாளர்களுக்கும், உரிய மின் கட்டணம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப் படுகிறது. இந்தத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை 1999ஆம் ஆண்டில் முந்தைய தி.மு.க. அரசுதான் உருவாக்கியது. வீட்டு உபயோகத்திற்கான தற்போதைய மின் கட்டணம் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்டது ஆகும்.

மின்சாரச் சட்டத்தின் 61ஆவது பிரிவின்படி ஒழுங்குமுறை ஆணையம், குறிப்பிட்ட விதிகளையும், நடைமுறைகளையும் பின்பற்றி மின் கட்டணத்தை நிர்ணயிக்கும். நிர்ணயிக்கப்படுகின்ற மின் கட்டணமானது, மின்சார உற்பத்தி மற்றும் அதனை வழங்கும் செலவு, அதாவது ஒரு யூனிட்டிற்கு ரூ. 3.38 என்ற அளவைப் படிப்படியாக பிரதிபலிப் பதாகவும், ஆணையத்தால் நிர்ணயிக்கப்படும் காலவரையறைக்குள்ளாக, வழங்கப்படும் உள் பகிர்வு மானியத்தை (Cross Subsidy) குறைப்பதுடன் முற்றிலுமாக நீக்கும் வகையிலும் அமைய வேண்டும் என்று ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மின்சார சட்டம் பிரிவு 61 (g) வழிகாட்டுகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியம் எதிர்நோக்கும் மொத்தப் பற்றாக்குறை 1,603 கோடி ரூபாய் ஆகும். எனவே, வழங்கப்படும் உள்பகிர்வு மானியத்தை (Cross Subsidy) படிப்படியாக குறிப்பிட்ட காலவரையறைக்குள் குறைத்து, இத்தகைய மின் நுகர்வோருக்கு கட்டணத்தை உயர்த்த ஒழுங்குமுறை ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகளின்படி



கட்டணத்தை நிர்ணயிக்கின்ற அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கே உள்ளது.

மின்சார சட்டத்தின்படி, வீட்டு உபயோகிப்பாளர் உட்பட உள்பகிர்வு மானியம் (Cross Subsidy) பெறும் அனைத்து நுகர்வோர்களின் மின் கட்டணங்களை படிப்படியாக உயர்த்தி அதன்மூலம் உள்பகிர்வு மானியத்தின் (Cross Subsidy) அளவைக் குறைக்க வேண்டும் என்ற போதிலும், வீட்டு உபயோகிப்பாளர்களின் மின் கட்டண வீதத்தைக் குறைத்து, அதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணிசமான நிவாரணம் கிடைக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்கிட நான் முடிவெடுத்துள்ளேன்.

2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1ஆம் தேதியன்று, அன்றைய நாளின் கட்டண சீரமைப்புக்கு முன்னதாக இருந்த அளவுக்கு, வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு மின்சாரக் கட்டணம் குறைக்கப்படுவதை உறுதி செய்திட, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் எனது அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு குறைக்கப்பட்ட கட்டணத்திற்கான மானியத் தொகையை வீட்டு மின் நுகர்வோர்கள் சார்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசு வழங்கும் என்பதை ஒழுங்குமுறை ஆணையத்திடம் எனது அரசு தெரிவிக்கும்.

தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணையின் அடிப்படையில் வீட்டு உபயோகிப்பாளர் களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மின் கட்டண வீதமும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் தற்போது எனது அரசு நிர்ணயிக்கக்கோரும் மின் கட்டண வீதமும் பின் வருமாறு :–

| மின் நுகர்வு (யூனிட்டுகளில்) ஒரு மாதத்திற்கு | இப்போதைய கட்டணம் (ஒரு யூனிட்டுக்கு) ரூபாய் | உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்த கட்டணம் (ஒரு யூனிட்டுக்கு) ரூபாய் |
|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |

குறிப்பு : 1. மின் கட்டணமானது அனைத்து நுகர்வுகளுக்கும் படிப்படியான அடிப்படையிலேயே வசூலிக்கப்படும். அதாவது, முதல் 25 யூனிட்டுகளுக்கு பட்டியலில் சொல்லப்பட்டுள்ள கட்டண விகிதம், அதற்கு அடுத்த 25 யூனிட்டுகளுக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விகிதம் என்று மொத்தம் எவ்வளவு யூனிட்டுகள் உபயோகப்படுத்தப்பட்டு உள்ளதோ அந்த அளவுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்படும். எனவே, படிப்படியான அடிப்படையில் நிர்ணயிக்கப்படும், கட்டணம் அனைத்து நுகர்வோர்களுக்கும் பயன் அளிக்கும்.

2. மாதத்திற்கு 50 யூனிட்டுகளோ அல்லது இரண்டு மாதத்திற்கு 100 யூனிட்டுகளோ அல்லது அதற்குள்ளாகவோ பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு, கட்டணம் மாதம் ஒன்றுக்கு 0–25 யூனிட்டுகளுக்கு 65 காசுகளாகவும், 26–50 யூனிட்டுகளுக்கு 75 காசுகளாகவும் இருக்கும்.

வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்தை வெகுவாகக் குறைப்பதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கணிசமான மானியத்தை மாநில அரசு வழங்க வேண்டியிருக்கும். என்னுடைய அரசு தேவையான மானியத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும். **தமிழகத்திலுள்ள 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் வீட்டு உபயோகிப்பாளர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுக்கு 910 கோடி ரூபாய் மானியத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாநில அரசு வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.** மேலே குறிப்பிட்டவாறு மின் கட்டணத்தைக் குறைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படும் வேண்டுகோளுடன், இதற்கான மானியத் தொகையை மாநில அரசு

வழங்கிடும் என்ற விவரமும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் தெரிவிக்கப்படும். **இவ்வாறு குறைக்கப்பட்ட கட்டணம் 16.6.2004 முதல் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் குடும்ப நுகர்வோர்கள் பெரிதும் பயனடைவர்.**



**உதாரணமாக, தற்போது ஒரு மாதத்திற்கு 250 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதத்திற்கு 500 யூனிட்டுகள் என மின்சாரத்தைப் பயன்படுத்தி வரும் ஒரு குடும்பம், மாதத்திற்கு 720 ரூபாய் அல்லது இரண்டு மாதத்திற்கு 1,440 ரூபாய் மின் கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணக் குறைப்புக்குப் பிறகு, அவர்கள் செலுத்த வேண்டிய மாதாந்திரக் கட்டணம் 720 ரூபாயிலிருந்து 450 ரூபாயாகவும் அல்லது இரண்டு மாதத்திற்கு செலுத்தும் கட்டணம் 1,440 ரூபாயிலிருந்து 900 ரூபாயாகவும் குறையும். இந்தக் கட்டணக் குறைப்பு கணிசமானது ஆகவும், பெரும் நிவாரணத்தை அளிப்பதாகவும் அமையும்.**

மற்றொரு உதாரணம் : தற்போது ஒரு மாதத்திற்கு 450 யூனிட்டுகள் அல்லது இரண்டு மாதத்திற்கு 900 யூனிட்டுகள் என மின்சாரத்தைப் பயன்படுத்தி வரும் ஒரு குடும்பம், மாதத்திற்கு ரூ.1,607.50 அல்லது இரண்டு மாதத்திற்கு ரூ.3,215 மின் கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணக் குறைப்புக்குப் பிறகு அவர்கள் செலுத்த வேண்டிய மாதாந்திரக் கட்டணம் ரூ.1,017.50 அல்லது இரண்டு மாதத்திற்கு செலுத்தும் கட்டணம் ரூ.2,035 ஆக குறையும். இதன்படி, மாதத்திற்கு ரூ.590 அல்லது இரண்டு மாதத்திற்கு ரூ.1,180 என்னும் அளவில் கணிசமான அளவு மின் கட்டணம் குறையும்.

**தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தமிழ்நாடு அரசு, ஆண்டுக்கு 910 கோடி ரூபாய் மானியத்தை வழங்குவதன் மூலம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட இருக்கும் இந்த மின் கட்டணக் குறைப்பு, 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெற்றிட நான் மேற்கொண்டுள்ள பெரும் நடவடிக்கை ஆகும். அனைத்து வீட்டு உபயோகிப்பாளர் குடும்பங்களையும் பாதுகாக்கும் வகையில் வழங்கப்படும் இத்தகைய நிவாரணம் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

❖ ❖ ❖



## வணிகவரித்துறையின் பணி ஆய்வுக்கூட்டம்

*சென்னை எழிலகத்தில், 11–6–2004 அன்று மாநில அளவிலான வணிக வரித்துறை துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்களின் பணி ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.* **செ.ம. வேலுசாமி** *அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பணி ஆய்வுக் கூட்டத்தில் வணிகவரித்துறை செயலாளர் திரு. எஸ். இராஜரெத்தினம், இ.ஆ.ப., அவர்கள், வணிகவரித்துறை ஆணையர் திரு.அபுல்ஹசன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.*





# பால் கொள்முதல் விலை உயர்வு
# பால் விற்பனை விலை உயரவில்லை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு
(1–6–2004)

தமிழக மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் அவர்களுடைய நல்வாழ்க்கையின் உணர்வுகளையும் நிறைவேற்றும் மக்கள் அரசாகவே என்னுடைய அரசு எப்போதும் இருந்து வருகிறது என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். கடந்த தி.மு.க. அரசு விட்டுச் சென்ற கடுமையான நிதிச் சீரழிவின் காரணமாகவும், நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகவும், ஒழுங்கற்ற ஆட்சிமுறை காரணமாகவும், முறையற்ற பணி நியமனம் ஆகியவையினால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (ஆவின்) சரிவர இயங்க முடியாத முடக்குவாத நிலைமையை எய்தியது. தொடர்ந்து பெருத்த பொருளாதார இழப்பீட்டில் இயங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனைச் சரிப்படுத்துகின்ற அதே வேளையில் மக்கள் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய தலையாய எண்ணம் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். எனது தலைமையிலான உங்கள் ஆட்சி அமையப் பெற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்படி ஆவின் நிருவாகத்தைச் செம்மைப்படுத்தி, பால் உற்பத்தியாளர்களும், நுகர்வோர்களும் பலன் அடையும் வண்ணம் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். அதே வேளையில் நுகர்வோர்களுக்கு எவ்வித பெரிய



நிதிச்சுமையும் ஏற்படுத்தாவண்ணம் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

பெருவாரியான கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், கறவை மாடுகளை வைத்து, அது தரும் பாலை மேற்படி ஆவினுக்கு விற்பனை செய்து அதன் மூலம் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே. இதனைக் கருத்தில் கொண்டும், **கிராமப் பொருளாதார மேம்பாட்டையும், கிராமப்புறத்தில் வாழும் தனி நபர் வருமானத்தை உயர்த்த வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடனும் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தி 1.6.2004ஆம் தேதியிலிருந்து, தற்போது கொள்முதல் செய்யப்படும் பசும்பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு 9 ரூபாய் 50 காசிலிருந்து ஒரு ரூபாய் உயர்த்தி, ஒரு லிட்டருக்கு 10 ரூபாய் 50காசு என்ற அளவிலும், எருமைப் பால் விலையை தற்போதைய கொள்முதல் விலையான லிட்டர் ஒன்றுக்கு 11 ரூபாய் 44 காசு என்ற அளவிலிருந்து லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் 6 காசு உயர்த்தி லிட்டர் ஒன்றுக்கு 12 ரூபாய் 50 காசு என்ற அளவில் கொள்முதல் செய்யவும், மேற்படி கொள்முதல் விலையை சீரிய முறையில் காலதாமதமின்றி வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. மேற்படி கொள்முதல் விலையை உயர்த்துகின்ற அதே தருணத்தில் நுகர்வோரின் நலனைக் கருதி பாலின் விற்பனை விலை எந்த அளவிலும் உயர்த்தப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மேலும், கிராமப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக தமிழகத்தில் உள்ள மொத்த ஊராட்சி ஒன்றியங்களான 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கையை குறைந்த பட்சம் ஒரு ஒன்றியத்திற்கு தற்போதுள்ள எண்ணிக்கையை விட மேலும் ஆயிரம் கறவை மாடுகள் என்ற அளவில் அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டு அதற்குரிய வழிமுறைகளையும், உடனடியாக இதனைச் செயல்படுத்த எளிய நடைமுறையில், மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவது குறித்தும் மேல் நடவடிக்கைகளை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

★ வலிமை என்பது உடலைவிட உள்ளத்திற்கே இருக்கவேண்டும்.

– விவேகானந்தர்

★ ஒவ்வொரு வீடும் ஒரு பல்கலைக்கழகம், பெற்றோர்களே ஆசிரியர்கள்.

– காந்தியடிகள்

★ தனக்குத் தெரிந்ததை மட்டுமே பேசுவோமானால் உலகில் முழு அமைதி நிலவும்.

– பெர்னாட்ஷா

★ மனிதனுடைய உள்ளத்தில் ஏழு நிறங்களல்ல, எழுநூறு நிறங்கள் உள்ளன.

– காண்டேகர்



# கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
– 15.6.2004



தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெறவும், கணிசமான வருவாய் ஈட்டிடவும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும் என்னுடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில் சுய காப்பீட்டுத் திட்டத்தை (Self Insurance Scheme) என்னுடைய தலைமையிலான தமிழக அரசு முழு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் (Savings and Security Scheme) உறுப்பினர்களாக உள்ள கூட்டுறவு அமைப்புகளைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள் சுய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதி பெற்றவர்கள் ஆவர். இவர்கள் 60 வயதினை அடையும் முன்னர் இறக்க நேரிட்டால் மட்டும், அவர்களது வாரிசுகளுக்கு இந்த சுய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.50,000/– இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள இந்த சுய காப்பீட்டுத் திட்டத்தை மாற்றி அமைத்து "புங்கர் பீமா யோஜனா" (Bunkar Bima Yojana) என்ற பெயரில் புதிய காப்பீட்டுத் திட்டத்தை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் (Life Insurance Corporation of India) இணைந்து மேலும் அதிக சலுகைகளுடன் செயல்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இந்த புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நெசவாளர் ஒருவருக்கு, மத்திய அரசின் பங்காக ரூ.150/–, ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்காக ரூ.100/–, நெசவாளரின் பங்காக ரூ.130/– ஆக மொத்தம் ரூ.380/– பிரீமியத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.130/–ஐ தமிழக அரசே செலுத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ள 75,565 கைத்தறி நெசவாளர்கள் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியத் தொகையான 98 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் தொகையை தமிழக அரசே செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையை அவர்களது சார்பாக தமிழக அரசே செலுத்தி விடுவதால், நெசவாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடைய தனியாக பிரீமியத் தொகை எதுவும் செலுத்த வேண்டிய தேவை இல்லை.

இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் கீழ்க்கண்ட பயன்களைப் பெறுவார்கள். கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்னர் இயற்கையாக இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்படும். விபத்தில் மரணம் அடைந்தால் ரூ.80,000/–, விபத்தில் முழுவதும் செயல் இழக்க நேரிட்டால் ரூ.50,000/–, பகுதி செயல் இழப்பு ஏற்படின் ரூ.25,000/– இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9–ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை, அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ.300/– கல்வி உதவித் தொகை வழங்கப் படும்.



கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்தம் துயர் துடைக்கும் புதிய காப்பீட்டுத் திட்டம் இந்த நிதி ஆண்டில் (2004–2005) செயல்படுத்தப்படும். ❖

# கல்வித்தரத்தை உயர்த்த புதிய பாடத்திட்டம்

**த**மிழ்நாட்டில் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்புகளுக்கான பாடத்திட்டம் தற்கால தேவைக்கேற்ப மாற்றியும் திருத்தியும் அமைக்கப்பட்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி நூல்கள் தயாரிக்கப்பட்டு 2003–2004ஆம் கல்வி ஆண்டில் 6, 9 ஆகிய வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களுக்கும், 10ஆம் வகுப்பிற்கு தமிழ் பாடம் மட்டும் அறிமுகப் படுத்தப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகிறது. இக்கல்வி ஆண்டு 2004–2005இல் 7, 10 மற்றும் 11 வகுப்புகளுக்கு புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. 8 மற்றும் 12ஆம் வகுப்பிற்கு அடுத்த கல்வி ஆண்டான 2005–2006இல் புதிய பாட நூல்கள் அறிமுகப் படுத்தப்பட உள்ளன. அடுத்த கல்வி ஆண்டுக்கான புதிய பாடநூல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

புதியதாக ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாக வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு பின் பாட நூல்கள் எழுதும் முறை இதுகாறும் கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த முறை மாநிலத்தில் உள்ள தலைசிறந்த கல்வியாளர்களைக் கொண்டு ஒவ்வொரு பாடத்திற்கும் பாட வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டு பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இப்பாடத் திட்டத்தினை இணையதளம் (http://www.tn.gov.in/school syllabus) மூலம் வெளியிடப்பட்டு கல்வியாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களது கருத்துகள் கேட்கப்பட்டது. இத்துடன் மாவட்டத்தில் இவர்களைக் கொண்டு சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டு பலதரப்பட்ட மக்களின் கருத்துகளும், ஆலோசனைகளும் பெறப்பட்டது. பெறப்பட்ட கருத்துகளையும் ஆலோசனைகளையும் பாட வல்லுநர்கள் குழு மீண்டும் பரிசீலனை செய்து பாடத்திட்டத்தை இறுதியாக்கியது. இப்பாடத் திட்டங்களின் அடிப்படையில் தலைசிறந்த பாடநூல் ஆசிரியர்களைக் கொண்டு பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன.

மாணவர்கள் புதிய பாடப் புத்தகங்கள் பெறுவதில் எவ்வித இடையூறும் இருக்கக் கூடாது என்பதற்காக இக்கல்வி ஆண்டில் இச்சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

திருத்தி அமைக்கப்பட்ட பாடத் திட்டத்தில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன. குறிப்பாக தற்கால தேவைக்கும் மற்றும் சில ஆண்டுகளுக்குபின் உலக அளவில்/தேசிய அளவில் ஏற்படும் மாற்றங்களையும் முன்னேற்ற உத்திகளையும் கருத்தில் கொண்டு பாடத்திட்டம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது. இப்பாடத் திட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் குறிப்பாக மேல்நிலைத் தேர்வினை முடிக்கும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் மருத்துவம்/பொறியியல்/மேலாண்மை தேர்வு போன்ற பாடப்பிரிவுகளில் நடத்தப்படும் பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்கு எளிதில் தங்களைத் தயார் செய்துகொள்ளும் வகையில் புதிய பாடத்திட்டம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் தற்போது கற்பித்து வரும் கல்வி முறைக்கு ஏற்ப இவ்வாண்டு முதல் மேல்நிலை வகுப்புகளுக்கு 5 புதிய பாடங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவை முறையே

| | |
|---|---|
| உயிர் வேதியியல் | Bio-Chemistry |
| நுண் உயிரியல் | Micro Biology |
| சத்துணவியல் | Nutrition and Dietetics |
| செவிலியியல் | Nursing |
| ஆங்கில தொடர்பியல் | English for communication |

இவை அனைத்தும் மாணவர்களின் வேலைவாய்ப்பு சார்ந்த உயர் கல்வியைப் பெறுவதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என கருதப்படுகிறது.

ஏற்கெனவே மேல்நிலை வகுப்புகளில் ஏராளமான பாடப்பிரிவுகள் இருந்தன. அவைகளைத் தற்கால நிலைமைக்கேற்ப, சீரமைத்து இன்றைய சூழ்நிலையில் மிக முக்கியமான இடத்தை வகித்து வரும்

பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் (Engineering and technology)

மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்வி (Medical and para-medical courses)

வணிகம் மற்றும் வணிகவியல் (Commerce and Business)

கலை பிரிவு (Humanities)

ஆகிய 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளிலும் 3 பாடங்கள் கட்டாயமானதாகவும் அந்தந்த பிரிவுகளில் விருப்பப் பாடங்களில் ஒரு பாடத்தை





4ஆவது இருக்கும் பாடமாகவும் ஒவ்வொரு மேல்நிலை வகுப்புப் படிக்கும் மாணவர்கள் பகுதி–3ன் கீழ் அவசியம் படிக்கக்கூடிய வகையில் கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

**பிரிவு–1**

1. கணிதம் (Mathematics) 2. இயற்பியல் (Physics) 3. வேதியியல் (Chemistry) 4. விருப்பப் பாடம் (Optional subject) உயிரியல் (Biology) கணினி அறிவியல் (Computer Science) புள்ளியியல் (Statistics) உயிர் வேதியியல் (Bio-chemistry) ஆங்கில தொடர்பியல் (English for communication) மனையியல் (Home Science)

**பிரிவு – 2**

1. கணிதம் (Mathematics) 2. இயற்பியல் (Physics) 3. உயிரியல் (Biology) 4. விருப்பப் பாடம் (Optional Subject) நுண் உயிரியல் (Micro biology) /உயிர் வேதியியல் (Bio-chemistry) செவிலியியல் (Nursing) / சத்துணவியல் (Nutrition and Dietetics) கணினி அறிவியல் (Computer Science) / ஆங்கில தொடர்பியல் (English for Communication)/ மனையியல் (Home Science)

**பிரிவு – 2 (ஏ)**

1. இயற்பியல் (Physics) 2.உயிரியல் (Biology) 3. தாவரவியல் (Botany) 4. விலங்கியல் (Zoology)

**பிரிவு – 3**

1. கணக்குப்பதிவியல் (Accountancy) 2. வணிகவியல் (Commerce) 3. பொருளாதாரம் (Economics) 4. விருப்பப்பாடம் (Optional Subject) வணிக கணக்கியல் (Business Mathematics) கணினி அறிவியல் (Computer Science) புள்ளியியல் (Statistics) ஆங்கில தொடர்பியல் (English for Communication) வரலாறு (History) அரசியல் அறிவியல் (Political Science) அறவியல் மற்றும் இந்தியப் பண்பாடு (Ethics and Indian Culture) சிறப்புத் தமிழ் (Advanced Tamil)

**பிரிவு – 4**

1. வரலாறு (History), 2. பொருளாதாரம் (Economics), 3. புவியியல் (Geography), 4. விருப்பப் பாடம் (Optional Subject), அரசியல் அறிவியல் (Political Science), கணினி அறிவியல் (Computer Science), புள்ளியியல் (Statistics), ஆங்கில தொடர்பியல் (English for Communication), அறவியல் மற்றும் இந்தியப் பண்பாடு (Ethics and Indian Culture), சிறப்புத் தமிழ் (Advanced Tamil).

தற்போது பகுதி 1ல் உள்ள தாய்மொழி/பிராந்திய மொழி மற்றும் பகுதி 2ல் படிக்கும் ஆங்கிலம் ஆகிய 2 மொழிப்பாடங்களும் 2 வினாத்தாள்களில் தற்போது தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது. இவற்றை ஒரே தாளாக இணைத்து தேர்வு நடத்திட முடிவு எடுக்கப் பட்டுள்ளது . ஆனால் இம்மொழி பாடங்களுக்கான பாட வேளைகளிலோ பாட பொருளிலோ (மொழிப் பாடங்கள்) சற்றும் குறைக்கப்படவில்லை.

ஒவ்வொரு பள்ளியிலும் நகர்ப்புறங்களில் (மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளி) உள்ள பள்ளிகளில் ஒவ்வொரு பிரிவிற்கும் குறைந்தபட்சம் 30 மாணவர்கள் இருக்க வேண்டும். கிராமபுறங்களில் தற்போது உள்ள குறைந்தப் பட்ச எண்ணிக்கையான 15 மாணவர்கள் இருத்தல் வேண்டும்.

இடைநிலை அளவில் கீழ்க்கண்ட மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

1. 9ஆம் வகுப்பில் ஆண்டிற்கு 50 மணி நேரம் கணினி அறிவியல் (Computer Science) கற்றுத் தரும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 2004–05ஆம் கல்வி ஆண்டிலிருந்து இத்திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.
2. 6–10ஆம் வகுப்புகளில் வாரத்திற்கு 1 பாட வேளை ஆங்கிலம் பேசும் திறனை (Skill of Spoken English) வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.
3. 9–10ஆம் வகுப்புகளுக்கு அறிவியல் பாடத்தில் செய்முறை (Practicals) அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.
4. எல்லா வகுப்புகளுக்கும் ஒரு கல்வி ஆண்டில் பள்ளி நடைபெறும் நாட்களில் குறைந்தது 180 நாட்களுக்கு கற்றல் கற்பித்தல் நாட்களாக (தேர்வு நாட்கள் நீங்கலாக) இருத்தல் வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
5. 6–12ஆம் வகுப்புகளுக்கு புதிய பாடத் திட்டத்தினை திறம்பட வகுப்பில் நடத்த ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி விரைவில் அளிக்க அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அரசு செய்திக் குறிப்பு**
**( 20– 5–2004)**

❖ ❖ ❖

# அரசு மருத்துவமனைகளில் புற நோயாளிகள் சீட்டுக் கட்டணம், பார்வையாளர்கள் கட்டணம் ரத்து

மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள்
உத்தரவு (2-6-2004)



தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அவற்றுடன் இணைக்கப் பட்ட மருத்துவ நிறுவனங்கள் மற்றும் அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றில் பார்வைநேரம் அல்லாத மற்ற நேரங்களில் நோயாளி களைக் காண வரும் பார்வையாளர்களிடமிருந்து நுழைவுக் கட்டணமாக ரூ.5 வசூல் செய்யப்படுகிறது. மேலும், சிறப்பு மருத்துவப் பிரிவுகளுக்கு வரும் நோயாளிகளுக்கு, புறநோயாளிகள் சீட்டு முதல் முறை வழங்கப்படும்போது, ரூ.5 கட்டணமாக விதிக்கப் படுகிறது. மேற்படி கட்டணங்கள் 30.11.2001 முதல் அமலில் இருந்து வருகின்றன.

இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை மருத்துவ மனைகளைத் தூய்மையாக வைக்கவும், நோயாளி களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரவும், அவ்வப்போது ஏற்படும் சிறு பழுதுகளைச் சரி செய்யவும் மற்றும் நோயாளிகள் பற்றிய பதிவேடுகளைப் பராமரிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனை வசதிகளைப் பயன்படுத்தும் ஏழை எளிய மக்கள் மேற்குறிப்பிட்ட கட்டணங்களை ரத்து செய்யக் கோரி வேண்டுகோள் விடுத்துள்ளனர். அரசு மருத்துவ வசதிகளைப் பயன்படுத்தும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி இன்று முதல் புற நோயாளி சீட்டுக் கட்டணம் மற்றும் பார்வை நேரம் அல்லாத மற்ற நேரங்களில் நோயாளிகளைக் காண்பதற்கான நுழைவுக் கட்டணம் ஆகியவற்றை ரத்து செய்து நான் உத்தரவிட்டுள்ளேன். எனவே, இன்று முதல் எந்த அரசு மருத்துவமனையிலும் புற நோயாளிகள் சீட்டுக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்; அதே போன்று நோயாளிகளைக் காண்பதற்காகப் பார்வையாளர்களிடமிருந்து எந்த விதமான கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




மேலே குறிப்பிட்ட கட்டணங்கள் நீக்கப்பட்டாலும், மருத்துவமனைகளைச் செம்மையாக பராமரிப் பதற்குத் தேவையான நிதி உதவிகள் அனைத்தையும் அரசே வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ★



# இடைநிலை, உடற்கல்வி, சிறப்பு ஆசிரியர் நியமன உச்ச வயது வரம்பு ரத்து

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு

கடந்த 2001ஆம் ஆண்டு மே திங்களில் எனது தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதும், அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட பல்வேறு தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து எதிர்காலமே கேள்விக்குறியாக அல்லல்பட்டுக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகளின் துயரைத் துடைக்கும் வகையில், பாதிக்கப்பட்ட அனைவரும் வயது வரம்பில்லாமல் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கப்படவும், அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் முறையான பயிற்சி அளிக்கவும் நான் ஆணையிட்டேன்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று தேர்வு பெற்ற பல்லாயிரக்கணக்கானோர் வேலைவாய்ப் பகங்களில் பதிவு செய்து இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்தை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் பெற்றிட அரசால் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பான 35 வயதை கடந்து விட்டதால், தங்களுக்கு இடை நிலை ஆசிரியர் பணி கிடைக்காது என்ற நிலையில் உள்ளனர் என்பதை நான் அறிந்தேன். **தகுதியும், வேலைவாய்ப்பக பதிவு மூப்பும் இருந்த போதிலும், 35 வயது கடந்து விட்டதன் காரணமாக இடைநிலை ஆசிரியர் பணி பெற இயலாமல் போய்விடக் கூடாது என்று கருதி, மனிதாபி மான அடிப்படையில் 35 வயது என்ற உச்ச வயது வரம்பை முற்றிலுமாக நீக்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.**

அரசு உயர்நிலைப்பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களாக பணி நியமனம் பெற்றிட அரசால் நிர்ணயிக்கப்பட்டிருந்த 35 வயது என்ற உச்ச வயது வரம்பினை நீக்கி 12.10.2001 அன்று நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன்.

இதே போன்று இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் பயிற்சி முடித்து வேலை இல்லாமல் இருப்பவர்களின் துயரைத் துடைக்க ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி, அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பு ஆசிரியர் நியமனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள உச்ச வயது வரம்பான 35 வயது என்பதை நீக்கம் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். **இதன் அடிப்படையில், அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் ஆசிரியர் பணி நியமனம் பெற்றிட வயது வரம்பு இனிமேல் கிடையாது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**



ஆசிரியர் பயிற்சியினை முடித்து, வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து 35 வயதைக் கடந்து காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கானோர் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பணி நியமனம் பெறும் வாய்ப்பை இதனால் பெறுவார்கள் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

• • •

## பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் ஆணை



"பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன், தமிழ்நாட்டிலுள்ள மாணவியர் கல்வி கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக, மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை 2001ஆம் ஆண்டு முதல் எனது தலைமையிலான தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

15.9.2001 அன்று என்னால் தொடங்கி வைக்கப் பட்ட இந்தத் திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த 1 இலட்சத்து 54 ஆயிரத்து 410 மாணவிகள் இதுவரை பயன் அடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 22 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. மேலும், இந்தஆண்டில் (2004–2005) 8 கோடி ரூபாய் செலவில் 50 ஆயிரத்து 500 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்படும்.

இந்த இலவச சைக்கிள் திட்டம், மாணவிகள் தங்களது பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கம் அளிப்பதுடன், சமுதாயத்தில் சுதந்திர மாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தருவதால், இந்தத் திட்டத்தை தற்போது மேலும் விரிவுபடுத்தி நான் உத்தரவிட்டுள்ளேன்.

**தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற அனைத்துப் பள்ளிகளிலும் மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவசமாக சைக்கிள் வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். 47 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

இந்தத் திட்டத்தின் மூலம் 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயின்று வரும் பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 2 இலட்சத்து 96 ஆயிரம் மாணவிகள் பயன்பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."





## 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ - மாணவியர் ஃபெயிலாகாமல் தேர்ச்சி



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 17.6.2004 அன்று தலைமைச் செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

அனைவருக்கும் கல்வி என்னும் கோட்பாட்டில் இந்த அரசு மிகுந்த முனைப்பு காட்டி வருகிறது. இளம் குழந்தைகள் மனதில் தேர்வு என்ற அச்சம் நீங்கி கல்வி கற்றலின் இனிமையை உணர்ந்து தொடர்ந்து கல்வி கற்பது மிகவும் அவசியம். மேலும் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் பள்ளிப்



படிப்பிலிருந்து பாதியில் நின்று விடுவதைத் தவிர்த்தால்தான், அனைவருக்கும் கல்வி என்ற நோக்கத்தை உறுதி செய்ய இயலும். இந்த நோக்கங்களை செயல்படுத்தும் வகையில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தேக்கமின்றி அதாவது ஃபெயில் ஆகாமல் தேர்ச்சி அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அமைச்சரவை முடிவு எடுத்தது. அதே நேரத்தில் கல்வியின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சரவை முடிவு எடுத்தது.

தமிழகத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் குறைந்தபட்சம் 75 விழுக்காடு வருகைப் பதிவு இருந்தால் தேக்கமின்றி அதாவது ஃபெயில் ஆகாமல் தேர்ச்சி வழங்கும் திட்டம் 2004–2005–ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

❖ ❖ ❖

## மணல் விலை குறைப்பு

**த**மிழகத்தில் ஆற்றுப் படுகைகளில் கட்டுப்பாடின்றி மணல் எடுப்பதை தடுத்து நிறுத்தவும், ஆற்றில் உள்ள மணல் அளவினைப் பாதுகாக்க வேண்டியும், ஆற்றினைப் பாதுகாக்கும் பொதுப்பணித்துறையே மணல் குவாரிகளை ஏற்று நடத்த வேண்டுமென அரசு கொள்கை முடிவு எடுத்து, அதன் அடிப்படையில் 2.10.2003 முதல் இது நடைமுறையில் இருந்து வருகிறது. இதன்படி, மணல் லாரி லோடு ஒன்றுக்கு டிப்போவில் (Ex-depot) ரூ.1,000/– என்று விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கட்டுமானச் செலவை கட்டுப்படுத்தி குறைத்திடும் வகையில், அரசு விற்பனை செய்யும் மணலின் விலையை குறைக்க வேண்டும் என்று பொதுமக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். **இந்த கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அமைச்சரவை ஆய்ந்து பரிசீலித்தது. ஒரு லாரி லோடு மணலின் விலையை ரூ.1,000/–த்திலிருந்து, ரூ.600/–ஆக குறைத்து நிர்ணயம் செய்யலாம் என்று அமைச்சரவை முடிவெடுத்தது. இந்த விலை குறைப்பு 19.6.2004 முதல் செயல்படுத்தப்படும்.**

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினச் செய்தி



**இந்தியத் திருநாட்டின் எதிர்காலம் இன்றைய**
**குழந்தைகளிடம் இருக்கிறது;**
**குழந்தைகளின் நலத்தில் இருக்கிறது;**
**உடல் பலத்தில் இருக்கிறது;**
**அறிவில் இருக்கிறது.**
**அவர்களின் ஆற்றலில் இருக்கிறது!**
**கல்வி அவர்களது உரிமை;**
**அதை வழங்க வேண்டியது சமூகத்தின் கடமை!**
**ஆனால் பிஞ்சுப் பருவத்திலேயே வேலை செய்து**
**சம்பாதிக்க வேண்டிய நிலைமையில்**
**சில குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது ஒரு**
**சமூகக் கொடுமை.**
**இந்தக் கொடுமையிலிருந்து**
**குழந்தைகளை மீட்பது நமது கடமை!**

நாளைய தலைவர்களாய் நாட்டை வழி நடத்திட இருக்கும் இன்றைய குழந்தைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தி வரும் எனது அரசு, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கப் பல்வேறு நடவடிக் கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக ஆக்குவதற்கான என்னுடைய அரசின் 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. 12.5.2003 அன்று இதற்கான செயல் திட்டம் ஒன்று என் ஆணையின் பேரில் வெளியிடப்பட்டது. ஆக்கப்பூர்வமான இந்தச் செயல் திட்டத்தின்படி அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை 2005–ஆம் ஆண்டிற்குள்ளும், அபாயகரமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை 2007–ஆம் ஆண்டிற்குள்ளும் முற்றிலுமாக அகற்றுவதற்காக என்னுடைய அரசு 1.25 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி ஆணையிட்டுள்ளது.

ஜுன் 12–ஆம் தேதி உலகம் எங்கும் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக சர்வதேசத் தொழிலாளர் அமைப்பால் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளினைக் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாளாக தமிழகம் முழுவதும் அனுசரிக்க எனது அரசு உத்தரவிட்டுள்ளது.

14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு நிறுவனமும் உணர வேண்டும். அவ்வாறு உணர்வதோடு குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்னும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்! பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடாது.




குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்ற முடிவெடுப்போம்!

குழந்தைத் தொழிலாளரே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்குவோம்!

இந்த இலட்சிய நிலையை அடைய அனைவருடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன்.

❖ ❖ ❖



**மா**ண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் அடிப்படையில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக்குவதற்கான 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. இந்த குறிக்கோளை அடைவதற்காக அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை 2005ஆம் ஆண்டுக்குள்ளும் அபாயகரமற்ற பணிகளில் உள்ள குழந்தைத் தொழிலுாளர் முறையை 2007ஆம் ஆண்டுக்குள்ளும் ஒழிப்பதற்கான செயல்திட்டத்தினை மாநில அரசு உருவாக்கியுள்ளது.

சமுதாயத்தின் பங்கேற்புடன் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக பரவலான விழிப்புணர்வை ஏற்படுத்துவது இச்செயல்திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.




குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை ஒவ்வொரு வருடமும் கடைபிடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஒவ்வொரு வருடமும் ஜுன் 12ஆம் தேதியினை குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கின்றது. அனைத்துத் துறையினரின் ஒத்துழைப்புடனும், மக்கள் பிரதி நிதிகளுடனும் அரசு சாரா நிறுவனங்களுடனும், நிருவாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும், ஊராட்சி மற்றும் நகரமன்றத்தலைவர்களுடனும் இணைந்து மாவட்ட ஆட்சியர்கள் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்தும், தமிழக அரசு இப்பிரச்சினையை தீர்ப்பதில் உள்ள தீவிரம் குறித்து விளக்குவதற்காக குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பதற்காக ஜுன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**திரு. எம். சாய்குமார், இ.ஆ.ப.,**
**ஆணையர்,**
**தொழிலாளர் துறை, சென்னை**

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கத்தின் சார்பாக 9.6.2004 முதல் 12.6.2004 வரை நான்கு நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

9.6.2004 அன்று தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு சென்னை ஆஷா நிவாஸ் கருத்தரங்கு கூடத்தில் குழந்தைத் தொழிலாளர் குறித்த பயிலரங்கம் நடைபெற்றது.

10.6.2004 அன்று சென்னை புரசை வாக்கத்தில் உள்ள மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சுற்றுச் சுவரில், குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து மீட்கப்பட்டு தற்போது கல்வி பயின்றுவரும் 30–ற்கும் மேற்பட்ட குழந்தைகள், குழந்தைகளின் உரிமைகள் குறித்து கருத்தோவியம் தீட்டினர். இக்கருத்தோவியம் மூலம் குழந்தைகள் தங்களின் எதிர்கால கனவுகளையும் உள்ள வெளிப்பாடுகளையும் அருமையான ஓவியங்களாக தீட்டியிருந்தது காண்போர் அனைவரையும் வியக்க வைத்தது.

பின்னர் 11.6.04 அன்று வீட்டு வேலைகளில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர் குறித்த கருத்தரங்கு ஆஷா நிவாஸ் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு தொண்டு நிறுவன உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை எடுத்துக் கூறினர். மேலும் அனைத்து அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

12.6.2004 அன்று சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள இராஜாஜி மண்டபத்தில், குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின பொதுக்கூட்டம் **மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் தலைமையில்** நடைபெற்றது. இப்பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கூடுதல் தொழிலாளர் ஆணையர் டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். தொழிலாளர் ஆணையர் திரு. எம்.சாய்குமார், இ.ஆ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, முதன்மைச் செயலர்

திரு. எம்.பி.பிரானேஷ்,இ.ஆ.ப., அவர்கள் குழந்தைத் தொழிலாளர் இணையதளத்தைத் தொடக்கி வைத்து முக்கிய உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் குருத்து என்ற தமிழ் இதழை வெளியிட்டு தனது தலைமையுரையில்,

"ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டிலுள்ள குழந்தைகளின் நிலையோடு பின்னிப் பிணைந்ததாகும். சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு குழந்தைப் பருவமே ஆதாரமாகவும் வரையறையாகவும் உள்ளது. குழந்தைகளுக்கு அவர்களது இளம் பருவத்தில் சமூக, பொருளாதார, உடல் மற்றும் மனரீதியான உரிமைகள் மறுக்கப்படும் போது ஒரு தேசம், தனது சமூக வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், ஒழுங்கு மற்றும் அமைதி, சமூகத்தின் சமச்சீர்த்தன்மை மற்றும் நல்ல குடிமகனை உருவாக்கும் ஆற்றல் மிக்க மனித வளத்தை இழந்துவிடும். இதனை கருத்தில் கொண்டே நமது **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் சிறந்த மாநிலமாக உருவாக்க தீட்டிய 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதலையும் ஒரு திட்டமாக சேர்த்துள்ளார்கள். அதோடு மட்டுமல்லாது இக்குழந்தைத் தொழிலாளர் முறையை தமிழ்நாட்டிலிருந்தே முற்றிலும் அகற்றி மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சியையும் திறமையான மனித ஆற்றலையும் உருவாக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செயல்திட்டத்தினை கொடுத்துள்ளார்கள்.** அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையை 2005-ம் ஆண்டுக்குள்ளாகவும் அபாயகரமற்ற தொழில்களில் இம்முறையை 2007-ஆம் ஆண்டுக்குள்ளாகவும் மாநிலத்திலிருந்து முற்றிலும் அகற்றுவதே இச்செயல் திட்டத்தின் நோக்கமாகும்.

முதலில் கணக்கெடுப்பு நடத்தி குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிதல், குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களை சிறப்புப் பள்ளிகளிலும் முறையான பள்ளிகளிலும் சேர்த்தல், 5 முதல் 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க இயக்கம் நடத்துதல், 14 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு செயல் திறன் பயிற்சி அளித்தல், குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பங்களில் வருமானம் பெருக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகிய வழிமுறைகள் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் எட்டப்படும். மேலும், குழந்தைத் தொழிலாளர் முறையை தடுக்கும் சட்டங்களை தீவிரமாக செயல் படுத்துதல், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக கூட்டங்கள், பேரணி, கருத்தரங்கு, பயிற்சி முகாம்கள், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய முறைகள் மூலமும் இத்திட்டத்தின் நோக்கம் எட்டப்படுகிறது. அத்துடன் குழந்தைத் தொழிலாளர்களே இல்லாத பஞ்சாயத்து, பேரூராட்சி ஆகியவற்றிற்கு வெகுமதி அளித்து ஊக்கப்படுத்தும் திட்டமும் உள்ளது.

இந்த குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும் திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்திற்கு மாநில அரசு 1.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதற்கட்டமாக 2003-04-ஆம் ஆண்டிற்கு ரூ.25 இலட்சம் அனுமதித்துள்ளது. மாநில அளவில் இத்திட்டத்தை செயல்படுத்த மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாநில அளவில் கண்காணிக்க அரசு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் மாநில ஆணைக்குழு (State Authority on Eradication of Child Labour) ஒன்று செயல்படுகிறது. இந்த குழு நடத்திய கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தையும் குழந்தைத் தொழிலாளர்களற்ற மாவட்டமாக அறிவிக்க காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்தி தங்களது மாவட்டத்தை குழந்தைத் தொழிலாளர்களற்ற மாவட்டமாக அறிவிக்க





உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதன் விளைவாக இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கடலூர் ஆகிய மாவட்ட ஆட்சியர்கள் தங்களது மாவட்டங்களை குழந்தைத் தொழிலாளர்களற்ற மாவட்டங்களாக அறிவிப்பதற்கு பிரேரணை அனுப்பி உள்ளார்கள். இப்பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மூலம் தமிழகத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 70,344 குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கு தமிழக அரசின் செயல் திட்டங்கள் ஒருபுறம் இருக்கையில் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு சிறப்பு பள்ளி நடத்துதல், தொழிற்பயிற்சி வழங்குதல், மற்றும் சிறப்புப் பள்ளிகளிலிருந்து குழந்தைகளை முறையான பள்ளிகளில் மாற்றுவதற்கு தமிழ்நாட்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் (NCLP) என்ற ஒரு திட்டம் தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், தருமபுரி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. இவற்றில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டத்திற்கு மாற்றப்படவுள்ளது. அத்துடன் சென்னை மற்றும் ஈரோடு மாவட்டங்களிலும் இவ்வாண்டில் இத்திட்டம் செயல்படவுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசால் நேரடியாக நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தற்பொழுது 484 சிறப்புப் பள்ளிகளில் 20,330 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பயின்று வருகிறார்கள். இப்பள்ளிகளில் பயின்று வரும் குழந்தைகளுக்கு சத்துணவு, இலவச பஸ் பாஸ், சீருடைகள் மற்றும் ஊக்கத்தொகை மாதந்தோறும் ரூபாய் 100 வழங்கப்படுகிறது.

இது தவிர, இண்டஸ் பிராஜக்ட் என்னும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத்திட்டமும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, இந்தியாவில் கொடுமையான முறையில் குழந்தைத் தொழிலாளர் பணிபுரியும் 20 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து அம்மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதற்கு இந்திய அரசின் தொழிலாளர் துறையும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தொழிலாளர் துறையும் சேர்ந்து ஆகஸ்ட் 2000-ல் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்தான கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்டன. இதன் விளைவாக, இண்டஸ் பிராஜக்ட் எனப்படும் இந்திய அமெரிக்க கூட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 5 வயது முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல், 9 வயது முதல் 13 வயது வரையிலான குழந்தைகளுக்கு இடைக்கால கல்வி மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் 14 முதல் 17 வரையிலான குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சி அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இதற்கான நிதியை இந்திய அரசும், அமெரிக்க அரசும் வழங்கி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

ஜூன் 12ஆம் தேதியானது குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும் இத்தினத்தை ஒவ்வொரு ஆண்டும் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலே முதன்முறையாக ஒரு மாநிலத்தில் இந்த நாளில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் அனுசரிக்க அரசால் ஆணையிடப் பட்டுள்ளது என்று சொல்லிக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஜூன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினமாக அனுசரிப்பதின் ஒரு பகுதியாக சென்னையில் தொழிலாளர் துறை பயிலரங்கம், கருத்தரங்கம் மற்றும் குழந்தைகள் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து சிறப்புற நடத்தி வருகிறது. மாவட்ட தலைநகரங்களிலும் இதே மாதிரி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களுக்கு குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாது, அவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினப் பொதுக் கூட்டத்தில் முக்கியமான இரண்டு அம்சங்கள் நடந்தேறியுள்ளது. **முதலாவது, குழந்தைத் தொழிலாளர்களுக்கென்று தனியே இணையத்தளம் ஒன்றினை நமது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மைச் செயலர் வெளியிட்டுள்ளார். இதனால் குழந்தைத் தொழிலாளர் குறித்த செய்திகள், புள்ளிவிவரங்கள், கருத்துகள் மற்றும் அரசின் திட்டங்கள் ஆகியவற்றை இனி யார் வேண்டுமானாலும் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது தற்போது நிகழ்ந்த குருத்து எனப்படும் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு பத்திரிக்கை வெளியீடாகும்.** இந்த குருத்து பத்திரிக்கையின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கருத்துகள், அரசின் திட்டங்கள், சட்டங்கள், ஆகியவற்றை அனைவரும் படித்து

பயன்பெறலாம். பொதுமக்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும் இப்பத்திரிக்கையில் வெளியிடப்படும் என்பதை இந்த இனிய நேரத்தில் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.




இந்தக் கூட்டம் முடிந்தபின் அனைவரும் கண்டுகளித்து மகிழ்ச்சி அடையும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. அவை, வேலையிலிருந்து மீட்கப்பட்ட தொண்டு நிறுவனப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் கலை நிகழ்ச்சியும், ஓவிய நிகழ்ச்சியும் ஆகும். இந்நிகழ்ச்சிகளில் குழந்தைகள் தங்களது உரிமைகள் குறித்த எண்ணங்களை வெளிப் படுத்த உள்ளனர். அவர்களுக்கு எனது மனங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**குழந்தைகளின் மேல் பேரன்பு கொண்டுள்ள மாண்புமிகு நமது தமிழக முதலமைச்சர் அவர்களும் தமது குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தினச் செய்தியில் கல்வி கற்பது குழந்தைகளின் உரிமையென்றும், அதை வழங்க வேண்டியது சமூகத்தின் கடமையென்றும் பிஞ்சுப் பருவத்திலேயே வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய நிலையில் சில குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது ஒரு சமூகக் கொடுமை, இந்தக் கொடுமையிலிருந்து குழந்தைகளை மீட்பது நமது கடமையென்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.** மேலும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாதென்பதை ஒவ்வொரு தனி மனிதனும் ஒவ்வொரு நிறுவனமும் உணர்ந்து குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாதெனும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்றும் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடாதென்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக அரசும், அரசு அதிகாரிகளும், தொண்டு நிறுவனங்களும், தொழிற் சங்க மற்றும் வேலையளிப்போர் பிரதி நிதிகளும் கைகோர்த்து பணியாற்றும் இந்த நல்ல சூழ்நிலையில் தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் செயல்திட்டத்தின் படி அனைத்து வகையான தொழில்களிலும் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை என்ற நிலை ஏற்படப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை என்று நான் பெரிதும் நம்புகிறேன். இந்த குறிக்கோளை எட்ட நாம் அனைவரும் உறுதியுடன் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரிய வாய்ப்பை நல்கிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்கள்.




இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவருக்கும் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் திரு. இரா. திருவேங்கடம் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

❖ ❖ ❖






ஒளிரும் சூரிய வட்டத்தின் ஊடாக வெள்ளிக் கோள் நகர்ந்து செல்லக் காண்பதையே வெள்ளிக் கோளின் சூரியக் கடப்பு என்கிறோம். அந்த நேரத்தில் ஒரு சிறிய புள்ளி சூரியனின் முன்பாக ஊர்ந்து செல்வது போல வெள்ளிக் கோளைக் காணலாம். புதன் மற்றும் வெள்ளிக் கோள்களின் சுற்றுப் பாதைகள் புவியின் சுற்றுப் பாதையின் உட்புறமாக அமைந்துள்ளன. எனவே, இவ்விரண்டு கோள்கள் மட்டுமே சூரியனுக்கும் புவிக்கும் இடையே வர இயலும். சூரியக் கடப்பு என்பது அரிய வானவியல் நிகழ்வாகும். வெள்ளியின் சூரியக் கடப்பு, புதன் கோளின் சூரியக் கடப்பு நிகழ்வை விட மிகவும் அரியதாகும். சராசரியாக ஒரு நூற்றாண்டில் 13 முறை புதன் கோளின் சூரியக் கடப்பு நிகழும். ஆனால், வெள்ளியின் சூரியக் கடப்போ 243 ஆண்டுகளுக்கு நான்கு முறையே நிகழ்கிறது. இவை இரட்டையாக, அதாவது எட்டு ஆண்டு இடைவெளியில் அமைந்த இரட்டை நிகழ்வுகளாக நிகழும். இந்த இரட்டை நிகழ்வுகளுக்கிடைப்பட்ட காலம் ஒரு நூற்றாண்டிற்கும் மேற்பட்டதாகும்.

### 2004–ஆம் ஆண்டில் வெள்ளியின் சூரியக் கடப்பு

அரிய நிகழ்வான வெள்ளியின் சூரியக் கடப்பு 2004 ஜூன் 8–ஆம் நாள் நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்த சூரியக்கடப்புகள் 2012 ஜூன் 6–ஆம் நாளும், அதன் பின்னர் 2117 டிசம்பர் மற்றும் 2125 டிசம்பரிலும் நிகழும். இதற்கு முன்னர் 1882–ஆம் ஆண்டு வெள்ளியின் சூரியக் கடப்பு நிகழ்ந்தது. முதன் முதலில் சூரியக் கடப்பு நிகழ்ச்சியை ஆய்வு செய்தது 1639–இல் ஜெரெமியா ஹாரக்ஸ் என்பவராவார். இது தொலைநோக்கி கண்டு பிடிக்கப்பட்ட காலக்கட்டத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். அதன் பின்னர் 1761, 1769, 1874 மற்றும் 1882–இல் வெள்ளியின் சூரியக் கடப்புகள் காணப்பட்டன. 1761–லிலும், 1874–லிலும் நிகழ்ந்த சூரியக் கடப்புகள் முழுமையாக இந்தியாவில் தெரிந்தன. 2004–இல் நிகழ்ந்த சூரியக் கடப்பும் இந்தியா முழுவதும் தெரிந்தது. பின்னர் மீண்டும் முழுமையான வெள்ளியின் சூரியக் கடப்பு 2255 ஜூன் 9–இல் தான் இந்தியாவில் தெரியும்.

### சூரியக் கடப்பு இடைவெளி

வெள்ளியின் சூரியக் கடப்பு நிகழ்வுகள் ஒரு குறிப்பிட்ட கால அளவு இடைவெளிகளில் நிகழுகின்றன. கடைசியாக 1882–இல் இது நிகழ்ந்தது. அதன்பின் 121½ ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் 2004 ஜூன் மாதத்தில் நிகழ்ந்துள்ளது. பின்னர் எட்டு ஆண்டுகளுக்குப்பின் 2012 ஜூனில் வெள்ளியின் சூரியக் கடப்பு நிகழும். எட்டு ஆண்டு இடைவெளியில் நிகழும் இது போன்றதொரு இரட்டை நிகழ்வு மீண்டும் 105½ ஆண்டுகளுக்குப்பின் 2117, 2125 ஆண்டுகளில் டிசம்பர் மாதத்தில் நிகழும். இது போன்ற மாறுபட்ட கால இடைவெளிக்குக் காரணம் பூமியின் சுற்றுப் பாதையுள்ள தளமும், வெள்ளியின் சுற்றுப் பாதையின் தளமும் சுமார் 3.4 டிகிரி சாய்ந்திருப்பதுதான். சூரியனைச் சுற்றி வரும் பூமியின் சுழல் வேகத்தைவிட வெள்ளியின் வேகம் அதிகமானது. பூமி சூரியனைச் சுற்ற 365.25 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. ஆனால், வெள்ளியோ 224.7 பூமி நாட்களில் சூரியனைச் சுற்றி வந்துவிடுகிறது.

இந்த வேறுபாடு காரணமாக வெள்ளி பூமிக்கும், சூரியனுக்குமிடைப்பட்ட பகுதியை 1.6 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடந்து செல்கிறது என்றபோதும் இவ்விரு கோள்களின் சுற்றுத் தளங்களுக்கிடைப்பட்ட 3.4 டிகிரி கோண வேறுபாட்டின் காரணமாக வெள்ளியானது சூரியனுக்கு வடக்கிலோ, தெற்கிலோ கடந்து சென்று விடுவதால் சூரியக் கடப்பு நிகழ்வு ஏற்படுவதில்லை என்றபோதும் வெள்ளிக் கோளின் சுற்றுப் பாதை பூமியின் சுற்றுப் பாதையுள்ள தளத்தை கடக்கும் இரு புள்ளிகளுக்கு அருகே சூரியன் மற்றும் பூமியை இணைக்கும் கோட்டை வெள்ளி கடந்து சென்றால் சூரியக் கடப்பு நிகழ்வை நாம் காணலாம்.

வெள்ளிக் கோள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது பூமியின் சுற்றுத் தளத்தைக் கடக்கும் புள்ளி மேல் நோக்கு புள்ளி (ascending node) என்றும், தெற்கு நோக்கிச் செல்லும்போது கடக்கும் புள்ளி கீழ் நோக்கு புள்ளி (descending node) என்றும் வழங்கப்படுகிறது. 2004–இல் நிகழ்ந்த மற்றும் 2012–இல் நிகழும் சூரியக் கடப்புகள் கீழ்நோக்கு புள்ளியின் அருகே அமையும். இதற்குமுன் 1874, 1882–இல் நிகழ்ந்தவை மேல்நோக்கு புள்ளியின் அருகே நிகழ்ந்த வெள்ளியின் சூரியக் கடப்புகள். இவ்வாறு சுமாராக நூற்றாண்டு இடைவெளியில் நிகழும் சூரியக் கடப்பு இணைகள் பொதுவாக வேறுபட்ட மேல்நோக்கு அல்லது கீழ்நோக்கு புள்ளிகளின் அருகே நிகழ்கின்றன.



## வெள்ளியின் சூரியக் கடப்பைக் காணக்கூடிய பகுதிகள்

2004 ஜூன் 8–ஆம் நாள் வெள்ளியின் சூரியக் கடப்பை இந்தியா, ஐரோப்பா, மத்தியக் கிழக்கு நாடுகள், ஆசியாவின் பெரும்பாலான பிற பகுதிகள், ஆப்பிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் முழுமையாகக் காண முடிந்தது.

சென்னை மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் காலை சுமார் 10.45 மணி முதல் மாலை 4.51 மணி வரை இந்த அரிய நிகழ்வைக் காண முடிந்தது. தொலைநோக்கிகள் கொண்டு உருப்பெருக்கி சூரியனின் பிம்பத்தை வெண்திரையில் விழச் செய்து பார்க்கையில், சூரியனின் குறுக்கே கருப்புப் புள்ளி போன்ற தோற்றத்துடன் வெள்ளிக் கோள் கிழக்கிலிருந்து மேற்காகக் கடந்து சென்றதைக் காண முடிந்தது. அந்த நேரத்தில் சூரியனின் பரப்பில் சூரியக் கரும்புள்ளிகளும் இருந்தது. கருநிறமாகத் தோற்ற மளிக்கும் வெள்ளியுடன் ஒப்பிடுகையில் சூரியப் புள்ளிகள் சற்று ஒளியுடன் இருப்பதைக் காணமுடிந்தது. மேல்நோக்கு புள்ளியில் நிகழும் ஒரு வெள்ளியின் சூரியக் கடப்பு நிகழ்வை ஆதாரமாகக் கொண்டு அந்த நேரத்தை "O" எனக்கொள்வோம்.

பின்னர் மீண்டும் அது போன்ற சூரியக் கடப்பு நிகழ பூமியும், வெள்ளியும் முழுமையான சுற்றுக்களை முடிக்க வேண்டும். இந்தச் சுற்றுக்களின் எண்ணிக்கையை N (பூமி) மற்றும் n (வெள்ளி) எனக் கொண்டால் வெள்ளியின் மேல்நோக்கு சூரியக் கடப்பு நிகழ கீழ்க் காணும் சமன்பாடு சமன்பெற வேண்டும்.

$$365.25N = 224.7n$$

அதுபோல அரைச் சுற்றுக்குப் பின் வெள்ளி பூமியின் சுற்று தளத்தை மீண்டும் கடப்பதால் கீழ்நோக்கு சூரியக் கடப்பு நிகழ கீழ்க்காணும் சமன்பாடு சமன்பெற வேண்டும்.

$$365.25(N+\tfrac{1}{2}) = 224.7(n+\tfrac{1}{2})$$

இவ்விரு சமன்பாடுகளில் ஒன்று கீழ்க்காணும் ஆண்டுகளுக்கு (N) சற்றேறக்குறைய சமன்படும். அவையாவன 0,8,113.5, 121.5, 235, 243. 243 ஆண்டுகளுக்குப் பின் இதே இடைவெளி வடிவம் மீண்டும் துவங்குகிறது.

## இந்நிகழ்வின் அறிவியல் முக்கியத்துவமும் வரலாற்றுப் பின்னணியும்

17–ஆம் நூற்றாண்டில் கெப்ளரது கோள்களின் விதிகள் மற்றும் நியூட்டனின் இயக்க விதிகளைப் பயன்படுத்தி சூரியக் குடும்பத்தின் அளவினை 'வானவியல் அலகின்' வாயிலாகக் கணித்தனர். வானவியல் அலகு (Astronomical Unit or A.U.) என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட சராசரி தொலைவாகும். மேற்கூறிய விதிகள் சூரியக் குடும்பத்தின் கோள்களின் தொலைவை வானவியல் அலகில் கணித்தன. ஆனால் வானவியல் அலகு என்பதன் அளவைக் கணிக்க இயலவில்லை. 18–ஆம் நூற்றாண்டில் இந்த அளவைத் துல்லியமாகக் கண்டறிய கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அலகில் ஏதேனும் தவறு நேரிட்டால், பேரண்டத்தின் அளவைக் கணிக்கையில் அந்தத் தவறு பல்கிப் பெருகிவிடும் அச்சம் இருந்தது.

**17–ஆம் நூற்றாண்டில் வெள்ளி மற்றும் புதன் கோள்கள் 1631–ஆம் ஆண்டில் சூரிய வட்டைக் கடப்பதைக் காண இயலும் என கெப்ளர் கணித்தறிந்தார். எனினும் 1631–இல் நிகழ்ந்த வெள்ளியின் சூரியக் கடப்பு ஐரோப்பிய நாடுகளில் புலப்படாத காரணத்தால் யாரும் அதனைக் காணவில்லை. பின்னர் ஜெரேமியா ஹாரக்ஸ் எனும் இளம் ஆங்கிலேயர் 1639–இல் மீண்டும் ஒரு முறை வெள்ளியின் சூரியக் கடப்பு நிகழும் எனக் கணித்தார். அதனை உடனடியாக உலகிற்குத் தெரிவிக்க இயலாததால் அவரும் அவரது நண்பரான வில்லியம் கிராப்ட்ரீ என்பவரும் மட்டுமே 1639–இல் வெள்ளியின் சூரியக் கடப்பினைக் கண்ணுற்றனர். இதன் மூலம் வெள்ளிக்கோளின் சூரியக் கடப்பினை முதன் முதலில் பார்த்தவர்கள் எனும் வரலாற்றுச் சிறப்பை இவர்கள் பெற்றனர். பின்னர் 1677–இல் புதன் கோளின் சூரியக் கடப்பை எட்மண்ட் ஹாலி கண்டார். இதன் மூலம், வெள்ளிக் கோளின் சூரியக் கடப்பின் உதவி கொண்டு பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தொலைவைக் கண்டறிய முடியும் என்று உணர்ந்தார். பூமியின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெள்ளியின் சூரியக் கடப்பை ஆய்வு செய்து வெள்ளியின் கோண மாற்றத்தை (Parallax) அளப்பதன் மூலம் வானவியல் அலகின் அளவைக் கண்டறியும் முறையையும் அவர் வகுத்தார். இதன் பின்னர் 1761, 1769, 1874 மற்றும் 1882–இல் நிகழ்ந்த வெள்ளியின் சூரியக் கடப்பின்போது உலகெங்கும் வானவியல் அலகின் அளவைக் காணும் பெருமுயற்சி வானவியலாளர்களின் ஒன்றிணைந்த உழைப்பால் நிகழ்ந்தது.**

### கருந்துளி விளைவு

வெள்ளியின் சூரியக் கடப்பைப் பயன்படுத்தி வானவியல் அலகைக் கண்டறியும் முயற்சியால் மிகவும்



முக்கியமான பகுதி வெள்ளிக்கோள் சூரிய வட்டினுக்குள் முழுமையாகச் சென்றடையும் நேரத்தைக் கண்டறிவதாகும். இதனை இரண்டாம் தொடுநிலை (II contact) அல்லது (Interior Ingress) என்பர்.

பூமியிலிருந்து தொலைநோக்கி மூலம் இந்த நிகழ்வை ஆராயும் போது இந்தக் கட்டத்தைக் கடந்து சற்று உட்புறமாக வெள்ளிக் கோள் நகர்ந்த பின்னரும் சூரிய வட்டின் விளிம்புடன் கரிய இணைப்பு ஒன்று தோன்றி ஒரு கருப்புத் திரவத் துளி போன்ற தோற்றத்தை உருவாக்கியது. இதனை கருந்துளி விளைவு (black drop effect) என்பர்.

நாம் காணும் சூரியவட்டின் ஓரத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் சூரியனின் வளிமண்டலத்தில் அதிக தொலைவு பயணம் செய்வதால் ஏற்படும் சூரிய விளிம்புக் கருமையும் (limb darkening) பூமியின் வளி மண்டல மாற்றங்களால் தோன்றும் ஒளிவிலகல் விளைவும்



இணைந்து கருந்துளி விளைவைத் தோற்றுவிக்கின்றன. இந்த விளைவின் காரணமாக சூரிய வட்டினுள் மிகச் சரியாக எந்த நேரத்தில் வெள்ளிக்கோள் நுழைந்தது என்பதனைக் கண்டறிவதில் பிழை நேரிட்டது. இதன் காரணமாக வானவியல் அலகைத் துல்லியமாகக் கண்டறிய முடியவில்லை.

1882–ஆம் ஆண்டு நிகழ்ந்த வெள்ளியின் சூரியக் கடப்பின் போது பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு சைமன் நியூகோம்ப் என்பவர், வானவியல் அலகு என்பது 149.59±0.31 மில்லியன் கிலோ மீட்டர் எனக் கணித்தார்.

என்றபோதும் சுமார் மூன்று இலட்சம் கிலோ மீட்டர் அளவுக்கு இந்த அளவில் தவறிருக்க வாய்ப்பு உள்ளதாகக் கருதப்பட்டது. ரேடார் அலைகளை சூரியனுக்கு செலுத்தி, அவை சென்று திரும்பும் நேரத்தைக் கணித்து தற்காலத்தில் சூரியனின் தொலைவு கணக்கிடப்படுகிறது. இதன்படி சூரியன் தொலைவு 149, 597, 870.691±0.030 கிலோ மீட்டர் என்று அறியப்பட்டது. இதில் வேறுபாடு 30 மீட்டர் அளவேயிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. என்றபோதும் ரேடார் தொழில்நுட்பம் இல்லாத அக்காலத்தில் வெள்ளியின் சூரியக் கடப்பின் மூலம் நம் முன்னோர்கள் சூரியனின் தொலைவைக் கண்டறிந்த கடும் முயற்சி இணையற்றது. இன்றும் பள்ளிக் குழந்தைகள் உதவியுடன் சூரியனின் தொலைவு காணும் முயற்சி 2004–ஆம் ஆண்டில் சூரியக் கடப்பின்போது பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்கள், வெள்ளி, சூரியன், கோள்களின் இயக்கம், கணிதம் போன்ற பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்றனர்.

### கண் பாதுகாப்பு

சூரியனை வெறும் கண்களால் பார்ப்பது மிகவும் ஆபத்தானது. மேலும் எக்காரணத்தைக் கொண்டும், தொலை நோக்கி அல்லது பைனாகுலர் மூலமோ அல்லது எந்த உருப்பெருக்கு கருவியைக் கொண்டோ சூரியனை நேரடியாகப் பார்க்கக் கூடாது. அப்படிச் செய்தால் கண் பார்வையை இழக்க நேரிடும். சூரியனைக் காண எளிய ஒரு வழி சூரியனின் பிம்பத்தை ஒரு வெண்திரையில் விழச் செய்து பார்ப்பதாகும். ஒரு சிறிய 5 மில்லி மீட்டர் அளவிலான துளையை ஒரு அட்டையில் ஏற்படுத்தி அதன் வழியே ஒரு கண்ணாடியின் உதவி கொண்டு சூரிய ஒளியைப் பாய்ச்சினால் அட்டையின் மறுபக்கத்தில் சற்று தூரத்தில் சூரியனின் பிம்பம் உருவாகும். அங்கு ஒரு வெண்ணிற அட்டையைப் பயன்படுத்தி சூரியனின் பிம்பத்தைக் காணலாம். இதில் ஒரு சிறு புள்ளிபோல வெள்ளிக்கோள் நகர்வதைக் காணலாம்.

ஒரு சிறிய கண்ணாடியில் சிறு துளையிட்ட அட்டையை ஒட்டி சூரியனின் பிம்பத்தை அந்தத்துளை வழியே ஒரு இருண்ட அறையில் அமைந்த வெண்திரையில் பாய்ச்சியும் காணலாம். தொலைநோக்கி அல்லது பைனாகுலரின் வழியே வெளிவரும் சூரியனின் பிம்பத்தை திரையில் விழச் செய்தும் காணலாம். பற்ற வைப்பவர்கள் பயன்படுத்தும் 14–ஆம் எண் (Welders glass shade No.14) ஒளி வடிகட்டி கொண்டும் சூரியனைக் காணலாம். எனினும் ஒளிவடிகட்டிகளில் கீறல்களோ, துளைகளோ இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் பி.எம்.பிர்லா கோளரங்கத்தில் 2004 ஜூன் மாதம் 8–ஆம் நாள் பொது மக்கள் வெள்ளிக் கோளின் சூரியக் கடப்பினைப் பாதுகாப்பாகக் காண தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு 8 தொலைநோக்கிகள் வாயிலாக சூரியனின் பிம்பத்தைத் திரையில் விழச் செய்து பொது மக்கள் காணும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை 10.45 மணி முதல் மாலை 4.51 மணி வரை இதனை பொது மக்கள் கண்டு களித்தனர். இவ்வரிய காட்சியை சுமார் 11,000 பேர் கண்டு களித்தனர்.

*– தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை – 600 025.*

# கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் பிறந்தநாள் விழா



கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 109ஆவது பிறந்த நாளையொட்டி, 5-6-2004 அன்று தமிழக அரசின் சார்பில், சென்னை திருவல்லிக்கேணி பெரிய பள்ளி வாசல் வளாகத்தில் அமைந்துள்ள காயிதேமில்லத் நினைவிடத்தில் மாண்புமிகு நிதி மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தலைவர் திருமதி.பதர் சயீத் ஆகியோர் மலர் போர்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

❖ ❖ ❖



காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள், இஸ்லாமியச் சமுதாயம் நெடுங்காலத்திற்குப் பிறகு பெற்ற பெரும்பரிசு ஆவார். கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள், முஸ்லீம் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் மட்டும் அல்லர்; தமிழர் சமுதாயத்தின் தன்னேரில்லாத் தலைவரும்கூட! நம் நாட்டின் முதுபெரும் அரசியல் மேதையான அவருடைய வாய்மையும், தூய்மையும் அனைவராலும் பாராட்டப்பெற்றவை.

**– பேரறிஞர் அண்ணா**



# வேளாண்மை உயிர்த் தொழில்நுட்பம்

**இரா. கலைச்செல்வி**
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்
கீழப்பழுவூர், அரியலூர்

**பெ. முருகன்**
வேளாண்மை இணை இயக்குநர்அலுவலகம்,
பெரம்பலூர்

உயிர்ப் பொருட்களைக் குறிப்பாக நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பலதரப்பட்ட பயன்பாடுகளுக்கு உபயோகிப்பது உயிர்த் தொழில் நுட்பவியல் எனப்படும். கனவிலும் தோன்றாத பல விந்தைகள் மனித வாழ்வின் தேவைக்காக உயிர் நுட்பம் மூலம் கிடைக்கின்றன. இவை தொழில் சார்ந்த துறைகள், வேளாண்மை, மருத்துவம், கால்நடை, சுற்றுப்புறச் சூழல் மற்றும் பயிர் முன்னேற்றம் ஆகிய முக்கியமான துறைகளில் மிகுந்த பயனளிக்கும் வகையில் உள்ளன.

## நுண்ணுயிர்

இவ்வுலகில் முதன்முதலில் தோன்றிய உயிரினம் நுண்ணுயிர்களே. நுண்ணுயிர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருந்தாலும் கூட ஏறத்தாழ 320 ஆண்டுகளுக்கு முன்பு அந்தோணி வான் லீவன் ஹோக் (Antony von Leeuwen Hoeck) என்பவர்தான் முதன் முதலில் உருப்பெருக்கியின் மூலம் கண்டறிந்தார். அதன் பின் 1862 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயிபாஸ்டர் என்னும் விஞ்ஞானி நுண்ணுயிர்களைப் பற்றிய பல உண்மைகளை வெளியிட்டார். அதன் பிறகு மண்ணில் நுண்ணுயிர்களால் ஏற்படும் நன்மைகளைக் கண்டறிந்து சர் ஜான் ரஸ்ஸல் (Sir John Russel) என்னும் ஆங்கிலேய அறிஞரும் செல்மன் -ஏ- வாக்ஸ்மேன் என்னும் அமெரிக்க அறிஞரும் வெளிப்படுத்தினார்கள்.

இன்றைய காலக்கட்டத்தில் உயிர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பாதுகாப்பான மற்றும் அதிக ஆற்றல் வாய்ந்த தடுப்பு மருந்துகள், துரிதமான மற்றும் நம்பத் தகுந்த நோய் கண்டுபிடிப்பு முறைகள் மற்றும் இன்றியமையாத ஊக்கிகள் உற்பத்தி ஆகியவை நடைமுறைக்கு வந்துள்ளன. பூச்சி மற்றும் சுற்றுச் சூழல் மாசுபாடுகளுக்கு எதிர்ப்புச் சக்தியுள்ள அதிகவிளைச்சல் தரும் இரகங்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. இதனைப் போல மலைத் தோட்ட மற்றும் தோட்டக்கால் பயிர்களை விரைவாக உற்பத்தி செய்யும் முறைகள் நமக்குத் தெரியவந்துள்ளன. தொழில் துறையில் பாதுகாப்பான மற்றும் சிக்கனக் கட்டுப்பாட்டு முறைகள், கழிவு நீரைச் சுத்தப்படுத்துதல், சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடுத்தல், தாதுக்களைப் பிரித்தெடுக்கும் முறைகள் போன்ற பலவகைகள் உருவாகியுள்ளன.

வேளாண்மையிலும், வேளாண்மை சார்ந்த தொழில்களிலும் பல்வேறு தொழில் நுட்பவியல் புகுத்திவரும் வியக்கத்தக்க மாற்றங்கள் பல உள்ளன. அவற்றில் முக்கியமான ஒரு சில தொழில்நுட்பங்களைப் பற்றி நாம் தெளிவாக அறிவோம்.

## திசு வளர்ப்பு (Tissue Culture)

செயற்கை முறையில் பயிர்களின் திசுக்கள் மூலம் பயிர் உற்பத்தி செய்தல் என்பதே திசு வளர்ப்பு முறையாகும். அதாவது பயிரின் ஏதாவது ஒரு பாகத்தை எடுத்து ஒரு குறிப்பிட்ட ஊட்டக் கலவையில் (திசு வளர்வதற்குத் தேவையான சூழலில் இட்டு) வளரச் செய்து பின்னர் அப்பயிரினை வெளிப்புறச் சூழலுக்குக் கொண்டு வந்து பல்வேறு வழிகளில் பதப்படுத்துவது திசு வளர்ப்பு முறைகளில் மிகவும் முக்கியமானதாகும். இம்முறையின் மூலம் பயிர்அபிவிருத்தி முறைகளில் நீண்டகாலம் பிடிக்கும் சாதனைகளை இதன் மூலம் சாதிக்க இயலும்.

(4)

### புரோட்டோ பிளாஸ்ட் இணைப்பு (Protoplast Fusion)

தாவரத்தின் உயிரணுச் சுற்றுச் சுவரை (Cellwall) நொதிகளைக் கொண்டு நீக்கியபின் வெளிப்படுவது புரோட்டோ பிளாஸ்ட் எனப்படும். இத்தகைய சுவரற்ற உயிரணுக்களை திசுக்களைப் போன்றே செயற்கை வளர்பொருளின் (Medium) மீது வளர்த்துப் புதிய செடிகள் உருவாக்கப்படுகின்றன. இந்த முறையினால் ஒரே குடும்பத்தைச் சார்ந்த மற்றும் சாராத பாரம்பரிய நெருக்கமுடைய இருவேறு தாவர இலைகளின் புரோட்டோபிளாஸ்ட்களை இணையச் செய்து அதனிலிருந்து புதிய வீரிய இனத்தைப் பெறச் செய்யலாம். இது போன்ற முறைகளினால் நோய் மற்றும் பூச்சிகள் தாக்கும் எதிர்ப்புச் சக்தியுடைய பயிர்கள் மற்றும் செடிகளை உருவாக்க முடியும்.

### வேளாண்மையில் நுண்பெருக்க முறை (Micro Propagation)

வேளாண்மையில் தாவரத்தின் இலை, தண்டு, நுனிக்கொழுந்து, மகரந்தம் போன்ற எந்த ஒரு பகுதியையும் ஆய்வகத்தில் செயற்கை உணவு ஊட்கத்தின் மீது திசுக்களாகப் பெருக்கிப் பின் உருமாற்றத்தின் மூலம் புதிய செடிகள் மற்றும் பயிர்களை உண்டாக்க முடிகின்றது. குறிப்பாக ஒரு இலைத் துண்டிலிருந்து எண்ணற்ற செடிகளைப் பெருக்கவும், நச்சுயிரி (Virus) நோய் நீக்கிய செடிகளை உருவாக்கவும், பண்ணையில் எளிதில் பெருக்க இயலாத மற்றும் அதிக காலம் செலவு பிடிக்கும் தாவரத்தினைப் பெருக்கவும் இம்முறை மிகவும் சிறந்ததாகும். மேலும் இம்முறையினால் உப்பு, கார, அமிலத்தன்மை தாங்கும் திறன் படைத்த பழச் செடிகளும், தானியப் பயிர்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்போது இம்முறை தானியம், கரும்பு,பழவகைகள், மலர்வகை, மலைப்பயிர்கள், அலங்காரச் செடிகள் என அனைத்து வகைப் பயிர்களுக்கும் பின்பற்றப்படுகிறது.

### மகரந்த வளர்ப்பு முறை (Anther Culture)

இது ஆண் தாதுவிலிருந்து மட்டுமே ஒரு முழுச் செடியை உருவாக்குகின்ற நுட்பச் செயலாகும். இந்த மகரந்த வளர்ப்பை உலகில் முதன்முதலில் கண்டுபிடித்தவர்கள் இரண்டு இந்தியர்கள் ஆவார்கள். அவர்கள் டில்லியைச் சேர்ந்த மகேஸ்வரி மற்றும் குகா என்ற அறிவியல்ஆராய்ச்சியாளர்கள். 1964–ஆம் ஆண்டு ஊமத்தம் பூவிலிருந்து மகரந்தத்தை எடுத்து அதிலிருந்து செடியை உண்டாக்கி உலகிற்கு வெளிக்காட்டினார்கள். இந்தச் செடிகள் யாவும் ஒற்றை குரோமோசோம்களைக் கொண்டனவாக இருந்தன. இந்தியாவில் இம்முறையின் மூலம் பாக்டீரியாவை எதிர்க்கும் சக்தியுள்ள புதிய புகையிலை இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனைப்போன்று சீனாவில் மகரந்த வளர்ப்பின் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட நெல் இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### புரதத்தின் மூலம் செயல்படும் மரபுக் கூறுகள்

உயிரினங்களின் பண்புகளையும், குணங்களையும், தோற்றத்தையும், நிர்ணயம் செய்கின்ற மரபுக் கூறுகள் யாவும் புரதங்கள் மூலம் செயல்படுகின்றன. மிகவும் முக்கியமான 20 அமினோ அமிலங்கள் புரதத்தில் அடங்கியுள்ளன. இவையாவும் வெவ்வேறு வழிகளில், வெவ்வேறு எண்ணிக்கையில், வெவ்வேறு வரிசையில் கலந்து எண்ணிலடங்காத விதவிதமான புரதத்தை உண்டாக்க முடியும். அதனால்தான் உயிரினங்களில் வெவ்வேறு வகை உயிரணுக்களையும், இழைகளையும் உருவாக்க மற்ற வேதிப் பொருட்களை விடுத்துப் புரதம் பெரிதும் பயன்படுகிறது. மற்றும் உயிரணுக்களில் காணப்படும் நூற்றுக்கணக்கான வேதி மாற்றங்களை நடத்திவைக்கும் பிரதான நொதிகளைப்(Enzymes) பயன்படுத்துவதும் புரதமே.

உயிரினங்களில் எத்தனையோ நொதிகள் பயன்பட்டு வருகின்றன. இந்த நொதிகளின் தனித்தன்மை என்னவென்றால், அவை சிறிய அளவில் இருந்தாலும் மிகப் பெரிய அளவில் மாற்றங்கள் விளைவிக்கக்கூடிய ஆற்றல் மிக்கனவாக உள்ளன. கன்றுக்குட்டியின் இரைப்பையில் உள்ள ரெனின் (Renin) என்ற நொதி தன்னைப் போல் ஒரு கோடி அளவு எடை நிறைந்த பாலை 5 நிமிடத்தில் கட்டிப்படச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது.

### சுவரற்ற உயிரணுக்கள் இணைப்பு

சுவரற்ற உயிரணுக்களை இரு வேறுபட்ட தாவரங்களிலிருந்து பிரித்து எடுத்துச் சோதனைக் கூடத்தில் அவற்றை இணைத்து, இப்படி இணைக்கப்பட்ட உயிரணுவிலிருந்து புதிய தாவரத்தை உண்டு பண்ணும் முறை நல்ல பலனை அளிக்க ஆரம்பித்து உள்ளது. இதனால் பாலுறவு இல்லாப் பயிர்களுக்கு இடையே கலப்பினங்களை உண்டு பண்ணுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்படிச் சுவரற்ற உயிரணுவிலிருந்து முழுச் செடியை உண்டு பண்ணுகின்ற நுட்பம் உருளைக் கிழங்கு, புகையிலை, தக்காளி போன்ற பயிர்களில் பலனைக் கொடுத்து உள்ளது.

### உயிரியல் முறையில் பூச்சிக் கட்டுப்பாடு (Biological Pest Control)

உயிரினப் பூச்சிக் கட்டுப்பாடு என்பது தாவரங்கள் மூலமாகவோ, இதர உயிரினங்கள் மூலமோ, நுண்ணுயிர்க் காரணிகளைக் கொண்டு செயல்படுத்தப்படும் நவீன தொழில் நுட்ப முறையாகும். இம்முறை சுற்றுச் சூழலைப் பாதுகாத்து, இயற்கையில் நின்று நிலை பெற்றுச் செயல்படுகின்றன. இம்முறையினைப் பின்பற்றுவதால் செலவினம் குறைகின்றது. இம்முறையினால் உயிரினப்



பூச்சிக் கொல்லிகள் மனிதர்களுக்கும், பிற விலங்குகளுக்கும், உயிரினங்களுக்கும், தீங்கு விளைவிக்காமல் பயிர்ப் பூச்சிகளை மட்டுமே அழிக்கின்றன.

வேளாண்மையில் பூச்சிகள், நோய்கள், களைகள் மற்றும் எலிகளால் 20 சதவிகித இழப்பு ஏற்படுகிறது. வயல்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயிரை ஆய்வு செய்யாமல் பூச்சிமருந்து பயன்படுத்துவதால் சில வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தச் சிலவகைப் பூச்சி மருந்துகளைத் தெளித்தால் வேறு வகைப் பூச்சிகள் பெருகி அதிக அளவில் சேதம் உண்டாகின்றது.

#### எடுத்துக்காட்டு

நெல் பயிரில் புகையான் பூச்சி காணப்படும் போது பென்தியான், மீதைல் பாரதியான் மருந்துகள் தெளிக்கப்படும் போது புகையான் பூச்சியின் பெருக்கம் அதிகமாகின்றது.

### இரை விழுங்கிகள் (Predators)

இவற்றை ஊன் விழுங்கிகள் என்றும் கூறலாம். இரை விழுங்கிகள் பயிர்களில் சேதம் விளைவிக்கும் பூச்சிகளைவிட, அளவில் பெரியதாக இருக்கும் இவை பயிர்களை அழிக்கும் பூச்சிகளை விழுங்கிப் பயிர்களை சேதத்தில் இருந்து பாதுகாப்பதால் இவை உழவர்களின் நண்பர்களாகக் கருதப்படுகின்றன.

#### எடுத்துக்காட்டு



பொறிவண்டுகள், அவற்றின் புழுக்களும், பயிர்களின் அசுவினி, இலைப்பேன், மாவுப்பூச்சி, வெள்ளை ஈ போன்றவற்றை உண்ணும்.

### ஒட்டுண்ணிகள் (Parasites)

பூச்சிகள் வாழ்க்கைப் பருவமான முட்டை, புழு, கூண்டுப்புழு, நிலைகளின் எந்தப் பருவ நிலையில் ஒட்டுண்ணி தாக்கி அழிக்கின்றனவோ அந்த நிலையைப் பொறுத்து, ஒட்டுண்ணிகளை முட்டை ஒட்டுண்ணிகள், புழு ஒட்டுண்ணிகள், கூட்டு ஒட்டுண்ணிகள் எனப் பலவகைகளாகப் பிரிக்கலாம்.

#### முட்டைப்பருவ ஒட்டுண்ணிகள்



டிரைக்கோகிரம்மா, சில் வண்டு, டெலினோமஸ், இவை கரும்பு இடைக்கணுப்புழு, நெல்குருத்துப் பூச்சி, இலைச்சுருட்டுப்புழு, பருத்திக் காய்ப்புழுக்கள் போன்றவற்றின் முட்டைகளை அழிக்கின்றன.

#### புழுப்பருவ ஒட்டுண்ணிகள்



பெத்தலிட், பிரகானிட், இக்னி மோனிட் போன்ற குளவி இன ஒட்டுண்ணிகள் முக்கியம் வாய்ந்தன வாகும். இவற்றில் பிரிகான், அபாண்டிலஸ் போன்றவை தென்னைக் கருந்தலைப்புழு, நெல் இலை மடக்கும்புழு, முட்டைக்கோசு, காலிபிளவர் இலைப்புழுக்களை அழிக்கக்கூடியன.

#### கூண்டுப்புழு பருவ ஒட்டுண்ணிகள்

இவை சால்சிட் மற்றும் ஈலோபிட் வகை இனத்தைச் சேர்ந்தவை. இவை புருடினியாப் புழு, பச்சைக் காய்ப்புழு, தென்னைக் கருந்தலைப்புழு ஆகியவற்றை அழிக்கின்றன.

### நோய்க்கிருமிகள் (Pathogens)

மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் ஏற்படும் நோய்கள் போல் பூச்சிகளுக்கும் இயற்கையிலேயே பல கிருமிகளால் நோய்கள் ஏற்படுகின்றன. வைரஸ், பாக்டீரியா, பூசணம், புரோட்டோசோவா போன்ற கிருமிகள் பூச்சிகளில் நோய் உண்டாக்கி அவற்றை அழிக்கும் திறன் வாய்ந்தவை. இந்நோய்க்கிருமிகள் ஆய்வகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டு வயல்வெளிகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுகின்றன.

#### நச்சுயிரிகள் (Virus)

பச்சைக்காய்ப்புழு, புருடீனியா மற்றும் சிகப்புக் கம்பளிப் புழுவைக் கட்டுப்படுத்த என்.பி.வி. வகை வைரஸ் பயன்படுத்தப்படுகின்றன.

#### பாக்டீரியா (Bacteria)

பூச்சிகளைத் தாக்கும் பாக்டீரியாக் கிருமிகளுள் பேசில்லஸ் துரியன்ஸிஸ் என்னும் வகை பயிரைத் தாக்கும் பல புழு இனங்களைக் கட்டுப்படுத்த வல்லது.

#### பூசணம் (Fungi)

பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பூசண நோயினால் தாக்கப்பட்ட பூச்சிகள் செயலிழந்து உணவு உண்ணாமல் வளர்ச்சியின்றிக் கட்டியாக மாறி வெள்ளை மற்றும் பச்சைப் பூசண வளர்ச்சி தோலின் மீது தோன்றிப் பின் செத்து மடிகின்றன.

பிவேரியா பேசியானா பூசணம் பயிர்களைத் தாக்கும் புகையான், காய்ப்புழுக்கள் வெட்டுக்கிளிகள் போன்றவற்றைத் தாக்கி அழிக்கின்றன.

### உயிரியல் முறையில் நோய்க் கட்டுப்பாடு (Biological Disease Control)

விதையின் மேற்பரப்பில் உள்ள நோய்க் கிருமிகளும், மண் வழிப்பரவும், நோய்க் கிருமிகளும் கட்டுப்படுத்த எதிர் நுண்ணுயிரினங்கள் குறிப்பாகப் பூசணங்கள் பயன்படுகின்றன.

டிரைகோடெர்மா விரிடி போன்ற பூசணத்தை நிலக்கடலை, சூரியகாந்தி, பருத்திப் பயிர்களில் தாக்கும் வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தலாம்.

### வேளாண்மையில் நுண்ணுயிர் உரங்கள்

நவீன சாகுபடியில் உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிட்டு உணவு உற்பத்தியில் உயர் விளைச்சலை அடைய நுண்ணுயிர் உரங்கள் பெரும் பங்காற்றுகின்றன. பண்டைய கால விவசாயத்தில் தழைச்சத்தினைப் பெறப் பண்ணை எருக்களும், குப்பைகள், பசுந்தாள் உரங்களும் இட்டு வந்தார்கள். இத்தகைய சூழலில் மேற்கூறிய இயற்கை உரங்களும் அதிக அளவில் கிடைக்காததால் அதனை ஈடு செய்யும் பொருட்டுச் செயற்கை உரங்களை இட்டு உற்பத்தியை நாம் பெருக்கி வருகின்றோம். செயற்கை இரசாயன உரங்களை நாம் அதிக அளவில் தொடர்ந்து உபயோகித்து வந்தால் மண்ணில் வளம் கெட்டும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டும் விளைச்சல் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அதிகரிக்க முடியாமல் போக வாய்ப்புகள் உள்ளன. இதனைச் சீர் செய்ய இரசாயன உரங்களுடன் இயற்கை மற்றும் உயிர் உரங்களை இட்டு வந்தால் நிலவளம் காக்கப்பட்டுச் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல் உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்போது நடைமுறையில் அசோஸ்பைரில்லம், ரைசோபியம், அசட்டோபாக்டர் போன்ற உயிர் உரங்கள் தழைச் சத்தை நிலை நிறுத்தும் நுண்ணுயிர் உர வகைகளாகவும், பாஸ்போ பாக்டீரியா மணிச்சத்து நிலைநிறுத்தும் நுண்ணுயிர் உரங்களாகவும் பயன்படுகின்றன.

வேளாண்மையில் உயிர்த் தொழில்நுட்பத்தின் மூலம் பாதுகாப்பான, அதிக ஆற்றல் வாய்ந்த தடுப்பு மருந்துகள் பூச்சி, நோய் மற்றும் சுற்றுப்புறச் சூழ் நிலைக்கு ஏற்ற இரகங்கள் கண்டு பிடிக்கவும், அதிக அளவில் விளைச்சல் தரும் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றைச் சிக்கனமான முறையில் உற்பத்தி மேற்கொள்ளவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இப்போது மனிதனால் விவசாய நிலங்கள் வீடுகள், தொழில் நிறுவனங்கள் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு விளைநிலங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. அதனைக் கருத்தில் கொண்டு பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஈடு செய்யும் வகையிலும் குறைந்த பரப்பளவில் அதிக மகசூல் பெற இத்தொழில் நுட்பம் மிகவும் இன்றியமையாததாக அமையும் என்பதில் ஐயமில்லை.

– **"உயிர்த் தொழில்நுட்பவியல்" நூலிலிருந்து.**

வெளியீடு : **அனைத்திந்திய அறிவியல் கழகம்,** தஞ்சாவூர்.

❖ ❖ ❖

### உடல் ஊனமுற்றோருக்கான புதிய கணினி



உடல் ஊனமுற்றோர்கள் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்து வருகின்றனர்.

கணினி தொழில் நுட்பமும் இப்போது இவர்களுக்குக் கைகொடுக்கத் தயாராகிவிட்டது. ஏற்கெனவே இத்துறையில் உடல் ஊனமுற்றோர்கள் சிறந்து விளங்குகின்றனர். மேலும் ஊக்குவிக்க புதிய கணினி ஒன்றை ஸ்பெயின் நாட்டு கணினி நிறுவனம் தயாரித்துள்ளது.

கண் அசைவால் "மவுசை" (mouse) இயக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மென்பொருளுக்கு **ஐரிஸ்காம்** என்று பெயர். மவுசிற்குப்பதிலாக கண்பார்வையின் அசைவை காமரா நோட்டம் விட்டு அதற்கேற்ப திரையில் மவுஸ் குறியை நகர்த்துகிறது. கிளிக் செய்ய வேண்டுமானால் கண்ணைச்சிமிட்ட வேண்டும். சுண்டு விரலைக் கூட அசைக்க இயலாதவர்களுக்கு இந்த மென்பொருள் பெரிதும் உதவும். இந்தப்புதிய கணினி விரைவில் உலகம் முழுவதும் விற்பனைக்கு வரஉள்ளது என இதை உருவாக்கிய நிறுவனத்தைச் சார்ந்த **பெட்ரோபொலோஸ்** கூறியுள்ளார்.





# திருஞானசம்பந்தர் இசை விழா

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரின் புகழைப் பரப்பும் வகையில் அவர்தம் தேவாரங்களை பொதுமக்களிடையே பரப்பும் நோக்கில் திருஞானசம்பந்தர் இசைவிழா திருக்கழுக்குன்றத்தில் 33 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. 1,700 ஆண்டுகளுக்கு முன்பாக பண் சுமந்த பாடல்களை இசைத்துத் தமிழுக்கும், சைவத்திற்கும் புத்துயிரூட்டி புரட்சி செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகியோருடைய தேவாரங்களையும், திருவாசகம் மற்றும் பிற திருமுறைகளையும் இசைக் கலைஞர்கள் ஓதியும், திருமுறைகளைப் பற்றி அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் சிறப்பாக நடத்தப்பெற்று வரும் இவ்விழா இன்று கால் நூற்றாண்டைக் கடந்து செம்மையாக நடைபெற்று வருகிறது.

33 ஆண்டுகளாக நடைபெற்று வரும் திருஞான சம்பந்தர் இசைவிழா, கடந்த 30 ஆண்டுகளாக திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளையால் மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. கடந்த 2002ஆம் ஆண்டு முதல் கலை பண்பாட்டுத் துறையும், தென்னகப் பண்பாட்டு மையமும் திருஞானசம்பந்தர் இசைவிழா அறக்கட்டளையுடன் இணைந்து திருக்கழுக்குன்றத்தில் திருஞானசம்பந்தர் இசைவிழாவினை சீரும் சிறப்புமாக நடத்தி வருவது குறிப்பிட த்தக்க ஒன்றாகும்.

இவ்வாண்டில், இவ்விழா 12.6.2004, 13.6.2004 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன. நாள்தோறும் மங்கல இசை நிகழ்ச்சிகள், திருமுறை இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், தெருக்கூத்து, கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று பொதுமக்களின் பாராட்டைப் பெற்றன.

12.6.2004 அன்று நடைபெற்ற 33ஆம் ஆண்டு திருஞானசம்பந்தர் இசைவிழாவின் தொடக்க விழாவில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள் விருது மற்றும் நினைவுப் பரிசுகளை ஓதுவார் மூர்த்திகளுக்கு வழங்கிப் பாராட்டுரை ஆற்றினார்கள். அவர் தம் உரையில், திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்று வரும் திருஞானசம்பந்தர் இசைவிழா கடந்த 3 ஆண்டுகளாக கலை பண்பாட்டுத் துறையும், தென்னகப் பண்பாட்டு மையமும் இணைந்து சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டு வருவதை நினைவு கூர்ந்தார். மேலும், திருஞான சம்பந்தரின் புகழைப் பரப்பும் வகையில் இவ்விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் விழா சிறப்புற நடத்தப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும் எனத் தெரிவித்தார்கள்.

**இவ்விழாவினைத் தொடக்கி வைத்து விழாப் பேருரை ஆற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. செம்மலை அவர்கள் தமது உரையில்,**

"திருஞானசம்பந்தர் தமிழ்ப் பாடல்கள் மூலம் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியவர். தமிழ்ப் பாடல்கள் பாடியே தீராத நோயைக் குணப்படுத்தியவர். இறந்தவரை உயிர்ப்பித்தவர்; ஆற்றைக் கடக்க பாடியே ஓடத்தை ஓட வைத்தவர். அவரது திருவாயில் தவழ்ந்த தமிழுக்காக வயதில் மூத்தவரான அப்பர், வயதில் இளையவரான



திருஞானசம்பந்தரை பல்லக்கில் வைத்து சுமந்தார் என்பார்கள். ஞானசம்பந்தரைப் பற்றி சொல்லுகிறபோது **"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்"** என்று புகழாரம் சூட்டுவார்கள். அவர் தமிழை வளர்த்தவர். பக்தியை, சமயத்தைப் பரப்பினார். இசைத்தமிழ் ஞானசம்பந்தர் நாவில் தவழ்ந்தது. தமிழைக் கொண்டு இசையை வளர்த்தது திருஞானசம்பந்தர் காலம். தமிழைக் கொண்டு அறிவியலை வளர்ப்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலம்.

அப்பர் பாடிய தமிழை, ஞானசம்பந்தர் பாடிய தமிழை, சுந்தரர் பாடிய தமிழை, மாணிக்கவாசகர் பாடிய தமிழை அனைத்துப் பள்ளிகளிலும், அறிவியல் தமிழாக அறிமுகப்படுத்தி மழலையர் வகுப்பு முதல் 12–ஆம்



**வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் எந்தவொரு மாணவனும், எந்தவொரு மாணவியும் தமிழைக் கற்காமல் இனி பள்ளிப் படிப்பை தொடரமுடியாது என்கிற நிலைமையை உருவாக்கி, அதில் வெற்றி கண்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.** இதற்கு முன், முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்த நிலைமை இல்லையா? என்று உங்களில் சிலர் கேள்வி கேட்கக்கூடும். அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றால் இல்லை, இல்லவே இல்லை என்பதுதான். பயிற்று மொழியாக தமிழை கட்டாயப்படுத்தக் கூடாது என்றது நீதிமன்றம். பாடமொழியாக தமிழ் அல்லது தாய்மொழி என்ற நிலை. இதனால் வேற்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழைக் கற்காமலேயே பள்ளிப் படிப்பை முடித்து வெளியேறிவிடலாம். இந்த நிலைமையை மாற்ற சிந்தித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அறிவியல் தமிழை ஒரு பாடமாக அனைத்து வகுப்புகளிலும் அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே சமயத்தில் அறிமுகப்படுத்தினார். வெற்றியும் கண்டார். இனி எவரும் தமிழ் படிக்காமல் பள்ளியை விட்டு வெளியேற முடியாது. இதுதான் சாதனை. சில பேர் தமிழுக்காக சாதித்துவிட்டதாக கூப்பாடு போடலாம். பிள்ளை பெறுவதற்கு முன் பெயர் வைப்பது போல, அது வெறும் முழக்கமாக இருக்கலாமே தவிர சாதனையாகிவிட முடியாது. எதையும் சாதித்த பிறகுதான் அது சாதனையாகும். அது மட்டுமல்ல, **உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு உயிர் கொடுத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.** அவரது இத்தகைய முயற்சிகளால் தமிழ் மொழி இளமை குன்றாமல் வாழும், வளரும். அதற்கு இந்த இசைவிழா நிகழ்ச்சியே சான்று ஆகும் என்று குறிப்பிட்டார்கள்.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றிய கலை பண்பாட்டு **இயக்கக ஆணையர் திரு. இரா. காசிநாதன், இ.ஆ.ப., அவர்கள் 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் தேவாரத்தை ஒரு பாடப்பிரிவாக நடத்தி வருவது சிறப்புக்குரியது என்று குறிப்பிட்டார்கள்.**

இவ்விழாவில் தலைமை உரையாற்றிய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. இரா. வெங்கடேசன்,இ.ஆ.ப., அவர்கள் தேவாரங்களின் சிறப்பினை எடுத்துரைத்ததுடன், தேவாரத்தைப் பாடமாகப் பயிற்றுவிக்கும் காஞ்சிபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு விரைவில் அரசின் ஒப்புதலுடன் சொந்தக் கட்டடத்தில் செயல்பட ஏதுவாக உரிய நிலத்தினை வழங்குவதாகத் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகளின் தேவார ஆசிரியர்கள், இசைச் சான்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு விழாவினைப் பெருமைப்படுத்தினர்.

விழாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், ஆண்டுதோறும் டாக்டர் நாவலர் சச்சிதானந்த



சிவக்குமார் நினைவு அறக்கட்டளையின் சார்பாக வழங்கப்பெறும் "தேவார தமிழிசைத் தென்றல்" விருது மற்றும் பக்தவச்சலம் அறக்கட்டளையின் பொற்கிழி, பெரம்பலூர் மாவட்ட அரசு இசைப் பள்ளியில் தேவார ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. சங்கரலிங்க ஓதுவார் அவர்களுக்கு வழங்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டார். திருவாவடுதுறை ஆதீனம் வழங்கும் மின் தம்புரா பரிசு, திருவாவடுதுறை தவத்திரு. சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களால், காஞ்சிபுரம் மாவட்ட அரசு இசைப்பள்ளியில் தேவார ஆசிரியையாகப் பணிபுரிந்து வரும் திருமதி. சுமித்ரா அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வைகாசித் திங்களில் நடைபெறும் திருஞானசம்பந்தர் இசைவிழா தொடர்ந்து சிறப்புடன் நடைபெற அனைத்து முயற்சிகளும் கலை பண்பாட்டுத் துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

**– திரு.வ. ஜெயபால்,**
*மண்டல உதவி இயக்குநர்,*
*கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.*

★ ★ ★



# ஊனமுற்றவர்களுக்கு ஊன்றுகோலாக அரசு விளங்குகிறது



உடல் ஊனம் ஓர் தடையல்ல எனும் கூற்று மெய்ப்பிக்கப்பட்டிருப்பினும் ஊனம் இல்லா சமுதாயத்தினை உருவாக்குவது நம் அனைவரின் தலையாய கடமையாகும். உடல் ஊனங்களை சவாலாகக் கொண்டு சாதனையாளர்களாக மாறிவரும் ஊனமுற்றோர்களை இன்றைய காலகட்டத்தில் உடல் மன ஊனங்களை சவாலாக ஏற்றுக் கொண்டுள்ளோர் (Physically Challenged) அல்லது மாறுபட்ட திறனுடையோர் (Differently Abled) என அழைப்பதே சாலச்சிறந்ததாகும்.

மனித நேயத்தின் மாண்பையும், இறையாண்மையையும், நமது பொறுப்புணர்வையும் உணர்த்துவதே ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணியாகும்.

சமூகம் இழைக்கும் தவறுகளுக்குத் தண்டனையை இச்சமுதாயம் அடையலாகாது எனும் தாயுள்ளம் கொண்ட தமிழக அரசு, வேலூர் மாவட்ட ஊனமுற்றோர் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் முதலானவைகளில் விரும்பத்தக்க முன்னேற்றம் எய்திடவும், இதர வசதிகள் பெற்று சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்திடவும், மாவட்ட மறுவாழ்வு மையம் மூலமாக பல்வகையான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருவதோடு நலத்திட்ட உதவிகள் விரைவாகவும், எளிதிலும் தகுதியான நபர்களைச் சென்றடைந்திட தக்க வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஊனமுற்றோர்க்கு தடையில்லா உள் கட்டமைப்பு வசதி கொண்ட மாவட்ட மறுவாழ்வு மைய அலுவலகம் ரூ.10 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, ஊனமுற்ற நபர்கள் எளிதில் அலுவலகத்தினுள் சென்று பயனடைந்து வருகின்றனர்.

ஊனமுற்றோர் எளிதில் சென்று பல்வேறு துறை அலுவலர்களைச் சந்திக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் சாய்வுப் பாதைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. ஊனமுற்றோர் அதிக எண்ணிக்கையில் செல்லும் கரிகிரி எஸ்.எல். ஆர். டி.சி. மருத்துவமனை வளாகத்தில் ரூ.5 இலட்சம் செலவில் நடைபாதைகள், விசேஷ கழிப்பறைகள், சாய்வுப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது.

வாலாஜா அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகம் மற்றும் விடுதி வளாகத்தில் ரூ.2.50 இலட்சம் செலவில் சாய்வுப் பாதைகள், கழிப்பறைகள் அமைக்கப்பட்டு ஊனமுற்ற மகளிர் பயன்படுத்தி வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தின் பரந்த நிலப்பரப்பினை கருத்திற்கொண்டு வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் கோரி மாவட்ட தலைமையிடமான வேலூருக்கு வருகை தரும் ஊனமுற்ற நபர்களின் இடர்ப்பாடுகளைத் தவிர்த்திடும் வகையில், தேவையான வழிகாட்டுதல்கள், உதவிகளை அந்தந்தப் பகுதிகளிலேயே வழங்கிடுவதற்காக தகுதியான மூன்று தொண்டு நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் ரூ.3 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த ஊனமுற்றோர் ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஊனமுற்றோர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் பொருட்டு ஊனமுற்றோர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, குழுக்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் சுழல் நிதி வழங்கப்பட்டதன் மூலம் 1,158 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

சுயதொழில் தொடங்க விருப்பம் தெரிவித்த ஆதிதிராவிட பழங்குடி இனத்தைச் சார்ந்த நபர்களுக்கு தாட்கோ அலுவலகம் மூலம் மானியத்துடனான வங்கிக் கடன் வழங்கப்பட்டு பயனடைந்துள்ளார்கள்.



அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கல்வி (Integrated Education) வழங்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்றிட ஆதார ஆவணமான மருத்துவச் சான்றுடன் கூடிய அடையாள அட்டையினை ஊனமுற்றோர்கள் எளிதில் பெற்றிட வாரத்தில் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையன்றும், எலும்புமுறிவு மருத்துவர், கண் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை மருத்துவர், மனநல மருத்துவர் ஆகியோரை மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு வரவழைத்து ஊனமுற்றோரை பரிசோதித்து மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரின் கையொப்பத்துடன் கூடிய தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டை ஒற்றைச்சாளர முறையில் வழங்கப்படுகிறது.

எவ்வகையிலும் மறுவாழ்வு உதவிகள் பெற இயலாத ஊனமுற்றோர்க்கு, மக்கள் குறை தீர்வு நாள் நிகழ்ச்சிகளிலும், (வாரந்தோறும்) மனுநீதிநாள் முகாம் நிகழ்வுகளிலும் (மாதந்தோறும்) ஒற்றைச்சாளர முறையில் மாதாந்திர ஊனமுற்றோர் உதவித் தொகைக்கான அனுமதி ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஊனமுற்றோர், தங்களின் அன்றாடத் தேவையினை நிறைவு செய்திடவும், முற்றிலுமாகப் பிறரை சார்ந்துள்ள நிலையினை தவிர்த்திடவும், ஊனமுற்ற நபர்களின் ஊனம் மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில் தனியார் நிறுவனங்களான உணவகங்கள், வணிக நிறுவனங்கள், பட்டறைகள், கம்பெனிகள், சேவை நிறுவனங்கள் முதலானவற்றில் ஊனமுற்றோர்க்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு நல்கிட முனையும் தொழிலதிபர்களையும், வேலைவாய்ப்பு, கோரும் ஊனமுற்ற நபர்களையும் "நேருக்கு நேர்" சந்திக்க வைத்து 782 ஊனமுற்ற நபர்களுக்கு பணி நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

வருமுன் தடுத்திடுவதே ஊனமில்லா சமுதாயத்தினை உருவாக்கிட வழிவகுக்கும் எனும் அடிப்படையில் ஊனம் ஏற்படுவதற் கான காரணங்களைக் கண்டறிந்து அதனைத் தடுக்கும் முறைகள், ஊனத்தினை ஆரம்ப நிலையில் கண்டறியும் முறைகள், ஆரம்ப நிலையில் வழங்க வேண்டிய மறுவாழ்வு உதவிகள் ஆகியவற்றைப் பற்றி முறையான கல்வி மற்றும் விழிப்புணர்வுகளை பொது மக்களிடையே ஏற்படுத்திட அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் தாய்மை துணை செவிலியர்கள் ஆகியோர்க்கு முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டு பொது மக்களிடையே விழிப் புணர்வு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. போலியோ வால் ஏற்படும் ஊனத்தைத் தடுக்க 2004ஆம் ஆண்டில் 3 தவணையாக போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. முதல் தவணையாக 4,08,935 குழந்தைகளுக்கும் இரண்டாம் தவணையாக 4,11,944 குழந்தைகளுக்கும் மூன்றாம் தவணையாக 4,15,000 குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்ற குழந்தைகள்இல்லா சமுதாயத்தை உருவாக்கிடவும், ஊனமுற்றோருக்கான சமவாய்ப்பு உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுமையான பங்கேற்பு சட்டத்தில் வரையறுத்துள்ள உரிமைகளையும், சலுகைகளையும் ஊனமுற்றோர்க்கு கிடைக்கச் செய்யும் வகையிலும், முழுமையான பங்கேற்புடன் செயல்பட சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்திடவும், வேலூர் மாவட்ட மறுவாழ்வு மையம் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

மனிதநேயப் பணியில் மாண்புற, மாறுபட்ட திறனுடையோர்களின் மறுவாழ்விற்கு வளம் சேர்ப்போம்!

**– எம். கலைமணி**
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*வேலூர்.*

**கடல் மட்டம் உயரும்**

உலகம் முழுவதும் கடலின் உயரம் சில அடிகள் உயரும் என்று கடல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடல் வெப்பத்தால் பனிப்பாறைகள் உருகுகின்றன. ஆண்டுக்கு 14 ஆயிரம் கிலோமீட்டர் பனிக்கட்டிகள் உருகி 20 ஆண்டுகளுக்கு ஒரு மீட்டர் வீதம் கடல் மட்டம் உயருகின்றது என அந்த ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.





# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம், தமிழக அரசால் 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி (1974–ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6–ன்படி) ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டு பிப்ரவரி மாதம் இருபத்தி ஏழாம் நாள் அமைக்கப்பட்டது. இந்த வாரியம் பின்னர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என்று 1983–ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது 1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1981–ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும், 1986–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் அடங்கிய விதிகளையும் செயல்படுத்துகிறது.

போக்குவரத்து வாகனங்களில் பயன்படுத்தப்படும் காற்று ஒலிப்பான், திருவிழா மற்றும் பொதுக் கூட்டங்களின் போது வரைமுறையற்று பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கி மற்றும் பட்டாசு வெடிப்பதால் எழும் சப்தம் போன்றவைகள் மக்களுக்கு எரிச்சல் மற்றும் உடல்நல பாதிப்பை உருவாக்குவதால் இவைகள் சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகும். சென்னை நகரில் தனியார் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து காற்று ஒலிப்பான் அகற்றுவதற்கான இயக்கங்கள் அடிக்கடி நடத்தப்படுகின்றன. பல தனியார் மற்றும் நகர போக்குவரத்து பிரிவுகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு காற்று ஒலிப்பான்களை அகற்றியுள்ளன.

பண்டிகை காலங்களில் சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மக்களிடையே பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் ஒலி மாசு மற்றும் காற்று மாசு போன்றவற்றின் தீமையை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. சென்னை, சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சி போன்ற ஆறு பெரிய நகரங்களில் தீபாவளியின் போது பட்டாசு வெடிப்பதனால் ஏற்படும் ஒலியின் அளவு மற்றும் போகி பண்டிகையின் போது காற்றின் தன்மை அளவுகள் கண்டறியப்படுகிறது. காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவாக தீபாவளி மற்றும் போகி பண்டிகையின் போது ஒலி மற்றும் காற்று மாசு அளவுகள் குறைந்து காணப்படுகின்றன.

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினை தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கான பசுமை விருதுகளை 2002–இல் அரசு ஏற்படுத்தியது. பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உலக சுற்றுச் சூழல் தினத்தன்று வழங்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சியாளர்கள் அவர்களது தனி முயற்சியாக சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு, பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்குவதற்காக முடிவெடுக்க வனம்



⑤

மற்றும் சுற்றுச்சூழல் துறை, அரசு செயலர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 2002–ஆம் ஆண்டில் பசுமை விருதுகள் நீலகிரி, சேலம், மற்றும் விருதுநகர் ஆகிய மூன்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன. 2003–ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவண்ணா மலை, வேலூர் ஆகிய ஆறு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

மாசினை தடுக்கும் வழிமுறையாக, தொழிற்சாலைகள் தனது வளாகத்தில் 25 சதவிகிதம் நிலப்பரப்பில் அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை வளர்க்க வலியுறுத்தப்படுகிறது. அதன்படி, தொழிற்சாலைகள் போதிய அளவு மரங்களை தனது





வளாகத்திலும் மற்றும் தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் வனத்துறை, அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தும் மத்திய அரசின் உதவியிலான தமிழ்நாட்டை பசுமைப் பகுதிகளாக்கும் திட்டத்திற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒத்துழைப்பு வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாநகராட்சிகளிலும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் மரக்கன்றுகள் வளர்த்து பராமரிக்கப் படுகின்றன.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்க்க, சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உலக சுற்றுச்சூழல் தினம், உலக புவிதினம் மற்றும் சர்வதேச ஒலி நாள் ஆகிய தினங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இவ்வாரியத்தின் மூலம் சென்னை தலைமை அலுவலகத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது. முக்கிய சுற்றுச் சூழல் நிகழ்வுகளை பற்றிய விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்த பல கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இக்கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் திறமையும் கலைஆர்வமும் உள்ள வாரியப் பணியாளர்களைக் கொண்ட ஒரு குழுவால் நடத்தப்படுகின்றன.

மாணவ, மாணவிகள் மற்றும் கிராமப்புற பெண்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வியை கலை வடிவத்தில் பரப்புவதே இக்குழுவின் நோக்கமாகும். இக்குழு சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து பல்வேறு விஷயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இக்குழு சென்னையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் நாடகம், வீதி நாடகம், பாடல்கள், பல குரல் நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஒயிலாட்டம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளின் மூலம் மக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. சென்னை, கோட்டூர்புரத்திலுள்ள வாரிய அரங்கத்தில் மாதந்தோறும் இரண்டு நாட்கள் பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

மகளிர்க்கான சுய வேலைவாய்ப்புகள் குறித்தும், சுற்றுச்சூழலைக் காப்பதில் மகளிரின் பங்கு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இக்குழுவின் சிறப்பு அம்சங்களாகும்.

*– உறுப்பினர் செயலர்,*
*தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,*
*சென்னை*



# விருதுநகரில் நெசவாளர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சி முகாம்

விருதுநகர் மாவட்ட நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.25.30 கோடியில் தொடங்கப்பட்ட திட்டத்தின் ஊக்குவிப்பு பயிற்சி முகாம் விருதுநகரில் நடத்தப்பட்டது.



பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் விருதுநகர் சரகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இலவச சேலை உற்பத்தியில் ஈடுபட்ட நெசவாளர்களுக்கு நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய தொழில்நுட்பம் அடங்கிய துணி இரகங்கள் நெய்வதற்கான முன்னேற்பாட்டிற்கான ஊக்குவிப்பு பயிற்சி முகாம் 27.5.2004 அன்று விருதுநகரில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் பொருட்டு 13 மாவட்டங்களைச் சேர்ந்த இலவச வேட்டி, சேலை நெய்யும் நெசவாளர்களுக்கு சிறப்புத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.10.2003 அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.25.30 கோடியில் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டமானது தமிழகத்திலுள்ள விருதுநகர், தேனி, திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களிலுள்ள 350 கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 19,500 நெசவாளர்களுக்கும் அவர் தம் குடும்பங்களைச் சேர்ந்த மகளிர்கள் 4,500 நபர்களுக்கும் ஆக மொத்தம் 24,000 நெசவாளர்களுக்கு பயனளிப்பதாகும். இலவச வேட்டி சேலைக்குப் பதிலாகப் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி புதிய வடிவமைப்புகளில் துணி உற்பத்தி செய்தல் மற்றும் கூடுதல் இலாபம் ஈட்டும் நோக்கத்தோடு விலை கூடிய இரகங்கள் உற்பத்தி செய்தல் ஆகியவை குறித்தான சிறப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாம் விருதுநகர் சரகத்திலுள்ள 55 சங்கங்களில் உள்ள 291 உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இம்முகாம் 27.5.2004 முதல் 29.5.2004 வரை மூன்று நாட்கள் நடத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நெசவாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சி முகாமினை 27.5.04 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ.முகமது அஸ்லம், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்து,

"இன்றைய தினம் தொடங்கப்பட்டுள்ள பயிற்சி முகாமில், தேனி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த நெசவாளர்கள் கலந்துகொள்கின்றனர். இந்த முகாம் 3 நாட்கள் நடைபெற்றது. இதேபோல் நாகர்கோவில், வேலூர், திருச்செங்கோடு ஆகிய மாவட்டங்களிலும் இந்தப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது'' என்று தெரிவித்தார்கள்.

மேலும், "விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், 53 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 7,753 நபர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சியின் மூலம் கைத்தறி நெசவாளர்கள் புதிய முறையில் தறிகளை அமைத்து அதிக இலாபம் ஈட்டக்கூடிய வகையில் புதிய வடிவமைப்புகளில் வேட்டி, சேலைகள் உற்பத்திச் செய்ய முடியும். இதற்காக சென்னையில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பேஷன் டெக்னாலஜி என்ற தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த 50 பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்கள் மற்றும் 5 வடிவமைப்பு ஒருங்கிணைப் பாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு கடன் உதவி வழங்கும் பொருட்டு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குழுவிற்கு 20 என்ற அடிப்படையில் 1,200 குழுக்கள் அமைக்கப்பட்டு, நெசவாளர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் வேட்டி, சேலை மற்றும் இதரத் துணி வகைகள், கைத்தறிகள் உலக தாராளமயமாக்கப்பட்டுள்ள பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் சைனா மற்றும் கொரியா போன்ற நாடுகளுக்கு போட்டிபோடும் வகையில் தரத்தை மேம்படுத்த இயலும். பயிற்சி பெற்ற நெசவாளர்களுக்கு புதிய வடிவமைப்புகளில் நெய்வதற்கு ஏற்றாற்போல் தறிகளை மேம்படுத்திக் கொடுத்தல், அவர்களுக்குத் தேவைப்படும் கடன் உதவிகள் வழங்குதல் ஆகியவை செய்து தரப்படும். பயிற்சி பெறும் ஒவ்வொரு நபர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகின்றது.



எனவே, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, இத்திட்டத்தில் நன்கு பயிற்சி பெற்று வாழ்க்கையில் வளர்ச்சியடைய இத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பேஷன் டெக்னாலஜி பதிவாளர் எஸ். தேவதாஸ் வரவேற்றுப் பேசினார். ஹைதராபாத் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பேஷன் டெக்னாலஜி பதிவாளர் திரு.பசந்த்குமார் சிறப்புரையாற்றினார். திட்ட அலுவலர் திரு. டி.கே.எஸ். மணிமந்திரி விளக்கவுரையாற்றினார். சென்னையில் உள்ள நேஷனல் இன்ஸ்ட்டியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி நிறுவனத்தின் தலைமை வடிவமைப்பாளர், 5 வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 50 பயிற்சிபெற்ற வடிவமைப்பாளர்கள் கலந்துகொண்டு புதிய வடிவமைப்புகள் பற்றி விரிவாக உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தனர்.

28.5.2004 அன்று நடைபெற்ற பயிற்சியில் இலவச சேலை உற்பத்தியில் ஈடுபட்ட நெசவாளர்களுக்கு நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக்கழக நிர்வாக இயக்குநர் திரு.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

29.5.2004 அன்று நடைபெற்ற பயிற்சியில் நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நெசவாளர்கள் எவ்வகையில் செயல்பட வேண்டும் என்பது குறித்து புதிய வடிவமைப்புகளின் தேவை ஆகியவை பற்றியும் திரு. ரஞ்ஜித் சிறப்புரையாற்றினார். இறுதியில் கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் அவர்கள் இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகள் செய்துள்ள நிதி உதவி, அவற்றின் நோக்கம் பற்றி விரிவாக விளக்கி, நெசவாளர்கள் காலத்தின்- தேவைக்கேற்ப மனமாற்றம் ஏற்படுத்திக்கொண்டு புதிய வடிவமைப்புகளை நெய்வதிலும், விலை கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்கும் ஆர்வமும், ஆக்கமும் வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். இம்முகாமில் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மிகவும் ஆர்வமாகவும், உற்சாகமாகவும் கலந்துகொண்டனர். "தங்களுக்கு இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது'' என பயிற்சியில் கலந்துகொண்ட நெசவாளர்கள் தெரிவித்தனர் . புதிய வடிவமைப்புடன் கூடிய மாற்று இரக துணி உற்பத்திக்கு உறுதுணையாக இருப்போம் எனவும் அரசு திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்துவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

– பி. முத்தையா,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*விருதுநகர்.*



# மக்கள் நலம் பாதுகாக்கும் தமிழக அரசின் அறிவிப்புகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை

18.5.2004



தமிழகத்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுகின்ற மக்கள் அரசாகவே என்னுடைய அரசு என்றைக்கும் இருந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து தாக்கி வரும் வறட்சியின் காரணமாக, தாங்கவியலாத பொருளாதார பெருங்கஷ்டத்தை தமிழ்நாடு எதிர்நோக்க வேண்டியிருந்தது. கடந்த தி.மு.க. அரசு விட்டுச்சென்ற கடுமையான நிதிச் சீரழிவின் காரணமாக இந்த நிலை இன்னும் மோசமாகிப் போனது. இந்த நிலைமையை சரிப்படுத்துகின்ற அதே வேளையில் மக்கள் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய தலையாய எண்ணமாக இருந்தது. பருவமழை சிறப்பாகப் பெய்யும் என்றும், இதனால் எதிர்வரும் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் தமிழகம் அதன் இயல்பான நிலைக்குத் திரும்பும் என்றும் நான் நம்புகிறேன்.

தமிழக மக்களின் தேவைகள் அனைத்தையும் எப்பொழுதும் நிறைவு செய்து வருகின்ற மக்கள் அரசுதான் என்னுடைய அரசு. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகின்ற பொது விநியோகத் திட்டமே இந்தியாவிலேயே மிகச் சிறந்த பொது விநியோகத் திட்டம் என்பதை எனது

அரசு உறுதிப்படுத்தியுள்ளது. விவரமான அறிக்கைகள் இதனை உறுதி செய்துள்ளன. மிகக் கடுமையான வறட்சிக் காலத்தில் கூட, என்னுடைய அரசு தமிழகத்தில் உள்ள 28,000–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம் எந்தவித தடங்கலும் இல்லாத வகையில் அரிசி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்தது. மிகக் கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தியாவிலேயே இதுதான் மிகக் குறைவான விலை ஆகும். கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின்போது 2003 பிப்ரவரி திங்கள் முதல் 2003 ஆகஸ்ட் திங்கள் வரை ஏறத்தாழ 10 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் மற்றும் சிறு விவசாயக் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ வீதம் இலவசமாக அரிசி வழங்கப்படுவதை உறுதி செய்தேன். இதனால், தமிழ்நாட்டில் பட்டினிச்சாவுகள் என்பது முழுவதுமாக தவிர்க்கப்பட்டது. இவ்வாறு, தமிழகத்தில் உணவுப் பாதுகாப்புக்கு தலையாய முன்னுரிமை வழங்குவது ஏற்கெனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து பொதுமக்கள் பெருமளவில் பயன்பெறும் வகையில் தற்போதுள்ள விநியோக முறையை மேலும் மேம்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

குடும்ப அட்டைகள் மீது 'H' முத்திரையிடும் முறை உடனடியாக திரும்பப் பெறப்படுகிறது. 'H' முத்திரையிடப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் இந்த முத்திரை பெறுவதற்கு முன்னர் நியாய விலைக் கடைகளில் என்னென்ன பொருள்களை பெற்று வந்தார்களோ அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

மாதத்திற்கு ரூபாய் 5,000 வரை வருமானம் உள்ளவர்கள்தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு தகுதி உள்ளவர்கள் என வரையறுக்கப்பட்ட வருமான வரம்பு உடனடியாக விலக்கப்படுகிறது.

தங்களுக்கு குடும்ப அட்டைகள் இல்லை என்றும், புதிய அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ள குடும்ப தாரர்கள் புதிய குடும்ப அட்டை பெற எதிர்வரும் 2004–ஜூன் திங்கள் 1ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை மாவட்டங்களில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களிலும், சென்னையில் உள்ளவர்கள் உணவு பொருள் வழங்கும் உதவி ஆணையர் அலுவலகங்களிலும் விண்ணப்பிக்கலாம். இதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உரிய ஆய்வுக்கு பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.





தற்போதுள்ள அனைத்து குடும்ப அட்டைகள் 31.12.2004 வரை செல்லுபடியாகும். இந்த குடும்ப அட்டைகளை புதுப்பிக்க விரிவான கால அட்டவணை வகுக்கப்பட்டு தனியாக அறிவிக்கப்படும். இவ்வாறு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படும்போது அரிசியுடன் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் பெறும் வகையிலும் அல்லது சர்க்கரை / மண்ணெண்ணெய் மட்டுமே பெறும் வகையிலும் குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். தற்போது உள்ள நடைமுறைப்படி விருப்பத்தின் பேரில் அரிசி அட்டைக்கு பதிலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் அட்டை பெற இயலும்.

நியாயவிலைக் கடைகளில் கூப்பன் கொடுத்து அரிசி பெறுகின்ற முறை எதிர்வரும் ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நிறுத்தப்படும். நடப்பில் உள்ள அரிசி பெறத் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் கூப்பன் முறை இல்லாமலேயே தங்கள் அட்டைகளுக்குரிய அரிசியை 2004 ஜூலை திங்கள் முதல் தேதியிலிருந்து நியாய விலைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

*1998ஆம் ஆண்டின் மின்சார ஒழுங்கு முறை* ஆணைய சட்டத்தின்படி குடிசைகள் மற்றும் விவசாய பம்பு செட் வைத்துள்ள நுகர்வோர் உள்பட அனைவருக்கும் மீட்டர் பொருத்தப்பட்டு, இலவச மின்சாரம் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை நிறைவேற்றும் வகையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு





சம்மதம் தெரிவித்து முந்தைய திமுக அரசு துரிதப்படுத்தப்பட்ட எரிசக்தி மேம்பாட்டுத் திட்டத்தின் (Accelerated Power Development Programme) கீழ் கடந்த 2001 ஆம் ஆண்டு நிதியைப் பெற்றுக் கொண்டது. இதன்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை செயல்பாடு உடையதாக ஆக்க வேண்டியதுடன், 31.12.2003க்குள்ளாக அனைத்து நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்துவதை உறுதி செய்திடவும் வேண்டிய கட்டாயம் எனது அரசுக்கு ஏற்பட்டது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பாக கட்டண சீரமைப்புக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முந்தைய திமுக அரசு ஏற்கெனவே இதற்கான நிதியை பெற்றுக் கொண்டுவிட்ட காரணத்தால், தமிழ்நாடு அரசுக்கு இதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

2001 மே திங்கள் முதல் எனது அரசால் பின்பற்றப்பட்டு வந்த, விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கும், கிராமப்புறங்களில் உள்ள குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடரப்பட வேண்டும் என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பாக என்னுடைய அரசு வேண்டுகோள் விடுத்தது. எனினும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 1998ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தில் வகுத்தளிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி விவசாய பம்பு செட்டுகள் அனைத்திற்கும் ஒரு யூனிட்டுக்கு 20 பைசா அல்லது ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 250 என்று புதிய கட்டண விகிதத்தை நிர்ணயித்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் புதிய கட்டண விகிதத்தை அறிவித்த போதிலும், தமிழ் நாட்டிலுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளும், குடிசைவாசிகளும் தங்களுடைய மின்சாரக் கட்டணத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்துகின்ற வகையில் நிதி உதவி வழங்குகின்ற ஒரு திட்டத்தை அறிவித்தேன். மேலும், இத்திட்டத்தை 2004 பிப்ரவரி திங்கள் முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயி களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தி ஆணையிட்டேன். தமிழ்நாட்டிலுள்ள விவசாயி களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்துடன் இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்த ஒரே அரசு என்னுடைய அரசுதான்.

இத்திட்டத்தின்படி. பணஅஞ்சல் மூலம் வழங்கப்படுகின்ற நிதி உதவியால் தங்களுக்கு தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டாலும், விவசாயிகளுக்காக அரசாங்கமே நேரடியாக மின்சார வாரியத்திற்கு இந்த நிதியை வழங்குகின்ற வகையில் இந்த நடைமுறையை எளிமைப்படுத்தலாம் என்று விவசாயக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்து தெரிவித்துக் கொண்டனர்.

**தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயி களும், குடிசைவாசிகளும் முற்றிலும் இலவசமாக மின்சாரம் பெற்றிட நான் தற்போது ஆணை யிட்டுள்ளேன். இதன்படி, விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணம் முழுமையாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசே நேரடியாக செலுத்திடும்.** 2003–2004 இரண்டாவது அரை ஆண்டிற்கான பண அஞ்சல்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. **எனவே, இந்த முற்றிலும் இலவச மின்சாரத் திட்டம் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற 2004–2005ன் முதல் அரையாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.**

முந்தைய திமுக அரசு அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்ற ஷரத்து உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டதின் அடிப்படையில் நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட போதிலும், **விவசாய பம்பு செட்டு இணைப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டியதில்லை என்று நான் இப்பொழுது ஆணையிட்டுள்ளேன்.** இதனை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவிக்கும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின்



மூலம் தற்போது 2 வயது முதல் 15 வயது வரையிலான அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த திட்டம் உணவுப் பாதுகாப்பு வழங்குகின்ற மிக முக்கியமான திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு குழந்தையும் சரிவிகித சத்துணவு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கும், மேலும் இரண்டு நாட்கள் பருப்பு வகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே ஆணை யிட்டிருந்தேன். இந்த உணவை மேலும் சத்துள்ளதாக ஆக்க வாரத்தில் ஒரு நாள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு முட்டை வழங்கிட தற்போது நான் ஆணையிட்டுள்ளேன். வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கு, மற்றொரு நாள் பருப்பு வகைகள் என்பதுடன் கூடுதலாக முட்டை வழங்கப்படும்.



தமிழ்நாட்டில் உள்ள மாணவ மாணவியர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்திலும், அனைவருக்கும் கல்வி என்னும் கொள்கைக்கு உண்மையான அர்த்தம் தரும் வகையிலும் எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து தொடங்குகின்ற புதிய கல்வி ஆண்டு முதல் 1ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பயிலுகின்ற மாணவ மாணவியர்களுக்கு, அவர்களது வீட்டிலிருந்து பள்ளி சென்று வர இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த இலவச பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும்.

இதே போல, எதிர்வரும் 2004 ஜூன் முதல் தேதியிலிருந்து, தனியார் கல்லூரிகள் உட்பட அனைத்து கல்லூரிகளிலும் படிக்கின்ற அனைத்து மாணவ மாணவியர்களும் தங்கள் வீட்டிலிருந்து கல்லூரி சென்று வர ஏதுவாக 50% சலுகையுடன் பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்படும். இந்த பேருந்து பயண சலுகை அட்டைகள் எல்லா விடுமுறை நாட்களிலும் செல்லத்தக்கது ஆகும். சென்னை மாநகர கல்லூரி மாணவர்கள் சென்னை



பெருநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய தற்போது 40 மாற்றிக் கொள்ளத்தக்க கூப்பன்கள் வழங்கப்படுவதற்கு மாற்றாக இனி 60 கூப்பன்கள் வழங்கப்படும்.

1991–96ஆம் ஆண்டில் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் கேட்காமலேயே அவர்களுக்கு சலுகைகள் தவறாது வழங்கப் படுவதை நான் உறுதி செய்தேன். எனது அரசு நிதி நிலையை மிக ஆரோக்கியமாக வைத்திருந்ததன் காரணமாக இது சாத்திய மாயிற்று. ஆனால், துரதிருஷ்டவசமாக கடந்த 2001 ஆம் ஆண்டில் முந்தைய திமுக அரசு முழுமையான பொருளாதாரச் சீரழிவில் இந்த மாநிலத்தை விட்டுச் சென்றது. அத்துடன் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய 1,800 கோடி ரூபாய் நிலுவைத் தொகையை 2003ஆம் ஆண்டிற்கு பின்னர் வழங்கும் வகையில் தள்ளிப் போட்டது. மே 2001இல் எனது அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மாதச் சம்பளம் கொடுக்கக் கூட அரசிடம் போதுமான பணம் இல்லை. மேலும், 2001–2002ஆம் ஆண்டில் மத்திய வரி வருவாயில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கில் மிகப்பெரும் வெட்டு விழுந்தது நிதிநிலையை மேலும் மோசமானதாக்கியது.

மிகவும் இயலாததொரு பொருளாதார சூழ்நிலை இருந்த போதிலும், எவ்வித தடையுமின்றி சம்பளமும், ஓய்வூதியமும் உரிய காலத்தில் வழங்கிட எனது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. அதே நேரத்தில், பொருளாதார நிலை சீரடைய சீரடைய அகவிலைப்படி கூடுதல் தவணை மற்றும் இதர சலுகைகளை எனது அரசு வழங்கிக் கொண்டிருந்தது. இதன்படி, இன்றைக்கும் வேறு மாநிலங்களில் வழங்கப்படுவதைக் காட்டிலும், அதிக அளவிலான அகவிலைப்படியை எனது அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எனது அரசு தன்னாலான உயர்நன்மை செய்வதை நான் உறுதி செய்தேன்.

துரதிருஷ்டவசமாக, சில அரசியல் கட்சிகளால் தவறாக வழி நடத்தப்பட்ட அரசு ஊழியர் சங்கங்களும், ஆசிரியர் அமைப்புகளும் 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. கருணை அடிப்படையில், பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களையும் திரும்ப பணியில் சேர்த்துக் கொள்ள நான் ஆணையிட்டு 10.2.2004 அன்று சட்டமன்றப் பேரவையில் இதனை அறிவித்தேன்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் அரசுக்கு உள்ள நல்லுறவை மேம்படுத்தவும், அரசு ஊழியர்கள் அனைவரும் புதிய உற்சாகத்தோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் மக்களுக்கு சேவை செய்வார்கள் என்ற நம்பிக்கையோடும், 2003ஆம் ஆண்டு ஜூலையில் வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான அனைத்து தண்டனைகளையும் பெருந் தன்மையுடன் ரத்து செய்வதோடு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்தையும் திரும்பப் பெறவும் நான் முடிவெடுத்து உள்ளேன். இது உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. இந்த நல்லெண்ண நடவடிக்கையை பிரதிபலிக்கும் வகையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் என்னுடைய அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழ்ங்குவார்கள் என்று நம்புகிறேன்.

2003 ஜூலையில் நடந்த அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தின் பின்னணியில் அரசியல் கட்சித் தலைவர்கள் இருந்தார்கள் என்பதை எனது அரசு அறிந்துள்ள போதிலும், இந்தப் பிரச்சினையை ஒட்டு மொத்தமான ஒரு முடிவுக்குக் கொண்டு வர ஏதுவாக, 2003 ஜூலையில் நடைபெற்ற அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தின் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்களுக்கு எதிராக தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ், அரசால் தொடுக்கப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்றிட நான் ஆணையிட்டுள்ளேன்.

பத்திரிகைகள் செய்திகள் வெளியிடும் போது உண்மையை உள்ளபடி சரியாக வெளியிட வேண்டும் என்பதும், அதனைத் திரித்துக் கூறுகின்ற போக்கு ஊடே நுழைந்து விடக்கூடாது என்பதும் எப்பொழுதும் என்னுடைய எண்ணம் ஆகும். இல்லாவிடில், மக்களை விரும்பத்தகாத முடிவுகளுக்கு அழைத்துச் செல்லுகின்ற தவறான வழிகாட்டுதலாக அமைந்துவிடும். எந்தக் காலத்திற்கும் ஏற்ற இந்த மிக முக்கியமான கொள்கையை பத்திரிகைகளும், தொலைக் காட்சிகளும் சற்றும் வழுவாது பின்பற்றும் என்ற நம்பிக்கையுடன், பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி அமைப்புகள் மீது அரசு தொடுத்துள்ள அனைத்து அவதூறு வழக்கு களையும் உடனடியாகத் திரும்பப் பெற நான் ஆணையிட்டுள்ளேன். இந்த நல்லெண்ண நடவடிக்கைக்கு ஏற்ப பத்திரிகைத் தர்மத்தின் சிறந்த பாரம்பரியத்தை காப்பாற்றி ஒருசார்பற்ற முறையில் செய்திகள் வெளியிடுவதை பத்திரிகைகளும், தொலைக்காட்சி அமைப்பு களும் உறுதிப்படுத்தும் என்பதில் நான் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளேன்.

2003ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக 'தி ஹிந்து' மற்றும் பிற நாளிதழ்கள் மீதான நடவடிக்கைகள் அனைத்தையும் கைவிடக் கோரும் தீர்மானத்தை என்னுடைய அரசு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழியும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கௌரவம், கண்ணியம் மற்றும் உரிமைகளுக்கு தக்க மதிப்பளிக்கும் வகையில் இந்த நாளேடுகள் பொறுப்பான முறையில் செயல்படும் என்று நான் நம்புகிறேன்.

கிறிஸ்தவர்கள் ஆனாலும், இஸ்லாமியர்கள் ஆனாலும் அல்லது வேறு எந்த சிறுபான்மை சமுதாயத்தினரானாலும் அவர்களின் உரிமைகளையும், நலனையும் காப்பதில் எனது அரசு ஒரு வலிமையான பாதுகாவலனாக எப்பொழுதும் இருந்து வருகிறது. எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த 1991–96 ஆண்டுகளானாலும் சரி, அதன் பின்னர் மீண்டும் 2001 மே முதலான ஆண்டுகளானாலும் சரி, ஒவ்வொரு சிறுபான்மை சமுதாயத்தினரின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது நலன்களை மேம்படுத்துவதில் என்னுடைய அரசின் சாதனைகள் மிக மேம்பட்டு நிற்பதை காண முடியும். இன்றைக்கு மதச்சார்பற்ற சக்தி களாக பொய் வேடம் புனைந்து பவனி வருபவர்கள்தான் சிறுபான்மை சமுதாயத்தின் நியாயமான நலனுக்காக தங்களது சுண்டு விரலைக் கூட அசைக்காமல் அவர்களது பரிதாபகரமான துன்பங்களுக்கும், இழிவு களுக்கும் பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

என்னுடைய ஆட்சிக் காலத்தில் எல்லாம் சிறுபான்மையினரின் முழுப்பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. மத நல்லிணக்கம் மேம்படுத்தப்படுகிறது. எப்பொழுதுமே என்னுடைய ஆட்சிக் காலத்தில் தான், தமிழகம் சஞ்சலமற்ற ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. திமுக ஆட்சிக் காலத்தில்தான் சிறுபான்மையினர் பாதிப்புக்கு உள்ளாயினர்.

அனைத்து மதங்களுக்கும் இடையே மத நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் எனது அரசு 2002ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டாய மதமாற்றத்தடைச் சட்டத்தை இயற்றியது. சிறுபான்மையினருக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும் என்பது இந்தச் சட்டத்தின் நோக்கமே அல்ல. எனினும், சில சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள், இந்த சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாலும், இந்தச் சட்டத்தின் காரணமாக தவறான கருத்துகள் ஏற்பட்டிருந்தால் அவற்றைக் களைந்திடும் வகையிலும், தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளேன். இதற்கான அவசரச் சட்டம் உடனடியாகக் கொண்டு வரப்படும். சிறுபான்மை சமுதாயத்தினரின் உண்மையான நண்பனாகவும், அவர்களது பாதுகாவலனாகவும் எனது அரசு எப்பொழுதும் விளங்கும்.

❖ ❖ ❖



# சென்னை அரசு பொது மருத்துவமனை

ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவ மனையாகக் கருதப்படும் இந்தியாவின் முதன்மையான மருத்துவமனையான சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. நாள்தோறும் ஆயிரக்கணக் கானோருக்கு சிகிச்சையளிக்கும் இம்மருத்துவமனை, 1664 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனியின் ராணுவ வீரர்களுக்கு சிகிச்சையளிக்கும் சிறிய மருத்துவமனையாக தொடங்கப்பட்டது. சென்னையில் இதனைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர், கிழக்கிந்திய கம்பெனியின் முகவராகப் பணிபுரிந்த சர் எட்வர்ட் விண்ட்டர் ஆவார். ஆரம்ப காலத்தில் இம்மருத்துவமனை புனித ஜார்ஜ் கோட்டையில் இயக்கப்பட்டது. பின்னர், அப்பொழுது கவர்னராக இருந்த சர் எலிஹு ஏல் என்பவர் இம்மருத்துவமனையின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்ததோடு 1690ஆம் ஆண்டு கோட்டைக்குள் இம்மருத்துவமனைக்கு தனி இடம் ஒதுக்கித் தந்தார்.

ஆங்கிலேய – பிரஞ்சுப் போருக்குப்பின் இம்மருத்துவமனை கோட்டைக்கு வெளியே, 1772ஆம் ஆண்டு தற்பொழுது உள்ள இடத்தில் நிறுவப்பட்டது. இந்த ஆண்டில் இம்மருத்துவமனை ஆங்கிலேயர் மற்றும் உள்ளூர்வாசிகளுக்கு மருத்துவத்திலும், மருந்துகள் தயாரிப்பதற்கும் பயிற்சியளித்து வந்தது. பயிற்சி முடித்தவர்கள் சென்னை மாகாணத்தில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு, மருத்துவர்களுக்கு உதவுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

1820ஆம் ஆண்டில் இந்நிறுவனம் கிழக் கிந்தியக் கம்பெனியின் ஒரு மாதிரி மருத்துவமனையாகப் பெயர் பெற்றது. 1827ஆம் ஆண்டு டாக்டர் டி.மோர்ட்மார் இம்மருத்துவமனையின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். டாக்டர் மோர்ட்டிமாரால் நடத்தப்பட்ட அவரது தனியார் மருத்துவ அரங்கம் ஒரு மருத்துவப் பள்ளியாக அங்கீகாரம் வழங்கப்பட்டு, அப்போதைய கவர்னர் சர் பிரடெரிக் ஆடம்ஸ் அவர்களால் 1835ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பள்ளியை அரசு ஆதரவு பெற்ற பள்ளியாக அறிவித்து ஆணையிட்ட கவர்னர் அதனை பொது மருத்துவமனை யோடு இணைத்து உத்தரவிட்டார்.

1842ஆம் ஆண்டு இந்தியர்கள் இம் மருத்துவ மனைக்குள் அனுமதிக்கப்பட்டனர். அடுத்த 20 ஆண்டுகளில் பயிற்றுநர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு, பயிற்சிக் காலம் அதிகரிக்கப் பட்டு, பாடத்திட்டம் பல்வகைப் பயிற்சிகளுடன்



செம்மைப்படுத்தப்பட்டது. ஐந்தாண்டுகள் பயிலும் மேற்படிப்புகள் தொடங்கப்பட்டு, தனி நபர்கள் முதன் முறையாக இந்நிறுவனத்தில் சேர்க்கப்பட்டனர்.

1850 ஆம் ஆண்டிற்கு முன் இம்மருத்துவப் பள்ளியின் மன்றக்குழு, இப்பள்ளிக்கு கல்லூரி அந்தஸ்து வழங்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வைத்தது. அரசு இக்கோரிக்கையினை ஏற்றுக் கொண்டதுடன், **1850 ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் நாள் இப்பள்ளி சென்னை மருத்துவக் கல்லூரி என்று உயர்த்தப்பட்டது. 1852 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் முதல் பட்டதாரிகள் குழுவுக்கு சென்னை மருத்துவக் கல்லூரியின் பட்டயச் சான்று வழங்கப்பட்டது.**

1857 ஆம் ஆண்டு இம்மருத்துவக் கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. உலக அளவில் ஆங்கிலம் பேசும் நாடுகளின் முதல் பெண் மருத்துவரையும் இந்தியாவின் முதல் பெண் மருத்துவரையும் வழங்கிய பெருமை வாய்ந்த மருத்துவக் கல்லூரியாக சென்னை மருத்துவக் கல்லூரி திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1857இல் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பிறகு, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவத்திலும், அறுவை சிகிச்சையிலும் பயிற்சி யளிக்கும் தலைசிறந்த நிறுவனமாக உருவெடுத்து, தற்பொழுது மருத்துவப் பட்டப்படிப்பையும், மருத்துவ பட்டமேற்படிப்பையும் மருத்துவம் தொடர்பான பல்வேறு தனித்துறை பயிற்சி படிப்புகளையும் கற்பித்து, நாட்டின் முதன்மையான மருத்துவக் கல்வி நிலையமாகத் திகழ்கின்றது.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் எதிரே பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து அமைந்துள்ள இந்த அரசு பொது மருத்துவமனையின் மொத்த பரப்பளவு 47.5 ஏக்கர் ஆகும்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் மொத்தம் 9 மருத்துவமனைகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சென்னை அரசு பொது மருத்துவமனையில் 2,029 படுக்கைகளும், சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மனநலக் காப்பகத்தில் 1,800 படுக்கைகளும், சென்னை எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் 752 படுக்கைகளும், சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் 537 படுக்கைகளும், சென்னை எழும்பூர் மண்டலக் கண் மருத்துவமனையில் 478 படுக்கைகளும், சென்னை கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் 695 படுக்கைகளும், சென்னை கே.கே.நகர் மறுவாழ்வு மைய மருந்தகத்தில் 60 படுக்கைகளும், சென்னை பெரியார்நகர் புறநகர் அரசு மருத்துவமனையில் 100 படுக்கைகளும் கொண்டு ஆக மொத்தம் 6,451 படுக்கைகளுடன் இயங்கி வருகிறது. இவை தவிர சென்னை தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், ராஜ்பவன் ஆளுநர் மாளிகை, சென்னை சேத்துப்பட்டு அரசு நெஞ்சக மருத்துவமனை ஆகியவற்றில் புறநோயாளிகள் பிரிவுகள் மட்டும் இயங்கி வருகின்றது.

சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு தற்பொழுது புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இரண்டு அடுக்குமாடிக் கட்டடமாகக் கட்டப்பட்டு வரும் இதில், ஒவ்வொன்றிலும் 7 மாடிகளுடன் கட்டடம் கட்டப் படுகின்றன. கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. வளர்ந்து வரும் மருத்துவ வளர்ச்சிக்கேற்ப மருத்துவ சிகிச்சையில் சிறப்புமிக்க அதிநவீன சிகிச்சைகளை அளிக்கும் வண்ணம், பல்வேறு மருத்துவத்துறைகளின் சிகிச்சைப் பிரிவுகளும் இந்தக் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. தீவிர சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, அதிநவீன தொழிற்கூடங்களுடன் 1,800 படுக்கைகள் கொண்டதாக இது அமையவுள்ளது. புறநோயாளிகள், பார்வையாளர்கள் எளிதாக வந்து செல்லும் வண்ணம் விரிவான வசதிகளுடன் தரைத்தளம் அமைக்கப்பட்டு வருகின்றது. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும். இம் மருத்துவமனை வளாகத்தால் சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பொது மக்களும், நோயாளிகளும் மிகுந்த பயனைப் பெறுவார்கள் என்பது உறுதி.

❖ ❖ ❖

## தெரிந்து கொள்வோம்

- ❖ இன்சுலின் சர்க்கரை வியாதி நோயாளிகளுக்குத் தேவைப்படுகிறது.
- ❖ மனிதனின் இதயம் நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கிறது.
- ❖ மனித உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி கல்லீரல்.
- ❖ பெண் அனோபிலஸ் கொசு பரப்பும் நோய் யானைக்கால்.
- ❖ பென்சிலின் என்ற ஆன்டிபயாடிக் காளானிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
- ❖ மூளையின் சுவாச மையம் மெடுல்லா.
- ❖ விலா எலும்புகளின் இடையில் இருக்கும் தசையின் பெயர் இன்டர் காஸ்டல் தசை.
- ❖ இறந்த விலங்குகளை பாதுகாக்கும் கலையின் பெயர் டாக்லிடெர்மி.
- ❖ மனிதனுடைய ஒவ்வொரு செல்லிலும் காணப்படும் குரோமோசோம்களின் எண்ணிக்கை 46.
- ❖ இயற்கைத் தேர்வுக் கொள்கையை வெளியிட்டவர் டார்வின்.

❖ ❖ ❖





# கவிஞர் என்றால் அது கண்ணதாசன்

கண்ணதாசனின் கவிதைத் திறனைப் பாராட்ட மறந்தால் – நான் தமிழ் மொழியை அறியாதவன் ஆகி விடுவேன்.

கவிதைத் துறையில் அவருக்குத் தனி இடம் உண்டு.

**– பேரறிஞர் அண்ணா**

மற்றவர்கள் கவிதை எழுதினார்கள். கவியரசு கவிதையாகவே வாழ்ந்தார். கவிஞர் என்றால் அது கண்ணதாசன் ஒருவரைத்தான் குறிக்கும் என்கிற அளவிற்கு அவருக்குப் புகழ் சேர்ந்தது.

பாரதி–பாரதிதாசனுக்குப் பிறகு தமிழுக்கு அவர்தான் என்பது நிலைமை! அவர் காலத்தில் வாழ்ந்தது தமிழர்களாகிய நமக்குப் பெருமை!

பல கவிஞர்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்த பிறகே வாழ்த்தப்பட்டார்கள். கவியரசு கண்ணதாசன் வாழ்ந்த போதே வரலாறாகிவிட்டார்!

அவர் சொன்னால் கவிதை – அவர் சொன்னதெல்லாம் கவிதை என்று வாழ்ந்தவர் அவர்.

‘மாங்கனி’ போன்ற காவியங்களை எழுதிய அவரது கரமே, கோடிக்கணக் கானவர்கள் கேட்டு மகிழ்கின்ற எளிதான, இனிமையான திரைப்படப் பாடல்களையும் எழுதியது.



திரைப்படப் பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிக்குரிய அற்புதங்களாவதற்கு அவரே பெருங் காரணமாக இருந்தவர்.

அருவி நடை – ஆன்ற புலமை – அன்புள்ளம் – பிள்ளை மனது – உயர்ந்த சிந்தனை – உலகளாவிய பார்வை – இதுதான் கவியரசு கண்ணதாசன்.

**– டாக்டர் எம்.ஜி.ஆர்.**

பாடல்கள் என்றால், இலக்கணம் பயின்ற பண்டிதர்களுக்கு மட்டுமே, உரித்தான தனிப்பொருள், என்கின்ற நிலையை மாற்றி, சாதாரண மக்களும் புரிந்து கொள்கின்ற, பாடல்களைப் படைத்த முதல் புரட்சியாளர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார். பாரதியின் வழியைப் பின்பற்றி, கவிதைகளையும் பாடல்களையும் எழுதியவர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அவருக்குப் பின்னால் வந்த, ஆயிரக்கணக்கான கவிஞர்களின் நட்சத்திரக் கூட்டத்தில், சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற பூரண சந்திரனாக விளங்குபவர், கவியரசு கவிஞர் கண்ணதாசன் அவர்கள். இன்றும் தமிழ் இலக்கிய உலகில் தனது கவிதைகளாலும், பாடல்களாலும், அமரத்துவம் பெற்றவர் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

சிலரது பாடல்களில், கருத்து நயம் காணப் படுவதில்லை; சிலருடைய பாடல்களில், ஓசை நயம் காண்பது அரிது; சிலருடைய பாடல்களில், பொருட் செறிவு அமைவதில்லை. ஆனால் கண்ணதாசனின் பாடல்களிலும், கவிதைகளிலும், மூன்றும் முழுமையாகக் குடிகொண்டிருக்கும்; தெள்ளு தமிழ் துள்ளி விளையாடும்; இனிமைத் தேன் வெள்ளமாகப் புரண்டு ஓடும்; பொருள் நயம் களி நடனம் புரியும்.

கடுமையான முள் நீக்கி, கனிந்த பலாச் சுளையைப் பிரித்தெடுத்துக் கொடுப்பது போலக் கடுமையான இலக்கண வரம்புகளைத் தளர்த்தி, தனது மனதில் உள்ள கருத்துகளைச் சாதாரணப் பாமர மக்களும், எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம், கவிதை களையும், பாடல்களையும் படைத் திட்டவர் கவியரசு கண்ணதாசன். தான் வாழ்ந்த காலத்தில், மக்களின் வாழ்க்கையில், ஒரு கலாச்சாரப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்த, திரைப்படம் என்கிற வலிமைமிக்க சாதனத்தைப் பயன்படுத்தி, கருத்தாழம் மிக்க திரைப்படப் பாடல்கள் மூலமாகத் தனது கருத்துகளை மக்கள் மத்தியில் பரப்பி, மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்த பெருமை, கவியரசு கண்ணதாசனுக்கு என்றென்றும் உண்டு.

இலக்கணப் போர்வையில் மறைத்து வைக்கப்பட்ட இலக்கியங்களில் உள்ள, செறிவு மிக்க கருத்துகளைப் பாமர மக்களும் புரிந்து கொள்ள வழி வகுத்தவர், கவிஞர் கண்ணதாசன் அவர்கள்.

வாழ்க்கை அனுபவங்களையே, கவிதைகளாக வடித்துத் தந்தவர், கவிஞர் கண்ணதாசன். அவரது அனுபவங்கள் அவர் கவிதைகளுக்கு, உயிராகவும், உடலாகவும் இருந்தது என்றால், அது மிகையாகாது.

தமிழ்த்தாயின் சீரிளமை குன்றாமல் அதே நேரத்தில், கால வெள்ளோட்டத்தால், இசைத் தமிழ்ப்பாடல்கள், மடிந்து விடாமல் இருக்க அவற்றைப் புதிய வடிவத்தில் பாமர மக்களும் உணர்ந்து, பாடி மகிழும் வண்ணம், தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றிய, புலவர் திருக்கூட்டத்தில், கண்ணதாசனுக்கு என்றென்றும் ஒரு தனி இடம் உண்டு.

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

**(சென்னையில் 9–12–1994 அன்று நடைபெற்ற கவியரசு கண்ணதாசன் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து...)**

❖ ❖ ❖



# ஏற்காடு கோடை விழா

சேலம் மாவட்டத்தில் முக்கியச் சுற்றுலாத் தலமாகவும், முதன்மையான கோடை வாழிடமாகவும், பசுமை காடுகளையும், ஏரி, பூங்காக்களையும், இயற்கை வளங்களையும் கொண்டு சேலம் நகரை ஒட்டியுள்ள சேர்வராயன் மலைத் தொடரில் அமைந்துள்ள ஏற்காட்டில், மாவட்ட நிருவாகம் மற்றும் சுற்றுலாத் துறையின் சார்பில் 29ஆவது ஏற்காடு கோடை விழா 26.5.04 முதல் 30.5.04 வரை சிறப்பாக நடைபெற்றது. விழாவின் தொடக்க நாளில் (26.5.04) மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், செய்தி – சுற்றுலாத்துறை அரசு செயலர் திரு.வ. ராமதாஸ், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப. அண்ணாவி அவர்கள் மலர்க் கண்காட்சி மற்றும் பல்துறை விளக்கக் காட்சிகளைத் தொடங்கி வைத்தார்கள். தோட்டக் கலைத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட மலர்க் கண்காட்சியில் சுமார் 500–க்கும் மேற்பட்ட மலர் வகைகள் 1,000 தொட்டிகளில் வரிசையாக அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது, சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்தது. இது தவிர ஏற்காடு ஏரியில் ரூ.50,000 மதிப்பீட்டில் மிதக்கும் மலர் கோபுரம் அமைத்து ஒரு வார காலம் வைக்கப்பட்டிருந்தது. இதை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டுகளித்து மகிழ்ந்தனர்.

விழாவிற்கு வருகை தந்த பயணிகளை மகிழ்விக்கும் வகையில் திறந்தவெளி அரங்கம் மற்றும் கலையரங்கில் ஒயிலாட்டம், தப்பாட்டம், கோல்கால் ஆட்டம், கரகாட்டம், நாட்டுப்புற ஆடல்–பாடல் நிகழ்ச்சிகள் மற்றும் மெல்லிசை நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடத்தப்பட்டது. விழாவில் கலந்துகொண்ட பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு விளையாட்டு, சமையல் மற்றும் கோலப் போட்டிகள், ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, நாய் கண்காட்சி மற்றும் படகுப் போட்டிகள் நடத்தப்பட்டன. கோடை விழாவினை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்ந்திடும் வகையில் அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் கண்காட்சியும் நடத்தப்பட்டது.

கோடை விழா நிறைவு நாளன்று, படகு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவு விழாவில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. அ. மில்லர்




அவர்கள், தோட்டக்கலைத்துறை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள். விழா நிகழ்ச்சிகளை தினசரி 5,000–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் கண்டு ரசித்தனர். மலைவாழிடங்களில் இதுபோன்று நடத்தப்படும் கோடை விழாக்கள் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்களுக்கு உற்சாகத்தையும், புத்துணர்வையும் அளித்தது என்றால் அது மிகையல்ல.

– திருமதி கோ. பூங்கோதை
சுற்றுலா அலுவலர், சேலம்.



# சுவடி நூலகங்களின் பதிப்பு முயற்சி

மோ. கோ. கோவைமணி

அச்சுக்கலை உருவாவதற்கு முன்னரே சுவடிகளில் பதிப்பு முயற்சி நடைபெற்றிருக்கிறது. ஒரே நூல் கொண்ட பல சுவடிகளை ஆய்ந்து எழுதிய திருத்தச் சுவடிகளைச் சுவடிப்பதிப்புச்சுவடி எனலாம். இதன் வளர்நிலையில், அச்சுக்கலை அறிமுகமான பிறகு ஒரு நூல் கொண்ட பல சுவடிகளையோ ஒரு சுவடியையோ ஆய்ந்து சரியான பாடத்தைத் தெரிவு செய்து அச்சிட்டு வெளிப்படுத்தியதையே சுவடிப் பதிப்பு நூல்கள் என்கிறோம். தமிழில் முதல் சுவடிப்பதிப்பு நூல் கி.பி. 1812இல் திருக்குறள் – நாலடியார் எனும் இரண்டு நூல்களும் ஒரே பதிப்பாக வெளி வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பல சுவடிப்பதிப்பு நூல்கள் தனிமனிதனால் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பல அமைப்புகளின் சுவடி நூலகத் தோற்றத்திற்குப் பிறகே சுவடி நூலகப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

## சுவடி நூலகம்

வாய்மொழியாக வழங்கி வந்த இலக்கியங்கள்/இலக்கணங்கள் ஆசிரியராலோ மாணாக்கர்களாலோ பிறராலோ ஏட்டுருவம் பெற்றுப் பல படிநிலைகளில் அந்நூல்கள் பல்கிப் பெருகிப் பரவலாயின. புலவர்கள் எல்லோரிடமும் எல்லா வகையான நூல்களும் இருக்கும் என்று சொல்லமுடியாது. ஒருவரிடம் உள்ளது மற்றொருவரிடம் இல்லாதிருக்கின்றது. தங்களுக்குத் தெரிந்த தேவையான நூல்களை மட்டுமே அக்காலத்தில் அவர்கள் படியெடுத்து வைத்துக் கொண்டனர். மேலும் அவர்கள், தம் சுவடிகளுக்கு மாற்றுச் சுவடிகளைப் பெற்றும் வழங்கியும் இருக்கின்றனர். இப்படிப் பல புலவர்களிடம் பற்பல சுவடிகள் சேர்ந்திருக்கின்றன. இப்படியாகப் புலவர்கள் தம்முடைய நூல்களையும் பிறருடைய நூல்களையும் தொகுத்து வைத்திருந்தனர். ஒவ்வொரு புலவரிடமும் சுவடி நூலகம் ஒன்று நிச்சயம் இருந்திருக்க வேண்டும். இந்நூலகங்களில் ஒரு நூல் ஒரு படியை மட்டுமே கொண்டதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஒரு நூலின் இரண்டாவது படியை எழுதும், எழுதுவிக்கும் நேரத்திற்கும், ஆகும் செலவிற்கும் மற்றொரு தேவையான நூலை எழுதிவிடலாம் அல்லவா! இவ்வாறு இவர்கள் போற்றி வளர்த்துச் சேகரித்த சுவடிகள் இவர்களது வழித்தோன்றல்களின் கவனக் குறைவாலும், இயற்கைச் சீர்கேடுகளினாலும் மூடப் பழக்க வழக்கங்களினாலும், பல்வேறு காலகட்டங்களில் அழியத் தொடங்கின. இந்நிலைகண்ட தமிழறிஞர்களும் தமிழார்வலர்களும் சுவடிகளை மேலும் மேலும் அழிவிலிருந்து காக்க திரட்டவும் தொகுக்கவும் செய்தனர்.

சுவடிகள், புலவர்கள் வீடுகளில் மட்டுமல்லாமல் சில குறுநில மன்னர்கள், வளமனைகள், சைவ – வைணவ மடங்கள் போன்றவற்றில் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தன. குறுநில மன்னர்கள் மொழிப்புலமையும், புலவர்களைப் போற்றும் இயல்பும், சுவடிகளைச் சேகரிக்கும் தன்மையும் பெற்றிருந்தனர். இவ்வகையில் இராமநாதபுரம் சேதுபதிகள், சேற்றூர் மன்னர்கள், சிவகங்கைக் குறுநில மன்னர்கள், சொக்கம்பட்டி மற்றும் ஊற்றுமலை குறுநில மன்னர்களும், மருதுபாண்டியர், வரதுங்கராமபாண்டியர், அதிவீரராமபாண்டியர், அமைச்சர் வடமலையப்ப பிள்ளை ஆகியோரும் சுவடிகளைத் தொகுத்து வைத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

பழம்புலவர்களின் வழிமுறையினரும் சுவடிகளைப் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர், அம்பலவாணக் கவிராயர், திருவம்பலதின்னமுதம் பிள்ளை, திருப்பாற்கடனாதன் கவிராயர், திரிகூடராசப்பக் கவிராயர், அண்ணாசாமி உபாத்தியாயர், திருமயிலை சண்முகம்பிள்ளை, தே.இலட்சுமண கவிராயர், தி.த. கனகசுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

புலவர்களும், மன்னர்களும், குறுநில மன்னர்களும் சுவடிகளைச் சேகரித்து வைத்ததைப் போல் சில மடங்களும், இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. மடங்களின் / ஆதீனங்களின் வழியாகத் தொகுக்கப் பெற்ற சுவடிகள் பெரும்பாலும் சமயம் தொடர்பான சுவடிகளாகவே இருந்தன. அழிந்து போகும் நிலையில் உள்ள சுவடிகளை இம்மடங்கள் படியெடுத்து பாதுகாத்து வந்துள்ளன என்று

அறியும்போது பெருமையாக இருக்கிறது. இவ்வகையில் பணியாற்றிய மடங்களும் ஆதீனங்களும் சிலவே எனினும் சிறப்பாகப் பணியாற்றின எனலாம். சைவ மடங்களுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரி ஆதீனம், திருப்பனந்தாள் காசித் திருமடம், காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், மதுரைத் திருஞானசம்பந்தர் மடம், நெல்லைச் செங்கோல் மடம், திருகோவலூர் ஞானியார் மடம், குடந்தை வீரசைவ மடம், சிதம்பரம் வீரசைவ மடம், திருவண்ணாமலை வீரசைவ மடம், துறையூர் மற்றும் மயிலம் வீரசைவ மடங்களும் சுவடிகளைத் தொகுத்துப் பாதுகாத்து வந்தவையாகும். இதுபோல் வைணவ மடங்களும் கோயில்களும் வைணவச் சுவடிகளைச் சேகரித்து வைத்துள்ள செய்திகளையும் அறிய முடிகிறது. குறிப்பாகத் திருவரங்கம் கோயிலில் பலநூறு வைணவச் சுவடிகள் சேகரித்து வைத்திருந்தமை புலப்படும். இச்சுவடிகள் இன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் போற்றிப் பாதுகாத்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

புலவர்கள், மன்னர்கள், குறுநில மன்னர்கள், மடங்கள், ஆதீனங்கள் ஆகியன எல்லாம் சுவடிகளைச் சேகரித்தன/படியெடுத்தன என்றாலும் பயன்பாட்டினைப் பார்க்கும் போது, இவை சுயநலப்போக்கிலேயே இருந்துள்ளன. தங்களுக்காகவும், தங்களின் ஆய்வுக்காகவும் மட்டுமே இச்சேகரிப்புகள் பயன்பட்டு வந்துள்ளன. பொதுவாக ஒவ்வோர் இடத்திலும் சேகரித்து வைக்கப்பெற்ற சுவடிகளின் தொகுப்பைச் சுவடி நூலகம் என்று சொல்கிறோம். ஆயினும் இச்சுவடிகள் பொதுமக்களுக்குப் பயன்படுவதில்லை. எனவே, இவற்றை பெயரளவிலேயே சுவடி நூலகம் என்று சொல்ல முடிகிறது. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் எத்தொகுப்பு உள்ளதோ அதுவே முழுமையான சுவடி நூலகம் எனறு சொல்லலாம். இவ்வகையில் சுவடிகளைத் தொகுத்தலையும், சேகரித்தலையும், ஆராய்தலையும், நூல் வெளியிடுதலையும் முக்கிய நோக்கமாகக் கொண்ட சில அமைப்புகள் தோன்றின. இவ்வமைப்புகள் தாம் சேகரித்த சுவடிகளைத் தொகுத்து சுவடி நூலகம் ஒன்றைத் தனியே நடத்தி வருகின்றன. இந்நிலையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை, தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம்; மதுரைத் தமிழ்ச் சங்கம்; புதுவைத் தமிழ்ச் சங்கம்; கோவைத் தமிழ்ச்சங்கம்; சரவணபவானந்தம் பிள்ளை அவர்களின் பவானந்தர் கழகம்; மதுரைப் பல்கலைக்கழகம்; தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்; டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்; பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி சுவடி நூலகம்; சென்னை அடையாறு நூலகம்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; ஆசியவியல் நிறுவனம், சென்னை – கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்; கல்கத்தா தேசிய நூலகம் மற்றும் பல சுவடி நூலகங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்நூல்களைப் பற்றியும், அந்நூலகங்களின் பதிப்பு முயற்சிகள் பற்றியும் ஆய்வு விரியும். எனவே, முழுக்க முழுக்கச் சுவடிகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு இயங்கி வரும் சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் தஞ்சை, சரஸ்வதி மகால் நூல் நிலையம் ஆகிய இவ்விரண்டு நூலகங்கள் மட்டுமே இங்கு ஆய்வு பொருளாக எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

## சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

கணக்கியலில், ஆர்வமும் திறமும் மிகக் கூர்ந்த ஸ்காத்லாந்து நாட்டைச் சேர்ந்த கர்னல் காலின் மெக்கன்சி என்பார் தமிழகத்தில் சர்வேயர் ஜெனரலாக பணியாற்றினார். இவர் இந்திய நாட்டு வரலாறு, பண்பாடு பற்றி ஆராயும் போக்கில் அதற்குத் தேவையான ஓலைச்சுவடிகளையும், கல்வெட்டுகளையும் விலை கொடுத்து வாங்கியும், படியெடுத்தும் வைத்திருந்தார். 1818ஆம் ஆண்டு வரை தென்னாட்டில் இருந்து இப்பெருமகனார் தொகுப்புப் பணியை மேற்கொண்டார். இறுதியாக இந்தியாவின் சர்வேயர் ஜெனரல் என்னும் பதவி உயர்வு பெற்றுக் கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே தாம் தொகுத்த ஏட்டுச் சுவடிகளையும் கல்வெட்டுப் படிகளையும் உடன்கொண்டு சென்றார். 1821ஆம் ஆண்டு இப்பெருமகனார் இயற்கை எய்தினார். இவர்தம் தொகுப்பு நாட்டுக்குப் பயன்பட வேண்டி, கல்கத்தா ஆசிய சங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்தொகுப்பில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, அரபி, பாரசீகம், வடமொழி ஆகிய மொழிகளில் சுவடிகள் இருந்தன. இதில் தென்னிந்திய மொழிச் சுவடிகளை 1828ஆம் ஆண்டு சென்னைக் கல்விச் சங்கம் பெற்றது. இங்கு இச்சுவடிகள் படுத்துறங்கியதால் சென்னை இலக்கியச் சங்கம் 1830ஆம் ஆண்டு மெக்கன்சியின் சுவடிகளைப் பெற்றது. அதன் பின்னர் அக்கல்விச் சங்கத்தின் சுவடித் தொகுப்பு டாக்டர் லைடன் என்பார் தொகுத்து, இங்கிலாந்திலிருந்த சுவடித் தொகுப்பு, சென்னைக் கல்விச் சங்கத்தின் தொகுப்பு ஆகியனவெல்லாம் மெக்கன்சியின் தொகுப்புடன் இணைக்கப்பெற்றன. இவ்வாறு எல்லாத் தொகுப்புகளும் இணைக்கப்பட்ட பிறகு மீண்டும் சென்னைக் கல்விச் சங்கத்திற்கே தரப்பெற்றன. இந்நிலையில் 1858ஆம் ஆண்டில் வில்லியம் டெய்லர் என்பார் விளக்கமான ஒரு பட்டியல் எழுதினார். பிறகு சென்னை மாநிலக் கல்லூரி நூல்நிலையத்துடன் இணைக்கப் பெற்றது. இந்நூல் நிலையம் அரசினர் கீழை நாட்டுக் கையெழுத்து நூல் நிலையம் எனப் பெயர்பெற்றது. இதனைச் சுருக்கமாக அரசினர் ஓலைச்சுவடி நூல்நிலையம் என்றும் அழைப்பர். இன்று இந்நூலகம் சென்னைப் பல்கலைக் கழக நூலகக் கட்டட மேல்தளத்தின் ஒரு பகுதியாக இயங்கி வருகிறது.

இந்நூலகத்தின் முதல் பதிப்பு முயற்சி கி.பி. 1921 ஆம் ஆண்டுதான் தொடங்குகிறது. கி.பி. 1948ஆம் ஆண்டு





முதல் இந்நூலகம் அரையாண்டு இதழ் ஒன்றைத் தொடங்கி அதன் மூலம் பல பதிப்பு நூல்களை வெளியிட்டிருக்கிறது.

## சரஸ்வதி மகால் நூல் நிலையம்

கி.பி. 1676 முதல் 1855 வரை தஞ்சைப் பகுதியை மராட்டிய மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அம்மன்னர்களுள் சரபோசியும் ஒருவர். பன்மொழிப் புலமையுடைய அவர் கலைச் செல்வங்களைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை நிறுவியவரும் இவரே. தமிழ் மண்ணில் ஆட்சி செய்த சரபோசிக்குத் தமிழ் மொழியின் அருமை பெருமைகள் முதலில் தெரியாமல் தான் இருந்திருக்கிறது. அதனால் தான் அவரது தொகுப்பில் சமஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி மொழிச் சுவடிகள் உள்ள அளவிற்குத் தமிழ் மொழிச் சுவடிகள் இல்லாமல் போனது எனலாம்.

காசியில் ஏறப்பட்ட அனுபவத்தால் தான் சரபோசி மன்னர் தமிழ்ச் சுவடிகளைத் தொகுக்கவும், படியெடுக்கவும், விலை கொடுத்து வாங்கவும் தொடங்கினார். இப்படியாக இந்நூல் நிலையத்தில் பல்வேறு மொழிச் (தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, சமஸ்கிருதம்) சுவடிகளும், கலைநூல் சுவடிகளும் பல்லாயிரமாகப் பல்கிப் பெருகின. தமிழ்ச் சுவடிகளை ஒழுங்குப்படுத்தி வைக்கத் தமிழ்ப் புலமையாளர்களான கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், திருவேங்கடத்தாபிள்ளை, சுப்பராயக் கவிராயர், வேங்கடாசலம் பிள்ளை, புலவர் வீ. சொக்கலிங்கம்பிள்ளை ஆகியோர் பணிபுரிந்திருக்கின்றனர். இந்நூலகத்தின் முதல் பதிப்பு முயற்சி கி.பி. 1949ஆம் ஆண்டில் தொடங்குகின்றது. கி.பி. 1939ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் நாத்திங்கள் இதழ் (நான்கு மாதத்துக்கு ஒரு முறை வந்த இதழ்) ஒன்றை வெளியிட்டு அதன் வாயிலாகவும் பல சுவடிப்பதிப்பு நூல்களை வெளியிட்டு வந்துள்ளது.

இந்நூலகத்தின் முதல் கௌரவக் காரியத் தரிசியாக 1918ஆம் ஆண்டு திருவாளர் தி. சாம்ப மூர்த்திராவ் அவர்கள் பொறுப்பேற்றார். அடுத்து 1938ஆம் ஆண்டு திருவாளர் எஸ். கோபாலன் அவர்கள் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் தான் சரஸ்வதிமகாலின் பதிப்பு முயற்சி தொடங்கியது எனலாம். இவர் 1963 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 25 ஆண்டுகள் இந்நூலகக் கௌரவ காரியதரிசியாகப் பணியாற்றி வந்துள்ளார். இவருக்குப் பிறகு ஓ.ஏ. நாராயணசாமி (1963–68). நீ. கந்தசாமிப்பிள்ளை (1968–73), அ. வடிவேலன் (1973–79) ஆகியோர் கௌரவக் காரியதரிசியாகப் பணியாற்றி வந்துள்ளனர். இவர்களது காலத்திலும் பல நூல்கள் வெளியாகி யுள்ளன. 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில் நிர்வாக அலுவலரைக் கொண்டு இந்நூலகம் செயல்பட்டது. 1986 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இயக்குநர் பொறுப்புடன் நிர்வாக அலுவலரின் செயல்பாட்டோடு இந்நூலகம் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. இதற்கிடையில் 1989–91 வரை முனைவர் மு. சதாசிவம் அவர்களை இயக்குநராகக் கொண்டும் செயல்பட்டு வந்துள்ளது.

1940ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூல் நிலைய நாத்திங்கள் இதழின் முதற்றொகுதி – முதற்பகுதி வெளியானது. சரஸ்வதி மகால் நூலகத்தின் கௌரவ காரியதரிசியான திருவாளர் எஸ். கோபாலன் அவர்களின் மதிப்பூதியத்தை ஆதாரமாகக் கொண்டே இப்பருவ இதழ் தொடங்கப்பெற்றுள்ளது. 1940 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரையிலான முதல் 39 தொகுதிகள் நாத்திங்கள் இதழாகவும்; 1991ஆம் ஆண்டு 40ஆவது தொகுதி முதல் 2000ஆம் ஆண்டு 46ஆவது தொகுதி வரை முத்திங்கள் இதழாகவும் தொடர்ந்து வெளிவந்தது. பெயரளவில் முத்திங்கள் இதழ் என்றாலும் நான்கு முத்திங்களையும் சேர்த்து ஆண்டுக்கு ஒன்று என்றே வெளிவந்து கொண்டிருக்கிறது.

இவ்விதழின் பதிப்பாசிரியர்களாக இந்நூலக கௌரவ காரியதரிசிகளும், நூலக இயக்குநர்களும், பதிப்புத்துறை மேலாளர் அவர்களும் இருந்து வந்துள்ளனர். இவ்விதழில் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில்

கட்டுரைகளும், நூல்களும் வெளியாகியுள்ளன. தமிழ்ச் சுவடி பதிப்புகள் வெளி வந்த பருவ இதழ்கள்; தமிழ்ச் சுவடிப் பதிப்புகள் வெளிவராத பருவ இதழ்கள் எனப் பருவ இதழின் காலகட்டத்தை இரண்டாகப் பகுக்கலாம். 1953 முதல் 1992 வரையிலான (தொகுதி 9 முதல் 40 வரை) காலகட்டத்திலும், 1998 முதல் 2000 வரையிலான (தொகுதி 44 முதல 46 வரை) காலகட்டத்திலும் எனத் தமிழ்ச் சுவடிப்பதிப்பு நூல்கள் 51 வெளியாகியுள்ளன. 1940 முதல் 1952 வரையிலும் (தொகுதி 1 முதல் 8 வரை), 1993 முதல் 1995 வரையிலும் (தொகுதி 41 முதல் 43 வரை) தமிழ்ச் சுவடிப் பதிப்பு நூல்கள் வெளிவரவில்லை. 1940/1952 வரையுள்ள காலகட்டத்தில் ஆங்கிலமும் சமஸ்கிருதமுமே முழுமையாக இப்பருவ இதழில் இடம் பெற்றிருந்தன. ஆனால், இதற்கு மாறாக 1993–1995 வரையுள்ள காலகட்டத்தில் சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி ஆகிய நூல்கள் பற்றிய ஆய்வுகளும், கட்டுரைகளும் தமிழ் மொழியிலேயே வெளிவந்துள்ளன என்பதை நோக்கும் போது இப்பருவ இதழ் இக்காலக் கட்டத்தில் தமிழ்மொழிக்குக் கொடுத்த முக்கியத்துவம் புலப்படும்.

### தமிழில் பதிப்பு முயற்சி

மேல்நாட்டவரின் வருகையும், தொடர்பும் அச்சுக்கலையை நமக்கு அறிமுகம் செய்தன என்றால் அது மிகையாகாது. முதலில் மரக்கட்டைகளில் எழுத்தைச் செதுக்கிப் பக்கம் பக்கமாக அச்சிட்டனர். பின்னர்த் தனித்தனி எழுத்துகளாகச் செதுக்கி அடுக்கி அச்சிட்டனர். அதற்கும் பிறகு வார்ப்பெழுத்து உருவானது. இதுவே நீண்ட காலம் அச்சுத்துறைக்குப் பயன்பட்டது. இப்பொழுது கணிப்பொறியின் வரவு இவற்றையெல்லாம் ஓரங்கட்டத் தொடங்கிவிட்டது.

தமிழ்மொழியில் பதிப்புப்பணி கி.பி. 1912 இல் தான் தொடங்குகின்றது. தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் மாசத்தின சரிதையின் அச்சுக் கூடத்தில் திருக்குறள் – நாலடியார் – மூலம் கி.பி. 1812ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இப்பதிப்பே இதுவரை பதிப்பு வரலாற்றில் முதலிடம் பெற்றுள்ளது. இப்பதிப்பில் ஏட்டுச் சுவடியில் எழுத்துகள் இருப்பது போலவே இருந்தன. நிறுத்தக் குறிகளோ, ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடுகளோ, மெய்யெழுத்தில் புள்ளிகளோ இல்லை. பதிப்பு நூல்கள் பல வெளி வரவும் பட்டறிவு முதிரவும் எழுத்தின் வடிவம் செப்பமாகியது. குறியீடுகளும் பதிப்புகளில் பயன்படுத்தப்பெற்றன.

தொடக்கக் காலத்தில் தமிழ்மொழியில் பதிப்பு முயற்சியானது தனிமனிதரிடமிருந்தே தொடங்குகிறது. குறிப்பாக, ஞானப்பிரகாசன், எல்லிஸ், அம்பலவாணக் ...ர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், இராமாநுசக் கவிராயர், வேதகிரி முதலியார், நல்லூர் ஆறுமுக முதலியார், சிந்தாதிரிப்பேட்டை முனிசாமி முதலியார், வ.உ.சிதம்பரனார், கா. பொன்னுசாமி நாட்டார், தண்டபாணி தேசிகர், வளவனூர் முத்துச்சாமி முதலியார், பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியார், சிந்தாதிரிப்பேட்டை கேசவ முதலியார், மழவை மகாலிங்கையர், தாண்டவராய முதலியார், திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, இராவ் பகதூர் ச. பவனாநந்தம் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார், பேரா. வையாபுரிப்பிள்ளை, மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, சி. கணேசையர், பா. அரங்கசாமிப்பிள்ளை, உ.வே. சாமிநாதையர், தி.ஈ. சீனிவாசராகவாசாரியார், இ.வை. அனந்தராமையர், திருமயிலை சண்முகம் பிள்ளை மற்றும் பலரும் தனியாகச் சுவடிப்பதிப்பு நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு அணிசெய்திருக்கின்றனர். இவர்களை அடியொற்றிப் பிற்காலத்தில் பல அமைப்புகள் தோன்றி அதன் மூலம் சுவடிப்பதிப்பு நூல்களை வெளியிட்டுள்ளன. இவற்றில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம், மதுரைத் தமிழ்ச்சங்கம் போன்றவை குறிப்பிடத்தக்க அமைப்புகளாகும்.

### நூலக முதற்பதிப்பு நூல்கள்

சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமும், தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலையமும் பல மொழிச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டவை. எனவே, இந்நூலகங்களின் வெளியீடுகளும் பன்மொழி வெளியீடுகளாகவே அமைந்திருக்கும். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, அரபி, பாரசீகம், மராத்தி, கன்னடம் போன்ற மொழிகளிலும் வெளியீடுகள் வெளிவந்திருக்கின்றன.

### சென்னை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக முதற் பதிப்பு நூல்கள்

சமஸ்கிருத மொழியின் முதல் வெளியீடு கி.பி. 1921ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இதுவே இந்நூலகத்தின் முதல் பதிப்பு நூல் ஆகும். எம். ரங்காச்சாரியார் மற்றும் எஸ். குப்புசுவாமி சாஸ்திரிகள் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1921 ஆம் ஆண்டு பத்ய சூடாமணி–உரையுடன் எனும் சமஸ்கிருத நூல் வெளிவந்துள்ளது.

மலையாள மொழியின் முதல் வெளியீடு 1949ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு இரண்டு மலையாள நூல்கள் வெளியாகியுள்ளன. டாக்டர் என். மாதவமேனன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கர்ப சிகிச்சா எனும் ஆயுர்வேத நூலும், பி. நாராயணன் குட்டிமேனன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கிரியா கர்மம் எனும் சோதிட நூலும் என இரு நூல்கள் வெளிவந்துள்ளன.



தமிழ்மொழியின் முதல் பதிப்பு 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.2002ஆம் ஆண்டு தமிழ் மொழியில் ஒன்பது நூல்கள் வெளிவந்துள்ளன. டி.பி. பழனியப்பப் பிள்ளை அவர்களை பதிப்பாசிரியராகக் கொண்டு கப்பல் சாஸ்திரமும் டாக்டர் சி. துரைராஜன் மற்றும் டாக்டர் சி.எஸ். உத்தமராயன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அனுபவ வைத்தியம் தொகுதி 1 மற்றும் 2ம் தணிகைமணி வ.சு. செங்கல்வராயப்பிள்ளை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சிவஞான தீபமும், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சோழன் பூர்வ பட்டயமும் கொங்குதேச ராஜாக்கள் சரித்திரமும் வெளிவந்துள்ளன.

தெலுங்கு மொழியின் முதல் பதிப்பு 1950 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு தெலுங்கு மொழியில் ஐந்து நூல்கள் வெளி வந்துள்ளன. இவற்றில் மருத்துவ நூல்கள் நான்கும் தத்துவ நூல்கள் ஒன்றும் அடங்கும். டாக்டர் வெற்றி சங்கர சாஸ்திரி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு "அசதயோகமுலு", "வைத்திய நிகண்டு", "தனுர்வைத்திய விலாசமு" ஆகிய மூன்று வைத்திய நூல்களும், என். வெங்கட்டராவ் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு "கத்கலாக்கசனா சிரோமணி" எனும் வைத்திய நூலும், வேதம் லக்ஷ்மண நாராயண சாஸ்திரி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு "யோக தர்சன விஷயம்" எனும் தத்துவ நூலும் வெளி வந்துள்ளன.



அரபு மொழியின் முதல் பதிப்பு 1953 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. டாக்டர் அப்துல்ஹக் மற்றும் முகம்மது யூசுப் கான் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 1953 ஆம் ஆண்டு ஷவாகில்–அல் –அவுர் எனும் நூலும், பாரசீக மொழியில் 1950 ஆம் ஆண்டு நான்கு நூல்களும் வெளிவந்துள்ளன.

மராத்தி மொழியின் முதல் பதிப்பு 1956 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு தி. சந்திரசேகரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பூனாபெட் கைபீது எனும் வரலாற்று நூல் வெளிவந்துள்ளது.

கன்னட மொழியின் முதல் பதிப்பு 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு கன்னட மொழியில் ஆறு நூல்கள் வெளிவந்துள்ளன.

இவை தவிர சமஸ்கிருதம், தமிழ், மலையாளம், கன்னடம், அரபி, பாரசீகம், மராத்தி ஆகிய மொழிகளுக்கான சுவடிகள் விளக்க அட்டவணைகளும், சுவடிகள் அகரவரிசை அட்டவணைகளும் என வெளிவந்துள்ளன.

### தஞ்சை, சரஸ்வதி மகால் நூல் நிலைய முதற்பதிப்பு நூல்கள்

தஞ்சை, சரஸ்வதிமகால் நூல் நிலையத்தில் சமஸ்கிருத மொழியின் முதல் பதிப்பு 1946 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. டாக்டர் வி. ராகவன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு முத்ரா ராக்சச நாடக கதா எனும் நாடகநூல் வெளிவந்துள்ளது.

தமிழ் மொழியின் முதல் பதிப்பு 1949ஆம் ஆண்டு வெளி வந்துள்ளது. 2002ஆம் ஆண்டு தமிழ் மொழியில் இரண்டு நூல்கள் வெளி வந்துள்ளன. டாக்டர் எஸ். வெங்கட்டராஜன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு குன்மரோக சிகிச்சை மற்றும் கர்ப்பிணி பாலரோக சிகிச்சை எனும் இரண்டு மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன.

மராட்டி மொழியின் முதல் பதிப்பு 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு மராட்டி மொழியில் மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. அவை, திரு. கிருஷ்ணசுவாமி மகாதீக் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பிரதாப சிம்ம விஜய பிரபந்த எனும் வரலாற்று நூலும் லோக கீத் எனும் நாட்டுப் பாடலும் வெளிவந்துள்ளன. திரு. தியாகராஜ ஜடவள்ளவர் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தேவேந்திர குறவஞ்சி எனும் நாடக நூல் வெளிவந்துள்ளது.

தெலுங்கு மொழியின் முதல் பதிப்பு 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 2002ஆம் ஆண்டு தெலுங்கு மொழியில் ஐந்து நூல்கள் வெளியாகியுள்ளன. மயிராவண சரிதம் எனும் புராண நூலை திரு வி. சுந்தரசர்மா அவர்களும், ஸ்ரீராமாயணமு – தொகுதி 1 எனும் கதைப்பாடலை, திரு. என். வெங்கட்டராவ் அவர்களும், தாளதேச பிராண பிரதீபிகா எனும் இசை நூலை திரு.கே. வாசுதேவசாஸ்திரி அவர்களும், ஆந்திர காமண்டகாமு எனும் அரசியல் நூலை டாக்டர் பிரபாகர சாஸ்திரி அவர்களும், பைப்ர நாராயண சரித எனும்

நூலை வி. சுந்தரசர்மா மகாதேவ சாஸ்திரி போன்றோரும் பதிப்பாசிரியர்களாக இருந்து வெளியிட்டுள்ளனர்.

இவை தவிர சுவடிகள் விளக்க அட்டவணைகளையும் இந்நூலகம் வெளியிட்டுள்ளது. இவ்வட்டவணைகள் தமிழ்மொழியில் பொருள் வாரியாக வெளிவந்துள்ளன. அதாவது, மருத்துவம், சோதிடம், இலக்கியம், இலக்கணம் போன்ற வகைகளில் இவ்வட்டவணை அமைந்துள்ளது. மேலும் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிகளிலும் சுவடிகள் விளக்க அட்டவணைகள் வெளிவந்துள்ளன.

இவ்விரு நூலகங்களிலும் இடம்பெற்றுள்ள அனைத்து மொழிச்சுவடிப் பதிப்புகளின் முதற்பதிப்பை கண்டோம். இவ்வெல்லா மொழிச் சுவடிப் பதிப்பு நூல்களின் பதிப்புத் தன்மைகளையும் ஆராயின் ஆய்வு விரியும்.

### சுவடி நூலகப் பதிப்பு நூல்கள்

இவ்விரு நூலகங்களிலும் இரண்டு விதமான பதிப்புகள் வெளிவந்துள்ளன. ஒன்று, நூலக வெளியீட்டுப் பதிப்பு நூல்கள்; மற்றொன்று நூலகப் பருவ இதழ் வெளியீட்டு பதிப்பு நூல்கள். நூலக வெளியீட்டுப் பதிப்பு நூல்கள் என்ற முறையில் பல்வேறு வகையான பொருள்களில் தனி நூலாக ஒரே நேரத்தில் வெளியிட்டுள்ளனர். நூலகப் பருவ இதழ் வெளியீட்டுப் பதிப்பு நூல்கள் என்ற முறையில் மிகச் சிறிய நூல்கள் முதல் பெரிய நூல்கள் வரை இதழ்களில் ஒரு பகுதியிலோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பகுதிகளிலோ வெளிவந்திருக்கும். இவ்விரண்டிற்கும் மிகவும் வேறுபாடுகள் உண்டு. பருவ இதழ்களில் மூலம் மட்டுமே பெரும்பான்மை வெளிவரும். ஆனால் தனி நூல்கள் அப்படி இல்லை. அடிக்குறிப்புடனும், உரை விளக்கங்களுடனும், கருத்துரையுடனும் உரையுடனும் எனத் தனி நூலகத்திற்கான அனைத்துக் கட்டுப்பாடுகளுடன் வெளிவரும். மேலும் பருவ இதழ் வெளியீடுகள் சுருக்கமான முன்னுரையை மட்டுமே கொண்டுள்ளதாக வெளிவந்துள்ளன. சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழில் வெளியான சில வெளியீடுகளுக்கு மட்டும் விரிவான முன்னுரை பதிப்பாசிரியர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் குறிப்பாக, முருகர் கதம்பம், வள்ளலார் பிரபந்தங்கள், தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதே போல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. அருணாசலம் அவர்கள் பதிப்பித்த பிரபந்த மரபியல் எனும் நூல் மட்டும் நீண்டு விரிந்த முன்னுரையைக் கொண்டு வெளிவந்துள்ளது.



அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலக வெளியீடுகள் சில கொத்து, திரட்டு என்ற முறையில் வெளி வந்துள்ளவை மூலம் மட்டுமே கொண்டுள்ளன.

இவ்வகையில் பிள்ளைத் தமிழ்க் கொத்து–பாகம் 1,2 கலம்பக கொத்து, தூதுத் திரட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். தனி நூலாக வெளிவந்துள்ள பிற வெளியீடுகள் எதுவும் மூலம் மட்டும் வெளியிடப் பெற்றதாகத் தெரியவில்லை.

சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளிவந்த வெளியீடுகள் ஆஃப் பிரிண்ட் (off Print) முறையில் வெளிவந்துள்ளன. அதாவது, இதழ் எ4 அளவிலும் இதில் வெளியாகும் நூல்களும் எ4 அளவில் தனிப்பக்க எண் கொண்டும் வெளிவந்துள்ளன. இவ்வாறு இதழ்களில் வெளிவரும் நூல்களின் பகுதிகள் மட்டும் கூடுதலாக அச்சடிக்கப்பட்டு வாழ்த்துரை மற்றும் அணிந்துரைப் பகுதிகளைக் கூடுதலாகச் சேர்த்துக் கட்டம் செய்து விற்பனை செய்கின்றனர். ஆஃப் பிரிண்ட் முறையில் வெளிவரும் நூல்கள் மறுபதிப்பாகவும் வெளிவந்துள்ளன. இம்மறுபதிப்பு நூல்கள் டெம்மி அளவில் வெளி வந்துள்ளன.

இதுவரை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ப் பதிப்பு நூல்கள் 217ம் சரஸ்வதி மகால் நூலகத் தமிழ்ப் பதிப்பு நூல்கள் 244ம் ஆக மொத்தம் 461 நூல்கள் இவ்விரு நூலகங்களில் வெளிவந்துள்ளன.

*சுவடிப் பதிப்புத் திறன் – தொகுதி–I*
*என்ற நூலிலிருந்து*
*வெளியீடு : உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்*





## ஈரோடு மாவட்டத்தில்
# சிக்கன பாசன முறை

பூமியில் மனிதன் உயிர் வாழ்வதற்கு நிலம், நீர், காற்று, ஆகியவை இன்றியமையாததாகும். இவைகளில் நிலம், நீர் ஆகியவைகளின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ முடியாவிட்டாலும் அவைகளை மேலாண்மை செய்யும் வாய்ப்பு மனிதனுக்கு கிடைத்திருக்கின்றது. நிலம், நீர் இவற்றை மேலாண்மை செய்து வாழும் தொழில் வேளாண்மை ஆகும். இவ்வேளாண்மைத் தொழிலுக்கு பூமியைத் தாயாகவும், நீரைத் தந்தையாகவும், குறிப்பிட்டால் அது மிகவும் பொருத்தமே. ஆகவே நிலத்தைப் பேணுவதிலும், நீரை பராமரிப்பதிலும் மனித இனத்துக்கு அதிலும் குறிப்பாக வேளாண் பெருமக்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றது. பூமியில் கிடைக்கின்ற நீரில் 3 சதவிகிதம் மட்டுமே பயன்படுத்தக் கூடியது. இந்த 3 சதவிகிதம் நீரைத்தான் மனிதனது தேவைக்கும் தொழிற் சாலைக்கும் மற்றும் வேளாண்மைக்கும் பயன்படுத்துகிறோம். இதில் வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படும் நீர் 85 சதவிகிதமாகும்.

நீரின்றி அமையாது உலகு, அந்நீரும் வானத்து மழை நீரே என்பது யாவரும் அறிந்ததே. மழை நீரை மட்டும் நம்பி செய்யப்படும் விவசாயத்தை மானாவாரி விவசாயம் என்றும் அழைக்கின்றோம். தமிழ்நாட்டில் விளை நிலங்களில் 46 சதவிகிதம் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 56 சதவிகிதம் நிலம் பாசன வசதி பெறுகின்றது. இதில் நிலத்தடி நீர் மூலம் (கிணறுகள் மூலம்) பாசன வசதி பெறும் பரப்பு 36 சதவிகிதம். அதாவது 64,247 எக்டர்களே. கடந்த மூன்று ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் நீர் நிலைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. இந்நிலையில் கிடைக்கின்ற நீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் பாசன முறைகள் எடுத்துக் கூறப் பட்டுள்ளது. பாசன முறைகளை பாத்தி பாசனம், ஆழ்ச்சால், அகலப்பாத்தி பாசனம், சால் பாசனம், ஒன்றுவிட்ட சால்பாசனம், இணை வரிசை சால்பாசனம், அலைப்பாசனம், சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு பாசனம் என வகைப்படுத்தலாம்.

பாத்திப் பாசனம் இராகி, நிலக்கடலை, பயறுவகை போன்ற நெருக்கி விதைக்கப்படும் பயிர்களுக்கு பின்பற்றப்படுகிறது. சோளம், மக்காச்சோளம், சூரியகாந்தி, பருத்தி, கரும்பு, தக்காளி, மிளகாய், கத்தரி போன்ற இடைவெளி கூடுதலாக கொடுக்கப்படும் பயிர்களுக்கு பார்சால் பாசன முறை ஏற்றது. பாத்தி பாசனத்தை விட பார்சால் பாசனம் மூலம் 40 சதவிகிதம் நீரைச் சேமிக்கலாம். இணை வரிசை சால்பாசன முறையில் பரிந்துரைக்கப்பட்ட வரிசையின் இடை வெளியைப் போல் இருமடங்கு அகலத்தில் பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும். பாசனநீர் அளிக்கப்படும் பரப்பு கிட்டத்தட்ட 40 முதல் 50 சதவிகித பாசன நீரைச் சேமிக்க முடியும். விடுபடுசால் பாசன முறை நீர்த்தட்டுப்பாடு அதிகம் உள்ள இடங்களுக்கும், உப்புகள் அதிகம் உள்ள மண்வகைகளுக்கும் மிகவும் ஏற்றது. இப்பாசன முறையில் ஒருமுறை ஒரு சாலில் விடப்பட்ட பாசன நீர் அடுத்த முறை விடப்படுவதில்லை. ஒன்றுவிட்ட சால்களில் மாறிமாறி நீர் பாய்ச்சப்படுவதால் 35 சதவிகித நீர் மீதமாகிறது. அலைப்பாசன முறை 200 மீட்டர் நீளம் கொண்ட சால்கள் அமைக்கப்படும் பகுதிகளுக்கு

மிகவும் ஏற்றது. பாரின் அகலம் பரிந்துரை செய்யப்படும் அளவிற்கேற்ப அமையும். சாலில் விடப்படும் நீர் அலைகள் போல் பக்கவாட்டில் பரவுவதாலும், பக்க ஓட்டம் காரணமாகவும் பயிர் வேர்களுக்கு நீர் கிடைக்கிறது. இதனால் 40 சதவிகிதம் வரை நீர் மீதமாகிறது.

தரைமட்டத்தில் வளரக்கூடிய நிலக்கடலை, இராகி, காய்கறிகள், எள், வெங்காயம் போன்ற பயிர்களுக்கு தெளிப்பு நீர்ப்பாசனம் மிகவும் பயனுள்ளது. 20 அடி நீளம் கொண்ட பைப்பில் 20 எண்கள் தெளிப்பு நீர் அமைப்புகள் காணப்படும். இவைகளை வயலின் எப்பகுதிக்கும் எடுத்துச் சென்று தெளிப்பு நீர்ப்பாசனத்தை செய்யலாம். 50 சதவிகித நீர் சிக்கனமும், அளவான நீர்ப்பாசனமும் இதன் மூலம் செய்ய ஏதுவாகிறது. ஏக்கருக்கு சுமார் ரூ. 15,000 செலவு ஆகும். நீண்டகால வயதுடைய குறிப்பிட்ட இடைவெளி உள்ள மரப்பயிர்கள், மஞ்சள், கரும்பு, வாழை போன்ற பயிர்களில் அளவான நீர்ப் பாய்ச்சி நிறைந்த மகசூல் பெற சொட்டு நீர்ப்பாசனம் இன்றியமையாதது. இதனால் களைகளற்ற பயிரும், உரம், மருந்துகள் பயிரின் வேர்ப்பாகத்தில் கிடைக்கவும் வழி செய்யப்படுகிறது. தண்ணீரின் அளவை சரியாக குறைக்கலாம். அகலப்பாத்தி முறையில் மானாவாரி நிலங்களில் 6 முதல் 8 அடி நீளம், அகலம் கொண்ட பாத்திகளை சுற்றிலும் 9 அங்குல ஆழம்–அகலம் கொண்ட பாத்திகளை சுற்றிலும் 9 அங்குல ஆழம் அகலம் கொண்ட–சால்களை அமைத்து சாகுபடி செய்வதால் மழைநீரை சேமித்து பயிருக்குக் கிடைக்கச் செய்ய முடியும். பக்க நீரோட்டத்தால் பாத்தியிலுள்ள அனைத்துப் பயிர்களுக்கும் நீர் கிடைக்கிறது. இம்முறை சரிவான மானாவாரி நிலங்களுக்கு ஏற்றது என்றாலும் நீர்த் தட்டுப்பாடு உள்ள காலங்களில் இறவைப் பயிருக்கும் ஏற்றது. பார்களில் பயிர் செய்யப்படும் பயிர்களுக்கு நிலப் போர்வை அமைத்து மண் ஈரம் ஆவியாவதைத் தடுக்கலாம். கம்பந்தட்டு, சோளத்தட்டு, கரும்பு சோகை, தென்னை நார்க் கழிவு போன்ற பொருட்களை நிலப் போர்வையாகப் பயன்படுத்தலாம். ஏக்கருக்கு நிலப்போர்வை 4 டன் தேவைப்படும். நிலப்போர்வை களைகளை கட்டுப்படுத்துவதோடு நீர் ஆவியாவதைத் தடுத்து மண்ணின் அடி ஈரத்தைப் பாதுகாக்கிறது.

எனவே வறட்சியான சூழ்நிலை நிலவுகின்ற இக்காலக் கட்டத்தில் வேளாண் பெருமக்கள் தகுந்த பாசன முறையைத் தேர்ந்தெடுத்து பயிர்சாகுபடி செய்வதுடன் வறட்சியின்போது கடைபிடிக்க வேண்டிய வழி முறைகளையும் பின்பற்றி அதிக மகசூல் பெறும் வகையில் விவசாயிகளுக்குத் தேவையான நவீன முறை உக்திகளை மாவட்ட நிருவாகத்தின் சார்பில் வேளாண்மை துறை மூலம் விவசாயிகள் கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாசன முறைகளில் வேளாண்மைத்துறை சாதனை படைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**– எம். ஆர். லிங்கம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.



**சமூகநல அலுவலர்கள் மற்றும் மறுவாழ்வு அலுவலர்கள் கூட்டம்**

கிராமப் பகுதிகளில் மருத்துவ முகாம் நடத்துவது தொடர்பாக மாவட்ட சமூகநலத்துறை அலுவலர்கள் மற்றும் மறுவாழ்வுத்துறை அலுவலர்கள் கூட்டம் 8–6–2004 அன்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. பா. **வளர்மதி** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



காஷ்மீரி மொழிக்கதை

# கோழிச் சண்டை

**அமீன் கமீல்**

குலாம்கான் சேவலுடன் காம்பவுண்டுக்குள் நுழைந்ததைப் பார்த்த நொடியில் ஷமல் தடாலென்று எழுந்து நின்றாள். அவளுடைய ஆறுமாதக் குழந்தை நனைத்துவிட்ட உடையைக் கழுவ வேண்டும் என்பதைக்கூடப் பொருட்படுத்தவில்லை. ஏதோ புதையலைக் கண்டுவிட்டது போல, “கொண்டு வந்துட்டீங்களா! இன்னிக்கும் வெறுங்கையோட வந்துடுவீங்களோன்னு பயந்தேன்,'' என்று தன் கணவனைப் பார்த்துச் சொன்னாள்.

கணவன் கைகளிலிருந்த சேவலைப் பிடுங்குவது போல வாங்கிக் கொண்டு அதன் இறக்கைகளையும் தோகையையும் தடவிக் கொடுத்தாள். “ இதுக்கு நாலரை ரூபாய் கொடுத்தேன்'' குலாம்கான் ரூபாய் என்ற சொல்லை அழுத்தமாகக் கூறினான். சேவல் நோஞ்சானில்லை என்று அவளுக்குத் தெரிவிப்பதற்குப் போலும்.

அவன் கொடுத்த விலையைப்பற்றி அக்கறையேதும் இல்லாதவள் போல அவள் இருந்தாள். அவளது பார்வையில் சேவல்தான் நிறைந்திருந்தது. கண்களில் மகிழ்ச்சி கொப்பளித்தது. அவள் அந்தச் சேவலைத் தரைமீது கிடத்தினாள் ; ஜன்னல் வழியாகப் பக்கத்துவீட்டைப் பார்வையிட்டாள். தனது புருவத்தை உயர்த்தி விழித்து நோக்கினாள். தன் கணவனிடம் மறுபடியும் சற்று உரத்த குரலில் பேசினாள். “இந்த மாதிரி சேவல்தான் வேணும்னுதான் நான் காத்துண்டிருந்தேன். சந்தையில் ராத்திரி பகலா உள்ளூர்க்கோழிங்கதான் வந்து குவியறது. சுத்து வட்டாரம் முழுக்க அதைத்தான் வாங்கியிருக்கு.'' குலாம் பதிலேதும் பேசாமல் உள்ளே போனான்.

சேவலின் கால்கள் நூலால் கட்டப்பட்டிருந்தது. அது சிரமத்தோடு தத்தித் தத்தி நடந்தது. கட்டியிருந்த நூலைக் கொத்திப் போடப்பார்த்தது. நாலாபக்கத்தையும் என்ன ஏது என்று தெரிந்து கொள்வது போலப் பார்த்தது.

ஷமலிடம் ஏற்கெனவே இரண்டு பெட்டைக்கோழிகள் இருந்தன. அந்நேரத்தில் வீட்டைச் சுற்றியிருந்த இடத்தில் உணவுக்காக குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தன. திடீரென்று சேவல் கூவியதைக் கேட்டவுடன் திடுக்கிட்டு நின்றன. புதிதாக வந்திருப்பது எப்படிப்பட்டது என்ற பயமோ ? அவற்றுள் ஒரு கோழி உடலை ஒய்யாரமாக இங்கும் அங்குமாக அசைத்தபடி சேவலை நோக்கிச் சென்றாலும் ஏதோ தன் சுய மகிழ்ச்சிக்காக உலவுவது போல் சுற்றி வந்தது. குப்பையைக் கிளறிக் கொண்டிருந்த மற்றொரு கோழி, புழுதிப் படலத்தைக் கிளப்பி விட்டு, அதிலேயே மூழ்கிக் குளித்தது. “போனாப்போறது, ஏதோ உபயோகமான ஆளா இருப்பான்னு நினைச்சேன். எனக்கென்னாச்சு ? அவன் யாராயிருந்தா என்ன ? கிடக்கட்டும் அப்படியே!

ஷமல் ஒருகைப்பிடி அரிசியைக் கொண்டுவந்து சேவல் முன் தூவினாள். சேவல் பசியோடு தின்னத் தொடங்கியது. பலநாள் பட்டினி கிடந்ததைப் போல வாய் நிறையத் தின்பதன் மூலம் தனது தொண்டைப்பையை நிரப்பிக் கொண்டது.

பெட்டைக்கோழிகள் சேவலுக்குக் கிடைத்த விசேஷச் சலுகையைப் பார்த்ததும், சிதறி விழுந்த தானிய மணிகளை அவசரமாகத் தின்றன.

ஷமல் ஜன்னல் வழியாகப் பக்கத்து வீட்டினை மறுபடியும் பார்வையிட்டாள். அங்கு யாரும் கண்ணில் படாதது கண்டு பெட்டைக்கோழிகளை நோக்கிக் கத்தினாள்: “ச்சூ–ச்சூ ! ஓங்களைக் கொள்ளை நோய் கொண்டுபோக ! பாவம் ! பசியாய் இருக்கு சேவல் ! அதை நிம்மதியா தீனிதிங்க நீங்க விடமாட்டீங்களே ! பாக்கறவங்க நீங்க நாள் கணக்கிலே பட்டினி கிடந்த மாதிரினா நினைச்சிக்குவாங்க.''

சத்தமாகக் கொக்கரித்தபடியே பெட்டைகள் அங்கிருந்து ஓடிவிட்டன. ஷமல் யாரை நினைத்துத் திட்டுகிறாள் என்று அவற்றுக்குத் தெரியும். இல்லையென்றால் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவை ஓடி இருக்காது. ஆயினும், சேவலைச் சுற்றிலும் சற்று தூரத்தில், பாதுகாப்பான இடத்தில் சிதறிக் கிடந்த தானிய மணிகளைத் தயக்கத்தோடு கொத்தித் தின்றபடியிருந்தன.

சோனி ஜானி ஜன்னல்வழியாகத் தலையை நீட்டி ஷமலை அழைத்துத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தாள் ; “சேவல் எப்போது வந்தது ?'' என்றாள்.

வீட்டுச் சேவலை வாங்கிவந்தது முதல், ஷமல் அவளுடைய அழைப்புக்காகத்தான் காத்திருந்தாள் ; உடனே சொல்லிவிட வேண்டும் என்கிற தவிப்புடன், தனது தலையைத் தூக்கிப் பார்த்து, தனது நீள அங்கியின் கற்பனையான சுருக்கங்களைச் சரிசெய்வதைப் போன்ற பாவனையால் சீராக்கி, காதுகளின் வெள்ளி நகைகள் ஒளிவீச, “இப்பத்தான் என் வீட்டுக்காரர் வாங்கி வந்தாரு; அதுக்கு நாலரை ரூபா கொடுத்திருக்காரு'' என்றாள். சிறிது நேரத்துக்கு முன்பு தன் கணவன் சொல்லியதைக் காட்டிலும் அழுத்தமாகவே ஷமல் “ரூபாய்'' என்னும் வார்த்தையை உச்சரித்தாள்.

“கிராமப்புறத்திலேயிருந்து வாங்கிவந்ததாகத்தான் இருக்கணும்.'' ஜானி அப்பாவித்தனமான தனது எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

"ஆமாம், அப்படித்தான் தோணுது. இது நல்ல சேவல்'' "இதுக்கு ஏழு மாசந்தான் வயசாகுதுன்னா பார்த்துக்கோயேன்'' என்று ஷமல் மனம்போன போக்கில் சேவலின் வயதை நிர்ணயித்தாள். "இதுமாதிரி தனி ஜாதி பொதுவா நம்ப ஊர்களுக்கு வறது இல்ல. அதனாலதான் இவ்வளவு விலை! யாரு வாங்குவாங்க இதை ?'' ஒரு சிறு இடைவெளிக்குப் பிறகு இளக்காரமாகப் பேசினாள். "இந்த ஊர்க்காரங்களுக்கு உள்ளூர்ச் சேவலுகள்தான் வேணும்.''

இந்த விளக்கம் ஜானி மனதைப் பற்றி எரியச் செய்தது. அந்தத் திமிரான சொற்கள் தன்னைக் குறிவைத்துச் சொல்லப்பட்டதுதான் என்பதை அவள் அறிவாள். கோபத்தால் முகம் சிவக்க, ஜன்னலைவிட்டு அப்பால் நகர்ந்தபடி "இருப்பச்சட்டியை அடுப்பில் போட்டிருக்கேன். நன்னா முடிஞ்ச வரைக்கும் சேவலை ஊட்டி வளர்த்துக்கோ,'' என்று கத்திவிட்டுப் போனாள்.

ஷமல் வெறும் ஜன்னலைப் பார்த்து, உள்ளூரப் பூரித்துப் போனாள். தனது உதடுகளைச் சுருக்கிப் பெட்டைக் கோழிகளை ஏசினாள் : "ச்சூ...! ச்சூ...! கொள்ளை நோய் ஒங்களைக் கொண்டுபோக! மறுபடியும் அவள் தன்வீட்டுச் சேவலைத் திரும்பிப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தாள். சோனிஜானியைப் பழி வாங்கும் எண்ணத்தோடுதான் இந்தச் சேவலை அவள் வாங்க விரும்பினாள் என்பதுதான் உண்மை. ஐந்து பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் ஜானியிடம் இருக்க ஷமலிடம் இரண்டே பெட்டைகள் தான் இருந்தன. மொத்தத்தில் மூன்று அவளிடம் இருந்தன. ஆனால் அந்த மூன்றாவது பெட்டை தனது ஐந்து குஞ்சுகளோடு செத்துவிட்டது.



சோனி ஜானியின் சேவல் அவள் வீட்டுச் சுற்றுச் சுவரிலிருந்து தாவிக் குதித்தது, இரண்டு வீடுகளையும் பிரித்த பக்கத்துச் சுவர்மீது தாவி, ஷமல் வீட்டுக் காம்பவுண்டுக்குள் புகுந்துவிடும். தனது பெட்டைக் கோழிகளுக்குச் சேவல் இல்லை என்பதனால், இந்தச் சேவலின் வருகையை அவள் தற்செயலான நல்ல வாய்ப்பாக வரவேற்றாள். ஆனால் நெல் அல்லது வேறு தானியங்களை வெயிலில் உலர்த்தும்போது, அவள் பக்கத்துவீட்டுச் சேவல் வருவதை உள்ளூர வெறுப்பாள். அந்தச் சேவலும் ஒட்டுண்ணியைப் போல வீட்டு முற்றத்தில் விடாமல் வந்து நிற்கும். உண்பது, தானியங்களைச் சீய்த்து விடுவது ஆகியன செய்யும்போது எவ்வளவுதான் விரட்டினாலும், அவை திரும்பி வருவதைத் தடுத்து நிறுத்தவே முடியாது.

வெயிலில் தானியங்களை உலர்த்தவே ஷமல் பயப்படுவாள். கடைசியாக ஒருமுறை, அவள் பொறுமையை இழந்தபோது, அதுவரை அடக்கி வைத்திருந்த கோபம் குமுறிக்கொண்டு வந்தது. சேவலின் மீது வசைமாரி பொழிந்தாள். ஷமல் திட்டுவது ஜானி காதில் விழுந்தது. ஜன்னல் வழியாக அவள் எட்டிப்பார்த்தாள்; இகழ்ச்சியாக பதிலடி கொடுத்தாள். "நீ சொந்தமா ஒரு சேவலை வாங்கியிருக்கணும்! காதிலே வாங்கிக்கோ, அதுக்கு மட்டும் என் சேவல் வேணும் வெறுமனே இருந்தே இப்போ ஒண்ணு ரெண்டு மணிஅரிசி போனா மாய்ஞ்சு போயிடறியே ?''

ஜானியின் குற்றச்சாட்டு ஷமல் மனசை வேகமாகக் காயப்படுத்தியது. அன்றுமுதல் தன் கணவனிடம் சேவல் ஒன்று வாங்கித்தரும்படி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். சோனி ஜானியும் தன் வீட்டுச் சேவல் சுவரைத் தாண்டிப் பக்கத்து வீட்டுக்குப் போய்விடாமல் எல்லாவகையிலும் கவனமாகப் பார்த்துக்கொண்டாள்.

குலாம்கான் ஏதாவது சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டு இரண்டு வார காலம் பிடிகொடாமல் நழுவிக்கொண்டு வந்தான்; ஆனால் நீண்டநாளாக அவளிடம் அவ்வாறு காலங்கடத்த முடியவில்லை. மைசுமா பஜாரிலிருந்த வியாபாரி ஒருவரிடமிருந்து அவன் சேவலை



வாங்கிவர வேண்டியதாயிற்று. விலை மூன்று ரூபாய்; தன் மனைவியிடம் நம்பிக்கை ஏற்படுத்த ஒன்றரை ரூபாய் கூடுதலாகக் கூட்டிக்கொண்டான்; அப்போதுதான், " ஓ! என்ன நாத்தம் புடிச்ச சேவலைப் போயி வாங்கிகிட்டு வந்திருக்கீங்க! இதைவிடக் கொஞ்சம் நல்லதா வேறெங்கேயும் கிடைக்கலயாக்கும்!'' என்று தனது குணத்துக்கே உரிய தொனியில் அவள் கேட்காமல் இருப்பாள்.

சோனி ஜானியின் சேவல், இங்கும் அங்குமாக கருப்புப் புள்ளிகள் அமைந்திருக்கும் சிவப்பு நிறமானது. ஷமலின் புதுச்சேவல் பனிபோன்ற வெண்மை நிறமானதாகவும், கண்ணைக் கவரும் அழகுடையதாகவும் இருந்தது ; ஜானியின் வீட்டுச் சேவலை விட அது நடக்கும் பாணி இன்னும் கவர்ச்சியாக இருந்தது. ஆனால் ஜானியின் சேவல் வலுவான கால்களைக் கொண்டதாகத் தோன்றியது. இதுமட்டும்தான் இரண்டுக்கும் இடையே வேறுபாடு. மற்றபடி இரண்டுமே ஒரே மாதிரியான இனவளர்ச்சியும், ஒரே மாதிரியான விலையும் உடையவைதான்.

இரவு நேரமாயிற்று. எல்லோரும் படுக்கச் சென்றார்கள். ஷமல் தனது முழங்கையைத் தலையணைமீது வைத்துக் தாங்கியவாறு தனது உள்ளங்கையால் பற்றித் தலையை ஒருக்களித்து தன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டே புதுச்சேவலைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். "நம்ம சேவலைப் பார்த்ததுமே சோனிக்கு வயிறு எப்படி எரியுது! அவள் என்னைப் பத்திப் பேசின விஷப் பேச்சை என்னால மறக்கத்தான் முடியுமா ? அவளோட சேவல் இந்தச் சுவர் பக்கமா வரட்டும். அதனோட காலை ஒடிக்கல, என்பேரு ஷமல் இல்ல.''

இப்படியொரு முடிவெடுத்த பின், தன்னுடைய கணவன் முகத்தைப் பார்த்தாள். வருணனைக்கு அப்பாற்பட்ட அழகுடையவன் போலத் தோன்றினான் அவன். வெட்கத்தில் அவள் முகம் சிவந்தது. முழங்கையைத் தலையணையிலிருந்து எடுத்துவிட்டு, தலையைக் கீழே சாய்த்தாள். கோழிக்கூண்டிலிருந்து திடீரென ஓர் ஓசைகேட்டது. "கொக்.. எ.. றக்கோ.. கோ!'' ஷமல் திடுக்கிட்டாள். தலையைத் தூக்கிக் கூர்ந்து கேட்டாள். அவளுடைய மனதில் தோன்றிய கற்பனையோ என்றும் நினைத்தாள். ஆனால் கொக்கரிக்கும் ஓசை மறுமுறையும் துல்லியமாகக் கேட்டது. "கொக்..எ.. றக்கோ... கோ'' ஷமல் தனது கழுத்தே திருகப்பட்டு முறிந்துபோனது போல உணர்ந்தாள். எழுந்து உட்கார்ந்துகொண்டு கணவனிடம் கதறினாள். "ஓ..! இங்கப் பாருங்க! காதிலே விழுதா ? எழுந்திருச்சிப் போய்ப் பாருங்க!''

"ஏன் ? என்ன நடந்தது ?'' குலாம்கான் திடுக்கிட்டு எழுந்தான் "என்னைக் கூப்பிட்டாயா ?''

"உங்களுக்குக் கேட்கலையா ? சேவல் கூவுது. அதுவும் ராத்திரி நேரத்தில்!'' ஷமல் அழுதுகொண்டே பேசியது போலிருந்தது. வீட்டுக்குக் கேடு வரவழைக்கிற கெட்ட சகுனமாப் போச்சே! "அதுவா கூவறது ?'' தனது முகத்தைச் சுளித்துக் கொண்டான். "அப்புறம் ? நாம என்ன பண்ணறது ? ரமழான் உபவாசத்துக்காக விடியற்காலையில் எழுந்திருக்கிறதுக்கு மாறா சேவல் கூவி மருள வைக்கிருதா ?''

"முட்டாள் தனமா பேசறதப் பாரு!'' ஷமல் கோபத்துடன் பதிலடி கொடுத்தாள். " சீக்கிரமா எழுந்து அதைக் கொல்லுங்க! நடுராத்திரியிலே கூவுற சேவலை உடனடியாக் கொல்லணுங்கறது உங்களுக்குத் தெரியாதா ? அது சனி புடிச்ச ஜென்மம் ?''

"கெட்ட சகுனத்தைப் பத்திக் கவலைப்படாதே! கிழங்கட்டைங்க பழங்கதையை மறந்திட்டு, போய்த் தூங்கு, போ!''

"குலாம்கான் பொதி மெத்தையின் உறையை இழுத்துப் போர்த்தியபடி தலை, காதுகளை மூடிக்கொண்டான். ஷமல் சிறிதுநேரம் விடாப்பிடியாக வற்புறுத்திப் பார்த்தாள். அதற்கு ஒரு வார்த்தை கூடப் பதில் சொல்லும்படியாக அவனைத் தூண்டிவிட அவளால் முடியவில்லை. அவன் ஆழ்ந்த தொல்லையற்ற தூக்கத்தில் மூழ்கி மறுநாள் காலை வழக்கம் போல ஏழுமணிக்கு தூங்கி எழுந்தான்.

சோனி ஜானியின் காதுகளில் சேவல் கூவினது விழுந்திருக்குமே என்கிற எதார்த்தமான உண்மைக்குக் கவலைப்பட்ட அளவு ஷமல் சேவல் கூவியதற்காகக் கவலைப்படவில்லை. ஜானியின் கொட்டும் விஷமுள்ள நாக்கை அது உசுப்பித் தூண்டிவிட்டுவிடும். அவளது குத்தலான பேச்சு ஷமலின் கதையைத் துளைத்து எடுத்துவிடும் "இந்த மாதிரி அற்புதமான சேவலை வாங்கிவர வேண்டும் என்றா சொல்லிக் கொண்டிருந்தாய் ? உலகத்தில் உள்ள எல்லாச் சேவல்களும் பொழுது விடிந்து வெளிச்சம் வருவதை அறிவிப்பதற்காகக் கூவும்; இந்த தரித்திரம் புடிச்ச ஈன ஜென்மத்தைப் பாரு! பொழுது அடங்கனதுமே சாத்தான் இதோட மூக்குக்குள்ளே எப்படியோ நுழைஞ்சிடறான்'' கோழிக்கூண்டுக் கதவைத் திறந்துவிட்ட பிறகு சோனி ஜானிக்குப் பயந்தவளாய் ஷமல் வீட்டுச்சுவருக்கு வெளியில் தலைகாட்டவில்லை. அது அவளுக்குக் கடினமாகவும் இருந்தது; சோனி ஜானியின் பேய்த்தனமான பேச்சுக்குத் தக்கபதில் கொடுக்கமுடியும் என்று நம்பியிருந்தாள் ஷமல். அவை சுவர்களையும் ஜன்னல்களையும் நோக்கிச் சொல்லப்பட்டதுபோல் இருந்தாலும் தெளிவாக மறைவாகப் பக்கத்து வீட்டுக்காரியை நோக்கிச் சொல்லப்பட்டதேயாகும்.

ஷமல் நசுக்கப்பட்ட உணர்வுடையவளாகி, வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்; அதேவேளை அவளுடைய பெட்டைக்கோழிகள் பக்கத்து வளாகத்துச் சேவலுடன் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. வீட்டுச் சேவல் அவளது பார்வையில் பட்ட கணமே அவள் மனம் தலைகீழாகி வெறுப்பைக் கக்கியது. அந்தச் சேவல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ளாமல், தனது சிறகுகளை விரிப்பதும், நடனமாடுவதும், பெட்டைக்கோழிகள் ஒவ்வொன்றையும் சுற்றி வருவதுமாகி, பவ்வியமாக விசிறி விடுவது போல்

பாவனை செய்தது. ஆனால், அந்தப் பெட்டைக்கோழிகள் பறந்தோடிப் போயின. "உனக்கு என்ன ஆச்சு? நீ செய்யறது சரிதானா? அக்கம் பக்கம் யாராவது பார்க்கப் போறாங்க,'' என்று அவை சொல்வது போல விலகி ஓடின. பிறகு அவை சமையலறையின் கதவுகளை நோக்கி ஆச்சரியத்தில் மூழ்கின. "ஏன் இன்றைக்கு அம்மாளை எங்கேயும் காணவில்லை? நாம் கொத்தித் தின்ன ஏதாவது தானியங்களைப் போடுவாளா?'' பெட்டைக்கோழிகள் சமையலறையை நோக்கி ஓடின. சேவல் அவற்றின் மனசில் உள்ளதை அறிந்து கொண்டதுபோலப் பின் தொடர்ந்தது.

ஷமலின் பார்வை அதன் கால்களின் மீது பட்டது. அவற்றின் கீழ் நகங்கள் முதல் காலின் மேல்பகுதிவரையில் அசிங்கமான சேவலின் கால்களாகத் தோற்றமளித்தன. அவளது மனமுரண்பாடு மேலும் ஆழமாகியது. அவள் அந்தப் பெட்டைக்கோழிகளை விரட்டியடிக்க விரும்பவில்லை. ஏனெனில் பக்கத்துவீட்டுசோனி ஜானியின் மூஞ்சி ஜன்னலில் வெளிப்படுவதனை அவள் விரும்பவில்லை. ஒரு பிடி அரிசியை எடுத்துவந்த அவள் சற்றுதூரத்தில் விசிறி எறிந்தாள். அவள் சேவலுக்கு எதுவும் போடவேண்டிய தேவையில்லைதான். ஆனால் அந்த பெட்டைக் கோழிகளை விரட்ட வேறுவழி? அந்தப் பரிதாபமான பிறவிகள் நாள் முழுவதும் பட்டினியால் சாகமுடியாது.

சோனி ஜானியின் சேவல், முன்பு கேள்விப்பட்டிராத ஒரு கொக்கரிப்பைப் பக்கத்துவீட்டுச் சுவருக்கு அந்தப் பக்கமாகக் கேட்டதும், தனது கழுத்தினை உயர்த்தி நெஞ்சினை நிமிர்த்தியது. அதன் உடம்பு முழுவதும் விறைப்பாகியது; அதன் நரம்புகளும் எல்லாம் முறுக்கேறின.

"கொக்.. கறக்.. கோ.. கோ'' என்று உச்சஸ்தாயில் அது கொக்கரிக்கத் தொடங்கியது. அதன் தோழர்களை அழைப்பதுபோல இருந்தது. "பக்கத்து வீட்டுக்கு வந்திருக்கும் புதுப் பிசாசு யார்?'' என்று கேட்பது போல இருந்தது.

"கொக்.. கறக்.. கோ.. கோ..''

"ஷமலின் சேவலும் தனது கழுத்தை நிமிர்த்தி பதில் சொல்லுவதுபோல,'' அழகான அந்தச் சேவல் நான்தான்! வந்து நீயே பார்த்துக்கொள். ஏன் சுவருக்குப் பக்கத்திலிருந்து முஷ்டியைக் காட்டுகிறாய்?''

ஷமலுக்கு இந்த ஓசை பிடிக்கவில்லை. சேவல்களின் வாயில் ஆப்புவைத்து அடித்து ஊமையாக்கிவிட வேண்டுமென்று தோன்றியது; அப்போதுதான் சோனி ஜானியின் காதுகளில் விழுந்து, அவள் ஜன்னல் இருக்குமிடத்தில் ஒட்டிக்கொண்டு நிற்க வரமாட்டாள். அவற்றை அங்கிருந்து விரட்டுவதற்குப் பதிலாகச் சேவலின் தலையைக் குறிபார்த்து கையளவு மண்ணை எடுத்து வீசினாள். அவளது குறி தவறியது; சேவல் அதிர்ச்சியடைந்தது போல் சத்தமாகக்கொக்கரிக்கத் தொடங்கியது. சோனி ஜானி ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தாள். " ஏன் காலங்காத்தால இவ்வளவு கோபமா இருக்கே? பாவம், அப்பிராணி என்ன பண்ணினது?'' என்று கேட்டாள்.

கையும் களவுமாகக் கள்ளன் அகப்பட்டுக்கொண்டது போல ஷமல் விழித்தாள். அவள் உடம்பு முழுவதிலும் வியர்வை பெருக்கெடுத்தது. இந்த மாதிரி எதிர்ப்படுவதை எப்படியாவது தவிர்த்துவிட வேண்டும் என்று அவள் முயற்சி செய்தது எல்லாம் வீணாகியது. சோனி ஜானி கூறிய சொற்கள் அவளுடைய சந்தேகத்தை உறுதிபடுத்தி நடுராத்திரியில் சேவலின் கொக்கரிப்பைக் கேட்டிருப்பாள்; இப்போது அவள் பேசுவதெல்லாம் இகழ்ச்சியை மறைக்கும் கபடச்சொற்கள்.

அவள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு , "நான் எதுக்காகக் கோபப்படணும்? அந்தச் சேவல், பாவம் பெட்டைக்கோழிகள் தானியத்தைத் தின்னுவதற்கு நெருங்கவே விடமாட்டேன் என்கிறது. அதனால்தான் அதை விரட்டியடித்தேன்.''

"அது புதுசா வந்திருக்கில்ல, அதுதான். நாளையிலிருந்து அது தானாக இரை தேடிக்கக் கிளம்பிடும். நீ வேணா பொறுத்திருந்து பாரு,'' என்று சோனி சிரித்தவாறு கூறினாள்.

"ஆமாம் நாங்க அதை வீட்டிலேயே வைச்சிக்கப் போறதா இருந்தா நீ சொல்றது சரியா இருக்கும். அதை இறைச்சிக்காகத்தான் வாங்கியிருக்கோம்.''

"அதற்குமேல் ஜானியை ஒருவார்த்தை கூடத் தொடர்ந்து குத்தலாகப்பேச விட்டுவிடக் கூடாது என்று கருதினாள். "நேற்றே அதை நாங்கள் அறுத்திருப்போம்; ஆனால் காலை வரும்வரை காத்திருந்தோம்.''

" ஏன்? ஏன் அதைக்கொல்லப் போறீங்க?'' அவர்கள் சொன்ன படியே செய்துவிட்டால் தன்னுடைய சேவல் தனியாகிவிடுமே என்று ஜானி நினைத்திருக்கக் கூடும். "பாரு! எவ்வளவு கம்பீரமா இருக்றா! அதன் குரலும் கம்பீரமா இருக்கிறதே! அதன் குரலும் நன்னா இருக்கிறதே !''

ஷமல் முகம் மாறியது. அவள் அதன் குரலைக் கேட்டிருந்தவள்தான்: அதன் குரலை ஏன் அவள் புகழ்ந்து பேசவேண்டும்? என்று நினைத்தாள். பதில் கூறும்போது இதைப்பற்றிப் பேசுவதைத் தவிர்க்க எண்ணினாள்.

"ஓ! சந்தையில் கொண்டுவந்து குவிக்கப்படும் இந்த மட்டமான நாத்தமடிக்கும் சேவல்களை நான் பொருட் படுத்துவேன்னு நீ நெனைக்கிறயா? நமக்கு வேணுங்கற ஜாதி கோழிஅங்கே கிடைக்காது. ஆனா வேறே ஒருத்தங்க வாங்கித்தரதா சொல்லியிருக்காங்க.''

சோனி ஜானிக்கு இந்தப் பேச்சே பிடிபடவில்லை. ஷமலின் புதுக்கோபத்தைப் பற்றி அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய வீட்டுச் சேவல் பற்றி எப்படியெல்லாம் புகழ்ந்து பேசிக்கொண்டாள்! ஒரு



வேளை அவள் இப்போது சொல்வதெல்லாம் ஜானியிடம் இருப்பது உள்ளூர்ச்சேவல் என்பதைக் குத்திக் காட்டத்தான் இருக்க வேண்டும். நன்றாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றுதான் இருந்தாள். ஆனால் அதற்கு முன்பாக ஷமல் தன் வீட்டினுள் சென்று விட்டாள். ஜானி தன் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

சேவல் உண்டாக்கிய பிரச்சினையைப் பற்றிய ஆழமான சிந்தனையில் ஷமல் மூழ்கிப் போனாள். தன் கணவனை விட்டுச் சேவலைக் கொன்றுவிடச் சொல்ல வேண்டும். அவன் மறுத்தால் கசாப்புக்கடை சமதுவிடம் சொல்லி வெட்டச் சொல்லவேண்டும் "இன்னி ராத்திரிக்கே அதைச் சமைச்சுப் போட்டா எப்படி வேண்டாம்னு சொல்லுவான்னு பாக்கலாம்.''

குலாம்கான் மசூதியிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்த பொழுது ஷமல் அவனுக்குத் தேநீரை ஊற்றிக் கொடுத்துக் கறாராகப் பேசினாள். டீயைக் குடிச்சிட்டு சேவலை என்ன பண்ணணுமோ செய்யுங்க. அண்டை வீட்டுக்காரங்க என்னதான் சொல்ல மாட்டாங்க? அவங்களோட ஒத்து நாம வாழவேண்டாமா?

" பக்கத்து வீட்டுக்காரங்களுக்கு இதிலே என்ன இருக்கு?'' ரொட்டித் துண்டை கடித்துக் கொண்டே கேட்டான் குலாம்கான். எப்போது விடிஞ்சாக் குழப்பங்கறதுக்கு இது ஒண்ணும் ரமழான் மாசமில்லையே.''

"எது பேசினாலும் குறுக்கே பேசி நிறுத்தனாதான் உங்களுக்கு தெரியும்! உங்களுக்கு பிடிக்கலேன்னா நீங்க ஒண்ணும் செய்யத் தேவையில்லை. கசாப்புக்காரன் சமது கிட்டே சொல்லி நானே அதை முடிச்சுடறேன். வீட்டுக்குக் கெடுதல்னு தருகிற அந்தப் பிசாசை நான் கொழுக்க வைப்பேன்னு நெனைக்கிறீங்களா?''

" உன் இஷ்டப்படி செய்.'' என்று சொல்லி அவளது விவாதத்தை குலாம்கான் முடித்தான். " திரும்பவும் ஒரு சேவலை வாங்கிட்டு வான்னு மட்டும் கேக்காதே.''

" கேட்கமாட்டேன். என்னமோ ஊரிலே கோழியே கிடைக்காம பஞ்சம் வந்திட்ட மாதிரி.'' ஷமல் பலமாக அடுப்பை ஊதினாள். "சோனி ஜானியின் கண்றாவி சேவல்தான் நாள் முழுக்க நம்ப முத்தத்திலே அலைஞ்சிண்டிருக்கு இன்னோரு சேவல் வேணுமா என்ன?''

ஷமல் சேவலை எப்படியாவது தொலைத்து விடுவது என்று எண்ணினாள். சேவலைப் பற்றி நினைத்தபோதே அடி மனதில் தாங்க முடியாத வெறுப்புத்தான் வந்தது. அவளைப்பார்த்து ஜானி பல்லெல்லாம் தெரிய பரிகாசமாகச் சிரிக்கிறாள். சேவல் சிறகடித்துக் கொள்ளும் போதெல்லாம் அது ஜானியின் கெக்கலிப்பாக அவள் காதுகளில் ஒலித்தது. அவளுடைய அவமானத்திற்கும் சிறுமைக்கும் அச்சேவல் ஒட்டுமொத்தமான காரணமாகத் தோன்றியது.

குலாம்கான் வேலைக்காக வெளியே சென்றதுமே, சமது வீட்டில் இருக்கிறானா என்று தேடிப் போனாள் ஷமல். இரண்டு மூன்று வீடுகள் தள்ளி அவன் இருந்தான். அக்கம்பக்கத்தார் சேவல்களை அறுப்பது அவன் தனிச் சிறப்பு. அந்தத் தொழிலை அறிந்தவர்கள் வேறு சிலர் இருந்தாலும், அதில் கைதேர்ந்தவன் என்ற பெருமை அவனுக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

சமது வீட்டில்தான் இருந்தான். ஜன்னல் வழியாக அவளைப் பார்த்ததுமே அவள் வந்த காரியத்தை யூகித்துவிட்டான். "போய் சேவலைப் பிடிச்சி இங்குக் கொண்டுவா. இப்போதே முடித்துவிடுகிறேன். ஆனால் உன்வீட்டு விருந்துக்கு நான் கட்டாயம் வருவேன், மறந்திடாதே! நீங்க ரெண்டுபேரு மட்டுமே பங்கு போட்டுக்கலாம்னு இருக்காதீங்க.''

"தாராளமா வாயேன்,'' என்றாள் ஷமல்.

மனம் லேசாகியவளாய், உதட்டில் புன்னகையுடன் அவள் திரும்பினாள். இனிமேல் தலைநிமிர்ந்து நடக்கமுடியும் என்று மகிழ்ச்சியடைந்தாள். நாளெல்லாம் ஜானியின் குத்தல் பேச்சைக் கேட்க வேண்டியது இல்லை. ஆனால் அவள் கண்ணில் பட்டது தூக்கிவாரிப் போடும்படியாக இருந்தது. அவள் வீட்டு முற்றத்தில் ஒரு மூலையில் அவளுடைய பெட்டைகள் ஒண்டிக்கொண்டு நின்றன. ஜானியின் சேவலும் அவளுடைய சேவலும் சுற்றிலும் பெரிதாகப் புழுதியைக் கிளப்பி மூர்க்கத்தனமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. சோனி ஜானி அவள் வீட்டு ஜன்னல் வழியாகச் சேவல் சண்டையை மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தின் பூரிப்புக்கு என்ன காரணம் என்பதை ஷமல் யூகித்து உணர்ந்து கொண்டாள். தன்னுடைய சேவல் கட்டாயம் ஜெயித்துவிடும் என்பது அவளுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது.

அவளுடைய சேவலின் கால்நகம் குட்டையாக இருந்தாலும் வலுவாக இருந்தது. தொண்டையைச் சுற்றிலும் தசை தொங்கியது. வலுவான கால்கள் எல்லாம் சேர்ந்து அது ஒரு சரியான சண்டைக்கோழி என்ற தோற்றத்தைத் தந்தது. அக்கம்பக்கத்திலிருந்த எல்லாச் சேவல்களோடும் அது சண்டையிட்டு அடித்து விரட்டியிருந்தது.

ஷமலின் முகம் வெளிறியது; அவளது இதயம் வேகமாகத் துடித்தது.

இரண்டு சேவல்களின் கழுத்துமே விரைத்து வட்டவடிவாக நின்றன. அவற்றின் தலைகள் கோபத்தால் சிலிர்த்தன. இத்தகைய சிலிர்ப்புகளால் அவற்றின் சிறகுகளில் மின்சக்தி பாய்ந்தது போல் இருந்தது. அவற்றின் உடல்கள் விறைத்தன. வால் இறகுப்பகுதி

புடைத்து இருந்தது. கோப உணர்ச்சியை மாறி மாறி வீசியபடி அவற்றின் அசையும் தலைகள் புலப்படுத்தின. துணிச்சலுடன் அவையிரண்டும் மோதிக்கொண்டன. கூரிய அலகினால் கொத்தின; கிழித்தன.

ஷமல் வீட்டு முற்றத்திற்குள் நுழைந்தபோது, சோனி ஜானி அவள் நன்றாகத் தெரியுமாறு ஜன்னல்மீது ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

“நாலறை ரூபாய் பெறுமான உனது வீட்டுச் சேவலை என் நோஞ்சான் சேவல் எங்கே எதிர்த்து நிற்கப்போகிறது? ஆனால் தானாக ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் கழுதையை யாரால் தடுக்கமுடியும்? அதுக்கு வெட்கம் மானம் உண்டா, என்ன? தனது குத்தலான பேச்சைத் தொடர்ந்து சொன்னாள். “ஆனாலும் நான் உன்னை எச்சரிக்கை செய்யறேன் உன்னோட சேவலை அது விரட்டி அடிச்சே தீரும், அந்த விஷயத்திலே அது அக்கம்பக்கத்திலுள்ள எல்லாச் சேவல்களையும் முன்னமேயே அடிச்சி விரட்டியிருக்கு.''

ஷமலின் மனம் வருத்தத்தில் தொய்ந்தது. ஆனால் அவளால் என்ன சொல்ல முடியும்? நடந்து முடிந்த நிகழ்ச்சிகளால் அவள் திகைத்துப்போயிருந்தாள். சோனி ஜானி வேண்டுமென்றே தனது வீட்டுச்சுவற்றுக்குள் அவளது சேவலைப் போகவிட்டிருப்பாளோ என்னும் சந்தேகம் எழுந்தது. உடனடியாக எழுந்து, ஜானி வீட்டுச் சேவலின் குரல்வளையை நெரித்துவிடலாமா? என்று கட்டு மீறிய ஆத்திரம் எழுந்தது. ஆனால் தான் இகழ்ச்சிக்கு ஆளாகிவிடாமல் தன்னைக் காத்துக் கொள்ளும் முறையில் அடக்கிக் கொண்டுவிட்டாள்.

“ஜாதி சேவலை நாட்டுச்சேவல் விரட்டியடிச்சிடுச்சாம் என்னும் பழமொழி உனக்குத் தெரியுமா? இருந்தாலும் என்னோட சேவல் சண்டைக்கானது அல்ல! அது வித்தியாசமான இனமாக்கும். உனக்குத் தெரியுமா? அதனாலதான் அதுக்கு அவ்வளவு விலை!''

அந்த இடத்தை ரணகளமாக்கிவிடும் முறையில் இரு சேவல்களும் மோதிக்கொண்டிருந்தன. அவற்றின் உடலில் இருந்து இரத்தம் கொட்டும்வரை அவை மாறிமாறி இறக்கைகளைக் கொத்திப்பிடுங்கின. சோனி ஜானி ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டாள். அவளது தலை துடித்தது; முகம் சேவல்கள் சண்டையிடும்போது ஒவ்வொரு கணமும் சிவந்து கொண்டே வந்தது.

ஷமலும் ஆர்வத்துடிப்பினால் கவர்ந்து இழுக்கப் பட்டாள். நடப்பதை நினைத்து, அவள் மனப் போராட்டத்திலும் துன்பத்திலும் மூழ்கினாள். ஜானியின் சேவல் கண்ணில் பட்டதுமே அவள் மனசில் அப்படிப்பட்ட பயங்கரத்தைத் தூண்டியது. வாய்க்குள்,'' உன்னோட மூக்கு முறிஞ்சு போக! காலுங்க இழுத்துக்கொண்டு போக! என்று சபித்தாள்.

ஜானியின் சேவல் கருப்பும் சிவப்பும் கலந்த நிறமுள்ளதாக இருந்ததால் அதன் உடம்பிலிருந்து இரத்தம் வழிவது அவ்வளவாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு புள்ளி கூட இல்லாத வெள்ளை உடலாதலால் ரத்தத்தில் குளித்ததுபோல் தெரிந்தது. அவள் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், “இந்தப் பாழாப் போனது நாசமாப் போக! வாதம் அதன் வாயைக் கொண்டு போக! என்று கோபத்தால் குமுறினாள்.

“பத்திரமா பாத்துக்க, ஷமல் அதைவிட்டு நீ பாட்டுக்குப் போயிடாதே,'' என்று கூறியபடி சோனி ஜானி புன்னகை செய்வதுபோல் பாவனை செய்தாள். “இரண்டு சேவல்களில் எது பார் நாத்தமடிக்கிற சேவல் எல்லாம் எப்போதுமே தரக்குறைவானதா ஆயிடாது.''

ஷமல் விரக்தியில் மூழ்கினாள். எல்லா வகையான துர் அதிர்ஷ்டம் அந்தச் சேவல் வந்தது முதல்,ஒன்றை அடுத்து மற்றொன்றாக அவள் மீது கவிந்துவிட்டன. ஜானிக்கு அதே கடுமையான குரலில் அவளால் பதில் சொல்லியிருக்க முடியாது; அதை ஜானி தாங்கிக் கொள்ள முடியாது. கூரான வார்த்தைகளால் பதிலடி கொடுப்பதற்கு ஷமலின் அறிவுக் கூர்மையைவிட அவளின் திறமை சற்றும் குறைந்தது அல்ல. இது இருவரிடமும் வசவுப் பரிமாற்றத்தையும் வாய் வார்த்தையும் யுத்தத்தையும் கிளப்பியிருக்கும். அது நேராததற்குக் காரணம் திடீரென்று ஒரு கோழி பயந்தோட ஆரம்பித்தது. அது ஜானியின் சேவல். ஷமலின் சேவல் அதை வீடு முழுக்க துரத்தித் துரத்தி அடித்தது.

ஜானி வியர்த்து விடுவிடுத்துக்கொட்டி அவளுடைய முகம் கரிபூசியது போல் மாறிவிட்டதாக ஷமல் எண்ணினாள். ஆனால் அதேவேளையில், கோழிச் சண்டையின் முடிவு என்னவாகிறது என்பதைப்பற்றித் தனக்கு ஏதும் அக்கறை இல்லாதது போல ஜானி பாவனை செய்வதையும் பார்த்தாள்.

தனது கன்னத்தின் மீது கையைப் பதித்தவாறு “இந்தச் சேவலைக் கொன்னுடப் போறியா?'' என்று ஜானி கேட்டாள் “நான் என்ன சொல்லறது? அல்லது கொல்லாம இருப்பியா?''

“நான் சொன்னதை அப்படியே எடுத்துக்கிட்டியா?'' என்று தனது வெள்ளிக்காதணிகள் தலையசைக்கும் போது பளபளக்க ஷமல் ஜானியைக் கேட்டாள்.

“என்னோட சேவலுக்கு ஆயிரம் குற்றங் குறைகள் இருக்கலாம். மேலும் அது நடுராத்திரியில் கூவலாம்; ஆனால் சரியாக சண்டை போடுற குணம் இருந்தா, இதையெல்லாம் நான் கண்டுக்கவே மாட்டேன். இந்த மாதிரி சேவல் தான் எனக்கு வேணும். இல்லேன்னா உள்ளூர்ச் சேவலுக்கா குறைச்சல்?

*– தற்கால இந்தியச் சிறுகதைகள்–II நூலிலிருந்து*
*சாகித்ய அகாதமி வெளியீடு*



# திருநெல்வேலி மாவட்டத்தில் முழு சுகாதார கிராமங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் முழு சுகாதாரமானதாக மாற்ற கிராமப்புறங்களிலும், ஏழை வீடுகளிலும் தனிநபர் கழிப்பறைகள் உருவாக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கிராமப்புறங்களில் பெரும்பாலும் திறந்தவெளி கழிப்பிடங்களே அதிகம். இதனால் தொற்று நோய் பரவி மனித இனத்திற்கு கேடு விளையும் என்பதால் அரசு அனைத்து கிராமங்களையும் சுகாதாரமுள்ள தூய்மையான கிராமமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அரசு நிதியுதவி மற்றும் மக்களின் பங்களிப்புடன் முழு சுகாதாரத் திட்டமானது நாடு முழுவதும் செயல்படுத்தப் படுகிறது. 2005ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தர விட்டுள்ளது. இத்திட்டமானது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் ஊராட்சி ஒன்றியங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப் படுகிறது.

முழு சுகாதாரத் திட்டத்தில் திறந்தவெளி மற்றும் பொது இடங்களைக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்தத் தடை விதித்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் கழிப்பறைகள் கட்டவும், நவீன சுகாதார வளாகங்கள் அமைக்கவும், தனிநபர் கழிப்பறைகள் கட்டவும் சாக்கடை வசதி செய்து தருவதற்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

திருநெல்வேலி மாவட்ட முழு சுகாதாரத் திட்டத்திற்கு ரூ.9.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாவட்டத்தில் உள்ள 19 ஊராட்சிகளில் பெண்கள் சுகாதார வளாகங்கள் கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு தலா ரூ.2.25 இலட்சம் செலவில் 10 வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 9 வளாகங்கள் பணி முன்னேற்றத்தில் உள்ளன. மொத்தமுள்ள 425 ஊராட்சிகளிலும் சுகாதார வளாகங்கள் கட்டப்பட வேண்டும் என்கிற சீரிய திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 276 வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 125 வளாகங்கள் பணி முன்னேற்றத்தில் உள்ளன.

## தனிநபர் கழிப்பறைகள்

2002–2005ஆம் ஆண்டில் முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பறைகள் 58,000 கட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. இக்கழிப்பறைகள் கட்டும் பணிகள் அதிக அளவில் தொண்டு நிறுவனங்கள் மூலமாக கட்டப்பட்டு வருகின்றன.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு ரூ.1,000 செலவில் கழிப்பறைகள் கட்டி கொடுக்கப்படுகிறது. இதற்கு பயனாளிகள் பங்களிப்பாக ரூ.500 வழங்க வேண்டும். பங்களிப்புத் தொகையை பணமாகவோ அல்லது அதற்குப் பதிலாக செங்கல் மற்றும் பொருட்களாகவோ மனித உழைப்பாகவோ வழங்கலாம்.

கிராமப்புறங்களில் உள்ள வீடுகளில் கழிப்பறைகள் கட்டினால் துர்நாற்றம் அடிக்கும் என மக்கள் முதலில்



தயக்கம் காட்டினர். அரசின் மூலம் கழிப்பறைகள் அமைப்பதன் அவசியம் மற்றும் அதன் தேவையை மக்களிடம் விளக்கிய பின்னர், பொதுமக்கள் தற்போது தாமாகவே கழிப்பறைகள் கட்டுவதற்கு முன் வந்துள்ளனர். இதுவரை 20,124 தனிநபர் கழிப்பறைகள் கட்டப் பட்டுள்ளன.

வீடுகளில் கட்டப்பட்ட இக்கழிப்பறைகள் குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்களுக்கு பெரிதும் பயன்படுகின்றன. இதனால் திறந்த வெளிகளை பெண்கள் கழிப்பிடமாக பயன்படுத்துவது கிராமப்புறங்களில் வெகுவாகக் குறைந்துள்ளது.

– உ.ல. இரவீந்திரன்,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருநெல்வேலி.*

❖ ❖ ❖

# சிசுக்களைக் காப்பாற்றுவதில் முன்னோடியாகத் திகழ்கின்றது தேனி மாவட்டம்

தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலைகளைத் தடுப்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேனி, மதுரை, திண்டுக்கல், சேலம், தருமபுரி, ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய 7 மாவட்டங்களில் தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தினை புதிய பொலிவுடன் மெருகேற்றி செயல்படுத்த உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை நடைமுறைப்படுத்தும் வகையில், தேனி மாவட்டத்தில் பெண் சிசுக்களின் இறப்பு விகிதம் அதிகம் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, முதலாவதாக 30.05.2002 அன்று தேனி நகரில் "குழந்தை ஏற்பு மையம்'' தொடங்கிவைக்கப்பட்டது.

தொட்டில் குழந்தைத் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி தேனி மாவட்டத்தில் கடமலைக்குண்டு, கோம்பை, தேவதானப்பட்டி, கண்டமனூர், குமணன் தொழு, எம். சுப்புலாராபுரம் ஆகிய ஊர்களிலுள்ள அரசு மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 25 அரசு தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொட்டில் உள்ள மையத்திற்கும் 6 ஃபீடிங் பாட்டில்கள், பெறப்படும் குழந்தைகள், குறித்த விவரங்களைப் பதிவு செய்யும் பதிவேடும் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் பெறப்பட்டுள்ள விவரங்களைப் பதிவு செய்தவுடன் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட சமூகநல அலுவலருக்குத் தகவல் தெரிவித்திடுமாறு மருத்துவமனை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

குழந்தை ஏற்பு மையங்களில் மெத்தையுடன் கூடிய தொட்டில்கள், மருந்துகள், ஃபீடிங் பாட்டில்கள் மற்றும் தளவாட சாமான்களுடன் கூடிய வசதி செய்து தரப்பட்டுள்ளது. தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி தேனி மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அலுவலர்களும், பணியாளர்களும் முழுமையாக அறிந்திடும் வகையில் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, இத்திட்டம் தொடர்பாக பயிற்சியுடன் கூடிய விளக்கக் குறிப்புகள் விநியோகிக்கப் 'ளது.

தேனி மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கொடுத்த தகவலின் பேரில் இதுவரையிலும் 47 பெண் குழந்தைகள் மற்றும் 6 ஆண் குழந்தைகள் ஆக மொத்தம் 53 குழந்தைகள் தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் பெறப்பட்டு, தொடர் வளர்ப்பிற்காக அரசு அங்கீகாரம் பெற்ற



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகிலுள்ள ''அழகுசிறை, கிளோர்சியன் மெர்சி ஹோம், கோயம்புத்தூரிலுள்ள பீஸ் ஹோம், சென்னையிலுள்ள மாஸோஸ் கில்ட் ஆகிய தொண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் முழு ஒத்துழைப்பாலும் தேனி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைகள் தடுக்கப்பட்டு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களில் மிக முக்கிய திட்டமான தொட்டில் குழந்தை பாதுகாப்புத் திட்டம், நடைமுறைப்படுத்துவதில் தேனி மாவட்டம் முன்னோடியாகத் திகழ்கின்றது.**

**— ச. செல்வராஜ்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி





# கிருஷ்ணகிரியில் 12ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத் தலைநகரான கிருஷ்ணகிரி நகரில் 12 ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி தொடக்க விழா, 31.5.2004 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. மங்கத் ராம் சர்மா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட அலுவலர் திரு.ஆர்.சக்திவேல் வரவேற்புரை ஆற்றினார். தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்துறை இயக்குநர் திரு. கே. தனவேல், இ.ஆ.ப. அவர்கள் திட்ட விளக்கவுரை ஆற்றினார்கள். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ. மில்லர் அவர்கள் மாவட்ட சுற்றுலாப் பொருட்காட்சியினைத் திறந்து வைத்து விழாப்பேருரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப. அண்ணாவி அவர்கள் மாங்கனி கண்காட்சி யினைத் திறந்து வைத்து பேருரையாற்றினார்கள்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன் அவர்கள் பல்துறை பணிவிளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

தோட்டக்கலைத்துறையின் சார்பாக அமைக்கப் பட்டிருந்த "மா'' போட்டி அரங்கில், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்கள் உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 202 பேர் பங்கேற்றனர். இந்த ஆண்டு கண்காட்சியில் அரிய வகை மாம்பழங்கள் இடம் பெற்றன. திருவள்ளூர் மாவட்டத்தில் விளையும் ஜவாரி ரகம் மற்றும் கட்ரோக், நாட்டி, அர்க்கா அன்மோர், அர்க்காபுனித் அம்ராபாலி, தன்னேரி, மல்லிகா, மஞ்சிரா, உமாயுதின், சிந்து வகை ரகங்கள்; உள்ளூரில் பெயர் பெற்ற அல்போன்சா, பங்கனப்பள்ளி, ருமானி, குதாதத், மல்கோவா, செந்தூரா, நீலம், பெங்களூரா, காரப்பந்தி உள்ளிட்ட 34 ரகங்கள் கண்காட்சியில் இடம் பெற்றன.

மாங்கனிக் கண்காட்சியில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம், சமூக நலத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, கதர் கிராமத் தொழில் வாரியம், குடும்பநலத் துறை, கல்வித்துறை ஆகியவற்றின் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

விழாவில், 12ஆவது அகில இந்திய மாங்கனி விழா மலரை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப. அண்ணாவி அவர்கள் வெளியிட மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'வளர்ச்சிப் பாதையில் ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம்' என்னும் சாதனை மலரை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வெளியிட மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

விழாவில், பாராளுமன்ற மேலவை உறுப்பினர் திரு.சி.பெருமாள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் மு.தம்பித்துரை, திரு.கே.பி.முனுசாமி, திரு.வி.கோவிந்தராஜ், மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவர் திரு.ஆர்.விஜயன், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி ஆர்.அம்சவேணி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு. மு. ஜெயவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியில் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் திரு.வி. ரங்கநாதன் நன்றி கூறினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. அ.மில்லர் அவர்கள் பேசும்போது, "தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது" என்று தெரிவித்தார்கள். மேலும், "தமிழ்நாட்டில்தான் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிக சுற்றுலாத்தலங்கள் உள்ளன. அழகுமிகு கடற்கரைகள், கோவில்கள், வனவிலங்குச் சரணாலயங்கள், பறவைகள் சரணாலயங்கள், அருவிகள், ஊட்டி, கொடைக் கானல், ஏற்காடு, கொல்லிமலை என சுற்றுலா மலைப்பகுதிகளும் அதிகம் உள்ளன என்றும், ஆண்டு தோறும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும், தமிழக அரசு சுற்றுலாவை ஊக்கப்படுத்தும் வகையில் கோடை விழா, சாரல்விழா, நாட்டியாஞ்சலி விழா என்று, 25 விழாக்களை நடத்தி வருகிறது" என்றும் தெரிவித்தார்கள்.

மேலும் "இந்த வகையில் கிருஷ்ணகிரியில் மாங்கனி விழாவை ஆண்டுதோறும் அரசு நடத்தி வருகிறது. கிருஷ்ணகிரி அணையில் ரூ.20 இலட்சம் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற உள்ளன. இங்குள்ள படகுகள் மாற்றப்பட்டு புதிய படகுகள் விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோவிலில் ரூ.40 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்திய அளவில் சுற்றுலாத் துறையில் தமிழ்நாடு 3ஆம் இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு இந்தியாவிற்கு 25 இலட்சம் பேர் சுற்றுலாவிற்காக வந்துள்ளனர். தமிழ்நாட்டிற்கு 8 இலட்சம் பேர் சுற்றுலா வந்து சென்றுள்ளனர்.**

சுற்றுலா வளர்ச்சிக்காக தமிழ்நாட்டில் 64ஆவது சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது" என்றும் கூறினார்கள்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி தமது உரையில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத்துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் பலன்கள் முழுமையாக விரைந்து விவசாயிகளுக்குச் சென்றடைய வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி தமிழக விவசாயிகள், அனைத்துத் திட்டங்களின் பலன்களைப்பெற்று, பெரிதும் பயனடைந்து வருகிறார்கள்.

நமது வேளாண்மைத் துறையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு வழங்கும் மானியங்களை முழுமையாகப் பெற்றும், மேலும், மைய அரசின் மூலம் கிடைக்கக்கூடிய மானியத்தை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாகப் பெற்றும் தமிழக விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழக விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நமது வேளாண்துறை அதிகாரிகளை இந்தியா மற்றும் உலக அளவில் நடைபெறும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஊக்குவித்து வருகிறது.

நமது விவசாயிகள் பயன்பெற இந்த நவீன தொழில் நுட்பத்தை அதிகாரிகள் கிராமங்களுக்கு சென்று முகாம்கள், கருத்தரங்குகள் மூலமாக சொல்லிக் கொடுக்கிறார்கள்.

**பழங்களின் அரசன் என்றழைக்கபடும் "மா" முக்கனிகளில் முதன்மையானதாகும். ஒவ்வொரு ஆண்டும் கிருஷ்ணகிரியில் இந்த விழா நடைபெறுவது சிறப்பு என்றால் இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட புதிய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.**



**இம் மாவட்டத்தில் விளையும் மொத்த தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் 50 விழுக்காடு "மா" சாகுபடி ஆகும். தமிழ்நாட்டில் பழங்கள் சாகுபடிப் பரப்பளவில் "மா" முதலிடம் வகிக்கின்றது.**

**"மா" ரகங்களில் ஏற்றுமதிக்கு ஏற்ற அல்போன்ஸா ரக "மா" வகைகள் இன்று விவசாயி களிடையே மிகவும் பிரபல மடைந்து வருகிறது. இது போன்ற ரகங்களை விவசாயிகள் அதிக அளவில் நடவு செய்து பயன் பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.**

"மா" பயிரிடும் போது உயர்தொழில் நுட்பங்களை விவசாயிகள் அவசியம் கடைபிடிக்க வேண்டும். சொட்டு நீர்ப் பாசனம் அமைத்தல், உரப்பாசனம் போன்ற நவீன முறைகளைக் கடைபிடித்து உற்பத்தியினைப் பெருக்க வேண்டும்.

உயர் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, புதிய திட்டமான "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டத்தை" செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் பங்களிப்புடன் கூடிய இத்திட்டத்தின் மூலம் அதிக அளவில் விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள இயலும்.



இத்திட்டத்தில் நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு 1,000 ஏக்கர் பரப்பில் சிக்கன முறையில் நீரைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ரூ.7.21 கோடி செலவில் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் முதலிய உயர் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தோட்டகலைப் பயிர்களின் திறனை அதிகரிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.



இது தவிர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தோட்டக்கலைத்துறை மூலம் **"ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்"** மற்றும் மாநில, மைய அரசுகள் பகிர்வுத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் "மா" நடவு செய்ய, 25 முதல் 50 விழுக்காடு மானியத்தில் கன்றுகள் வழங்கப்படுகின்றன.

மேலும் "மா" விற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அதன் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் **தெற்கு மாவட்டங்களில் மாங்கனிக்காக வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றினை தேனி மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அறிவித்துள்ளது. இதன் மதிப்பீடு ரூ.24.06 கோடி ஆகும்.**

இது போன்ற கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பழங்களின் புதிய ரகங்கள், விளைச்சலைப் பெருக்க மேற்கொள்ள வேண்டிய நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் "மா" பதப்படுத்தும் முறைகள் போன்றவற்றை விவசாயிகள் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்", என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் உரையாற்றும் போது, "உலகின் கனிவகைகள் அனைத்திலும் மிகச் சிறந்ததும், இனிய சுவையும், மணமும் கொண்ட மாங்கனியின் சிறப்பு கூறும் 12ஆவது அகில இந்திய மாங்கனி விழா, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கிருஷ்ணகிரி மாவட்டம் தொடங்கப்பட்ட பின்பு முதல் அரசு விழாவாக கிருஷ்ணகிரியில் இன்று கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

அகில இந்திய மாங்கனி விழா 1992ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, தொடர்ந்து 12ஆவது ஆண்டாக நடைபெற்று வருகின்றது. முக்கனிகளில் முதன்மையான "மா" தமிழகத்தின் வடமேற்கு மண்டலத்தில் அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 30,800 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 1.5 இலட்சம் டன் மாங்கனிகள் உற்பத்தி செய்யப்பட்டு அண்டை மாவட்டங்களுக்கும், அண்டை மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும் "மா" உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது. "மா" பரப்பு மற்றும் உற்பத்தியில் தமிழ்நாட்டில் பிரிக்கப்படாத தருமபுரி மாவட்டம் முதலிடம் பெற்றது. தற்பொழுது தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகும் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழ்நாட்டில் பரப்பு மற்றும் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது. இம்மாவட்டத்தில் தற்பொழுது 24 பழம் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த தொழிற்சாலைகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25,000 மெ.டன் பழக்கூழ் உற்பத்தி செய்யப்பட்டு வளைகுடா நாடுகளுக்கும், ரஷ்யா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 100 கோடி ரூபாய் வரை அந்நியச் செலாவணி ஈட்டப்படுகின்றது.

"மா" சாகுபடி மற்றும் உற்பத்தியில் முதலிடம் பெறுவதுடன் "மா" ஒட்டுச் செடிகள் உற்பத்தியிலும் முதலிடம் பெறுகிறது. **மா நர்சரி மற்றும் மாங்கனிகளை லாரிகள் மூலம் ஏற்றுமதி செய்வதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.**

உலகெங்கும் மரங்கள் நட்டு சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டு வரும் இன்றைய நிலையில் மா சாகுபடியால் மாஞ்சோலைகள் உருவாகி இதனால் இம்மாவட்டத்தில்

சுற்றுப்புறச்சூழ்நிலை பாதுகாக்கப்படவும் மேம்பாடு அடையவும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு மா சாகுபடியை அதிகரிப்பதால் மானாவாரி உழவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதோடு மா அடிப்படையிலான தொழில்கள் பெருகி அதன் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாகி மாவட்ட மக்கள் பயன் அடைதல், அந்நிய செலாவணி ஈட்டுதல், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாக்க உதவுதல் ஆகிய பல்வேறு வழிகளில் மா சாகுபடி கிருஷ்ணகிரி மாவட்ட உழவர் பெருமக்களின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. இத்தகைய சிறப்பு **மிக்க மாங்கனிக்கு கிருஷ்ணகிரியில் விழா நடத்தினால் சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கருதப்பட்டு 1992 ஆம் ஆண்டு முதல் கிருஷ்ணகிரியில் மாங்கனி விழா தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.**

மாங்கனிக்கு அடுத்தபடியாக இம்மாவட்டத்தில் புளி ஒரு முக்கியப் பயிராக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் விளையும் உரிகம் புளி மிகவும் பெயர் பெற்றது ஆகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பதில் மா விற்கு அடுத்தபடியாக மலர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இம்மாவட்டத்தில் குறிப்பாக ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதிகளில் நிலவும் தட்பவெட்ப சூழ்நிலையும் மண்ணின் தன்மையும் மலர் சாகுபடி செய்ய மிகவும் ஏற்றதாக உள்ளது. தற்பொழுது இப்பகுதியில் உள்ள 14 தனியார் மலர் உற்பத்தி நிலையங்களில் 51.02 எக்டர் பரப்பளவில் பசுமை இல்லத்தில் ரோஜா, கார்னேசன், ஜெர்பரா போன்ற மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 25 கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலாவணி ஈட்டப்படுகிறது.

இம்மாவட்டத்தில் மலர்கள் உற்பத்திக்கு உள்ள வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு 2002ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் **ஒசூரை** தலைமையிடமாகக் கொண்டு மலர் ஏற்றுமதி மண்டலம் அமைக்க உத்தரவிட்டார்கள். **தமிழ்நாடு தொழில் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து ரூ.24.85 கோடி செலவில் டான்புளோரா கட்டுமானப் பூங்கா, ஒசூர் வட்டத்தில் உள்ள அமுதகொண்டப்பள்ளி என்ற இடத்தில் 232 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தற்பொழுது 3 எக்டர் பரப்பளவில் மாதிரி அலகு அமைத்து ரோஜா உற்பத்தி தொடங்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.** டான்புளோரா நிறுவனத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 67.5 மில்லியன் பூக்கள் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் உள்ள தனியார் கொய்மலர் சாகுபடியாளரிடமிருந்து ஆண்டிற்கு 27 மில்லியன் அளவிற்கு மலர்கள் பெற்று ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் இம்மாவட்ட மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். எனவே, தனியார் மலர் உற்பத்தியாளர்கள், மலர் சாகுபடியாளர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஏற்றுமதி வாய்ப்புள்ள மலர்களை உற்பத்தி செய்து தமிழ்நாட்டிற்கே ஒரு முன்னோடி மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தை திகழச்செய்ய விவசாயிகள் முன் வர வேண்டும்.

**தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அயராது உழைத்துவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இம்மாவட்ட வளர்ச்சியில் கொண்டுள்ள ஈடுபாட்டின் காரணமாகவும் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழகத்திலேயே முதன்மை மாவட்டமாகத் திகழ வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும் இஸ்ரேல் நாட்டில் வெற்றி கண்ட திறமைமிக்க நீர் பயன்படுத்தும் வேளாண்மை முறைகளைப் பயன்படுத்தி காய்கறி உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட வேண்டும் என்று எண்ணி கடந்த பிப்ரவரி மாதம் கிருஷ்ணகிரி மாவட்ட தொடக்க விழாவின் போது தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு உயர்தொழில்நுட்ப முறைகளின்படி ரூ. 720.60 இலட்சம் செலவில் மூன்று ஆண்டுகளில் தோட்டக்கலை பயிர்களுக்கான துல்லிய பண்ணையம் அமைக்க உத்தரவிட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சியில் இது இன்னொரு மைல்கல் என்றால் மிகையாகாது.**

கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழகம் முழுவதிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் பல்வேறு புதிய திட்டங்கள், தொலை நோக்குப் பார்வையுடன் எதிர்கால சமுதாயத்திற்குத் தேவையான திட்டங்கள் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப் பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தைப் பொருத்த வரையில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியை தலைமையிடமாகக்கொண்ட புதிய மாவட்டம், கிருஷ்ணகிரியில் புதிய பேருந்து நிலையம், ரூ.24 கோடியில் ஒசூரில் மலர் ஏற்றுமதி மையம், ரூ.7.20 கோடியில் தோட்டக்கலைத் துறையின் மூலம் துல்லியப் பண்ணையத்திட்டம், ரூ.5.10 கோடியில் 6,000 ஏக்கர் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றிட தரிசு நில மேம்பாட்டுத்திட்டம், ரூ.9 கோடியில் 20,000 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்திட தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ரூ.10.74 கோடியில் 507 ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் குழந்தைகள் சுகாதார வளாகங்கள், ரூ.11.30 கோடியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 2,689 குடியிருப்பு வீடுகள், ரூ.8.44 கோடியில் முழுமையான சுகாதாரத் திட்டத்தின் கீழ் 47,122 கழிவறைகள் மற்றும் சுகாதார வளாகங்கள் போன்றவையும், ரூ.54.65 கோடியில் 1,18,500 எக்டர் பயனடையும் வகையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப் பட்டு வருகிறது. மேலும் ரூ.64.93 இலட்சத்தில், 4,418 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச மிதி வண்டிகளும், ரூ.4.41 கோடியில் 9,502 ஆதி திராவிடர்களுக்கு தொழில் தொடங்க நிதி உதவி மற்றும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ரூ.58.16 கோடியில் சாலைகள் மற்றும் புதிய பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக 155 தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டதோடு 127 நடுநிலைப்பள்ளிகளும், 32 உயர்நிலைப்பள்ளிகளும் 41 மேல்நிலைப்பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ரூ.15 கோடி மதிப்பில் 60 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள், அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 16 ஊராட்சி ஒன்றியங்களில் 30 தொழிற்சாலைகளும், தருமபுரி மற்றும் ஒசூரில் இரு திருக்கோவில்களில் அன்னதானத் திட்டமும், வான் மழை பொய்த்ததால் ஏற்பட்ட கடும் வறட்சியைப் போக்கிட ரூ.4.96 கோடியில் நகர்ப்புறத்திற்கு குடிநீர்த் திட்டங்களும், ரூ.21 கோடியில் 8 பேரூராட்சி மற்றும் 40 வழியோர கிராமங்களுக்கு குடி நீர்த் திட்டங்களும், ரூ.19.87 கோடியில் கிராமப் பகுதிகளுக்கு 1,661 சிறுமின் விசைத் திட்டங்களும், ரூ.18.50 கோடியில் கிராமப்பகுதிகளுக்கு 611 தனி மின் விசைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு பொது மக்களின் குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் சின்ன ஏரி மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இப்புதிய பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிக்காக அரசு ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இப்பகுதி மக்கள் தங்கள் பங்காக ரூ.7.50 இலட்சம் வழங்கியுள்ளனர். இதன் மூலம் பேருந்து நிலையத்தை அழகுபடுத்துதல், தானியங்கி மின்விளக்குகள், தடுப்புச் சுவர்கள் போன்ற பணிகளும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10 இலட்சத்தில் சாலை மற்றும் வடிகால் வசதிகளும் இன்னும் இரண்டு மாதத்தில் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாங்கனி விழா நடைபெறும் இந்த அப்பாவு ஏரி மைதானம் ரூ.10 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த ஏரியின் 16 ஏக்கர் பரப்பளவில் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் நவீன விளையாட்டு அரங்கம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப்பணி விரைவில் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி, எத்தகைய சோதனை வந்தாலும் அவைகளை நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்டு, தொடர்ந்து அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மேலும் சிறப்பான திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செயல்படும். மக்கள் பணிக்கே தன்னை முற்றிலும் அர்ப்பணித்து மக்களுக்காகப் பணியாற்றி வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்படி அனைத்துத் திட்டங்களும் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும்'' என்று குறிப்பிட்டார்கள்.

**– தா. மனோகரன்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தருமபுரி.*

**புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் 6ஆவது உயர்மட்டக் குழுக் கூட்டம்**



*புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் 6ஆவது உயர்மட்டக் குழுக் கூட்டம் 1–6–2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நிதி மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.ப. அண்ணாவி அவர்கள் , மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள், தலைமைச்செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ரானேஷ், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் திரு. என். நாராயணன், இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் மௌனப் புரட்சியை ஏற்படுத்தி வரும் மகளிர் சுய உதவிக்குழுக்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 1992ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் இன்று மௌனப் புரட்சியையே ஏற்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 18 முதல் 60–வயதுக்குட்பட்ட திருமணமான, ஒரே பகுதியில் வசிக்கும் தன்னார்வமிக்க மகளிர் 12 முதல் 20 உறுப்பினர்கள் சேர்ந்து ஒவ்வொருவரும் தன்னுடைய முன்னேற்றத்திற்காகவும், தங்கள் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும் பொருளாதார சுய சார்பு நிலையை அடையவும் ஒரு குழுவாகச் செயல்படுவதே மகளிர் சுய உதவிக்குழுக்களின் நோக்கமாகும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் திட்டம், அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள், ஊர் நல அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோர் மூலம் 10,759 மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக் குழுக்களில் மொத்தம் 1,64,730 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 55,059 நபர்கள் தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்கள். இக் குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.14,64,31,015/– ஆகும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கியில் கணக்கு தொடங்கி 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து திறமை யுடன் செயல்பட்டு வரும், ஒவ்வொரு சுய உதவிக் குழுக்களையும் வங்கியின் உதவியுடன் மதிப்பீடு செய்து அக்குழுக்களுக்கு நேரடிக் கடன், சுழல்நிதி கடன், பொருளாதாரக் கடன் போன்றவற்றை வழங்க மாவட்ட நிருவாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 3 ஆண்டுகளில் 2,350 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.602.448 இலட்சம் பொருளாதாரக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்தில் 203 ஆண்கள், சுய உதவிக்குழுக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன.



தமிழகத்தில் ஆண்டுதோறும் 1 இலட்சம் பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறையினரால் செயல்படுத்தப்படும் இப்பயிற்சிக்கு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ஒருங்கிணைப்பு முகவராக செயல்படுகிறது. தொழில் முனைவோர் பயிற்சி பெற்றவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அக்குழுக்களுக்கு அப்பயிற்சிக்கான பொருளாதார





உதவியும் வங்கியின் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 13,823 மகளிருக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த வளாகங்களின் பராமரிப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சி, மகளிர் திட்டம் மற்றும் சுகாதாரத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வளாகங்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களால் பராமரிக்கப்படுகிறது. பராமரிப்பு செலவினங்கள் குழுக்களாலேயே நிருவகிக்கப்படுகிறது. இதுவரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் 450 சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உரிய பயற்சி அளிக்கப்பட்டு குழுக்களிடம் ஒப்படைக்கப் பட்டு சிறப்பாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான கணினிப் பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு தமிழக அரசு ரூ.2.50 இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கணினி மையத்தை "காமாட்சி" மகளிர் சுய உதவிக்குழு சிறப்பாக நடத்தி நல்ல இலாபம் ஈட்டி வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 16 நியாயவிலைக் கடைகளை மகளிர் சுய உதவிக்குழுக்கள் நிருவகித்து வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 626 மகளிர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு, வங்கியில் கணக்கு தொடங்கப் பட்டுள்ளது. இக்கூட்டமைப்புகளுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தின் மூலம் புதியதாக திருமணம் செய்து கொண்ட சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அல்லது சுய உதவிக்குழு உறுப்பினர் மகளுக்கு 75 இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் 5 மகளிர் மனமகிழ் மன்றங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மன்றத்திற்கும் ரூ.3,300/– மதிப்பீட்டில் அவர்கள் விரும்பியவாறு ஒலி நாடாவுடன் கூடிய வானொலிப்பெட்டி, மிதிவண்டி, கேரம்போர்டு ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் பிற துறைகள் ஒருங்கிணைப்புடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், வங்கிகள், சுகாதாரத் துறை, குடிநீர் மற்றும் சுகாதார குழுமம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், கால்நடைத்துறை, கல்வித்துறை, அறிவொளி இயக்கம், வருவாய்த்துறை போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து மகளிர் சுய உதவிக்குழுக்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அடுப்படியில் ஒடுங்கி கிடந்த மகளிர் திரண்டெழுந்து காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தது மட்டுமின்றி இம்மாவட்டத்தை தமிழகத்தின் முன்னோடி மாவட்டமாகவும், திகழச் செய்துள்ளனர். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், மகாகவி பாரதியாரும் கண்ட கனவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் திட்டங்களால் இன்று நனவாகி வருகிறது.

– ந. இளங்கோ,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

* * *

# நல்ல நண்பர்கள் மாறுவதில்லை!

ஒரு சமயம் மிகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியரான பெர்னாட்ஷா பழைய புத்தகங்களை விற்கக் கூடிய கடை ஒன்றினைச் சுற்றிப் பார்ப்பதன் பொருட்டுச் சென்றார். தமக்குத் தேவைப்படும் ஏதாவது நூலையும் வாங்கிக் கொள்ளலாம் என்றும் அவர் எண்ணி இருந்தார்.

உள்ளே சென்று ஒவ்வொரு நூலாகப் பார்த்துக் கொண்டே வந்தவருக்கு ஒரு நூலைக் கண்டவுடன் மிகவும் வியப்பு அடைந்தார். அதைக் கையில் எடுத்துப் புரட்டிப் பார்த்தார். அவருக்கு அதிர்ச்சியும் உண்டாயிற்று.

அந்த நூல் அவர் எழுதிய நூல். அவர் வியப்புக்குக் காரணம், அந்த நூலை அவரே தம் நெருங்கிய நண்பர் ஒருவருக்கு அன்பளிப்புச் செய்திருந்தார். அது அவரது அதிர்ச்சிக்கு காரணமாகும்.



அந்த முதலாவது பக்கத்தில் என் வாழ்த்துகளுடன், பெர்னாட்ஷா என்று எழுதிக் கையெழுத்தும் போட்டிருந்தார். அது அப்படியே அடிக்காமல், புத்தம் புதிதாக பழைய புத்தகக் கடைக்கு வந்திருந்தது.

ஒரு வேளை தன் நண்பரிடமிருந்து எவராவது திருடி இதைப் பழைய புத்தகக் கடையில் போட்டிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். எனவே அவர் கவனக்குறைவை அவருக்கு எடுத்துக்காட்ட விரும்பிய அவர், அதைப் பழைய புத்தகக் கடைக்காரரிடம் இருந்து விலைக்கு வாங்கினார்.

பின்னர் அதை அழகிய முறையில் பார்சல் செய்து தான் யாருக்கு அதை அன்பளிப்பாகத் தந்தாரோ அவருக்கே திருப்பி அனுப்பி வைத்தார். அப்போதுதான் அவருக்கு நிம்மதி உண்டாயிற்று.

பதினைந்து, இருபது நாட்கள் கழிந்தன. மீண்டும் அவர் பழைய புத்தகங்கள் விற்கக் கூடிய கடையைத் தாண்டிச் செல்ல நேரிட்டது. அப்போது தற்செயலாக மேலோட்டமாக அவர் பார்த்தார். திடுக்கிட்டார்.

அவர் எழுதிய வேறு ஒரு நூல் கவர்ச்சியாக அங்கே வைக்கப்பட்டிருந்தது. அவசரமாக உள்ளே நுழைந்தார். அதன் முதல் பக்கத்தைத் திறந்துப் பார்த்தார். அவர் தன் நெருங்கிய நண்பருக்கு நிறைய விஷயங்களைக் கடிதம் போல அந்தப் பக்கத்தில் சொல்லி இருந்தார்.

உண்மையில் அது ஓர் வாழ்த்துச் செய்தி. அவரே தன் கைப்பட பக்கம் முழுவதும் எழுதிக் கையெழுத்தைப் போட்டிருந்தார். கடைக்காரனுக்கு, அவர் பழைய புத்தகங்களை விரும்பி வாங்கும் வாடிக்கையாளர் என்பது மட்டுமே தெரியும். அவர்தான் பெர்னார்ட்ஷா என்பது தெரியாது.

அவர் கடைக்காரனிடம் அந்தப் புத்தகத்தைக் கொடுத்தார்.

"இந்தப் புத்தகத்துக்கு என்ன விலை?' என்று கேட்டார். கடைக்காரன் பக்கத்தைத் திறந்து பார்த்தான். முகம் மாறினான். பெர்னாட்ஷா தன் வாடிக்கையாளர் என்பதால் அவரிடம் அந்தப் புத்தகத்தைத் தந்தான்.

பின் கூறினான்.

"ஐயா, இந்தப் புத்தகம் மிக நல்ல புத்தகம். இது கிட்டத்தட்ட பன்னிரெண்டு ஷில்லிங் வரை விற்கக் கூடிய புத்தகம். எவனோ ஒரு தடிமாட்டுக் கழுதை என் பிழைப்பில் மண் அள்ளிப் போடுவதற்காகவே முன் பக்கம் முழுவதும் கன்னாபின்னா வென்று கிறுக்கி வைத்திருக்கிறான். சரி, போனால் போகட்டும், மூன்று ஷில்லிங்கே எனக்குப் போதும் கொடுங்கள்!''

பெர்னாட்ஷாவுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

**நட்பை ஆராய்ந்து தேர்ந்து எடு.**
**மதிப்பவர்களுக்கு உதவு.**

**– நீதிமொழி**

**"அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்".**

**– திருக்குறள் : 807**

அன்புடன் தொன்றுதொட்டு வந்த உறவை உடையவர், அழிவுதரும் செயல்களைப் பழகியவர் செய்த போதிலும் தம் அன்பு நீங்காமலிருப்பர்.

– **"திருக்குறள் காட்டும் எளிய நீதிக்கதைகள்''**
*என்ற நூலிலிருந்து...*





# சிவகங்கை மாவட்டத்தில் மாற்றுப் பயிர் விவசாயம்

சிவகங்கை மாவட்டத்தில் ஆண்டுதோறும் 1,07,500 எக்டேர் பரப்பில் விவசாயப் பயிர்களும், 25,000 எக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படும். ஆனால் இந்த ஆண்டில் 96,939 எக்டேர் விவசாயப் பயிர்களும், 23,485 எக்டேர் தோட்டக்கலைப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் நெல் பயிர் அதிகபட்சமாக 76,792 எக்டேர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி நிலைமையைச் சமாளிக்கவும், சம்பா பருவத்தில் ஏற்பட்ட பயிர் இழப்பினை ஈடுகட்டவும், நடப்பு கோடைப் பருவத்தில் மாற்றுப் பயிர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளை மிகவும் குறைந்த நீர்த் தேவையுடைய மக்காச்சோளம், பயறு வகைகள், சிறுதானியங்கள் ஆகிய பயிர்களை சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. வேளாண்துறை மூலம் பல்வேறு விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுப் பயிர் திட்டம் பரவலாக செயலாக்கம் செய்யப்படுகிறது.

சிவகங்கை வட்டம், கீழவாணியங்குடி மற்றும் சுற்று வட்டார கிராமப் பகுதிகளில் 125 ஏக்கர் மக்காச்சோளம் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றுப் பயிரை கரும்புக்குப் பதிலாக விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இக்கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலு என்ற விவசாயி ஆண்டாண்டு காலமாக நெல், கரும்பு ஆகியவற்றை சாகுபடி செய்வார். இந்த ஆண்டு கிணற்றில் தண்ணீர் ஊற்று குறைவாக இருந்ததால் மாற்றுப் பயிராக மக்காச்சோளம் 3 ஏக்கரில் சாகுபடி செய்துள்ளார்.

ஒரு ஏக்கருக்கு சராசரியாக 2,000 கிலோ மக்காச்சோளம் மகசூல் கிடைக்கும். ஆகவே ஒரு ஏக்கருக்கு ரூ.8,000 முதல் ரூ.9,000 வரை மூன்றரை மாதத்தில் வருமானம் பெறுவது உறுதி என்ற நம்பிக்கையுடன் உள்ளார்.

மக்காச்சோளம் அறுவடை முடிந்தவுடன் பயறு வகைப்பயிரான உளுந்து சாகுபடி செய்யவும் உத்தேசித்துள்ளார். குறைவான நீரை உபயோகித்து அதிக வருமானம் பெற மக்காச்சோளம், பயறு, கடலை, எள் போன்ற பயிர்களை அதிகமாக சாகுபடி செய்யலாம் என வேளாண்மைத்துறை தெரிவித்ததினால் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

"வறட்சியான கோடைக்காலத்தில் கிடைக்கின்ற நிலத்தடி நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும்போது நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். வரிசையான விதைப்பில் சாகுபடி செய்யப்படும் பயிர்களான மா, சப்போட்டா, நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு சொட்டு நீர்ப் பாசனமுறை மிகவும் சிறந்தது. விவசாயிகள் தங்களது தோட்டக்கலைப் பயிர்களுக்கு சொட்டு நீர்ப்பாசன முறை மூலம் தண்ணீர் வழங்குவதால் 50 சதவிகிதத்திற்கும் குறைவான தண்ணீரே போதுமானதாகும். இதனால் ஒரு ஏக்கர் விவசாயம் செய்வதற்குப் பதிலாக இரண்டு ஏக்கர்கள் சாகுபடி செய்யலாம். சொட்டு நீர்ப் பாசன அமைப்பு 25 சதவிகித மானிய விலையில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வழங்கப்படுகிறது. ஆகவே விவசாயிகள் அனைவரும் கிடைக்கின்ற நிலத்தடி நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகமான பரப்பில் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்" என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**– ஆ.கோபாலன்,**
***செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,***
***சிவகங்கை மாவட்டம்.***



## திருக்கோயில்களில் பக்தர்களின் காலணிகளை இலவசமாக பாதுகாக்க ஏற்பாடு

**– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் உத்தரவு (2–6–2004)

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் பக்தர்களின் காலணிகளைப் பாதுகாப்பதற்காக கட்டணம் வசூலிக்கும் முறையினை 1.7.2004 முதல் ரத்து செய்யவும், இனிமேல் திருக்கோயில்களுக்குச் செல்லும் பக்தர்களின் காலணிகளை பாதுகாக்கும் பொறுப்பினை திருக்கோயில்களின் நிர்வாகமே இலவசமாக மேற்கொள்ளவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய இந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்துமாறு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் உணவுத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.என். தளவாய்சுந்தரம் அவர்கள், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் 16–6–2004 அன்று, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. **தரம்சிங்** அவர்களைச் சந்தித்து, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் குறுவை சாகுபடியை தொடங்குவதற்கு ஏதுவாக, உட்னடியாக காவிரியில் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுதிய கடிதத்தை வழங்கினார்கள்.



# விறகிலிருந்து மின்சாரம்

மக்களின் அடிப்படைத் தேவைகளில் தண்ணீர் எவ்வாறு மிக முக்கியமோ, அவ்வாறு நவீன உலகில் மிகவும் தேவைப்படுவது மின்சாரம் ஆகும். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்கும் வகையில் மின் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய தண்ணீர், நிலக்கரி போன்ற மூலப்பொருட்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. எனவே எதிர்காலங்களில் மின்சாரத் தேவையை ஈடுகட்ட மின் உற்பத்தியைப் பெருக்க நூதனமான சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. அதில் ஒரு வகைதான் விறகிலிருந்து மின்சாரம் தயாரிப்பது ஆகும். மேலும் இவ்வகையில் நாம் உற்பத்தி செய்யும் மின்சாரம் குறைந்த உற்பத்தி செலவில் கிடைக்கவும் வேண்டும். எனவேதான் இம்முறையில் விறகிலிருந்து மின்சாரம் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

தற்போது கிடைக்கும் மின்சாரம் ஒரு யூனிட்டுக்கு ரூ.6/– என்ற நிலையில் கிடைக்கப் பெறுகிறது. இந்த நிலையை மாற்றவே இந்தியாவில் மும்பை போன்ற பெருநகரங்களில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வனத்துறையில் மரக்குச்சிகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. சாதாரணமாக நாம் பயன்படுத்தும் அனைத்து வகை மரங்களிலிருந்து கிடைக்கும் மரக்குச்சி மற்றும் கிளைகளிலிருந்து (கழிக்கப்பட்டவை) மரத்துண்டுகளாக்கி (இரண்டு இஞ்ச் அளவில்) இதற்கென உள்ள விசேஷ இயந்திரத்தில் போட்டு எரித்து அதிலிருந்து கிடைக்கும் கார்பன் மோனாக்ஸைடு, டை ஆக்ஸைடு, மீதேன், நைட்ரஜன் ஆகிய வாயுக்கள் மூலம் எரிசக்தியாக்கி மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

இந்த நூதன முறையில் மின்சாரம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருவிகள் வாங்குவதற்கும் நிறுவுவதற்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்கள்

| | |
|---|---|
| இயந்திரத்தின் விலை | ரூ.3,10,000 |
| இந்த இயந்திரத்திற்கு மத்திய அரசு அளிக்கும் மானியம் (–) | ரூ.1,55,000 |
| நுகர்வோருக்கு இயந்திரத்தின் விலை | ரூ.1,55,000 |
| வரி இன்சூரன்ஸ் செலவு | ரூ.5,000 |
| நிறுவுவதற்கு செலவு | ரூ.12,500 |
| இயந்திரக் கூடம் அமைக்க | ரூ.24,500 |
| ஆகமொத்த செலவு | ரூ.1,97,000 |

### மின்சாரம் உற்பத்தி செய்ய ஆகும் செலவுகள் (தினமும் 100 யூனிட்டிற்கு)

| | |
|---|---|
| மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை இயக்குவதற்கு 1 மணிக்கு 12 கிலோ வீதம் 12 மணி நேரத்திற்கு 144 கிலோ விறகின் விலை | ரூ.150 |
| விறகுகளை சிறு துண்டுகளாக்கும் செலவு | ரூ.50 |
| இயந்திரத்தை இயக்கி பராமரிக்க ஒரு நபர் தினக்கூலி | ரூ.80 |
| | ரூ.280 |
| கழிவாகக் கிடைக்கும் கரி (Charcoal) தினம் 10 கிலோ வீதம் கிலோவிற்கு ரூ.3 வீதம் ரூ.3 x 10 (–) | ரூ.30 |
| | ரூ.250 |
| ஆக ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவு | ரூ.2.50 |
| ஒரு யூனிட் மின்சாரத்திற்கு மின்வாரியத்திற்கு கட்டணம் | ரூ.6.00 |
| ஒரு யூனிட்டிற்கு சேமிப்பு | ரூ.3.50 |
| சந்தன மரக்கிடங்கிற்கு ஒரு நாளைக்கு தேவையான 100 யூனிட் மின்வாரியத்திற்கு செலுத்தும் கட்டணம் | ரூ.600 |
| விறகினால் மின்சார உற்பத்தியால் 100 யூனிட்டிற்கு செலவு | ரூ.250 |
| ஒரு நாளைய சேமிப்பு | ரூ.350 |
| ஒரு மாதத்திற்கான சேமிப்பு ரூ.350 x 30 | ரூ.10,500 |
| ஒரு வருடத்திற்கான சேமிப்பு ரூ.10,500 x 12 | ரூ.1,26,000 |

இவ்வாறு இயந்திரச் செலவினை சுமார் 1½ வருட காலத்தில் ஈடுகட்டி விடலாம்.

இம்முறையை தொழிற்சாலைகள், திருமண மண்டபங்கள், மர அறுவை மில்கள், எஸ்டேட் உரிமையாளர்கள், மின்சார வசதியில்லாத தொலைவிடங்களிலும் பயன்படுத்தி குறைந்த செலவில் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்யலாம்.

மு.நா. கிருட்டிணசாமி,
செய்தி –மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

# நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

இயற்கை எழில்கொஞ்சும் அழகுடன் கூடிய உதகமண்டலம், கடல் மட்டத்திலிருந்து **2,286** மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஊட்டி என்று அழைக்கப்படும் உதகமண்டலம் மலை வாழிடங்கள் அனைத்துக்கும் அரசியாக விளங்குகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதி களிலிருந்தும், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி களிலிருந்தும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் ஆண்டுதோறும் இங்கு வருகை தருகின்றனர். மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் மிகச்சிறந்த பருவ காலமாக திகழ்கிறது. உதகமண்டலத்தில் சுற்றுலா சிறப்பிடங் களாக தாவரவியல் பூங்கா, உதகை ஏரி (படகு குழாம்), சிறுவர் பூங்கா மற்றும் ரோஜா பூங்கா முதலியன அமைந்துள்ளன.

தமிழகத்தின் மிக உயரமான மலைச்சிகரம் தொட்டபெட்டா உதகையிலிருந்து 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவை தவிர நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கத் தக்க இடங்களாக கேத்தி பள்ளத்தாக்கு, பைகாரா அருவி மற்றும் படகு குழாம், கிளன்மார்கன், அப்பர் பவானி, அவலாஞ்சி, முக்குருத்தி, கல்லட்டி அருவி, காமராஜசாகர், முதுமலை வனவிலங்கு சரணாலயம், கோடநாடு காட்சி முனை, ரங்கசாமி சிகரம், கேத்தரின் நீர்வீழ்ச்சி, கோத்தகிரி நேரு பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, டால்பின்ஸ் நோஸ், லேம்ஸ் ராக், பக்காசூரன் மலை, ஊசிமுனைப் பாறை, தவளை மலை, ஜீன்பல் பூங்கா போன்ற எண்ணற்ற இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத்தலங்கள் அமைந்துள்ளன.

உதகமண்டலத்திற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் வருகை தருகின்றனர். 2001 ஆம் ஆண்டில் **20,11,165** உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 20,654 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், **2002** ஆம் ஆண்டில் **20,32,403** உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 23,590 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், **2003** ஆம் ஆண்டில் **20,20,525** உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், **25,000** வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் உதகைக்கு வருகை தந்துள்ளனர்.

உதகைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சுற்றுலாத்தலங்களில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.







2002–2003ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது நீலகிரி மாவட்டத்தில் முக்கியமான பகுதிகளில் சுற்றுலா விளம்பரப் பலகைகள் நிறுவுவதற்காக ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், குன்னூர் பெட்போர்டிலிருந்து டால்பின் நோஸ்வரை அமைந்துள்ள சாலையை மேம்படுத்த ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரியிலுள்ள வனவளம் மற்றும் மண்வளம் போன்றவற்றை அறியும்பொருட்டு சி.டி. ரோம் தயாரித்தலுக்காக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**2003–2004ஆம் ஆண்டிற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.110.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுற்றுலா அலுவலகத்திற்கு முன்பு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ரூ.45.500 இலட்சத்திலும், சுற்றுச்சூழல் அபிவிருத்திப் பணிகள் ரூ.26.500 இலட்சத்திலும், பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ரூ.19.750 இலட்சத்திலும், மீன் வளத்துறை மூலம் அபிவிருத்திப் பணிகள் ரூ.19 இலட்சத்திலும் நிறைவேற்றப்படவுள்ளது.**



## உதகை ஏரியை அழகுப்படுத்தும் திட்டம்

உதகை ஏரியில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைச் செடிகளை அகற்ற மத்திய அரசு நிதி உதவியின் கீழ் ரூ1.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு, 100 சதவிகித ஆகாயத்தாமரைச் செடிகள் அகற்றப்பட்டுள்ளன. மேலும் ஏரியில் ஆகாயத்தாமரைச் செடிகள் வளராத வண்ணம் தடுப்பதற்கு வேதியியல் முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருகின்ற நிதியாண்டில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பிரபலமடையாத காட்சி முனைகளான பர்முக்கு மற்றும் டுரூக் பக்காசூரன் மலை போன்ற பல உன்னதமான காட்சி முனைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் அறியும் வண்ணம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியுடன் இத்திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டிற்காக கடந்த ஆண்டுகளில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, குருத்துக்குளி அருகில் அமைந்துள்ள கின்னஸ் பார்க் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. வருகின்ற நிதியாண்டில் உன்னத வனப்பகுதிகளான, ஊசிமுனை காட்சி, நடுவட்டம் போன்ற வனப்பகுதிகளில் வனத்துறை மூலம் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு செய்ய அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**– அ. சந்திரசேகரன்,**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நீலகிரி.*

* * *

# உதகையில்

# கோடை விழா

மலைகளின் அரசி என்றழைக்கப்படுவது நீலகிரி. சிறப்புமிக்க இயற்கை எழில் கொஞ்சும் மலைகள்,




காடுகள், அருவிகள், பூங்காக்கள், சிறப்புக்காட்சி முனைகள், வண்ணமிகு பறவைகள், வனவிலங்குகள் போன்ற அரிய காட்சிகளை காண இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், உலகின் பல நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருகை புரிகின்றனர். சென்ற ஆண்டுகளில் சுமார் 20 இலட்சம் அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர். இந்த ஆண்டு மே மாதம் வரை சுமார் 9 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.




இம்மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தமிழக கலாச்சாரத்தை அறியும் வகையிலும், உள்ளூர் மக்களுக்கு ஆர்வத்தை தூண்டும் வகையில் சிறப்பு விருந்தாக தமிழகத்தில் புகழ்பெற்ற கலைஞர்களை கொண்டு பரத நாட்டியம், நாடகம், இன்னிசை நிகழ்ச்சி, பல்சுவை கலை நிகழ்ச்சி மற்றும் தந்திரக் காட்சி போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை அளிக்கவும் மேலும் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து சிறப்பு கலைஞர்களைக் கொண்டு நிகழ்ச்சிகளையும், சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வகையில் உதகையில் கோடை விழா பல ஆண்டுகளாக கோடை விழா குழுவினர்களால் நடத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது சுற்றுலாத்துறை மற்றும் நீலகிரி மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து இவ்விழாவினை சிறப்பாக நடத்தி வருகிறது.

இந்த ஆண்டு கோடை விழா 26.5.2004 முதல் 29.5.2004 வரை நான்கு நாட்கள் நடத்தப்பட்டது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் இவ்விழாவினை 26.5.2004 அன்று தொடங்கி வைத்தார்கள். 29.5.2004 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. அ. மில்லர் அவர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இந்த ஆண்டு கோடை விழாவின் சிறப்பு அம்சமாக சென்னை இளைஞர் விடுதி சங்கத்தினரால் சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்புடன் நீலகிரி மாவட்டத்தில் காட்டு வழி நடைப்பயணம் நடத்தப்பட்டது. அதில் இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் கலந்து கொண்டு மகிழ்வுற்றனர்.

26.5.2004 அன்று பல்சுவை நிகழ்ச்சி, நாடகம் மற்றும் மெல்லிசை நிகழ்ச்சி ஆகியவையும் 27.5.2004 அன்று பரத நாட்டியம், தந்திர காட்சிகள் நிகழ்வு, 28.5.2004 அன்று நட்சத்திரக் கலை நிகழ்ச்சிகள், பல்சுவை நாடக நிகழ்ச்சி, சென்னை பாண்டியன் கலைக்குழுவின் இசை நடன நிகழ்ச்சி ஆகியவையும், 29.5.2004 அன்று நாட்டிய நடன நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி, இன்னிசை மற்றும் ஆடலும் பாடலும் நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன.

**– எஸ்.ஜோசப் சார்லஸ்,**
சுற்றுலா அலுவலர்,
*உதகமண்டலம்*

❖ ❖ ❖






மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு



தமிழ்நாட்டில் உள்ள பல உள்ளாட்சி அமைப்புகள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட வாகன நிறுத்துமிடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வசூலிக்கின்ற வாகன நிறுத்தக் கட்டணம் மிக அதிகமாகவும், நியாயமற்றதாகவும் உள்ளதாக முறையீடுகள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. மிதிவண்டிகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்குக் கூட பொது மக்களிடமிருந்து வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பொருட்கள் வாங்கச் செல்லும் பொதுமக்கள், குறுகிய கால அவகாசத்தில் பல இடங்களுக்குச் சென்று வாகனங்களை நிறுத்தும் போது ஒவ்வொரு இடத்திலும் வாகனக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதால், மொத்தத்தில் ஒரு பெருந்தொகையை செலுத்த வேண்டியதாகிறது. வாகன நிறுத்தக் கட்டணம் மிக அதிகமாக இருப்பதன் காரணமாக பொதுமக்கள் அடைகின்ற கஷ்டத்தை நீக்குகின்ற வகையில், உள்ளாட்சி அமைப்புகள் இனி கீழே உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலாகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று அறிவுறுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனத்தின் வகை | [illegible] திருத்திய கட்டணம் |
|---|---|---|
| 1. | மிதிவண்டி | கட்டணம் கிடையாது |
| 2. | இரு சக்கர வாகனங்கள் | கட்டணம் கிடையாது |
| 3. | மூன்று சக்கர வாகனங்கள் | கட்டணம் கிடையாது |
| 4. | சுற்றுலா சீருந்துகள் உள்ளிட்ட தனியார் சீருந்துகள் | ரூ.5 (6 மணி நேரத்திற்கு)<br>ரூ.20 (ஒரு நாளுக்கு) |
| 5. | டெம்போ வேன்கள் | ரூ.15 (12 மணி நேரத்திற்கு)<br>ரூ.30 (24 மணி நேரத்திற்கு) |
| 6. | லாரிகள் | ரூ.25 (12 மணி நேரத்திற்கு)<br>ரூ.50 (24 மணி நேரத்திற்கு) |

ஒரு இடத்தில் வாகன நிறுத்தக் கட்டணம் செலுத்துபவர் அந்தக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் வேறு எத்தனை இடங்களிலும் நிறுத்துவதற்கு உரிமை உடையவர் ஆவார்.

மேலே பட்டியலில் குறிப்பிட்ட கட்டணத் தொகைக்கு மேலாக வாகன நிறுத்தக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் அறிவுறுத்தப்படும். பொதுமக்கள் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளிலிருந்து நிவாரணம் பெறும் வகையில் உடனடியாக இது நடைமுறைப்படுத்தப்படுவதை உள்ளாட்சி அமைப்புகள் உறுதி செய்திட வேண்டும். மேலே அறிவுறுத்தப்பட்டுள்ளக் கட்டணங்களுக்குக் குறைவாக ஏதேனும் உள்ளாட்சி அமைப்புகள் வாகன நிறுத்தக் கட்டணங்களை வசூலித்து வந்தால், அத்தகைய அமைப்புகள் கட்டணத்தைத் திருத்தாமல் பழைய விகிதத்திலேயே தொடர்ந்து வசூலிக்க அறிவுறுத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிக்கை 2-6-2004

## திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு
### மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
### செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் நன்கொடை

227555
சென்னை-600 008
நூலகம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2003ஆம் ஆண்டிற்கான நவம்பர், டிசம்பர் மற்றும் 2004–ஆம் ஆண்டிற்கான ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய 6 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் ரூபாய் 60 ஆயிரத்தை, ஆறு திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 16.6.2004 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமது 2003 ஆம் ஆண்டின் நவம்பர் மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு, அந்தத் திருக்கோயிலின் துணை ஆணையர் திரு.ஏ.குப்புசாமி அவர்களிடமும்,

டிசம்பர் மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, சென்னை, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு, அந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு.டி.பி.ஏகாம்பரம் அவர்களிடமும்,

தமது 2004–ஆம் ஆண்டின் ஜனவரி மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு, அந்தத் திருக்கோயிலின் இணை ஆணையர் திரு.டி.ஜெயராமன் அவர்களிடமும்,

பிப்ரவரி மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு அந்தத் திருக்கோயிலின் உதவி ஆணையர் திரு.வி.கோவிந்தராம் அவர்களிடமும்,

மார்ச் மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, நாகப்பட்டினம் மாவட்டம், வைத்தீஸ்வரன் கோயில் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு, தருமபுரம் ஆதீனம் தலைமைக் கண்காணிப்பாளர் திரு.டி.ராமமூர்த்தி அவர்களிடமும்,

ஏப்ரல் மாத சம்பளத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தை, திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் அன்னதானத் திட்டத்திற்கு, அந்தத் திருக்கோயிலின் இணை ஆணையர் திரு.டி.சுந்தரம் அவர்களிடமும் 16.6.2004 அன்று நேரில் வழங்கினார்கள். ❖



உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மொத்த சந்தா செலுத்துவீர்!
10வது
மாத சந்தா
இலவசம்
மேலும்
அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/-க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆: 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆: 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆: 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆: 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆: 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகவளாகம், | தஞ்சாவூர் | ✆: 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆: 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆: 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆: 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆: 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com Visit us at: www.tn.gov.com

பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை





உதகை தாவரவியல் பூங்கா